ரோமாபுரி அரசாறு
(கி.மு. 476 வரை)
அ.வாண சுந்தரம் (ஆர்)

த.பா.நி. (கு.வெ.) வரிசை எண் — 324

ரோமாபுரி வரலாறு

(கி.பி. 476 வரை)

(பட்டப்படிப்பிற்குரியது)

ஆசிரியர்

இர. ஆலாலசுந்தரம்,
வரலாற்றுப் பேராசிரியர்,
அரசினர் கலைக் கல்லூரி, சேலம்.

தமிழ்நாட்டுப் பாடநூல் நிறுவனம்

First Edition—May, 1972

T.N.T.B.S. (C.P.) No. 324

© Tamil Nadu Text Book Society

HISTORY OF ROME (Upto 476 A.D.)

R. ALALASUNDARAM

Price Rs. 6-75
(No Discount)

'Published by the Tamil Nadu Text Book Society under the Centrally Sponsored Scheme of Production of Books and Literature in regional languages at the University level, of Government of India in the Ministry of Education and Social Welfare.'

Printed by

Metro Printers & Packaging Industry, Madras-29.

அணிந்துரை

திரு. இரா. நெடுஞ்செழியன்,

(தமிழகக் கல்வி—உள்ளாட்சித்துறை அமைச்சர்)

தமிழைக் கல்லூரிக் கல்வி மொழியாக ஆக்கிப் பதினேராண்டுகள் ஆகிவிட்டன. குறிப்பிட்ட சில கல்லூரி களில் பி.ஏ. வகுப்பு மாணவர்கள் தங்கள் பாடங்கள் அனைத் தையும் தமிழிலேயே கற்று வந்தனர். 1968ஆம் ஆண்டின் தொடக்கத்தில் புகுமுக வகுப்பிலும் (P.U.C.) 1969ஆம் ஆண்டிலிருந்து பட்டப்படிப்பு வகுப்புகளிலும் அறிவியல் பாடங்களையும் தமிழிலேயே கற்பிக்க ஏற்பாடு செய்துள்ளோம். தமிழிலேயே கற்பிப்போம் என முன்வந்துள்ள கல்லூரி ஆசிரி யர்களின் ஊக்கம், பிறபல துறைகளிலும் தொண்டு செய்வோர் இதற்கெனத் தந்த உழைப்பு, தங்கள் சிறப்புத் துறைகளில் நூல்கள் எழுதித் தர முன்வந்த நூலாசிரியர்கள் தொண்டுணர்ச்சி இவற்றின் காரணமாக இத் திட்டம் நம்மிடையே மகிழ்ச்சியும் மன நிறைவும் தரத்தக்க வகையில் நடைபெற்று வருகிறது. இவ் வகையில், கல்லூரிப் பேராசிரியர்கள் கலை, அறிவியல் பாடங் களை மாணவர்க்குத் தமிழிலேயே பயிற்றுவிப்பதற்குத் தேவை யான பயிற்சியைப் பெறுவதற்கு மதுரைப் பல்கலைக்கழகம் ஆண்டுதோறும் எடுத்துவரும் பெரு முயற்சியைக் குறிப்பிட்டுச் சொல்ல வேண்டும்.

பல துறைகளில் பணிபுரியும் பேராசிரியர்கள் எத்தனையோ நெருக்கடிகளுக்கிடையே குறுகிய காலத்தில் அரிய முறையில் நூல்கள் எழுதித் தந்துள்ளனர்.

வரலாறு, அரசியல், உளவியல், பொருளாதாரம், தத்துவம், புவியியல், புவியமைப்பியல், மனையியல், கணிதம், பௌதிகம், வேதியியல், உயிரியல், வானியல், புள்ளியியல், விலங்கியல், தாவரவியல், பொறியியல் ஆகிய எல்லாத் துறைகளிலும் தனி நூல்கள், மொழிபெயர்ப்பு நூல்கள் என்ற இரு வகையிலும் தமிழ்நாட்டுப் பாடநூல் நிறுவனம் வெளியிட்டு வருகிறது.

இவற்றுள் ஒன்றுன **'ரோமாபுரி வரலாறு'** (கி.பி. 476 வரை) என்ற இந் நூல் தமிழ்நாட்டுப் பாடநூல் நிறுவனத்தின் 324ஆவது வெளியீடாகும். இதுவரை 359 நூல்கள் வெளி வந்துள்ளன. இந் நூல் மைய அரசு கல்வி, சமூக நல அமைச் சகத்தின் மாநில மொழியில் பல்கலைக்கழக நூல்கள் வெளி யிடும் திட்டத்தின்கீழ் வெளியிடப்படுகிறது.

உழைப்பின் வாரா உறுதிகள் இல்லை; ஆதலின், உழைத்து வெற்றி காண்போம். தமிழைப் பயிலும் மாணவர்கள் உலக மாணவர்களிடையே சிறந்த இடம் பெற வேண்டும். அதுவே தமிழன்னையின் குறிக்கோளுமாகும். தமிழ்நாட்டுப் பல்கலைக் கழகங்களின் பல்வகை உதவிகளுக்கும் ஒத்துழைப்புக்கும் நம் மனம் கலந்த நன்றி உரியதாகுக.

இரா. நெடுஞ்செழியன்

பொருளடக்கம்

		பக்கம்
1.	இயற்கையமைப்பும் பண்டைக் குடிகளும்	1
2.	ரோமாபுரியின் தோற்றமும் முதல் மன்னர்களும்	6
3.	மக்களும் நிர்வாகமும்	13
4.	கி.மு. ஐந்தாம் நூற்றாண்டில் ரோம்	21
5.	கி.மு. நான்காம் நூற்றாண்டில் ரோம்	37
6.	இத்தாலி முழுவதும் கைப்பற்றப்படுதல்	53
7.	ரோமாபுரியும் கார்த்தேஜும்	61
8.	முதலாவது பியூனிக் போர் (கி.மு. 264–250)	71
9.	முதலாவது பியூனிக் போருக்கும் இரண்டாவது பியூனிக் போருக்கும் இடையே (கி.மு. 241–218)	82
10.	இரண்டாவது பியூனிக் போர் (கி.மு. 218–204)	87
11.	இரண்டாவது பியூனிக் போருக்குப் பின் மூன்றாவது பியூனிக் போர் வரையில் ரோம்	106
12.	அழிவு ஆரம்பமாகிறது (கி.மு. 150–120)	132
13.	மேரியஸின் எழுச்சி	145
14.	மீண்டும் வகுப்புப் போர்கள்	154
15.	சல்லாவின் போரும் ஆதிக்கமும்	169
16.	பாம்பேயின் எழுச்சி	185
17.	ரோமில் ஆதிக்கப் போட்டியும் அரசியல் சீர்கேடுகளும்	201
18.	முதலாவது மூவர் அணி	208
19.	ரோமில் உள்நாட்டுப் போர்	222
20.	ஜூலியஸ் சீசரின் ஆட்சியும் வீழ்ச்சியும்	243
21.	இரண்டாவது மூவர் அணியும் இரண்டாவது உள்நாட்டுப் போரும்	253
22.	அகஸ்டஸின் ஆட்சி (கி.மு. 30—கி.பி. 14)	269
23.	ஜூலியோ–கிளாடிய வம்சம் (கி.பி. 14–68)	284
24.	ரோமானியப் பேரரசில் பொருளாதார நிலைமை	303
25.	குழப்பமும் அமைதியும் (கி.பி. 68–180)	312
26.	ரோமப் பேரரசு சீர்குலைதல்	350
27.	முடிவுரை	393
Select Bibliography		404

1. இயற்கையமைப்பும் பண்டைக் குடிகளும்


பண்டைக் கால ஐரோப்பிய நாகரிகங்களில் முக்கிய மான ஒன்று ரோமாபுரி நாகரிகம். ஐரோப்பிய வரலாற்றையும் சமூக – பொருளாதார அமைப்பையும் பல வழிகளிலும் பாதித்தது அந்நாகரிகம். ஐரோப்பாவுக்கு முன்னோடியாகப் பலதுறைகளில் அது விளங்கியது. எனவே, ஐரோப்பிய வரலாற்றையும் உலக வரலாற்றையும் நன்கு அறிந்துகொள்வ தற்கு மிகவும் தேவையானது ரோமாபுரியின் வரலாறு.

இத்தாலியின் இயற்கை அமைப்பு : ஐரோப்பாவின் தென் பகுதியில் மூன்று தீபகற்பங்கள் அமைந்துள்ளன. அவற்றுள் நடுவில் உள்ளது இத்தாலி. மத்திய தரைக் கடலின் நடுவில் ஆப்பிரிக்காவின் வடகரையை நோக்கி வடக்கு-தெற்காக நீண்டு கிடக்கிறது இத்தாலிய தீபகற்பம். அதன் வடக்கில் ஐரோப்பாவின் ஏனைய பகுதிகளிலிருந்து அதைப் பிரிப்பதுபோல, குடைவிரித்தாற்போல் கவிந்து கிடக்கின்றன ஆல்ப்ஸ் மலைகள். அவற்றின் தென்மேற்குக் கோடியிலிருந்து தொடங்கி, இத்தாலிய தீபகற்பத்தின் முழு நீளத்துக்கும் முது கெலும்புபோல நீண்டு கிடக்கின்றன அப்பெனின் மலைகள் (Apennines).

வடக்கில் ஆல்ப்ஸ் மலைகளுக்கும் அப்பெனின் மலை களுக்கும் இடையில் அமைந்துள்ள லொம்பார்டி (Lomberdy) சமவெளிதான் இத்தாலியிலேயே மிகவும் செழுமையானதாகும். ஆல்ப்ஸிலிருந்து தோன்றி ஏட்ரியாட்டிக் கடலில் கலக்கும் போ (Po) நதியும் அதன் துணை நதிகளும் இச் சமவெளியை வளப்படுத்துகின்றன. ஆனால், இங்கு வெள்ளப் பெருக்கு அதிகம். இதனாலும், உள்ளடங்கிய ஏட்ரியாட்டிக் (Adriatic) கடற்கரையின் வடகோடியில் இது இருப்பதாலும் பெரு

நகரங்கள் அங்குத் தோன்ற முடியவில்லை. மேலும் கோடையில் அதிக வெப்பமும் குளிர்காலத்தில் கடுங்குளிரும் இப்பகுதியில் நிலவுகின்றன.

அப்பெனின் மலைகட்கு மேற்கிலும் கிழக்கிலும் குறுக லான கடற்கரைச் சமவெளிகள் இத்தாலியின் நெடுகிலும்




உள்ளன. கிழக்குக் கரை வரண்ட பகுதி. வடக்கிலிருந்தும் கிழக்கிலிருந்தும் மலைப் பகுதிகளிலிருந்தும் குளிர்காற்று அப் பகுதியில் வீசுகிறது. சிறந்த துறைமுகங்களும் அங்குக் கிடை யாது. ஆனல் மேற்குக் கரையோ பல வழிகளிலும் சிறந்து

முதலிய ஓரளவு நீளமான ஆறுகள் அதை வளப்படுத்துகின்றன. நல்ல துறைமுகங்கள் பலவும் அக்கரையில் உள்ளன. சிசிலி, சார்டினியா போன்ற பெரிய தீவுகளையும், மேற்கு ஐரோப்பாவையும் வட ஆப்பிரிக்காவையும் எதிர்நோக்கியுள்ளது இப் பகுதி. மத்திய தரைக்கடல் வாணிகம் முழுவதும் இதன் வழியாகவே நடை பெறுகிறது. சூரிய வெப்பமும் குளிரும் அதிகமில்லாத மிதமான தட்பவெப்பநிலை இங்கு நிலவுகிறது. இக் காரணங்களால்தாம் இத்தாலி, 'மேற்கே பார்த்துள்ளது' என்று கூறுவர். மேற்குக் கரையின் முக்கியத்துவத்தை இதிலிருந்து தெரிந்துகொள்ளலாம்.

ரோம் நகருக்கு முந்திய இத்தாலி : ஆதியில் இத்தாலி (Italiea) என்ற பெயரால் அத் தீபகற்பத்தின் ஒரு பகுதி மட்டுமே வழங்கப்பட்டது. சான்றாக கி.மு. 3ஆம் நூற்றாண்டில் இன்றைய இத்தாலியின் தென்மேற்குக் கோடியில் இருந்த புரூட்டியம் (Bruttium) என்ற ஒரு பகுதியும், லுக்கேனியாவின் (Lucania) தென்பகுதியும் மட்டுமே அப் பெயர்கொண்டு வழங்கப்பட்டன. பின்னாளில் ரோமானியர்கள் அத் தீபகற்பத்தின் பெரும்பகுதியையும் வென்றபின், ஒரு பொதுப்பெயரை அதற்குச் சூட்டவேண்டுமென்று விரும்பியிருக்க வேண்டும். எனவே, மேலும் மேலும் பரவலான பகுதிக்கு 'இத்தாலி' என்னும் பெயர் நாளடைவில் ஏற்பட்டது. கி.மு. 90-89-ல் நடைபெற்ற உள்நாட்டுச் சண்டையின்போதுதான் இத்தாலியர்கள் (Italci) என்று அத் தீபகற்பத்து மக்கள் தங்களை அழைத்துக்கொண்டனர். வடக்கில் ரூபிகன் (Rubicon), மாக்ரா (Macra) ஆகிய ஆறுகள்தொட்டு, தெற்கில் கடல்வரையிலான பகுதி முழுவதும் இத்தாலி ஆகும் என்று கி.மு. 83-ல் எல்லை வகுத்தார் சல்லா (Sulla). அதற்கு வடக்கேயிருந்த பகுதி 'சிசால்ப் பைன் கால்' (Cisalpine Gaul=ஆல்ப்ஸ் மலைகட்கு இப்பாற்பட்ட கால்) என்று பெயரிடப்பட்டு வந்தது, கி.மு. 43-ல்தான் அதுவும் இத்தாலியின் ஒரு மாநிலமாக ஏற்றுக்கொள்ளப்பட்டது. அதுமுதல் தான் தெற்கில் புரூட்டியம் முதல் வடக்கில் ஆல்ப்ஸ் மலைகளின் அடிவாரம்வரையுள்ள பகுதியும் 'இத்தாலி' ஆயிற்று.

பண்டைய மக்கள்: இத்தாலியத் தீபகற்பத்தில் பண்டைக் காலத்தில் பல்வேறு குலங்கள் (tribes) வசித்துவந்தன. டைபர் நதிக்கும் அப்பெனைன் மலைகட்கு மிடையில் **எட்ரஸ்கர்** (Etruscans) என்ற குலத்தினர் வாழ்ந்துவந்தனர். எனவே, அப்பகுதி 'எட்ரூரியா' (Etruria) எனப் பெயர் பெற்றது. அவர்கள் 'ஆசியாவி லிருந்து வந்தவர்கள்' என்று கூறுவர் சிலர். ஆனால், அவர்களது பூர்வீகம்பற்றி ஒன்றும் உறுதியாகத் தெரியவில்லை. போ நதிச் சமவெளியில் முன்பு வசித்தவர்கள் என்றும், பின்னர் கால் குலத்

தினரால் அங்கிருந்து தெற்குநோக்கி விரட்டப்பட்டவர்கள் என்றும் தெரிகிறது. அவர்கள் வலிமை மிகுந்து விளங்கினர். கப்பல் செலுத்துவதில் சிறந்து விளங்கினர்; வெண்கலத்தாலும் இரும்பாலும் பல பொருள்களை அவர்கள் செய்தனர். இத்தாலியில் மேலும் பலவிடங்



களையும் கைப்பற்ற முயன்றனர். தெற்கில் கம்பேனியா (Campania) விலுங்கூடச் சிற்சில இடங்களில் அவர்கள் வாழ்ந்தனர்.

மத்திய இத்தாலியில் எட்ரஸ்கருக்குக் கிழக்கில் டைபர் நதியின் எதிர்க்கரையில் வாழ்ந்தனர் **அம்பிரியர்** (Umbrians). அவர்கள் வாழ்ந்த பகுதி 'அம்பிரியா' எனப்பட்டது. மத்திய இத்தாலியின் மலைப்பகுதிகளில் பல குலங்கள் ஆதியில் வாழ்ந்துவந்தன.

சபேலியர்கள் (Sabellians) என்று பொதுவாக அவர்கள் அழைக்கப் பட்டனர். பின்னர் அவர்கள் தெற்குநோக்கிச் சென்று பலவிடங் களிலும் குடியேறி லுக்கேனிகள் (Lucani), அப்பூலிகள் (Apuli), புரூட்டிகள் (Bruttii) என்ற பெயர்களோடு வாழ்ந்துவந்தனர். அவ்வாறு அவர்கள் வாழ்ந்துவந்த பகுதிகள்தாம் லுக்கேனியா, அப்பூலியா, புரூட்டியம் என்பன. இவ்வாறு சபேலியர்களின் வழியில் வந்து, ரோமாபுரி வரலாற்றில் முக்கிய இடத்தைப் பெற்ற வேறு இரு குலங்களைப் பற்றியுங்கூட இங்குப் பார்க்க வேண்டும். (1) சபைன்கள் (Sabines): இவர்கள் ரோம் நகருக்குச் சற்றுக் கிழக்கில் டைபர் நதியின் கிழக்குக் கரையில், டைபரின் கிளைநதியான நாருக்குத் (Nar) தெற்கில் மலைப்பாங்கான பகுதியில் வாழ்ந்தனர். ரோமாபுரியை உருவாக்குவதில் இவர்கள் ஆற்றிய பங்குபற்றிப் பின்னர்ப் பார்க்கப்போகிறோம். (2) சாம் னைட்டுகள் (Samnites): மத்திய இத்தாலியின் மலைகளில் இவர்கள் வசித்த பகுதி 'சாம்னியம்' (Samnium) எனப்பட்டது. கம்பேனியாவை நோக்கி மேற்கில் விரிவடைந்து ரோமாபுரியின் தாக்குதல்களை எதிர்த்து மற்றவர்களைவிட நீண்டகாலம் இவர்கள் போராடினர். கடைசியாக இத்தாலியத் தீபகற்பத்தின் தெற்குக் கோடியில் உள்ள பாதம்போன்ற பகுதியில் கிரேக்கர் களின் குடியேற்றங்கள் பல இருந்தன. 'பெரிய கிரீஸ்' (Magna Graecia) என்று பெயரிடப்பட்டது இப் பகுதி. ரோமானியர்களின் பழக்கவழக்கங்கள், சமயம், இலக்கியம் ஆகியவற்றில் கிரேக்க முத்திரைகள் காணப்படுவது இக் கிரேக்கக் குடியேற்றங்களால் தான்.

டைபர் நதிக்குத் தெற்கில் கடற்கரை ஓரமாக லத்தீயம் (Latium) என்ற பகுதியில் வாழ்ந்துவந்தனர் **லத்தீன்கள்** (Latins). இவர்கள் குடியேறுவதற்குமுன்பே அப் பகுதியில் வாழ்ந்துவந்த ஆஸ்கர் இனத்தவருக்கும் (Oscar race) இவர்கட்கும் இடையில் அடிக்கடி போர்கள் நடந்துவந்தன. இந்த லத்தீயத்தில் தான் ரோம் நகர் நிறுவப்பட்டது.

2. ரோமாபுரியின் தோற்றமும் முதல் மன்னர்களும்

ரோமாபுரியின் தோற்றம் : மத்தியதரைக் கடற்கரைப் பகுதி (ஆசியா மைனர், வடக்கு ஆப்பிரிக்கா, தெற்கு ஐரோப்பா) முழுவதிலும் கிரேக்கர் குடியேற்றங்கள் காணப்பட்ட காலம் அது. ஹோமரின் (Homer) காவியங்களில் மிகுந்த ஈடுபாடு கொண்டிருந்தனர் கிரேக்கர்கள். எனவே, தாம் வாழ்ந்த பகுதிகளில் இருந்த நகரங்களுக்கெல்லாம் ஹோமரின் காவியத் தலைவர்களே காரணமாயிருந்தனர் என்று கதைகளைக் கட்டிவிட்டனர் அவர்கள். ரோம் நகரின் தோற்றம்பற்றிய கதையும் இவ்வாறே உருவாயிற்று. அதன் தோற்றம்பற்றி ஏற்கெனவே வழங்கிவந்த கதைகளோடு ஹோமரின் காவியத் தலைவர்களையும் தொடர்புபடுத்தி உருவாக்கப்பட்டதுதான் அக் கதை.

ட்ராய் (Troy) நகரானது கைப்பற்றப்பட்டுத் தீக்கிரையாக்கப்பட்ட நேரத்தில் வயது முதிர்ந்த தன் தந்தையையும், சிறு பாலகனான தன் மகன் அஸ்கேனியஸையும் (Ascanius) தன்னுடைய குலதெய்வங்களையும் சுமந்துகொண்டு கப்பல் ஒன்றில் ஏறித் தப்பிச் சென்றான் ஈனியஸ் (Aeneas). அங்குமிங்கும் அலைந்து சொல்லொணாத் துன்பங்களை அனுபவித்து இறுதியில் லத்தீயத்தின் கரையை வந்தடைந்தது அவனது கப்பல். அப்பொழுது அதை ஆண்டுவந்த லாத்தீனஸ் (Latinus) என்ற மன்னன் ஈனியஸை அன்போடு வரவேற்று, தன் மகள் லவீனியா (Lavinia) என்பவளை அவனுக்கு மணமுடித்து வைத்தான். ஏற்கெனவே அவளுக்காக நிச்சயம் செய்யப்பட்டிருந்த சிற்றரசன் ஒருவன் இதைக் கேட்டுப் போருக்கு வந்தான். அவனைப் போரில் கொன்றான் ஈனியஸ். சில நாள்களில் லாத்தீன்ஸ் இறந்ததும் ஈனியஸ் அரியணை ஏறினான். தன் மனைவியின் பெயரில் லவீனியம் என்ற ஒரு புதிய நகரை அவன் நிர்மாணித்தான்.

அவனுக்குப் பிறகு அரியணையேறிய அஸ்கேனியஸ்-அயூலஸ் (Iulus) என்று இவனை ரோமானியர் அழைத்தனர். ஆல்பா லோங்கா (Alba Longa) என்ற ஒரு புதிய நகரை நிறுவினான்.

'லத்தீன் லீக்கில்' (Latin League) இருந்த 30 நகரங்களுக்கெல்லாம் தலைமையானதாக இது விளங்கியது. அஸ்கேனியஸுக்குப் பிறகு பன்னிரண்டு அரசர்கள் ஆண்டதாகக் கதை கூறுகிறது.



ரோமூலஸ் கதை : அப் பன்னிருவருள் ஒருவர் புரோக்காஸ் (Procas) என்பவர். அவருக்கு நுமீட்டர் (Numitor), அமூலியஸ் (Amulius) என்ற இரு புதல்வர்கள் இருந்தனர். தன் தந்தையின் மரணத்துக்குப்பின் அமூலியஸ் அரியணையைக் கைப்பற்றிக்கொண் டான். தமையனான நுமீட்டர் உயிர் பிழைக்க ஓடவேண்டியதாயிற்று. அவன் மகனும் மகளும் மட்டும் அமூலியஸின் கைகளில் சிக்கினர். மகனைக் கொன்றுவிட்டு, மகளான ரியா சில்வியாவை (Rhea Silvia)

வெஸ்டா என்ற தெய்வத்தின் (Goddess Vesta) கன்னிகோயிலுக்குக் காணிக்கையாகச் செலுத்தினான் அமூலியஸ், ஆனால், மார்ஸ் (Mars) தெய்வமானது ரியாவின் கன்னி விரதத்தைக் கெடுத்து, இரண்டு புதல்வர்களை அவளுக்கு ஈந்தது.

இதனால் வெகுண்ட அமூலியஸ் அவளைக் கொலை செய்வித்து, அவள் குழந்தைகளையும் டைபர் ஆற்றில் போட்டுவிடுமாறு ஆணை யிட்டான். கரைபுரண்டோடிய அவ்வாறானது அக் குழந்தைகளைப் பேலட்டைன் குன்றுக்கருகில் (Palatine hill) ஒரு மரத்தடியில் ஒதுக் கியது. ஒரு பெண்ஓநாய் அக் குழந்தைகளைத் தூக்கிச் சென்று பாலூட்டி வளர்த்து வந்தது. அமூலியஸின் இடையன் ஒருவன் பின்னர் அக் குழந்தைகளை எடுத்துச் சென்று தன் பிள்ளைகளோடு வளர்த்து வந்தான். ரோமுலஸ் (Romulus), ரீமஸ் (Remus) என்று அவர்களுக்குப் பெயரிட்டான் அவன். பின்னர் ஒரு நாள் நுமீட்டரின் இடையர்கட்கும் இவனுக்கும் சண்டை ஏற்பட்டது. அக் குழந்தைகளை அவர்கள் நுமீட்டரிடம் தூக்கிச் சென்றனர். 'தன் பேரப்பிள்ளைகளே இவர்கள்' என அறிந்து மகிழ்ந்தான் நுமீட்டர். இறுதியில் அமூலியஸைக் கொன்று, நுமீட்டரை அரியணை யேற்றினர் ரோமுலஸும் ரீமஸும்.

ரோம் நிறுவப்படல்: தாம் ஓநாயால் எடுத்து வளர்க்கப்பட்ட டைபர் நதிக்கரையில் ஒரு நகரை நிறுவ விரும்பி ஆல்பா லோங் காவை விட்டுச் சென்றனர் ரோமுலஸும் ரீமஸும். பேலட்டைன் குன்றின்மீது அதை நிறுவ எண்ணினான் ரோமுலஸ். ஆனால் ரீமஸோ வேறொரு குன்றின்மீது நிறுவ விரும்பினான். இறுதியில் கடவுளே இதுபற்றித் தமக்கொரு வழிகாட்ட வேண்டுமென்ற முடிவை மேற்கொண்டனர். நகரை அமைப்பதற்கெனத் தாம் தேர்ந் தெடுத்த இரு குன்றுகளின்மீது இருவரும் இரவு முழுவதும் நின்றனர். விடியற்காலையில் தன் குன்றின்மீது ஆறு கழுகுகள் பறப்பதைக் கண்டான் ரீமஸ். 'கடவுள் காட்டிய குறி அதுவே' என்று முடிவுசெய்து ரோமுலஸுக்கு ஆளனுப்பினான் அவன்.

ஆனால், சூரியன் உதித்ததும் ரோமுலஸ் பன்னிரண்டு கழுகுகளைக் கண்டு பேலட்டைன் குன்றின்மீதே நகரை நிறுவ முடிவுசெய்து சுற்றுமதில் ஒன்றைக் கட்டினான். ஆத்திரமுற்ற ரீமஸ் அதன்மீது ஏறிக் குதித்தான். உடனே ரோமுலஸ் அவனைக் குத்திக் கொன்றான். 'எனது மதிலின்மீது ஏறிவரும் அனைவரும் இப்படியே மடிவார்களாக!' என்று அவன் சாபமிட்டான். எனவே தான் மதில்வாயில் வழியாகவே ரோம் நகருக்குள் மக்கள் நுழைந் தார்களாம்!

ஒரு பக்கம் காளையையும் மறுபக்கம் கன்றுபோடாத ஒரு பசுவையும் பூட்டி ஏர் ஓட்டி ரோமாபுரி நகரை அமைக்கும் சடங்குகளை ரோமுலஸ் மேற்கொண்ட அப் புனிதமான நன்னாள் கி.மு. 753, ஏப்ரல் திங்கள் 21ஆம் நாள் என்று கதை கூறுகிறது.

ரோமுலஸின் ஆட்சி (கி.மு. 753—716): தாம் நிறுவிய நகரின் மக்கள்தொகையைப் பெருக்குதற்காக இரண்டு முயற்சிகளை ரோமுலஸ் மேற்கொண்டார். அண்மையிலிருந்த கேப்பிடோலைன் குன்றின்மீது (Capitoline Hill) ஓர் 'அடைக்கல நகரை' அவர் அமைத்தார். அண்டையில் வாழ்ந்த குலங்களைச் சேர்ந்த குற்றவாளிகள் பலர் தண்டனையிலிருந்து தப்புவதற்காக அங்கு வந்து அடைக்கலம் புகுந்தனர். தமது குலத் தலைவர்களின் கொடுங்கோன்மைக்கு அஞ்சிய பலரும் அங்கு வந்து குடியேறினர். இந்நிலையில் ஆண்களைவிடப் பெண்கள் தொகை தம் நகரில் குறைவாயிருப்பதைக் கண்டு ஒரு பெரிய விழாவுக்கு ஏற்பாடு செய்தார் ரோமுலஸ். அப்பொழுது ஏற்பாடு செய்யப்பட்ட விருந்திலும் விளையாட்டிலும் நாட்டங்கொண்டு ஏராளமான லத்தீன்களும் சபைன்களும் தம் பெண்டு பிள்ளைகளோடு வந்தனர். ரோமானிய இளைஞர்கள் திடீரென அவர்களைத் தாக்கி, பெண்டிரைத் தூக்கிச் சென்று மணந்துகொண்டனர்,

தம் பெண்டிரை மீட்பதற்கெனப் பல குலத் தலைவர்கள் ரோமைத் தாக்கினார்கள். அவர்கள் அனைவரையும் ரோமுலஸ் தோற்கடித்தார். இறுதியில் சபைன்குலம் ஒன்றின் அரசரான டைட்டஸ் டேட்டியஸ் (Titus Tatius) என்பவருக்கும் ரோமுலஸுக்கும் கடும் சண்டை நடந்தது. ரோமானியர்களால் ஏற்கெனவே சிறை பிடிக்கப்பட்டு அவர்களின் மனைவிகளாகிவிட்ட சபைன் பெண்கள் பலர் தலையிட்டு இப் போரைத் தீர்த்து வைத்தனர். பேலட்டைன் குன்றிலிருந்து ரோமானியர்களை ரோமுலஸும், கேப்பிடோலைன் குன்றிலிருந்து சபைன்களை டைட்டஸும் ஆளுவதென்று முடிவாயிற்று. ரோமானியர்களும் சபைன்களும் இதுமுதல் ஒருவரோடொருவர் கலந்து ஒன்றாயினர். விரைவிலேயே டைட்டஸ் இறந்துவிடவே, ரோமுலஸே தனித்து ஆளத் தொடங்கினார்.

ஒருநாள் பகற்பொழுதில் தமது குடிகளோடு ரோமுலஸ் உரையாடிக்கொண்டிருந்தபொழுது, திடீரென இருண்டு புயல் வீசியது. மீண்டும் ஒளி வந்தபொழுது ரோமுலஸைக் காணவில்லை. அவரின் தந்தையான கடவுள் மார்ஸ் தம் அருமை மகனை எடுத்துக் கொண்டு போய்விட்டார்! பின்னர் ஒருவருக்கு ரோமுலஸ் காட்சி

கொடுத்து ரோமானியர்கள் தம்மைத் தெய்வமாக வணங்கவேண்டும் என்றும், உலகை அவர்கள் ஆளப் போகிறார்கள் என்றும் கூறி மறைந்தார்!

ரோம் நகரின் அமைப்பு : ரோம் நகரம் விரைவாக வளர்ச்சி யுற்றதற்குக் காரணம், அது அமைந்திருந்த இடமும் சூழலும்தான். அண்டையிலிருந்த குலங்களின் தாக்குதல்களைச் சமாளிப்பதற்கென, பலத்த கோட்டை கொத்தளங்களை அமைப்பதற்கு ஏதுவாகக் குன்றின்மேல் அமைந்திருந்தது அது. கடற் போக்குவரத்துக்கு ஏதுவாக டைபர் நதியின் முகத்துவாரத்தில் (அதேசமயம், கடற் பக்கமிருந்து யாரும் தாக்கமுடியாதவாறு சுமார் 18 மைல் உள் ளடங்கி) அது அமைந்திருந்தது. மேலும் அதைச் சுற்றிலும் சிறு குன்றுகள் பல இருந்தன. மக்கள்தொகை பெருகப்பெருக அவற்றின் மீதும் குடியிருப்புகளை அமைத்து, எல்லாக் குன்றுகளையும் உள் ளடக்கிய பலத்த கோட்டை மதிலை எழுப்பினர் ரோமானியர். இந்த இயற்கை வசதிகளைக் கொண்டுதான், நிலநடுக்கத்துக்கும் எரிமலை வெடிப்புக்கும் அடிக்கடி ஆளான மக்கள் ஆல்பா லோங்காவிலிருந்து வந்து ரோமில் குடியேறினர். ரோமுலஸின் காலத்திலேயே இரண்டு மூன்று குன்றுகளின்மீது கோட்டை கொத்தளங்களும் மதிலும் அமைக்கப்பட்டுவிட்டன.

நூமா பாம்பிலியஸ் (கி.மு. 715—673) : ரோமுலஸுக்குப் பின் நூமா பாம்பிலியஸ் ரோமின் மன்னராகத் தேர்ந்தெடுக்கப் பட்டார். டைட்டஸ் டேட்டியஸின் மகளை மணந்திருந்தார் இவர். நூமா பாம்பிலியஸ் (Numa Pompilius) அமைதியையே விரும்பிய மன்னர். 43 ஆண்டுக் காலம் அமைதியாக ரோமாபுரியை ஆண்ட இவரது காலத்தில்தான் மாதம், பருவம், சமயச் சடங்குகள் முதலியவை வகுத்து முறைப்படுத்தப்பட்டன. ஆல்பா லோங்காவி லிருந்து கொணரப்பட்ட புனிதத் தீயை அணையாமல் பேணுவதற் கென வெஸ்டா ஆலயத்தைச் சேர்ந்த நான்கு கன்னியர் அமர்த்தப் பட்டனர்.

டல்லஸ் ஹாஸ்டிலியஸ் (கி.மு. 672—640) : அடுத்து மன்ன ராகத் தேர்ந்தெடுக்கப்பட்ட இவர் லத்தீன் குலத்தவர். இவரது ஆட்சிக்காலம் முழுவதும் ஏராளமான போர்கள் நிகழ்ந்தன. எட்ரஸ்கர் களோடு பல போர்கள் நடந்தன. ஆல்பா லோங்காவையும் கைப் பற்றி, அதன் அரசரைக் கொன்று, நகரை அழித்துவிட்டு, அம் மக்களைக் கொண்டுவந்து ரோமுக்கு அண்மையிலிருந்த ஒரு குன்றின்மீது குடியமர்த்தினார் டல்லஸ் (Tullus Hostilius). இதனால் ரோமாபுரி அரசின் மக்கள்தொகை இருமடங்காயிற்று. ஆல்பர்கள்

ரோம் அரசில் சேர்த்துக்கொள்ளப்பட்டனரே ஒழிய, ரோமாபுரிக் குடிமக்களாக (Citizens) ஏற்றுக்கொள்ளப்படவில்லை. தம்முடைய வணிகர்களுக்கு ஆதரவாகச் சபைன் குலங்கள் சிலவற்றோடும் டல்லஸ் போரிட்டார்.

முப்பது நகரங்கள் அடங்கிய லத்தீன் லீக்கின் தலைநகரமாக ஆல்பா லோங்கா இருந்தது என்பதை முன்பு பார்த்தோம். ஆல்பாவை அழித்ததன்மூலம் அந்த லீக்கில் நுழையவும் அதன் தலைமைப் பதவியைக் கைப்பற்றவும் ரோம் முயன்றது. லத்தீயத்தில் அதன் ஆதிக்கம் இவ்வாறு ஆரம்பித்தது.

ஆன்கஸ் மார்சியஸ் (கி.மு. 640—616): ஆல்பா லோங்காவைக் கைப்பற்றியதன் விளைவாக லத்தீன்களின் பகைமையைப் பெற்றது ரோம். எனவே, நூமா பாம்பிலியஸின் மகள் வயிற்றுப் பேரனான ஆன்கஸ் மார்சியஸ் (Ancus Marcius) அரியணை ஏறிய உடனேயே லத்தீன்கள் ரோமைத் தாக்கினர். ஆனால், அத் தாக்குதல் முறியடிக்கப்பட்டு, லத்தீனிய நகரங்களில் பல பிடிபட்டன. அவற்றின் மக்களைக் கொண்டுவந்து அருகிலிருந்த குன்று ஒன்றின் மீது குடியமர்த்தினார் ஆன்கஸ். ரோமில் டைபர் நதிக்குக் குறுக்கே முதலாவது பாலத்தைக் கட்டியவர் இவரே என்று கூறப்படுகிறார். அந்நதியின் முகத்துவாரத்தில் ஆஸ்டியா (Ostia) என்ற துறைமுகப் பட்டினத்தையும் இவர் நிறுவினார். ரோமாபுரியின் பெருகிவரும் கடல்வாணிகத்தை இது காட்டுகிறது.

லூசியஸ் டார்க்வீனியஸ் பிரிஸ்கஸ் (கி.மு. 616—578): இவர் ஓர் எட்ரஸ்கர். ஆன்கஸின் காலத்தில் ரோமாபுரிக்கு வந்து அரசியலில் மிகுந்த செல்வாக்கோடு விளங்கி, இறுதியில் அரசராகத் தேர்ந்தெடுக்கப்பட்டார். இவரது காலம் முதல்தான் ரோமின் வரலாறு ஓரளவு தெளிவாகப் புலப்படுகிறது என்பர் வரலாற்று ஆசிரியர். லத்தீனிய நகரங்கள் பலவற்றோடு போரிட்டு ரோமாபுரியின் தலைமையை ஏற்றுக்கொள்ளும்படி செய்தார் இவர். சபைன்களையும் போரில் வென்றார். இவ் வெற்றிகளைக் குறிப்பது போல் கேப்பிடோல் (Capitol) மீது ஜுப்பிடர் (Jupiter) தெய்வத்துக்கு ஆலயமொன்றைக் கட்டினார் டார்க்வீனியஸ் (Lucius Tarquinius Priscus). ரோமின் ஆதிக்கத்துக்குக் கட்டுப்பட்ட எல்லாக் குலங்களும் அங்குச் சென்று அத் தெய்வத்தை வழிபட்டன. குன்றுகளின் இடையிலிருந்த பள்ளத்தாக்குகளில் நீர் தேங்காமலிருப்பதற்காகக் கழிநீர்க் கால்வாய்களை வெட்டினார் மன்னர். விளையாட்டு அரங்குகளும் கட்டப்பட்டன. ரோமாபுரியின் பரப்பளவும் செல்வமும் பெருகி வருவதைக் காட்டியது இவரது ஆட்சி.

செர்வியஸ் டல்லியஸ் (கி.மு. 578—534): டார்க்வீனியஸின் அடிமையான டல்லியஸ் (Servius Tullius) அடுத்த மன்னரானார். ஏழு குன்றுகளின்மீது அமைந்திருந்த ரோம்நகரைச் சுற்றிலும் ஐந்து மைல் சுற்றளவுக்கு ஒரு கோட்டை மதிலைக் கட்டி முடித்தார் இவர். நகரின் எல்லையாகச் சுமார் 700 ஆண்டுக் காலம் விளங்கியது இம் மதிலே; 19 வாயில்கள் அதில் அமைந்திருந்தன. டல்லியஸ் ஆண்ட 43 ஆண்டுகளிலும் அமைதியே நிலவியது. போர்களைக் கைவிட்டு அரசதந்திரத்தின்மூலம் லத்தீனிய நகரங்களை ரோமின் தலைமையை ஏற்றுக்கொள்ளும்படி செய்தார். லத்தீன்களின் வழிபாட்டுக்கென டயானா (Diana) தெய்வத்துக்கு ரோமில் ஓராலயம் எழுப்பப்பட்டது. சபைன்களோடும் அமைதியான உறவுகளையே பேணி ஆண்டார் டல்லியஸ். இவரது நல்ல நிருவாகத்தைப் பற்றிப் பின்னர்ப் படிப்போம்.

லூசியஸ் டார்க்வீனியஸ் சூபர்பஸ் (கி.மு. 534—510): டல்லியஸின் மருமகனான இவர் தம் மாமனாரைக் கொன்றுவிட்டு அரியணையைக் கைப்பற்றினார். இரக்கமற்ற கொடுங்கோலரான தால் இவரை ஆணவக்காரர் என்று பொருள்படும் 'சூபர்பஸ்' (Superbus) என்ற பெயரால் அழைத்தனர் மக்கள். லத்தீன்களையும் அவர்தம் நகரங்களையும் மிகுந்த அவமதிப்போடு நடத்தினார் இவர். லத்தீயத்துக்கு அப்பாலும் இவருடைய படைகள் சென்று பல இடங்களைக் கைப்பற்றின. சூபர்பஸின் கொடுங்கோன்மையையும் அவர் மகன் செக்ஸ்டஸ் (Sextus) என்பவனின் நடத்தையையும் கண்டு வெகுண்ட ரோமானியர் கிளர்ச்சி செய்து ஒரு குடியரசை நிறுவினர். இவ்வாறு முடியாட்சி முடிந்தது.

3. மக்களும் நிருவாகமும்

ரோமாபுரியின் நிலை: ரோமுலஸ் என்பவரால் நிறுவப்பட்ட நகர் ஆதலால் 'ரோமாபுரி' என்று அது பெயர் பெற்றது என்பது ஒரு கதை. 'ரோம்' என்ற பெயரை வைத்துக் கற்பிக்கப்பட்ட கதை அது. 'ரூமன்' என்றால் பழைய இத்தாலிய மொழியில் (Italic) நதி என்று பொருள்; எனவே நதிக்கரை நகரமான அது 'ரோம்' என்று வழங்கப்பட்டது என்று கருதுகின்றனர் பலர். ரோம் என்னும் சொல் கிரேக்க மொழியில் 'வன்மை பொருந்தியது' என்னும் பொருள்படும் என்றும், எனவே கோட்டை கொத்தளங்களைக் கொண்டு வலிமை பெற்று விளங்கிய அந் நகருக்கு அதுவே பெயராயிற்று என்றும் கூறுவர் வேறு சிலர்.

முடியாட்சியை அகற்றிவிட்டுக் குடியரசு நிறுவப்பட்ட நேரத்தில் ரோம் நகரம் தன்னைச் சுற்றியிருந்த ஒரு சிறு பகுதியையே ஆண்டு வந்தது. ஆயினும், லத்தீன் லீக்கின் முக்கிய நகரமாக அது திகழ்ந்தது. அதற்கு அப்பாலும் தனது ஆதிக்கத்தைப் பரப்பவும் குடியேற்றங்களை (Colonies) நிறுவவும் முயன்றுவந்தது அது. மேலும், அதன் செல்வமும் பெருகிவந்தது என்று நன்கு தெரிகிறது. ரோம் நகரிலும் அதற்கு வெளியிலும் கட்டப்பட்ட ஆலயங்கள், விளையாட்டு அரங்குகள், கழிநீர்க் கால்வாய்கள் முதலியன இவ்வுண்மையை உணர்த்துகின்றன. இச் செல்வத்துக்குக் காரணம் அதன் கடல் வாணிகமாக இருக்கவேண்டும். ஆஸ்டியா என்ற துறைமுகப்பட்டினத்தை ரோம் நிறுவியது, அதன் கடல் வாணிப வளர்ச்சியைக் குறிக்கும் என்பதை முன்பே பார்த்தோம்.

மக்களின் தொழில்: பேலட்டின் போன்ற குன்றுகளின்மீது ஆரம்பத்தில் குடியிருப்புகளை அமைத்து வசித்துவந்த மக்கள் ஆடு மாடுகளை வளர்த்துவந்த இடையர்கள் என்று கூறுகின்றனர். பேலட்டின் குன்றின்மீது வாழ்ந்துவந்த மக்களின் விழாக்களில் ஆதிகாலந்தொட்டு வருபவை இரண்டு. ஒன்று, ஓநாய்த் தெய்வத்துக்குச் செய்யப்படும் பூசை. மற்றது, பேல்ஸ் (Pales) என்ற இடையர்களின் தெய்வத்துக்காக எடுக்கப்படும் 'பேலிலியா' என்ற விழா. இந்த இரண்டாவது விழாவானது ஏப்ரல் 21ஆம்தேதி கொண்டாடப்

பட்டு வந்தது. அந்நாளில்தான் ரோமாபுரியை ரோமுலஸ் நிறுவினார் என்று கதை கட்டப்பட்டது. ரோமாபுரியில் மிகப் பழங்காலந் தொட்டே இருந்துவந்த பொதுமன்றுகளில் ஒன்று 'கால்நடைச் சந்தை' (Forum Boarium) என்பது. இதற்கு அண்மையில் ஹெர்க்குலிஸ் (Hercules) என்ற தெய்வத்தின் ஆலயம் இருந்தது. தமது ஆடுமாடுகளைக் காக்கும் தெய்வமாக இதை வணங்கிவந்தனர் லத்தீன்கள். (பின்னர் இதைத்தான் கிரேக்கர்களின் ஹீராக்ளீஸுடன் சேர்த்து ஒன்றுபடுத்திக் கதைகள் கட்டப்பட்டன.)

கப்பல் போக்குவரத்துக்கு வசதியாக ஆற்றுக்கும் கடலுக்கும் அண்மையிலிருந்ததால் விரைவிலேயே வியாபாரத்திலும் ஈடுபட்டனர் ரோமானியர். ரோமாபுரியில் குடியரசு நிறுவப்பட்ட உடனேயே கார்த்தேஜ் (Carthage) நகருடன் வாணிப ஒப்பந்தம் ஒன்று செய்து கொள்ளப்பட்டது என்பதை இங்கு நினைவில் வைத்துக்கொள்ள வேண்டும்.

மேலும் பகைவர்களுக்கு நடுவில் வாழ்ந்து, தமது தலைமையை நிறுவுவதற்கென எப்போதும் போர்களில் ஈடுபட்டதால் சிறந்த போர்வீரர்களாகவும் ரோமானியர் விளங்கினர். தனியாகப் படை என்பது ஒன்றும் நீண்ட நாள்கள்வரை இல்லாதிருந்தது. தேவை ஏற்பட்டபோது நகரமக்கள் அனைவருமே ஆயுதந் தாங்கிப் போரிட்டனர். பின்னர், போர் ஓய்ந்ததும் வீட்டிலும் வயலிலும் தம்முடைய வேலைகளுக்குத் திரும்பினர். இவ்வாறு முதலில் இடையராகவும் குடியானவராகவும் இருந்த மக்கள் நாளடைவில் வணிகர்களாகவும் போர்வீரர்களாகவுங்கூட மாறினர்.

மக்களிடையே வகுப்புகள் : ஆதியில் ரோம்நகர மக்கள் ரேம்னேக்கள், திட்டிகள், லூசரேக்கள் (Ramnes, Titii, Luceres) என்று மூன்று குலங்களாகப் பிரிந்திருந்தனரெனத் தெரிகிறது. ஆயினும், இவைபற்றித் தெளிவாக ஒன்றும் தெரியவில்லை. அங்கு வாழ்ந்த ஆதிகுடிகளுள் செல்வாக்குப் பெற்று மேல்மட்டத்திலிருந்தன சில குடும்பங்கள். இவை ஜென்ட்டிகள் (Gentes) எனப்பட்டன. இவற்றைச் சேர்ந்த மக்கள் ஜென்ட்டில்கள் (Gentiles) என்று கூறப்பட்டனர். (Gent = பிரபு—இதிலிருந்துதான் இச் சொல் வந்தது.) அதிகப்படியான நிலங்களும் பலவகையான சலுகைகளும் இவர்களுக்குத் தரப்பட்டன. இவர்களுக்குக் கீழே இவர்களது 'பாதுகாப்பின்கீழ்' வாழ்ந்துவந்த மற்ற அனைவரும் கிளையன்கள் (Cliens) அல்லது ஜென்டிலிசி (Centilicii) என்று அழைக்கப்பட்டனர். இவ்வாறு இரண்டு வகுப்புகளாகப் பிரிந்து வாழ்ந்தனர் ஆதிரோமியர். இவ்விரண்டு வகுப்பினரும் சேர்ந்து மொத்தம்

முப்பது கியூரியாக்களாக (Curia) அதாவது, வார்டுகளாகப் (Ward) பிரிக்கப்பட்டிருந்தனர். (முன்பு கூறப்பட்ட மூன்று குலங்களில் ஒவ்வொன்றும் பத்துப் பத்துக் கியூரியாக்களாகப் பிரிக்கப்பட்டு 30 கியூரியாக்கள் உருவாயின.) மன்னனைத் தேர்ந்தெடுத்தல், குடிகளை விசாரித்துத் தண்டித்தல், சட்டங்களியற்றுதல், போர் அல்லது சமாதானம்பற்றி முடிவெடுத்தல் போன்ற முக்கியமான செய்திகளைப்பற்றி முடிவெடுப்பதற்கு இந்த 30 கியூரியாக்களின் தலைவர்களும் கூடினர். இத்தகைய கூட்டம் கியூரியா மன்றம் (Comitia Curiata) என்று கூறப்பட்டது.

மன்னனும் நிருவாகமும் : ரோமாபுரியில் ஆதியிலிருந்தே அரசர்கள் ஆண்டுவந்தனர் என்பதைப் பார்த்தோம். ஆனால், அவர்கள் தேர்ந்தெடுக்கப்பட்டனர். ஓர் அரசன் இறந்ததும் அவன் மகனே வாரிசுரிமைப்படி அரியணை யேறும் வழக்கம் அப்பொழுது இல்லை. நிருவாகத்தில் தமக்கு ஆலோசனைகள் கூறி உதவுவதற்கென 'செனெட்' (Senate) என்ற 100 பேர்களைக் கொண்ட தோர் அவையை ரோமுலஸ் கூட்டினார் என்று கதை கூறுகிறது. அவரது காலத்தில் 100 ஜென்ட்டிகள் (ஆதி குடும்பங்கள்) இருந்ததாகவும், அவற்றின் தலைவர்களே செனெட்டில் உறுப்பினராக்கப் பட்டனர் என்றும் அது கூறுகிறது. இந்த அவைக்கு ஆலோசனை கூறும் அதிகாரம் மட்டுமே கொடுக்கப்பட்டிருந்தது. அத்தகைய ஆலோசனைகளை அரசன் ஏற்றுக்கொள்வதும், தள்ளிவிடுவதும் உண்டு. தலைமுறை தலைமுறையாக வந்த வழக்காறுகளின்படியே நீதி, நிருவாகம், சட்டங்கள் முதலியன இருந்துவந்தன. ஆயினும், வளர்ந்துவரும் ரோமாபுரிக்கு ஏற்ப, அரசனின் அதிகாரங்கள் நாளுக்கு நாள் பெருகிவந்தன. கியூரியா மன்றமும்கூட அரசனால் கூட்டப்பட்டு, நிருவாகத்தில் அவனுக்கு உதவிவந்தது.

ஓர் அரசன் இறந்து அடுத்த அரசன் தேர்ந்தெடுக்கப்படும்வரை 'இன்டெரெக்ஸ்' என்ற அதிகாரி ஒருவரின் கையில் நிருவாகம் ஒப்படைக்கப்பட்டது. ('Interrex' என்றால் 'இடைக்கால அரசன்' என்பது பொருள்.) இந்த இடைக்காலமானது 'இன்டெரெக்னம்' (Interregnum) என்று சொல்லப்பட்டது. இன்டெரெக்ஸ் ஒருவர் ஐந்து நாள்கள் மட்டுமே பதவியிலிருப்பார். அதற்குப் பிறகு வேறோர் இன்டெரெக்ஸ் தேர்ந்தெடுக்கப்படுவார்.

முறைப்படி தேர்ந்தெடுக்கப்பட்ட அரசர் ஒருவர் தம் வாழ்நாள் முழுவதும் பதவியிலிருந்தார். நீதிபதியாயும் படைத்தலைவராயும் அவர் இருந்தார். போர்களின்போது அவரே படைகளை நடத்திச் சென்றார்.

பிளெபியர்கள் : ரோமாபுரியிலிருந்த ஆதிகுடிகள் 'ஜென்ட்டைல்கள்' என்றும், 'கிளையன்கள்' என்றும் இரு வகுப்புகளாகப் பிரிந்திருந்தனர் என்பதை முன்பு கண்டோம். இவர்கள் மட்டுமே 'ரோமானியக் குடிகளாகக்' கருதப்பட்டனர். இவர்களுக்கு மட்டுமே அரசியலில் பங்கு கொள்ளுதல். வாக்களித்தல், பதவிகள் பெறுதல், படையில் சேர்தல், பண்ணைகள் வைத்திருத்தல் முதலிய உரிமைகள் இருந்தன. (மேல் மட்டத்திலிருந்த ஜென்ட்டில்கள் மட்டுமே இவ்வுரிமைகளை உண்மையில் பெற்றிருந்தனர்.) இந்த 'ரோமானியக் குடிகள்' அல்லது 'நகரக்குடிகள்' (Citizens) மட்டுமன்றி வேறு சிலருங்கூட அங்கு வசித்தனர். இவர்கள் பிளெபியர்கள் (Plebians) என்று கூறப்பட்டனர்.

வெளியிலிருந்து வந்து குடியேறியவர்கள், வியாபாரிகள், போர்க் கைதிகளாகக் கொண்டுவரப்பட்டு அடிமைகள் ஆக்கப் படாமல் குடியமர்த்தப்பட்டவர்கள் முதலிய பலர் இவ் வகுப்பைச் சேர்ந்தவர்களா யிருந்தனர். அரசியலிலும் நிருவாகத்திலும் எவ்விதப் பங்கும் இவர்கட்குக் கிடையாது. கியூரியாக்களில் வாக்குரிமையோ, படையில் சேரும் உரிமையோ, பதவிகள் ஏற்கும் உரிமையோ கிடையாது. ரோமானியக் குடிகளோடு மண உறவும் இவர்கள் வைத்துக்கொள்ள முடியாது. ஆயினும் வியாபாரத்திலும் தொழிலிலும் இவர்கள் ஈடுபட்டனர். (இவற்றில் தாம் ஈடுபடுவது இழிந்தது என்று ரோமானியர் கருதினர்.) மேலும் ரோமானியரின்கீழ் அவர்களின் பண்ணைகளை இவர்கள் பயிரிட்டு வந்தனர். தங்களுக்கு எல்லா உரிமைகளும் அளிக்கப்பட வேண்டும் என்று கோரி வந்தனர் பிளெபியர்கள்.

இதன் விளைவாக நாளடைவில் சில மாறுதல்கள் ஏற்பட்டன. ஆறாவது அரசராக இருந்த செர்வியஸ் டல்லியஸே இம் மாறுதல்களைச் செய்தார் என்று கதை கூறுகிறது. அக்கதை உண்மையன்று என்றாலும், சமுதாயத்தில் ஏற்பட்ட மாறுதல்களை அறிந்துகொள்வதற்கு அது உதவும். ஜென்ட்டில்களையும் (பெட்ரீஷியர்கள்—Patricians என்று இப்பொழுது முதல் இவர்கள் அழைக்கப்படுகின்றனர்.) பிளெபியர்களையும் ஒன்றாகச் சேர்த்து 21 குலங்களாக அவர் பிரித்தாராம். அவற்றுள் நகரத்தில் நான்கும், கிராமப்புறத்தில் பதினேழும் வசித்து வந்தன. மக்களின் சொத்துக் கணக்கை எடுப்பதற்காகவே இப் பிரிவினை செய்யப்பட்டதாகக் கூறப்படுகிறது. பின்னர், சொத்துகளின் அடிப்படையில் மக்களனைவரையும் ஐந்து வகுப்புகளாகப் பிரித்தார். 100,000 ஆஸ் (as-ஒரு பவுண்ட் செம்பு; செப்பு நாணயம் ஒன்றை அது குறித்தது) மதிப்புக்குச் சொத்துப் படைத்தவர்கள் முதல் வகுப்பையும், 75,000 ஆஸ் மதிப்புக்குச்

இம்மாறுதல்களைச் செய்தார் என்று கதை கூறுகிறது. அக்கதை உண்மையல்ல என்றாலும், சமுதாயத்தில் ஏற்பட்ட மாறுதல்களை அறிந்து கொள்வதற்கு அது உதவும். ஜென்ட்டில்களையும் (பெட்ரீஷியர்கள்–Patricians என்று இப்பொழுது முதல் இவர்கள் அழைக்கப்படுகின்றனர்.) பிளெபியர்களையும் ஒன்று சேர்த்து 21-குலங்களாக அவர் பிரித்தாராம். அவற்றில் நகரத்தில் நான்கும், கிராமப்புறத்தில் பதினேழும் வசித்து வந்தன. மக்களின் சொத்துக் கணக்கை எடுப்பதற்காகவே இப்பிரிவினை செய்யப்பட்டதாகக் கூறப்படுகிறது. பின்னர் சொத்துக்களின் அடிப்படையில் மக்களனைவரையும் ஐந்து வகுப்புகளாகப் பிரித்தார். 100,000 ஆஸ் (as-ஒரு பவுண்ட் செம்பு, செப்பு நாணயம் ஒன்றை அது குறித்தது.) மதிப்புக்குச் சொத்து படைத்தவர்கள் முதல்வகுப்பையும், 75,000 ஆஸ் மதிப்புக்குச் சொத்துடையவர்கள் இரண்டாவது வகுப்பையும், 50,000, 25,000,12,500 ஆஸ் மதிப்புச் சொத்துப் படைத்தவர்கள் முறையே மூன்று வகுப்புகளையும் சேர்ந்தவர்களாகப் பிரிக்கப்பட்டனர். முதல்வகுப்பைச் சேர்ந்தவர்களின் தொகை மிகவும் குறைவு.

ஆயினும், அவ்வகுப்பானது 80 'செஞ்சூரியா'க்களாகவும் (centuria) இரண்டாவது, மூன்றுவது, நான்காவது வகுப்பு ஒவ்வொன்றும் 20 செஞ்சூரியாக்களாகவும், ஐந்தாவது வகுப்பு 30 செஞ்சூரியாக்களாகவும் பிரிக்கப்பட்டன. ஒரு செஞ்சூரியா என்பது நூறு போர்வீரர்களை அனுப்பக் கூடியதாக இருந்தது. 12,500 ஆஸுக்கும் குறைவான சொத்துடையவர் அனைவரும் ஒரே செஞ்சூரியாவாகச் சேர்த்து வைக்கப்பட்டனர். போர் மூளைக்குச் செல்லும்போது இந்த ஐந்து வகுப்புகளிலிருந்து மட்டுமே போர்வீரர்கள் அழைக்கப்பட்டனர். ஆயினும், இந்த ஐந்து வகுப்புக்களுக்கும் மேலாக 18 செஞ்சூரியாக்கள் இருந்தன. பெருஞ் செல்வம் படைத்த குடும்பங்களைச் சேர்ந்த இவற்றின் போர்வீரர்கள் (18 நூறு) ரோமா புரியிலேயே தலைசிறந்த குதிரைப் படையினராக இறுதிவரை விளங்கினர். ஈக்வைட்டுகள் (equites) என இவர்கள் அழைக்கப்பட்டனர். இவ்வாறு சொற்ப சொத்தே படைத்தவர்களையும் சொத்தில்லாதவர்களையும் விட்டுவிட்டு மக்கள் தொகையில் சிறுபான்மையினரான செல்வம்படைத்த மனிதர்களைமட்டுமே முக்கியமானவர்களாகக் கருதி, ஐந்து வகுப்புகளாகப் பிரித்து, அவர்கள் அனைவரையுமே இப்பொழுது 'ரோமானியக் குடிகளாக' (citizens) ஆக்கினர்.

ஆயினும் பெயரளவிலேயே சமத்துவம் ஏற்படுத்தப் பட்டது. சொத்தை அடிப்படையாக வைத்து உண்மையில் உரிமைகள் கூடுதலாகவும் குறைவாகவும் இருந்தன. எண்ணிக்

கையில் மிகவும் குறைவாக இருந்த முதல் வகுப்பு, மற்ற வகுப்புகளைக் காட்டிலும் அதிக செஞ்சூரியாக்களாகப் பிரிக்கப் பட்டது. இதற்கு ஒரு சான்று. சட்டங்களை இயற்றுவதற்கும் போர் பற்றிய முடிவுகளை மேற்கொள்வதற்கும் இந்தச் செஞ்சூரி யாக்களின் தலைவர்கள் கூடினர். அத்தகைய கூட்டம் 'செஞ் சூரியா மன்றம்' (Comitia Centuriate) என்றழைக்கப்பட்டது. அரசர்கள் ஆண்டவரை இந்த மன்றம் கூடியதாகத் தெரிய வில்லை. முடியாட்சி முடிவுற்ற உடனேயே இது தலை தூக்கியது.

இந்த மன்றத்தில் ஒரு செஞ்சூரியாவுக்கு ஒரு வாக்கு என்ற அடிப்படையில் பெரும்பான்மை வாக்குகளை வைத்து முடிவுகள் மேற்கொள்ளப்பட்டன. மேல் வகுப்பினருக்கு மிகவும் உதவி யாயிருந்தது. மொத்தம் 189 வாக்குகளில் ஈக்வைட்டுகளுக்கும் முதல் வகுப்பினருக்கு மட்டுமே 98 வாக்குகள் இருந்தன. மேலும், பெட்ரீஷியர்களுக்கும் பிளெபியர்களுக்கு மிடையில் இருந்து வந்த ஏற்றத் தாழ்வுகள் அப்படியேதான் இருந்தன. பதவிகளை வகிப்பதற்கும் பெட்ரீஷியர்கள் மட்டுமே அருகதை படைத்தவர்களாக இப்பொழுதும் இருந்தனர். அவர்களது திருமணங்கள் மட்டுமே செல்லத் தக்கவையாகக் ((Valid) கருதப்பட்டன. பழைய கியூரியா மன்றம் தனது முந்திய அதிகாரங்கள் பலவற்றை இழந்து பெயரளவில் மட்டுமே இப்பொழுது இயங்கி வந்தது.

புதிய கான்சல்கள் : ஏழாவது மன்னரான டார்க்வீனியஸ் விரட்டப்பட்டதைப் பற்றி முன்பு பார்த்தோம். அவர் செய்த தவற்றுள், 'மன்னிக்க முடியாத குற்றமாகக்' கருதப்பட்ட ஒன்று பிரபுக்களையும், அவர்களைக் கொண்ட செனெட்டையும் அவர் அலட்சியம் செய்ததுதான். எனவே, போருக்காக அவர் வெளியே சென்றிருந்த நேரம் பார்த்து, ரோம் நகரைக் கைப் பற்றிக் கொண்டனர் சில பிரபுக்கள். பிரபுக்களையே கொண்ட படையானது, அச்செய்தியை அறிந்து மன்னனுக்கெதிராகப் போர்முனையிலேயே கிளர்ச்சி செய்தது. இவ்வாறு அகற்றப் பட்டது முடியாட்சி.

மன்னருக்குப் பதிலாக இரண்டு 'மாஜிஸ்டிரேட்டுகள்' (லத்தீனில் 'எஜமான்'—Master என்று இச் சொல்லுக்குப் பொருள்) தேர்ந்தெடுக்கப்பட்டனர். முதலில் பிரேட்டர்கள் (Praetores – தலைவர்கள்) என்றும், பின்னர் **கான்சல்கள்** (Consuls – கூட்டாளிகள்) என்றும் இவர்கள் அழைக்கப் பட்டனர். மார்ச்சு மாதத்தில் தொடங்கும் கி. மு. 509ஆம்

தெய்வங்களும் சடங்குகளுமே ரோமில் முதலில் புகுந்தன. மலைகளில் மிகுந்து காணப்பட்ட ஓநாய்களிடமிருந்து தம்மைக் காப்பதற்கென லூப்பெர்க்கஸ் (Lupercus) என்ற தெய்வத்தை அவர்கள் வணங்கியது கவனிக்கத்தக்கது. விதைக்கும்போது சேட்டர்னஸ் (Saturnus) என்ற தெய்வத்தை அவர்கள் வணங்கினர். கிழக்கையும் மேற்கையும் நோக்கிய இரண்டு தலைகளைக் கொண்ட ஜேனஸ் (Janus) என்ற சூரியக் கடவுள், அயோவிஸ் (Iovis) என்ற வான்தெய்வம், டெல்லஸ் (Tellus) என்ற பூமிதேவி, ஃப்ளோரா (Flora) என்ற மலர்மங்கை, ஆலிவ் மரங்களைக் காக்கும் மினர்வா (Minerva) முதலியவை அத் தெய்வங்களுள் சில. இத்தாலியிலும் அண்மையிலுமிருந்த கிரேக்கக் குடியேற்றங்களிலிருந்து கிரேக்க தேவதைகள் வந்து, இந்த லத்தீன் தேவதைகளோடு கலந்து புதிய தெய்வங்கள் உருவாயின. அப்போலோ (Apollo) என்ற கிரேக்க சூரியக் கடவுளுக்கு ரோமில் ஆலயம் எழுப்பப்பட்டது.

தெய்வங்களை முறையோடு வழிபடுவதற்கெனப் புரோகிதர் குழு ஒன்று ரோமில் அமைக்கப்பட்டது. அதற்குத் தலைவராகவும் ஒரு புரோகிதர் (Pontifex Maximus) அமர்த்தப்பட்டார். பறவைகள் பறத்தலையும், மின்னலையும், கோயில் கோழிகள் தானியங்களைக் கொத்துவதையும், பலியிடப்பட்ட விலங்குகளின் குடல்களையும் பார்த்துச் சகுனங்கள் கூறப்பட்டன. எட்ரூரியாவி லிருந்தே ரோமில் இச் சகுனசாத்திரம் புகுந்ததாகக் கூறப்படுகிறது. சகுனங்களைச் சரியாகக் கூறுவதற்கெனச் 'சகுனச் சாமியார்' (Augurs) அமர்த்தப் பட்டார். முடியாட்சி ஒழிக்கப்பட்டபின், மன்னரே இருந்து நடத்த வேண்டிய பலிச்சடங்குகளை இப்பொழுது நடத்துவதற்கெனப் 'பலி மன்னர்' (rex sacrifi-culus) ஒருவரும் அமர்த்தப்பட்டார். மார்ஸ், ஜூப்பிட்டர், வெஸ்டா முதலிய தெய்வங்களின் ஆலயங்கள் முக்கிய மானவையாகக் கருதப்பட்டன.

வெஸ்டா ஆலயத்தில் எரிந்துவந்த புனிதத் தீயை அணைய விடாமல் பேணுவதற்கென ஆறு கன்னியர் அமர்த்தப்பட்டிருந்தனர். அத் 'தீ அணைந்தால் நகரம் அழிந்துவிடும்' எனக் கருதப்பட்டது. தொழுகை, பலி, சகுனம்பார்த்தல் ஆகியவை இன்றி எந்தப் பொதுக் காரியமும் தொடங்கப்படமாட்டா, ஒவ்வொரு வீட்டிலும் நீத்தார்நினைவாக லாரெஸ் (Lares) என்ற தெய்வங்களும் பெனாடெஸ் (Penates) என்ற குலதெய்வங்களும் வணங்கப்பட்டன. ஒவ்வொரு கியூரியாவுக்கும், தனித்தனிப்புரோகிதர் இருந்தனர். இவ்வாறு ஏராளமான சடங்குகளையும் சம்பிரதாயங்களையும் கொண்டு ஆரவாரம் மிகுந்ததாக இருந்தது ரோமானியரின் சமய வாழ்வு.

4. கி.மு. ஐந்தாம் நூற்றாண்டில் ரோம்

கி.மு. 510ஆம் ஆண்டில் வன்மை பொருந்திய அரசாக விளங்கியது ரோமாபுரி. லத்தீன்லீக்கிலும் எட்ரூரியாவிலும் அதன் செல்வாக்கு வளர்ந்திருந்தது, அதன் கடைசி மூன்று மன்னர்களும் மிகவும் வல்லவர்களாக விளங்கினர், அண்டையிலிருந்த குலங்களும் நகரங்களும் அவர்களைக் கண்டு அஞ்சின. இந்நிலையில் மன்னனை விரட்டிவிட்டு முடியாட்சியை அகற்றியதானது ரோமாபுரியின் நிலையை மிகவும் குலைத்தது, எட்ரஸ்க வம்சமானது விரட்டப்பட்டதால் எட்ரூரியர்கள் ரோமாபுரிக்குப் பகைவராயினர். லத்தீன் லீக்கும் ரோமாபுரியின் தலைமைப் பதவியை ஏற்க மறுத்தது. இவ்வாறு அதன் ஆதிக்கத்துக்கும் செல்வாக்குக்கும் திடீரென்று இடையூறு ஏற்பட்டது.

எட்ரஸ்கரின் தாக்குதல் : அரியணையிலிருந்து அகற்றப்பட்ட டார்க்வீனியஸ் எட்ரூரியாவிலிருந்த சேரே (Caere) என்ற நகருக்கு ஓடிச் சென்று அடைக்கலம் புகுந்தார். ரோமின் மீது தாக்குதல் தொடுப்பதற்கு எட்ரஸ்க நகரங்கள் உடனே தயாராயின. ரோமுக்கு வடக்கில் பதினாறுகல் தொலைவில் இருந்த வீய் (Veii) என்ற நகரம் வெகு நாள்களாகவே ரோமுக்குப் போட்டியாக ஆதிக்கம்பெற்று வளர முயன்றுவந்தது, ஆகவே, அப்பொழுது கிடைத்த வாய்ப்பை நழுவவிடாமல் ரோம் நகரின் மீது தாக்குதல் தொடுத்தது அது, உடனே எட்ரூரியாவிலிருந்த பல நகரங்களும் ஒன்றுகூடி 'எட்ரஸ்க லீக்' என்ற ஓர் அணியை அமைத்தன. இந்த அணியின் படையும் குளுசியத்தைச் சேர்ந்த லார்ஸ் போர்சீனா (Lars Porsena of Clusium) என்பவரின் தலைமையில் ரோமின் மீது தாக்குதல் தொடுத்தது (கி. மு, 507), நகருக்கு மிக அண்மையில் வந்து விட்டது அப்படை. நகரின் நுழைவாயிலிலிருந்த மரப் பாலத்தை வெட்டி முரித்து, பகைவர்கள் உள்ளே நுழையாதபடி காத்தனர் ரோமானியர். 'பகைவரால் தோற்கடித்து விரட்டப்பட்ட ரோமானியப் படையானது பாலத்தைக் கடந்து நகருக்குள் நுழைந்து தப்பிக்கும்வரை அப்பாலத்தின் வட கோடியைக் காத்துப் போரிட்டனர். ஹொரேஷியஸும் வேறு இரு வீரர்களும்' என்ற கதையை நீங்கள் படித்திருப்பீர்கள், அந்த நிகழ்ச்சி இப்போரின்போதுதான்

டப்பட்ட ரோமானியப் படையானது பாலத்தைக் கடந்து நகருக்குள் நுழைந்து தப்பிக்கும்வரை அப்பாலத்தின் வட கோடியைக் காத்துப் போரிட்டனர் ஹொரேஷியஸும், வேறு இரு வீரர்களும்' என்ற கதையை நீங்கள் படித்திருப்பீர்கள். அந்த நிகழ்ச்சி இப்போரின்போதுதான் நடந்ததாகக் கூறப்படுகிறது. ரோமானியப் படையானது கடந்து சென்றதும் பாலம் தகர்க்கப்பட்டது. ஹொரேஷியஸ் நதியில் குதித்து நீந்திப் பத்திரமாக நகரை அடைந்தான்.

இவ்வாறு உள்ளே நுழையாமல் போர்சீனா தடுக்கப்பட்டாலும் கூட, தனது மோசமான நிலையை உணர்ந்து, அவர் விதித்த நிபந்தனைகளுக்கெல்லாம் கட்டுப்பட்டுச் சமாதானம் செய்து கொள்ள முன் வந்தது ரோம். தங்களது போர்க் கருவிகளையெல்லாம் போர்சீனாவிடம் ஒப்படைத்து, 'உழுவதற்கு மட்டுமன்றி வேறு எதற்கும் இரும்பைப் பயன்படுத்துவதில்லை' என்று வாக்குக்கொடுத்தனர் ரோமியர். தாம் அவருக்குத் பணிந்து நடப்பதற்கு அடையாளமாகத் தந்தத்தாலான அரியணையையும், செங்கோலையும் அவருக்கு அளித்தனர். தமது நன்னடத்தைக்கு உத்தரவாதமாகப் பிரபுக் குடும்பங்களைச் சேர்ந்த சில இளைஞர்களையும் பணயமாக (Hostages) போர்சீனாவிடம் ஒப்படைத்தனர் ரோமானியர். டார்க்வினியஸை ரோமின் மன்னராக மீண்டும் ஆக்காமலும், அந்த நகரைக் கைப்பற்றிச் சேதப்படுத்தாமலும் திரும்பிச் சென்றார் போர்சீனா.

லத்தீன் லீக்: இவ்வாறு வடக்கில் எட்ரஸ்கரோடு சமாதானம் செய்துகொண்டு, தெற்கில் லத்தீயத்தில் தனது தலைமையை மீண்டும் நிலைநாட்டும் முயற்சியில் ஈடுபட்டது ரோம்.[1] விட்டுவிட்டுப் பன்னிரண்டு ஆண்டுகள் போர் நடந்தது. இறுதியில் கி.மு. 498-ல் ரெஜிலஸ் (Regillus) என்ற ஏரியின் கரையில் நடைபெற்ற கடும் போரில் ஆலுஸ் போஸ்தூமியஸ் ஆல்பஸ் (Aulus Postumius Albus) என்ற ரோமானிய சர்வாதிகாரியின் தலைமையின்கீழ் இருந்த படை லத்தீனிய நகரங்களின் படையை முற்றிலும் முரியடித்தது. இப்பெரும் வெற்றிக்குக் காரணமாயிருந்தவர்கள் ரோமானியக் குதிரைப் படைத் தளபதிகளாக இருந்த காஸ்டர், போலக்ஸ் (Castor Pollux) என்ற இரட்டையர் என்று கதைகள் கூறுகின்றன. எனவே, போருக்குப் பிறகு இவர்களுக்கென ஆலயம் ஒன்றை

1. இப்போருக்கும் டார்க்வீனியஸே காரணம் என்று கூறுகிறது பழங்கதை. எட்ரஸ்கரான போர்சீனாவும் ரோமாபுரியின் அரியணையில் தன்னை அமர்த்தவில்லை என்பதால் தன் மருமகன் ஆக்டேலியஸ் மாக்சிமிலியஸ் ஆண்ட டுஸ்கலம் (Tusculum) சென்று, முப்பது லத்தீனிய நகரங்களையும் தூண்டிவிட்டாராம் அவர்.

ஆலுஸ் நிறுவினராம். போர் நிகழ்ந்ததாகக் கூறப்படும் ஜூலை 15-ந் தேதியன்று ஒவ்வொரு ஆண்டும் தமது நகரின் மதிலுக்கு அப்பால் அமைத்திருந்த மார்ஸ் தெய்வத்தின் ஆலயத்திலிருந்து காஸ்டர்-போலுக்ஸ் ஆலயத்துக்கு ஊர்வலம் செல்வது ரோமானியரின் வழக்கமாக இருந்து வந்தது.

எனினும் சமாதானமும் ஒற்றுமையும் ஏற்பட, மேலும் பல ஆண்டுகள் பிடித்தன. இறுதியில் இஸ்பூரியஸ் கேசியஸ் (Spurius Cassius) என்பவரது முயற்சியினால் லத்தீன் நகரங்களுக்கும் ரோமுக்கு மிடையில் கி.மு. 496 அல்லது 493-ல் சமாதானம் ஏற்பட்டது. (பழங் கதைகள் தரும் சான்றுகளைக் கொண்டு இந்த ஆதி வரலாறு தீட்டப்படுவதால் நிகழ்ச்சிகள், ஆண்டுகள் முதலியவை பற்றித் திட்டவட்டமாக எதையும் கூறுவது கடினம். கிறி. 390-ல் ரோமாபுரியைக் கால்கள் (Gauls) கைப்பற்றியது முதல்தான் நம்பத் தகுந்த வரலாற்றுச் சான்றுகள் நமக்குக் கிடைக்கின்றன. ரோமாபுரியின் ஆதி வரலாற்றைப் பற்றிய கதைகள் கி.மு. 220-200-ல் நடைபெற்ற இரண்டாவது பியூனிக் போர்க் காலத்தில்தான் இறுதி வடிவம் பெற்றன. பின்னர் லிவியும் டயோனிசியஸும் வரலாறுக இவற்றை வரைந்து தந்தனர்.) செப்புத் தூண் ஒன்றின்மீது பொறித்து வைக்கப்பட்டது இந்த ஒப்பந்தம். எவ்வாறெனினும் ரோமாபுரியின் வளர்ச்சியில் முதல் கட்டமாக அமைந்தது லத்தீயத்தில் அதன் ஆதிக்கம் பரவியது எனலாம்.

ரோமானியரும் லத்தீன்களும் ஒரே இனத்தைச் சேர்ந்து, ஒரே மொழியைப் பேசி, ஒரே தெய்வங்களை வழிபட்டவர்கள். எனவே, இவ்விருவரும் இறுதியில் ஒன்றுகச் சேர்ந்துவாழ வேண்டியவர்களே. மேலும் ஈக்விகள் (Aeqvi)வோல்ஸ்சிகள் (Volsci) முதலியோர் தமது மலைகளை விட்டுப் பள்ளத் தாக்குகளை நோக்கிக் குடி பெயர்ந்து வந்து அவ்விருவரையும் தாக்கத் தொடங்கியபொழுது, தம் இருவருக்கும் பொதுவான பகைவரை எதிர்ப்பதில் அவர்கள் ஒன்றுபட்டனர். இவ்வாறு லத்தீன் லீக்கில் மீண்டும் ஒரு முக்கிய உறுப்பினராயிற்று ரோம்.

ஈக்விகள், வோல்ஸ்சிகள், சபைன்கள் : லத்தீன் நகரங்களின் எதிர்ப்பை முறித்து, லத்தீனியத்தில் தனது செல்வாக்கை மீண்டும் நிலைநிறுத்திய அதே நேரத்தில் பல குலங்களின் தாக்குதல்களையும் ரோம் சமாளிக்க வேண்டி யிருந்தது. அத்தாக்குதல்களை எல்லாம் போர் என்று கூறுவதைவிட, 'எல்லை ஊடுருவல்கள்' என்றழைப்பதுதான் பொருத்தமாகும். அக்குலங்கள்

ரோமானிய அரசின் எல்லைக்குள் ஊடுருவல்கள் நடத்தி, எல்லையில் அமைந்திருந்த சிறுசிறு கிராமங்களுக்குத் தீயிட்டுக் கொள்ளையும், கடத்தலும் நடத்தி வந்தன. இத்தகைய தாக்குதல்களை நடத்திய குலங்களில் முக்கியமானவை வோல்ஸ்சிகள் ஈக்விகள், சபைன்கள் (Sabines) ஆகியோர். தூரத்தில் கிராமங்கள் எரிந்து விண்ணில் புகை எழுவதையும் கிராம வாசிகள் அங்குமிங்கும் ஓடுவதையும் மலையுச்சியில் அமைந்த தமது நகரத்திலிருந்து காணும் ரோமானியர் சிலர் உடனே ஆயுதந்தாங்கி, குதிரை ஏறி விரைந்து செல்வர். மோதல்கள் நடைபெறும். சில மணி நேரத்துக்குப் பிறகு, வெற்றி பெற்ற ரோமானிய வீரன் ஒருவன், நான்கு குதிரைகள் பூட்டிய, உயர்ந்த தேர் ஒன்றின்மீது நின்றுகொண்டு, போரில் கைப்பற்றிய பொருள்களைச் சுமந்து சிப்பாய்கள் முன்னும் பின்னும் செல்ல, கைக் கலப்பில் சிறைப்பிடிக்கப்பட்ட போர்க் கைதிகளோடு ரோம் நகரின் மையத்திலிருந்த மன்று வழியாக (Forum) கேப்பிடோலை (Capitol) நோக்கி ஊர்வலமாகச் செல்வான்; இதுதான் வெற்றி ஊர்வலம். இவ்வாறு ஊர்வலம் சென்ற பாதையானது புனிதவழி (Sacred Way) என்று அழைக்கப்பட்டது. ஆல்பாவுக்குச் சற்று வடக்கிலிருந்த ஆல்ஜிடஸ் குன்றுக்கு (Mt. Algidus) அருகில் இத்தகைய போர்கள் இரண்டு கி.மு. 458 லும் 428 லும் நடந்தன. தனது பண்ணையில் வேலை செய்துகொண் டிருந்த சின்சினட்டஸ் (Cincinnatus) அழைத்து வரப்பட்டு, சர்வாதிகாரியாக அமர்த்தப்பட்டு, போர் ஒன்றில் வெற்றி ஈட்டிக் கொடுத்த கதையை நீங்கள் படித்திருப்பீர்கள். அது இந்த முதலாவது போரின்போதுதான் நிகழ்ந்தது. இறுதியில் ஈக்விகள் பணிந்தனர்.

வோல்ஸ்சிகள் வாழ்ந்த கடற்கரைப் பகுதியில் ஆண்ட்டியம் (Antium) என்ற நகரம் ஒன்று இருந்தது. கடைசி மன்னர்களின் காலத்திலேயே ரோமின் ஆதிக்கத்துக்கு ஓரளவு உட்பட்ட நகரமாகிவிட்ட அதை, மீண்டும் கைப்பற்ற வோல்ஸ்சிகள் முயன்று வந்தனர். இறுதியில் ஆண்ட்டியத்தில் நடந்த ஒருபோரில் ரோமானியர் பெரு வெற்றி ஈட்டினர்.[1] ஆனால் அதற்குக் காரணமாயிருந்தவன் கோரியோலேனஸ் (Coriolanus) என்ற ஒருவீரன். ஆணவம் மிகுந்த பிரபுவான இவ்வீரனைப் பிளெபியர்கள் எதிர்த்தனர். எனவே, 'வோல்ஸ்சிகளோடு சேர்ந்துகொண்டு ரோமைத் தாக்கினன்' என்று கதை ஒன்று உண்டு. இறுதியில் தனது அன்னையின் கதறலுக்குக்

1 அந்தகரின் மையத்தில் ஆரம்பத்தில் அமைக்கப்பட்ட கடைத்தெரு அது. கடைகளும் தொழிற்பட்டறைகளும் அங்கு முதலில் இருந்தன. பின்னர் மாபெரும் பொதுக் கட்டடங்களும் ஆலயங்களும் அமைந்து அழகாக விளங்கியது அது.

கட்டுப்பட்டு ரோம் நகரைக் கைப்பற்றுமல் இவன் திரும்பிச் சென்றுவிட்டானும்.

இவ்வாறு லத்தீயத்துக்கு அப்பாலும் ரோமின் ஆதிக்கம் பரவியது. பல நகரங்களுக்கும் சென்று குடியேறுவதற்கென ரோமானியர் அனுப்பி வைக்கப்பட்டனர். இவர்களைத் தொடர்ந்து ரோமானிய ஆதிக்கம் அந்நகரங்களில் நாளடைவில் நிறுவப்பட்டது. வெலிட்ரே (Velitrae), நோர்பா (Norba), ஆர்டியா (Ardea), லேபிகம் (Labicum), சிர்சீய் (Circeii) ஆகியவை அத்தகைய நகரங்களுள் சில.

வீய் நகரின் வீழ்ச்சி : இவ்வாறு தெற்கில் ரோமாபுரியின் ஆதிக்கம் நன்கு நிறுவப்பட்டது. ஆயினும் வடக்கில் எட்ரூரியாவில் டைபர் நதியின் வடகரையிலிருந்த சிலபகுதிகள் மட்டும் ரோமுக்குப் பணியாமல் அதற்குப் போட்டியாக இருந்தன. அவற்றில் ஒன்று வீய் நகரம். டைபர் நதியின் கிளைகளில் ஒன்றான கிரெமேரா (Cremera) நதியின் கரையில், ரோமாபுரியிலிருந்து 16 மைல் தொலைவில் அமைந்திருந்தது அது. டைபரின் வடகரையில் இருந்த எட்ரூரியா போன்ற பகுதிகளில் யாருடைய ஆதிக்கம் ஓங்கி நிற்க வேண்டும் என்பதுபற்றி இரு நகரங்களுக்கும் போட்டியும் பூசலும் இருந்து வந்தன. எட்ரஸ்கலீக்கைச் சேர்ந்த நகரங்களில் பல வீயை ஆதரித்தன. ஆயினும் முன்பு நடந்த கைக்கலப்புக்குப் பிறகு பல ஆண்டுகள் வீய் நகரம் போரில் ஈடு படாமல் அமைதியாகவே இருந்து வந்தது.

ஆனால், கி.மு. 482-ல் ரோமானிய அரசின் எல்லைக்குள் ஊடுருவல்களை மீண்டும் துவக்கினர் வீய் மக்கள். கிரெமேராவின் கரையிலிருந்த முக்கியமானகுன்று ஒன்றைக் கைப்பற்றினர் ரோமானியர். பேபி (Fabii) என்ற குலம் ஒன்றை அதன்மீது குடியமர்த்தினர் அவர்கள். சில மாதங்கட்குப் பிறகு அக்குன்றை மீண்டும் கைப்பற்றி, பேபியர் அனைவரையும் கொன்று குவித்தனர் வீய் வீரர்கள். ரோமாபுரியை நோக்கித் துணிச்சலோடு முன்னேறி, அந்நகருக்கு வெகு அண்மையிலிருந்த ஜேனி குலம் (Janiculam) என்ற குன்றுவரை கைப்பற்றினர். ஐந்தாம் நூற்றாண்டு முழுவதும், அதற்குப் பின்னரும் கூட இந்தப் போர் விட்டுவிட்டுத் தொடர்ந்து நடைபெற்றது. சில நேரங்களில் தனியாகவும், சில நேரங்களில் எட்ரஸ்க நகரங்களின் உதவியோடும் வீய் போரிட்டது. வேறுசிலநேரங்களில் சபைன்களும் அதற்கு உதவி புரிந்தன. ஈக்விகள், வோல்ஸ்சிகள் ஆகியவரோடு போரில் ஈடுபட்ட ரோமாபுரி இக்கட்டான நிலையிலிருந்தது வீயின்

வெற்றிகளுக்கெல்லாம் ரோமாபுரியின் இந்நிலைதான் காரணம். ஆனால், ஐந்தாம் நூற்றாண்டின் இறுதியில் முதலில் ஈக்விகளையும் பின்னர் வோல்ஸ்சிகளையும் ஒருவாறு முரியடித்து அடிமைப் படுத்திய பின்னர்தான், வீயின் தாக்குதலை முரியடிக்க ரோமுக்கு முடிந்தது. கி.மு. 437-ல் நடைபெற்ற ஒருபோரில் வீயின் மன்னரே கொல்லப்பட்டார். ஆயினும் ஈக்விகளுடன் போராட வேண்டி யிருந்த ரோமால் அதற்குமேல் ஒன்றும் செய்ய முடிய வில்லை. தொடர்ந்து சில ஆண்டுகள் நடைபெற்ற கைக்கலப் புக்குப் பிறகு இருபதாண்டுப் போர் ஓய்வு உடன்படிக்கை ஒன்றை ரோமும் வீயும் செய்து கொண்டன. இவ்வாறு கி.மு. 425-க்கும் 405-க்கு மிடையில் இவ்விரு நகரங்களுக்கு மிடையே அமைதி நிலவியது.

ஆனால், கி.மு. 405-க்குப் பிறகு போர்கள் மீண்டும் தொடங் கின. ஈக்விகளையும் வோல்ஸ்சிகளையும் வென்று தன்னைப் பலப் படுத்திக் கொண்ட ரோம், இப்பொழுதுமுதல் உறுதியாகப் போரிட்டது. பலவிடங்களில் பகைவரைத் தோற்கடித்து, வீய் நகரையே முற்றுகை யிட்டது. ஒன்பது ஆண்டுகளாக நடைபெற்ற முற்றுகைக்குப் பின், கி.மு. 395-ல் அந்நகரைக் கைப்பற்றி அழித்தனர் ரோமானியர். அதன் மக்கள் அடிமைக ளாக ரோமுக்கு இழுத்துச் செல்லப்பட்டனர். தெற்கு எட்ரூரி யாவில் ரோமா புரியின் ஆதிக்கம் நிறுவப்பட்டது. ஏனெனில், வீயுக்கு உதவி புரிந்த பல நகரங்களும் ஒன்றன்பின் ஒன்றாக ரோமானியரால் கைப்பற்றப்பட்டன. மேலும் அதே சமயத் தில் ஆல்ப்ஸ் மலைகளைக் கடந்து சென்று, வடக்கிலிருந்து எட்ரஸ்கரைத் தாக்கத் துவங்கினர் கால்கள் (Gauls). இதனால் தெற்கில் ரோமின் வேலை எளிதாயிற்று.

ரோமானியப் படை : வீய் நகரின் மீதான ஒன்பதாண்டு முற்றுகை, ரோமானியப் படை அமைப்பில் முக்கியமான மாறு தல்களைத் தோற்றுவித்தது. ரோமில் முன்பு நிலையான படை ஒன்றும் இல்லை என்பதையும், குடி மக்களே தேவை நேர்ந்த போது ஆயுதமேந்திப் போர்க்களம் புகுந்தனர் என்பதையும், ஓரிரு நாட்களில் போர் முடிந்ததும் தமது வீடுகளுக்கும் வேலை களுக்கும் திரும்பினர் என்பதையும் முன்பு பார்த்தோம். ஆனால், ஒன்பதாண்டுகள் தொடர்ந்து நீடித்த முற்றுகையின்போது ரோமானிய வீரர்கள் அங்கேயே முகாமிட்டுத் தங்க வேண்டி யிருந்தது. இதனால் முறையான படை ஒன்று உருவாயிற்று. படைப் பணியே சிலருக்குத் தொழிலாயிற்று. அத்தகைய படை வீரர்களுக்கு ஊதியம் கொடுப்பதும் அவசியமாயிற்று.

பிரபுக் குடும்பத்து இளைஞர்களைமட்டுமே கொண்டிருந்த அப் படையில், அதிக சொத்துக்கள் இல்லாத ஐந்தாம் வகுப்பு மக்களும் அப்பொழுது சேர்க்கப்பட்டனர். அதுவரை 'ட்ரிபூட்டம்' (Tributum) என்ற சொத்து வரியை மட்டுமே விதித்து வந்த அரசு, படை வீரர்களுக்கு ஊதியம் தருவதற் காகப் புதிய வரிகளை விதிக்க வேண்டியதாயிற்று. படையில் அப்பொழுது சேர்த்துக் கொள்ளப்பட்ட ஐந்தாம் வகுப்பினர், அரசியலிலும் நிர்வாகத்திலும் அதிக பங்கு கோரி ஆர்ப்பாட்டம் நடத்தத் துவங்கினர்.

பிளெபியரின் போராட்டம் : மேலே கூறியவாறு வடக்கிலும் தெற்கிலும் தனது ஆதிக்கத்தை விரிவு படுத்துவதற்காகப் பல போர்களில் ரோமாபுரி ஈடுபட்டுவந்த அதேநேரத்தில் வேறு வகையான போராட்டம் ஒன்று ரோமா புரிக்குள்ளும் நடை பெற்று வந்தது. ரோமானியர்களுக்குள் நடந்த, அவர்களுக் கிடையில் காணப்பட்ட வகுப்பு வேற்றுமைகள் காரணமாக நடைபெற்ற சமுதாயப் பூசல் அது. மேல் வகுப்புகளைச் சேர்ந்த பெட்ரீஷியருக் கெதிராக அடிமட்டத்திலிருந்த பிளெபியர்கள் தொடுத்த போராட்டம் (The Struggle Between the Orders). அந்நியரோடு போர்கள் தீவிரமாக நடந்தபொழுது இந்த வகுப் புப் பூசல்கள் ஓரளவு தணிந்தும், அப்போர்கள் நின்று அமைதி நிலவிய காலத்தில் தீவிரமாகத் தலை தூக்கியும் நின்றன.

பிளெபியர்கள் நடத்திய இந்த வகுப்புப் போராட்டத் துக்கு முக்கிய காரணங்கள், அவர்களது வறுமையும், சம உரிமைகள் கொடுக்காமல் கூலிப் பட்டாளமாக அவர்களைப் பெட்ரீஷியர்கள் பயன்படுத்தியதும் ஆகும். ஏறத்தாழ நிலங் கள் அனைத்துமே பெட்ரீஷியர்களுக்கே சொந்தமா யிருந்தன. சிறிய அளவில் வரண்ட நிலங்களை அங்குமிங்கும் ஓரளவில் பெற்றிருந்த பிளெபியர்கள் பெட்ரீஷியர்களின் நிலங்களையே உழுது வாழ்ந்தனர். வறுமையிலும் பஞ்சத்திலுமே அவர்கள் எப்போதும் வாழ்ந்தனர். இடைவிடாத போர்களினால் பெட்ரீ ஷியரின் செல்வமும் ஆதிக்கமும் மேலும் அதிகரித்தன. அதே சமயத்தில் போர்களின்போது தமது வீடும் சொத்தும் தீக்கிரை யாகி, பயிர்கள் அழிக்கப்பட்டு, கால் நடைகள் கடத்திச் செல் லப்பட்டு மேலும் மேலும் ஆண்டியானவர்கள் பிளெபியர்கள் தாம். மேலும் தமது வீடுகளி லிருந்தும் வயல்களி லிருந்தும் இழுத்துச் செல்லப்பட்டு, படையில் சேர்த்துப் போர் முனைக்கு அனுப்பப்பட்டவர்களும் இவர்கள்தாம். இத்தகைய காரணங் களால் கடனில் மூழ்கிப் போயிருந்தன அவர்தம் குடும்பங்கள்.

அக்காலத்தில் கடன் சட்டங்களை இயற்றியவர்கள் பெட்ரீஷிய ஆட்சியாளர்களே. கடனைத் திருப்பித் தர முடியாத பிளெபியர்களை அடிமை யாக்கி விற்பதற்கு வழி செய்தன அச் சட்டங்கள்.

மேலும், போரின்போது கைப்பற்றப்பட்ட நகரங்களின் நிலத்தையும் சொத்தையும் பெட்ரீஷியர்களே தமக்குள் பங்கு போட்டுக் கொண்டனர். உதாரணமாக அவ்வாறு கைப்பற்றப் பட்ட ஒவ்வொரு நகரிலும் ஒரு பகுதியானது 'பொது நிலமாக, அறிவிக்கப்படும். பணக்காரப் பெட்ரீஷியர் ஒரு சில காசுகளைக் கொடுத்து, குத்தகைக்கு அதை எடுத்துக் கொள்வர்; அல்லது தமது ஆடு மாடுகளுக்கு மேய்ச்சல் நிலமாக அதை ஆக்கிக் கொள்வர். பின்னர் அவர்களுக்கே அது சொந்தமாகி விடும். இவ்வாறு எல்லா வகையிலும் பெட்ரீஷியர் கொழுத்து வந்தனர்.

அரசியல் துறையிலும் கூட, பெட்ரீஷியர்களே அதிகாரம் பெற்று விளங்கினர்; பதவிகள் அனைத்திலும் அமைந்திருந்த வர்களும் அவர்களே. இவ்வாறு சமுதாய, பொருளாதார, அர சியல் துறைகள் அனைத்திலும் தாழ்த்தப்பட்டு, உறிஞ்சப்பட்ட ஏழைப் பிளெபிய வகுப்பினர் போராட்டங்களில் ஈடுபட்டனர். ரோமாபுரி குடியரசு நிறுவப்பட்டபின், சுமார் ஒருநூற்றாண்டு முழுவதும் இப்போராட்டம் தொடர்ந்து நடந்தது.

முதல் பிரிவு : கடனைத் திருப்பிக் கொடுக்காத தம்மைச் சங்கிலியால் பிணைத்து இழுத்துச் சென்று, சித்திரவதை செய்து, அடிமையாக விற்பதைப் பலமுறை எதிர்த்து வந்துள்ளனர் பிளெபியர்கள். ஆனால் தமது எதிர்ப்பும் ஆட்சேபமும் பிரபுக் களின் காதுகளில் விழவில்லை என்பதைக் கண்டனர். எனவே, ஈக்விய-வோல்ஸ்சிப் போர்களின்போது, கி.மு. 495-ல் படை திரட்டப்பட்டபோது, அதில் சேர மறுத்தனர் அவர்கள். உடனே சலுகைகள் கொடுப்பதாக ஆசை காட்டினர் பெட்ரீஷியர். கொடிய கடன் சட்டங்களைத் திருத்துவதாக உறுதி கூறினர். இந்த உறுதியை நம்பி, படையில் சேர்ந்து போரிட்டனர் பிளெபியர். இவ்வாறு பலமுறை உறுதிகள் கொடுக்கப்பட்டு ஏமாற்றப்பட்டனர். எனவே, சில சலுகை களைப் பெறுவதற்காகப் புதிய முறைப் போராட்டம் ஒன்றைத் துவக்கத் தீர்மானித்தனர்.

கி.மு. 494-ல் ஒருநாள் போர் முடிந்ததும் தமது படை அணிவகுப்போடும் ஆயுதங்களோடும் படை முகாமுக்குத் திரும்பாமல் போர் முடிந்தபின், தமது படை அணிவகுப்போடும்

ஆயுதத்தோடும் ஆனியோ (Anio) நதிக்கு அப்பாலிருந்த ஒரு குன்றுக்குச் சென்று (புனிதக் குன்று – the Secred Mount) என்று பின்னர் அது அழைக்கப்பட்டது.) முகாமடித்துத் தங்கினர்: இதுதான் முதலாவது பிரிவு (First Secession) என்று அழைக்கப்படுகிறது. எதிரிகளால் சூழப்பட்டிருந்த அச்சமயத்தில் பிளெபியர் மேற்கொண்ட இந்த நடவடிக்கையானது பெட்ரீஷியர்களைக் கதிகலங்கச் செய்தது. இந்தப் பிளெபியப் பட்டாளம் இல்லாமல் ரோம் நகரைப் பகைவரிட மிருந்து காப்பதோ, தமது ஆட்சியைத் தொடர்ந்து நடத்துவதோ, தங்களால் முடியாததாகவே, சமரசம் பேச மூன் வந்தனர் பெட்ரீஷியர். அப்போது பிளெபியருக்குச் சில சலுகைகளை வழங்கினர்.

டிரிபியூன்கள் : டிரிபியூன்கள் (Tribunes) என்ற அதிகாரிகளைத் தேர்ந்தேடுத்துக் கொள்ளப் பிளெபியர்கள் அனுமதிக்கப்பட்டனர். கான்சல்களால் விதிக்கப்படும் அநீதியான, கொடிய தண்டனைகளி லிருந்து பிளெபியர்களைக் காக்கும் அதிகாரம் அவர்களுக்குக் கொடுக்கப்பட்டது. அவர்கள் புனிதமானவர்கள் என்றும், அவர்களைத் தாக்கும் யாரும் கொடிய தண்டனைக்கு உள்ளாவார் என்றும் கூறும் சட்டம் ஒன்றும் இயற்றப்பட்டது.

முதலில் ஐந்து டிரிபியூன்கள் நியமிக்கப்பட்டனர். கி.மு. 457-ல் இந்த எண்ணிக்கை பத்தாக உயர்த்தப்பட்டது. ஆரம்பத்தில் அவர்களுக்கென அதிக அதிகாரமோ பொறுப்போ அளிக்கப்படவில்லை. கான்சல்களின் நடவடிக்கைகளுக் கெதிராக முறையிடும் குடி மக்களுக்கு உதவுவதுதான் அவர்களது முக்கியமான வேலை. இதற்கென அவர்தம் வீடுகளின் கதவுகள் எப்பொழுதும் திறந்தே கிடக்கும். மேலும், தங்களது பதவிக் காலமான ஓராண்டில் ஒரு நாளுக்குமேல் ரோம் நகரை விட்டு எங்குமே அவர்கள் செல்ல முடியாது. கான்சல்கள் அல்லது வேறு உயர் அதிகாரி அளிக்கும் தண்டனைகளைத் தமது 'தடுப்பு அதிகாரத்தின்' மூலம் (Veto) அவர்கள் தடுத்து நிறுத்தலாம். பிளெபியருக்கு எதிராகச் சட்டங்கள் இயற்றப்படுவதையும் அவர்கள் இவ்வாறு தடை செய்யலாம். அவர்கள் அனைவரும் பிளெபியர்களாகவே இருக்க வேண்டும். ஆரம்பத்தில் கியூரியா மன்றத்தால் அவர்கள் தேர்ந்தெடுக்கப்பட்டதாகத் தெரிகிறது. அதே சமயத்தில் ஈடைல்கள் (Aediles) என்ற அதிகாரிகளும் தேர்ந்தெடுக்கப்பட்டனர். பிளெபியர் பற்றிய வழக்குகள், சட்டங்கள் முதலியன ஒழுங்காக, நேர்மையாக நிர்வகிக்கப்படுகின்றனவா என்பதை மேற்பார்வை

செய்யும் அதிகாரம் இவர்களுக்கு வழங்கப்பட்டிருந்தது. ஆரம்பத்தில் மிகவும் குறைவாகவே இருந்த டிரிபியூன்கள், ஈடைல்கள் ஆகியோரின் அதிகாரம் நாளடைவில் அதிகரித்தது.

பிளெபியருக்கு மேலும் சலுகைகள்: இடைவிடாத போராட்டம் மூலமாக மேலும் அதிக சலுகைகளையும் உரிமைகளையும் பிளெபியர்கள் பெற முயன்றனர். டிரிபியூன்கள் நியமிக்கப்பட்டபின், இரண்டு முக்கியமான உரிமைகளையும் பிளெபியர்கள் பெற முயன்றனர். டிரிபியூன்கள் நியமிக்கப்பட்ட பின், இரண்டு முக்கியமான உரிமைகளுக்காக அவர்கள் போராடினர். ஒன்று, 'பெட்ரீஷியரைப் பிளெபியர் மணக்கக் கூடாது' என்ற தடையை விலக்க வேண்டும்; இரண்டு 'கான்சல் போன்ற உயர் பதவிகளுக்குப் பிளெபியர்களைத் தேர்ந்தெடுக்கக்கூடாது' என்ற தடையை விலக்க வேண்டும். மேலும், சமுதாயத்தில் பெட்ரீஷியர்கட்கும் தமக்கும் இடையிலான எல்லாவித தடைகளையும், பொருளாதார ஏற்றத் தாழ்வுகளையும் அகற்ற அவர்கள் முயன்றனர். ஆனால் பெட்ரீஷியர்கள் இம்முயற்சிகளை எல்லாம் எதிர்த்தனர்.

உதாரணமாக, கி. மு. 486-ல் கான்சலாக இருந்த ஸ்பூரியஸ் கேசியஸ்[1] போரில் கைப்பற்றிய நிலங்கள் சிலவற்றை ஏழை ரோமானியருக்கும் லத்தீனியருக்கும் பங்கிட்டுக் கொடுக்க முன் வந்தார். மேலும், சைரக்யூஸ் (Syracuse) நகரை ஆண்ட கெலோ (Gelo) என்ற அரசன் அனுப்பிய தானியங்களையும் அவர்களுக்கு இலவசமாக விநியோகிக்க விரும்பினர். பணக்காரப் பெட்ரீஷியர்கள் உடனே கூக்குரலிடத் துவங்கினர். 'அரசரைப் போல அளவற்ற அதிகாரங்களைப் பெற்று ஆள விரும்புகிறார் அவர்' என்று பொய்யான பிரசாரங்களை நடத்தி அவதூறு செய்தனர். அவரது பதவிக் காலம் முடிந்ததும் பொய்க்குற்றங்களையெல்லாம் அவர்மீது சுமத்தி, சிரச்சேதம் செய்தனர் பெட்ரீஷியப் பிரபுக்கள். தமது செல்வத்தையும் அதிகாரத்தையும் காப்பதற்கு எல்லா வகையான வழிகளையும் அவர்கள் மேற்கொள்ளுவர் என்பதை இது தெளிவாகக் காட்டியது. இவர்களோடு சரிசமமாகப் போரிட ஏழைப் பிளெபியரால் இயலவில்லை. எனினும், ஒரு சில சலுகைகளை அவர்களால் பெற முடிந்தது. உதாரணமாக, 'தங்களது அவையான பிளெபியர் மன்றத்திலேயே (Concilium Plebis) டிரிபியூன்களை அவர்கள் தேர்ந்தெடுத்துக் கொள்ளலாம்' என்ற சட்டம் கி.மு. 471-ல் இயற்றப்பட்டது.

---

1 லத்தீன் லீக்கில் ரோமாபுரி மீண்டும் நுழைவதற்கும், அதில் தலைமைப் பதவியை வகிப்பதற்கும் வழிசெய்தவர் இவரே என்பதை ஏற்கெனவே [illegible]

இதுவரை வெறும் விவாத அரங்காகவே இருந்து வந்த அம் மன்றம், இப்பொழுதுமுதல் 'குல மன்றம்' (Comitia Tributa) என்று பெயர் பெற்றது. ஏனெனில், செஞ்சூரியா வாரியாக வாக்களிக்காமல் குல வாரியாக வாக்களிக்கப்பட்டது அம் மன்றத்தில்.

கி. மு. 451-ல் மற்றொரு சலுகையையும் பிளெபியர் பெற்றனர். சட்டங்கள் யாவை என்பதையும், உயர் அதிகாரிகளின் வரம்புகள் எவை என்பதையும் எல்லோரும் அறியும்பொருட்டு, சட்டங்களைக் கல்லின்மீதும் வெண்கலத் தகட்டிலும் பொறித்துப் பொதுவிடங்களில் வைக்கப் பெட்ரீஷியர் இணங்கினர். நீண்ட போராட்டத்துக்குப் பிறகே அதற்கும் அவர்கள் இணங்கினர். ஆங்காங்கு நிலவிய சட்டங்களை ஆராய்வதற்கென ஆதென்ஸ் போன்ற நகரங்களுக்கு அதிகாரிகள் அனுப்பப்பட்டனர்.

முடிவில் சட்டங்களை வரைவதற்கென 'டிசெம் வீர்கள்' (Decemviri) என்ற பத்து அதிகாரிகள் கி.மு. 457-ல் தேர்ந்தெடுக்கப்பட்டனர். அவர்களது பதவிக் காலம் ஓராண்டு என்றும், அதற்குள் சட்டங்களை அவர்கள் வரைந்துவிட வேண்டும் என்றும், அக்காலத்தில் கான்சல்களும் டிரிபியூன்களும் இல்லாமல் அவர்களே நிர்வாகத்தை நடத்துவார்கள் என்றும் விதிக்கப்பட்டன. ஓராண்டுக்குள் சட்டங்களை வரைந்து முடிக்க அவர்கள் தவறினால், வேறு 'டிசெம்வீர்கள்' நியமிக்கப் படுவர் என்றும் விதிக்கப்பட்டது. ஓராண்டில் வேலை முடியவில்லை. எனவே, இரண்டாவது ஆண்டில் புதிய டிசெம்வீர்கள் தேர்ந்தெடுக்கப்பட்டனர். முதலாண்டில் பணிபுரிந்த சிலரும் கூட இவர்களில் இருந்தனர். இந்த டிசெம்வீர்களில் மிகவும் முக்கியமானவராக விளங்கியவர், அப்பியஸ் கிளாடியஸ் (Appius Claudius). இரண்டாவது ஆண்டில் இவர்களது ஆட்சி, கொடுமைகள் நிறைந்தும் நேர்மையற்றும் இருந்ததால், பதவியிலிருந்து விரட்டப்பட்டனர். 'இன்ட்டெரெக்ஸ்களை' ச்செனெட் நியமித்தது, விரைவிலேயே கான்சல்களும் டிரிபியூன்களும் மற்ற அதிகாரிகளும் தேர்ந்தெடுக்கப்பட்டனர்.

ஆயினும் நிர்வாக அதிகாரிகளாகி, டிசெம்வீர்கள் மோசமாக நடந்து கொண்டாலும், புதிய சட்டங்களை வகுத்து முடித்துத் தமது பணியை நன்கு ஆற்றினர். பன்னிரண்டு கற்பலகைகள் மீது அல்லது தகடுகளின் மீது பொறிக்கப்பட்டன. பிற்காலத்தில் ரோமனியச் சட்டங்களுக்கு ஆதாரமாக இவை திகழ்ந்தன. கி.மு. 450-ல் வரையப்பட்ட இச்சட்டங்கள் பிளெபியரின்சமூக, அரசியல் நிலையில் எவ்வித மேம்பாட்டையும்

தோற்றுவிக்கவில்லை. பெட்ரீஷியருக்கும் பிளெபியருக்கும் இடையிலான ஏற்றத் தாழ்வுகள் அப்படியேதான் இருந்தன. உதாரணமாக, அவர்களுக்கிடையிலான திருமண உறவின்மீது இருந்து வந்த தடை அப்படியேதான் தொடர்ந்து இருந்து வந்தது. கான்சல் பதவியும் பிளெபியருக்குக் கிட்டாததாகவே இருந்து வந்தது. சட்டங்கள் தெளிவாக இல்லாத நிலை நீங்கி, திட்டவட்டமாக எழுதப்பட்டது மட்டும்தான் அவர்கள் கண்டது.

இந்நிலையைப் பிளெபியர்கள் உணர்ந்து மீண்டும் கோரிக்கைகளை எழுப்பி, குழப்பங்களைத் தோற்றுவித்தனர். எனவே, கி.மு. 445-ல் கனூலியஸ் (Canuleius) என்ற டிரிபியூன் ஒருவர், பிளெபியருக்கும் பெட்ரீஷியருக்கும் இடையில் திருமண உறவுகளை அனுமதிக்கும் சட்டம் ஒன்றை இயற்றுவித்தார்; மேலும், பிளெபியர்கள் கான்சல் பதவி வகிப்பதை அனுமதிப்பதற்குப் பதிலாக, அதே அளவு அதிகாரத்தைக் கொண்ட **இராணுவ டிரிபியூன்களை** (Military Tribunes) நியமிப்பதற்கு வகை செய்தது இச்சட்டம். இவர்களது எண்ணிக்கையானது சந்தர்ப்பத்தைப் பொறுத்து மூன்றிலிருந்து ஆறுவரையிலும் இருக்கும் என்றும், பதவிக்காலம் ஓராண்டு என்றும் விதிக்கப்பட்டன. பிளெபியரும் கூட இப்பதவிக்குத் தேர்ந்தெடுக்கப்படலாம் என்று கூறியது இச் சட்டம். ஆயினும் பெட்ரீஷியரோடு மீண்டும் போரிட்டபின்னர், கி.மு. 400ஆம் ஆண்டில்தான் பிளெபியர் ஒருவர் முதன்முதலாக இராணுவ டிரிபியூன் பதவிக்கு வர முடிந்தது.

அதே சமயம் பெட்ரீஷிய கான்சல்கள் பெற்றிருந்த முக்கியமான அதிகாரம் ஒன்று—மக்கள்தொகைக் கணக்கு எடுத்து, செனெட்டரின் பட்டியலைத் தயாரிக்கும் அதிகாரம்[1]—புதியதாக நியமிக்கப்பட்ட சென்சார்கள் (Censors) என்ற இரு பெட்ரீஷிய அதிகாரிகளிடம் ஒப்படைக்கப்பட்டது (கி.மு. 445). இந்தச் சென்சார்கள் ஐந்தாண்டுகட்கு ஒருமுறை தேர்ந்தெடுக்கப்பட்டு, பதினெட்டு மாதங்கள் பதவியிலிருந்து, பணியை முடித்துவிட்டுப் பதவியிலிருந்து விலகுவர்.

பிளெபியர் மன்றம் இயற்றும் விதிகள் ரோமானிய மக்கள் அனைவரையும் கட்டுப்படுத்தும் என்று கூறும் சட்டம் ஒன்று

1. தாம் நினைத்தபடியெல்லாம் செஞ்சூரியா, குலம் ஆகியவற்றின் மக்கட் தொகை, சொத்து, உறைவிடம் ஆகியவற்றைப் பதிவு செய்து, 5 ஆண்டுகளுக்கு ஒருமுறை 'பாவச் செயல்களைப்' புரிந்த மக்களின் பெயர்களை அகற்றி, பட்டியலைப் புதுப்பித்து, செஞ்சூரியா மன்றம், செனெட் போன்றவைகளைத் தம் பிடியில் வைத்திருந்தனர் — பெட்ரீஷியர்.

கி.மு. 449-ல் இயற்றப்பட்டது. எனினும் செனெட்டின் சட்டங்களுக்கு உட்பட்டவையாகவே அவ்விதிகள் இருக்கவேண்டும். ரோமில் குடியரசு ஏற்பட்டதுமுதலே, வரிகளை வசூலிக்கவும் வரவு செலவுக் கணக்குகளைக் கண்காணிக்கவும் வழக்குகளை விசாரிக்கவும் இரண்டு குவேஸ்டர்களை (Quaestors) கான்சல்கள் நியமித்து வந்தனர். கி.மு. 447ஆம் ஆண்டில் குவேஸ்டர்களைத் தேர்ந்தெடுக்கும் அதிகாரமானது 'குலமன்றத்தின்' கையில் ஒப்படைக்கப்பட்டு, அவர்களின் அதிகாரங்களும் விரிவுபடுத்தப்பட்டன. பிளெபியரின் போராட்டம் காரணமாக, 'அவர்களும் இரண்டு குவேஸ்டர்களைத் தேர்ந்தெடுக்கலாம்' என்றும், பழைய இரண்டு குவேஸ்டர் பதவிகட்கும், போட்டியிடலாமென்றும் கூறும் சட்டம் ஒன்று கி.மு. 421-ல் இயற்றப்பட்டது. இதன் விளைவாக, கி.மு. 409 ஆம் ஆண்டில், மொத்தம் நான்கு குவேஸ்டர்களில் மூன்றுபேர் பிளெபியராய் இருந்தனர். நிதி, நீதி ஆகிய முக்கியமான துறைகளில் அவர்களும் இவ்வாறு பங்கு பெற்றனர். இதனால், செனெட்டில் நுழையும் உரிமையும் அவர்களுக்குக் கிடைத்தது. கி.மு. 400ஆம் ஆண்டில், பிளெபியர் ஒருவர் செனெட் அவையில் முதன்முதலாக நுழைந்தார். ஏனெனில், குவேஸ்டர்களாக இருந்து ஓய்வு பெற்றவர்களைச் செனெட் அவையில் காலியாகும் இடங்களில் அமர்த்துவது ஆரம்பத்தில் ஒரு மரபாக இருந்தது. பின்னர் அது விதியாக அமைந்தது.

இவ்வாறு பலவிதமான சலுகைகளையும் உரிமைகளையும், பிளெபியர் பெற்றனர். ஆயினும், செல்வமும் சொத்தும் பெற்று உயர்வகுப்பினராக இருந்த பெட்ரீஷியரது செல்வாக்கும் ஆதிக்கமும் அப்போதும் ஓங்கியே இருந்தன. ஒருநிகழ்ச்சி, இந்நிலையை நன்கு விளக்கும்.

கி.மு. 440-ல் கடும்பஞ்சம் ஒன்று நிலவியது. பெட்ரீஷியர் ஒருவர் பஞ்ச நிவாரண அதிகாரியாக நியமிக்கப்பட்டார். பிரபு வகுப்பைச் சேர்ந்த அவர் கீழ்வகுப்பு மக்களான பிளெபியர் பஞ்சத்தில் மடிவதைப்பற்றிக் கவலை கொள்ளாமல் இருந்தார். இதைக் கண்ட ஸ்பூரியஸ் மேலியஸ் (Maelius) என்ற பணக்காரப் பிளெபியர் ஒருவர் வருந்தி, தனது சொத்துக்களை விற்று, எட்ரூரியாவிலிருந்து தானியம் வாங்கி வந்து ஏழைகளுக்கு எல்லாம் வழங்கினர். இதனால், மக்களிடையே அவரது புகழ் ஓங்கியது. அடுத்து 'இராணுவ டிரிபியூனாக அவர் தேர்ந்தெடுக்கப்படுவார்' என்று அஞ்சினர் பெட்ரீஷியர். எனவே, அவர் அரசராகிவிடச் 'சதி செய்கிறார்' என்றும் பொய்க் கூச்சலிட்டு, முன்பு ஈக்விகளை முரியடித்து ரோமைக் காத்த சின்சினட்டசைச் சர்வாதி

காரியாக நியமித்தனர். அவர் பெட்ரீஷியப் படை ஒன்றை இரகசியமாகத்திரட்டி, நகரின் முக்கியமான இடங்களில் நிறுத்தி வைத்து, மேலியஸைத் தம்முன் அழைத்து வரும்படி செர் வீலியஸ் அகாலா (Ahala) என்ற பெட்ரீஷிய அதிகாரி ஒருவனை அனுப்பினர். வர மறுத்தார் மேலியஸ். உடனே, அவர்மீது பாய்ந்து குத்திக் கொன்றான் அகாலா. கொலைக் குற்றத்துக்கான கடுந்தண்டனையை அவனுக்கு அளிக்காமல், ஒரு கொடிய ஆட்சியிலிருந்து நாட்டைக் காத்ததாக அவனைப் புகழ்ந்து, ரோம் நகரை விட்டு வெளியேறுமாறு சிறிய தண்டனையை மட்டுமே அளித்தனர் பெட்ரீஷிய நீதிபதிகள்.

ரோம் நகர் தீக்கிரையாதல், கி.மு. 390: இச்சமயத்தில் பேரழிவு ஒன்றுக்கு ரோம் நகர் ஆளாயிற்று. **கால்கள்** (Gauls) என்ற மக்கள் ஆல்பஸ் மலைகளைக் கடந்து வட இத்தாலியில் குடியமர்ந்ததைப்பற்றி முன்பே நாம் பார்த்தோம். முதலில் வந்த சில கால் குலங்கள் போ நதியின் வளமிக்க பகுதிகளில் குடியேறினர். கடைசியாக வந்த கால்களில் ஒருவர் செனோனிகள் (Senones). இவர்களுக்கு ஏட்ரியாட்டிக் கரையில் உட்டென்ஸ் (Utens), ஈசிஸ் (Aesis) என்ற இரு சிற்றாறுகட்கும் இடையிலான குறுகிய, மலைப்பாங்கான, வரண்ட பகுதி மட்டுமே கிடைத்தது. விரைவிலேயே அதிக விசாலமான, செழிப்பான பகுதிகளையும் கைப்பற்றுவதெனப் புறப்பட்டனர் செனோனிகள். இவ்வாறுதான் அவர்கள் எட்ரூரியாவுக்குள் நுழைந்தனர்.

கி.மு. 391-ல் கிளானிஸ் (Clanis) நதிப் பள்ளத்தாக்கின் வழியாக வந்து, அதன் தென்கோடியில் ஒருகுன்றின்மீது அமைந்திருந்த குளுசியம் நகரை முற்றுகையிட்டனர். சிறிது காலமாக ரோமுடன் சமதானமும் நட்பும் பூண்டு வாழ்ந்து வந்தது குளுசியம். எனவே, தனக்கு ஆபத்து நேர்ந்துவிட்ட இந்தநேரத்தில், 'உதவி கோரி ரோமுக்கு அது ஆளனுப்பியது. 'ரோமானியரின் நண்பர்களைத் தாக்குவது கூடாது' என்று கால்களை எச்சரிப்பதற்காகத் தூதர்களை அனுப்பியது ரோம். இந்த எச்சரிக்கையை நிராகரித்தனர் கால்கள். மேலும், குளுசியத்துக்கும் அவர்களுக்கும் நடந்த சண்டை ஒன்றில், ரோமின் தூதர்களும் கலந்துகொண்டு, கால் ஒருவனைக் கொன்று, அவனது பொருள்களையும் கவர்ந்து கொண்டனர். வேறொருவருடன் உண்டான போரில் இத்தூதர்கள் கலந்து கொண்ட முறையற்ற செயலைக் கண்டித்து, அவர்களைத் தம்மிடம் ஒப்புவிக்க வேண்டுமென்று ரோமாபுரிக்குக் கோரிக்கை

அனுப்பினர் கால்கள். இதை ரோம் நிராகரித்தது. மேலும் அவர்களை டிரிபியூன்களாகவும் தேர்ந்தெடுத்தது.

இதனால் வெகுண்ட செனோனிகள், லிங்கோனிகள் (Lingones) என்ற இன்னொரு கால் குலத்தையும் கூட்டிக் கொண்டு, கி.மு. 390-ல் ரோமை நோக்கிப் புறப்பட்டனர். வழியிலிருந்த கிராமங்களையெல்லாம் சூறையாடி அழித்து, ரோமாபுரிக்குப் பதினெரு மைல் தொலைவில் ரோமானியப்படை ஒன்றையும் ஜூலை 18-ந் தேதி தவிடுபொடியாக்கினர். இரண்டு நாட்களுக்குப்பின், ரோம் நகரில் நுழைந்தனர். ரோம் மக்கள் தமது மூட்டை முடிச்சுகளுடன் பாழாகிக் கிடந்த வீய் நகருக்கு ஏற்கனவே ஓடிவிட்டனர். ரோமானியப்படையானது கேப்பி டோலில் இருந்த பலத்த கோட்டைக்குச் சென்று விட்டது.

நகரைக் கொள்ளையிட்டு, அதன் ஒரு பகுதியையும் தீக்கிரையாக்கியபின், கேப்பிடோலை முற்றுகையிடத் துவங் கினர் கால்கள். முற்றுகை நடத்துவதற்குத் தேவையான பொறு மையும் விடாமுயற்சியும் திறமையும் அவர்களுக்குக் கிடையாது. எனவே, முற்றுகை பல வாரங்கள் நீடித்தது. மேன்லியஸ் (Manlius) என்ற ரோமானியத் தளபதியும் திறமையோடு இந்த முற்றுகையைச் சமாளித்தார். ஆயினும், ஒருநாள் இரவில் காவலாளிகள் எல்லோரும் தூங்கிய நேரத்தில் கால்கள் சிலர் கோட்டை மதில்ஏறிக் குதித்து உள்ளே வந்த தாகவும், ஜூனோ (Juno) தெய்வத்தின் ஆலயத்தைச் சேர்ந்த புனித வாத்துகள் சத்தமிட்டு ரோமானிய வீரர்களை எழுப்பியதாகவும், பின்னர் கால்கள் வெளியே விரட்டப்பட் டதாகவும் ஒரு கதை உண்டு. கால்களின் கேப்பிடோல் முற்றுகை தோல்வியில் முடிந்தது.

இந்நிலையில் பருவநிலை மோசமா யிருந்தது. பலவிதமான நோய்களுக்கு ஆளாயினர் கால்கள். தம் நகரைவிட்டு ஓடிய ரோமானியர்களும் அங்குமிங்கும் கால்களைத் தாக்கிக் கொண்டி ருந்தனர். மேலும், ஏட்ரியாட்டிக் கரையில் அவர்களுக்குச் சொந்தமான பகுதிகள்மீது வெனீட்டிகள் (Veneti) என்ற குலத்தினர் தாக்குதல் தொடுத்திருப்பதாக அச்சமயத்தில் செய்தி வந்தது. உடனே, ரோமானியரோடு பேச்சு வார்த் தைகள் துவக்கி, அவர்கள் கொடுத்த பொன்னைப் பெற்றுக் கொண்டு அகன்றனர் கால்கள்.

ரோமானியர்கள் மீண்டும் தமது நகரத்துக்குத் திரும்பினர். அதிகாரிகள் தேர்ந்தெடுக்கப்பட்டு, தீக்கிரையான ஆலயங்

களையும் கட்டடங்களையும் மீண்டும் எழுப்பும் வேலை தொடங்கப்பட்டது. திட்டம் ஏதுமின்றித் தாறுமாறாக வீடுகள் கட்டப்பெற்றன; தெருக்கள் அமைக்கப்பட்டன. பழைய நகரச் சாக்கடை மீதெல்லாம் கட்டடங்கள் எழும்பின. நகரின் சுகாதாரத்துக்கு ஊறு செய்தது இது; கொள்ளை நோய்கள் அடிக்கடி ஏற்பட்டன. கால்களின் தாக்குதலால் ஏற்பட்ட விபரீதமான விளைவுகள் இவை.

அத்தாக்குதலின் முக்கியமான விளைவு ஒன்றையும் நாம் நினைவில் வைத்துக்கொள்ள வேண்டும். பண்டை ரோமானிய வரலாற்றை அறிய உதவக்கூடியன எல்லாம் தீக்கிரையாகி அழிந்தன. எனவே தான், கி.மு. 390 ஆம் ஆண்டுக்கு முந்திய வரலாற்றை ஆதாரபூர்வமாக, ஐயமின்றி அறிந்துகொள்ள இப்பொழுது இயலவில்லை. மற்றபடி பெரிய மாறுதல் ஒன்றையும் இத்தாக்குதல் தோற்றுவிக்கவில்லை. ரோமானியர்கள் திரும்பி வந்து, பழையபடியே தமது அரசியல் வாழ்வைத் தொடங்கினர். ஆயினும், இத்தாக்குதலில் தமது வீடு வாசல்களையும் சொற்ப சொத்துக்களையும் இழந்த பிளெபிய ஏழைகளின் உரிமை கோரிக்கைகள் அதிகரித்தன. அதே சமயம் ரோமின் அழிவைக் கண்டு, மீண்டும் நம்பிக்கைகொண்டு; அதைத் தாக்க முன் வந்தனர் எட்ரஸ்கர், ஈக்வியர், வோல்ஸ்சிகள் ஆகியோர். இந்த அபாயத்தைக்கண்டு தமது பூசல்களைத் தற்காலிகமாக நிறுத்திக் கொண்டு ஒன்று பட்டனர் பெட்ரீஷியரும் பிளெபியரும்.

5. கி.மு. நான்காம் நூற்றாண்டில் ரோம்

குடி ஏற்றங்கள் அமைத்தல் : முன் அத்தியாயத்தில் பார்த்தவாறு ஈக்விகள், வோல்ஸ்சிகள், எட்ரஸ்கர் ஆகியோரைப் பல போர்களில் தோற்கடித்து, தனக்குப் பணிய வைத்த ரோம் அரசு அவர்களது பிரதேசங்களுக்கெல்லாம் தனது குடிகளை அனுப்பிக் குடியேறச் செய்து, தனது ஆதிக்கத்தை அங்கெல்லாம் உறுதியாக நிலைநாட்டியது. இந்த வேலையானது கி.மு. நான்காம் நூற்றாண்டில் துரிதமாக நடைபெற்று, ரோமாபுரி அரசின் எல்லைகள் விரிவடைந்தன.

தான் கைப்பற்றிய நகரங்களிலும் கிராமங்களிலும் மூன்றிலொரு பகுதி நிலத்தை ரோம் எடுத்துக் கொண்டு, அங்குத் தனது குடிகளைக் குடியமர்த்தியது. இவ்வாறு ஏற்படுத்தப்பட்ட புதிய குடியேற்றங்களை இரண்டு வகையாகப் பிரிக்கலாம். (1) ரோமானியக் குடியேற்றங்கள் (Roman Colonies): இவற்றில் குடியமர்ந்தவர்களுக்கு (Roman Citizens) கொடுக்கப்பட்டிருந்த எல்லா உரிமைகளும் அளிக்கப்பட்டன. அதாவது, ரோம் நகருக்குச் சென்று தேர்தல்களில் வாக்களித்தல், அதிகாரிகளாகத் தேர்ந்தெடுக்கப்படுதல் முதலிய எல்லா உரிமைகளும் இவர்களுக்குத் தரப்பட்டன. ரோம் நகரை விட்டு வெளியில் வாழ்ந்த 'ரோமானியக் குடிகள்' இவர்கள். (2) லத்தீனியக் குடியேற்றங்கள் (Latin Colonies): ரோமானியக் குடிகளுக்கு அளிக்கப்பட்டவற்றுள் ஒரு சில உரிமைகளே இவற்றுக்குக் கொடுக்கப்பட்டன. அதாவது, லத்தீயத்தில் முதன் முதலில் கைப்பற்றப்பட்டு ரோம் அரசோடு சேர்த்துக் கொள்ளப்பட்ட நகரங்களுக்கு அளிக்கப்பட்ட ஒருசில உரிமைகள் மட்டுமே இவற்றுக்குத் தரப்பட்டன. பெட்ரீஷியரோடு கலப்பு மணம் புரிந்து கொள்ளுதல், வாணிகம் செய்தல் ஆகியவை அத்தகைய உரிமைகளில் சில. ரோம் அரசின் அரசியலில் பங்கு கொள்ளும் உரிமை எதுவும் இவற்றின் மக்களுக்குக் கிடையாது.

இந்த இருவகைக் குடியேற்றங்களின் நிர்வாக அமைப்பு ரோம் நகரின் நிர்வாக அமைப்பை ஒட்டியே அமைந்திருந்தது. ஆண்டுதோறும் தேர்ந்தெடுக்கப்பட்ட அதிகாரிகள் இருவரும், செனேட் அவை ஒன்றும் ஒவ்வொரு குடியேற்றத்திலும் இருந்தன. அந்த அதிகாரிகள் துயோவீர்கள் (Duoviri) என்றும், செனேட்டர்கள் டெசூரியோன்கள் (Decuriones) என்றும் அழைக்கப்பட்டனர். இக்குடியேற்றங்கள், ரோமாபுரியின் ஆதிக்கத்தை, ரோமானிய பெட்ரீஷியரின் ஆதிக்கத்தை, இத்தாலியின் பல பகுதிகளிலும் நிலைநிறுத்தின. ரோம் அரசின் ஆதிக்கம் எவ்வாறு இத்தாலி முழுவதும் சிறிது சிறிதாகப் பரவியது என்பதை அறிய வேண்டுமானால், இக்குடியேற்றங்கள் அமைக்கப்பட்ட ஆண்டுகளைப் பார்த்தால் போதும். கி.மு. ஆரும் நூற்றாண்டில் தொடங்கி, கி. மு. இரண்டாம் நூற்றாண்டுவரை ஒவ்வொன்றாக அவை நிறுவப்பட்டன. அவற்றின் பட்டியல் ஒன்று இந்த அத்தியாயத்தின் இறுதியில் கொடுக்கப்பட்டுள்ளது. அதைப் பார்த்தால் ரோமின் ஆதிக்கம் இத்தாலியில் எந்தெந்தப் பகுதிகளில் எந்தெந்த ஆண்டுகளில் நிறுவப்பட்டன என்பதை உணர்ந்துகொள்ளலாம்.

கடுமையான போராட்டங்களுக்குப் பிறகே இந்தக் குடியேற்றங்கள் நிறுவப்பட்டன. உதாரணமாக, தமது பகுதிகளிலிருந்து ரோமானியரை விரட்டியடிக்கப் பல முயற்சிகளைச் செய்தனர் எட்ரஸ்கர். அதுபோலவே, லத்தீயத்தின் கடற்கரை நகரங்களிலிருந்து அவர்களை விரட்ட முயன்றனர் ஈக்விகளும், வோல்ஸ்சிகளும். இத்தகைய முயற்சிகளையெல்லாம் முறியடித்து, தனது குடியேற்றங்களுக்கு இருந்து வந்த ஆபத்துக்களை இறுதியாக முடிவுக்குக் கொண்டு வருவதற்கு கி.மு. 352 வரை ரோமாபுரி போராடியது. ரோமாபுரியின் கிராமப் புறங்களில் இதுவரை 21 குலங்கள் (Tribes) இருந்து வந்தன; கி.மு. 352-ல் ஆறு புதிய குலங்களும் சேர்ந்தன. லத்தீயத்திலும் தெற்கு எட்ரூரியாவிலும் முக்கியமான இடங்களில் குடியேற்றங்கள் நிறுவப்பட்டு ரோமாபுரியின் ஆதிக்கம் உறுதிப்பட்டது. ரோமின் மாபெரும் எதிரிகளாக எட்ரூரியாவிலிருந்து வந்த டார்க்வினி (Tarquinii) ஃபெலேரி (Falerii) ஆகிய இருநகரங்களும் தோற்கடிக்கப்பட்டு, நாற்பதாண்டுப் போர் ஓய்வு ஒப்பந்தம் ஒன்றில் கி.மு. 351-ல் அவை கையெழுத்திட்டன. எட்ரூரியாவிலிருந்த இன்னொரு நகரமான சேராவின் (Caera) நிலங்களில் பாதி பிடுங்கப்பட்டு, குடியுரிமைகளில் ஒரு சிலவற்றை மட்டுமே பெற்று ரோமாபுரி அரசில் சேர்த்துக் கொள்ளப்பட்டது.

கால்களோடு போர் : அண்டையிலிருந்த பகைவரோடு இவ்வாறு போர்கள் நடைபெற்று வந்த அதே நேரத்தில், 'ஆல்ப்ஸ் மலைகட்கு இப்பகுதியில் வாழ்ந்து வந்த கால்களின் (Cisalpine Gauls) தாக்குதல்களையும் ரோம் சமாளிக்க வேண்டியிருந்தது. மேலும், அதிகப் பிரதேசங்களையும் கொள்ளையையும் நாடிச் சதா தாக்குதல்களைத் தொடுத்துக்கொண்டே இருந்தனர் அவர்கள். கி.மு. 395-ல் வீய் நகரைக் கைப்பற்றிய ரோமானியப் படையின் தலைவரான பியூரியஸ் கேமில்லஸ் (Furius Camillus) என்பவர், 'கால்களையும் ஒரு பெரும்போரில் வென்று கீர்த்தி பெற்றார்' என்று சொல்லப்படுகிறது. பின்னர், அவரது மகனை லூசியஸ் (Lucius) என்பாரும் கி.மு. 365-ல் பல போர்களில் அவர்களைத் தோற்கடித்தார். கால்களோடு நடைபெற்ற பல போர்களைப் பற்றி ஏராளமான கதைகள் பலநூற்றாண்டுகள்வரை வழங்கி வந்தன. எட்ரூரியாவிலும் அம்பிரியாவிலும் (Umbria) ரோமன் ஆதிக்கம் பரவப் பரவக் கால்களின் தாக்குதல்கள் கொஞ்சங் கொஞ்சமாகக் குறைந்து கொண்டே வந்தன. கி.மு. 335-க்குப் பிறகு சுமார் 60 ஆண்டுகள்வரை அவர்களது பெயரே ரோமாபுரி வரலாற்றில் அடிபடவில்லை. அக்காலத்தில் அவர்களது தாக்குதல்கள் நின்றுபோயிருக்க வேண்டும்.

சாம்னைட்டுகளுடன் போர்கள் : எல்லாத் திசைகளிலும் விரிவடைந்து வந்த ரோமானிய அரசு சாம்னைட்டுகளோடு (Samnites) அடுத்தபடியாகப் போரிட வேண்டியிருந்தது. தெற்கில் கம்பேனியாவில் (Campania) தங்களது ஆதிக்கத்தை நிறுவிய பின், சாம்னைட்டுகளைத் தோற்கடிக்காமல், மேலும் அத்திசையில் முன்னேறுவது என்பது ரோமானியருக்கு முடியாது. மேலும், இத்தாலியின் மத்திய பகுதியிலும் தென்பகுதியிலும் சாம்னியத்தில் மலைகளின்மீது வசித்து வந்த சாம்னைட்டுக் குலங்களில் சில நல்ல நிலங்களைத் தேடிக் கம்பேனியாவுக்குள் புகுந்து எட்ரஸ்கர்களை அங்கிருந்து விரட்டியடித்துவிட்டு, அதன் ஆதி குடிகளான ஆஸ்கர்களோடு (Oscars) கலந்து வாழ்ந்து வந்தனர். இந்தக் கலப்பால் தோன்றியவர்கள்தாம் கம்பேனிகள் (Campani); அவர்களது முக்கியமான நகரம் கேப்புவா (Capua).

சாம்னியத்தில் வசித்து வந்த சாம்னைட்டுகளுக்கும் கம்பேனிகளுக்கும் இடையில் பற்பல பூசல்கள் நாளடைவில் ஏற்பட்டன. இதுபோராகப் பின்னர் உருவெடுத்தது. கம்பேனிய நகரங்களையும் நிலங்களையும் கைப்பற்றுவதற்கு முயன்றனர் சாம்னைட்டுகள். லத்தீனிய - கம்பேனிய எல்லையிலிருந்த

டனம் (Teanum) என்ற நகரமானது கி.மு. 343-ல் அவர்களது முற்றுகைக்கு ஆளாயிற்று. அதில் வசித்து வந்தவர்கள் சிடிசினி (Sidicini) என்ற குலத்தைச் சேர்ந்தவர்கள். அவர்கள் உதவியைக் கோரிக் கம்பேனிகளுக்கு வேண்டுகோள் விடுத்தனர். ஆனால், தமது இனத்தைச் சேராத சிடிசினிகளுக்கு உதவி, சாம்னைட்டுகளின் கோபத்தை மேலும் பெற விரும்பாத கம்பேனிகள் வாளாயிருந்தனர். எனவே, ரோமாபுரிக்கு அவர்கள் ஆளனுப்ப வேண்டியதாயிற்று.

ஒன்பது ஆண்டுகளுக்குமுன்பு தாங்களாகவே முன்வந்து சாம்னைட்டுகளுடன் பேச்சு வார்த்தைகள் நடத்தி, நட்பு உடன்படிக்கை ஒன்றைச் செய்து கொண்டிருந்தனர் ரோமானியர். ஆனால், அப்பொழுது லத்தீயத்தின் எல்லையிலிருந்த டனத்தையோ, கேப்பு வாவையோ, கம்பேனியாவையோ சாம்னைட்டுகளின் ஆதிக்கத்திற்கு விட்டுவிட அவர்கள் விரும்பவில்லை. அதே சமயம் உடனடியாகப் போரில் ஈடுபடவும் அவர்கள் விரும்பவில்லை. ஏனெனில், சாம்னைட்டுகள் பலம் பொருந்தியவர்கள் என்பது அவர்களுக்குத் தெரியும். எனவே, தூதர்களை அனுப்பிப் பேச்சு வார்த்தைகள் மூலம் பிரச்சனைக்குத் தீர்வு காண முயன்றனர். ஆனால், அது பயனளிக்கவில்லை. ஆகவே, போரைத் தவிர வேறு வழி இல்லாததாயிற்று.

இவ்வாறு மூண்டது முதல் சாம்னைட் போர் (கி.மு. 343-341): இப்போர் மூன்று ஆண்டுகள் நடைபெற்றது. காரூஸ் குன்று (Mount Gaurus), சூசுலா (Suessula), சதிகுலா (Saticula) ஆகிய விடங்களில் நடைபெற்ற சண்டைகளில் ரோமானியர் பெரு வெற்றி பெற்றனர். இச் சண்டைகளைப் பற்றிய விவரங்கள் அதிகம் கிடைக்கவில்லை. ஆயினும் போர் முடிந்து இறுதியில் சமாதானம் ஏற்பட்டதும், கம்பேனியாவில் ரோமானியரின் ஆதிக்கம் தலை தூக்கி நின்றது என்பது மட்டும் தெளிவாகத் தெரிகிறது. சாம்னைட்டுகள் பின்னடைந்தனர். இவ்வாறு தென்திசையிலும் ரோமானியரின் ஆதிக்கம் விரிவடையத் துவங்கிற்று.

மூன்றாண்டுகள் தொடர்ந்து நடைபெற்ற இப்போரின் விளைவாக ரோமானியப் படையின் முக்கியத்துவம் அதிகரித்தது. தமது இன்றியமையாமையை உணர்ந்த போர் வீரர்கள், போரின் போது கிளர்ச்சி ஒன்று செய்தனர். சண்டைகளின் போதும், பின்னர் நடைபெறும் கொள்ளைகளின் போதும் கைப்பற்றப் படும் பொருள்களில் (booty) நியாயமாகப் பங்கு ஒன்று தமக்கும் தரப்பட வேண்டுமென்றும், படை அதிகாரிகளாக ஆகும்

உரிமை தமக்கும் அளிக்கப்பட வேண்டும் என்றும் கோரினர் அவர்கள். இறுதியில் ஓரளவு சலுகைகள் அவர்களுக்குத் தரப்பட்டன.

லத்தீன் லீக்கின் முடிவு *(341-338)*: சாம்னைட்டுப் போரின் பொழுதும், அதன் முடிவிலும் ஒருபக்கம் ரோமானியருக்கும் மறுபக்கம் லத்தீன்களுக்கும் கம்பேனிகளுக்கும் இடையில் பலவிதமான மன வேற்றுமைகள் ஏற்பட்டன. ரோமானியப் பிரபுக்கள் தங்களிடமே எல்லா அதிகாரத்தையும் வைத்துக் கொண்டு தமக்கு ஒருசில சலுகைகள் மட்டுமே கொடுத்து ஆண்டு வருவதை லத்தீன்கள் வெகுநாட்களாகவே வெறுத்து வந்தனர். சாம்னைட்டுகளின் ஆதிக்கத்துக்குப் பதிலாக ரோமாபுரியின் ஆதிக்கத்துக்கு அடிமைப்படுவதைக் கம்பேனிகள் வெறுத்தனர். எனவே, இவ்விருவரும் ரோமுக்கு எதிராக அப்பொழுது ஒன்று சேர்ந்தனர்.

ரோம் சாம்னைட்டுகளை அறவே அடித்து விரட்டாமல் சமாதானம் செய்து கொண்டதை அவர்கள் கண்டித்தனர். தங்கள் அனைவருக்கும் 'ரோமானியக் குடிகளுக்குரிய' முழு உரிமையும் அளிக்கப்பட வேண்டுமென்றும், தமக்கெனக் கான்சல் பதவிகளில் ஒன்றும், செனெட்டில் பாதி இடங்களும் தரப்பட வேண்டுமென்றும் லத்தீன்கள் கோரினர்; லத்தீயமும் ரோமும் சேர்ந்து ஒரு குடியரசாக இருக்கவேண்டும் என்றும் கோரினர். இல்லையேல், ரோமாபுரியின் ஆட்சியிலிருந்து தாம் நீங்கிச் சுதந்திரமாக இருக்கப் போவதாகவும் லத்தீன்கள் எச்சரித்தனர்.

உடனே லத்தீன்களைப் பணிய வைப்பதற்கெனப் போர் தொடுத்தனர் ரோமானிய பெட்ரீஷியர்கள். இப் போர் மூன்று ஆண்டுகள் நடைபெற்றது. 341-ல் வெசேரிஸ் (Veseris), டிஃபெர்னம் (Tifernum) ஆகிய போர்களிலும், 339-ல் பெடும் (Pedum), அஸ்டுரா (Astura) ஆகிய போர்களிலும் லத்தீன்களைத் தோற்கடித்தது ரோமானியப்படை. லத்தீன்கள் பணிய வேண்டியதாயிற்று. லத்தீன்லீக் அழிந்தது. லத்தீயத்திலிருந்த நகரங்களோடு தனித்தனியாக உடன்படிக்கைகளைச் செய்துகொண்டது ரோம். ஒரு சில உரிமைகளே அவற்றுக்குத் தரப்பட்டன. ஆனால், ரோமானியப் படையில் சேர்ந்து போர்கள் புரியவும், வரிகள் செலுத்தவும் மட்டும் லத்தீன்கள் அனைவரும் கட்டாயப்படுத்தப்பட்டனர். சில நகரங்களின் நிலங்களும் பறிமுதல் செய்யப்பட்டன.

போரில் லத்தீன்களுக்கு உதவிய கம்பேனிய நகரங்களுக்கும் இதே கதிதான் ஏற்பட்டது. ஒரு சில அரசியல், சமூக உரிமைகளே அவற்றுக்கும் தரப்பட்டன. கம்பேனிகள் ரோமானியப்படையில் சேரவேண்டிய தாயிற்று. நிலங்கள் பறிமுதல் செய்யப்பட்டன.

லத்தீயத்திலும் கம்பேனியாவிலும் இவ்வாறு பறிமுதல் செய்யப்பட்ட நிலங்களில் 'ரோமானியக் குடிகள்' குடியமர்த்தப் பட்டனர். ரோமாபுரியின் ஆதிக்கம் அப்பகுதிகளில் உறுதிப் படுவதற்கு இது வகை செய்தது. அப்பகுதிகளில் ஒருசில நகரங்களில் வாழ்ந்த, ரோமானிய ரல்லாத ஒரு சில பணக்காரப் பிரபுக்களுக்கு 'லத்தீனியக் குடியேற்றங்களுக்கு' இருந்து வந்த சில உரிமைகள் அளிக்கப்பட்டன. ரோமாபுரியின் படைக்கு ஆட்களும், கருவூலத்துக்கு நிதியும் நிறையக் கிடைத்தன. ரோமானியப் பிரபுக்களின் ஆதிக்கம் (Oligarchy) உறுதிப் பட்டது.

இரண்டாவது சாம்னைட் போர் (கி.மு. 326–304): பதினேராண்டுகளுக்குப்பிறகு ரோமுக்கும் சாம்னைட்டுகளுக்கும் போர்கள் மீண்டும் துவங்கின. இதற்கு அடிப்படையான காரணம் ஆதிக்கப் போட்டிதான். ஆனால், பெயரளவில் காரணம் வேறு யிருந்தது. இன்றைய நேப்பிள்ஸ் (Naples) நகருக்கு அண்மையில் அன்று பேலியேபோலிஸ் (Palaeo Polis) என்ற கிரேக்க நகரம் இருந்தது. கம்பேனியாவிலிருந்த ரோமனியர்களது நிலங்களின்மீது அந்நகர மக்கள் தாக்குதல் தொடுத்ததாகவும், அதில் சாம்னைட்டுகள் அவர்களுக்கு உதவியதாகவும் ரோம் குற்றம் சாட்டியது. மன்னிப்பும் நஷ்டஈடும் கோருவதற்காக அனுப்பப்பட்ட ரோமானியத் தூதர்கள் வெறுங்கையோடு மீண்டனர். உடனே, பேலியோபோலிஸ் மீதும், சாம்னைட்டுகள் மீதும் போர் தொடுத்தது ரோம். எதிர்ப்பு அதிகம் காட்டாமல் பேலியோபோலிஸ் சரணடைந்தது. அருகிலிருந்த 'புதிய நகரமான' நியாபோலிஸும் (Neapolis) கூடச் சரணடைந்தது. தமது உள்விவகாரங்களில் அந்நகரங்களுக்குச் சுயாட்சி அளித்து, சில விதிமுறைகளின் அடிப்படையில் அவற்றைத் தன்னோடு இணைத்துக் கொண்டது ரோம்.

ஆனால், தாக்குவதற்குக் கடினமான மலைப்பிரதேசத்தில் வசித்த சாம்னைட்டுகள் கடுமையாகப் போராடினர். பல போர்களில் ரோமானியப் படைகளை முரியடித்தனர். ரோமானியப் படை ஒன்று கி.மு. 321-ல் குறுகலான கணவாய் ஒன்றின் வழியாகச் செல்லவேண்டியிருந்தது. இதை முன்கூட்டியே எதிர்

பார்த்திருந்த சாம்னைட் தளபதி, அக் கணவாயில் ஒளிந்திருந்து முன்னும் பின்னும் அவர்களைச் சூழ்ந்து கொண்டார். தப்பிக்க முடியாமல் இவ்வாறு சூழ்ந்து கொள்ளப்பட்ட ரோமானியப் படை சரணடைய வேண்டியதாயிற்று. கடுமையான சண்டைகள் பல்லாண்டுகள் நடைபெற்றன. சாம்னியத்திலும் அப்பூலியாவிலும் (Apulia) பல நகரங்களைப் பிடித்து அழித்தனர் ரோமானியர். அதே போல் சாம்னைட்டுகள் லத்தீனியத்துக்குள் புகுந்து பல நகரங்களை அழித்தனர்.

நோலா (Nola), கலேஷியா (Calatia) போன்ற நகரங்களைக் கைப்பற்றிக் கம்பேனியாவில் தமது ஆதிக்கத்தை உறுதியாக நிறுவினர் ரோமானியர். ரோமிலிருந்து கேப்புவாவரை ஒரு முக்கியமான இராணுவச்சாலை அமைக்கப்பட்டது. கி.மு. 312-ல் முடிக்கப்பட்ட இந்தச் சாலை 'அப்பியாசாலை' (Via Appia) என்று அழைக்கப்பட்டது. அப்பூலியாவில் 312-ல் பலகுடியேற்றங்களை ரோமானியர் அமைத்தனர். சாம்னியத்துக்குள் வெகுதூரம் சென்று தாக்குதல்கள் நடத்தப்பட்டன. போவியானம் (Bovianum) என்ற முக்கியமான நகரமும் பிடிபட்டது.

கி.மு. 311-ல் எட்ரஸ்கர், அம்பிரியர், சாம்னைட்டுகள் ஆகிய மூவரும் சேர்ந்து ரோமுக்கெதிராக அணி ஒன்றை உருவாக்கினர். வடக்கிலும் தெற்கிலுமாக இருதிசைகளிலும் ரோம் போரிட வேண்டியிருந்தது. பல தோல்விகள் அதற்குக் கிட்டின. ஆயினும், தனது செல்வநிலை, இராணுவ வலி, முயற்சி ஆகியவற்றின் துணைகொண்டு தாக்குதல்கள் அனைத்தையும் சமாளித்தது ரோம். கி.மு. 309-ல் எட்ரஸ்கரும், 306-ல் அம்பிரியரும் இறுதியாக முரியடிக்கப்பட்டனர். கி.மு. 304-ல் சாம்னைட்டுகளும் உடன்படிக்கை ஒன்றைச் செய்து கொண்டனர்.

கம்பேனியாவிலும், தெற்கு எட்ரூரியாவிலும் ரோமானியரின் ஆதிக்கம் மீண்டும் நிறுவப்பட்டது. அப்பூலியாவும், லுக்கோனியாவும் (Lucinia) ரோமின் மேற்பார்வையின் கீழ் வந்தன. சாம்னைட்டுகள் தமது பிரதேசமான சாம்னியத்துக்கு வெளியில் தலையிடக் கூடாது என்று விதிக்கப்பட்டது.

மூன்றுவது சாம்னைட் போர் (கி.மு. 298–290); இரண்டு போர்களுக்குப் பின்னும்கூட, சாம்னைட்டுகள் ரோமாபுரியின் ஆதிக்கத்துக்குக் கட்டுப்படாமல் சுதந்திரமாகவே வாழ்ந்து வந்தனர். மேலும், பல முறை தோற்கடிக்கப்பட்டாலும் கூட ரோமானியருக்குக் கட்டுப்பட்டு வாழ்வதை எட்ரஸ்கர்கள்

விரும்பவில்லை. எனவே, அவர்களை நசுக்குவதற்கு மேலும் மேலும் போர்களில் ரோம் ஈடுபடவேண்டி யிருந்தது.

சாம்னைட்டுகள் மலைக்குலத்தினர். இவர்கள் அண்டையி லிருந்த வேறு மக்கள்மீது அடிக்கடி தாக்குதல்கள் தொடுத்தனர். அவர்களது கிராமங்களையும் நகரங்களையும் தாக்கிக் கொள்ளையிட்டுச் சென்று வாழ்ந்தனர். இவ்வாறு சாம்னைட்டுகளின் தாக்குதலுக்கு அடிக்கடி ஆளான லுக்கேனியர் (Lucani) ரோமாபுரியிடம் புகார் செய்தனர். சாம்னைட்டுகளைப் பணியவைத்துத் தன்னுட்சிக்கு உட்படுத்த விரும்பிய ரோம், இந்த வாய்ப்பைப் பயன்படுத்தி மூன்றுவது சாம்னைட் போரைத் துவக்கியது.

இப்போர் பற்றிய விவரங்கள் அதிகம் கிடைக்கவில்லை. ரோமின் படைகள் சாம்னியத்தின் மலைப்பகுதிகளில் நுழைந்து கொஞ்சங் கொஞ்சமாக முன்னேறி யிருக்க வேண்டும். எனவே தான், இப்போர் எட்டு ஆண்டுகள் நடைபெற்றது. செனோனிய கால்கன், அம்பிரியர், எட்ரஸ்கர் ஆகியோரும் சாம்னைட்டுகளுக்கு உதவி புரிந்ததாகத் தெரிகிறது. கி.மு. 295-ல் சென்ட்டினம் (Sentinum) என்ற விடத்தில் இந்தக் கூட்டணிப் படையை ரோமானியர்கள் முரியடித்தனர். உதவிக்கு வந்த படைகள் விலகிச் சென்றன; சாம்னைட்டுகள் மீண்டும் தனித்துப் போரிட வேண்டியதாயிற்று. இறுதியில் கியூரியஸ் டென்டேடஸ் (Curius Dentatus) என்பவரின் தலைமையிலான ரோமானியப் படை பல போர்களில் சாம்னைட்டுகளை வென்று பணிய வைத்தது. அவர்கள் ஏராளமான தங்கத்தை கியூரியஸுக்குக் கொடுத்து, தம் பக்கம் சேர்ந்துகொள்ளும்படி ஆசை காட்டிய தாகவும், அதற்கு அவர் இணங்கவில்லை எனவும் கதைகள் கூறுகின்றன. இவ்வாறு சாம்னைட்டுகள் பணிந்து, ரோமின் ஆட்சிக்குக் கட்டுப்பட்டனர். மேலும் கம்பேனியா, அப்பூலியா, லுக்கேனியா ஆகியவற்றிலும் ரோமாபுரியின் அதிகாரம் வலுப்பெற்றது. இப் பிரதேசங்களின் கடற்கரை ஓரங்களில் அமைந்திருந்த கிரேக்கக் குடியேற்றங்கள்மட்டும் பின்னும் சுதந்திரமாகவே இருந்து வந்தன. அவற்றையும் தன்னுட்சியின் கீழ்க் கொண்டு வரும் முயற்சியில் அடுத்து ஈடுபட்டது ரோம்.

4ம் நூற்றாண்டில் வகுப்புப் பூசல்கள் : தனது ஆதிக்கத்தை இத்தாலியின் வெவ்வேறு பகுதிகளிலும் பரப்புவதற்கு கி.மு. நான்காம் நூற்றாண்டில் ரோமாபுரி அரசு மேற்கொண்ட முயற்சிகளை இதுவரை பார்த்தோம். அம்முயற்சிகள் வெற்றி பெற்று வந்த அதே வேளையில், ரோமாபுரியில் பெட்ரீஷியருக்கும் பிளெபிய

ருக்குமிடையே வகுப்புப் பூசல்களும் நடந்து கொண்டே இருந்தன. ரோமாபுரி அரசில் எல்லாத் துறைகளிலும் தமக்கிருந்துவந்த பிடியையும், ஆதிக்கத்தையும் விட்டுக் கொடுக்கப் பெட்ரீஷியர் விரும்பவில்லை. எவ்வளவுதான் உறுதியோடு பிளெபியர்கள் போரிட்டாலும் ஒரு சில சலுகைகளை மட்டுமே அவர்களால் பெற முடிந்தது. இதற்கெல்லாம் காரணம் பிளெபியரிடத்தில் ஒற்றுமை இன்மையே. ஆனால், பெட்ரீஷியரிடமோ ஒற்றுமை, அரசியல் அதிகாரம், பொருளாதாரப் பிடி, படை வலிமை, சமயம் முதலிய எல்லாம் இருந்தன. பிளெபியருக்கு உதவ முன்வந்த அதிகாரிகளைத் துரோகிகள் என்றும் அவர்கள் அரசராக விரும்புகிறார்கள் என்றும் பொய்க் குற்றம் சாட்டி ஒழித்துக் கட்டினர் பெட்ரீஷியர்.

சான்றாக, கால்களின் படையெடுப்பின்போது ரோம் நகரில் கேப்பிடோலைக் காத்த மேன்லியஸ் என்ற வீரர், அடிமைத் தளைக்கு ஆளான கடனாளிகளை அடிமைத் தளையிலிருந்து விடுவிக்க வேண்டுமென்று பெட்ரீஷியரோடு வாதிட்டு வந்தார். கி.மு. 384-ல் துரோகிப் பட்டத்தை அவருக்குச் சூட்டி, மலையுச்சியிலிருந்து வீசி எறிந்து அவரைக் கொன்றது அரசு. பிளெபியரின் போராட்டத்தை அது மேலும் தீவிரப் படுத்தியது. இந்தக் கொலையின் விளைவு என்னவென்றால், அடுத்த ஆண்டில் வோல்ஸ்கிகளிடமிருந்து கைப்பற்றப்பட்ட நிலங்களைப் பிளெபியருக்குமட்டுமே பங்கிட்டுக் கொடுக்க வேண்டியதாயிற்று. ஆயினும், பிளெபியருக்குத் திருப்தி ஏற்படவில்லை. கி.மு. 390-க்கும் 380-க்கும் இடையில் எட்ரஸ்கர், ஈக்விகள், வோல்ஸ்சிகள் முதலியவரோடு நடைபெற்று வந்த இடைவிடாத போர்களின் போது பெருத்த துன்பங்களுக்கு உள்ளான அவர்கள், தமக்கெதிராக எல்லாக் கொடுமைகளையும் எதிர்த்துப் போராடினர். கி.மு. 376-ல் லிசீனியஸ் ஸ்டோலோ (Licinius Stolo) செக்ஸ்டியம் லேட்டரேனஸ் (Sextius Lateranus) என்ற இரண்டு டிரிபியூன்கள் மூன்று முக்கியமான யோசனைகளைத் தெரிவித்தனர். 'லிசீனியத் திட்டங்கள்' (Licinian Rogations) என்று அழைக்கப்பட்டன அவை.

(1) இராணுவ டிரிபியூன்களுக்குப் பதிலாகப் பழைய முறைப்படி கான்சல்களே இனித் தேர்ந்தெடுக்கப்பட வேண்டும். அவ்வாறு தேர்ந்தெடுக்கப்படும் இரண்டு கான்சல்களில் ஒருவர் பிளெபியராக இருக்க வேண்டும்.

இதற்குக் காரணம், செஞ்சூரியா மன்றத்தால் தேர்ந்தெடுக்கப்பட்ட இராணுவ டிரிபியூன்கள் பெரும்பாலும் பெட்ரீஷிய

ராகவே இருந்ததே. சான்ருக நாற்பத்து நான்கு ஆண்டுகள் பெட்ரீஷியரோடு போட்டியிட்டு, கி. மு. 400-ல் தான் பிளெபியர் ஒருவர் இராணுவ டிரிபியூனாக முடிந்தது என்பதை முன்பே கண்டோம். மேலும் இத்தகைய இராணுவ டிரிபியூன் பதவியைக் கொண்டுவரு முன்பாகவே, கான்சல்களுக்கு இருந்து வந்த முக்கிய அதிகாரம் ஒன்றைச் சென்சார்களுக்கு மாற்றி, டிரிபியூன்களின் அதிகாரத்தைக் குறைத்து விட்டனர் பெட்ரீஷியர்.

(2) யாருக்கும் 500 யூகெராவுக்கு (Iugera = ⅔ ஏக்கர்) மேல் நிலம் இருக்கக் கூடாது; எவரும் தனது கால் நடைகளில் 100 மாடுகள் அல்லது 500 ஆடுகளுக்கு மேல் பொது மேய்ச்சல் நிலங்களுக்கு அனுப்புவதைத் தடை செய்ய வேண்டும்;

(3) கடனில் ஏற்கெனவே செலுத்தப்பட்டு விட்ட வட்டித் தொகையை அசலிலிருந்து கழித்துவிட வேண்டும்; மீதமுள்ள தொகையைச் செலுத்துவதற்கு மூன்றுண்டு அவகாசம் தர வேண்டும்.

இவ்வாறு அரசியல் பதவி, நிலம், கடன் ஆகிய மூன்றிலும் தமக்குப் பாதகமான இத்திட்டங்களைக் கடுமையாக எதிர்த்தனர் பெட்ரீஷியர். இவற்றுக்கெதிராகத் தமது தடுப்பு அதிகாரத்தை (Veto) பயன் படுத்துமாறு தமது மற்ற டிரிபியூன்களைத் தூண்டினர். லிசீனியத் திட்டங்களுக்கு இவ்வழியில் முட்டுக்கட்டை இடப்பட்டது. உடனே, கியூரியா மன்றத்தைக் கூட்டுவதைத் தடை செய்து அடுத்த ஆண்டுக்கான அதிகாரிகள் தேர்ந்தெடுக்கப்படுவதைத் தடுத்தனர் லிசீனியஸும், செக்ஸ்டியஸும். இதனால் நிர்வாகம் ஸ்தம்பித்துப் போயிற்று; நீதி மன்றங்கள் அடைபட்டுக் கிடந்தன. டிரிபியூன்களும், ஈடைல்களும் மட்டுமே செயல்பட்டு வந்தனர்; ஏனெனில், 471 முதல் பிளேபிய மன்றத்தால் தேர்ந்தெடுக்கப்பட்டனர் இவர்கள். இதன் பின்னரும் பெட்ரீஷியர் விட்டுக் கொடுக்கவில்லை. அரசியலமைப்பையே (Constitution) தற்காலிகமாகத் தள்ளி வைத்து விட்டு, சர்வாதிகாரிகளை நியமிக்க அவர்கள் முயன்றனர். ஆயினும் அடுத்தடுத்து ஐந்தாண்டுகள் லிசீனியஸும் செக்ஸ்டியஸும் டிரிபியூன்களாகத் தேர்ந்தெடுக்கப்பட்டு அவர்களது தடுப்பு அதிகாரம் பயன்படுத்தப்பட்டு பெட்ரீஷியரின் முயற்சிகள் முறியடிக்கப்பட்டன.

லத்தீன்களுடன் போரிட வேண்டி யிருந்ததால், கி.மு. 371-ல் மட்டும் இராணுவ டிரிபியூன்கள் தேர்ந்தெடுக்கப்படுவதை

நிறைவேற்றப்படும் தீர்மானங்கள் நாடு முழுவதையும் கட்டுப்படுத்தக்கூடிய சட்டங்களாகவே செயல்பட்டன. கி.மு. 339-ல் முதன்முதலாகச் சென்சார் பதவியிலும், 296-ல் பிரேட்டர் பதவியிலுங் கூடப் பிளெபியர் அமர்ந்தனர். பின்னர், புரோகிதராகவும் சகுனச் சாமியாராகவும் அவர்கள் அமர்த்தப்பட்டனர். கி.மு. 268–ல் ஆண்ட சர்வாதிகாரி ஹோர்ட்டென்ஷியஸ் (Dictator Hortensius) பிளெபிய மன்றத்தின் தீர்மானங்களும் சட்டங்களே என்றும், அவற்றை அனைவரும் மதித்து நடக்க வேண்டும் என்றும் ஒரு சட்டத்தை வகுத்தார். இத்தகைய பல நடவடிக்கைகளின் மூலம் பிளெபியர் திருப்தி செய்யப்பட்டனர். ஆயினும் பெட்ரீஷியர் என்றால் உயர்ந்தவர்! பிளெபியர்! என்றால் தாழ்ந்தவர் என்ற நிலை தொடர்ந்து இருந்துவந்தது. அதற்குக் காரணம் அரசியல், பொருளாதாரம், சமுதாயம், சமயம், படைத்தலைமை போன்ற பலவற்றிலும் பெட்ரீஷியருக்கு இருந்து வந்த முதன்மையே ஆகும்.

ரோமாபுரியின் குடியேற்றங்களுள் சில

ரோமாபுரிக் குடியேற்ற உரிமைகள் பெற்றவைக்கு அருகில் (ரோ) என்று குறிப்பிடப்பட்டுள்ளது. மற்றவை லத்தீனியக் குடியேற்ற உரிமை பெற்றவை.

குடியேற்றத்தின் பெயர்	இடம்	நிறுவப்பட்ட ஆண்டு
ஆஸ்டியா (ரோ)	லத்தீயம்	கி.மு. 510க்கு முன்
சைனியா (Signia)	,,	
சிர்சீய் (Circeii)	,,	
சூசா பொமேஷியா (Suessa Pometia)		
கோசா Cosa)	,,	
வெலிட்ரே (Velitrae)	,,	கி.மு. 494
நோர்பா (Norba)	,,	,, 492
ஆன்ட்டியம்	,,	,, 467
ஆர்டியா (Ardea)	,,	,, 442
சேட்ரிகம் (Satricum)	,,	,, 385
சூட்ரியம் Sutrium)	எட்ரூரியா	,, 383
நெபேட்டே (Nepete)	,,	
சேஷியா (Setia)	லத்தீயம்	,, 382
ஆன்டியம் (ரோ)	ரோமானியக் குடியேற்ற மாக்கப்பட்டது	,, 338
கேல்ஸ் (Cales)	எட்ரூரியா	,, 334
ஆங்சூர் (Anxur) (ரோ)	லத்தீயம்	,, 329
பிரெகெல்லே (Fragellae)	,,	,, 328
லுசேரியா (Luceria)	அப்பூலியா	,, 314
சதிகுலா (Saticula)	கம்பேனியா	
சூசே அவுரூன்கா (Suessa Aurunca)	லத்தீயம்	கி.மு. 313
பான்ட்டியே (Pontiae)	லத்தீயத்துக்கு அருகிலுள்ளதீவில்	
கேசினம் (Casinum) (ரோ)	லத்தீயம்	கி.மு. 312
இன்டெரெம்னா லிரீனஸ் (Ineeramna) Lirinas)	,,	
சோரா (Sora)	லத்தீயம்	கி.மு. 303
ஆல்பா புசென்ஷியா (Alba Fucentia)	,,	

குவிந்த செல்வத்தில் ஒரு சிறு பங்கு பிளெபியருக்கும் கிடைத்தது. எனவே, தமது ரோமானியப் படைகளின் பெரு வெற்றிகளைக் கண்டு மயங்கினர் பிளெபியர். இந்நிலையில், இதுவரை சிறிய எண்ணிக்கையிலேயே இருந்து வந்த அடிமைகளின் எண்ணிக்கை பெருகத் துவங்கியது. பெட்ரீஷியரும் பிளெபியரும் 'ஏசமானர்களாக' ஒன்றுபட்டு, அடிமைகளை நசுக்கத் துவங்கினர். எனவே. சமுதாயப் பூசல்கள் வேறு வடிவம் பெற்றன.

லிசீனியத் திட்டத்தின் அடிப்படையில் பிளெபியருக்குக் கிடைத்த சில சலுகைகளுக்குப் பிறகு, வேறு சில சலுகைகளும் கூட, நாளா வட்டத்தில் கிடைத்தன.

பிளெபிய மன்றமானது மேன்மேலும் அதிக முக்கியத்துவம் பெறத் தொடங்கியது. அதில் நிறைவேற்றப்படும் தீர்மானங்கள் நாடு முழுவதையும் கட்டுப்படுத்தக்கூடிய சட்டங்களாகவே செயல்பட்டன. கி.மு. 339-ல் முதன் முதலாகப் சென்சார் பதவியிலும், 296-ல் பிரேட்டர் பதவியிலும்கூடப் பிளெபியர் அமர்ந்தனர். பின்னர் புரோகிதராகவும் சகுனச்சாமியாராகவும் அவர்கள் அமர்த்தப்பட்டனர். கி.மு. 268-ல் ஆண்ட சர்வாதிகாரி ஹோர்ட்டென்ஷியஸ் (Dictator Hortensius), பிளெபிய மன்றத்தின் தீர்மானங்களும் சட்டங்களே என்றும், அவற்றை அனைவரும் மதித்து நடக்க வேண்டும் என்றும் ஒரு சட்டத்தை வகுத்தார். இத்தகைய பல நடவடிக்கைகளின்மூலம் பிளெபியர் திருப்தி செய்யப்பட்டனர். ஆயினும், 'பெட்ரீஷியர் என்றுல் உயர்ந்தவர்! பிளெபியர் என்றுல் தாழ்ந்தவர்' என்ற நிலை தொடர்ந்து இருந்து வந்தது. அதற்குக் காரணம் அரசியல், பொருளாதாரம், சமுதாயம், சமயம், படைத்தலைமை போன்ற பலவற்றிலும் பெட்ரீஷியருக்கு இருந்து வந்த முதன்மையே ஆகும்.

ரோமா புரியின் குடியேற்றங்களுள் சில :

ரோமாபுரிக் குடியேற்ற உரிமைகள் பெற்றவைக்கு அருகில் (ரோ) என்று குறிப்பிடப்பட்டுள்ளது. மற்றவை லத்தீனியக் குடியேற்ற உரிமை பெற்றவை.

குடியேற்றத்தின் பெயர்	இடம்	நிறுவப்பட்ட ஆண்டு
ஆஸ்டியா (ரோ)	லத்தீயம்	கி.மு. 510 க்கு முன்
சைனியா (Signia)	,,	
சிர்சீய் (Circeii)	,,	
சூசா பொமேஷியா (Suessa Pometia)	,,	
கோசா (Cosa)	,,	
வெலிட்ரே (Velitrae)	,,	கி.மு. 494
நோர்பா (Norba)	,,	,, 492
ஆண்ட்டியம்	,,	,, 467
ஆர்டியா (Ardea)	,,	,, 442
சேட்ரிகம் (Satricum)	,,	,, 385
சூட்ரியம் (Sutrium)	எட்ரூரியா	,, 383
நெபேடே (Nepete)	,,	
சேஷியா (Setia)	லத்தீயம்	,, 382
ஆண்ட்டியம் (ரோ)	ரோமானியக் குடியேற்ற மாக்கப்பட்டது.	,, 338
கேல்ஸ் (Cales)	எட்ரூரியா	,, 334
ஆங்சூர் (Anxur) (ரோ)	லத்தீயம்	,, 329
பிரெகெல்லே (Fragellae)	,,	,, 328
லுசேரியா (Luceria)	அப்பூலியா	,, 314
சதிகுலா (Saticula)	கம்பேனியா	கி.மு. 313
சூசே அவுரூன்கா (Suessa Ausunca)	லத்தீயம்	
பாண்ட்டியே (Pontiae)	லத்தீயத்துக்கு அருகிலுள்ள தீவில்	
கேசினம் (Casinum) (ரோ)	லத்தீயம்	கி.மு. 312
இன்டெரெம்ன லிரீனஸ் (Interamna Lirinas)	,,	
சோரா (Sora)	லத்தீயம்	கி.மு. 303
ஆல்பா புசென்ஷியா (Alba Fucentia)	,,	

குடியேற்றத்தின் பெயர்	இடம்	நிறுவப்பட்ட ஆண்டு
நார்னியா (Narnia)	அம்பிரியா	கி.மு. 299
மின்டூர்னே (mlnturnae) (ரோ)	கம்பேனியா	,, 296
சினுவேசா (Sinuessa) (ரோ)	,,	
வெனூசியா (Venusia)	அப்பூலியா	,, 291
ஹேட்ரியா (Hadria)	பிசினம் (Picenum)	,, 289
கேஸ்ட்ரம் நோவம் (Castrum Novum) (ரோ)	,,	,, 283
சேனு காலிகா (Sena Gallica) (ரோ)	அம்பிரியா	,, 283
பேஸ்ட்டம் (Paestum)	லுக்கேனியா	,, 273
அரீமினம் (Ariminum)	அம்பிரியா	,, 268
பெனிவெண்ட்டம் (Beneventum)	சாம்னியம்	
பெர்மும் (Firmum)	பிசினம்	,, 264
ஈசெர்னியா (Aesernia)	சாம்னியம்	,, 263
ஈசியம் (Aesium) (ரோ)	அம்பிரியா	,, 247
அல்சியம் (Alsium) (ரோ)	எட்ரூரியா	

முதல் பியூனிக் போருக்குப் பிறகு

புருண்டீசியம் (Brundisium)	கலபிரியா (Calabria)	,, 244
ஸ்பொலேஷியம் (Spoletium)	அம்பிரியா	,, 241
கிரெமோனு (Cremuna)	சிசால்ப்பைன்கால்	கி.மு. 218
பிளெசென்ஷியா (Placentia)	,,	

இரண்டாவது பியூனிக் போருக்குப் பிறகு:

பியூடியோலி (Puteoli) (ரோ)	கம்பேனியா	,, 194
வால்டர்னம் (Volternum) (ரோ)	,,	
லிட்டர்னம் (Liternum) (ரோ)	,,	
சேலர்னம் (Salernum) (ரோ)	,,	
பக்சென்ட்டம் ((Buxentum) (ரோ)	லுக்கேனியா	
சிப்பொன்ட்டம் (Sipontum) (ரோ)	அப்பூலியா	
டெம்ப்சா (Tempsa) (ரோ)	புரூட்டியம்	
குரோடன் (Croton) (ரோ)	,,	

குடியேற்றத்தின் பெயர்	இடம்	நிறுவப்பட்ட ஆண்டு
தூரி (Thurii)	அப்பூலியா	கி.மு. 193
வேலன்ஷியா (Valentia)	புரூட்டியம்	,, 192
பிர்ஜி (Pyrgi) (ரோ)	எட்ருரியா	,, 191
பொனேனியா (Bononia)	சிசால்ப்பைன் கால்	,, 189
பார்மா (Parma) (ரோ)	,,	,, 183
மியூட்டினு (Mutina) (ரோ)	,,	,, 183
அக்வீலியா (Aquileia)	,,	,, 181
ஆக்சிமம் (Auximum) (ரோ)	பிசினம்	,, 157
நெப்டூனியா (டேரன்ட்டம்) (ரோம்)	கலபிரியா	,, 122
டெர்டோனு (Dertona) (ரோம்)	லிகூரியா (Liguria)	
எபோரேடியா (Eporedia) (ரோம்)	சிசால்ப்பைன் கால்	,, 100

6. இத்தாலி முழுவதும் கைப்பற்றப்படுதல்

'பெரிய கிரீஸ்': மூன்றாவது சாம்னைட் போருக்குப் பிறகு, வடக்கில் சிறுசிறு தலைவலிகள் மட்டுமே ரோமுக்கு இருந்து வந்தன. எட்ரூரியாவில் சில நகரங்களை மீண்டும் அது அடக்கிப் பணிய வைக்கவேண்டியதிலை இருந்தது. அதேபோல், சில கால்குலங்களோடு மீண்டும் போரிட வேண்டியிருந்தது. கால்களில் (Gauls) செனோனிகளை இறுதிவரை ரோமின் ஆதிக்கத்துக்குப் பணிய மறுத்தனர். எனவே அவர்கள் அனைவரையுமே கொன்று குவித்து, உயிருடன் இருந்த ஒரு சிலரையும் அப்பகுதியிலிருந்து விரட்டி அடித்தனர் ரோமானியர். போய் (Boii) என்றகால்கள் எட்ரூரியாமீது படையெடுத்தனர். கடும் போர்களுக்குப் பிறகு அவர்களைப் பின்வாங்கச் செய்தனர் ரோமானியர். இவ்வாறு வடக்கில் சிசால்ப்பைன் காலுக்குத் தெற்கிலான பகுதிகள் அனைத்தும் ரோமாபுரியின் ஆட்சிக்குக் கட்டுப்பட்டன.

தெற்கில் ரோமின் ஆட்சி, இன்னமும் முழுமையாக நிறுவப்படவில்லை. தென் இத்தாலியின் கடற்கரையை ஒட்டியிருந்த கிரேக்க நகரங்கள் சுதந்திரமாகவே இருந்து வந்தன. எனினும், அவற்றுக்கிடையில் பொருமையும் பூசலும் இடையறாமல் இருந்துகொண்டே இருந்தன. எனவேதான் லுக்கேனியர், அப்பூலியர், சாம்னைட்டுகள் ஆகியோரின் தாக்குதலுக்கெதிராக அவர்களால் ஒன்றுபட முடியவில்லை. இந்நிலையில் கலபிரியாவில் (Calabria) இருந்த டேரன்ட்டம் (Tarentum) நகரமானது, கிரேக்க நகரங்களை எல்லாம் தனக்குக் கட்டுப்பட்டவையாக்கி, 'பெரிய கீரிசில்' (Magre Graecia) தலைமை பெற்றுத் திகழ ஆசை கொண்டது. இதற்காக, கிரீசிலிருந்தும் சிசியிலிருந்தும் உதவியை எதிர்பார்த்தது அது. எப்பைரஸின் (Epirus) அரசராயிருந்த அலெக்சாந்தர், சைரக்யூஸ் (Syracuse) நகரின் கொடுங்கோலரான அகதோகிளீஸ் (Tyrant Agathocles)

ஸ்பார்ட்டாவை ஆண்ட கிளியோனிமஸ் (Cleonymus) முதலிய பலர் டேரன்ட்டத்துக்கு உதவுவதற்கெனப் பல்வேறு நேரங்களில் தென் இத்தாலிக்கு வந்தனர்.

ஆனால், இவர்களால் டேரன்ட்டத்துக்கு எப்பயனும் ஏற்படவில்லை. காரணம், அவர்கள் அனைவருமே தன்னல நோக்குடனேயே வந்தனர். எனவே, பின்னர் அவர்களைத் தென் இத்தாலியிலிருந்த தத்தம் நகரங்களுக்குத் திரும்பிப் போகும்படி செய்வதே டேரன்ட்டத்துக்குப் பெருங்கவலையாயிற்று. மேலும், தம்முள் ஒரு நகரமான டேரன்ட்டம் இவ்வாறு தனது ஆதிக்கத்தை விரிவுபடுத்த மேற்கொண்ட முயற்சிகளைக் கண்டு அஞ்சிய மற்றக் கிரேக்க நகரங்களில் சில, ரோமாபுரியின் ஆதரவையும் நட்பையும் நாடின. இவ்வாறுதான் ரோமுக்கும் டேரன்ட்டத்துக்கும் போட்டியும் பகைமையும் ஏற்பட்டன.

இரண்டாவது சாம்னைட் போர்களின்போது தனது பகைவர்களுக்கு டேரன்ட்டம் உதவாமல் இருக்கும்பொருட்டு, ஒரு உடன்படிக்கையை அதனுடன் செய்துகொண்டது ரோம். அதன்படி 'டேரன்ட்டம்' வளைகுடாவிலோ, அதற்கு அருகிலோ ரோம் தனது போர்க் கப்பல்களைச் செலுத்துவதில்லை' என உறுதி கூறியது. ஆயினும் லுக்கானிகளால் தாக்கப்பட்ட தூரி (Thurii) என்ற கிரேக்க நகரத்துக்கு உதவுவதற்கெனப் பத்துப் போர்க்கப்பல்களை கி.மு. 282-ல் அனுப்பினர் ரோமானியர். வெலேரியஸ் (Valerius) என்பவரின் தலைமையில் சென்ற இக் கப்பல்கள் டேரன்ட்டத்துடனை உடன்படிக்கையை மீறி, கடற்கரையிலிருந்த கிரேக்க நகரங்கள் பலவற்றுக்குச் சென்றது மட்டுமன்றி, டேரன்ட்டத்தின் துறைமுகத்துக்குள்ளும் நுழைந்தது. ஆத்திரமுற்ற அந்நகரம் தனது கடற்படையை அனுப்பி ரோமின் கப்பல்களைத் தாக்கி, நான்கை மூழ்கடித்தது; வலேரியசும் கொல்லப்பட்டார். உடனே, மன்னிப்பும் இழப்பீடும் கோரித் தனது தூதர்களை அனுப்பியது ரோம். ஆனால், அவர்கள் வெறுங்கையோடு திரும்ப வேண்டியதாயிற்று. அதனால், டேரன்ட்டத்தின்மீது போர் தொடுத்தது. இந்த ஆபத்தைச் சமாளிப்பதற்கென இப்பைரஸை ஆண்ட பிர்ரஸ் (Pyrrhus) என்ற மன்னனது உதவியைக்கோரியது டேரன்ட்டம்.

பிரஸ்ஸின் படையெடுப்பு, கி.மு. 280-274: முன்பு நாம் பார்த்த அலெக்சாந்தருக்குப் பிறகு எப்பைரஸின் அரியணை ஏறியவர் பிர்ரஸ். ஆரம்பத்தில் மொலோசி (Molossi)

என்ற குலத்தைச் சேர்ந்த மக்களே மட்டுமே ஆண்டு வந்தது இவரது வம்சம். பின்னர் மொலோசிகளின் பிரதேசத்துக்கு அப்பாலும் தனது ஆதிக்கத்தைப் பரப்பி, எப்பைரஸ் முழுவதுக்குமே அரசர் என்று தம்மை அழைத்துக் கொண்டார் அலெக்சாந்தர்.

அவரது சகோதரர் மகனான பிர்ரஸ் சிறுவயதிலிருந்தே போர்களில் அதிக நாட்டமுடையவராக இருந்தார். அவர் தமது நாட்டிலிருந்து விரட்டப்பட்டு, எப்பைரஸ் அரசையும்விட விரிவான மாசிடோனியாவைச் சிறிதுகாலம் ஆண்டு வந்தார். அவர் எண்ணற்ற போர்களில் ஈடுபட்டு, வெற்றிகளும் தோல்விகளும் நிறையக் கண்டவர். போர் முறைகளைப் பற்றி ஒரு நூலைக்கூட அவர் எழுதியிருந்ததாகச் சொல்லப்படுகிறது அவரது அருமையான போர்த் தந்திரங்களை ரோமானியர் கூடப் பின்பற்றினர். மேலும், தாராள மனம் கொண்ட அவர், வெற்றியின்போதும், தோல்வியின் போதும், மிகுந்த பெருந்தன்மையுடன் நடந்துகொண்டார்.

பிர்ரஸ் கி.மு. 280-ல் டேரன்ட்டம் வந்து சேர்ந்தார். அவரது படையில் யானைப் பகுதி ஒன்றும் இருந்தது. யானைகளையும் போரில் ஈடுபடுத்த முடியும் என்பதை ஆப்ரிக்காவில் கண்டறிந்த பிர்ரஸ், அதுபற்றி ஒன்றுமே அறியாத ரோமானியருக்கு எதிராக அதைப்பயன்படுத்த எண்ணினார். செல்வத்திலும் ஆடம்பரத்திலும் வாழ்ந்து வந்த டேரன்ட்டம் மக்களைக் கொண்ட தொரு படையைத் திரட்டிப் பயிற்சி கொடுக்க ஆரம்பித்தார் லுக்கேனியாவிலிருந்த நகரங்களிடமிருந்தும், சாம்னைட்டுகளிடமிருந்தும் படை உதவி கோரி அனுப்பினர். ஆனால், அவை வந்து சேரக் கால தாமதம் ஆயிற்று. அது வருமுன்பாகவே, ரோமானியப் படை ஒன்று வெலேரியஸ் லேவினஸ் (Valerius Laevinus) என்ற கான்சலின் தலைமையில் லுக்கேனியாவில் நுழைந்து கிராமங்களை நாசப்படுத்திப் பிர்ரஸ்ஸுக்கு உதவிகள் வருவதைத் தடுத்து வந்தது.

ஆயினும், பிர்ரஸ் கூடிய விரைவில் பெரும் படை ஒன்றைத் திரட்டிக்கொண்டு சிரிஸ் (Siris) நதியின் கரையில் ஹிராக்கிளியா (Heraclea) என்ற விடத்தில் ரோமானியரோடு பொருது வெற்றி பெற்றார். ஏராளமான ஆட்கள் அவர் தரப்பில் உயிர் இழந்தனர். எனினும், அவரது வெற்றியைக் கண்டு லுக்கேனியாவும் சாம்னியமும் படைகளை அவருக்கு அனுப்பின. உடனே ரோம் நகரை நோக்கி முன்னேற முடிவு செய்தார்.

வழியில் கேப்புவா (Capua), நேப்பிள்ஸ் ஆகிய நகரங்களைக் கைப்பற்றுவதற்காக அவர் மேற்கொண்ட முயற்சிகள் தோல்வியுற்றன. ஆயினும், பிரெகெல்லே (Fragellae), அனுக்னியா (Anagnia) போன்ற நகரங்களைக் கைப்பற்றி ரோமாபுரிக்கு இருபத்து மூன்றுகல் தொலைவிலிருந்த பிரேனெஸ்டி (Praeneste) வரையில் முன்னேறினர் அவர். எனினும், இவ்வாறு கைப்பற்றப்பட்ட நகரங்களும் அவருக்குப் பணிய மறுத்து, மீண்டும் மீண்டும் போராடின. ரோமானியப் படைகளும் அவரது அடிச்சுவட்டை ஒட்டியே சென்று அவருக்குப் பல விதங்களிலும் தொல்லை கொடுத்து வந்தன. இத்தகைய சிரமங்களுக் கிடையில் ரோமின்மீது தாக்குதல் தொடுப்பது முடியாது என்பதை உணர்ந்தார் பிர்ரஸ். குளிர்காலமும் வந்துகொண்டிருந்தது. எனவே, அவர் டேரன்ட்டத்துக்கு திரும்பினர். அதன் பின்னர் சமாதானப் பேச்சுவார்த்தைகளைத் துவக்குவதற்கெனத் தமது நண்பர் சினியாஸ் (Cineas) என்பவரை ரோமுக்கு அனுப்பினர். கிரேக்க நகரங்களின் விவகாரத்தில் ரோம் தலையிடக்கூடாது என்றும், லுக்கேனியா, புரூட்டியம், சாம்னியம் ஆகியவற்றில் ரோம் கைப்பற்றியிருந்த இடங்களைத் திருப்பிக் கொடுத்துவிட வேண்டும் என்றும் அவர் கோரினர். ஆனால், ரோமானிய செனேட் அக்கோரிக்கைகளை எல்லாம் நிராகரித்தது. அது மட்டுமன்றி இத்தாலியிலிருந்து பிர்ரஸ் வெளியேறும் வரையில் எவ்விதப் பேச்சு வார்த்தைக்கும் சமாதானத்துக்கும் தான் தயாராயில்லை என்றும் பதில் அனுப்பியது.

பின்னர் ரோமானியப் போர்க் கைதிகளைத் திருப்பித் தருமாறு கேட்பதற்கெனப் பேப்ரிக்கஸ் (Fabricus) என்பவரைப் பிர்ர்ஸ்ஸினிடம் தூது அனுப்பியது ரோம். அப்பொழுதும் பதிலுக்கு எவ்விதமான சலுகையையும் கொடுக்க ரோம் மறுத்தது. எனவே, மீண்டும் போர்க்கோலம் பூண்டார் பிர்ரஸ். சாம்னைட்டுகளைத் தூண்டிவிடும் நோக்கத்தோடு அப்பூலியாவில் நுழைந்தார். அங்கு அவரை எதிர்க்க முன்வந்த ரோமானியப் படையை கி.மு. 279-ல் அஸ்குலம் (Asculum) என்ற விடத்தில் இரண்டு நாட்களுக்குமேல் நடந்த கடுஞ்சண்டையில் தோற்கடித்தார். எனினும், அவரது படைக்கும் பெருஞ்சேதம் ஏற்பட்டது; மேலும், அவருக்கும் பலத்த காயங்கள் ஏற்பட்டன. எனவே, இந்த வெற்றியைத் தொடர்ந்து ரோமானியப் படையை விரட்டிச் செல்ல அவரால் முடியவில்லை. எப்பைரஸிலிருந்து புதிய படைகள் வருவதற்காகக் காத்திருக்க வேண்டியதாயிற்று.

சிசிலிக்குச் செல்லுதல், கி.மு. 278 : இத்தகைய பயனில்லாத வெற்றிகளும் போர்களும் டேரன்ட்டத்தில் அதிருப்தியை

ஏற்படுத்தின. இதுவரை பிர்ரஸ்ஸை ஆதரித்துவந்த இத்தாலிய நகரங்கள் அவரைவிட்டுச் செல்லத் துவங்கின. இந்நிலையில் சிசிலியில் சைரக்யூஸ் முதலிய நகரங்களிடமிருந்து அவருக்கு அழைப்பு ஒன்று வந்தது. அதை ஏற்றுக் கொண்டு சிசிலித் தீவுக்குச் சென்றார்.

தென் இத்தாலியின் கடற்கரையைப்போலச் சிசிலியின்கடற் கரையிலும் கிரேக்க நகரங்கள் பல இருந்தன. அவற்றைக் கொடுங்கோலர்கள் (tyrants) ஆண்டுவந்தனர். சிசிலித்தீவின் மேற்குப்பகுதி கார்த்தேஜின் (Carthage) ஆட்சிக்கு உட்பட்டிருந்தது. கிழக்கு சிசிலியையும் கைப்பற்ற எண்ணிய கார்த்தேஜ் கிரேக்க நகரங்கள்மீது தாக்குதல்களைத் தொடுத்து வந்தது. இத் தாக்குதல்களிலிருந்து தம்மைக் காப்பதற்காகவும், தமது கொடுங்கோலரை அகற்றுவதற்காகவும்தான் பிர்ரஸ்ஸின் உதவியைக் கோரி அழைப்பு அனுப்பின அந் நகரங்கள்.

இத்தாலியில் தனது போர்களினால் பயன் ஏதும் விளைய வில்லை என்பதை உணர்ந்த பிர்ரஸ் இந்த அழைப்பை மகிழ்ச்சி யோடு ஏற்றுக் கொண்டார். மேலும், அவரது மாமனாரான அகதோகிளீஸ் (Agathocles) ஆண்ட மெசானா நகரை (messana) கம்பேனியாவிலிருந்து வந்த சில கூலிப்படையினர் (mercenaries) கைப்பற்றி இருந்தனர். அங்கிருந்துகொண்டு மற்ற நகரங்களைத் தாக்கியும் கொள்ளையடித்தும் வந்தனர் அவர் கள். அவர்களை விரட்டியடித்து, மெசானாவை விடுவிப்பதும் பிர்ரஸின் நோக்கமா யிருந்தது.

அவர் சிசிலியில் இரண்டாண்டுகள் தங்கினார். ஆரம்பத்தில் அவரது போர்கள் பயனுள்ளவையாகவே இருந்தன. சிசிலி முழுவதையும் கைப்பற்றி, ஆப்பிரிக்காவுக்குச் சென்று கார்த் தேஜையும் பணியவைத்து, பெரும்படை ஒன்றுடன் இத்தா லிக்கு மீண்டும் திரும்பி ரோமையும் பணியவைக்க எண்ணினார் பிர்ரஸ். ஆனால், முன்பு இத்தாலியில் நடந்தது போலவே, சிசிலி யிலும் நடந்தது. தோற்றோடிய பகைவர்களைப் பின்தொடர்ந்து சென்று அறவே அழித்தொழிக்காமல் விட்டார் பிர்ரஸ். இத னால், சதா போர்கள் நடந்து, வெற்றிகள் கிட்டினவே யொழிய, விளைவுகள் ஒன்றுமில்லை. எனவே, பிர்ரஸைப் போற்றியோரும் புகழ்ந்தோரும் குறைந்தனர். ஆதரவு குன்றியது. எனவே, கி.மு. 276-ல் இத்தாலிக்குத் திரும்ப முடிவு செய்தார் அவர். அவர் அங்கு இல்லாத நேரத்தில், லுக்கேனியாவிலும் சாம்னியத் திலும் ரோமானியர் பல பகுதிகளைக் கைப்பற்றிப் பெரு வெற்றி

களை ஈட்டிவந்தனர். டேரன்ட்டம் மக்களும் சாம்னைட்டுகளும் கதிகலங்கிப் போயிருந்தனர்.

மீண்டும் இத்தாலியில்: கி.மு. 276-ல் இத்தாலிக்குத் திரும்பிவந்தார் பிர்ரஸ். அவருக்கெதிராக ஒன்று சேர்ந்திருந்த ரோமானியரும் கார்த்தேஜ்காரர்களும் அவரை இத்தாலியில் கரை இறங்காமல் தடுக்க முயன்றனர் கார்த்தேஜின் கப்பற் படை ஒன்று அவர்மீது கண்வைத்துக் காத்திருந்தது. ஆயினும், இம்முயற்சிகளனைத்தையும் தோற்கடித்து, தமது படையின் பெரும் பகுதியோடு இத்தாலிக்கு வந்து சேர்ந்தார் பிர்ரஸ். அவரது தரைப்படையானது சிசிலியாவிலிருந்து இத்தாலிக்குச் செல்லும்வரை அதைக் காத்த அவரது கப்பல்களை, கார்த் தேஜின் கப்பல்கள் மெசானுவில் தாக்கி அழித்தன. எனவே, சிசிலியில் பிர்ரஸின் ஆதிக்கம் மறைந்தது.

அவரது வருகையானது ரோமில் கலவரத்தை உண்டுபண் ணியது. அவருக்கெதிராகப் படைகளில் சேருவதற்கும் கூடப் பல ரோமானிய இளைஞர்கள் அஞ்சினர். பெரு முயற்சிக்குப் பின்னரே, பெரும் படையொன்றை ரோம் அரசால் திரட்ட முடிந்தது. அப்படையோடு சாம்னியத்தில் பெனிவெண்ட்டம் (Beneventum) [1] என்ற விடத்தில் பிர்ரஸை எதிர்நோக்கிக் காத் திருந்தார் கியூரியஸ் டென்ட்டேடஸ் (Curius Dentatus) என்ற கான்சல் (275).

தெற்கிலிருந்து கம்பேனியா வழியாக ரோமுக்குச் சென்ற பாதையில் அமைந்திருந்தது பெனிவெண்ட்டம். எனவே அதைக் கடக்காமல் ரோமை நோக்கிப் பிர்ரஸ் முன்னேற முடி யாது. பிர்ரஸின் படைகளில் எப்பைரஸ் நாட்டவர் மட்டு மன்றி ஏராளமான இத்தாலியரும் அப்பொழுது இருந்தனர். அவரது யானைகள் போரில் காயமுற்றபோது ஆத்திரமுற்று அங்குமிங்கும் ஓடிக் குழப்பத்தையே விளைவித்தன. இத் தகைய குறைகள் பிர்ரஸ்ஸின் படையில் இருப்பதை உணர்ந்த ரோமானியர் அவற்றைத் தமக்கு ஆதரவாகப் பயன்படுத்திக் கொள்ள விரும்பினர்.

இரவில் திடீரென ரோமானியரைத் தாக்க முயன்றார் பிர்ரஸ். ஆனால், டென்ட்டேடஸ் விழிப்புடன் இருந்து அதை முறியடித் தார். நீண்ட படையணிகளை ஒன்றன்பின் ஒன்றாக நிறுத்திப்

1. அப்பொழுது 'தீயது' என்று பொருள்படும் மேல்வெண்ட்டம் (male-ventum) என்ற பெயரைப் பெற்றிருந்தது அது. பின்னர்தான். பெனிவெண்ட்டம் எனப் பெயர் பெற்று 'நல்ல இடம்' ஆயிற்று.

போரில் இறங்குவது மாசிடோனிய மன்னர்கள் பின்பற்றி வந்த போர் முறை. இது, 'பெலாங்க்ஸ்' (Phelanx) எனப்படும். இம் முறையையே பிர்ரஸும் பின்பற்றி வந்தார். ஆனால் மேடு பள்ளங்கள் நிறைந்த மலைப்பிரதேசமான பெனிவெண்ட்டத்தில் இம்முறை பயனளிக்கவில்லை. பிர்ரஸ் தோற்கடிக்கப்பட்டார். ஒருசில குதிரைவீரர்கள் மட்டுமே தமக்குத் துணையாக டேரண்டத்துக்கு அவர் ஓட வேண்டியதாயிற்று. அங்கிருந்து கி.மு. 274-ல் எப்ரஸுக்குத் திரும்பிச் சென்றார். அவரது இத்தாலியப் படையெடுப்புகள் இவ்வாறு தோல்வியில் முடிந்தன.

தமது அதிகாரிகள் சிலரின் தலைமையில் ஒருசிறு படை ஒன்றை டேரன்ட்டத்தின் பாதுகாப்புக்கென விட்டுச் சென்றார் பிர்ரஸ். ஆனால், கார்த்தேஜின் கப்பல்களாலும் ரோமானியராலும் முற்றுகையிடப்பட்ட அந்நகர், ஓராண்டிற்குப் பிறகு பணிந்தது. இவ்வாறு இத்தாலியின் தென்கோடியிலிருந்த டேரண்ட்டமும் கி.மு. 272-ல் ரோமின் ஆதிக்கத்துக்கு உட்பட்டது.

தென் இத்தாலியில் ரோமின் ஆதிக்கம் : பிர்ரஸ் சிசிலிக்குச் சென்றிருந்தபோதும், பின்னர் அவரது தோல்விக்குப் பிறகும் தென் இத்தாலியில் பல போர்களில் ஈடுபட்டனர் ரோமானியர். கடற்கரையிலிருந்த கிரேக்க நகரங்களும் மற்றப் பகுதிகளும் வெல்லப்பட்டன. கி.மு. 267-ல், இந்த நடவடிக்கைகள் முற்றுப் பெற்றன.

இவ்வாறு புதிதாக வென்று சேர்த்துக் கொள்ளப்பட்ட பகுதிகளில் முக்கியமான இடங்கள் பலவற்றில் 'லத்தீனியக் குடியேற்றங்கள்' நிறுவப்பட்டன. சான்ருகச் சாம்னியத்தில் பெனிவெண்ட்டம், ஈசெர்னியா ஆகிய விடங்களிலும், லுக்கேனியாவில் பேஸ்டம் என்ற விடத்திலும், பிசினத்தில் பெர்மும் என்ற விடத்திலும் அவை நிறுவப்பட்டன. அதே சமயத்தில் வடக்கிலும்கூடச் சில லத்தீனியக் குடியேற்றங்கள் நிறுவப்பட்டன. எட்ரூரியாவில் கோசா (Cosa), அம்பிரியாவில் அரீமினம் போன்றவை இதற்குச் சில சான்றுகள். (முன் அத்தியாயத்தின் முடிவில் தரப்பட்டுள்ள பட்டியலைப் பார்க்க.)

இத்தகைய குடியேற்றங்களை நிறுவாமல் சில நிபந்தனைகளையும் ஒப்பந்தங்களையும் செய்து கொண்டு ரோமாபுரியோடு சேர்த்துக் கொள்ளப்பட்டன சில நகரங்கள். அந்நிபந்தனைகளில் முக்கியமானது, அந்நகர மக்கள் ரோமின் தரைப்படையிலும் கடற்படையிலும் சேர்ந்து போர்ப் பணியாற்றவேண்டும் என்பது. கி.மு. 326 ஆம் ஆண்டிலேயே நேப்பிள்ஸ் நகர

மானது இத்தகைய ஒப்பந்தம் ஒன்றைச் செய்து கொண்டபின், ரோமாபுரியோடு சேர்த்துக் கொள்ளப்பட்டது. பின்னர் கம்பேனியா, லுக்கேனியா, புரூட்டியம் போன்றவற்றிலிருந்த சில நகரங்களும்கூட இந்த அடிப்படையிலேயே சேர்த்துக் கொள்ளப்பட்டன. இவை கூட்டாட்சி நகரங்கள் (Civitates foederatae) என்றழைக்கப்பட்டன. தமது உள்விவகாரங்களில் ரோமின் தலையீடின்றி எல்லா அதிகாரங்களையும் இவை பெற்றிருந்தன. மத்திய இத்தாலியில் வாழ்ந்த பிசென்டேக்கள் (Picentes), மரூசினிகள் (Marrucini), மார்சிகள் (Marsi), பிரென்டெனிகள் (Frenteni), பெலிக்னிகள் (Peligni) போன்ற குலங்களும் (tribes) கூட இவ்வடிப்படையிலேயே ரோம் அரசில் இணைத்துக்கொள்ளப்பட்டன. இந்த நகரங்களும் குலங்களும் ரோமாபுரியோடு செய்துகொண்ட ஒப்பந்தங்கள் 'போடஸ்' (Foedus) என்று லத்தீன் மொழியில் அழைக்கப்பட்டன. இந்த அடிப்படையில் ரோமோடு சேர்ந்த நகரங்களை யெல்லாம் முனிசிபியம் (Municipium) என்று பொதுவாக அழைக்கலாம். முழு உரிமைகள் இன்றி, கடமைகளை மட்டுமே பெற்றிருந்த நகரங்கள் இவை.

இக் 'கூட்டாட்சி நகரங்களில்' வசித்த மக்கள் தமக்கு முழு குடிஉரிமையும் தரப்பட வேண்டு மென்று பிற்காலத்தில் கோரினர். அதைத் தர ரோம் மறுத்தபோது ரோமானிய அரசுக்குப் போட்டியாக இத்தாலிய அரசு ஒன்றை நிறுவ அவர்கள் முயன்றனர்.

கி.மு. 272-ல் கைப்பற்றப்பட்ட டேரண்ட்ட நகரானது ஒரு புதிய முறையில் நடத்தப்பட்டது. அதன் உரிமைகள் பறிக்கப்படவில்லை: ரோமானியப் படையில் அதன் இளைஞர்கள் சேர வேண்டும் என்றும் விதிக்கப்படவில்லை. அதே சமயம் ரோமாபுரி அரசுக்கு அது அடிமைப்பட்டு விட்டது என்பதைப் புலப்படுத்தும் வகையில் டேரண்ட்டத்தின் கோட்டையில் ரோமானியப் படை ஒன்று நிரந்தரமாக வைக்கப்பட்டது. நாளாவட்டத்தில் அதன் கடல் வாணிகமும் செல்வச் செழிப்பும் குன்றின.

வெகுநாட்க ளாகவே ரோமின் ஆதிக்கத்தை எதிர்த்துப் போராடிய சாம்னைட்களும் இவ்வாறே இறுதியில் பணிந்தனர். சிற்சில உரிமைகள் அவர்களுக்கும் தரப்பட்டன. இவ்வாறு கி.மு. மூன்றும் நூற்றாண்டின் மத்தியில் வடக்கில் ரூபிகன் (Rubicon) நதிமுதல் தென்கோடியிலிருந்த கிரேக்கக் குடியேற்றங்கள்வரை ரோமின் ஆட்சி பரவி இருந்தது. இத்தாலி முழுவதும் ரோமாபுரியின் ஆதிக்கத்தில் ஒன்றுபட்டது.

7. ரோமாபுரியும் கார்த்தேஜும்

இவ்வாறு கிட்டத்தட்ட இத்தாலி முழுவதையும் கைப்பற்றியபின், அதற்கு அப்பாலும் சென்றது ரோமாபுரியின் ஆதிக்க ஆசை. இந்நிலையில் மத்திய தரைக்கடலில் ரோம் நகரைப் போலவே தனது ஆதிக்கத்தையும் நிறுவ முயன்றது மற்றொரு நகரம். அதுதான் வட ஆப்பிரிக்காவின் கரையிலிருந்த கார்த்தேஜ் (Carthage). இதனால் ரோமாபுரிக்கும் கார்த்தேஜுக்கும் இடையில் போட்டியும் போரும் ஏற்பட்டன. இந்தப் போரைப் பற்றிப் படிப்பதற்கு முன்பு ரோமின் நிலை பற்றியும் கார்த்தேஜின் வளர்ச்சி பற்றியும் சுருக்கமாகத் தெரிந்து கொள்வோம். ரோமாபுரியின் படையமைப்பையும் நிர்வாக அமைப்பையும் பற்றி முதலில் பார்ப்போம்.

ரோமின் தரைப்படை : ரோமாபுரியின் ஆதிக்கம் இத்தாலி முழுவதும் விரிவு அடைந்தாலுங்கூட அதுஒரு நகரத்தின் ஆட்சியும் ஆதிக்கமுமே தவிர, வேறில்லை என்பதை நினைவில் வைத்துக் கொள்ளவேண்டும். நாம் படிக்கும் 'ரோமின் வரலாறு' முழுவதுமே ரோம் நகரின் ஆதிக்கம் விரிவடைந்த வரலாறு தான். ரோம் அரசை ஆண்ட அதிகாரிகளும் செனேட்டர்களும் ரோம் நகரின் குடிகளாகவே இருக்கவேண்டும்; அதேபோல் ரோம் அரசின் படைகளிலும் (legions) அவர்கள் மட்டுமே இருக்கவேண்டும். அவ்வாறு படைப்பணி புரியும் வயதுக்குட்பட்ட ரோமானியக் குடிகளின் எண்ணிக்கை, கி.மு. 265-ல் எடுக்கப்பட்ட மக்கள் தொகைக் கணக்கெடுப்பின் (Census) படி 292, 224. இந்த இளைஞர்களையும் இதில் அடங்காத முதியவர்களையும் சேர்த்துப் பார்த்தால் ரோமானியக் குடிகளின் எண்ணிக்கை சுமார் 4 லட்சமாக மட்டுமே இருந்தது.

போரில்லாத சாதாரண காலத்தில் ஆண்டுதோறும் ஒவ்வொரு கான்சலுக்கும் இரண்டுவீதம் மொத்தம் நான்கு

படைகள் (legions) திரட்டப்பட்டன. காலாட்படை, குதிரைப்படை ஆகிய இரண்டையும் சேர்த்து, இப்படைகளில் சுமார் 22,000 பேர் இருந்தனர். டேரன்ட்டம் கைப்பற்றப் பட்டபின், அதன் கோட்டையில் நிறுத்தப்படுவதற்கென ஐந்தாவது படை ஒன்றும் ஆண்டுதோறும் திரட்டப்பட்டது.

ஆனால், போர்போன்ற நெருக்கடி வேளைகளில் 'ரோமானி யக் குடிகள்' அல்லாத மற்றவர்களும்கூடப் போர்ப்பணிக்கு அழைக்கப்பட்டனர்; பின்னர் குடியேற்றங்களையும் 'கூட் டாட்சி நகரங்களையும்' அமைத்த பிறகு அவற்றிலிருந்தும் படைகளைத் திரட்டியது ரோம். ரோமானியப் படைகளோடு (legions) சேர்ந்து இவையும் போரிட்டன. எனினும், இவை அவற்றிலிருந்து வேறுபட்ட தனி அமைப்புகளாகவே இருந்தன. ரூபிகன் முதல் தென்கோடி வரையில் இத்தாலி முழுவதும் கைப்பற்றப்பட்ட பின்னர், இந்த இரண்டு வகை யான படைகளையும் சேர்த்து மொத்தம் 3,50,000 போர் வீரர்கள் இருந்தனர்.

போர்ப் பணிக்கு ஏற்ற நபர்களின் பட்டியலை ஒவ்வொரு நகர மும்தயாரித்தது. (17-வயதுமுதல் 46வயது வரையிலான ஆண்கள் எல்லோரும் இப்பட்டியலில் இருந்தனர். காலாட்படையில் 20 ஆண்டுகளே பணியாற்றியவர்கள் இப்பட்டியலில் சேர வேண்டிய அவசியமில்லை.) அடிக்கடி இப்பட்டியல்களைப் பரி சோதனை செய்து, போருக்கு ஆட்கள் தயாராயிருக்கின்றனரா என்பதைக் கண்டறிவதற்காகக் 'கான்க்விஸ்டோர்கள்' (Conquistores) என்ற அதிகாரிகள் நாடு முழுவதும் சுற்றி வந்தனர். படை திரட்ட வேண்டிய வேளை வந்ததும் ஒரு நாளைக் குறிப்பிட்டு கான்சல்கள் அறிக்கை விடுவர். படைப் பணிக்குரிய ஆட்கள் அந்த நாளில் படை திரட்டும் அதிகாரி களின் முன்செல்ல வேண்டும்.

ஒவ்வொரு ரோமானியப் படைக்கும் ஆறு இராணுவ டிரிபியூன்கள் ஆரம்பத்தில் நியமிக்கப்பட்டனர். இவர்களில் சிலர் கான்சல்களால் நியமிக்கப்பட்டனர்; சிலர் தேர்ந் தெடுக்கப்பட்டனர். உரிய ஆட்களைப் பொறுக்கி எடுத் துப் படையில் சேர்க்கும் வேலையை இவர்கள் ஒருவர்பின் ஒருவராக மாற்றி மாற்றிச் செய்து வந்தனர். இவ்வாறு படையில் சேர்க்கப்பட்ட ஆட்கள், வயது, சொத்து ஆகியவற் றின் அடிப்படையில் நான்கு பிரிவாகப் பிரிக்கப்பட்டனர். அவை ஹஸ்ததி (hastati), பிரின்சிப்ஸ் (Principes), திரியாரி

மற்றக் கான்சல் தடுக்க முடிந்தது. இவர்கள் இருவருமே பல விதங்களில் செனெட்டுக்குக் கட்டுப்பட்டே செயலாற்றி வந்தனர். தங்களுக்குமேல் தலைமையதிகாரி ஒருவரை அமர்த்திக்கொள்ளும்படியும் இவர்களைச் செனெட் வற்புறுத்த முடியும். இவர்களின் நடவடிக்கைகளையும் தீர்ப்புகளையும் தடுத்து நிறுத்தும் அதிகாரம் பிளெபியட் டிரிபியூன்களுக்கு உண்டு. இத்தகைய பல கட்டுப்பாடுகள் இவர்கள் மீது இருந்தனவாயினும் இவர்களின் உண்மையான அதிகாரத்தைக் குறைத்து மதிப்பிடுவது தவறாகும்.

நாளடைவில் இவர்களின் அதிகாரங்களில் பல புதிய அதிகாரிகளுக்கு மாற்றப்பட்டன என்பதையும் முன்பு குறிப்பிட்டோம். கி.மு. 443-ல் சென்சார்கள் (Censors) என்ற இரண்டு புதிய அதிகாரிகள் அமர்த்தப்பட்டனர். 'செஞ்சரி' வாரியாகவும் குலம் வாரியாகவும் மக்கள் தொகையைக் கணக்கிட்டுச் செல்வம், குடியிருக்குமிடம் ஆகியவற்றின் அடிப்படையில் பட்டியல்களைத் தயாரிக்கும் அதிகாரம் இவர்களுக்கு மாற்றப்பட்டது. செஞ்சூரியா மன்றத்தின் உறுப்பினரின் பட்டியல் இவ்வாறுதான் தயாரிக்கப் பட்டது. ஐந்து ஆண்டுகட்கு ஒருமுறை சிலருடைய் பெயர்களை, 'பாவம் செய்தவர்கள்' என்று கூறிப் பட்டியலிலிருந்து அகற்றும் அதிகாரம் இவர்கட்கு இருந்தது. இவ்வாறு செனெட் போன்ற பல மன்றங்களின் உறுப்பினர்களை ஆக்கவும் நீக்கவும் அதிகாரம் பெற்றிருந்தனர் இவர்கள். மேலும் பொதுக் கட்டிடங்கள், சாலைகள் ஆகியவற்றைக் கண்காணிக்கும் அதிகாரமும் இவர்களிடம் இருந்தது. கி. மு. 347-ல் இராணுவட் டிரிபியூன்கள் நீக்கப்பட்டு மறுபடியும் கான்சல்களின் கையில் ஆட்சிப் பொறுப்பை ஒப்படைத்தபொழுது பிரேட்டர் (praetor) என்ற புதிய அதிகாரி தேர்ந்தெடுக்கப்பட்டார். ஆண்டுதோறும் தேர்ந்தெடுக்கப்படும் இவர், நீதிபதியாக இருந்து வழக்குகளை விசாரித்து வந்தார்.

முன்பு இரண்டு கான்சல்கள் செய்து வந்த வேலையை இப் பொழுது ஐந்து அதிகாரிகள் (இரண்டு கான்சல்கள், இரண்டு சென்சார்கள், ஒரு பிரேட்டர்) செய்து வந்தனர். 'இந்த ஐவரும் மற்றக் கியூரூல் ஈடைல்களும் சேர்ந்ததுதான் 'ரோமானிய அரசாங்கம்'. இவர்கள் அனைவரும் தமது பதவிகளிலிருந்து ஓய்வு பெற்றதும் சாகும்வரை செனெட்டின் உறுப்பினரா யிருப்பர். மற்றச் செனேட்டர்கள் பெஞ்சுகளின்மீது அமர, இவர்கள் மட்டும் 'செல்லே கியூரூல்ஸ்' (sellae curules) என்ற அலங்கார இருக்கைகளில் அமர்ந்திருந்தனர். எனவே தான் 'கியூரூல் அதிகாரிகள்' என்ற பெயர் இவர்களுக்கு ஏற்பட்டது.

மற்ற அதிகாரிகளைப்பற்றி இப்பொழுது காண்போம். மேலே கூறப்பட்ட கியூரூல் அதிகாரிகளுக்கு அடுத்தபடியாகத் தகுதிவாய்ந்தவர்கள் குவேஸ்டர்கள். இவர்களது வேலை முழுவதும் நிதி சம்பந்தப்பட்டதே. வரிகளை வசூலித்தல்; வரவு செலவுக் கணக்கு வைத்திருத்தல் முதலியவை இவர்களின் வேலைகளில் முதன்மையானவை. கி. மு. 421 முதல் இவர்களது எண்ணிக்கை இரண்டிலிருந்து நான்காக உயர்த்தப்பட்டது. இவர்களில் இருவர் ரோமிலேயே இருந்து அரசின் கருவூலத்தை மேற்பார்வை செய்து வந்தனர்; மற்ற இருவரில் ஒவ்வொருவரும் ஒவ்வொரு கான்சலோடு போர் முனைக்குச் செல்லவேண்டும். படையின் நிதி விவரங்களை அவர்கள் அங்குக் கவனித்து வந்தனர். ரோமானியப் பேரரசு விரிவடைந்து புதிய மாநிலங்கள் சேர்த்துக்கொள்ளப்பட்டபோது குவேஸ்டர்களின் எண்ணிக்கையும் பெருகியது.

பெட்ரீஷியருக்கும் பிளெபியருக்கும் வகுப்புப் பூசல்கள் நடந்ததை அடுத்து 494-ல் பிளெபியருக்கெனச் சில உயர் பதவிகள் உருவாக்கப்பட்டன என்பதை முன்பே பார்த்தோம். அவ்வாறு தோன்றிய இரண்டு ஈடைல்கள் (Aediles) சிறுசிறு வழக்குகளை விசாரித்தல், நகரப் போலீஸ் படையைக் காண்காணித்தல், தானிய வியாபாரத்தையும் விளையாட்டுகளையும் மேற்பார்வை செய்து ஒழுங்காக நடைபெறுமாறு செய்தல் போன்ற பணிகளைச் செய்து வந்தனர். பின்னர்க் கி. மு. 367-ல் பிரேட்டர் பதவியானது தோற்றுவிக்கப்பட்டபொழுது பெட்ரீஷியருக்கென இரண்டு ஈடைல் பதவிகளும் தோற்றுவிக்கப்பட்டன.

இந்தப் பெட்ரீஷிய ஈடைல்கள்தாம் கியூரூல் ஈடைல்கள். பிளெபிய ஈடைல்களும் இவர்களும் ஏறத்தாழ ஒரே மாதிரியான பணிகளையே ஆற்றிவந்தனர். விரைவிலேயே பிளெபியருக்குங் கூடக் கியூரூல் ஈடைல் பதவிகள் அளிக்கப்பட்டன. இதன்மூலம், பதவிக்காலம் முடிந்ததும் செனெட்டில் நுழைய பிளெபியருக்கு வழி ஏற்பட்டது ; பின்னர், மேலும் உயர்ந்த கியூரூல் அதிகாரிகளாகப் பிளெபியர் ஆவதற்கு முதற்படியாக ஆயிற்று கியூரூல் ஈடைல் பதவி.

இடுக்கண் அல்லது நெருக்கடி நேரங்களில் சர்வாதிகாரி (dictator) ஒருவர் அமர்த்தப்படுவதைப்பற்றியும் முன்பே கண்டோம். சிறப்பாகப் போர்க்காலங்களில் அவர் அமர்த்தப்பட்டார். அப்பொழுது படைத்தலைவராக அவர் விளங்கினார். சில சமயங்களில் வேறுசில வேலைகளைச் செய்து முடிப்பதற்காகவும் கூடச் சர்வாதிகாரிகள் நியமிக்கப்பட்டனர்.

முதலிய எல்லா அதிகாரங்களும் இவர்களுக்கு இருந்தன நீண்ட மரக்கொம்புகளைக் கொண்ட கட்டுகளைத் (fasces) தாங்கிய லிக்டர்கள் (lictors) என்ற ஆட்கள் பன்னிருவர் அவர் முன் செல்வர். கான்சல்களின் தலைமை அதிகாரத்துக்கு (imperium) அடையாளமாக இருந்தது ''பேசஸ்' (fasces) என்ற இந்தக்கட்டு.

ஏராளமான அதிகாரங்கள் இவர்களின் கையில் இருந்தாலும், பல விதக் கட்டுதிட்டங்களுக்கும் அவர்கள் உட்பட வேண்டியிருந்தது. சமமான அதிகாரங்களைப் பெற்ற இரண்டு பேர் கான்சல்களாக இருந்ததால், இருவரும் ஒருமித்துச் செயல் பட்டால்தான் முடிவுகளை மேற்கொள்ள முடியும். எனவே, ஒரு கான்சலின் அதிகாரத்தை மற்றக் கான்சல் தடுக்க முடிந்தது. இவர்கள் இருவருமே பல விதங்களில் செனேட்டுக்குக் கட்டுப் பட்டே செயல்பட்டு வந்தனர். தங்களுக்குமேல் சர்வாதிகாரி ஒருவரை நியமிக்கும்படியும் இவர்களைச் செனேட் வற் புறுத்த முடியும். இவர்களது நடவடிக்கைகளையும் தீர்ப்புகளை யும் தடுத்து நிறுத்தும் அதிகாரம் பிளெபிய டிரிபியூன்களுக்கு உண்டு. இத்தகைய பல கட்டுப்பாடுகள் இவர்கள்மீது இருந்தன வாயினும் இவர்களின் உண்மையான அதிகாரத்தைக் குறைத்து மதிப்பிடுவது தவருகும்.

நாளடைவில் இவர்களது அதிகாரங்களில் பல புதிய அதி காரங்களுக்கு மாற்றப்பட்டன என்பதையும் முன்பு குறிப்பிட் டோம். கி.மு. 443-ல் சென்சார்கள் (Censors) என்ற இரண்டு புதிய அதிகாரிகள் நியமிக்கப்பட்டனர். 'செஞ்சரி' வாரியாக வும் குலம் வாரியாகவும் மக்கள் தொகையைக் கணக்கிட்டுச் செல்வம், குடியிருக்குமிடம் ஆகியவற்றின் அடிப்படையில் பட்டியல்களைத் தயாரிக்கும் அதிகாரம் இவர்களுக்கு மாற்றப் பட்டது. செஞ்சூரியா மன்றத்தின் உறுப்பினரின் பட்டியல் இவ்வாறு தான் தயாரிக்கப்பட்டது. ஐந்து ஆண்டுகட்கு ஒரு முறை சிலரது பெயர்களை, 'பாவம் செய்தவர்கள்' என்று கூறி பட்டியலிலிருந்து அகற்றும் அதிகாரம் இவர்கட்கு இருந்தது. இவ்வாறு செனேட் போன்ற பல மன்றங்களின் உறுப்பினர் களை ஆக்கவும், நீக்கவும் அதிகாரம் பெற்றிருந்தனர் இவர்கள். மேலும் பொதுக் கட்டடங்கள், சாலைகள் ஆகியவற்றை நிர் வகிக்கும் அதிகாரமும் இவர்களிடம் இருந்தது. கி.மு. 347-ல் இராணுவ டிரிபியூன்கள் நீக்கப்பட்டு மறுபடியும் கான்சல்களின் கையில் ஆட்சிப் பொறுப்பை ஒப்படைத்த பொழுது பிரேட்டர் (praetor) என்ற புதிய அதிகாரி தேர்ந்தெடுக்கப்பட்டார்.

ஆண்டுதோறும் தேர்ந்தெடுக்கப்படும் இவர், நீதிபதியாக இருந்து வழக்குகளை விசாரித்து வந்தார்.

முன்பு இரண்டு கான்சல்கள் செய்து வந்த வேலையை இப் பொழுது ஐந்து அதிகாரிகள், (இரண்டு கான்சல்கள், இரண்டு சென்சார்கள். பிரேட்டர்), செய்து வந்தனர். இந்த ஐவரும் கியூரூல் ஈடைல்களும் சேர்ந்ததுதான் 'ரோமானிய அரசாங்கம்'. இவர்கள் அனைவரும் தமது பதவிகளி லிருந்து ஓய்வு பெற்றதும் மரணம்வரை செனேட்டின் உறுப்பினரா யிருப்பர். மற்றச் செனேட்டர்கள் பெஞ்சுகளின் மீது அமர, இவர்கள் மட்டும், செல்லே கியூரூல்ஸ்' (sellae curules) என்ற அலங்கார ஆசனங்களில் அமர்ந்திருந்தனர். எனவே தான் 'கியூரூல் அதிகாரிகள்' என்ற பெயர் இவர்களுக்கு ஏற்பட்டது.

மற்ற அதிகாரிகளைப் பற்றி இப்பொழுது காண்போம். மேலே கூறப்பட்ட கியூரூல் அதிகாரிகளுக்கு அடுத்தபடியாக முக்கியமானவர்கள் குவேஸ்டர்கள். இவர்களது வேலை முழு வதும் நிதி சம்மந்தப்பட்டதே. வரிகளை வசூலித்தல், வரவு செலவுக் கணக்கு வைத்திருத்தல் முதலியவை இவர்களது வேலைகளில் முக்கியமானவை. கி.மு. 421 – முதல் இவர்களது எண்ணிக்கை இரண்டிலிருந்து நான்காக உயர்த்தப்பட்டது. அவர்களில் இருவர் ரோமிலேயே இருந்து அரசின் கருவூலத்தை மேற்பார்வை செய்து வந்தனர்; மற்ற இருவரில் ஒவ்வொரு வரும் ஒவ்வொரு கான்சலோடு போர்முனைக்குச் செல்ல வேண்டும். படையின் நிதி விவகாரங்களை அவர்கள் அங்குக் கவனித்து வந்தனர். ரோமானியப் பேரரசு விரிவடைந்து புதிய மாநிலங்கள் சேர்த்துக் கொள்ளப்பட்டபோது குவேஸ்டர் களின் எண்ணிக்கையும் அதிகரித்தது.

பெட்ரீஷியருக்கும் பிளெபியருக்கும் வகுப்புப் பூசல்கள் நடந்ததை அடுத்து 494 –ல் பிளெபியருக்கெனச் சில உயர் பதவிகள் உருவாக்கப்பட்டன என்பதை முன்பே பார்த்தோம். அவ்வாறு தோன்றிய இரண்டு ஈடைல்கள் (Aediles) சிறுசிறு வழக்குகளை விசாரித்தல், நகர போலீஸ் படையை நிர்வகித்தல், தானிய வியாபாரத்தையும் விளையாட்டுக்களையும் மேற்பார்வை செய்து ஒழுங்காக நடைபெறுமாறு செய்தல்போன்ற பணி களைச் செய்து வந்தனர். பின்னர் கி.மு. 367 – ல் பிரேட்டர் பதவியானது தோற்றுவிக்கப்பட்டபொழுது, பெட்ரீஷியருக் கென இரண்டு ஈடைல் பதவிகளும் தோற்றுவிக்கப்பட்டன.

லிபியாவில் கார்த்தேஜின் ஆட்சியில் 300 நகரங்கள் இருந்தன. சிசிலியில் மூன்றில் இரண்டுபாகமும், பலீரிக் தீவுகள் (Balearic), கார்சிகா (Corsica), சார்டீனியா (Sardinia), தென் ஸ்பெயினில் பல குடியேற்றங்கள் ஆகியவையும் அதற்குச் சொந்தமா யிருந்தன.

கார்த்தேஜின் அரசியலமைப்பு: ரோமின் கான்சல்களைப் போலக் கார்த்தேஜில் இரண்டு ஷொபேட்டிம்கள் (Shofetim-நீதிபதிகள்) இருந்தனர். செனெட் என்ற அவையும் இருந்தது. ரோமானிய செனெட்டைப் போல இதுவும் பெயரளவில் மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்டது. ஆனால் உண்மையில் அதிகார மனைத்தும் 'நூற்றுவர் அவை' (the Hundred) என்ற ஒரு அவையிடம் இருந்தது. பெரும் பணக்கார வணிகக் குடும்பங்களே இந்த அவையில் தலைமுறை தலைமுறையாக இடம் பெற்றிருந்தன. (இதில் உண்மையில் 104 பேர்கள் இருந்ததாகக் கூறப்படுகின்றனர்.) எனவே, பிற்காலத்தில் வெனிஸ் நகரைப்போல் சில பெருவணிகர்களால் ஆளப்பட்ட அரசாக இருந்தது கார்த்தேஜ். சுதந்திரக் குடியரசுகளைக் கொண்ட பொதுஅவை ஒன்றும் அங்கே இருந்தது. ஆனால் அரசாங்கத்தையோ அதன் கொள்கைகளையோ கட்டுப்படுத்தும் அதிகாரத்தை அது இழந்து நின்றது. சில செல்வக் குடிகள் நடத்தி வந்த ஆட்சிக்கெதிராக (oligarchy) சிறு செல்வர்கள் சிலர் தமது ஆட்சியை நிறுவ முயன்றனர். பார்க்கா (Barca) குடும்பம் இவர்களுக்குத் தலைமை தாங்கியது. பியூனிக் போர்கள் தொடங்கியபோது சிறுசெல்வரின் செல்வாக்கு ஓங்கி வந்தது. இவர்கள் மக்களின் செல்வாக்கைப் பெற்றே பெருஞ்செல்வரைப் பதவியிலிருந்து அகற்றி விட்டு ஆட்சியைக் கைப்பற்றினர். எனவேதான் பெரும் செல்வரின் ஆட்சியே சிறந்தது என்று கருதிய போலிபியஸ் (Poylbius) 'ஒன்றுமே தெரியாத முட்டாள் மக்கள் கூட்டத்தின் ஆட்சிக்கு (mob-rule) கார்த்தேஜை ஒரு சான்றாக எடுத்துக் காட்டினர்.

கார்த்தேஜின் படைகள்: ரோமாபுரியிடம் பலமிக்க கப்பற் படை இல்லை என்பதை முன்பு பார்த்தோம். ஆனால் கார்த்தேஜிடமோ சிறந்த கடற்படை ஒன்று இருந்தது. திறமை மிக்க மாலுமிகள் அதில் இருந்தனர். மேலும், தனது சுருசுருப்பான வாணிகம் காரணமாகப் பெருஞ் செல்வத்தையும் அது பெற்றிருந்தது. ஆனால் ரோமினிடமோ செல்வச் செழிப்பு இல்லை. அது அப்பொழுதுதான் வெள்ளி நாணயங்களை அச்சிடத் தொடங்கி

யிருந்தது. இவ்வாறு கடல் வலியிலும் செல்வத்திலும் ரோமாபுரியைக் கார்த்தேஜ் விஞ்சியிருந்தாலும் அவை இரண்டிற்கும் இடையே ஏற்பட்ட போரின் இறுதியில் ரோமே வென்றது. அதற்குக் காரணங்கள் பல. அவற்றுள் முதன்மையானது கார்த்தேஜ் தனது செல்வத்தை வைத்துப் பல்வேறு மக்களைக் கொண்ட கூலிப் படைகளைத் திரட்டிப் போரிட்டதே. தன்னுடைய குடிமக்களை மட்டுமே கொண்ட ரோமின் படைக்கு ஈடு கொடுக்க அக் கூலிப் படைகளால் இயலவில்லை.


8. முதலாம் பியூனிக் போர்

(கி. மு. 264-250)

சிசிலியில் கார்த்தேஜின் நடவடிக்கைகள் : சிசிலித் தீவின் மேற்குப் பகுதி கார்த்தேஜியரின் கட்டுப்பாட்டில் இருந்தது என்பதை முன்பே கண்டோம். கிழக்கில் அவர்களது எல்லையாக ஹேலிக்கஸ் (Halycus) ஆறு விளங்கியது. நாளடைவில் அதையும் கடந்து கிழக்கிலிருந்த கிரேக்க நகரங்களையும் தனது ஆட்சியின்கீழ்க் கொண்டுவர முயன்றது கார்த்தேஜ். அதனால் பல போர்கள் நடைபெற்றன. கிரேக்க நகரங்களுள் முதன்மையானதான சைரக்யூஸுடன்தான் (Syraeuse) பெரும் பாலான போர்கள் நடைபெற்றன. சான்றாக கி.மு. 480-ல் கார்த்தேஜின் படை ஒன்று சைரக்யூஸ்மீது போர் தொடுத்த போது அந்த நகரத்தை ஆண்ட கொடுங்கோலரான முதலாம் கெலோ (Tyrant Gelo-I) என்பவர் அதை அடித்து விரட்டினார். அதேபோல் மற்றொரு கொடுங்கோலரான டயோனிசியஸ் (கி.மு. 405-367) பல முறை கார்த்தேஜியருடன் போரிடவேண்டியிருந்தது. கிரீஸில் கொரிந்த் (Corinth) நகரத்தை ஆண்டு வந்த திமோலியோன் (Timoleon) சைரக்யூஸின் அழைப்புக் கிணங்க வந்து கி.மு. 340-ல் கிரிமிசஸ் (Crimisus) ஆற்றங்கரையில் நடந்த ஒரு பெரும் போரில் கார்த்தேஜியரைத் தோற்கடித்தார். கி மு. 317 முதல் 278 வரை சைரக்யூஸை ஆண்ட அகதோகிளீஸ் சிசிலியில் பெரு வெற்றிகளை ஈட்டியது மட்டுமன்றி வட ஆப்பிரிக்காமீதும் படையெடுத்து கார்த்தேஜுக்குச் சொந்தமான பகுதிகளைத் தாக்கினார். அதுபோலவே கி.மு, 278க்கும் 276க்கு மிடையில் சைரக்யூஸின் அழைப்பை ஏற்றுச் சிசிலிக்கு வந்து கார்த்தேஜியர்களோடு பல சண்டைகளை நடத்தி வெற்றி பெற்றார் பிர்ரஸ். மேற்கில் கார்த்தேஜியர் நகரங்கள் பலவும் கிரேக்கர் வசமாயின. ஆனால் இத்தாலிக்கு அவர் திரும்பிச் சென்ற பின்னர், கார்த்தேஜியர் தாம் இழந்த நகரங்கள் அனைத்தையும்மீண்டும் கைப்பற்றிக்கொண்ட தோடு நில்லாமல், கிரேக்க நகரங்கள் பலவற்றையும் தாக்கினர். அப்பொழுது இரண்டாம் ஹீரோ (Hiero II) என்பவர் சைரக்யூஸை ஆண்டு வந்தார்.

அவர் திறமை மிக்கவர். அவரது ஆட்சியில் சைரக்யூஸ் வலிமை மிகுந்து விளங்கியது, அதைக் கண்டு அஞ்சிய சில கிரேக்க நகரங்கள் கார்த்தேஜுடன் மட்டுமன்றி வேறு எந்த அன்னிய ரோடும் சேருவதற்குத் தயாராயிருந்தன, இவ்வாறு கிரேக்க நகரங்களுக்கிடையிலான போட்டியும் பொறாமையும் அன்னிய ரது தலையீட்டுக்கும் ஆக்கிரமிப்புக்கும் வழிகோலின.

முதலாம் பியூனிக் போருக்கான காரணங்கள் : கப்பே னியாவிலிருந்து சிசிலிக்குச் சென்று நகரங்களைத் தாக்கிக் கொள்ளையிட்டு வந்த கூலிப் படைகளைப்பற்றி முன்பே பார்த்



தோம், இவர்கள் 'மார்ஸ் தெய்வத்தின் குழந்தைகள்' என்று பொருள்படும், 'மேமர்டைன்கள்' (Mamertines) என்ற பெயரால் தம்மை வழங்கிக்கொண்டனர். (பார்ஆ என்பது இத்தாலியர்களின் போர்க்கடவுள்.)

சைரக்யூசை ஆண்ட கொடுங்கோலரான அகதோகிளீஸின் படையில் பணியாற்றிய இவர்கள் அவரது மரணத்திற்குப் (கி.மு. 289) பிறகு மெசானா (Messana) நகரைக் கைப்பற்றி ஆண்கள் அனைவரையும் கொன்றுவிட்டு, அவர் தம் பெண்டிரையும் குழந்தைகளையும் சொத்துகளையும் கவர்ந்து வந்தனர். மெசானுவில் தமது ஆட்சியை நிறுவி அண்டையிலிருந்த நகரங்கள்மீதும் தாக்குதல்கள் நடத்திக் கொள்ளையில் ஈடு


8. முதலாவது பியூனிக் போர்

(கி.மு. 264–250)

சிசிலியில் கார்த்தேஜின் நடவடிக்கைகள் : சிசிலித் தீவின் மேற்குப் பகுதி கார்த்தேஜியரின் கட்டுப்பாட்டில் இருந்தது என்பதை முன்பே கண்டோம். கிழக்கில் அவர்களது எல்லையாக ஹேலிக்கஸ் (Halycus) நதி விளங்கியது. நாளடைவில், அதையும் கடந்து கிழக்கிலிருந்த கிரேக்க நகரங்களையும் தனது ஆதிக்கத்தின் கீழ்க் கொண்டுவர முயன்றது கார்த்தேஜ். அதனால், பல போர்கள் நடைபெற்றன. கிரேக்க நகரங்களுள் முக்கியமானதான சைரக்யூஸுடன்தான் (Syracuse) பெரும் பாலான போர்கள் நடைபெற்றன. சான்றாக, கி.மு. 480-ல் கார்த்தேஜின் படை ஒன்று சைரக்யூஸ்மீது போர் தொடுத்த போது, அந்நகரத்தை ஆண்ட கொடுங்கோலரான முதலாம் கெலோ (Tyrant, Gelo-I) என்பவர் அதை அடித்து விரட்டினர். அதேபோல் மற்றொரு கொடுங்கோலரான டயோனிசியஸ் (கி.மு. 405-367) பல முறை கார்த்தேஜியருடன் போரிடவேண்டியிருந்தது. கிரீஸில் கொரிந்த் (Corinth) நகரத்தை ஆண்டு வந்த திமோலியோன் (Timoleon) சைரக்யூஸின் அழைப்புக் கிணங்க வந்து, கி.மு. 340-ல் கிரிமிசஸ் (Crimisus) நதிக்கரையில் நடந்த ஒரு பெரும் போரில் கார்த்தேஜியரைத் தோற்கடித்தார். கி.மு. 317 முதல் 278 வரை சைரக்யூஸை ஆண்ட அகதோகிளீஸ் சிசிலியில் பெரு வெற்றிகளை ஈட்டியது மட்டுமன்றி வட ஆப்பிரிக்காமீதும் படையெடுத்துக் கார்த்தேஜுக்குச் சொந்தமான பகுதிகளைத் தாக்கினர். அதுபோலவே, கி.மு. 278-க்கும் 276-க்கு மிடையில் சைரக்யூஸின் அழைப்பை ஏற்றுச் சிசிலி வந்து கார்த்தேஜியர்களோடு பல சண்டைகளை நடத்தி வெற்றி பெற்றார் பிர்ரஸ். மேற்கில் கார்த்தேஜியர் நகரங்கள் பலவும், அவர்கள் வசமாயின. ஆனால், இத்தாலிக்கு அவர் திரும்பிச் சென்ற பின்னர், கார்த்தேஜியர் தாம் இழந்த நகரங்கள் அனைத்தையும்மீண்டும் கைப்பற்றிக்கொண்டதோடு நில்லாமல் கிரேக்க

நகரங்கள் பலவற்றையும் தாக்கினர். அப்பொழுது இரண்டாம் ஹீரோ (Hiero-II) என்பவர் சைரக்யூஸை ஆண்டு வந்தார். அவர் திறமை மிக்கவர். அவரது ஆட்சியில் சைரக்யூஸ் வலிமை மிகுந்து விளங்கியது. அதைக் கண்டு அஞ்சிய சில கிரேக்க நகரங்கள் கார்த்தேஜுடன் மட்டுமன்றி, வேறு எந்த அந்நிய ரோடும் சேருவதற்குத் தயாரா யிருந்தன. இவ்வாறு கிரேக்க நகரங்களுக் கிடையிலான போட்டியும் பொறுமையும் அந்நிய ரது தலையீட்டுக்கும் ஆக்கிரமிப்புக்கும் வழி கோலின.

முதலாவது பியூனிக் போருக்கான காரணங்கள் : கம்பே னியாவிலிருந்து சிசிலிக்குச் சென்று நகரங்களைத் தாக்கிக் கொள்ளையிட்டு வந்த கூலிப் படைகளைப் பற்றி முன்பே பார்த்



தோம். இவர்கள் 'மார்ஸ் தெய்வத்தின் குழந்தைகள்' என்று பொருள்படும், 'மேமர்டைன்கள்' (Mamertines) என்ற பெய ரால் தம்மை அழைத்துக் கொண்டனர்.

சைரக்யூசை ஆண்ட கொடுங்கோலர் அகதோகிளீஸின் படையில் பணியாற்றிய இவர்கள் அவரது மரணத்திற்குப் (கி.மு. 289) பிறகு, மெசானு (Messana) நகரைக் கைப்பற்றி ஆண்கள் அனைவரையும் கொன்றுவிட்டு, அவர்தம் பெண்டி ரையும் குழந்தைகளையும் சொத்துக்களையும் கவர்ந்து வந்தனர். மெசானுவில் தமது ஆட்சியை நிறுவி, அண்டையிலிருந்த நகரங் கள்மீதும் தாக்குதல்கள் நடத்திக் கொள்ளையில் ஈடுபட்டு வந்தனர். சிசிலியிலிருந்த கிரேக்க நகரங்களில் மிகவும் வலிமை

படைத்ததான சைரக்யூஸ் இவர்களை வேரறுக்க முடிவு செய்தது. அதன் அரசர்கள் பலரும் இதையே நோக்கமாகக் கொண்டிருந்தனர். இறுதியில் 2ஆம் ஹீரோ (Hiero-II) என்ற கொடுங்கோலர் மைலே (Mylae) என்ற விடத்தில் அவர்களை அறவே முறியடித்தார் (கி.மு. 270). உடனே, அந்நியரது உதவியை நாடத் துவங்கினர் மேமர்டைன்கள். அவர்களில் ஒரு பிரிவினர் கார்த்தேஜ்காரர்கட்கும், மற்றொரு பிரிவினர் ரோமானியருக்கும் ஆளனுப்பினர். பெனர்மஸ் (Panormus),[1] அக்ரிஜென்ட்டம் (Agrigentum) ஆகியவை சிசிலியில் கார்த்தேஜ்காரர்களின் முக்கிய நகரங்கள். இவ்வாறு வெகு அண்மையிலிருந்த கார்த்தேஜ்காரரின் உதவியே முதலில் வந்தது. தென் இத்தாலியையும் சிசிலியையும் பிரித்த ஜலசந்தியில் இருந்த நகரம் மெசானு. எனவே, அதைத் தமது ஆதிக்கத்தின்கீழ்க் கொண்டு வருவதில் கார்த்தேஜுக்கும் ரோமுக்கும் போட்டி ஏற்பட்டது.

ஹன்னே (Hanno) என்பவரின் தலைமையில் முதலில் வந்த கார்த்தேஜின் படையானது மெசானுவுக்குள் புகுந்து அதன் கோட்டையில் தங்கியது. சிறிது காலத்துக்குப் பிறகு கான்சல் அப்பயஸ் கிளாடியஸின் (Appius Claudius) தலைமையில் ரோமானியப்படையும் வந்தது. ஆரம்பத்தில் இந்த விவகாரத்தில் ஈடுபட விரும்பாத செனேட், மேமர்டைன்கள் இத்தாலியர் என்ற தாலும், மேசானுவைக் கார்த்தேஜின் கட்டுப்பாட்டில் விட்டு விட்டால் அந்த ஜலசந்தி வழியிலான தனது வாணிகத்துக்கு ஆபத்து விளையும் என்பதாலும், புதிய பகுதிகளை வெல்ல வேண்டும் என்ற ஆசையாலும் படையனுப்ப இறுதியில் முடிவு செய்தது. ஆக 25,000 ஆட்களோடு மெசானு வந்து சேர்ந்தார் கிளாடியஸ். மேமர்டைன்களும் இப்பொழுது தமது மனத்தை மாற்றிக் கொண்டு இத்தாலியரான ரோமானியப் படைகளை ஆதரித்து, கார்த்தேஜின் படை வெளியேற வேண்டுமென்று கோரினர். வேறு வழியின்றிச் சிசிலியிலிருந்து தனது துருப்புகளோடு விலகிச் சென்றார் ஹன்னே. தன்னைக் கேட்காமல் இவ்வாறு செய்ததற்காக அவருக்கு மரண தண்டனை விதித்தது கார்த்தேஜின் அரசாங்கம். அதுமுதல் ரோமுக்கும் கார்த்தேஜுக்கும் முதல் பியூனிக் [2]போர் தொடங்கியது.

முதல் கட்டம், கி.மு. 264-62 : டேரன்ட்டம், நேப்பிள்ஸ், லோக்ரி (Locri), எலியா (Elea) போன்ற தென் இத்தாலிய

1. இன்று பாலர்மோ (Palermo) என்று அழைக்கப்படுகிறது இந்நகரம்.

2. 'பொனீஷியர்களை'ப் பியூனிகள் (Poeni) என்றழைத்தனர் ரோமானியர். கார்த்தேஜ் பொனீஷியரின் குடியேற்றம் என்பதால் கார்த்தேஜுடனான போர் 'பியூனிக் போர்' என்று அழைக்கப்பட்டது.

கிரேக்க நகரங்களிட மிருந்து கப்பல்களைக் கடனாகப் பெற்று அவற்றில் தன்னுட்களை ஏற்றி வந்து மெசானுவில் கரையிறங்கிய கிளாடியஸை ஹென்னே தடுக்காமல் போய்விட்டார். அவரும் அவரது துருப்புகளும் மெசானுவிலிருந்து அகன்றதும், அந்நகரை முற்றுகையிட்டு வந்த சைரக்யூஸின் படைகளை முறியடித்து, முற்றுகையைத் தோற்கடித்தார் கிளாடியஸ். ரோமானியர்கள் மெசானுவி லிருந்து விலகிச் செல்லப் போவதில்லை என்பதை இப்பொழுது உணர்ந்த மேமர்டைன்கள், கார்த்தேஜிடமிருந்தும் ஹீரோவிடமிருந்தும் உதவிகளைப்பெற்றுக்கிளாடியஸை எதிர்க்க முயன்றனர். ஆனால், இந்தக் கூட்டணிப் படையையும் முறியடித்துச் சைரக்யூஸையும்முற்றுகையிட்டார்கிளாடியஸ். அந்நகர மக்களின் வீராவேசமான எதிர்ப்பு இம்முயற்சியைத் தோற்கடித்தது. ரோமின் படை வலிமையை நன்கு உணர்ந்துகொண்ட ஹீரோ 263-ல் அதனுடன் ஒரு நட்பு உடன்படிக்கையைச் செய்து கொண்டார்.

அடுத்தபடியாகக் கார்த்தேஜின் படைகளை ஹேலிக்கஸ் நதிக்கு மேற்கே விரட்டி யடித்து, ஏழு மாத முற்றுகைக்குப் பிறகு, கி.மு.262-ல் அக்ரிஜென்ட்டத்தைக் கைப்பற்றினர் ரோமானியர். இதை யடுத்துப் பல நகரங்கள் ரோமானியரின் பக்கம் சேர்ந்துகொண்டன.

இரண்டாவது கட்டம், கி.மு. 262-255 : இவ்வாறு சிசிலியில் பலவிடங்களைக் கைப்பற்றியபின், ரோமாபுரியின் ஆசை மேலும் அதிகரித்தது. கார்த்தேஜின் ஆதிக்கத்தை சிசிலித் தீவிலிருந்து அறவே அகற்றிவிட்டு அத்தீவு முழுவதையுமே தன் கைக்குள் போட்டுக்கொள்ள ரோம் முடிவு செய்தது. ஆனால், இதற்கு வன்மை மிக்க கடற்படை தேவை. அது இல்லாமல், கடல்வலிமிக்க கார்த்தேஜை, கடற்கரை நகரங்களிலிருந்து விரட்டுவது கடினமாக இருக்கும். மேலும் தனது கடல்வலி மையைக் கொண்டுதான் சார்டீனியாத்தீவையும் தம் பிடியில் வைத்திருந்தனர் கார்த்தேஜ்காரர்கள் ; இத்தாலியின் கடற்கரைப்பகுதிகளின்மீதும் தாக்குதல் தொடுத்து வந்தனர். அதனால், உடனடியாகக் கப்பல்களைக் கட்டத் தொடங்கியது ரோம். கி.மு. 260-ல் ஒரு கடற்படை தயாராயிற்று. கொர்னீலியஸ் சிப்பியோ (Cornelius Scipio) என்ற கான்சலின் தலைமையில் அது சிசிலிக்குப் புறப்பட்டது. கயஸ் டூய்லியஸ் (Gaius Duilius) என்ற மற்றக் கான்சலின் தலைமையில் தரைப் படை ஒன்று, கார்த்தேஜின் படையால் முற்றுகையிடப்பட்ட செகஸ்டா (Segesta) நகரைக் காப்பதற்கென அனுப்பப்பட்டது.

ஆனல், லிபாரா (Lipara) என்ற தீவைக் கைப்பற்ற ரோமானியக் கடற்படை முயன்றபோது சிப்பியோ கார்த்தேஜின் வீரர்களால் சிறைபிடிக்கப்பட்டார். உடனே டூய்லியஸ் கடற்படையின் தலைமைப்பொறுப்பை மேற்கொண்டு, மைலே (mylae) என்ற விடத்தில் கார்த்தேஜின் கடற்படையைத் தோற்கடித்தார். கார்த்தேஜின் கப்பல்களுக்கு அருகில் தமது கப்பல்களைச் செலுத்தி நீண்ட பலகை ஒன்றைக் கார்த்தேஜின் கப்பல்கள்மீது பாலம் போல விழும்படி செய்து, அதன்மூலம் அக்கப்பல்களுக்குள் சென்று, தரைப்போரில் ஈடுபடுவது போலவே பகைவர்களை முறியடித்தனர் ரோமானியர். இந்தப் புதிய உத்தியால் விளைந்த முதல்வெற்றி ரோமானியரின் தன்னம்பிக்கையையும் உற்சாகத்தையும் மேலும் வளர்த்தது. இந்த வெற்றிக்குப் பிறகு செகஸ்டாவுக்குச் சென்று முற்றுகையை முறியடித்தார் டூய்லியஸ்.

மைலேயில் பெற்ற பெரு வெற்றிக்குப்பின், ரோமாபுரியில் கோலாகலமான வெற்றி விழா ஏற்பாடு செய்யப்பட்டது. பகைவரின் கப்பல்களிலிருந்து கொண்டுவரப்பட்ட பலவிதமான பொருட்களும் மக்களின் பார்வைக்கு ரோமாபுரியின் மன்றில் (Forum) வைக்கப்பட்டன.

இந்த வெற்றியால் உற்சாகமடைந்த ரோமின் கடற்படை கி.மு. 259-58ல் கார்சிகா, சார்டினியா ஆகிய தீவுகள்மீதும் தாக்குதல் தொடுத்தது. பின்னர் கார்த்தேஜ் நகரம் அமைந்திருந்த வடக்கு ஆப்பிரிக்காவையே தாக்க எண்ணினர் ரோமானியர். இரண்டு கான்சல்களின் தலைமையில் கி.மு. 256-ல் ஒரு பெரிய கடற்படையும் தரைப்படையும் ஆப்பிரிக்காவுக்கு அனுப்பப்பட்டன. தம்மைத் தடுத்து நிறுத்துவதற்கென அனுப்பப்பட்ட கார்த்தேஜின் கப்பல்களைத்தெற்குச் சிசிலியில் எக்னோமஸ் (Ecnomus) என்னுமிடத்துக் கருகில் நடந்த போரில் தோற்கடித்து வட ஆப்பிரிக்காவின் கரையில் இறங்கின ரோமானியப்படைகள். அதன்பின்னர் கார்த்தேஜுக்குச் சொந்தமான கிராமப் பகுதிகளை அழித்து நாசப்படுத்தின; கார்த்தேஜின் படைகளையும் தோற்கடித்து விரட்டின. குளிர் காலம் வந்ததும் ஒருகான்சல் ரோம் திரும்பினர். அடுத்த ஆண்டின் துவக்கத்தில் (கி.மு.255) மற்றக்கான்சலான அட்டிலியஸ் ரெகூலஸ் (Atilius Regulus) என்பவரைத் தோற்கடித்துச் சிறைப்பிடித்தனர். கார்த்தேஜியர் ஸ்பார்ட்டாவிலிருந்து வந்து கார்த்தேஜின் படையில் சேர்ந்து பணிபுரிந்த சாந்திபஸ் (Xanthippus) என்பவர்தாம் இதற்குக் காரணம் என்று சொல்

லப்படுகிறது. எனினும், ரோமானியப்படை தொடர்ந்து போரிட்டது. அது கைப்பற்றியிருந்த குளுப்பியா (Clupea) என்ற கடற்கரைப்பட்டினத்தை மீட்பதற்குக் கார்த்தேஜ் மேற்கொண்ட முயற்சிகள் வீணாயின. இறுதியில் தனது தரைப்படையை மீட்டு வருவதற்கென ரோம் ஒரு கடற்படையை அனுப்பியது. அவ்வாறு தாய்நாடு திரும்பிக்கொண்டிருந்த ரோமின் கப்பல்கள் ஹெர்மேயம் (Hermaeum) என்ற இடத்துக்கருகில் நடைபெற்ற கடற்போரில் கார்த்தேஜைத் தோற்கடித்தபின் ஒரு புயலில் அகப்பட்டு முற்றிலும் நாசமாயின.

மூன்றாவது கட்டம் : கி.மு. 254-250 : இந்தப் பேரிழப்பினால் ரோமானியர் மனந் தளர்ந்துவிட வில்லை. விடா முயற்சியோடு மற்றுமொரு கடற்படையைத் தயார் செய்தனர். ஆண்டுதோறும் சிசிலிக்குத் தரைப்படைகள் அனுப்பிவைக்கப் பட்டன. வெற்றியும் தோல்வியும் மாறிமாறி வந்தன. இரு தரப்பினருமே சளைக்காமல் போரிட்டனர். கி.மு. 254-ல் பெனார்மஸ் (Panormus) நகரை ரோம் கைப்பற்றியது. சிசிலிலேயே அருமையான துறைமுகத்தைக் கொண்டிருந்த அந்நகரைக் கைப்பற்றியது ரோமுக்குப் பெரும் வெற்றியாகும். மேலும், அங்கிருந்துதான் இத்தாலியின் மீதான பல தாக்குதல் களையும் கார்த்தேஜ் நடத்தி வந்ததால் அதனை ரோமானியர் கைப்பற்றியது அவர்களுக்குப் பெரும் பயனைத் தந்தது.

பெனார்மஸின் வீழ்ச்சிக்குப்பிறகு லிலிபேயம் (Lilybaeum) என்ற பட்டினத்தைத் தனது தலையாய துறைமுகமாகவும் கடற்படைத்தளமாகவும் ஆக்கிற்று கார்த்தேஜ். அதைக்கைப்பற்ற முயன்ற ரோமானியக் கடற்படை பலமுறை தோற்றது. அதே சமயம் பெனார்மஸை மீட்பதற்கெனக்கார்த்தேஜ்மேற்கொண்ட முயற்சிகளும் விரயமாயின. கி.மு. 253-ல் ரோமானியக் கப்பல்கள் மறுபடியும் புயலில் அகப்பட்டுப் பெரு நாசத்துக்கு உள்ளாயின. இதனால் மனமுடைந்த ரோம், கடற் போர் களைச் சிறிது காலம் கைவிட்டது. தரைப்போர்களில் மீண்டும் மீண்டும் தோல்வியுற்ற கார்த்தேஜும் அதேசமயம் மனமுடைந் திருந்தது. கி.மு. 251-ல் சமாதானம் செய்துகொள்ள எண்ணித் தூதர்களை ரோமுக்கு அது அனுப்பியது. தன்னிடம் கைதியாகி இருந்த முன்னாள் கான்சல் ரெகூலஸையும்கூட ரோமுக்கு அனுப்பிவைத்தது. போரை நிறுத்திச் சமாதானம் செய்து கொள்வதற்குச் செனேட்டை இணங்கச் செய்ய ரெகூலஸால் முடியவில்லை. எனவே, முன்பு தான்தந்திருந்த வாக்குறுதியின்படி கார்த்தேஜுக்கு மீண்டார் ரெகூலஸ்.

சமாதானம் செய்து கொள்ளவேண்டாமென்று செனேட்டிடம் கூறி, கார்த்தேஜ் மீண்டு, மரண தண்டனைக்கு ஆளான வீரர் அவர் என்று ரோமனியக்கதைகள் கூறுகின்றன.

நான்காவது கட்டம்: கி.மு. 249-242: முதல் பியூனிக் போரின் கடைசி எட்டு ஆண்டுக ளடங்கிய இந்த நான்காவது கட்டம் மிகவும் முக்கியமானது. கார்த்தேஜுக்குச் சொந்த மான லிலிபேயம், எரிக்ஸ்குன்று (mount Eryx), எர்க்டேகுன்று (Mount Ercte) ஆகிய மூன்றையும் கைப்பற்றுவதற்கு ரோமா னியர் தொடர்ந்து போரிட்டனர். இந்த எட்டாண்டுகளில் லிலிபேயத்தைக் கைப்பற்றுவதற்கு ரோமானியர் மேற்கொண்ட எல்லா முயற்சிகளும் தந்திரங்களும் தோல்வியுற்றன. எரிக்ஸ் குன்றின் உச்சியையும் அதன் சரிவின்மீது அமைந்திருந்த எரிக்ஸ் நகரையும் கி.மு. 249-ல் ரோம் கைப்பற்றியது. ஆனால், அடுத்த ஆண்டிலேயே அதை மீண்டும் கைப்பற்றியது கார்த்தேஜ். பெனர்மஸுக்கு எதிரிலிருந்த எர்க்டே குன்றின் மீது ஹேமில்கர் பார்க்காவின் (Hamilcar Barca) தலைமையில் கி.மு. 247-முதல் கார்த்தேஜின் படை ஒன்று இருந்தது. பெனர்மஸிலிருந்த ரோமானியர்கள் அக்குன்றைக் கைப்பற்று வதற்குச் செய்த முயற்சிகளனைத்துமே தோல்வியில் முடிந்தன. இதற்குக் காரணம் அது தாய்நகரான கார்த்தேஜுடன் கடல் வழித்தொடர்களை மேற்கொள்ள முடிந்ததுதான்.

இவ்வாறு இந்த மூன்று இடங்களிலும் ஆறு ஆண்டுகள் முற்றுகை தொடர்ந்து நடந்தது. ஆனால், முக்கியமான சண் டைகள் ஒன்றுமே நடக்கவில்லை. கி.மு. 249-ல் பப்ளியஸ் கிளாடியஸ் (Publius Claudius) என்பாரின் தலைமையிலான ரோமானியக் கப்பல்களை ட்ரெபேனம் (Drepanum) என்ற விடத்தில் கார்த்தேஜ் தோற்கடித்துச் சிதைத்தது. அதே ஆண் டின் இறுதி வாக்கில் இதை விடவும் பெரிய ரோமானியக் கடற் படை ஒன்று, சிசிலியின் தென்கரையில் புயலில் சிக்கி அழிந் தது. இதனால் மீண்டும் மனந் தளர்ந்தனர் ரோமானியர். கார்த்தேஜுக்குச் சொந்தமான கடற்கரைப் பட்டினங்களைக் கைப்பற்றுவதற்கு ஒரேவழி, கடல் வழியாக அவற்றுக்கு உதவி வருவதைத் தடுப்பதுதான் என்பதை உணர்ந்து, சில ஆண்டு கட்குப் பின்னர் மீண்டும் கடற்படை ஒன்றைக் கட்டினர். கி.மு. 242-ல் தயாராயிற்று இப்படை. அதே ஆண்டு மார்ச்சில் தனது சிசிலியப் படைகளுக்கு வேண்டிய பண்டங்களையும் ஆட்களை யும் ஏற்றிக்கொண்டு வழக்கம்போல் வந்து கொண்டிருந்த கார்த்தேஜின் கடற்படையை வழி மறித்துத் தாக்கியது ரோமின்

இப்புதிய கடற்படை. ஏகுசே (Aegusae) தீவுகளுக்கு அண்மையில் நடந்த இச்சண்டையில் கார்த்தேஜின் கப்பல்களில் ஐம்பதை மூழ்கடித்து, எழுபதைக் கைப்பற்றியது ரோமானியப் படை.

இதன் விளைவாக லிலிபேயம், எரிக்ஸ் முதலிய விடங்களிலிருந்த கார்த்தேஜின் படைகள் தாய் நகரத்துடனான தொடர்புகள் இழந்து, உணவும்பண்டங்களும் இன்றிச்சரணாகதி அடைய வேண்டியதுதான். இதை உணர்ந்தார் ஹேமில்கர் பார்க்கா. ரோமுடன் பேச்சு வார்த்தைகளைத் தொடங்குவதற்குக் கார்த்தேஜ் அரசாங்கமும் அவருக்கு அனுமதி அளித்தது. சிசிலியிலிருந்து எல்லாப் படைகளையும் விலக்கிக் கொள்வதாகவும், போர் இழப்பீட்டுத் தொகை ஒன்றைத் தருவதாகவும், சைரக்யூஸையோ அல்லது அதன் நட்பு நகரங்களையோ இனித் தாக்குவதில்லை என்று தான் உறுதி தருவதாகவும், ரோமின் நண்பர்களைக் கார்த்தேஜோ அல்லது கார்த்தேஜின் நண்பர்களை ரோமோ இனித் தாக்குவதில்லை என்று இருதரப்பும் உறுதி கொடுக்க வேண்டும் என்றும் கூறி, ஹேமில்கர் பார்க்கா பேச்சு வார்த்தைகள் நடத்தினர். இந்த நிபந்தனைகளோடு லிப்பாராத் தீவுகளிலிருந்தும் கார்த்தேஜ் வெளியேற வேண்டுமென்ற புதிய நிபந்தனையையும் செனேட் சேர்த்துக் கொண்டது. (கார்த்தேஜுக்குச் சொந்தமான கார்ச்சிகாத் தீவை கி.மு. 259-ல் கைப்பற்றினர் ரோமானியர்.) இவ்வாறு முதலாவது பியூனிக் போர் கி.மு. 241-ல் கெட்டுலஸ் (Treaty of Catulus) உடன் படிக்கையோடு முடிவுற்றது.

விளைவுகள் : முதல் பியூனிக் போரின் விளைவாக சைரக்யூஸ் அரசு நீங்கலாகச்சிசிலித்தீவு முழுவதும் ரோமின் ஆதிக்கத்துக்கு உட்பட்டது. இத்தாலிக்கு அப்பால் ரோமின் முதல் மாநிலம் சிசிலிதான். மத்திய தரைக் கடல் பகுதியில் ஆகிக்கம் செலுத்துவது பற்றி ரோமுக்கும் கார்த்தேஜுக்கும் எழுந்த போட்டியில் ரோம் வெற்றி பெறத் துவங்கி விட்டது.

சிசிலியில் நிர்வாக ஏற்பாடுகள் : இதுவரை இத்தாலிய தீபகற்பத்துக்குள்ளேயே விரிவடைந்து வந்த ரோமின் அரசுக்குச் சிசிலியானது கட்டல் கடந்த ஒரு மாநிலம். எனவே, இத்தாலியின் பல்வேறு பகுதிகளிலும் தான் ஏற்படுத்தியதுபோன்ற நிர்வாக அமைப்பையே சிசிலியிலும் ஏற்படுத்துவது ஒத்துவராதென்பதை உணர்ந்தது ரோம். இதனால் ரோமானிய அதிகாரி ஒருவரின் ஆட்சிக்கு உட்பட்ட 'மாநிலமாக' (Province) அதை ஆக்கியது ரோமானிய செனேட் சபை. 'மாநிலம்' என்ற இந்தச்

சொல்லே முதன்முதலில் சிசிலிக்குத்தான் ரோம் கூட்டியது. எனவே, சிசிலிதான் ரோமின் முதன் மாநிலம். இத்தாலிய எல்லைக்கு அப்பால் அது கைப்பற்றிய பிரதேசங்கள் அனைத்தும் இதே அடிப்படையில் பற்பல மாநிலங்களாகப் பின்னர் பிரித்தாளப்பட்டன.

சிசிலியின் நிர்வாக அமைப்பைப் பற்றி முடிவு செய்வதற்கெனப்பத்து கமிஷனர்களை அங்கு அனுப்பி வைத்தது செனேட் சபை. அவர்கள் திரும்பி வந்து கூறிய ஆலோசனையின் பேரில் அதை ஒரு மாநிலமாக ஆக்கி, அது நிர்வகிக்க வேண்டிய முறை பற்றி ஒரு தீர்மானமும் நிறைவேற்றியது அச்சபை. ஏற்கெனவே அங்கு இருந்து வந்த அரசுகள், அவற்றின் சட்டங்கள், நிர்வாக அமைப்புகள் முதலியவற்றில் எவ்வித மாறுதலையும் செய்யவில்லை. ஆனால், ஆண்டுதோறும் சில அதிகாரிகளை மட்டும் ரோம் அனுப்பிற்று. எல்லாத் தகராறுகளையும் தீர்த்து வைப்பதற்கென ஒரு பிரேட்டரும், நிதி நிர்வாகத்தைக் கவனித்துக் கொள்வதற்கென ஒரு குவேஸ்டரும் அனுப்பி வைக்கப்பட்டனர். அதே சமயம் முன்பு கார்த்தேஜுக்குத் தாம் செலுத்தி வந்த வகைகளையும் தொகைகளையும் சிசிலிய அரசுகள் அப்பொழுது முதல் ரோமுக்குச் செலுத்தின. தங்களது ஆண்டு உற்பத்தியில் பத்தில் ஒன்றையும், தங்களது ஏற்றுமதி இறக்குமதிகளின் மீது ஐந்து சதவீதக் கட்டணத்தையும். அவை ரோமுக்குச் செலுத்தின.

அதே சமயம் ஆரம்ப முதல் ரோமுக்கு ஒத்தாசை செய்து வந்த சிசிலிய நகரங்கள் சுயாட்சி உரிமை பெற்ற 'கூட்டாட்சி நகரங்களாக' (Civitates foederatae) அமைக்கப்பட்டன. ரோமானியக் கடற்படைக்கு ஆட்களை அனுப்பவேண்டும் என்ற நிபந்தனை மட்டுமே அவை மீது விதிக்கப்பட்டன.

இவ்வாறு இத்தாலிக்கு அப்பால் உள்ள பகுதிகளை நிர்வகிப்பதற்கென ஒரு முறையை வகுத்துக் கொண்டது ரோம். பின்னர் இதே முறைதான் மற்ற மாநிலங்களிலும் பின்பற்றப்பட்டது.

சார்டினியா கைப்பற்றப் படுதல், கி.மு. 238 : முதலாவது பியூனிக் போர் தோற்றுவித்த மிக முக்கியமான விளைவுகளில் ஒன்று சார்டினியாவை ரோம் கைப்பற்றியதாகும். ரோமுடன் சமாதானம் ஏற்பட்டதும் சிசிலியிலிருந்த தனது கூலிப்படைகளை ஆப்பிரிக்காவுக்கு விலக்கிக் கொண்டது கார்த்தேஜ். ஆனால், அவற்றின் சம்பளப் பாக்கியைத் தருவதற்கு வேண்டிய பணம் கார்த்தேஜிடம் இப்பொழுது இல்லை. எனவே அவை

கலகங்களில் ஈடுபட்டன. கார்த்தேஜின் ஆட்சிக்கு உட்பட்டிருந்த லிபிய நகரங்களும்கூட அக் கூலிப்படைகளோடு சேர்ந்து கொண்டன. இவற்றை ஒடுக்குவதற்கு மிகவும் சிரமப்பட்டது கார்த்தேஜ். முதல் பியூனிக் போரினால் மிகவும் சீர்கெட்டிருந்த அதன் பொருளாதார நிலை இப்பொழுது மேலும் மோசமடைந்தது.

இந்நிலையில் கலகங்களை ஒடுக்குவதற்கு ஹேமில்கர் பார்க்கா ஒருவரால்தான் முடியும் என்பதை உணர்ந்து அவரது தலைமையில் படைகளை அனுப்பியது கார்த்தேஜ். ஏற்கெனவே அவரது தலைமையின்கீழ் சிசிலியில் பணியாற்றி யிருந்த கூலிப் படையினரில் பலர் கலகத்தை உடனே கைவிட்டு அவருக்குப் பணிந்தனர். ஆயினும், மேலும் சில மாதங்கள் போரிட்டு, கலகத் தலைவர்களான ஸ்பென்டியஸ் (Spendius), மேத்தாஸ் (Mathos) போன்றவர்களைக் கொன்று இரண்டாண்டுகளுக்கு மேல் நடைபெற்ற இக்கலகத்தை (கி.மு. 241–39) ஒடுக்கி அமைதியை நிலை நாட்டினார் பார்க்கா.

நீண்ட நாட்களாகவே தமக்கும் சம்பளம் தரப்படாததால் கெட்டூலஸ் உடன்படிக்கைக்கு முன்னமேயே சார்டினியாவி லிருந்த கூலிப் படைகளும் கலகம் செய்தன. சார்டினியாவில் தலையிடுவதில்லை என்றும், வாணிக உறவுகூட அதனுடன் வைத்துக் கொள்வதில்லை என்றும் வெகு நாட்களுக்கு முன்பே உடன்படிக்கை ஒன்றைக் கார்த்தேஜுடன்செய்து கொண்டிருந்தது ரோம். இருப்பினும் கார்த்தேஜின் பலவீனத்தையும் இக்கட்டான நிலையையும் உணர்ந்து சார்டினியாவை அபகரித்துக் கொள்ள இப்பொழுது திட்டமிட்டது. அங்குக் கலகத்தை ஒடுக்கி அனுமதியை நிறுவுவதற்கென்று சொல்லி ரோம் ஒரு படையை முதலில் அனுப்பி வைத்தது. தன்னுட்டில் கலகங்களை எல்லாம் ஒடுக்கியபின், பார்க்காவின் தலைமையில் சார்டினியாவுக்கு ஒருபடையை அனுப்ப முடிவு செய்தது கார்த்தேஜ்; ஆனால், அது தன்மீது படையெடுப்பதற்கு ஒப்பாகும் என்றும் அதனால் போர் மூளும் என்றும் கூக்குரலிட்டது ரோம். போரில் ஈடுபட விரும்பவில்லை கார்த்தேஜ். சார்டினியாத் தீவு தனக்கு சேரவேண்டுமென்றும், கெட்டூலஸ்உடன்படிக்கையின்படிகார்த்தேஜ் தரவேண்டிய போர் இழப்பீட்டுத் தொகையை மேலும் கூடுதலாக்கவேண்டுமென்றும், இல்லையேல் போர்தொடுப்போம் என்பதாகவும் அச்சுறுத்தியது ரோம். இதற்கும் கார்த்தேஜ் இணங்க வேண்டியதாயிற்று. இவ்வாறு கி.மு. 238-ல் சார்டினியாவையும் ரோம் பெற்றது. தனக்கு வேண்டிய உணவு தானியங்களை அளித்து வந்த சார்டினியாவைக்கார்த்தேஜ் இழந்தது.

ஏனினும், சார்டீனிய மக்கள் ரோமின் ஆட்சிக் கெதிராகப் பல கலகங்களை நடத்தினர். அவற்றை ஒடுக்குவதற்கென ஒவ்வொரு ஆண்டும் படைகளை அனுப்பி வந்தது ரோம். கி.மு. 225 ஆம் ஆண்டில் கார்சிகாவும் சார்டீனியாவும் இணைந்து ரோமாபுரியின் இரண்டாவது மாநிலமாக உருவெடுத்தது. இப் புதிய மாநிலத்திற்கெனவும் ஒரு பிரேட்டர் ஆண்டுதோறும் நியமிக்கப்பட்டார்.

8. முதலாவது பியூனிக் போருக்கும் இரண்டாவது பியூனிக் போருக்கும் இடையே :

கி.மு. 241-218

வட இத்தாலிய போர்கள் : இத்தாலிய தீப கற்பத்தில் ரோம் அரசு வடக்கில் ரூபிகன் நதி (Rubicon)வரையில் பரந்திருந்தது என்பதை முன்பு பார்த்தோம். அதற்கு வடக்கில் ஆப்ல்ஸ் மலைகளின் அடிவாரம் வரை வாழ்ந்து வந்தனர் கால்கள் (Gauls). அவர்களுக்கு மேற்கில்கடற்கரைக்கும் அதை ஒட்டியவாறு மேற்காகச் சென்ற கடற்கரை ஆல்ப்ஸுக்கும் (Maritime Alps) இடைப்பட்ட நீண்ட குறுகிய பிரதேசம் லிகூரியா (Liguria) என்றழைக்கப்பட்டது. அங்கு, வாழ்ந்த மக்கள் லிகூரியர்கள் எனப்பட்டனர்.

கால்களும் லிகூரியர்களும் ரோமின் ஆட்சியிலிருந்த எட்டூரியாவைப் பல்வேறு சமயங்களில் தாக்கி வந்தனர். ரோம் நகரம் வரையிலும்கூடச் சிற்சில வேளைகளில் அவர்கள் வந்தனர். கால்களில் ஒரு குலமான போய்களுடனும் (Boii) லிகூரியருடனும் கிட்டத்தட்ட ஒவ்வொரு ஆண்டும் ரோமானியப்படைகள் போரிட வேண்டியிருந்தது.

அவர்களின் தாக்குதல்கள் மட்டுமன்றி, ரோமின் ஆதிக்க ஆசையும் கூட இப்போர்களுக்குக் காரணமாயிருந்தது. போய்களுடனும் அவர்களது அண்டையரான இன்சுப்ரேக்களுடனும் (Insubres) ரோம் நடத்திய இடைவிடாத போர்கள் கி.மு. 220-ம் ஆண்டு வாக்கில் ரோமின் வெற்றியில் முடிவுற்றன. இதன் பின்னர் தான் போ நதியின் (Po) கரையில் சிசால்ப்பைன் காலில் கிரெமோனு (Cremona) பிளென்ஷியா (Placentia) ஆகிய இரண்டு குடியேற்றங்களை ரோம் நிறுவியது (கி.மு. 218).

பெட்ரீஷியர் மட்டுமே ரோமை ஆளுவது நின்று, பிளெபிய ருக்கும் சம அரசியல் உரிமைகள் கொடுக்கப்பட்ட பின்னர், இவர்கள் இருவருமே ஒரே வகுப்பினராயினர். செல்வம் நிறைந்த இவர்களின் குடும்பங்களில் சிலவற்றின் கையிலேயே ரோம் நகரின் ஆட்சி இருந்துவந்தது. இக்குடும்பங்களைச் சேர்ந்தவர்களே ஆண்டு தோறும் கான்சல்களாகவும் மற்ற அதிகாரிகளாகவும் தேர்ந்தெடுக் கப்பட்டனர். இவர்களே பின்னர் செனட்டிலும் உறுப்பினராயினர். தலைமை அதிகாரிகளாகவோ செனட்டர்களாகவோ ஆவதற்கு மற்றச் சாதாரணப் பெட்ரீஷியராலும் பிளெபியராலும் முடியாமற் போயிற்று.

இடைவிடாத போர்களின்போது பிடித்துவரப்பட்ட ஆண்களும் பெண்களும் அடிமைகளாக ஆக்கப்பட்டனர். கி. மு. மூன்றாம் நூற்றாண்டில் ரோம் அரசில் அடிமைகளின் தொகை வேகமாகப் பெருகியது. பணக்கார ரோமானியரின் பண்ணைகளை உழுது வேளாண்மை செய்யும் வேலைமுழுவதும் அடிமைகளின்மீது விழுந்தது. அவர்களின் எசமானர்கள் அரசியல், நிர்வாகம், பொழுதுபோக்கு ஆகியவற்றில் மட்டுமே நாட்டம் செலுத்தி ரோமில் வாழ்ந்தனர். இவ்வாறு அடிமைகளைக்கொண்ட, செல்வரின் குடியரசாக ரோம் மாறியது.

புதிய இடங்களை வென்றபோதெல்லாம் அங்குக் கைப்பற்றப் பட்ட நிலங்களைப் பணக்கார ரோமானியரே கவர்ந்துகொண்டனர். தமக்கும் அவற்றில் பங்கு தரவேண்டுமென்று கோரினர் ஏழை ரோமானியர்.

ரோம் செல்வம் கொழிக்கும் நகராயிற்று. அடிமைகளிடம் எல்லா வேலைகளையும் விட்டுவிட்டுப் பொழுதுபோக்கிய செல்வர் ஒருபுறமும், வேலை ஒன்றுமின்றி ரோமுக்கு வந்து அலைந்த சோம்பேறி ஏழைகள் மறுபுறமுமாக மக்கள் நெருக்கம் நிறைந்த நகராயிற்று ரோம். பகட்டுத்தன்மையும் தீமைகளும் மலிந்தன.

கிரேக்க மொழியும் இலக்கியமும் ரோமானியரால் விரும்பிப் படிக்கப்பட்டன. எட்ரஸ்க மொழிக்குப் பதிலாகக் கிரேக்க மொழிக்கு மிகுந்த மதிப்பு ஏற்பட்டது. கிரேக்க நாடகங்கள் லத்தீனில் மொழி பெயர்க்கப்பட்டு ரோமில் நடிக்கப்பட்டன. லிவியஸ் ஆண்ட்ரோ னிகஸ் (Livius Andronicus), நேவியஸ் (Naevius) ஆகிய இருவரும் இவ்வாறு கிரேக்க நாடகங்களை மொழிபெயர்த்துப் புகழீட்டினர் (சுமார் கி. மு. 240-35). வரலாறுகளும் முதன் முதலில் கிரேக்க மொழியிலேயே ரோமானியரால் எழுதப்பட்டன. முதன் முதலில்

லத்தீன் மொழியில் நூல் எழுதியவர் அப்பய்ஸ் கிளாடியஸ் சேசஸ் (Appius Claudius Caecus, சுமார் கி.மு. 312). ஆயினும் அடுத்த அறுபது, எழுபது ஆண்டுகளில் லத்தீனில் எந்த இலக்கியமும் எழுதப்படவில்லை. கி. மு. மூன்றாம் நூற்றாண்டின் மையம்வரை லத்தீன் மொழி சிறப்புப்பெறவில்லை என்பதை இது காட்டுகிறது.

செனெட்டின் நிலை: பிளெபியருக்கும் சம அரசியல் உரிமைகளை அளித்த பின்னர், செனெட்டின் அதிகாரம் ஓரளவு குன்றத் தொடங்கியது. தங்களின் ஆணைகளைச் செனெட் எதிர்த்த பல வேளைகளில் மக்களது ஆதரவைக் கோரிப் பெற்று, செனெட்டின் எதிர்ப்பை முறியடித்தனர் உயர் அதிகாரிகள். மேலும் கான்சல்களுக்கு மேலாகச் சர்வாதிகாரிகளைச் செனெட் அமர்த்துவதும் இப்பொழுது நின்றுபோயிற்று. எனினும், சில ஆண்டுகளுக்குப் பிறகு இரண்டாவது பியூனிக் போர், பின்னர் சமுதாயத்தில் ஏற்பட்ட வகுப்புப் பூசல்கள், ஆக்கிரமிப்புப் போர்கள் முதலிய பலவற்றின் காரணமாகச் செனெட்டின் அதிகாரம் மீண்டும் தலைதூக்கியது.

செனெட்டுக்கு எதிராகக் கான்சல்களின் அதிகாரம் இன்னும் கூடியது அவர்களையும்விட, டிரிபியூன்களின் அதிகாரமே மேலும் விரைவாகக் கூடியது, குலமன்றத்தைக் (Comitia Tributa) கூட்டுவதும், சட்டங்களை அதில் முன்மொழிவதும் டிரிபியூன்களின் வேலையாயிற்று. அது இயற்றும் சட்டங்களும் செனெட்டின் சட்டங்களைப்போலவே ரோமானியரால் மதித்து நடத்தப்படவேண்டும் என்று ஏற்கெனவே முடிவாகி இருந்ததால், செனெட்டின் எதிர்ப்புக்கு அஞ்சிய கான்சல்கள் டிரிபியூன்களிடம் சட்டமியற்றும் பொறுப்பை ஒப்படைத்து, குலமன்றத்தின்மூலம் சட்டங்கள் இயற்றி வந்தனர். எனவே செனெட்டுக்கு எதிராகத் தம் குறைகளைக் கேட்டு உணரக் கூடிய அதிகாரிகளாகட் டிரிபியூன்களை மக்கள் கருதினர். இந்நிலையில் அரசியலிலும் டிரிபியூன்கள் தலையிடத் தொடங்கியது இயற்கையே!

தொகை ஆண்டுதோறும் அதிகரித்து வந்ததால் இவர்களைக் கவனித்துக் கொள்வதற்கெனத்தனி அதிகாரி ஒருவரை நியமிக்க வேண்டியதாயிற்று. இவ்வாறு ஆண்டுதோறும் நியமிக்கப்பட்டவர்தான் 'பெரிகின் பிரேட்டர்' (Praetor Peregrinus). குடிமக்களுக்கும் பெரிகிரின்களுக்கு மிடையிலான வழக்குகளை விசாரித்து வந்தார் இவர்.

பெட்ரீஷியர் மட்டுமே ரோமை ஆளுவது நின்று, பிளெபியருக்கும் சம அரசியல் உரிமைகள் கொடுக்கப்பட்ட பின்னர் இவர்கள் இருவருமே ஒரே வகுப்பின ராயினர். செல்வம் நிறைந்த இவர்களது குடும்பங்களில் சிலவற்றின் கையிலேயே ரோம் நகரின் ஆட்சி இருந்துவந்தது. இக்குடும்பங்களைச் சேர்ந்தவர்களே ஆண்டுதோறும் கான்சல்களாகவும், மற்ற அதிகாரிகளாகவும் தேர்ந்தெடுக்கப்பட்டனர். இவர்களே பின்னர் செனேட்டிலும் உறுப்பினராயினர். தலைமை அதிகாரிகளாகவோ,செனேட்டர்களாகவோ ஆவதற்கு மற்றச் சாதாரண பெட்ரீஷியராலும் பிளெபியராலும் முடியாமற்போயிற்று.

இடைவிடாத போர்களின்போது பிடித்துவரப்பட்ட ஆண்களும் பெண்களும் அடிமைகளாக ஆக்கப்பட்டனர். கி.மு. மூன்றும் நூற்றாண்டில் ரோம் அரசில் அடிமைகளின் தொகை வேகமாகப் பெருகியது. பணக்கார ரோமானியரின் பண்ணைகளை உழுது விவசாயம் செய்யும் வேலை முழுவதும் அடிமைகளின்மீது விழுந்தன. அவர்களின் எசமானர்கள் அரசியல், நிர்வாகம், பொழுதுபோக்கு ஆகியவற்றில் மட்டுமே நாட்டம் செலுத்தி ரோமில் வாழ்ந்தனர். இவ்வாறு அடிமைகளைக்கொண்ட, செல்வரின் குடியரசாக ரோம் மாறியது.

புதிய இடங்களை வென்றபோதெல்லாம் அங்குக் கைப்பற்றப்பட்ட நிலங்களைப் பணக்கார ரோமானியரே கவர்ந்துகொண்டனர். தமக்கும் அவற்றில் பங்கு தரவேண்டுமென்று கோரினர் ஏழை ரோமானியர்.

ரோம் செல்வம் கொழிக்கும் நகராயிற்று. அடிமைகளிடம் எல்லா வேலைகளையும் விட்டுவிட்டுப் பொழுதுபோக்கிய செல்வர் ஒருபுறமும், வேலை ஒன்றுமின்றி ரோமுக்கு வந்து அலைந்த சோம்பேறி ஏழைகள் மறுபுறமுமாக மக்கள் நெருக்கம் நிறைந்த நகராயிற்று ரோம். ஆடம்பரமும் தீமைகளும் மலிந்தன.

கிரேக்க மொழியும் இலக்கியமும் ரோமானியரால் விரும்பிப் படிக்கப்பட்டன. எட்ரஸ்க மொழிக்குப் பதிலாக கிரேக்க

மொழிக்கு அதிக மதிப்பு ஏற்பட்டது. கிரேக்க நாடகங்கள் லத்தீனில் மொழி பெயர்க்கப்பட்டு, ரோமில் நடிக்கப்பட்டன. லிவியஸ் ஆன்ட்ரோனிக்ஸ் (Livius Andronicus), நேவியஸ் (Naevius) ஆகிய இருவரும் இவ்வாறு கிரேக்க நாடகங்களை மொழி பெயர்த்துப் புகழீட்டினர். (சுமார் கி.மு. 240–35) வரலாறுகளும் முதன் முதலில் கிரேக்க மொழியிலேயே ரோமானியரால் எழுதப்பட்டன. முதன் முதலில் லத்தீன் மொழியில் நூல் எழுதியவர் அப்பயஸ் கிளாடியஸ் சேசஸ் (Appius Claudius Caecus, சுமார் கி.மு. 312). ஆயினும் அடுத்த அறுபது, எழுபது ஆண்டுகளில் லத்தீனில் எந்த இலக்கியமும் எழுதப்படவில்லை. கி.மு. மூன்றும் நூற்றாண்டின் மையம் வரை லத்தீன் மொழி முக்கியத்துவம் பெறவில்லை என்பதை இது காட்டுகிறது.

செனேட்டின் நிலை : பிளெபியருக்கும் சம அரசியல் உரிமைகளை அளித்த பின்னர் செனேட்டின் அதிகாரம் ஓரளவு குன்றத் தொடங்கியது. தங்களது ஆணைகளைச் செனேட் எதிர்த்த பல வேளைகளில் மக்களது ஆதரவைக்கோரிப் பெற்று செனேட்டின் எதிர்ப்பை முறியடித்தனர் உயர் அதிகாரிகள். மேலும், கான்சல்களுக்கு மேலாகச் சர்வாதிகாரிகளை செனேட் நியமிப்பதும் இப்பொழுது நின்றுபோயிற்று. எனினும், சில ஆண்டுகளுக்குப் பிறகு, இரண்டாவது பியூனிக் போர், பின்னர் சமுதாயத்தில் ஏற்பட்ட வகுப்புப் பூசல்கள், ஆக்கிரமிப்புப் போர்கள் முதலிய பலவற்றின் காரணமாகச் செனேட்டின் அதிகாரம் மீண்டும் தலைதூக்கியது.

செனேட்டுக்கு எதிராகக்கான்சல்களின் அதிகாரம்கூடியது. அவர்களையும்விட டிரிபியூன்களின் அதிகாரமே மேலும் வேகமாகக் கூடியது. குல மன்றத்தைக் (Comitia Tributa) கூட்டுவதும், சட்டங்களை அதில் முன்மொழிவதும் டிரிபியூன்களின் வேலையாயிற்று. அது இயற்றும் சட்டங்களும் செனேட்டின் சட்டங்களைப்போலவே ரோமானியரால் மதித்து நடக்கப்பட வேண்டும் என்று ஏற்கெனவே முடிவாகி இருந்ததால், செனேட்டின் எதிர்ப்புக்கஞ்சிய கான்சல்கள் டிரிபியூன்களிடம் சட்டமியற்றும் பொறுப்பை ஒப்படைத்து, குலமன்றத்தின்மூலம் சட்டங்கள் இயற்றிவந்தனர். எனவே, செனேட்டுக்கு எதிராகத் தமது குறைகளைக் கேட்டு உணரக்கூடிய அதிகாரிகளாக டிரிபியூன்களை மக்கள் கருதினர். இந்நிலையில் அரசியலிலும் டிரிபியூன்கள் தலையிடத் தொடங்கியது இயற்கையே!

10. இரண்டாவது பியூனிக் போர்

(கி.மு. 218-204)

செழிப்பான மண்ணும், திராட்சை, ஆரஞ்சு, ஆலிவ் ஆகிய தோட்டங்களும், செல்வம் கொழித்த கிரேக்க வாணிக நகரங்களும் நிறைந்த சிசிலித் தீவை, முதலாவது பியூனிக் போர் மூலம் அடைந்தது ரோம். ஸ்பெயினைக் கைப்பற்றுவதற்கென நடைபெற்றது இரண்டாவது போர். ஸ்பெயினைக் கைப்பற்றியதும், இரண்டாவது பியூனிக் போரின் விளைவாக மாசிடோனியாமீது ரோம் படையெடுக்க வேண்டியதாயிற்று; பின்னர் கிரீசையும் தன்னுதிக்கத்தில் கொண்டுவந்தது. கிரீசைக் கைப்பற்றிய தால் சிரியாவுடன் மோதல்கள் ஏற்பட்டன. பின்னர் ஆசியாவிலும் அதன் ஆதிக்கம் விரிவடைந்தது. மேலும், ஸ்பெயினுடன் நல்ல தரைவழித் தொடர்புகளைக் கொள்வதற்கென இன்றைய பிரான்சின் தென்பகுதியையும் (Gallia Nabonensia) கைப்பற்ற வேண்டியதாயிற்று. இவ்வாறு இரண்டாவது பியூனிக் போரின் முடிவுக்குப்பிறகு ஒரே நூற்றாண்டில் ரைன் நதிக்கும் டான்யூப் நதிக்கும் தெற்கிலான ஐரோப்பா முழுவதையும், மத்தியதரைக்கடல் தீவுகளையும், ஆப்பிரிக்காவின் வடக்குக்கரையையும், ஆசியாமைனரையும் சிரியாவையும் தன் ஆட்சியின் கீழ்க் கொண்டுவந்தது ரோம். இவ்வளவு முக்கியத்துவம் வாய்ந்தது இரண்டாவது பியூனிக் போர்.

போருக்குக் காரணங்கள்: சார்டினியா, சிசிலி, கார்சிகா ஆகியவற்றை இழந்ததால், கார்த்தேஜின் வாணிகம் பெரிதும் பாதிக்கப்பட்டது மட்டுமன்றி, அதன் செல்வாக்கும் குன்றியது. எனவே, புதிய பிரதேசங்களைக் கைப்பற்ற எண்ணங் கொண்டது. ஸ்பெயின்மீது அதன் கவனம் சென்றது. வட ஆப்பிரிக்காவிலிருந்து ஸ்பெயினை எட்டுவது வெகு எளிதாயிருந்தது. ஏற்கெனவே தமது குடியேற்றங்களையும் பண்டக சாலைகளையும் அங்கு நிறுவியிருந்தனர் கார்த்தேஜியர். அது

பியூனிக் போர்கள்
கி.மு.264ல் பியூனிக் போரின் எல்லை
இலிரியா
ஹிஸ்பேரல்
கோர்சைரா
சிசிலி
சிராகூஸ்
எக்னேமஸ்
ரோம்
போ
மலியா
கார்சிகா
சார்டினியா
கார்தேஜ்
கால்
ரோன் நதி
ஹன்னிபால்
ஸ்பெயின்
கிரேக்க மலைகள்
ஆல்ப்ஸ்
டைபர் நதி
டைபர்
சிசிலி
சார்டினியா
துனிசியா

வரை ரோமானியரின் பார்வை ஸ்பெயினின்மீது விழவில்லை அதன் வடகிழக்கில் இருந்த டெராக்கோ (Tarraco) நகருடன் மட்டுமே வாணிபத் தொடர்புகளைக் கொண்டிருந்தது ரோம். இவ்வாறு ரோமின் பார்வையிலிருந்து விலகி இருந்த ஸ்பெயினில், கார்த்தேஜ் தனது ஆதிக்கத்தைப் பரப்ப முடிவு செய்தது.

எனவே, ஜிப்ரால்டர் வரையில் வட ஆப்பிரிக்காவின் கரைப் பகுதியைக் கைப்பற்றி, ஸ்பெயினில் நுழைந்து, கார்த்தேஜின் ஆதிக்கத்தை அங்கு நிறுவுவதற்கென, கி.மு. 238-ல் ஹேமில்கர் பார்க்கா ஒரு படையுடன் அனுப்பப்பட்டார். விடாமுயற்சியும் நாட்டுப்பற்றும் கொண்ட அவர், தம் மகன் ஹேனிபால் (Hannibal) என்ற சிறுவனையும் தன்னோடு அழைத்துச் சென்று, தமது முயற்சிகளில் வெற்றி பெற்றுத் தென் ஸ்பெயினில் கார்த்தேஜின் ஆதிக்கத்தை நன்கு நிறுவினர். நல்ல முறையில் ஆட்சி நடத்தி, தமது போர் வீரர்களை அங்கேயே குடியேறுமாறும் சுதேசிமக்களை மணந்து கொள்ளுமாறும் செய்த அவர், கி.மு. 229-ல் ஒரு போரில் இறந்து விட்டார்.

அப்பொழுது ஹேனிபாலுக்கு இருபது வயதுகூட ஆகவில்லை. எனவே, ஹேமில்கரின் மருமகனான ஹேஸ்ட்ருபால் (Hasdrubal) ஆட்சிப் பொறுப்பை மேற்கொண்டார் (கி.மு. 229-21). கார்த்தேஜிய ஸ்பெயினின் தலைநகரான 'புதிய கார்த்தேஜ்' (Carthago Nova) இவர் காலத்தில் தான் நிறுவப்பட்டது. இவரது மரணத்துக்குப் பின், ஹேனிபாலையே புதிய தலைவராகத் தேர்ந்தெடுத்தனர் படைவீரர்கள். அப்பொழுது அவருக்கு வயது இருபத்தேழுதான். எனினும், அவரது போர்த் திறமையும் வீரமும் படை வீரர்களின் மனத்தை வெகுவாகக் கவர்ந்திருந்தன. எனவேதான், கார்த்தேஜியிலிருந்த தமது அரசாங்கத்தின் ஆணைக்காகக் காத்திராமல் அவரைத் தேர்ந்தெடுத்தனர். இந்தத் தேர்ந்தெடுப்பு பின்னர் கார்த்தேஜ் அரசாங்கத்தாரால் ஏற்றுக்கொள்ளப்பட்டது.

ஸ்பெயினில் கார்த்தேஜின் ஆதிக்கம் வளர்ந்து வருவதைக் கண்டு பொறுமையுறத் துவங்கியது ரோம்; டெராக்கோ நகருடன் தனது வாணிப உறவுக்கு இதனால் ஆபத்து நேரக் கூடும் என அஞ்சியது. ஆயினும், அப்பொழுது இலீரியர், போய்கள் ஆகியோருடன் அது போர்களில் ஈடுபட்டிருந்ததால் உடனடியாக ஒன்றையும் அதனால் செய்ய முடியவில்லை. எப்ரோ (Ebro) என்ற நதிக்கு வடக்கே படையுடன் செல்

வதில்லை என்ற உறுதிமொழியை மட்டும் ஹேஸ்ட்ரு பாலிடம் பெற்றுக்கொண்டது. ஆனால், அதேசமயம் எப்ரோவுக்குத் தெற்கில் வெகு தூரம் தள்ளிக் கார்த்தேஜின் ஆதிக்க மண்டலத்திலிருந்த சகுண்ட்டம் (Saugntum) என்ற நகரோடு ஒரு இராணுவ உடன்படிக்கையை ரோம் செய்து கொண்டது. தனது புதிய 'நண்பனை' சகுண்ட்டத்தைக் காப்பதற்கென்று சொல்லிக் கார்த்தேஜுடன் பின்னர் போரில் ஈடுபடுவதற்கென்றே இந்த வாய்ப்பை உருவாக்கிக் கொண்டது,

தன்னுட்டுக்கெதிராக இழைத்த அநீதிகளுக்குப் பழிக்குப் பழி வாங்குவதையே ஹேனிபால்தன்நோக்கமாகக்கொண்டிருந்தார். அவரது வாழ்வின் இலட்சியமாக அமைந்திருந்தது அந்நோக்கம். ஹேமில்கர் பார்க்கா ஸ்பெயினுக்குப் புறப்படுவதற்கு முன்னால் ஒன்பதே வயது முடிந்திருந்த ஹேனிபாலை ஒரு ஆலயத்துக்கு அழைத்துச் சென்று, ரோமுடன் தனது மரணம்வரை பகைமை பாராட்டுவதாகவும், கார்த்தேஜுக்கு இழைக்கப்பட்ட கொடுமைகளைத் துடைத்தெறியும் பணியில் தன் வாழ்நாள் முழுவதையும் அர்ப்பணிப்பதாகவும் சபதம் செய்யும்படி கூறியதாகச் சொல்லப்படுகிறது. அந்தச் சபதத்துக்குப் பின்னரே ஸ்பெயினுக்கு அவரை அழைத்துச் சென்ற ராம் அவரது தந்தை; இவ்வாறு ரோமுடன் மீண்டும் போர் துவக்குவதையே இலட்சியமாகக் கொண்ட ஹேனிபாலிடம் அப்பொழுது ஒரு சிறந்த படை - போர்களில் நன்கு பயிற்சி பெற்ற படை இருந்தது. இந்நிலையில் தமது பகையான ரோமுடன் நெருங்கிய உறவு பூண்ட நகரம் ஒன்று தமது ஆதிக்க மண்டலத்தில் இருப்பதை அவரால் பொறுக்க முடியவில்லை;

அச்சமயத்தில் சகுண்ட்டத்திலும் இரண்டு கட்சிகள் இருந்தன.அவற்றுள் ஒன்றுரோமை ஆதரித்தது; மற்றது கார்த்தேஜை ஆதரித்தது; இவர்களுக்கிடையில் கடுமையான மோதல்கள் அடிக்கடி ஏற்பட்டு வந்தன. இறுதியில் ரோமை ஆதரித்த கட்சியானது உதவிகோரி ரோமுக்கு ஆளனுப்பியது. இவ்வாறு சகுண்ட்டத்துக்கு வந்த ரோமின் ஆட்களுள்சிலர், கார்த்தேஜை ஆதரித்த கட்சியினரைத் தாக்கினர். உடனே அவர்கள் ஹேனிபாலின் உதவியைக் கோரினர்.

சகுண்ட்டத்தின்மீது படையெடுக்கத் திட்டமிட்டார் ஹேனிபால். இதையறிந்த ரோம், படையெடுப்பு முயற்சிகளை ஹேனிபால் கைவிடவேண்டுமென்று ஒருதூதரை அனுப்பி எச்சரித்தது (கி.மு. 220). இஸ்பெரியாவில் மீண்டும் போரில்

ஈடுபட்டிருந்த ரோம் அப்பொழுது படை ஒன்றையும் ஸ்பெயினுக்கு அனுப்ப இயலவில்லை. ஏழுமாத முற்றுகைக்குப் பிறகு கடுமையான எதிர்ப்புகளை முறியடித்து கி.மு. 219-ல் சகுண்டத்தைக் கைப்பற்றினர் ஹேனிபால்.

உடனேஃபேபியஸ் மாக்சிமஸ் (Fabius Maximus) என்பவரின் தலைமையில் கார்த்தேஜுக்கு ஒரு தூதுக்குழுவை அனுப்பியது ரோம். ஹேனிபாலையும் அவரது அதிகாரிகளையும் தன்னிடம் ஒப்படைக்கவேண்டுமென்றும், அவரது செயல்களுக்காகக் கார்த்தேஜ் மன்னிப்புக் கோரவேண்டுமென்றும், போர் இழப்பீடு தரவேண்டுமென்றும் கோரியது ரோம். கார்த்தேஜின் பதில் வாதங்களையெல்லாம் ரோமானியத் தூதர்கள் கேட்பதற்குத் தயாராயில்லை. கார்த்தேஜியின் செனேட்டில் மாக்சிமஸ் நடந்துகொண்ட விதம்பற்றிக் கதைகள் கூறப்படுகின்றன. தனது 'டோகா' (toga) என்ற ஆடையின் மேற் பகுதியை மடித்துப் பிடித்துக்கொண்டு அதைக்காட்டியவாறே "நான் போர், அமைதி ஆகிய இரண்டையும் ரோமிலிருந்து கொண்டுவந்துள்ளேன். உங்களுக்கு எதுவேண்டும்?" என்று சத்தமிட்டாராம். "உங்களுக்கு எதுவிருப்பமோ அதைக் கொடுங்கள்" என்று பதிலுக்கு கூச்சலிட்டனராம் கார்த்தேஜின் செனேட்டர்கள். "போரைக் கொடுக்கிறேன்", என்று சொல்லித்தனது டோகாவின் மடிப்பை உதறினராம். சரி என்று செனேட்டர்களும் கத்தினர்களாம். இவ்வாறு இரண்டாவது பியூனிக் போர் தொடங்கியது.

முதல் கட்டம் : கி. மு. 218-216 இருதரப்பினருமே போருக்கென முழுமூச்சுடன் ஆயத்தங்களை மேற்கொண்டனர். ஸ்பெயின், ஆப்பிரிக்கா ஆகிய இரு இடங்களிலுமே போர்களை நடத்துவதற்கு ஏற்பாடுகளைச் செய்தது ரோம். கான்சல்களில் ஒருவரான கொர்னீலியஸ் சிப்பியோ (Cornelius scipio) என்பவரின் தலைமையில் கடல்வழியாக ஒருபடையை ஸ்பெயினுக்கு அனுப்புவதென்றும், சிசிலியிலிருந்து ஆப்பிரிக்காமீது படையெடுப்பதென்றும் முடிவு செய்யப்பட்டது.

ஆனால், ஹேனிபாலின் போர் நடவடிக்கைகள் ரோமானியரின் திட்டத்தைக் குலைத்தன. நன்கு சிந்தனைசெய்து தமது திட்டத்தை உருவாக்கி இருந்தார் ஹேனிபால். கால்கள் வசித்த தெற்குப் பிரான்சின் வழியாகச் சென்று ஆல்ப்ஸ் மலைகளைக் கடந்து இத்தாலிக்குள் நுழைந்து சிசால்ப்பைன் காலில் வசித்த கால் குலங்களையும் தனக்கு ஆதரவாகத் திரட்டிக்கொண்டு ரோமைத் தாக்குவது என அவர் திட்டமிட்டார். ஆல்ப்ஸ் மலை

கலைக் கடப்பது கடினம் என்பது அவருக்குத் தெரியும்; எனினும், கால்குலங்கள் பல கடந்த காலத்தில் அவற்றைக் கடந்து இத்தாலிக்குள் சென்று குடியேறியதையும் அவர் அறிவார்; மேலும், கால்களின் உதவி இல்லாமல் ரோமைத் தனித்துத் தாக்குவது இயலாது என்பதையும் அவர் உணர்ந்தார். எனவே, கடல் வழியாகச் செல்லாமல் தரை வழியாகச் செல்வதெனத் திட்டமிட்டார்.

ரோமானியப் படை ஒன்று சிசிலிக்குச் சென்றது. கொர்னீலியஸ் சிப்பியோவும் ஸ்பெயினுக்குக் கப்பலேறத் தயாரானார். ஆனால் அச்சமயத்தில், கால் குலங்களில் ஒன்றான போய்கள் (Boii) ரோமின் குடியேற்றங்களான கிரெமோனாவையும் பிளெசென்ஷியாவையும் தாக்கினர். இதனால் சிப்பியோவின் புறப்பாடு தாமதப்பட்டது. அவரது படையில் ஒரு பகுதியை அழைத்துக் கொண்டு கயஸ் அட்டிலியஸ் (Gaius Atilius) என்ற பிரேட்டர் ஒருவர் போய்களுக் கெதிராகப் புறப்பட்டார். எனவே, இரண்டு புதிய லீஜின்கள் (Legions – லீஜின் என்பது 4500 ஆட்களைக் கொண்டது) திரட்டப்படும் வரை மோர்னிலியஸ் சிப்பியோ காத்திருக்க வேண்டியதாயிற்று.

இவ்வாறு காலதாமதத்திற்குப் பிறகு ஸ்பெயினுக்குச் செல்லும் வழியில் ரோநதியின் (Rhone) கழிமுகத்தில் கரையிறங்கியபோது, பிரனீஸ் மலைகளைக் கடந்து இத்தாலியை நோக்கி ஹேனிபால் புறப்பட்டு விட்ட செய்தி அறிந்து திடுக்கிட்டார். உடனே, பகைவரின் நடமாட்டத்தை அறிந்து வருவதற்கெனச் சில குதிரை வீரர்களை அனுப்பினர். அதேபோல் சிப்பியோவின் நடமாட்டத்தை அறிவதற்கென ஹேனிபாலால் அனுப்பப்பட்ட குதிரை வீரர்களும் அங்கு எதிர்ப்பட்டனர். இரு தரப்பினருக்கும் சிறிய கைக்கலப்பு ஒன்று ஏற்பட்டது. அதில் வென்று ஹேனிபாலின் படை முகாமைக் கண்டு, சிப்பியோவுக்குச் செய்தி கொண்டு வந்தனர் அவரது குதிரை வீரர்கள். ஹேனிபாலின் முகாமை நோக்கி விரைந்தார் சிப்பியோ. ஆனால், மூன்று நாட்களுக்கு முன்னரே ஹேனிபால் அங்கிருந்து போய்விட்டிருந்தார்.

உடனே, அவரது படை கடற்கரைக்கு விரைந்தது. தமது கப்பல்களில் பெரும்பகுதியைத் தம் தம்பியிடம் ஒப்படைத்து ஸ்பெயினுக்குச் செல்லும்படி கூறிவிட்டு, சிப்பியோ மட்டும் இத்தாலிக்குத் திரும்பினர். அங்குப் பிரேட்டர் அட்டிலியஸின் வசமிருந்த துருப்புகளை அழைத்துக் கொண்டு, போ (Po) நதி

யைக் கடந்து, டிசீனஸ் (Ticinus) என்ற நதிக்கரையில் ஹேனிபாலை எதிர் நோக்கிக் காத்திருந்தார் சிப்பியோ.

இதற்கிடையில் ஹேனிபால் தமது படைகளுடன் மிகுந்த சிரமத்தோடு ஆல்ப்ஸ் மலைகளைக் கடந்தார். பனிமூடிய, செங்குத்தான, உயர்ந்த அம்மலைத் தொடரைக் கடக்கும்பொழுது ஏராளமான ஆட்சேதம் ஏற்பட்டது. அங்கு வசித்த மலைவாழ் குலங்களோடும் அவர்போரிடவேண்டியதாயிருந்தது. 50,000 பேர் களைக் கொண்ட தரைப்படையையும் 9,000 குதிரை வீரர்களையும் ஆரம்பத்தில் கொண்டிருந்த ஹேனிபால், வட இத்தாலியின் சமவெளிப் பகுதியை அடைந்தபொழுது 2,000 தரைப்படை யாளரையும் 6,000 குதிரை வீரர்களையும் மட்டுமே கொண் டிருந்தார்.

இத்தகைய பெருத்த நஷ்டத்தோடு வட இத்தாலியை அடைந்த உடனேயே டௌரின்கள் (Taurini) என்ற மக்க ளோடும் அவர் போரிட வேண்டியிருந்தது. அவர்களையெல் லாம் முறியடித்து, அவர்களது முக்கிய நகரான டூரீனைக் (Turin) கைப்பற்றிய பின்னர்தான், அவர்தம் எதிர்ப்பு நின்றது. பின்னர் போநதியின் இடக்கரை ஓரமாகப் படையை நடத்திச் சென்று சிப்பியோ இருந்த இடத்துக்கு வந்தார். ஹேனிபால் ஆல்ப்ஸைக் கடந்து சமவெளிக்கு சென்று சேர்ந்த உடனேயே அச்செய்தி காட்டுதீபோல்எங்கும்பரவியது. இவ்வாறுசெய்தியை அறிந்த சிப்பியோவும் போருக்குத் தயாராகவே காத்திருந்தார். ஆயினும், கி.மு. 217-ல் நடந்த ஒரு கைக் கலப்பில் ரோமா னியப் படைகள் தோற்றுப் பின்வாங்க வேண்டியதாயிற்று. சிப்பியோவும் காயமுற்றார். ஆனால், அவரது மகனான பப்ளியஸ் (Publius) மிகுந்த தைரியத்துடன் ரோமானியப் படைகளை மீட்டுக்கொண்டு, போநதியைக் கடந்து பாலங்களைத் தகர்த்து, பகைவர் பின்தொடராமல் பார்த்துக்கொண்டார். டிசீனஸ் நதிக்கரையில் கிட்டியதுதான் ஹேனிபாலின் முதல் இத்தாலிய வெற்றியாகும். டிசீனிஸ் ஆற்றங்கரைப் போரில் சிறியதாயினும் பயிற்சி மிக்க படை ஒன்று தலைசிறந்த படைத் தலைவரின்கீழ் என்னசெய்ய முடியும் என்பதை கார்த்தேஜினர் ரோமானிய ருக்குக் காட்டினர்.

தோற்றோடிய ரோமானியப் படையைத் தேடித் திரிந்தார் ஹேனிபால். வேறொரு இடத்தில் போ நதியைக்கடந்து, அதன் தெற்கு உபநதிகளில் ஒன்றான டிரீபியாவை (Trebia) அடைந்த போது, அங்கு ரோமானியப் படையைக்கண்டார். ஹேனிபாலை எதிர்ப்பதற்கெனச்சிசிலியிலிருந்து திரும்பிவந்த மற்றொரு கான்ச-

லான செம்ப்ரோனியஸும் (Sempronius), கொர்னீலியஸ் சிப்பியோவும் ஒரு பெரும்படையோடு அங்குத் தங்கி யிருந்தனர்.

போரில் ஹேனிபாலின் திறமையை நன்கு அறிந்திருந்த சிப்பியோ, அவருடன் நேரடி மோதலைத் தவிர்க்க விரும்பினர். ஆனால், உடனடியாகப் போரில் ஈடுபட விரும்பினர் செம்ப்ரோனியஸ். மழையும்கடுங்குளிரும்மிகுந்தநாள்ஒன்றில்ரோமானியப்படைகள் டிரீபியா நதியைக் கடந்தன. களைப்பு, பசி, குளிர் ஆகியவற்றால் தளர்ந்துபோயிருந்த ரோமானியரை ஹேனிபாலின் படைகள் சிதரடித்தன (கி.மு. 217). ஆயினும், ரோமானியப்படைகள் போர்க்களத்திலிருந்து ஓடிப் பிளெ சென்ஷியாவுக்குச் சென்று அங்கிருந்த கோட்டையில் ஒளிந்துகொண்டன. அங்கு ஓராண்டுக் காலம் இரு படைகளுக்கு மிடையில் சிறுசிறு மோதல்கள் ஏற்பட்டன. டிரிபியா களத்திற்குப்பிறகு சிசால் பைன்காலில் ரோமானியர் ஆதிக்கம் குலைந்தது எனலாம். கால்களும் ஹேனிபாலும் சேர்ந்துகொண்டனர்.

ரோமில் பரபரப்பு: இந்த இரு தோல்விகளும் ரோமில் பெரும் கலவரத்தை ஏற்படுத்தின. பெரும் செல்வர்களை மட்டுமே கொண்ட செனேட்டுக்கு எதிராகக் கிளர்ச்சி நடைபெற்றது. தமது வாணிக இலாபம் ஒன்றுதான் செனேட்டர்களின் குறிக்கோள் என்று எதிர்க்கட்சியினர் குறைகூறினர். எனவே, கப்பல் தொழிலில் ஒரு செனேட்டருக்கு இருக்க வேண்டிய பங்குகளைக் (Shares) குறைக்கும் சட்டம் ஒன்று இயற்றப்பட்டது. மேலும் இக்கிளர்ச்சிக்குத் தலைமை தாங்கி, செனேட்டை ஆரம்ப முதலே எதிர்த்து வந்த பிளெமீனியஸ் (Flaminius) என்பவர் அடுத்த கான்சலாகத் தேர்ந்தெடுக்கப்பட்டு, வட இத்தாலிக்குப் படையுடன் சென்றார்.

ஹேனிபால் எதிர்பார்த்ததைப் போலவே அவருக்கு வட இத்தாலியில் கால்களின் உதவி கிடைத்தது. அதை வைத்து ரோமானியர்களை முறியடித்தது மல்லாமல், லிகூரியாவையும் அவர் கைப்பற்றினர். வடக்கிலிருந்த ரோமானியக் குடியேற்றங்கள் அனைத்துமே ஒன்றன்பின் ஒன்றாக அவரால் பிடிக்கப்பட்டன. பின்னர் அங்கிருந்து மிகவும் சிரமத்தோடு அப்பெனின் மலைகளையும் கடந்து ஆர்னே நதி (Arno) பள்ளத்தாக்கிற்கு வந்தார். அங்குப் பெருக்கெடுத்தோடிய வெள்ளத்திலும், வீசிய பனிக்கட்டி மழையிலும் சிக்கி அவதியுற்றது அவரது படை. ஹேனிபாலும் நோய்வாய்ப்பட்டு, ஒரு கண் பார்வையை இழந்தார்.

மீண்டும் தோல்விகள்: பிளெமீனியஸ் அப்பெனின் மலைகட்கு அப்பால் இருந்த அர்ரேடியம் (Arretium) என்ற விடத்தில் ஹேனிபாலை எதிர்பார்த்துக் காத்திருந்தார். தொடர்ச்சியாய்ப் போர்களில் ஈடுபட விரும்பாத கால்கள் ஹேனிபாலின் போர்களில் அக்கரை இழந்தனர். இவ்வாறு சுருங்கி வந்த தமது படையை வைத்து, போர்த் தந்திரங்களை மேற்கொண்டு ரோமானியப் படையை முறியடிக்க முடிவுசெய்தார் ஹேனிபால்.

பலத்த கோட்டையை உடைய அர்ரேட்டியத்தை நோக்கிச்செல்லாமல், அதைச் சுற்றிக்கொண்டு தென்பகுதிக்கு வந்து சேர்ந்தார் ஹேனிபால் அர்ரேட்டியத்திலிருந்து ரோமாபுரிக்குச் செல்லும்பாதை இதனால் துண்டிக்கப்பட்டது. இதையறிந்த பிளெமீனியஸ் தனது அதிகாரிகளின் ஆலோசனைகளை அலட்சியம் செய்து ஹேனிபாலைத் துரத்திக்கொண்டு புறப்பட்டார்.

அர்ரேடியத்திலிருந்து ரோமுக்குச் செல்லும் பாதையானது கார்ட்டோனை (Cortona), பெரூஷியா (Perusia) ஆகிய இரண்டு இடங்களுக்கு இடையில் **டிராசிமீன்** (Trasimene) என்ற ஏரியின் வடகரை ஓரமாகச் சிறிதுதூரம் சென்றது. மற்ற மூன்று திசைகளிலும் குன்றுகள் அப்பாதையைச் சூழ்ந்து கிடந்தன. அவற்றிலிருந்த ஒரு குறுகிய கணவாய் வழியாகவே ஏரிக்கரையை அடைந்து, அதுபோலவே மற்றொரு கணவாயின் வழியாகவே ஏரிக்கரையை விட்டு எதிர்த்திசையில் வெளியே சென்றது அச்சாலை. இவ்வாறு மூன்று பக்கம் குன்றுகளாலும் ஒரு பக்கம் ஏரியாலும் சூழப்பட்ட பாதையைத் தனது அடுத்த போர்க்களமாகப் பயன்படுத்தத் திட்டமிட்டார் ஹேனிபால். பிளெமீனியஸின் தலைமையிலான ரோமானியப்படை உள்ளே வருவதற்கென மேற்குக் கணவாயை மட்டும் அடைக்காமல் திறந்துவைத்தார். அங்கிருந்து வெளியேறுவதற்கான கிழக்குக் கணவாயை அடைத்து நின்றனர் அவரது படையினர். அவர்களில் ஒரு பகுதியினர் சாலை நெடுகிலுமிருந்த குன்றுகளில் பதுங்கியிருந்தனர். மேலைவாயிலினுள் நுழைந்து ரோமானியப் படையினர் உள்ளே வந்த உடனேயே அதையும் மூடி விடுவதற்கென ஹேனிபாலின் குதிரைப்படை தயாராயிருந்தது.

ஹேனிபாலின் படையைத் துரத்திச்சென்று பிடித்து விட வேண்டுமென்று வேகமாக வந்துகொண்டிருந்தது ரோமானியப் படை கி.மு. 217-ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம். ஏரிமீதும் பாதைமீதும் மூடுபனி கவிந்து ரோமானியரின் பார்வையை மறைத்தது. இவ்வாறு பகைவர்கள் மேலைக் கணவாயைத் தாண்டிப் பாதைக்குள் நுழைந்த உடனேயே, ஹேனிபாலின்

குதிரை வீரர்கள் அக்கணவாயை அடைத்து நின்றனர். ரோமானியப்படை சூழ்ந்து கொள்ளப்பட்டது. பகைவரைத் தாக்குவதற்கோ, தப்பித்து ஓடுவதற்கோ வழியில்லாமல் ரோமானியப் படை அழிக்கப்பட்டது. பிளெமீனியஸும் கொல்லப்பட்டார். 15,000 ரோமானியப் போர்வீரர்கள் சிறைபிடிக்கப்பட்டனர். தப்பித்து ஓடிய 6,000 பேரை ஹேனிபாலின் தளபதிகளில் ஒருவர் துரத்திச்சென்று அடுத்த நாள் பிடித்து வந்தார்.

வடக்கில் அரீமினம் (Ariminum) என்ற இடத்திலிருந்த மற்றொரு கான்சலான செர்வீலியஸுக்கு (Servilius) டிராசிமீன் போர்பற்றிய செய்தி எட்டியது. உடனே அவர் சென்ட்டீனியஸ் (Centenius) என்ற தளபதியின் தலைமையில் 4,000 பேர்களைக் கொண்ட குதிரைப் படை ஒன்றை விரைந்து அனுப்பினார். ரோம் நகரை நோக்கிப் பகைவர் முன்னேறுவதைத் தடுப்பதற்கென அனுப்பப்பட்டது அப்படை. ஆனால், அம்பிரியாவில் அதையும் அழித்தொழித்தார் ஹேனிபால். அதற்கு மேலும் தோல்வியைத் தழுவிக்கொள்ள விரும்பாத செர்வீலியஸ் செய்வதறியாது கலங்கிப்போனார்.

தென் இத்தாலியில் ஹேனிபால்; ரோமாபுரிக்குச் செல்லும் பாதையில் ஹேனிபாலை எதிர்க்கக்கூடிய படை ஒன்றும் அப்பொழுது இல்லை. தமது நகர்மீதுதான் அடுத்த தாக்குதல் தொடுக்கப்படப் போகிறது என்று அஞ்சிக்கொண்டிருந்தனர் ரோமானியர். ரோமில் தற்காப்பு நடவடிக்கைகள் அனைத்தும் மேற்கொள்ளப்பட்டன.

ஆனால், அம்பீரியாவழியாகச் சென்று பிசினத்தில் புகுந்து அம்பூலியாவின் எல்லையிலிருந்த (Arpi) ஏர்ப்பிக்குச் சென்றார் ஹேனிபால். ஒரு பெரிய நகரத்தை நீண்ட நாட்கள் முற்றுகையிட்டுக் கைப்பற்றக்கூடிய படை வலியோ அல்லது போர்க் கருவிகளோ அல்லது இத்தாலிய மக்களின் ஆதரவோ தம் பக்கம் இல்லை என்பதை அவர் உணர்ந்திருந்தார். எனவேதான், ரோம்நகரைத் தாக்காமல், தென் இத்தாலிக்கு அவர் செல்லவேண்டியதாயிற்று. ரோமின் ஆதிக்கத்துக்கெதிராக இதர இத்தாலிய அரசுகளைத் தூண்டிவிடுவதுதான் அவரது திட்டம். ஆனால், அதுவரை எந்த இத்தாலிய அரசும் (கால்களைத் தவிர) ரோமுக்கு எதிராக அவரோடு சேர முன்வரவில்லை.

இதற்கிடையில் தோல்விமேல் தோல்வியுற்று வந்த ரோம் பேபியஸ்மாக்சிமஸ் (Fabius mazimus) என்பவரைச்சர்வாதிகாரி

யாக்கத் தேர்ந்தெடுத்தது. அவர் புதிய போர்முறை ஒன்றைப் பின்பற்ற முடிவு செய்தார். ஹேனிபாலுட்ன் நேரடியான மோதல் எதிலும் ஈடுபடாமல், அவரது படையைப் பின் தொடர்ந்து சென்று, அங்கு மிங்கும் தனித் தனியாகச் சிதறிச் செல்லும் அவரது படை வீரர்களைப் பிடித்துக் கொல்லுவது தான் அவரது எண்ணம். எனவேதான், 'தாமதிப்பவர்' (Cunctator) என்ற பெயர் அவருக்கு ஏற்பட்டது. ஃபேபியஸைப் போருக்கிழுப்பதற்கெனப் பல முயற்சிகளை மேற்கொண்டார் ஹேனிபால். வேண்டுமென்றேபல்வேறுதிசைகளிலும்படையை நடத்திச் சென்றார்; கொள்ளையிலும் தீயிடலிலும் ஈடுபட்டார். ஆனால், ஃபேபியஸ் தனது பொறுமையைக் கைவிடவில்லை. சாம்னியம், கம்பேனியா ஆகிய மாநிலங்கள் வழியாகக் கொள்ளையிட்டுச் சென்ற பகைவரை அவர் பொறுமையோடு பின் தொடர்ந்தார்.

கம்பேனியாவில் டிபேடா (Tifata) என்ற குன்றுக்கும் வால்டர்னஸ் (Volturnus) என்ற ஆற்றுக்கும் இடையில் சென்ற ஒரு குறுகலான கணவாய்ப் பாதையின் வழியாக ஹேனிபால் சென்றபோது அவரைச் சுற்றி வளைத்துக் கொண்டார் ஃபேபியஸ். ஹேனிபாலுக்கு வழிகாட்டியாக வந்த இத்தாலியரது தவறுதான் இதற்குக் காரணம். ஆயினும், ஹேனிபால் ஒரு தந்திரத்தை மேற்கொண்டார். அன்றைய இருண்ட இரவில் சுமார் 2000 மாடுகளின் கொம்புகளில் தீப்பந்தங்களைக் கட்டிக் குன்றின் பக்கம் ஓடவிட்டார். அவற்றைத் தொடர்ந்து அவரது படையினர் சிலரும் பெருத்த ஆரவார மிட்டுக் கொண்டு அத்திசையில் ஓடினர். பகைவர்கள் குன்றின்மீது ஏறித் தப்பித்துச் செல்ல முயல்கிறார்கள் என்று எண்ணினர் ரோமானியர். கணவாயின் வாயிலைக் காத்து நின்ற 4,000 ரோமானிய வீரர்கள் தீப்பந்தங்களைப் பின்தொடர்ந்தனர். உடனே ஹேனிபால் தனது படையினரை அழைத்துக் கொண்டு கணவாயில் நுழைந்து வெளியே சென்றார், இது கல்லி குலா (Calli Cula) என்ற விடத்தில் நடைபெற்றது,

எதிரியோடு போரிடாமல் வெறுமனே பின்தொடர்ந்து சென்று காலத்தை விரயமாக்குகிறார் ஃபேபியஸ் என்று பல செனேட்டர்கள் ரோமில் கருதிவந்தனர். கல்லிகுலாவில் ஹேனிபாலிடம் ஏமாந்தது ஃபேபியஸின் செல்வாக்கை மேலும் குறைத்தது. எனவே, அவரது துணைத்தளபதியாக (master of the Horse) மினூசியஸ் (Minucius) என்பவரையும் சர்வாதி காரியாக ஆக்கி ஃபேபியஸுக்குச் சமமான அதிகாரங்களை

அவருக்கும் அளித்தனர் ரோமானியர். ஆனால், சில நாட்களுக்குப் பிறகு நடந்த சண்டையில் அவரது படைமுழுவதுமே அழிந்துவிடும்போ லிருந்தது. ஃபேபியஸ் உதவிக்கு வந்ததால் தான் போர்க்களத்திலிருந்து அதனால் மீள முடிந்தது. எனவே, ஃபேபியஸிடம் தமது அதிகாரங்கள் அனைத்தையும் ஒப்படைத்து விட்டு, சர்வாதிகாரிப் பதவியைத் துறந்தார் மினூசியஸ். இவ்வாறு கி.மு. 217-ஆம் ஆண்டும் முடிவுற்றது. ஃபேபியஸின் பதவிக் காலமும் முடிந்தது.

கேனேப் போர், கி.மு. 216 ஃபேபியஸுக்குப் பிறகு மீண்டும் இரு கான்சல்களைத் தேர்ந்தெடுத்தது ரோம். போரைத் தீவிரமாக நடத்தி, விரைவில் வெற்றி பெற வேண்டுமென்று கருதிய சில ரோமானியரே இதற்குக் காரணம். டெரென்ட்டியஸ் வேரோ (Terrentius Varro), ஏமிலியஸ் பாலஸ் (Aemilius Paulus) ஆகியோரே புதிய கான்சல்களாக நியமிக்கப்பட்டனர்.

பெரும்படை ஒன்றைத் திரட்டுவதென்று முடிவு செய்யப்பட்டது. நேப்பிள்ஸ் போன்ற நகரங்களும் சைரக்யூஸும் பொன்னும் பொருளும் நிறையத் தந்து படை திரட்டுவதற்கு உதவி புரிந்தன. ஹேனிபாலின் கவனத்தை வேறு திசையிலும் திருப்பி, அவரது படைகளைப் பிளவுபடுத்துவதற்கென, அவரது துணைவர்களான கால்கள் வசித்த போநதிப் பிரதேசத்துக்கு ஒரு படையை அனுப்பினர் ரோமானியர். ஆனால், ஹேனிபால் அதை ஏரெடுத்தும் பார்க்கவில்லை. பின்னர் கேனே (Cannae) என்ற இடத்தில் கி.மு. 216-ல் பெரும் போர் ஒன்று நடைபெற்றது. அதில் ரோமானியப் படைகளைத் தவிடுபொடியாக்கினர் ஹேனிபால். ரோமானியரின் 70,000 காலாட்படையினரில் 60,000 பேர் போரில் வீழ்ந்துபட்டனர். ஏமிலியஸ் கொல்லப்பட்டார்; வேரோ தப்பி ஓடினர்.

இரண்டாவது கட்டம், கி.மு. 216-207: மீண்டும் ரோமுக்குச் செல்லும் பாதையானது அவருக்காகத் திறந்து கிடந்தது. அவரது அதிகாரிகள் பலரும் ரோமை நோக்கிச் செல்லும்படி அவரைத் தூண்டினர். ஆனால், ஏராளமான இத்தாலியரைத்தன் பக்கம் சேர்த்துக்கொண்ட பின்னரே, ரோமைத் தாக்க முடிவு செய்தார் ஹேனிபால். ஆனால், இத்தாலியரோடு, பெருமளவில் அவரை ஆதரிக்க முன் வரவில்லை. என்வே, இத்தாலியரைப் பலவந்தமாகத் தம் பக்கம் இழுக்க முயன்றார். கம்பேனியாவுக்குள் நுழைந்து கேப்புவா (Capua) நகரைக் கைப்பற்றினர். ஸ்பெயினுடனும் கார்த்தேஜுடனும் தொடர்பு கொள்வதற்

என்ற இளைஞர் அரியணை யேறித் தம் பாட்டனாரின் கொள்கை யைக் கைவிட்டு ரோமுக்கு விரோதமாகக் கார்த்தேஜுடன் நட்புறவு கொள்ள எண்ணினார், ஆனால், கி. மு, 214-ல் அவர் கொலை செய்யப்பட்டார். அச்சமயத்தில் ஹிப்பாகிரட்டீஸ் (Hippocrrtes) எப்பிசைடீஸ் (Epicydes) என்ற இரண்டு பேரைச் சைரக்யூஸுக்கு அனுப்பினார் ஹேனிபால். இவர்கள் இருவரும் சைரக்யூஸில் தளபதிகளாகத் தேர்ந்தெடுக்கப்பட்டனர்.

அப்பொழுது சிசிலியில் இருந்த ரோமானியக் கான்சலான மார்செல்லஸ் (Marcellus) என்பவர் உடனே போர் தொடுத்து சைரக்யூஸை முற்றுகையிட்டார். (கி. மு. 214-ல்) அந் நகரத்தினர் இரண்டு ஆண்டுகள் வீரத்துடன் போரிட்டனர். புகழ்பெற்ற கணித மேதையான ஆர்க்கிமெடீஸ் (Archimedcs) அப்பொழுது அந்நகரில் வாழ்ந்திருந்தார். அவர் கண்டுபிடித்த எந்திரம் ஒன்றைக் கொண்டு கற்களையும் இரும்புக் குண்டுகளையும் எறிந்து ரோமா னியர்களைத் தாக்கியது சைரக்யூஸ். கார்த்தேஜிலிருந்தும் சைரக் யூஸுக்கு உதவி வந்துகொண்டிருந்தது எனினும் இறுதியில் கி.மு. 212-ல் ரோமானியர் அந்நகரைக் கைப்பற்றினர். அந் நகரத் தின் செல்வமும் சிறந்த கலைப்பொருள்களும் கொள்ளையிடப்பட் டன. சைரக்யூஸ் அரசானது தனது சுதந்திரத்தை இழந்து ரோமுக்கு அடிமைப்பட்டது. அக்ரிஜென்ட்டம் போன்ற மற்ற அரசு களும்கூட அடுத்த இரண்டாண்டுகளில் ஒன்றன்பின் ஒன்றாக ரோமானியரால் வெல்லப்பட்டன.

ஸ்பெயினில் போர்: அதே சமயத்தில் ஸ்பெயினிலும்கூடக் கார்த்தேஜுக்கும் ரோமுக்கும் போர்கள் நடந்துவந்தன. (கி. மு. 218-206), ஸ்பெயினில் நடந்த இப் போர்கள்தாம் ரோமின் இறுதி வெற்றிக்குக் காரணமாயின. அவ் வெற்றிக்குக் காரணமான வீரர் கள் தமது போர்ப் பயிற்சியைப் பெற்றதும் இப் போர்களின் பொழுதுதான்.

கி. மு. 218-ல் ஹேனிபாலை எதிர்ப்பதற்காக ரோன் நதியின் கழிமுகத்திலிருந்து இத்தாலிக்குத் திரும்பிய கொர்னீலியஸ் சிப்பியோ தம் தம்பியான ஞேயஸ் சிப்பியோ (Gnaeus) என்பவரை ஸ்பெயினுக்கு அனுப்பினார் என்பதை முன்பே பார்த்தோம். அங்கு ஹேஸ்ட்ருபாலுடன் சிறுசிறு சண்டைகள் பல நடைபெற்றன. எனினும், எப்ரோ (Ebro) நதிக்கு வடக்கில் பல இடங்களை ரோம் கைப்பற்றியது. கி. மு. 217-ல் கொர்னீலியஸ் சிப்பியோவும் ஸ்பெயினுக்கு வந்தார். சிப்பியோ சகோதரர்கள் இருவரும் கார்த் தேஜின் ஆதிக்கத்தை ஸ்பெயினிலிருந்து ஒழித்துக்கட்டப்

பெருமுயற்சி செய்தனர். கி. மு. 213-ல் எப்ரோ நதிக்கரையில் பெரும் போர்கள் நடைபெற்றன. ரோமானியர் பெரும்படை ஒன்றைக் கொண்டிருந்தனர். எனினும் அப்போர்களில் அவர்கள் தோல்வியே கண்டனர். சிப்பியோர் இருவருமே அப் போர்களில் மடிந்தனர். ரோமானியரின் ஆட்சியே ஸ்பெயினில் அழிந்துவிடும் போலிருந்தது. ஆனால் மார்ஸியஸ் (Marcius) என்ற இளம்படை யதிகாரி ஒருவர் ரோமிலிருந்து உதவி வரும்வரையில் தமது தலைமை முகாமான டெராக்கோவை உறுதியாகக் காத்துப் போரிட்டு ரோமின் ஆதிக்கம் முற்றிலும் அழியாமல் காத்தார். கி. மு. 211-ல் கிளாடியஸ் நீரோ என்ற பிரேட்டர் ஒருவரின் தலைமையில் படைஒன்று ரோமிலிருந்து வந்தது. ஆனால் அவரா லும் எதையும் சாதிக்க இயலவில்லை. அவருக்குப் பிறகு ஸ்பெயி னுக்குச் செல்வதற்கு யாரும் முன்வரவில்லை. ஸ்பெயின் நீண்ட தூரத்திலிருந்ததாலும் அங்கு சுகமான வாழ்க்கைக்கு வேண்டிய வசதிகள் இன்மையாலும் எப்போதும் போர்களில் ஈடுபட்டு உயிருக்கு ஆபத்தைத் தேடிக்கொள்ள வேண்டி யிருந்ததாலும் படைத் தலைமையை மேற்கொள்ள யாரும் விரும்பவில்லை.

இறுதியில் கொர்னீலியஸ் சிப்பியோவின் மகனான கொர்னீ லீயஸ் சிப்பியோ ஆப்பிரிக்கானஸ் (Africanus) என்பவர் ஸ்பெயி னுக்குப் படை நடத்திச் செல்ல முன்வந்தார். அப்பொழுது அவருக்கு வயது இருபத்து நான்கு. படைத் தலைமை தாங்குவதற்கு அது போதாது. எனினும் அவரது திறமையில் நம்பிக்கை வைத்த மக்கள் உற்சாகத்தோடு அவரைத் தேர்ந்தெடுத்தனர். உடனே படையுடன் ஸ்பெயினுக்குப் புறப்பட்டார் அவர். கி. மு. 110 முதல் 206 வரையில் அங்கு அவர் நிகழ்த்திய போர்கள் ரோமுக்குப் பெரு வெற்றியைத் தேடித் தந்தன. நிலைமை அடியோடு மாறியது. சிப்பியோ கார்த்தேஜின் ஸ்பானியத் தலைநகரான 'புதிய கார்த்தேஜ்' மீது துணிச்சலோடு திடீரென்று போர்தொடுத்து முதன் முதலில் அதைக் கைப்பற்றினார். ஏராளமான செல்வமும் பொருள்களும் கப்பல்களும் போர்க்கருவிகளும் அவர் கையில் சிக்கின. பகைவரின் பிரதேசத்தின் மையத்திலிருந்த அருமையான துறைமுகமும் சிக்கியது. உடனே மத்திய ஸ்பெயினில் வசித்து வந்த ஸ்பானிய இனங்கள் கார்த்தேஜைக் கைவிட்டு ரோமை ஆதரித்தன.

ஆப்பிரிக்காவுக்கும் சென்று கார்த்தேஜைத் தாக்க வேண்டும் என்பது அவரது எண்ணம், எனவே அங்கு மேற்கு மீடியாவை ஆண்டு வந்த சைபாக்ஸ் (Syphax) என்ற மன்னரைக் கார்த் தேஜுக்கெதிராகத் தம்மோடு சேர்த்துக்கொண்டார். ஆனால், கி. மு. 206-ல் கொடிய நோயால் பீடிக்கப்பட்டு இத்தாலிக்குத்

திரும்பினார் சிப்பியோ ஆப்பிரிக்கானஸ். அதற்குள் ஸ்பெயின் முழுவதும் ரோமின் அதிகாரத்தின்கீழ் வந்துவிட்டது.

போர் முடிவடைகிறது: ரோமுக்குத் திரும்பிய ஆப்பிரிக்கானஸ் கி. மு. 205-ம் ஆண்டில் கான்சல் பதவிக்குப் போட்டியிட்டார். முப்பது வயதுகூட நிரம்பாத அவர் கான்சலாவதைச் செனெட் எதிர்த்தது. எனினும், மக்களது ஆதரவைக்கொண்டு கான்சலானார் அவர். சிசிலிக்குச் செல்லவும் அங்கிருந்து ஆப்பிரிக்காவுக்குப் படை யெடுத்துச் செல்லவும் அவருக்கு அனுமதி அளிக்கப்பட்டது. சிசிலியில் ஓராண்டுக் காலம் தங்கிப் படையைத் திரட்டிப் பயிற்சி யளித்தார். படையெடுப்புக்கு வேண்டியபடி அவரது பதவிக் காலமானது கி. மு. 204-ம் ஆண்டுக்கும் 'புரோகான்சலாக' (Proconsul) நீட்டிக்கப்பட்டது. அவர் லிலிபேயத்திலிருந்து அதே ஆண்டில் ஆப்பிரிக்காவுக்குப் புறப்பட்டார். 35,000 பேர் அவரது படையில் இருந்தனர். கார்த்தேஜை முற்றுகையிட்டு அதன் பலத்த மதில்களைத் தகர்ப்பதற்குத் தேவையான கருவிகளும் ஏடுத்துச் செல்லப்பட்டன.

முன்பு ரோமை ஆதரித்த மேற்கு நுமீடிய மன்னர் சைபாக்ஸ் அப்பொழுது கார்த்தேஜை ஆதரித்தார். ஆனால் அவருக்குப் பகை வரான கிழக்கு நுமீடிய அரசர் மசன்னிசா (Masannssa) என்பவர் ரோமை ஆதரித்தார். வழியிலிருந்த பிரதேசம் முழுவதையும் சூறையாடி அழித்து கி. மு. 204-203-ல் ஊட்டிகாவை (Utica) முற்றுகையிட்டார் சிப்பியோ. அருகில் நடந்த ஒரு போரில் கார்த் தேஜின் படை தோற்கடிக்கப்பட்டு சைபாக்ஸ் சிறைப்பிடிக்கப்பட் டார். உடனே திரும்பி வரும்படி ஹேனிபாலுக்கு அழைப்பனுப்பி யது கார்த்தேஜ். இத்தாலியை விட்டகல மனமில்லாமல் அவரும் திரும்பி வந்தார். கி. மு. 202-ல் அக்டோபர் 18-ஆம் நாளில் சிப்பி யோவின் தலைமையிலான ரோமானியப் படையும் ஹேனிபாலின் தலைமையிலான கார்த்தேஜின் படையும் **சாமா** (Zama) என்ற விடத்துக்கருகில் சந்தித்தன. ரோமானியர் வென்றனர். ஹேனி பாலின் முதல் தோல்வியும் இறுதித் தோல்வியும் இதுதான். மேலும் புதிய படைகளைத் திரட்ட முடியாத கார்த்தேஜ் உடனே சிப்பியோவிடம் பணிந்தது.

1. கார்த்தேஜ் தன்னுடைய கப்பல்கள் அனைத்தையும்-இருப தைத் தவிர - ரோமுக்குக் கொடுத்துவிடவேண்டும். 2. ஆப்பிரிக்கா விற்கு வெளியே எப்போரிலும் அது ஈடுபடக்கூடாது; ஆப்பிரிக்கா விலும் ரோமின் அனுமதியின்றிப் போர்களில் அது ஈடுபடக்கூடாது.

3. பெருந்தொகை ஒன்றைப் பத்தாண்டுகளில் போர் இழப்பீடாக ரோமுக்குச் செலுத்தவேண்டும். 4. மசன்னிசாவின் பிரதேசங்கள் கார்த்தேஜ் அரசின் எல்லைகள்வரை விரிவுபடுத்தப்பட்டன. இத்தகைய நிபந்தனைகளைக் கார்த்தேஜ் ஏற்றுக்கொள்ளவேண்டிய தாயிற்று.

கப்பல்களை இழந்ததால் அதன் வாணிகமும் பொருளாதாரமும் பாழ்பட்டன. மசன்னிசாவின் நாடு அதன் எல்லைகள் வரை விரிவுபடுத்தப்பட்டதால் பூசல்களும் போர்களும் மூளுவதற்கு வழி ஏற்பட்டது. மத்திய தரைக்கடல் முழுவதும் ரோமானியரின் ஆதிக்கத்துக்கும் வாணிகத்துக்கும் உட்பட்டது. மேற்கு மத்தியதரைக் கடல் தீவுகள் பலவற்றையும் ரோமானியக் கப்பல்கள் கைப்பற்றின. சிப்பியோவுக்கு ஆப்பிரிக்கானஸ் என்ற பட்டம் அளிக்கப்பட்டது. அவரது குடும்பத்துக்கே தலைமுறை தலைமுறையாக அப்பட்டம் உரியதாயிற்று. அவர் ரோம் திரும்பியதும் கோலாகலமான வெற்றி ஊர்வலம் நடைபெற்றது. ரோமுக்கு இருந்து வந்த அபாயத்தை அறவே அகற்றி, ஹேனிபாலை இத்தாலியிலிருந்து விரட்டி, கார்த்தேஜையும் அவரையும் பணியவைத்து, ஈடு இணையற்றதாகத் தமது அரசை உயர்த்திய சிப்பியோவை ரோமானியர் கொண்டாடினர். ரோம் முழுவதுமே மகிழ்ச்சி வெள்ளத்தில் மூழ்கித் திளைத்தது: மேற்கு மத்தியதரைக் கடற்பகுதிகளை வென்றுவிட்ட ரோம் கிழக்குப் பக்கம் தனது கவனத்தை அப்பொழுது திருப்பியது.

யாரும் முன் வரவில்லை. ஸ்பெயின் வெகு தூரத்திலிருந்த தாலும், அங்குச் சுகமான வாழ்க்கைக்கு வேண்டிய வசதிகள் இன்மையாலும், சதா போர்களில் ஈடுபட்டு உயிருக்கு ஆபத் தைத் தேடிக் கொள்ள வேண்டி யிருந்ததாலும் படைத் தலை மையை மேற்கொள்ள யாரும் விரும்ப வில்லை.

இறுதியில், கொர்னீலியஸ் சிப்பியோவின் மகனான கொர்னீ லீயஸ் சிப்பியோ ஆப்பிரிக்கானஸ் (Africanus) என்பவர் ஸ்பெயினுக்குப் படை நடத்திச் செல்ல முன் வந்தார். அப் பொழுது அவருக்கு வயது இருபத்து நான்கு. படைத்தலைமை வகிப்பதற்கு அது போதாது. எனினும், அவரது திறமையில் நம்பிக்கை வைத்த மக்கள் உற்சாகத்தோடு அவரைத் தேர்ந் தெடுத்தனர். உடனே படையுடன் ஸ்பெயினுக்குப் புறப்பட் டார் அவர். கி.மு. 210 முதல் 206 வரையில் அங்கு அவர் நிகழ்த் திய போர்கள் ரோமுக்குப் பெரு வெற்றியைத் தேடித் தந்தன. நிலைமை அடியோடு மாறியது. சிப்பியோ கார்த்தேஜின் ஸ்பா னியத் தலைநகரான 'புதிய கார்த்தேஜ்'மீது துணிச்சலோடு, திடீரென்று போர் தொடுத்து, முதன்முதலில் அதைக் கைப்பற்றி னர். ஏராளமான செல்வமும், பொருள்களும், கப்பல்களும், போர்க்கருவிகளும் அவர் கையில் சிக்கின. பகைவரின் பிரதே சத்தின் மையத்திலிருந்த அருமையான துறைமுகமும் சிக்கியது. உடனே, மத்திய ஸ்பெயினில் வசித்து வந்த ஸ்பானியக் குலங் கள் கார்த்தேஜைக் கைவிட்டு ரோமை ஆதரித்தன.

ஆப்பிரிக்காவுக்கும் சென்று 'கார்த்தேஜைத் தாக்க வேண் டும்' என்பது அவரது எண்ணம். எனவே அங்கு மேற்கு நுமீடி யாவை ஆண்டு வந்த சைபாக்ஸ் (Syphax) என்ற மன்னரைக் கார்த்தேஜுக்கு கெதிராகத் தன்னோடு சேர்த்துக் கொண்டார். ஆனால், கி.மு. 206-ல் கொடிய நோயால் பீடிக்கப்பட்டு இத்தாலி திரும்பினர் சிப்பியோ ஆப்பிரிக்கானஸ். அதற்குள் ஸ்பெயின் முழுவதும் ரோமின் ஆதிக்கத்தின்கீழ் வந்து விட்டது.

போர் முடிவடைகிறது : ரோமுக்குத் திரும்பிய ஆப்பிரிக் கானஸ் கி.மு. 205-ஆம் ஆண்டில் கான்சல் பதவிக்குப் போட்டி யிட்டார். முப்பது வயது கூட நிரம்பாத அவர் கான்சலாவதைச் செனேட் எதிர்த்தது. எனினும், மக்களது ஆதரவைக் கொண்டு கான்சலானார் அவர். சிசிலிக்குச் செல்லவும் அங்கிருந்து ஆப்பி ரிக்காவுக்குப் படை யெடுத்துச் செல்லவும் அவருக்கு அனுமதி அளிக்கப்பட்டது. சிசிலியில் ஓராண்டுக் காலம் தங்கிப் படை யைத் திரட்டிப் பயிற்சி யளித்தார். படையெடுப்புக்கு வேண்டிய

அவரது பதவிக் காலமானது கி.மு. 204ஆம் ஆண்டுக்கும் 'புரோகான்சலாக' (Proconsul) நீட்டிக்கப்பட்டது. அவர் லிலிபேயத்திலிருந்து அதே ஆண்டில் ஆப்பிரிக்காவுக்குப் புறப்பட்டார். 35,000 பேர் அவரது படையில் இருந்தனர். கார்த்தேஜ் முற்றுகையிட்டு, அதன் பலத்த மதில்களைத் தகர்ப்பதற்குத் தேவையான கருவிகளும் எடுத்துச் செல்லப் பட்டன.

முன்பு ரோமை ஆதரித்த மேற்கு நுமீடிய மன்னர் சைபாக்ஸ் அப்பொழுது கார்த்தேஜை ஆதரித்தார். ஆனால், அவருக்குப் பகைவரான கிழக்கு நுமீடிய அரசர் மசன்னிசா (Masannisa) என்பவர் ரோமை ஆதரித்தார். வழியிலிருந்த பிரதேசம் முழுவ தையும் சூறையாடி அழித்து, கி.மு. 204-203-ல் ஊட்டிகாவை (Utica) முற்றுகையிட்டார் சிப்பியோ. அருகில் நடந்த ஒரு போரில் கார்த்தேஜின் படை தோற்கடிக்கப்பட்டுச் சைபாக்ஸ் சிறை பிடிக்கப்பட்டார். உடனே, திரும்பி வரும்படி ஹேனிபா லுக்கு அழைப்பனுப்பியது கார்த்தேஜ். இத்தாலியை விட்டகல மனமில்லாமல் அவரும் திரும்பி வந்தார். கி.மு. 202ல் அக்டோபர் 18ஆம் நாளில் சிப்பியோவின் தலைமையிலான ரோமானியப் படையும் ஹேனிபாலின் தலைமையிலான கார்த்தேஜின் படை யும் சாமா (Zama) என்ற விடத்துக்கருகில் சந்தித்தன. ரோமா னியர் வென்றனர். ஹேனிபாலின் முதல் தோல்வியும் இறுதித் தோல்வியும் இதுதான். மேலும் புதிய படைகளைத் திரட்ட முடியாத கார்த்தேஜ் உடனே சிப்பியோவிடம் பணிந்தது.

1. கார்த்தேஜ் தனது கப்பல்கள் அனைத்தையும்—இருப்ப தைத் தவிர—ரோமுக்குக் கொடுத்துவிடவேண்டும். 2. ஆப் பிரிக்காவிற்கு வெளியே எப்போரிலும் அது ஈடுபடக்கூடாது ; ஆப்பிரிக்காவிலும் ரோமின் அனுமதியின்றிப் போர்களில் அது ஈடுபடக்கூடாது. 3. பெருந்தொகை ஒன்றைப் பத்தாண்டு களில் போர் இழப்பீடாக ரோமுக்குச் செலுத்தவேண்டும். 4. மசன்னிசாவின் பிரதேசங்கள் கார்த்தேஜ் அரசின் எல்லைகள் வரை விரிவு படுத்தப்பட்டன. இத்தகைய நிபந்தனைகளைக் கார்த்தேஜ் ஏற்றுக்கொள்ள வேண்டியதாயிற்று.

கப்பல்களை இழந்ததால் அதன் வாணிகமும் பொருளா தாரமும் பாழ்பட்டன. மசன்னிசாவின் பிரதேசம் தனது எல்லைகள்வரை விரிவுபடுத்தப்பட்டதால் பூசல்களும் போர் களும் முளுவதற்கு வழி ஏற்பட்டது. மத்திய தரைக்கடல் முழு வதும் ரோமானியரின் ஆதிக்கத்துக்கும் வாணிகத்துக்கும் உட்

பட்டது. மேற்கு மத்தியதரைக் கடல் தீவுகள் பலவற்றையும் ரோமானியக் கப்பல்கள் கைப்பற்றின. சிப்பியோவுக்கு ஆப் பிரிக்கானஸ் என்ற பட்டம் அளிக்கப்பட்டது. அவரது குடும் பத்துக்கே தலைமுறை தலைமுறையாக அப்பட்டம் உரித்தா யிற்று. அவர் ரோம் திரும்பியதும் கோலாகலமான வெற்றி ஊர்வலம் (triumph) நடைபெற்றது. ரோமுக்கு இருந்து வந்த அபாயத்தை அறவே அகற்றி, ஹேனிபாலை இத்தாலியிலிருந்து விரட்டி, கார்த்தேஜையும் அவரையும் பணியவைத்து, ஈடு இணையற்றதாகத் தமது அரசை உயர்த்தியசிப்பியோவை கொண்டாடினர். ரோம் முழுவதுமே மகிழ்ச்சி வெள்ளத்தில் மக்கள் மூழ்கித் திளைத்தது. மேற்கு மத்தியதரைக் கடற் பகுதிகளை வென்றுவிட்ட ரோம், கிழக்குப் பக்கம் தனது கவனத்தை அப்பொழுது திருப்பியது.

11. இரண்டாவது பியூனிக் போருக்குப்பின் மூன்றுவது பியூனிக்போர் வரையில் ரோம்:


முதல் மாசிடோனியப் போர், கி. மு. 214-205: இத்தாலியில் ஹேனிபாலுடன் போர்களில் ஈடுபட்டிருந்த அதே வேளையில், ஸ்பெயினிலும் சிசிலியிலும் மட்டுமன்றி மாசிடோனியாவிலும் கூட ரோம் போரிட வேண்டியிருந்தது. இவ்வாறு மேற்கு மத்திய தரைக் கடற்பகுதியில் தனது ஆதிக்கத்தை நிறுவ முயன்று வந்த அதே வேளையில், கிழக்கு மத்தியதரைக் கடற்பகுதியிலும் கூடத் தனது ஆதிக்கத்தை நிறுவ அது முயன்றது. இதன் விளைவாக ஏற்பட்டவை தாம் மாசிடோனியாவுடனான போர்கள்.

அப்பொழுது மாசிடோனியாவை ஆண்டு வந்தவர் 5 ஆம் பிலிப் (Philip-v). அவர் கிரீஸ் முழுவதையும் தனது கட்டுப் பாட்டின்கீழ்க் கொண்டுவர முயன்றுகொண்டிருந்தார். கிரீஸில் டெமிடிரியாஸ் (Demetrias), சால்சிஸ் (Chalcis), அக்ரோ கொரிந்தஸ் (Acrocorinthus) ஆகிய மூன்று இடங்களிலும், வேறு பல இடங்களிலும், பலத்த படைகளை வைத்திருந்தார். மேற்கூறிய மூன்று இடங்களிலும் இருந்த மாசிடோனியப் படைகள் மிகுந்த பலமிக்கவை; எனவேதான், 'கிரீஸின் தளைகள்' என்று அம்மூன்றும் அழைக்கப்பட்டன.

கிரீஸில் அப்பொழுது இரண்டு இணைப்பரசுகள் இருந்து வந்தன. ஒன்று, வடமேற்கிலிருந்த ஏட்டோலிய லீக் (Aetolian League); மற்றது, தெற்கிலிருந்த அக்கேய லீக் (Achoean League). இவை இரண்டும்தான் அப்பொழுது அங்கிருந்த முக்கிய அரசுகள். தெற்கில் பெலப்பனீசஸ் பகுதியில் ஸ்பார்ட் டாவும் (Sparta) எலிஸும் (Elis), கொரிந்த் வளைகுடாவுக்கு அப்பால் ஆதென்ஸும் தீப்ஸும் (Thebes) தமது முந்திய வலி

மையை இழந்து, வளங்குன்றி, பெயரளவில் மட்டுமே சுதந்திர அரசுகளாக இருந்துவந்தன. தெசாலி (Thessaly) முழுவதுமே மாசிடோனியாவின் ஆட்சியிலிருந்து வந்தது.

அக்கர்னனியா (Acarnania) எப்பைரஸ் (Epirus) போன்ற பிரதேசங்களைக் கைப்பற்றுவதற்கு மாசிடோனியா, ஏட்டோலிய லீக் ஆகிய இரண்டுமே முயன்றன. இதனால் அவற்றுக்கிடையில் போட்டியும் பொறுமையும் பகைமையும் இருந்து



வந்தன. எனவே, ஏட்டோலிய லீக்குக்கு எதிராக அக்கேய லீக்குடன் நட்புபூண்டது மாசிடோனியா.

ஹேனிபாலோடு ரோம் இத்தாலியில் போரிட்டுக்கொண் டிருந்த சமயத்தில் 5ஆம் பிலிப் ஏட்டோலியர்களுடன் போரிட்டுக் கொண்டிருந்தார். அதில் வெற்றிமேல் வெற்றி அவருக்குக் கிட்டியது. இதனால், அவரது ஆதிக்க ஆசை மேலும் மேலும் அதிகரித்தன. இலீரியாவின் கடற்கரை யையும் கைப்பற்றி, ஏட்ரியாட்டிக் கடல் வாணிபத்தைத் தம் கட்டுப்பாட்டின்கீழ்க் கொண்டுவரத் திட்டமிட்டார். கேனே (Cannae) போருக்குப்பிறகு பிலிப்பும் ஹேனிபாலும் ஒரு உடன் படிக்கை செய்து கொண்டனர். கோர்சைராவிலிருந்தும் (Corcyra) இலீரியாவிலிருந்தும் ரோமானியரை வெளியேற்ற மாசிடோனியர் இணங்கினர். ஆனால், இதுபற்றி ஹேனிபாலுடன் பேச்சு வார்த்தைகள் நடத்திவிட்டுத் திரும்பிக்கொண்டிருந்த மாசிடோனியத் தூதர்களைப் பிடித்துக் கைதுசெய்து, எல்லாவற் றையும் அறிந்துகொண்ட ரோம் மாசிடோனியாமீது உடனே போர் தொடுத்தது. பலமுனைகளிலும் ரோம் போரிட வேண்டி யிருந்ததால் பெரும்தாக்குதல் எதையும் மாசிடோனியாமீது தொடுக்க முடியவில்லை. சிறுசிறு கைகலப்புகள் மட்டுமே நடைபெற்றன. இத்தாலிக்கு மாசிடோனியாபடைகளை அனுப்பு வதைத் தடுப்பதற்கெனப் புருண்டீசியத்தில் (Brundisium) ரோமானியக் கடற்படை ஒன்று நிறுத்திவைக்கப்பட்டது. இலீரியக்கடற்கரைமீது பல தாக்குதல்கள் தொடுக்கப்பட்டன. கொரிந்த் வளைகுடாவின் (Gulf of Corinth) வடகரைமீதும் தாக்குதல்கள் நடத்தப்பட்டன. ஆசியாமைனரில் பெர்கமம் (Pergamum) என்ற அரசை ஆண்டுவந்த அட்டாலஸ் (Attalus) என்பவர் பிலிப்பின் ஆதிக்க ஆசையைக் கண்டு அஞ்சிக் கொண்டிருந்தார்; அவருடனும் ஒரு நட்புடன்படிக்கையைச் செய்து கொண்டது ரோம். (இந்த நட்பு நிரந்தரமாக நீடித்தது.) அதே சமயம் கிரீஸிலும் பிலிப்புக் கெதிராகப் புதிய கூட்டணி கள் உருவாயின.

இறுதியில் ரோமுடன் சமாதானம் செய்துகொள்ள முன்வந் தார் பிலிப். கி.மு. 205-ல் போனிஸ் (Phoenice) என்ற விடத்தில் ஒரு உடன்படிக்கை கையெழுத்தாயிற்று. கிரீஸில் ஸ்பார்ட்டா, ஆதென்ஸ், எலிஸ், மெசீன் (Messene) ஆகியவை ரோமின் கூட்டாளிகள் என்றும், அக்கேயா (Achaia) பூவோஷியா (Bueatia), தெசாலி, அக்கர்னானியா, எப்பைரஸ் ஆகியவை மாசி டோனியாவின் கூட்டாளிகள் என்றும் கூறியது அவ்வுடன் படிக்கை. ஆசியா மைனரிலிருந்த பெர்கமம், இலியம் (Ilium) ஆகியவையும் ரோமின் நண்பர்கள் என்று கூறியது அது. பிற்

காலத்தில் கிரீஸிலும் ஆசியா மைனரிலும் ரோம் தனது ஆதிக்கத்தை நிறுவுவதற்கு இந்த உடன்படிக்கை வழிவகுத்தது.

இரண்டாவது பியூனிக் போருக்குப்பின் இத்தாலி: சாமாப் போருக்குப் பிறகு இத்தாலி முழுவதிலும் ரோமின் ஆதிக்கம் மீண்டும் ஓங்கியது. ஆயினும், இரண்டாவது பியூனிக் போரின் போது குலைந்துவிட்டிருந்த நிர்வாக அமைப்பை, தேவையான மாற்றங்களோடு மீண்டும் இத்தாலியில் ஏற்படுத்த வேண்டி இருந்தது. தன்னை ஆதரித்தவை எவை, தனக்கு எதிராக ஹேனிபாலை ஆதரித்தவை எவை என்பனவற்றைவைத்து, இத்தாலிய நகரங்களும் மாநிலங்களும் அப்பொழுது ரோமால் நடத்தப்பட்டன. பெரும்பாலான இத்தாலிய நகரங்கள் போரின்போது ரோமுக்கு விசுவாசமாகவே இருந்து வந்தன என்பதை முன்பு கண்டோம். எனவே, அவற்றின் உரிமைகளிலும் நிர்வாக அமைப்பிலும் எவ்விதமான மாறுபாடும் அப்பொழுது செய்யப்படவில்லை. ஆனால், ஹேனிபாலை ஆதரித்த கேப்புவா (Capva) போன்ற நகரங்கள் கொடுமையுடன் நடத்தப்பட்டன. அவற்றின் மக்களில் பெரும்பாலோர் அந்த நகரங்களிலிருந்து விரட்டியடிக்கப்பட்டனர்; அல்லது அடிமைகளாக விலைக்கு விற்கப்பட்டனர். அவற்றின் நிலம் 'பொது நிலமாக' அறிவிப்கப்பட்டு, ரோமானியக் குடியானவர்கள் அங்குக் குடியமர்த்தப் பட்டனர்; தமது வருவாயில் ஒரு பகுதியை ஆண்டுதோறும் அவர்கள் ரோமுக்குச் செலுத்தவேண்டும். இத்தகைய நகரங்கள் தமது சுயாட்சி உரிமைகளை இழந்து, ரோமானிய அதிகாரி ஒருவரால் நிர்வகிக்கப்பட்டு வந்தன.

அதேபோல் ஹேனிபாலின் படையெடுப்பை வாய்ப்பாகக் கொண்டு ரோமாபுரியின் ஆதிக்கத்தை உதரி எறிவதற்கெனக் கிளர்ச்சிகளில் ஈடுபட்ட பல பிரதேசங்களும் தமது உரிமைகளை இழந்தன. சான்றாக, புரூட்டியத்தில் வாழ்ந்த மக்கள் (புரூட்டிகள்) இதுவரை ரோமின் கூட்டாளிகளாக (Allies) நடத்தப்பட்டு வந்தனர். ஆனால், கிளர்ச்சி செய்த காரணத்தால் இரண்டாவது பியூனிக் போருக்குப் பிறகு ரோமின் ஆட்சிக்கு உட்பட்ட மக்களாக (Subjects) அவர்கள் நடத்தப்பட்டனர். படையில் அவர்களைச் சேர்த்துக்கொள்வது நிறுத்தப்பட்டது. புரூட்டியம் ரோமின் மாநிலமாகக் கருதப்பட்டு, பிரேட்டர் ஒருவரால் ஆளப்பட்டது. கம்பேனியாவும் (Campania) இதேபோல் நடத்தப்பட்டது.

அதே சமயத்தில், தனக்கு என்றென்றும் விசுவாசத்துடன் இருக்கக்கூடிய முறையில் ரோமானியர்கள் இத்தாலியின் பல

விடங்களிலும் குடியமர்த்தப்பட்டனர். சாம்னியம், அப்பூலியா ஆகியவற்றில் ஏராளமான நிலங்களைப் பறிமுதல்செய்து, ரோமானியர்களை அங்குக் குடியமர்த்தினர். ரோமாபுரியின் அதிகாரம் அங்கு உறுதிப்படுவதற்கு இவர்கள் வழி செய்தனர். அப்பூலியா, கம்பேனியா, புரூட்டியம் ஆகிய பகுதிகளில் கி.மு. 194-ல் பல ரோமானியக் குடியேற்றங்கள் நிறுவப்பட்டன. வடக்கிலிருந்த பிளெசென்ஷியா, கிரெமோனு ஆகிய இரு லத்தீனியக் குடியேற்றங்களும், இரண்டாவது பியூனிக் போரின்போது கால்களின் தாக்குதல்களுக்குப் பலமுறை உள்ளாகிச் சிதைந்தன. அப்போர் முடிவுற்ற பின்னரும்கூடக்கால்களும் லிகூரியர்களும் அவற்றைத் தாக்கிவந்தனர். எனவே, கி.மு. 195-ல் அவற்றை மீண்டும் புத்துயிர் பெறச்செய்து, மேலும் அதிக மக்களை அங்குக் குடியேற்றி, நிர்வாகத்தைச் செப்பனிட்டு, கான்சல் ஒருவரின் தலைமையில் படை ஒன்றையும் அங்கு நிறுத்தியது ரோம். கால்களுடன் போர்கள் நடத்தப்பட்டன. சில ஆண்டுகளுக்குப் பிறகு போ (Po) நதிப் பள்ளத்தாக்கு ரோமின் ஆதிக்கத்துக்குக் கட்டுப்பட்டது. முன்பு 'கூட்டாட்சி நகரங்களாக' (Civitates foederatae) இருந்து, சுயாட்சி உரிமைபெற்று விளங்கிய நகரங்கள் பெரும்பாலும் பழைய நிலையிலேயே இப்பொழுதும் வைக்கப்பட்டன. அதேபோல் கடற்கரையிலிருந்த கிரேக்க நகரங்களும் நல்ல முறையிலேயே நடத்தப்பட்டன.

ரோமின் அரசியல்: தொடர்ச்சியான போர்களின் விளைவாக ஸ்பெயின், மேற்கு மத்திய தரைக்கடல் தீவுகள் முதலிய பல பிரதேசங்களை ரோம் பெற்றது. அவற்றை ஆளுவதற்கான ஏற்பாடுகளைச் செய்யவும், புதிய அதிகாரிகளை நியமித்து அங்கு அனுப்பவும், அவற்றின் நிர்வாக அமைப்பை நிறுவுவதற்கெனக்கமிஷனர்களை அனுப்பவும், அவர்களின் அறிக்கைகளின்பேரில் அவற்றுக்கான அரசியலமைப்புகளைத் தீட்டவும் வலிமைமிக்க ஒரு அதிகார நிறுவனம் ரோமில் தேவைப்பட்டது; அண்டை நாடுகளிலிருந்து வரும் தூதர்களோடு பேச்சுவார்த்தைகள் நடத்தவும், மாநிலங்களுக்கிடையிலான தகராறுகளைத் தீர்த்து வைக்கவும், இத்தாலிய நகரங்கள் சம்மந்தப்பட்ட வழக்குகளை விசாரிக்கவும், பெருகி வந்த அலுவல்கள் அனைத்தையும் கவனிப்பதற்கும் அத்தகைய அமைப்பு இன்றியமையாததாகியது. இந்நிலையில் செனேட்டின் அதிகாரமும் முக்கியத்துவமும் மீண்டும் ஓங்கின. எந்தச் சட்டமும் செனேட்டுக்கு இந்த நிலையைக் கொடுக்கவில்லை. ரோமின் போர்கள், வெற்றிகள், ஆக்கிரமிப்புகள் முதலியவை காரணமாகத் தானாகவே அது ஏற்பட்டது. பெரும் செல்வந்தர்களை மட்டுமே

கொண்டிருந்த அந்த அவையிடம் எல்லா அதிகாரங்களும் இப்பொழுது குவிந்தன. ஏற்கெனவே, பல உயர் பதவிகளிலும் இருந்து ஓய்வுபெற்ற செல்வந்தர்களைக் கொண்ட அந்த அவை தான் அப்பொழுது முதல் சுமார் இரண்டு நூற்றாண்டுகள் வரை ரோமப் பேரரசை ஆண்டுவந்தது.

ரோமில் பெரும் பணக்காரப் பிரபுக்கள் (Optimetes) என்றும், பொதுமக்கள் (Pupulares) என்றும் சமுதாயம் இரண்டாகப் பிரிந்தது. ஆயிரக் கணக்கான அடிமைகள், ஆண்டு தோறும் ரோமுக்குக் கொண்டுவந்து விற்கப்பட்டனர். இவர்களை மக்கள் என்றே சமுதாயத்தின் ஒருபகுதி என்றே யாரும் கருதவில்லை. பிரபுக்களோ செனேட்டின் அதிகாரங்களை ஆதரித்தனர்; பொதுமக்களோ பல்வேறு மன்றங்களிடமே அதிகாரங்கள் இருக்க வேண்டுமென்றனர். ஆனால் செல்வம், அரசாங்கம் படைமுதலிய அனைத்தையும் தமது கையிலேயே வைத்திருந்த செல்வந்தர்கள் விரும்பியபடி செனேட்டே அனைத்து அதிகாரங்களையும் பெற்றது. செஞ்சூரியா மன்றத்தின் மூலம் கான்சல்கள் சட்டங்களியற்றுதலும், குலமன்றங்களின் மூலம் டிரிபியூன்கள் சட்டமியற்றுதலும் நாளடைவில் குறைந்து போயின.

ரோமில் கிரேக்கக் கலைகள்: போர்களின் விளைவாக டேரன்ட்டம், நேப்பிள்ஸ், சைரக்யூஸ் முதலிய நகரங்களிலிருந்து கிரேக்கக் கலைப்பொருட்கள் ரோமுக்கு வந்தன. அங்கு வசித்து வந்த கிரேக்கர்களில் பலர் அடிமைகளாக ரோமாபுரிக்குக் கொண்டு வரப்பட்டனர். ரோமின் பெருமையாலும் வாணிபத்தாலும் செல்வத்தாலும் கவரப்பட்டு மேலும் பல கிரேக்கர்கள் அந்நகருக்கு வந்தனர். அதன் விளைவாக கிரேக்கக் கலையும் இலக்கியமும் தத்துவமும் ரோமானியருக்கு நன்கு தெரியவந்தன. பல கிரேக்கர்கள் பள்ளி ஆசிரியர்களாகவும், மருத்துவர்களாகவும் ரோமில் பணியாற்றி வந்தனர். முன்பு நாம் பார்த்த ஆன்ட்ரோனிக்கஸ், நேவியஸ் (அத். 9) ஆகியோரைத் தொடர்ந்து, கி.மு. 239–169-ல் வாழ்ந்த என்னியஸ் (Ennius) என்பவரும் கிரேக்க நாடகங்களை மொழிபெயர்த்தார். மாச்சியஸ் பிளாட்டஸ் (Maccius Plautus) என்ற ஒரு கவிஞர் (கி.மு. 254–184) கிரேக்க நாடகங்களை மொழி பெயர்த்ததோடு நின்றுவிடாமல், கிரேக்கக் கவிதைகளைப் போன்று லத்தீன் மொழியிலும் கவிதைகளைப் படைத்தார். கிரேக்கத் தொடர்பு இல்லாத சுயமான லத்தீன் இலக்கியங்கள் அப்பொழுது தோன்றவில்லை. எனினும், லத்தீன் இலக்கியத்தின் தோற்றத்துக்கும் வளர்ச்சிக்கும் கிரேக்க இலக்கி

யங்கள் வழிசெய்தன. இங்ஙனம் கிரேக்கரது தொடர்பானது ரோமானியரது இலக்கியம், கலை, பொது வாழ்வு ஆகிய அனைத்திலுமே பல அபிவிருத்திகளைத் தோற்றுவித்தது. அதே சமயம் செல்வமிக்க கிரேக்கரின் வாழ்வில் காணப்பட்ட தீமைகள் பல வற்றையும்கூட, ரோமின் மேல்வகுப்பினர் கடன் வாங்கிக் கொண்டனர்.

அடிமைகளும் எசமானர்களும்: வசதி மிக்க இத்தாலிய ரனைவரையும் ரோம் நகரம் காந்தம்போல் கவர்ந்தது. கிராமப் புறங்களிலிருந்து ஏழைகளும்கூட ரோமாபுரிக்குச் சென்றனர். இதனால், அங்கு மக்கள் நெருக்கம் அளவுக்குமீறி இருந்தது. சுகாதாரமற்ற, நோய்களும் தீமைகளும் மலிந்த, பெரிய அரண்மனைகளும் பிச்சைக்காரர்களும் நிறைந்த நகராக மாறியது.

இடைவிடாத போர்களின் காரணமாக விலைவாசிகள் ஏறின. போர்களின்போது ஆக்கிரமிக்கப்பட்ட புதிய நிலங்களைப் பெற்றுப்பெரும் பண்ணைகளை அமைத்தனர் ரோமானியப் பிரபுக்கள். அவர்களோடு போட்டி போட முடியாது சிறுசிறு குடியானவர்களும் நஷ்டத்திலும் கடனிலும் மூழ்கினர்; மேலும் அவர்கள் போர்களில் ஈடுபடுவதற்கெனத் திரட்டப்பட்டதாலும் அவர்களது விவசாயம் பாழ்பட்டது. இவ்வாறு சிறு குடியானவர்களும் சிறுபண்ணைகளும் மறைந்து பெரிய பண்ணைகள் (latifundia) தோன்றின. அடிமைகளைக் கொண்டு அவற்றைப் பயிரிட்டுப் பெரும் லாபம் திரட்டினர் பிரபுக்கள். சுதந்திரமான கூலியாளை வேலைக்கு அமர்த்துவதைவிட அடிமைகளை வைத்து விவசாயம் செய்வது லாபகரமாக இருந்தது. அவர்களுக்குச் சிறிது உணவும் ஓரிரு ஆடையும் மட்டும் அளித்தால் போதும்; மேலும் போருக்கு அவர்கள் திரட்டப்படமாட்டார்கள். இவ்வாறு தமது சொற்ப வயல்களை இழந்த குடியானவர்களும் ரோமுக்குச் சென்றனர். அவர்களில் சிலர் அங்குப் புதிய தொழில்களில்ஈடுபட்டு புதிய வாழ்வைத் தொடங்கினர். ஆனால், பலர் வேலையின்றி, சோம்பேறிகளாக அலைந்தனர். பின்னர் வேலை செய்வதும் அவர்களுக்குக் கசந்தது. புதிய நிலங்கள் தமக்குத் தரப்படவேண்டுமென்று அவர்கள் ஆர்ப்பாட்டங்கள் நடத்தினர். இதன் விளைவாகச் சிறுசிறு நிலங்கள் தரப்பட்டபோது, அடிமைகளைக் கொண்ட பெரிய பண்ணைகளோடு போட்டியிட முடியாது நஷ்டமுற்று, கடனில் மூழ்கி, பெரிய பண்ணையாருக்கு மீண்டும் எல்லாவற்றையும் விற்றுவிட்டு ஆண்டியாக ரோமுக்குத் திரும்பினர். இவ்வாறு ரோமும் ரோமானியசமுதாயமும் இடையறாத ஆக்கிரமிப்புப்போர்களின் காரணமாகப் பெரும் மாறுதல்களை அடைந்தது.

இரண்டாவது மாசிடோனியப் போர் : கி.மு. 200-195 : இரண்டாவது பியூனிக்போர் நடந்து கொண்டிருந்த பொழுதே முதலாவது மாசிடோனியப் போரும் நடந்தது என்பதை முன்பே கண்டோம். அந்தப் பியூனிக் போர் ஓய்ந்த உடனே, தொடங்கியது இரண்டாவது மாசிடோனியப் போர். இதற்கு முக்கியமான காரணம் கிரீஸ், இலிரியா, எகிப்து, ஆசியா போன்ற கிழக்குப் பகுதிகளில் தமதுஆதிக்கத்தை நிறுவுவதற்கு ரோம், மாசிடோனியா ஆகிய இரண்டுமேமுயன்று வந்ததுதான்.

சாமாப் போரில் ஹேனிபாலுக்கு உதவி புரிவதெற்கெனச் சில மாசிடோனியப் பிரபுக்கள் படையுடன் கார்த்தேஜ் சென்றனர். கிரீஸில் தனது ஆதிக்கத்தை நிறுவதற்கென மேலும் மேலும் ஆக்கிரமிப்புப் போர்களில் ஈடுபட்டுவந்தார் மாசிடோனிய மன்னர் பிலிப். மேலும் எகிப்தையும், அதன் ஆட்சியிலிருந்த சைக்ளேட் தீவுகளையும் (Cyclades) ஆசியாவிலி ருந்து பல கிரேக்க நகரங்களையும் பங்குபோட்டுக் கொள்வதற் கெனச் சிரியா (Syria) நாட்டு மன்னர் ஆன்ட்டியோக்கஸ் (Antiochus) என்பாருடன் அவர் ஒரு ஒப்பந்தம் செய்துகொண் டார் (கி.மு. 204). இதனல் பெர்கமத்தை ஆண்ட அட்டலாஸு டன் பகைமையும் போரும் ஏற்பட்டன. சிறந்த கடற்படை யைக் கொண்டிருந்த ரோட்ஸ் குடியரசு (Rhodes) இதில் பெர் கமத்தை ஆதரித்தது. கி.மு. 201-ல் லேட் (Lade) என்ற விடத் துக்கருகில் நடந்த கடற் போரில் பிலிப் பெர்மகத்தையும் ரோட் ஸையும் தோற்கடித்தார். அடுத்த ஆண்டில் ஆசியா மைனரிலி ருந்த அபைடாஸ் (Abydos) நகரம் அவரால் முற்றுகையிடப் பட்டது. அச்சமயத்தில் ரோமாபுரி தனது தூதர்களை அனுப்பி கிரீசையோ, கிரேக்க நகரங்களையோ, எகிப்துக்குச் சொந்த மான பகுதியையோ பிலிப் தாக்கக் கூடாது என்று எச்சரிக்கை விடுத்தது. அப்பொழுது எகிப்தை ஆண்டு வந்த தாலமி எபிபேனிஸ் (Ptolemy Epiphanes) என்பவர் சிறுபிள்ளை. ஆதலால், தானிய வயல்கள் நிறைந்த அந்நாட்டை ரோம், மாசிடோனியா ஆகிய இரண்டுமே கவர்ந்து கொள்ளத் திட்ட மிட்டன. பியூனிக் போர்களின் போதே இதே நோக்கத்தோடு எகிப்துடன் நட்புறவு பூண்டிருந்தது ரோம்.

ரோமின் எச்சரிக்கைகளை அலட்சியம் செய்து, அபைடாஸ் முற்றுகையைத் தொடர்ந்து நடத்தி, அதைக் கைப்பற்றினர் பிலிப். இவ்வாறு மாசிடோனியாவின் ஆக்கிரமிப்புக்களைக் கண்டு அஞ்சிய அரசுகள் அனைத்தையும் சேர்த்து ஒரு கூட் டணியை உருவாக்கியது ரோம். ரோட்ஸ், பெர்கமம், ஆதென்ஸ்

ஆகியவை அதன் முக்கிய உறுப்பினர்களாக இருந்தன. மாசிடோனியாமீது படையெடுப்பதற்கென்று எப்ரைஸில் அப்போலோனியா (Apollonio) என்றவிடத்தில் தயாராக வைக்கப்பட்டிருந்த ரோமானியப் படையின் ஒரு பிரிவானது ஆதென்ஸைக் காப்பதெற்கென அனுப்பிவைக்கப்பட்டது (கி.மு. 200).

கி.மு. 199-ல், ரோம்: பெர்கமம், ரோட்ஸ் ஆகியவற்றின் போர்க்கப்பல்கள் ஏஜியன் கடலில் (Aegean sea) சில தீவுகளைக் கைப்பற்றின. கிரீஸை அடுத்திருந்த யூபோயாத் தீவிலிருந்த (Euboea) சில நகரங்களும்கூடக் கைப்பற்றப்பட்டன. அதே சமயம் ரோமானியத் தரைப்படையானது மாசிடோனியாவின் எல்லையில் சென்று, பெரும் போர் எதிலும் இறங்காமல் சிறுசிறு கைக்கலப்புகளில் மட்டும் ஈடுபட்டது. ரோமானிய அணி வெற்றி பெறும் என்பதைக்கண்ட ஏட்டோலிய நகரங்களும் ரோமானியரோடு சேர முன்வந்தன.

கி.மு. 198-ல் கான்சலான குவின்டியஸ் ஃபிளமீனியஸ் (Quintius Flaminius) என்பவரின் தலைமையில் மாசிடோனியாவுக்கெதிரான போர் தீவிரமாயிற்று. பிலிப் பல விடங்களில் தோற்றுப் பின் வாங்கினர். தெசாலி முழுவதையும் ரோமானியப்படை கைப்பற்றியது. பின் வாங்கிக்கொண்டே சென்ற பிலிப் மாசிடோனியாவுக்குள் ரோமானியப்படை நுழையாமல் செய்வதற்கான இறுதி முயற்சியாகப் போரிடத் துணிந்து டெம்பே (Tempe) என்ற விடத்துக்கருகில் படையோடு காத்திருந்தார். ஆனால், ஃபிளமீனியஸ் அங்கு அவருடன் போரில் இறங்காமல், கிரீஸில் புகுந்து, அதன் நகரங்களிலிருந்த மாசிடோனியப்படைகளை விரட்டி யடித்தார். இதன் விளைவாக அக்கேய லீகைச் சேர்ந்த நகரங்களும்கூட, ரோமின் தரப்பில் சேர்ந்து கொண்டன. (கொரிந்த், ஆர்காஸ், ஸ்பார்ட்டா ஆகியவை மட்டுமே இன்னமும் ரோமுடன் சேராமல் இருந்தன. இதனால், மனம் தளர்ந்த பிலிப் உடனே பேச்சுவார்த்தைகளைத் தொடங்க முன்வந்தார். ரோமானிய செனேட்டுக்கு பிலிப்பின் தூதர்கள் சென்று வருவதற்கென்று மூன்றுமாதப் போர் ஓய்வு ஒப்பந்தம் செய்துகொள்ளப்பட்டது. கிரீஸின் மூன்று தலைகளான 'டெமிடிரியாஸ்' சால்சிஸ், அக்ரோ கொரிந்தஸ் ஆகிய மூன்று விடங்களிலிருந்தும் மாசிடோனியர் விலக வேண்டுமென்று செனேட் கோரியது. பிலிப்பின் தூதர்கள் சரியான பதிலை இதற்குத் தராததால் மீண்டும் போர் துவங்கியது.

கி.மு. 197-ல் பிலிப் மறுபடியும் தெசாலிக்குள் நுழைந்தார். விரைந்து அங்குச் சென்ற ஃபிளமீனியஸ் சைனோசெபேலே

(Cynoscephalae) என்ற விடத்தில் அவரைச்சந்தித்து முறியடித்தார். அதே சமயத்தில், ஃபிளமீனியஸின் சகோதரரது தலைமையில் ரோமானியப் போர்க்கப்பல்கள் அக்கர்ஞனியாவைக் கைப்பற்றின; கொரிந்திலிருந்த மாசிடோனியப் படையை அக்கேயர்கள் அடித்து விரட்டினர்; அதேபோல் முன்பு மாசிடோனியரால் கைப்பற்றப்பட்ட தமது பிரதேசங்களை ரோட்ஸ் மக்களும் சிறிது சிறிதாக இப்பொழுது மீட்டுவந்தனர். இவ்வாறு எல்லா முனைகளிலும் தோல்வியே அடைந்துவந்த பிலிப் ரோமாபுரியுடன் சமாதானம் செய்து கொள்வதைத் தவிர வேறு வழியில்லை என்பதை உணர்ந்தார். எல்லாக் கிரேக்க நகரங்களிலிருந்தும் தனது துருப்புகளை மீட்டுக் கொள்வதற்கும், பிணையாகச் (hostages) சில ஆட்களை ரோமுக்கு அனுப்பிவைப்பதற்கும், போர் இழப்பீடாகப் பெருந்தொகை ஒன்றைக் கொடுப்பதற்கும் அவர் இணங்கினர். இவ்வாறு இரண்டாவது மாசிடோனியப் போர் முடிவுற்றது.

கிரேக்க நகரங்களின் விடுதலை, கி.மு. 196 : ஜூலையில் நடைபெற்ற இஸ்த்மிய விளையாட்டு விழாவின்போது (Isthmian Games), முன்பு மாசிடோனியாவால் கைப்பற்றப்பட்ட கிரேக்க நகரங்கள் அனைத்தும் முழு விடுதலை பெற்று இனி விளங்கும் என்ற ஒரு அறிவிப்பை வெளியிட்டார் ஃபிளமீனியஸ். இந்த அறிவிப்பை மிகுந்த மகிழ்ச்சியோடு வரவேற்றனர் அங்குக் கூடியிருந்த அனைவரும். எனினும், ஏட்டோலியரீக் மட்டும் அதை வரவேற்கவில்லை. முன்பு தன்னிடமிருந்து மாசிடோனியாவால் கைப்பற்றப்பட்ட பகுதிகள் அனைத்தும் மீண்டும் தன்னிடமே ஒப்படைக்கப் படவேண்டும் என்று எதிர்பார்த்தது அது. ஆனால், கிரேக்க நகரங்கள் அனைத்தும் தன்னையே சார்ந்திருக்க வேண்டும் என்று எண்ணிய ரோம், இத்தகைய லீக்குகளை விரும்பவில்லை. தனது விருப்பப்படியே கிரேக்க நகரங்களின் விவகாரங்களைத் தீர்த்து வைக்க எண்ணியது அது. அடுத்த ஆண்டில் ஸ்பார்ட்டாவின்மீது தனது கவனத்தைத் திருப்பினர் பிளமீனியஸ். தன்னை ஆதரிக்க வேண்டும் என்பதற்காகப் பிலிமன்னர் ஆர்காஸ் நகரை (Argos) ஸ்பார்ட்டாவுக்குக் கொடுத்திருந்தார். சிறுபோர் ஒன்றைத் தொடுத்து, ஸ்பார்ட்டாவின் கொடுங்கோலரான நாபிஸைப் (Nabis) பணியும்படி செய்தார் ஃபிளமீனியஸ். ஆர்காஸ் ஸ்பார்ட்டாவிடமிருந்து பறிக்கப்பட்டது. அதன் கடற்படையும் பறித்துக் கொள்ளப்பட்டது; லேக்கோனியாவின் (Laconia) கடற்கரையிலும், அதற்கு அப்பாலும் ஸ்பார்ட்டாவுக்குச் சொந்தமாயிருந்த நகரங்களனைத்தும்கூடப் பறிமுதல்

செய்யப்பட்டன. பின்னர் சால்சிஸ், டெமிடிரியாஸ், அக்ரோகொரிந்தஸ் ஆகிய விடங்களிலிருந்த ரோமானியப் படைகள் தாயகம் திரும்பின.

கிரீஸி லிருந்தும் ஆசியா மைனரி லிருந்தும் மாசிடோனியாவின் ஆதிக்கத்தை அழித்துவிட்டு. அதை ஒரு சிறிய அரசாக்கி ரோம் திரும்பினர் ஃபிளிமீனியஸ். அங்கு வெற்றி ஊர்வலம் நடத்தி மகிழ்ச்சியோடு அவர் வரவேற்கப்பட்டார். இவ்வாறு கிழக்கிலும் ரோமாபுரியின் ஆதிக்கம் வளரத் துவங்கியது. கிரீஸ் முழுவதுமே ரோமின் செல்வாக்குக் குட்பட்டது.

சிரியாவுடனும் ஏட்டோலியருடனும் போர்கள், கி.மு.193-188: ஆயினும், கிரீஸில் பல அரசுகளுக்கு இது உடன்பாடில்லை. ரோமாபுரியின் ஆதிக்கத்தை வெறுத்தனர் பூவோஷியர்கள் (Bveotions). 'கிரேக்க மொழி பேசிய மாசிடோனியரின் ஆதிக்கமே மேல்' என்று அவர்கள் கருதினர். தங்களது லீக்கைச் சேர்ந்திருந்த சில நகரங்களை இழந்தது காரணமாக ஏட்டோலியரும் ரோமை வெறுத்தனர். தனது துறைமுகங்களையும் கப்பற் படையையும் ரோம் பறித்துக் கொண்டதால் ஸ்பார்ட்டாவை ஆண்ட நாபிஸும் (Nabis) ரோமை வெறுத்தார்.

இச்சூழ்நிலையில்சிரியாவைஆண்ட 3ஆம்ஆன்ட்டியோக்கஸ் (Antiochus) என்ற மன்னரின் உதவியை ஏட்டோலிய அரசு நாடியது. ஆசியாவில் பல போர்களில் வென்று சிரியாவை ஒரு பெரிய நாடாக ஆக்கி மகா ஆன்ட்டியோக்கஸ் (Antiochus the Great) என்ற பட்டத்தையும் பெற்று ஆண்டு வந்தார் அவர். முன்பு திரேசில் (Thrace) எகிப்துக்குச் சொந்தமாயிருந்த சில நகரங்களைக் கைப்பற்றுவதற்கென ஐரோப்பாவுக்குள்ளும் தனது ஆக்கிரமிப்புகளை அவர் நடத்தி வந்தார். ஆசியாவிலிருந்த கிரேக்க நகரங்கள் பல அவரது ஆட்சிக்கு உட்பட்டிருந்தன.

கி.மு, 194-ல் அவரது தூதர்கள் ரோமுக்குச் செல்ல வேண்டியிருந்தது. ஐரோப்பாவுக்குள் ஆன்ட்டியோக்கஸ் அடியெடுத்து வைக்கக்கூடா தென்றும், அவ்வாறு அவர் செய்தால் போர் மூளும் என்றும் ஆசியாவில் அவரது ஆட்சியிலிருந்து வரும் கிரேக்க நகரங்களைத் தான் விடுவிக்க வேண்டி யிருக்கும் என்றும் அவர்கள் மூலம் சிரியாவுக்கு எச்சரிக்கை அனுப்பியது ரோம். இவ்வாறு இரண்டு அரசுகளுக்கும் ஆதிக்கப் போட்டி இருந்து வந்தது. அச்சமயத்தில்தான் ஏட்ரோலியரின் அழைப்பு வந்தது. அதே நேரத்தில் ரோமின் பொருமை

காரணமாகக் கார்த்தேஜைவிட்டு ஓடி வந்த ஹேனிபாலும் ஆன்ட்டியோக்கஸை வந்து அண்டினர். இதற்கிடையில் கி.மு. 193–192-ல் ரோமானியத் தூதர்கள் எச்சரிக்கைகள் விடுப்பதற்கெனச் சிரியா சென்று வந்தனர். அவர்கள் தனக்குத் திருப்தி யளிக்கக் கூடிய பதிலைக் கொண்டு வரவில்லை என்று கூறி, போருக்கு வேண்டிய ஏற்பாடுகளைச் செய்தது ரோம். கடற்படையும் தரைப்படையும் தயாராயின.

கிரீஸுக்கு வரும்படி ஆன்ட்டியோக்கஸுக்கு அழைப்பு அனுப்பி விட்டு டெமிடிரியாஸைக்கைப்பற்றினர் ஏட்டோலியர்; சால்சிஸையும் கைப்பற்ற முயன்றனர் அவர்கள். 10,000 பேர் களைக் கொண்ட படை ஒன்றுடன் ஆன்ட்டியாக்கஸும் டெமிடிரியாஸ் வந்து சேர்ந்தார். ஏட்டோலியலீக் லாமியாவில் (Lamia) மாநாடு ஒன்றைக் கூட்டியது. தனது தளபதியாக ஆன்ட்டியோக்கஸை அது நியமித்தது. ஆனால், அக்கேய லீக் கைச் சேர்ந்த நகரங்கள் ரோமையே ஆதரித்தன. மாசிடோனிய மன்னர் பிலிப்பும் ரோமையே ஆதரித்தார். பூவோஷியர்கள் நடுநிலை வகித்தனர்.

ரோமானியரின் சிறிய படைப் பிரிவு ஒன்றை டீலியம் (Delium) என்ற விடத்தில் தோற்கடித்துச் சால்சிஸைக் கைப்பற்றினர் ஆன்ட்டியோக்கஸ். பின்னர் பல மாதங்களை வீணாகக் கழித்தார். இறுதியில் கி.மு. 191-ல் மீண்டும் படையுடன் கிளம்பி மேற்கு கிரீஸுக்குச் சென்றபோது, ரோமாபுரிக்கு எதிராக அவரை ஆதரிப்பதற்கு யாரும் முன்வரவில்லை. அச்சமயத்தில் அசீலியஸ் கிளாபிரியோ (Acilius Glebrio)என்பவரின் தலைமையில் 22,000 ஆட்களடங்கிய ரோமானியப்படை தெசாலி வந்து சேர்ந்தது. சிரியாவை ஆதரித்த பல நகரங்கள் உடனே ரோமுக்குப் பணிந்தன.

ரோமானியப் படைகள் தெற்குப் பகுதிக்கு வருவதைத் தடுப்பதற்கெனத் தெர்மாப்பிளே (Thermopylae) கணவாயை அடைத்து நின்றார் ஆன்ட்டியோக்கஸ். ஆனால், முன்பு பாரசீகப் போரின்போது லியோனிடாஸுக்குக் (Leonidas) கிட்டிய கதியே இவருக்கும் கிட்டியது. மலைமீது ஏறிச் சுற்றிக் கொண்டு பின்புறமாக வந்து இவரைத் தாக்கினர் சில ரோமானியர். எனவே, யூபோவாலிருந்த சால்சிஸுக்கும் அங்கிருந்து ஆசியாவுக்கும் ஓடினர் ஆன்ட்டியோக்கஸ்.

ஏட்டோலியர்களுடன் போர் ஓய்வு உடன்படிக்கை ஒன்றைச்செய்து கொண்டுஆன்ட்டியோக்கஸுடனான போரிலேயே முழுக் கவனத்தையும் செலுத்தினர் ரோமானியர்.

இரண்டு கான்சல்களில் ஒருவரான சிப்பியோ (ஆப்பிரிக்கானஸ்சிப்பியோவின் சகோதரர்)என்பவர் படையுடன் கிரீஸுக்கு வந்து, அங்கிருந்து ஹெல்லஸ்பாண்ட்டுக்குச் (Hellespont) சென்று கி.மு.190-ல் சிப்பிலஸ் குன்றின்சரிவிலிருந்த மக்னீஷியா (Magnesia and Sipylum) என்ற நகருக்கருகில் நடந்த போரில் ஆன்ட்டியோக்கஸை அறவே முறியடித்தார். அதற்கு முந்திய ஆண்டிலேயே ரோமானியர் சிரியக் கப்பற் படையையும் பல முறை தோற்கடித்திருந்தார். எனவே, சமாதானம் செய்து கொள்ள முன் வந்தார் சிரிய மன்னர். தாரஸ் குன்றுக்கு (Mount Taurus) மேற்கிலிருந்த பிரதேசம் முழுவதும், அதாவது ஆசியா மைனர் முழுவதும், அதிலிருந்த கிரேக்க நகரங்களும் ரோமானியர் வசமாயின. அவரது யானைகளும் கப்பற் படையும் பறிக்கப்பட்டன. போரிழப்பீடாகப் பெருந்தொகையைத் தருவதற்கும், ஹேனிபாலை ரோமானியரிடம் ஒப்படைப்பதற்கும் அவர் இணங்கினர்.

இவ்வாறு சிரியாவிட மிருந்து பறிக்கப்பட்ட பிரதேசங்கள் பெர்கமம், ரோட்ஸ் ஆகிய அரசுகளுக்கிடையில் பங்கிடப்பட்டன. கிரேக்க நகரங்களில் சில சுதந்திரமானவையாக அறிவிக்கப்பட்டன. இந்த ஏற்பாடுகளைச் செய்வதற்கென்று கி.மு. 189-ல் பத்துக் கமிஷனர்களை ரோம் அனுப்பி வைத்தது. அதே ஆண்டில் படை நடத்தி வந்த மேன்லியஸ் வல்சோ (Manlius Vulso) என்ற கான்சல், பெர்கமம் போன்ற தனது நட்பரசுகளைத் தாக்கிய பிசிடியர்களையும் (Pisidians) கலேஷியாவில் வாழ்ந்த கால்களையும் (Gauls of Galatia) வென்று அடக்கினர். ரோமானிய வியாபாரிகள் பெருமளவில் ஆசியாவுக்கு வந்தனர்.

ஏட்டோலியருடன் போர் தொடர்கிறது : கி.மு. 190—189. சிரியாவுடனான போர் முடிவுற்றதும் ஏட்டோலியாவுடனான போர் ஓய்வு ஒப்பந்தத்தையும் முறித்துக்கொண்டு கி.மு. 190-ல் போரில் இறங்கியது ரோம். எல்லாவிடங்களிலும் ஏட்டோலியர்கள் தோற்கடிக்கப்பட்டனர். இறுதியில் கோட்டைக் கொத்தளங்கள் நிறைந்த அம்பிரேசியா (Ambrasia) நகரையும் ரோம் கைப்பற்றியதும் போர் நின்றது. (முன்பு பிர்ரஸ்ஸின் தலைநகரான அம்பிரேஸியாவை ஏட்டோலியா பின்னர் கைப்பற்றியிருந்தது.) ஏட்டோலியர்கள் ரோமுடன் சமாதானம் செய்து

கொள்ள வேண்டியதாயிற்று. கி.மு. 192-க்குப் பிறகு கைப் பற்றிய நகரங்க ளனைத்தையும் அவர்கள் விட்டுக் கொடுக்க வேண்டியதாயிற்று; போர், சமாதானம் ஆகிய இரண்டிலும் ரோமையே அவர்கள் ஆதரிக்க வேண்டுமென்றும், தமது லீக்கில் இனி எந்த நகரையும் அவர்கள் இணைத்துக்கொள்ளக் கூடாது என்றும் விதிக்கப்பட்டது. இவ்வாறு ஏட்டோலியலீக் ரோமின்கட்டுப்பாட்டில் வந்தது. விரைவிலேயே அதன் ஐக்கிய மும் செல்வச்செழிப்பும் குன்றின. அதன் மக்கள் தொகையும் குன்றியது. அவர்கள் வழக்கமான தமது தொழில்களை இழந்து கடற்கொள்ளைகளில் ஈடுபட்டு வாழ்ந்துவர வேண்டியதாயிற்று. அம்பிரேசியாவிலிருந்த கலைப்பொருட்கள் அனைத்தையும் ரோமானியர் கவர்ந்து சென்றனர்; ரோமானியக் கப்பல்களிட மிருந்து சுங்கமோ அல்லது வேறு கட்டணமோ ஏட்டோலிய லீக் வசூலிப்பது தடைசெய்யப்பட்டது,

வட இத்தாலியில் போர்கள், கி.மு. 200 – 178: இவ்வாறு மேற்கிலும் கிழக்கிலும் தனது ஆதிக்கத்தை நிறுவிவந்த ரோம் அதே சமயத்தில் ரூபிகனுக்கு அப்பாலிருந்த வட இத்தாலி யிலும் தனது ஆட்சியை விரிவுபடுத்த முயன்று வந்தது. எனி னும், கார்த்தேஜுடனும் சிரியாவுடனுமான போர்கள் முடிவுற்ற பின்னரே, தனது முழுக் கவனத்தையும் ரோமால் வட இத்தாலி யில் செலுத்த முடிந்தது. போ நதிப் பள்ளத்தாக்கில் வாழ்ந்து வந்த கால்களுடன் (Gauls) முக்கியமாகப் போய்களுடனும் (Boii) இன்சுப்ரேக்களுடனும் (Insubres) கி.மு. 200 முதல் 181 வரை இடைவிடாத போர்களை அது நடத்தியது. அதே சமயத்தில் வடமேற்கில் கடற்கரை ஆல்ப்ஸுக்கும் (Maritine Alps) கடலுக்கும் இடைப்பட்ட பகுதியில் வாழ்ந்து வந்த லிகூரியர்களுடனும் கூடப் போர்கள் நடைபெற்றன; ஸ்பெயி னுக்குச் செல்வதற்கு இந்த லிகூரியவழி மிகவும் தேவைப் பட்டது. இப்போர்களுக்கென ஆண்டுதோறும் இரு ரோமானி யப்படைகள் கான்சல்களின் தலைமையில் வட இத்தாலிக்கு அனுப்பப்பட்டன. ஒரு கான்சல் லிகூரியாவையும், மற்றவர் சிசால்ப்பைன் காலியும் தாக்கினர். ஆண்டுதோறும் இவ்வாறு தாக்கப்பட்டதால் போய்கள் கி.மு. 191-ல் கொர்னீலியஸ் சிப்பியோ நாசிகா (Cornelius Scipio Nasica) என்ற கான்சலிடம் இறுதியாகச் சரணடைந்தனர். அவர்கள் அனைவருமே ரோமா னியரின் ஆட்சிக்கு அடிமைப்பட்டனர்; அவர்களின் நிலப்பரப் பில் பாதி பிடுங்கப்பட்டு, ரோமானியக் குடியேற்றங்கள் அங்கு நிறுவப்பட்டன. அடுத்த மூன்றே ஆண்டுகளில் சிசால்பைன் காலின் முக்கியமான இடங்களில் பல குடியேற்றங்கள் இவ்

விதம் நிறுவப்பட்டன. சான்ருக, வட கிழக்குக் கடற்கரை யோரமாகச் சென்ற சாலையைக் கண்காணிக்கும் பொருட்டு பொட்டென்ஷியா (Potentia), பிசாரம் (Pisaurum) ஆகிய குடி யேற்றங்களும், போய்களின் பிரதேசத்தின் வழியாக வட இத்தாலிக்குச் சென்ற ஏமிலியாச் சாலையைக் காப்பதற்கெனப் பார்மா, மியூட்டினு, பொலோனியா ஆகிய குடியேற்றங்களும் நிறுவப்பட்டன. அதேபோல் கால்களின் படையெடுப்பி லிருந்து வெனிட்டிகளின் (Veneti) பிரதேசத்தைக் காப்பதற் கென அக்வீலியா (Aqvileia) நிறுவப்பட்டது. லிகூரியரின் தாக்குதல்களைத் தடுப்பதற்கென லிகூரியாவின் எல்லையில் லூனு (Luna), பிசே (Pisae) லூக்கா (Luca) ஆகியவை நிறுவப் பட்டன. இவ்வாறு வட இத்தாலியில், குறிப்பாகச் சிசால்ப் பைன் காலில் ரோமின் ஆட்சி உறுதியாக நிறுவப்பட்டது. ஆயினும், இத்தாலியின் ஒரு பகுதியாக அது கருதப்படவே இல்லை. இத்தாலிக்கு அப்பாலிருந்த மாநிலமாகவே[1] அது கருதப்பட்டு, சில ஆண்டுகள்வரை கான்சல் ஒருவரின் தலை மையில் படைகள் ஆண்டு தோறும் அப்பகுதிக்கு அனுப்பப் பட்டு வந்தன. இறுதியில் கி.மு. 181-ஆம் ஆண்டில்தான் சிசியி யையும் சார்டினியாவையும்போலச் சிசால்ப்பைன் காலுக்கும் பிரேட்டர் ஒருவர் அனுப்பப்பட்டார். கி.மு. 177ல் இரண்டு பிரேட்டர்கள் அனுப்பப்பட்டனர்; சிசால்ப்பைன் காலை இரண் டாகப் பிரித்து நிர்வகித்து வந்தனர் அவர்கள். அங்கிருந்த ரோமானியக் குடியேற்றங்களும், இத்தாலியின் இதர பகுதிகளி லிருந்த குடியேற்றங்களைப் போலவே, சுயாட்சி உரிமையையும் படைப்பணிக் கடமையையும் பெற்றிருந்தன.

கால்களைப் போலவே லிகூரியர்களும் பல குலங்களாகப் பிரிந்து வாழ்ந்து வந்தனர். இவர்கள்மீதும் கிட்டத்தட்ட ஆண்டு தோறும் தாக்குதல் தொடுத்தது ரோம். ரோமானியரது குடி யேற்றங்களான பிசே, பொலோனியா ஆகியவற்றை லிகூரியர் பலமுறை தாக்கினர். கி.மு. 188ல் அப்புவானி (Apuani) என்ற லிகூரியக்குலத்தினரை அடியோடு முறியடித்து, அவர்கள் அனை வரையும் சரம்னியத்துக்கு இழுத்துச்சென்று குடியேற்றியது ரோம். மற்றொரு குலத்தினரான இங்காளிகளை (Ingauni) கி.மு. 181ல் தோற்கடித்து நசுக்கினர் ஏமிலியஸ் பாலஸ் (Amelius Paulus). இதற்குப் பிறகு லிகூரியரில் பெரும்பாலோர்

1. ரோமின் வரலாற்றில் 'Provinco' என்று இது அழைக்கப்பட்டது. இரு கான்சல்களும் ஆண்டுதோறும் இத்தகைய 'அந்நியப்பகுதிகள்' இரண்டுக்குப் படையுடன் அனுப்பப்பட்டு வந்தனர். இதன் காரணமாகத்தான் 'Provinco" என்ற சொல்லுக்கு 'அதிகார எல்லை' என்ற பொருள் வந்தது.

ரோமுக்குப் பணிந்தனர். அவர்களது கப்பல்கள் அனைத்தும் பறிக்கப்பட்டன ; அவர்தம் நகரங்களின் கோட்டை மதில்கள் இடித்துத் தரைமட்ட மாக்கப்பட்டன.

எனினும், லிகூரியர்களில் சிலர் அங்கு மிங்குமாக ரோமானிய ஆதிக்கத்தை எதிர்த்து வந்தனர். கி.மு. 117 வரையில் இந்த எதிர்ப்பு நீடித்தது. அடிக்கடி கடுமையான போர்கள் நடைபெற்று வந்தன. கி.மு. 117க்குப் பின்னரும்கூட லிகூரியர் ரோமின் ஆட்சியை முற்றிலும் ஏற்றுக்கொண்டனர் என்று கூற முடியாது. அகஸ்டஸின் காலத்தில்தான் லிகூரியா ரோமுக்கு இறுதியாகப் பணிந்தது. இருப்பினும் லிகூரியா வழியாக பிசாவிலிருந்து வடா சபாடா (Vada Sabbata) வரையில் ஒரு இராணுவ சாலையை ஏமிலியஸ் ஸ்காரஸ் (Aemilie Scaurus) கி.மு. 109-ல் அமைத்தார். இது ஏமிலியஸ் ஸ்காரஸ் சாலை என்று அழைக்கப்பட்டது. பின்னர் அது கடற்கரையோரமாகவே டிரான்ஸ் ஆல்ப்பைன் கால் (Gallia Transalpina) வரையில் நீட்டிக்கப்பட்டது. நாளா வட்டத்தில் லிகூரிய நகரங்கள் பல வற்றுக்கு 'முனிசீபியா' (Municlpia) உரிமைகள் தரப்பட்டன.

மூன்றாவது மாசிடோனியப் போர் : கி.மு. 195–166 : ரோமுடனான இரண்டு போர்களுக்குப் பின்னரும்கூடக் கிரீஸில் தனது செல்வாக்கை நிறுவுவதற்கு முயன்றார் மாசிடோனிய மன்னர் பிலிப். கிரீஸிலிருந்த அரசுகளுக்கிடையே பலவித மான பூசல்கள் இருந்துவந்தன. அவற்றை எல்லாம் தீர்த்து வைப்பதற்குத் தன்னையே அழைக்க வேண்டுமென்று ரோம் கோரியது. இதனால் ரோமுக்குப் மாசிடோனியாவுக்குமிடை யிலான உறவுகள் மோசமடைந்தது இயற்கையே. இந்நிலையில் கி.மு. 181-ல் பிலிப் இறந்தார்.

அடுத்து மாசிடோனிய அரியணையில் அமர்ந்தவர் அவரது மகனான பெர்சியஸ் (Perseus). அவரும் தனது தந்தையின் கொள்கைகளையே பின்பற்றினர். ஆசியாவில் பெர்கமத்தின் பகைவர்கள் மாசிடோனியாவின் நண்பர்களாயினர். எனவே, அங்கு மாசிடோனியா தனது ஆதிக்கத்தை மீண்டும் நிறுவத் திட்டமிட்டுள்ளது என்று பெர்கமத்தின் மன்னர் யூமினஸ் (Eumenes) ரோமுக்குப் புகார் செய்தார். இத் திட்டத்தை அறிந்து வருவதற்கெனப் பல முறை தனது அதி காரிகளை மாசிடோனியாவுக்கு அனுப்பியது ரோம். இதனால் ஆத்திரமடைந்தார் பெர்சியஸ். இரு தரப்பினருமே போருக்கு ஆயத்தமாயினர். கி.மு. 171-ல் போர் தொடங்கியது.

மாசிடோனியாவைச் சுற்றியிருந்த அரசுகள் பெரும்பாலும் ரோமுக்கு அடங்கியவையாகவே இருந்தன. ஆயினும், ரோமிலுல் அனுப்பப்பட்ட தளபதிகளின் திறமை இன்மை காரணமாக ஆரம்பத்தில் சில வெற்றிகள் பெர்சியஸுக்குக்கிட்டின. கி.மு. 168-ல் ஏமிலியஸ் பாலஸ் (Aemilius Paulus) என்ற திறமைமிக்க ஒருவர் கான்சலாக நியமிக்கப்பட்டுப் படையுடன் கிரீசுக்குப்புறப்பட்டார். அவர் ஒலிம்பஸ் (Olympus) மலைகட்கும் கடலுக்கும் இடையில் **எனீப்பியஸ்** (Enipeus) நதிக்கரையில் நடந்த போரில் பெர்சியஸைத் தோற்கடித்தார். அடுத்தபடியாக பிட்னு (Pydna) என்ற விடத்திலும் அவர் பெருவெற்றி பெற்றார். சாமோதிரேஸுக்கு (Samottrace) ஓடிய பெர்சியஸ் சிறை பிடிக்கப்பட்டு ரோமுக்கு இழுத்துச் செல்லப்பட்டார். சார்டீனியா சிசிலி ஆகியவற்றைப்போல் தனது 'மாநிலமாக' (Province) மாசிடோனியாவை ஆக்காமல், பெயரளவில் சுயாட்சி உரிமையை அதற்கு அளித்துத் தனக்குக் கட்டுப்பட்ட ஒருபகுதியாக் அதை ஆக்கிக் கொண்டனர் ரோமானியர்; அதேபோல் கிரீஸ், எப்பைரஸ், இலீரியா ஆகியவையும் தன்னுல் வெல்லப்பட்ட, தனக்குக் கட்டுப்பட்ட, சுயாட்சி உரிமை பெற்ற பகுதிகளாகவே ரோமால் நடத்தப்பட்டன; அவற்றின் பாதுகாப்பு ரோமின் பொறுப்பு என்றும், அதற்கென ஆண்டுதோறும் ஒரு தொகையை ரோமுக்கு அவை செலுத்த வேண்டும் என்றும் விதிக்கப்பட்டது; படைகளை அவை வைத்திருப்பதும் மற்ற அரசுகளுடன் கூடி லீக்குகளை அமைப்பதும் கூடாது என்று தடை விதிக்கப்பட்டது. 'அந்நிய மாநிலங்களுக்கு (Provinces)' அனுப்பப்பட்டதுபோல், ரோமின் அதிகாரிகள் இவ்வரசுகளுக்கு அனுப்பப்படவில்லை; எனினும், உண்மையில் அவை ரோமின் ஆதிக்கத்துக்குக் கட்டுப்பட்டவையாகவே இருந்தன. நீனைத்த நேரத்தில் இவற்றுக்குத் துருப்புகளை அனுப்பி, நிர்வாகத்தை மேற்கொள்ளக் கூடிய உரிமையை ரோம் பெற்றிருந்தது.

இதை விடவும் மோசமான நிலை மாசிடோனியாவிற்கு ஏற்பட்டது, அதன் முடியாட்சி முடிவுக்கு வந்தது. நாடு நான்கு பகுதிகளாகப் பிரிக்கப்பட்டு, ஒவ்வொன்றுக்கும் தனித்தனியான தலைநகரும் நிர்வாக அமைப்பும் நிறுவப்பட்டன. ஒரு பகுதியில் வாழ்ந்த எவருக்கும் மற்றப்பகுதிகளில் எவ்வித சொத்தும் இருக்கக் கூடாது; எல்லைக்கப்பாலிருந்து காட்டுமிராண்டிக் குலங்கள் சிலவற்றால் தாக்கப்படக்கூடிய அபாயம் இருந்த சில இடங்களைத் தவிர வேறு எங்கும் அப்பகுதிகளில் சுதேசப்படைகள் இருக்கக் கூடாது. கப்பல் கட்டுவதற்கென மரம் வெட்டுவதும், சுரங்கங்களிலிருந்து உலோகங்களை எடுப்

பதும் தடை செய்யப்பட்டன. செம்பை மட்டும் தோண்டி எடுக்கலாம் என்றும், ஆனால், அதற்கென ஒருதொகையை ரோமுக்குச் செலுத்த வேண்டும் என்றும் கூறப்பட்டது; மேலும் முன்பு அரசருக்குக் கொடுக்கப்பட்டு வந்த வரியில் பாதியை இப்பொழுதுமுதல் ரோமுக்குத் திறையாக மாசிடோனியா செலுத்த வேண்டி வந்தது.

கிரீஸும் எகிப்தும்: மற்ற நாடுகளோடு ஒப்பிட்டுப் பார்க்கையில் கிரீஸ் ஓரளவு நல்ல முறையிலேயே நடத்தப் பட்டது. அதிலிருந்த அரசுகளும் லீக்குகளும் கலைக்கப் படாமல் அப்படியே இருக்க அனுமதிக்கப்பட்டன. அவை ஒவ்வொன்றிலும் ரோமை ஆதரித்தோரும் எதிர்த்தோருமாக இரு கட்சிகள் இருந்தன. அவ்வாறு எதிர்த்தவர்களுள் ஆயிரத் துக்கும் அதிகமானோரை விசாரணைக்கென்று இத்தாலிக்கு இழுத்துச் சென்றது ரோம். அங்குப் பல்வேறு நகரங்களில் விசாரணை ஏதுமின்றியே, பதினறு ஆண்டுகள் அவர்களை வைத்திருந்தபின், உயிருடனிருந்த 300 பேர்களைத் தாயகம் திரும்பிப் போகும்படி விடுவித்தது.

தனது நட்பு நாடாக எகிப்தைக் கருதிக் காத்தது ரோம். மாபெரும் ஆன்ட்டியோக்கஸின் மகனான ஆன்ட்டியோக்கஸ் எபிபேனஸ் (Epiphanes) அதன் மீது படையெடுக்கத் துணிந்த போது, பாப்பிலியஸ் லேனஸ் (Popilius Laenas) என்ற தூதரை அனுப்பி, அவரைத் திரும்பிச் செல்லும்படி ஆணையிட்டது ரோம். அவர் தயங்கிய பொழுது, தன்கையிலிருந்த திராட்சைக் காம்பால் வட்டம் வரைந்து பதில் சொல்லிவிட்டுத்தான் அதை விட்டு வெளியில் அடியெடுத்து வைக்க வேண்டுமென்று லேனஸ் கூறினராம். இறுதியில் எபிபேனஸ் தன் நாட்டிற்குத் திரும்பிச் செல்ல வேண்டியதாயிற்று. இதேபோல் அவரால் தாக்கப்பட்ட யூதர்களும் கூட ரோமின் உதவியைக் கோரினர். இவ்வாறு சுதந்திரமான பல அரசுகளும் மக்களும் கூட ரோமின் படை உதவியையும் பாதுகாப்பையும் நாடும் அளவுக்கு அதன் செல்வாக்கும் ஆதிக்கமும் கிழக்கில் வளர்ந்தன.

வெற்றிகளின் விளைவுகள்: இடையறுத இவ் வெற்றிகளின் விளைவாக ரோம் அரசின் கருவூலம் நிரம்பி வழிந்தது. போரின் போது கைப்பற்றப்பட்ட செல்வம், திறை, அரசின் நிலங்களிலி ருந்து வந்த குத்தகை – என்று இப்படிப் பல வழிகளில் பெருஞ் செல்வம் ரோமின் கருவூலத்துக்கு வந்தது. இதன் விளைவாக ரோமின் குடிகளிடமிருந்து (Citizens) சொத்து வரி (tributum) வசூலிப்பது நிறுத்தப்பட்டது. பின்னர் பல நூற்றாண்டுகள்

வரை இது வதூல் செய்யப்படவேயில்லை. (சீசர் கொலையுண்ட ஆண்டு மட்டும்தான் இதற்கு விதிவிலக்கு) இச்சலுகை காரணமாக இத்தாலியர் அனைவருமே ரோமின் குடிகளாக் ஆவதற்குப் பெரு முயற்றி செய்தனர்.

ரோமானியப் பிரபுக்களின் செல்வமும் அதேபோல் பெருகின. தமது இல்லங்களையெல்லாம் அரண்மனைகளைப்போல் கட்டிக்கொண்டு, மிகுந்த ஆடம்பரத்தோடு அவர்கள் வாழத் துவங்கினர். கைப்பற்றப்பட்ட நாடுகளிலிருந்து, கவர்ந்து வரப்பட்ட கலைச் செல்வங்கள் இவ்வரண்மனைகளை அலங்கரித்தன. இவ்வாறு வெல்லப்பட்ட நாடுகளின் செல்வங்கள் சூறையிடப்பட்டு ரோமாபுரிக்கு வந்து சேர்ந்தன.

இந்நிலையில் இத்தாலிக்கு அப்பாலிருந்த மாநிலங்களில் அதிகாரிகளாகவும் கவர்னர்களாகவும் ஆவதற்கு ஏராளமான போட்டியிருந்தது. காரணம், அங்குச் சென்று பதவி வகித்த அனைவரும் ஓரிரண்டு ஆண்டுகளில் கொழுத்த செல்வந்தர்களாக திரும்பியதுதான். ஆனால், ரோமில் அதிகாரியாக இருந்த வரே மாநில கவர்னராக ஆகமுடியும். எனவே ரோமில் நடந்த தேர்தல்களில் லஞ்சம் முதலிய பலவித ஊழல்களைப் புரிந்து, எவ்வாருகிலும் வெற்றி பெற முயன்றனர் அவர்கள். இதனல் தேர்தல் முறையில் பலவிதமான தீமைகள் புகுந்தன. இவற்றைத் தடுப்பதற்கென கி.மு. 182-க்கும் கி.மு. 137-க்கு மிடையில் பல சட்டங்கள் இயற்றப்பட்டன. தேர்தல்களின் போது லஞ்சம் கொடுப்பதைத் தடை செய்தது ஒரு சட்டம்; இரகசிய வாக்குப் பதிவைப் (Secretbellot) புகுத்தியது இன்னொரு சட்டம். ஆனல் இச்சட்டங்கள் அனைத்தும் தமது நோக்கத்தின் இறுதியில் தோல்வியுறவே செய்தன.

அதேபோல் மாநிலங்களை அளவுக்கு மீறிச் சுரண்டுவதையும் தடைசெய்வதற்கெனப் பல சட்டங்கள் இயற்றப்பட்டன. அவ்வாறு சுரண்டிச் செல்வம் திரட்டுவோரைத் தண்டிக்கத் தனி நீதிமன்றம் ஒன்றை நிறுவ கி.மு. 149-ல் இயற்றப்பட்ட கல்பூர்னியாச் சட்டம்(lex calpurnia)வகைசெய்தது. அந்த நீதி மன்றத்தில் பிரேட்டர் ஒருவர் நீதிபதியாகவும், செனேட்டர்கள் சிலர் ஜூரர்களாகவும் (jurors) இருந்தனர். மாநிலங்களைச் சுரண்டுவதில் இவர்களுக்கும் பங்கும் அக்கரையும் இருந்ததால் கல்பூர்னியாச் சட்டம் வெறும் கண்துடைப்புச் சட்டமாகவே இருந்தது. விசாரணைக்குக் கொண்டு வரப்படும் அதிகாரிகளிடமிருந்து லஞ்சம் வாங்கிக் கொண்டு, நிரபராதிகள் என்று அவர்களை விடுவித்தனர் இந்த நீதி மன்றத்தினர். ஒரு குறிப்பிட்ட

குற்றத்தை விசாரிப்பதற்கென ரோமில் நிரந்தரமாக நிறுவப் பட்ட முதல் நீதி மன்றம் இதுதான். ஒரு குற்றம் புரியப்பட்ட பொழுது அதை விசாரிப்பதற்கென ஒரு விசாரணைக் குழுவை நியமிப்பதுதான் நடை முறையில் வழக்கமாயிருந்து வந்தது.

ரோமில் ஆடம்பரம் மிகுந்து, அதனால் தீமைகளும் குற்றங் களும் அதிகரிப்பதைக் கண்டு, ஆடம்பரங்களைத் தடை செய் வதெற்கென்று சில சட்டங்களும் கொணரப்பட்டன (sumptnary laws). ஆடை அணிகலன், விருந்து, விழாமுதலிய வற்றுக்கெனச் செலவிடப்படும் தொகைகளைக் கட்டுப்படுத்த முயன்றன இச்சட்டங்கள். ஆடம்பரங்களை விரும்பிய செல்வந் தராலேயே இயற்றப்பட்ட இச்சட்டங்கள், மற்றவர்களை ஏமாற்றுவதற்கென்றே இயற்றப்பட்டன. எனவே ஆடம்பரங் களும், அதையொட்டிய தீமைகளும், குற்றங்களும் இச்சட்டங் களால் சிறிதளவும் குறையவில்லை.

மாசிடோனியா ரோமின் மாநிலமாதல், கி.மு. 147—146 : கி. மு. 168-ல் மாசிடோனியாவில் செய்யப்பட்ட நிர்வாக ஏற்பாடு செம்மையாகச் செயல்படவில்லை என்பதை விரைவிலேயே உணர்ந்தது ரோம். பெர்சியஸுக்குப் பிறகு அந்நாட்டின் மன்னராக வேண்டுமென்று பலர் முயன்றனர். ஆன்டிரிஸ்கஸ் (Andriscut) என்பவர் பெர்சியஸின் பிள்ளை என்று தன்னைக் கூறிக்கொண்டு கி.மு. 152-ல் தன்னை அரசரென அறிவித் துக்கொண்டார். அதேபோல் கி.மு. 147-ல் அலெக்சாந்தர் என்ற மற்றொருவர் தோன்றினர். தமது நாட்டை ஒன்றுபடுத்திப் பழைய பெருமையை மீட்டுத் தரவல்ல யாரையும் ஆதரிப்ப தற்கு மாசிடோனிய மக்கள் தயாராக இருந்தனர். இந்நிலையில் தான் பெர்சியஸின் பிள்ளை யென்றும், உறவினர் என்றும் தம் மைக் கூறிக்கொண்டு பலர் முன்னுக்கு வந்தனர். ரோமின் ஆதிக்கத்துக்கு இது ஏற்றதல்ல. மாசிடோனியாவை இழந்து விட அது விரும்பவில்லை.

எனவே, அரசராவதற்கு முயன்ற ஆட்களையெல்லாம் ஒழித்துவிட்டு, புதிய நிர்வாக அமைப்பினை அங்குப் புகுத்தியது ரோம். மாசிடோனியாவில் முன்பு தோற்றுவிக்கப்பட்டிருந்த நான்கு பிரிவுகள் இப்பொழுது அகற்றப்பட்டு, நாடு ஒன்று படுத்தப்பட்டது. எப்பைரஸ், தெசாலி ஆகியவற்றின் பகுதிகள் சிலவும்கூட அதனுடன் சேர்க்கப்பட்டு, ரோமின் புதிய மாநில மாக ஆயிற்று மாசிடோனியா. அதை ஆளுவதற்கெனப் 'புரோபி ரேட்டர்' (Propraetor) என்ற அதிகாரி ரோமிலிருந்து ஆண்டு

தோறும் அனுப்பப்பட்டார். படைகள் செல்வதற்கென மேற்குக் கடற்கரையையும் கிழக்குக் கடற்கரையையும் இணைக்கும் நல்லசாலை ஒன்று அமைக்கப்பட்டது. அச்சாலை எக்னஷியா சாலை (Via Egnatia) என்று அழைக்கப்பட்டது. இப்பாதை காரணமாக அப்பகுதியில் வாணிகம் பெருகியது. இதனால் அங்கு வாழ்ந்த மக்களது நிலையும் ஓரளவு மேம்பட்டது. சுற்றியிருந்த நாகரிக வளர்ச்சி இல்லாத குலங்களின் தாக்குதல்களிலிருந்து ரோமானியத் துருப்புகளால் காக்கப்பட்டது மாசிடோனியா. எனினும், சுதந்திரத்தையும் உரிமைகளையும் இழந்து அடிமைப்பட்ட அதன் செல்வத்தைச் சுரண்டிச் சென்றனர் ரோமானியர்.

கிரீஸில் ரோமின் ஆக்கிரமிப்புகள், கி.மு. 146: மாசிடோனியாவை மாநிலமாக்கியபின், கிரீஸிலும் தனது ஆதிக்கத்தை வலுப்படுத்தத் திட்டமிட்டது ரோம். அக்கேய லீக்கில் பல ஆண்டுகளாகவே பூசல்களும் கைக்கலப்புகளும் இருந்துவந்தன. அவற்றுக்கெல்லாம் காரணம், தன் விருப்பத்துக்கு மாறுக அதன் உறுப்பினராக – ஸ்பார்ட்டாகச் சேர்க்கப்பட்டதுதான். பூசல்களும் மோதல்களும் ஏற்பட்டபொழுதெல்லாம் ஏதாவது ஒரு தரப்பினர் ரோமிடம் முறையீடுசெய்து உதவி கோரினர். இந்த வாய்ப்பைப் பயன்படுத்தி அக்கேய லீக்கைப் பலவீனப்படுத்தத் திட்டமிட்டது ரோம். அதன்படி ஸ்பார்ட்டா, ஆர்காஸ், கொரிந்த், ஆர்க்கேடியாவிலிருந்த ஆர்க்கோமீனஸ் (Orchomenus) ஆகியவற்றை அக்கேய லீக்கிலிருந்து பிரிக்கும் ஆணை ஒன்று கி.மு. 147-ல் பிறப்பிக்கப்பட்டது.

ரோமின் இச்செயலை லீக் உறுப்பினர்களில் பலர் கண்டித்தனர். கொரிந்த் போன்ற பல நகரங்களில் ரோமுக் கெதிராகக் கலகங்கள் நடைபெற்றன. உடனே ரோம் படையனுப்பியது. அப்படை மாசிடோனியாவிலிருந்த ரோமானியக் கான்சலான சிசிலியஸ் மெட்டலஸ் (Caecilius Metellus) என்பவரின் தலைமையில் கிரீஸுக்குள் நுழைந்தது. அக்கேய லீக்கின் தளபதியான கிரிட்டோலாஸ் (Critolous) என்பவர் ரோமானியப் படையைத் தெர்மாப்பிலேயுக்கு அருகில் சந்தித்தார். லீக்கின் படைகள் தோற்றன; தளபதியும் இறந்துபட்டார். அடுத்தபடியாக லீக்கின் தளபதியானவர் டயேயஸ் (Diaeus) என்பவர். கி. மு. 146-ஆம் ஆண்டுக்கென கான்சலாகத் தேர்ந்தெடுக்கப்பட்ட மம்மியஸ் (Mummius) இச்சமயத்தில் படைத்தலைமை ஏற்றுக் கிரீஸுக்கு வந்து கொரிந்த்தை நோக்கி முன்னேறினர். அந்நகருக்கு வெளியில் நடந்த போரில் டயேயஸின் தலைமையி

லான அக்கேயப் படைகள் தோற்கடிக்கப்பட்டன. ரோமானியர்கள் கொரிந்துக்குள் நுழைந்து அந்நகரைச் சூறையாடி அழித்தனர். புகழ்மிக்க கலைச்செல்வங்கள் அழிக்கப்பட்டன. ஏஞ்சியிருந்த சிற்பங்களும் ஓவியங்களும் ரோமுக்கு எடுத்துச் செல்லப்பட்டன. அந்நகர் தீக்கிரையாக்கப்பட்டபொழுது அதிலிருந்த தங்கம், வெள்ளி, செம்பு ஆகிய உலோகங்கள் உருகி ஒன்று சேர்ந்ததால் 'கொரிந்தியாகம்' (Corinthiacum) என்ற புதிய உலோகக் கலப்பு ஒன்று உருவானதாகவும், ரோமில் அதற்குப் பெரும் கிராக்கி இருந்ததாகவும் கூறப்படுகிறது. செல்வமும் சிறப்பும் மிகுந்த நகரமாக விளங்கிய கொரிந்த், ஆள்நடமாட்டம் அதிகமில்லாத பாழடைந்த கிராமமாக ஆயிற்று. சுமார் ஒரு நூற்றாண்டு காலத்திற்குப் பின்னர் தான் ஜூலியஸ் சீசர் (Julius Cæsar) அங்கு ஒரு குடியேற்றத்தை அமைத்தார்.

இதையடுத்துக் கிரீஸ் முழுவதிலுமே பற்பல மாறுதல்களைத் தோற்றுவித்தனர் ரோமானியர். அக்கேயலீக்கும், அதைப் போன்ற மற்றக் கூட்டணிகளும் கலைக்கப்பட்டன. அங்கிருந்த சின்னஞ்சிறு நகர அரசுகளெல்லாம் தனித்தனியாகப் பிரிக்கப்பட்டன. ஆதென்ஸ், ஸ்பார்ட்டா, சிசையோன் (Sieyon) போன்ற சில அரசுகள் சுதந்திரமானவையாக அறிவிக்கப்பட்டன. ரோமுக்கு அவை ஆண்டுதோறும் திறை செலுத்தத் தேவையில்லை. ஆயினும், ரோமானிய அதிகாரிகள் அவற்றுக்குள் நினைத்த நேரத்திலெல்லாம் நுழைவதற்கும், அவற்றின் அரசியலில் தலையிடவும் அனுமதிக்கப்பட்டனர். எனவே, அவற்றின் சுதந்திரம் வெறும் ஏட்டளவில்தான் இருந்தது.

வேறுசில கிரேக்க நகர அரசுகளில் ரோமின் ஆதிக்கம்ஒளிவு மறைவின்றிப் புகுத்தப்பட்டது. ரோமால் கைப்பற்றப்பட்ட மற்றப் பகுதிகளுக்கு அனுப்பப்பட்டதுபோல, இவற்றுக்கும் பத்துக் கமிஷனர்கள் அனுப்பப்பட்டு, நிர்வாக அமைப்பு உருவாக்கப்பட்டது. ஆண்டுதோறும் ரோமுக்கு இவை திறை செலுத்தின; தேவைப்பட்டபோது இவற்றின் குடிகள் ரோமானியப் படையில் சேர்ந்து பணியாற்றினர்; ஓரளவு தம்மைத் தாமே இவை ஆண்டுகொண்டன எனினும், மாசிடோனியாவை ஆண்ட ரோமானியக் கவர்னரின் ஆதிக்கத்துக்குஉட்பட்டவையாகவே இருந்தன.

ரோமை எதிர்த்த கொரிந்த், யூபோயா (Euboea), பூவோஷியா (Boeotia) முதலிய பலவற்றின் நிலங்கள் பறிமுதல் செய்யப்பட்டு ரோமானியரின் சொத்தாக மாற்றப்பட்டன.

எனவே,அவற்றைப் பயிரிட்டவர்களிடமிருந்து ஆண்டுதோறும் குத்தகைகளை (Vectigal) வசூலித்தது ரோம்.

இவ்வாறு கிரீஸ் ரோமுக்கு முழுமையும் உட்பட்ட நாடாக ஆயிற்று. எனினும், ரோமின் மாநிலமாக அது இன்னும் ஆக்கப்படவில்லை. பெயரளவில் ஏதோ சில உரிமைகளைப் பெற்ற நாடாக அது விடப்பட்டது.

மூன்றாவது பியூனிக் போர், கி.மு. 146 : கொரிந்தைத் தீக்கிரையாக்கிய அதே ஆண்டில் கார்த்தேஜையும் தீக்கிரையாக்கினர் ரோமானியர். இரண்டாவது பியூனிக் போருக்குப் பிறகு, கார்த்தேஜ் தரைப்படையோ, கடற்படையோ வைத்திருப்பதைத் தடை செய்தது ரோம்; மேலும், ஏராளமான செல்வத்தையும் போர் இழப்பீடாக ரோம் பெற்றது. ஆயினும், தனது வாணிக முயற்சி காரணமாக, மீண்டும் ஓரளவு விரைவிலேயே தனது பொருளாதார நிலையைக் கார்த்தேஜ் மேம்படுத்திக் கொண்டதைக் கண்ட ரோமானிய செனேட்டர்கள் பொறுமை கொண்டனர்.

இந்நிலையில் ஏற்கெனவே ரோம் எதிர்பார்த்ததைப்போலக் கிழக்கு நுமீடிய மன்னர் மசன்னிகாவுக்கும் (Masannisa) கார்த்தேஜுக்கும் எல்லைப்பூசல்கள் மூண்டன. ரோமுக்குக் குற்றேவல் புரிந்து, அதற்குப் பரிசாக இரண்டாவது பியூனிக் போருக்குப்பின் புதிய பிரதேசங்களைப்பெற்றுக் கார்த்தேஜின் எல்லைவரை விரிவடைந்த மசன்னிசாவின் அரசு, ரோமின் ஆதரவு தனக்கு எப்பொழுதும் உண்டு என்பதை நன்கு உணர்ந்து, வேண்டுமென்றே கார்த்தேஜுடன் எல்லைப் பூசல்களைத் தோற்றுவித்தது; மேலும், கார்த்தேஜ் தன்மீது தாக்குதல்கள் தொடுப்பதாக ரோமுக்கு அடிக்கடி புகார்களைச்செய்து வந்தது. அப்போது ரோம் தலையிட்டு, 'விசாரணைகள்' நடத்தி, மசன்னிசாவுக்கு ஆதரவாகவே தீர்ப்புகளை வழங்கியது.

ரோமின் திட்டத்தை நன்கு உணர்ந்து கொண்ட கார்த்தேஜ் வரப்போகின்ற விளைவுகளை ரோமுக்குப் பணிந்து போவதால் மட்டும் தடுத்துவிட முடியாது என்பதை அறிந்து கொண்டது. எனவே, மீண்டும் ஒருமுறை விசாரணை செய்து, தீர்ப்பு வழங்குவதற்கென வந்த ரோமானியக் குழு ஒன்றை ஏற்றுக் கொள்ள மறுத்து, மசன்னிசாவுடன் நேரடியாகப் பிரச்சனைகளைத் தீர்த்துக் கொள்ளவும், அது முடியாவிட்டால் போருக்குத் தயாராகவும் முடிவு செய்தது கார்த்தேஜ்.

கார்த்தேஜின் கடல் வாணிபத்தைக் கவர்ந்து கொள்ள விரும்பிய ரோமானியப் பிரபுக்கள் மசன்னிசாவுடன் இப் பூசல்களை வாய்ப்பாகப் பயன்படுத்தி, கார்த்தேஜ்மீது போர் தொடுத்து, அதை முற்றிலும் அழித்து விடுவது என்று முடிவு செய்தனர். ரோமில் முன்பு பல உயர்பதவிகளை வகித்து இப் பொழுது செனேட்டின் முக்கிய உறுப்பினர்களுள் ஒருவராக இருந்த கேட்டோ (Cato) என்பவர், தமது நாவன்மை முழு வதையும் கார்த்தேஜைக் குறை கூறுவதிலேயே பயன்படுத் தினர். செனேட்டில் அவர் ஆற்றிய உரைகள் அனைத்துமே 'கார்த்தேஜ் அழிக்கப்படவேண்டும்,' என்ற சொற்களு டனேயே முடிந்தன. எனவே, எவ்விதக் காரணமும் இல்லாமல் மீண்டும் கார்த்தேஜ் மீது போர் தொடுக்க முடிவு செய்தது ரோமானிய செனேட். போருக்கான ஏற்பாடுகள் அனைத்தும் விரைவில் செய்யப்பட்டன.

இவற்றையெல்லாம் கேள்வியுற்ற கார்த்தேஜ், ரோமை எதிர்த்துத் தன்னால் போரிட முடியாது என்பதை நன்கு அறிந் திருந்த தன்மீது தாக்குதல் தொடுக்க வேண்டாமென்று ரோமை வேண்டிக்கொண்டு, ரோமானிய மக்களிடம் சரண டைய முன்வந்தது. கி மு. இதன்மூலம் கார்த்தேஜ் நகரம் முழு வதுமே ரோமானியரிடம் ஒப்படைக்கப் பட்டது. இவ்வாறு தன்னையே ரோமானியரிடம் ஒப்புவித்துவிட்டால் ரோமானியர் மனம் இளகும் என்றும் அதனால் தன்னை அடியோடு அழிக்க மாட்டார்கள் என்றும் அது எண்ணியது. ஆயினும், அதை அழிக்க வேண்டும் என்பதையே நோக்கமாகக் கொண்டிருந் தனர் ரோமானிய செனேட்டர்கள். எனவே, கார்த்தேஜை தான் வேண்டுகோளைப் பொருட்படுத்தாமல் ஆப்பிரிக்காவுக் குச் செல்வதற்கெனத் தனது படையைச் சிசிலியில் லிலிபேயத் துக்கு அனுப்பிவைத்தது ரோம். மீண்டும் வேண்டுகோள் விடுத் தது கார்த்தேஜ். செல்வக் குடும்பத்து வாலிபர்கள் 300 பேரைப் பிணையாகக் கேட்டது ரோம். அழிவைத் தடுக்கும் எண்ணத் தோடு இதற்குக் கார்த்தேஜ் இணங்கியபோதிலும் ரோமானியப் படைகள் கடலைக் கடந்து ஊட்டிகாவுக்கு வந்தன. அங்குச் சென்று அவர்களைச் சந்தித்தனர். கார்த்தேஜின் தூதர்கள் தனது போர்க்கருவிகள்அனைத்தையும்கார்த்தேஜ் தம்மிடம் ஒப்புவிக்க வேண்டுமென்று ரோமானியர் கோரினர். அவ்வாறே செய்தது கார்த்தேஜ்.

மீண்டும் ரோமின் விருப்பத்தை அறிவதற்கு வந்தனர் கார்த்தேஜின் தூதர்கள். தமது கார்த்தேஜைவிட்டு மக்கள் அனைவரும் வேறு எங்காவது சென்று, கடலிலிருந்து பத்து

மைலுக்கு அப்பால் புதிய நகரம் ஒன்றை அமைத்துக் கொள்ள வேண்டும் என்று ஆணையிட்டது ரோம். எவ்வளவு பணிந்தும் அழிவு வருவதை எண்ணிய கார்த்தேஜியர்கள், போரிட்டு அழிவதுமேல் என்று உறுதி பூண்டனர். ஏற்கனவே, போர் ஆயுதங்கள் அனைத்தையும் ரோமானியரிடம் ஒப்புவித்துவிட்ட அவர்கள், புதிய ஆயுதங்களை அவசர அவசரமாகச் செய்து போரிட்டனர். மூன்றுஆண்டுகள் ரோமின் முற்றுகையை அவர்கள் எதிர்த்துப் போரிட்டனர். கி.மு. 147-ல் ரோமின் கான்சலானர் பப்ளியஸ் சிப்பியோ ஆப்பிரிக்கனஸ். சாமாப் போரில் வெற்றி பெற்ற சிப்பியோ ஆப்பிரிக்கானஸின் தத்துப் பேரர் இவர். பப்ளியஸ் கொர்னீலியஸ் சிப்பியோ ஏமிலியானஸ் (Aemilianus) என்பது இவரது முழுப்பெயர். (பாட்டனர் மூத்த ஆப்பிரிக்கானஸ் — Africanus major – என்றும், பேரர் இளைய ஆப்பிரிக்கானஸ் - Afrieamu minon – என்றும் பின்னர் அழைக்கப்பட்டனர்.) இளைய ஆப்பிரிக்கானஸ் கார்த்தேஜின் எதிர்ப்பு குன்றியது. இந்நிலையில் கி.மு. 146-ல் தனது முழுபலத்தையும் திரட்டிக் கார்த்தேஜ்மீது ரோமானியர் இறுதித் தாக்குதல் தொடுத்தனர். அந்நகரம் கைப்பற்றப்பட்டது, அதன் 5 லட்சம் மக்கள் தொகையில் 50,000 பேர் மட்டுமே உயிருடனிருந்து ரோமானியரிடம் சரணடைந்தனர். அந்நகர் தீக்கிரையாக்கப்பட்டது. எஞ்சியிருந்த கட்டடங்கள் அனைத்தும் இடித்துத் தரைமட்டமாக்கப்பட்டன. அங்கு முன்பு நகரம் இருந்தது என்பதே தெரியாதவாறு வெட்ட வெளியாக ஆக்கப்பட்டது.

இவ்வாறு பொருமையால் கார்த்தேஜ் நகரை அழித்து, அதன் ஆதிக்கத்திலிருந்த பகுதியைரோமானியர் ஒருமாநிலமாக அமைத்தனர். அது ஆப்பிரிக்கா என்று அழைக்கப்பட்டது. ஊட்டிகா அம்மாநிலத்தின் தலைநகராக விளங்கியது.

ரோமானியப் பேரரசின் நிலை : இவ்வாறு கி.மு. 146-ல் ரோமானியப் பேரரசானது வெகுவாக விரிவடைந்து விட்டது. ஒரு சின்னஞ் சிறிய நகரம் லத்தீயத்தையும், பின்னர் இத்தாலி முழுவதையும், அதன் பின்னர் இத்தாலிக்கு வெளியில் சிசிலி, சார்டீனியா, ஸ்பெயின், மாசிடோனியா, கிரீஸ், வட ஆப்பிரிக்கா ஆகியவற்றையும் கைப்பற்றி விரிவடைந்தது. மேற்கு ஆசியாவும் எகிப்தும் அதன் கட்டுப்பாட்டின்கீழ் வந்தன. அவற்றையும் ரோம் தனது நேரடியான நிர்வாகத்தின்கீழ் கொண்டு வரும் நாள் தூரத்திலில்லை.

இத்தகைய பரந்த பேரரசை ஆண்டது ரோம் நகரம் மட்டுமே. ரோமிலிருந்த சுமார் 3½ லட்சம் மக்களே அப்

பேரரசை ஆண்டனர். (கி.மு. 142-ல் ரோமின் குடிமக்கள் தொகை 328, 342 என்றும், கி.மு, 115-ல் 394, 336 என்றும் மக்கள் தொகைக் கணக்கீடு காட்டுகிறது.) இவர்களுள்ளும் செல்வத்தில் புரண்ட, மேல் மட்டத்தில் வாழ்ந்த ஒரு சிலரே அதை ஆண்டனர். போர்களும் வெற்றிகளும் மேலும் மேலும் செல்வங்களையும் செல்வாக்கையும் இவர்களுக்குக்கொடுத்தன. குடிமக்கள் அனைவரும் சம உரிமைகள் பெற்றவர்கள் என்பது வெறும் தத்துவமாகச் சொல்லளவிலேயே இருந்து வந்தது.

இந்நிலையில்தான் அந்நகரில் ஆதிக்கம் செலுத்திய செல்வச் சீமான்கள் இடையே போட்டிகள் ஏற்பட்டன. ஆதிக்கத்தைக் கைப்பற்றுவதற்கெனச் சதிகளிலும் கொலைகளிலும் போர்களிலும் அவர்கள் ஈடுபட்டனர். இவற்றின் விளைவாகவே இறுதியில் ஒரு தனி மனிதனின் ஆட்சி ஏற்பட்டது. பின்னர் அதுவே முடியாட்சியாயிற்று.

12. அழிவு ஆரம்பமாகிறது
(கி.மு. 150–120)

அடிமைகளின் நிலை : மேலே கூறப்பட்ட வெளிநாட்டுப் போர்களின் விளைவாக இரண்டு முக்கியமான சமுதாய விளைவுகள் ஏற்பட்டன. 1. ஆக்கிரமிக்கப்பட்ட நாடுகளிலிருந்து சூறையாடிக் கொண்டு வரப்பட்ட பெருஞ்செல்வம் ரோமானியப் பிரபுக்களின் கையில் வந்து குவிந்தது. அந்நாடுகளின் நிலம், சுரங்கங்கள், தொழில்கள். வாணிகம் முதலிய பலவும் அவர்களுக்குச் சொந்தமாயின. 2. அடிமைகளின் எண்ணிக்கை பெருகியது. ஆக்கிரமிக்கப்பட்ட நாடுகளிலிருந்து ஆயிரக்கணக்கானோர் அடிமைகளாக ஆக்கப்பட்டு இழுத்து வரப்பட்டனர். வயல், சுரங்கம், கப்பல் முதலிய பல்வற்றிலும் அடிமைகள் வேலைசெய்ய அமர்த்தப்பட்டனர். வேலைசெய்வதெற்கெனப் பயன்படுத்தப்பட்ட அக்காலத்துக் கருவிகள் மிகவும் எளிமையானவை. யாரும் அவற்றைக்கையாளமுடியும். எனவே தான், அடிமைகளை வேலைக்கு அமர்த்துவது எங்கும் பரவலாகக் காணப்பட்டது.

பண்டைக்காலத்தில் ஆசியாவிலும் கிரீஸிலும் பெரும்பாலும் விவசாயத்தில் அடிமைகளைப் பயன்படுத்தும் வழக்கமில்லை. ஆனால், ரோமில் விவசாயத்திலேயே அவர்கள் பெரும்பாலும் பயன்படுத்தப்பட்டனர். மேலும், சுமார் 50,000 அடிமைகள் வெள்ளிச் சுரங்கங்களில் வேலை செய்தனர். பெரிய கப்பல் ஒவ்வொன்றிலும் 150 முதல் 200 அடிமைகள் வரை துடுப்புத்தள்ளுவத்ற்கென அமர்த்தப்பட்டனர்.

இவ்வாறு அடிமைகளைப் பெருமளவில் அமர்த்தியதற்குக் காரணம் அவர்கள் 'மலிவாகக்' கிடைத்ததுதான். ஈஜியன் தீவு ஒன்றுலிருந்த பிரதான 'அடிமைச் சந்தையில்' கி.மு. 2ஆம் நூற்றாண்டில் நாள் ஒன்றுக்கு 10,000 அடிமைகள் விற்கப்பட்டதாகக் கணக்கிடப் பட்டுள்ளது. அவர்களது விலை மிகவும்

மலிவு. சுதந்திரமான ஒரு மனிதனை வேலைக்கு அமர்த்துவதைக் காட்டிலும், அடிமையை அமர்த்துவது இலாபகரமாகக் காணப் பட்டது. ஒரு சிறிது உணவும், கந்த லாடையுமட்டுமே அவனுக்குப் போதும். கூலி இல்லாமல் நாள் முழுவதும் அவன் உழைத்தான். மலிவாக இருந்த காரணத்தால் அடிமைகளையே பெருவாரியாகப் பயன்படுத்தத் துவங்கியபின், சுதந்திரமான மனிதர்கட்கு வேலையில்லாமல் போய் விட்டது. அவர்கள் ரோமுக்குச் சென்று சோம்பேரிக் கூட்டங்களாக அலைந்தனர்.

ரோமிலும் வேறுநகரங்களிலும் பிரபுக்களின் மாளிகைகளில் வேலை செய்த அடிமைகளின் நிலை ஓரளவு மேலாயிருந்தது. எனினும், மரணதண்டனை முதலிய பலவிதமான தண்டனைகளுக்கு அவர்களும் ஆளாயினர். எசமானர்கள் எவ்வித தண்டனையையும் அவர்களுக்கு அளிக்க முடியும். கிராமப்புறங்களில் பண்ணைகளில் வேலை செய்த அடிமைகளின் நிலைதான் மிகவும் மோசமாக இருந்தது. அவர்கள் கூட்டங் கூட்டமாகச் சங்கிலியால் பிணைக்கப்பட்டு வயல்களில் வேலை செய்தனர். இரவில் சிறைபோன்ற கட்டங்களில் அவர்கள் அடைத்து வைக்கப்பட்டனர். கடின உழைப்பு, போதிய உணவின்மை, கொடிய தண்டனைகள் முதலிய பல காரணங்களால் இளமையிலேயே உடலுரத்தை இழந்து வேலைக்குப் பயன்படாத நிலையை எய்தினர். உடனே அவர்களை எசமானர்கள் தூரத்துத் தீவு ஒன்றுக்கு இழுத்துச் சென்று, விட்டு விடுவர். அங்கு அவர்கள் பட்டினி கிடந்து இறக்க வேண்டியதுதான்.

அதேசமயம், சில அடிமைகளுக்கு ஆயுதப் பயிற்சி அளித்து, அவர்களுக்கிடையில் போட்டிகளையும் நடத்தினர் ரோமானியப் பிரபுக்கள். இத்தகைய அடிமைகள்தான் கிளாடியேட்டர்கள் (Gladiators) எனப்பட்டனர். அவர்கள் எப்பொழுதும் சிறைகளில் அடைத்து வைக்கப்பட்டிருந்தனர்.

அடிமைகளின் கழுத்தைச் சுற்றிப் பட்டைகள் கட்டப்பட்டிருந்தன (slave Collors). "நான் ஓடிவிடாமலிருக்கும் பொருட்டு என்னை நன்றாகப் பிடித்துக் கொள்ளுங்கள்," என்று அவற்றின்மீது எழுதப்பட்டிருக்கும். சில எசமானர்கள் தம் அடிமைகளின் முகத்தில் அடையாளத்துக்கெனச் சூடுகளையோட்டு வைத்திருந்தனர். ரோமாபுரியைப் போல் அடிமைகளை மிகவும் கொடுமையாக நடத்திய அரசு எதுவுமில்லை.

அடிமைகளின் கிளர்ச்சிகள் : இந்நிலையில் இத்தாலியிலும் கிரீஸிலும் சிசிலியிலும் அடிமைகள் பல்வேறு சமயங்களில்

கிளர்ச்சிகள் நடத்தினர். அவற்றுள் சிசிலியில் நடைபெற்ற கிளர்ச்சிகளே மிகவும் பெரியவை. அதற்குக் காரணங்கள் பல : சிசிலிய மக்களிலேயே பலரை அடிமைகளாக ஆக்கி வைத்திருந்தனர் ரோமானியர்; மேலும் அத்தீவின் செழிப்பான தானிய வயல்களில் வேலை செய்வதற்கென்று வெளியிலிருந்தும் ஏராளமான அடிமைகள் அங்குக் கொண்டு வரப்பட்டிருந்தனர். அவர்களுக்குப் போதிய உணவும் மற்றப் பொருள்களும் கொடுக்கப்படாததால் அவர்கள் திருட்டிலும் கொள்ளைகளிலும் ஈடுபட்டு வந்தனர்.

கி.மு. 139-ல் சிரியாவிலிருந்து வந்த யூனஸ் (Eunus) என்ற அடிமையின் தலைமையில் சிசிலியில் ஒரு கிளர்ச்சி வெடித்தது. தமது எசமானர்களிடமிருந்து தப்பி ஓடி வந்த அடிமைகள் (runaway slaves) பலர் அவரது அணியில்சேர்ந்து கொண்டனர். ஹென்ன (Henna) நகரைக் கைப்பற்றி, அரசராக முடி சூட்டிக் கொண்டார் யூனஸ். அவருக்கெதிராக அனுப்பப்பட்ட பல ரோமானியப் பிரேட்டர்கள் தோற்றோடினர். பின்னர் கான்சல் ஒருவரை அனுப்பியது ரோம். ஆனால், அவரையும் தோற்கடித்தனர் அடிமைகள். கி.மு. 132-ல் அவர்கள் டாரோமீனியத்தையும் (Tauromcnium) கைப்பற்றினர். ஆனால், ருப்பீலியஸ் (P. Rupilius) என்பவரின் தலைமையிலான ரோமானியப்படை அந்நகரை முற்றுகையிட்டுக் கைப்பற்றியது. பின்னர் பல வேறு இடங்களிலும் அடிமைகள் தோற்கடிக்கப் பட்டனர்.

அதன் பின்னர் ரோமானியம் ருப்பீலிய சட்டம் என்பதன் மூலம் (lew Rupilis) ஒருபுதிய அரசிய லமைப்பைச் சிசிலியில் புகுத்தினர். சட்டத்துக்கு விரோதமாக அடிமைகளாக்கப்பட்ட பலர் இதன்மூலம் விடுதலை பெற்றனர். ஆயினும், அடிமைகளின் நிலையில் எவ்வித அபிவிருத்தியையும் உண்டாக்க பிரபுக்கள் விரும்பாததால் முப்பதாண்டுகளுக்குப் பிறகு மீண்டும் சிசிலியில் அடிமைகள் கிளர்ந்தெழுந்தனர். (அதே சமயம் கம்பேனியாவிலுங்கூட கிளர்ச்சிகள் ஏற்பட்டன.) டிரைபோன் (Try phon) என்ற அடிமை ஒருவர் அரசராகத் தன்னை அறிவித்துக் கொண்டார். அவரது தலைமையின்கீழ் மூன்றாண்டுகள் அடிமைகள் போராடினர். இறுதியில் கி.மு. 101-100-ல் அவர்களைத் தோற்கடித்து, மீண்டும் பிரபுக்களின் ஆதிக்கத்தை அக்வீலியஸ் (M. Aquillius) அடிமைகள் ஆயுதம் தாங்குவதுதடை செய்யப்பட்டது. ஈட்டி ஏந்திப் பன்றி ஒன்றைக் கொன்றார் என்ற குற்றத்துக்காக, கி.மு. 96-ல் அடிமை ஒருவரைச் சிலுவையில் அறையுமாறு பிரேட்டர் ஒருவர் கட்டளையிட்டார்.

டைபீரியஸ் கிராக்கஸின் சீர்திருத்த முயற்சிகள்: இவ்வாறு இத்தாலியில் ஒரு பக்கம் பெருஞ் செல்வமும் ஆடம்பரமும் பெருகிவந்த வேளையில், மறுபக்கம் வறுமை வளர்ந்தது வந்தது. கிராமப் புறங்களிலிருந்த சுதந்திர குடியானவர்களும் மற்றையோரும் வீடு வாசல்களையும் நிலங்களையும் இழந்து வயிற்றுப் பிழைப்புக்காக ரோமாபுரிக்கு ஓடினர். அங்கும் வறுமை அவர்களை விடவில்லை. கி.மு. 137-ல் குவேஸ்டராக ஸ்பெயினுக்குச் சென்று கொண்டிருந்த டைபீரியஸ் கிராக்ஸ் (Tiderius Gracchus) இத்தாலி வழியாகப் பயணம் செய்துகொண்டிருந்த பொழுது இதைப்பற்றி அவர் கீழ்வருமாறு கூறியதாகச் சொல்லப்படுகிறது. 'இத்தாலியில் உலவும் காட்டு விலங்குகளுக்குக்கூடப் பொந்துகளும் உறைவிடங்களும் உள்ளன. ஆனால், நாட்டுக்காகப் போரிட்டு உயிர்விடும் ஏழைகளுக்கு சூரிய ஒளியையும் காற்றையும் தவிர ஒன்றுமில்லை போலிருக்கிறது.' எல்லாத் திக்குகளிலும் பெரிய பெரிய பண்ணைகள் உருவாகி வந்தன. சிறு குடியானவர்கள் மறைந்து வந்தனர்.

டைபீரியஸ் கிராக்கஸ் ஸ்பெயினிலிருந்து திரும்பிவந்து, கி.மு. 133-ல் டிரிபியூனைத் தேர்ந்தெடுக்கப்பட்டார். இவர் செம்ப்ரோனியஸ் கிராக்கஸ் என்ற பெரும் பிரபுவுக்கும், மூத்த ஆப்பிரிக்கானஸின் மகளான கொர்னீலியாவுக்கும் (Cornelia) பிறந்தவர். தந்தையின் மரணத்துக்குப்பின் டைபீரியஸும், அவர்தம் தம்பியான கயஸ் கிராக்கஸும் (Gaius) தாயாரால் வளர்க்கப்பட்டு வந்தனர். இரு சகோதரர்களுமே ஒரளவு சீர் திருத்த மனப்பான்மை கொண்டிருந்தனர். டிரிபியூனைத் தேர்ந்தெடுக்கப்பட்ட டைபீரியஸ் நிலச்சீர்திருத்தச் சட்டம் ஒன்றைக் கொண்டு வந்தார்.

ஏற்கனவே இயற்றப்பட்ட நில உச்சவரம்புச் சட்டங்களை அரசு அமுல் நடத்தாததால் பெரிய பெரிய பண்ணைகள் தோன்றியிருந்தன. பொது நிலங்களைப் (Public lands) பிரபுக்களே கவர்ந்து கொண்டு, தமது சொந்த சொத்துக்களைப்போல் அவற்றை அனுபவித்தும் விற்றும் வாங்கியும் வந்தனர். இவற்றை யெல்லாம் தடுப்பதற்கென்றே தனது சட்டத்தைக் கொண்டுவந்தார் டைபீரியர்ஸ். தனக்கென 500 யூகெராவும் (jugera), அதற்குமேல் தனது ஒவ்வொரு ஆண்பிள்ளைக்கும் 250 யூகெராவும் போக, அதற்குமேல் உபரியாக உள்ள பொது நிலமனைத்தையும் பிரபுக்கள் அரசிடம் ஒப்புவித்துவிட வேண்டுமென்று கூறியது இச்சட்டம். அந்த உபரி நிலத்துக்கு நஷ்ட ஈடு வழங்கப்படும் என்றும் அது கூறியது. பணக்காரப் பிரபுக்கள் இதை எதிர்த்தனர். அவர்களது ஆளான ஆக்டேவியஸ்

(Octavius) என்ற மற்றொரு டிரிபியூன் தன்து தடுப்பு அதிகாரத்தைப் (Veto) பயன்படுத்தி, இச்சட்டம் நிறைவேறுவதைத் தடைசெய்தார்.

உடனே, கிராக்கஸ் மற்றொரு சட்டத்தைக் கொண்டு வந்தார். உபரி நிலங்களுக்கு நஷ்ட ஈடு வழங்கப்படமாட்டாது என்று கூறியது இது. இதையும் தடைசெய்தார் ஆக்டேவியஸ். இதற்குப் பதிலாக, ஆக்டேவியஸ் கொணர்ந்த சட்டங்கள் அனைத்தையும் கிராக்கஸ் தடுத்தார். மேலும், மக்களுக்குநேரடியாக முறையீடு செய்து, அவர்களது வாக்குகளைக் கொண்டு ஆக்டேவியயைப் பதவியிலிருந்து அகற்றினர் கிராக்கஸ். பின்னர் தமது நிலச்சட்டத்தை மீண்டும் கொணர்ந்து நிறைவேற்றினர். பொது நிலங்கள் எவை எவை என்பதைக் கண்டறிந்து, அவற்றை ஏழைகளிடம் விநியோகிப்பதற்கென்று மூவர்குழுஒன்று நியமிக்கப்பட்டது. அவ்வாறு நிலங்களைப் பெறும் ஏழைகளுக்கு, பயிர்ச் செலவுக்கென நிதி உதவி யளிக்கவும் கிராக்கஸ் முன் வந்தார். அப்பொழுது அட்டாலஸ் என்ற பெர்கமத்தின் மன்னர், தமது செல்வமனைத்தையும் ரோமுக்கு எழுதிவைத்துவிட்டு இறந்து போனர். அச் செல்வத்தை இந்த நற்காரியத்திற்காகப் பயன் படுத்துவதென முடிவு செய்யப்பட்டது.

டைபீரியஸ் கொலைசெய்யப்படுதல், கி.மு. 133: மேலும் பல சலுகைகளையும் பொதுமக்களுக்குப் பெற்றுத்தர முயன்றார் கிராக்கஸ். இராணுவத்தில் அவர்கள் பணிபுரிய வேண்டியிருந்த கால அளவைக் குறைக்கவும், இல்ஞ்சத்திலும் சுரண்டலிலும் கொள்ளையிலும் ஈடுபட்டுப் பெரும்பொருள் ஈட்டும் மாநிலக் கவர்னர்களை விசாரிக்கும் ஜூரர்களாக வசதிமிக்க நடுத்தர வகுப்பினரை நியமிப்பதற்கும் வகைசெய்யும் சட்டங்களை இயற்ற அவர் எண்ணினர். ஆனல், அவரது திட்டங்களையெல்லாம் சட்டமாக்குவதற்கு ஓராண்டு போதாது. ஓராண்டுக்குமேல் ஒருவர் பதவி வகிப்பதைத் தடைசெய்த ரோமானியச்சட்டம் பிரபுக்களின் ஆதிக்கம் நிலைபெற்றிருப்பதற்கே வழிசெய்தது. எனவே, அச்சட்டத்தை உடைத்து, மீண்டும் அடுத்த ஆண்டும் டிரிபியூனாக ஆவதற்கு முயன்றார் டைபீரியஸ். செனேட் இதை எதிர்த்தது. எனினும், தேர்தல் நடைபெற்றது. இரண்டு குலங்கள் (Tribes) டைபீரியஸை ஆதரித்து ஏற்கெனவே வாக்களித்துவிட்டன. அந்நிலையில், தேர்தலை நடத்திய டிரிபியூன், செனேட்டின் விருப்பத்துக் கிணங்கித் தேர்தலைப் பாதியிலேயே நிறுத்தி, ஒத்திப்போட்டார். மக்கள் ஆத்திரமுற்றனர். நகரில் கலவரங்கள் நடைபெற்றன.

ஆனால், சீட்டுப் போடுவதற்கு முன்னாலேயே, கான்சல்கள் பிரித்துக்கொள்ள வேண்டிய மாநிலங்கள் எவை, பிரேட்டர்கள் பிரித்துக் கொள்ளவேண்டிய மாநிலங்கள் எவை என்பதைச் செனெட் முடிவு செய்யும். தமக்குச் சில கான்சல்கள் வேண்டாதவர்களாயிருந்தால். அதிக வருவாயில்லாத மாநிலங்களையே அவர்களுக்கு என்று ஒதுக்குவர் செனெட்டர்கள். இதைத் தடுக்க விரும்பினார் கயஸ் கிராக்கஸ். கான்சல்கள் தேர்ந்தெடுக்கப்படுவதற்கு முன்பாகவே, அவர்களுக்கான மாநிலங்களைச் செனட் ஒதுக்கிவிட வேண்டுமென்று சட்டமியற்றினார். தம் அண்ணன் டைபீரியஸின் காலத்தில் செனெட் செய்ததுபோல், ஒருவரைக் கைதுசெய்து மரணதண்டனை விதிக்க வேண்டுமென்று கான்சல்களுக்குச் செனெட் ஆணை பிறப்பிப்பதைத் தடைசெய்தது அவரது மற்றொரு சட்டம்; செனெட்டின் இத்தகைய ஆணைகளுக்கு எதிராக மேன்முறையீடு செய்யலாம் என்றும் கூறியது இச் சட்டம்.

செனெட்டர்களின் எதிர்ப்பும் மரணமும், கி. மு. 121 : செனெட்டின் அதிகாரத்தைக் குறைப்பதற்கென்றே இயற்றப்பட்ட இச் சட்டங்களால் கயஸ் கிராக்கஸையும் செனெட் சபை வெறுத்தது. ஆனால், அவர் ஈக்வைட்டுகள், பிளெபியர்கள் ஆகியோரின் ஆதரவைப் பெற்றுச் செனெட்டர்களின் பகைமையைச் சமாளித்து நின்றார். ஆட்சியிலும் அதிகாரத்திலும் ஈக்வைட்டுகளுக்குச் சில பங்குகளைப் பெற்றுக்கொடுத்து அவர்தம் ஆதரவைப் பெற்றது போல, சிற்சில சலுகைகளை அளித்துப் பிளெபியரின் ஆதரவையும் பெற்றார் கயஸ். ரோமில் வாழ்ந்த மக்களனைவருக்கும் அங்காடி விலைக்குச் சற்றுக் குறைவாகவே தானியங்களை விற்பதற்கு வகை செய்யும் தானியச்சட்டம் (Corn law) ஒன்றை இயற்றி, பிளெபியரின் ஆதரவைப் பெற்றார்; மேலும், படையில் பணிபுரிந்த சாதாரணச் சிப்பாய்கள் தம் சொந்தப் பணத்தைக் கொண்டே ஆடையும் ஆயுதங்களும் வாங்கவேண்டும் என்ற விதியை விலக்கினார்; படையதிகாரிகளால் விதிக்கப்படும் மரணதண்டனைக்கு எதிராக மேன்முறையீடு செய்யும் உரிமையை படைவீரர்களுக்கு அளித்தார்; ஏழைகளுக்கு வேலைவாய்ப்பளிப்பதற்கென்று பல சாலைகளையும் பாலங்களையும் அமைத்தார். இதனால் ஓரிடத்திலிருந்து மற்றோரிடத்துக்குத் தானியங்களைக் கொண்டுசெல்வது எளிதாயிற்று; தானிய விலைகள் சிறிது குறைந்தன; நிலமில்லாத ஏழைகளுக்கெனச் சில புதிய குடியேற்றங்களை அமைத்து, அங்கு அவர்களுக்கு நிலங்களை வழங்கத் திட்டமிட்டார் அவர். சமீபத்தில் கிளர்ச்சி காரணமாக அழிந்துவிட்ட பழைய ஃபிரெகெல்லே (Fragellae) என்ற குடியேற்றம் ஃபேப்ராடீரியா (Fabrateria) என்ற புதிய பெயரோடு புதுப்பிக்கப்பட்டது இந்நோக்கத்தோடுதான். டேரன்ட்டத்தில்

நெப்டூனியா (Neptounia) என்ற குடியேற்றம் அமைக்கப்பட்டது (கி. மு. 122); கார்த்தேஜ் இருந்த இடத்தில் அயுனோனியா (Iunonia) என்ற குடியேற்றமும் அப்பொழுது அமைக்கப்பட்டது. இந் நடவடிக்கைகள் மூலம் பிளெபியரின் ஆதரவையும் கயஸ் பெறமுடிந்தது.

ஆயினும், அவரை வீழ்த்துவதற்கென்று காத்திருந்தனர் செனெட்டர்கள். இத்தாலியர்க்கும் ரோமானியக் குடியுரிமையை அளிக்கவேண்டும் என்ற திட்டத்தைக் கயஸ் கொண்டுவந்தபோது தாம் காத்துக்கொண்டிருந்த தருணம் வந்துவிட்டதென்று மகிழ்ந்தனர் செனட்டர்கள். இத்தாலியரைச் சுரண்டி வாழ்ந்து வந்த வகுப்போடு சேர்ந்து, ரோமானியக் குடியுரிமையை அனுபவித்து வந்தவர்களான ஈக்வைட்டுகளையும் பிளெபியர்களையும் கயஸிட மிருந்து பிரிப்பதற்கு இதுதான் தருணம் என்று அவர்கள் எண்ணினார்கள். பொறாமை, போட்டி காரணமாக, தமக்கிருக்கும் குடியுரிமையை இத்தாலியருக்கும் விரிவுபடுத்துவதை அவர்களும் எதிர்ப்பர் என்பதைச் செனட்டர்கள் அறிவர்.

எனவே, மற்றொரு டிரிபியூனான லிவியஸ் ட்ரூசஸ் (M. Livius Drusus) என்பவரைத் தூண்டிவிட்டு, கயஸ் டைபீரியஸையும்விடப் 'புரட்சிகரமான' திட்டங்களைக் கொண்டுவருமாறு செய்தனர் செனெட்டர்கள். பன்னிரண்டு புதிய குடியேற்றங்களை ஏழைப் பிளெபியர்களுக்கென நிறுவப்போவதாகவும், அவர்கள் வசமிருந்த பொதுநிலங்கள்மீது வாங்கப்பட்டுவந்த குத்தகை குறைக்கப்படு மென்றும், படையில் ரோமானிய அதிகாரிகள் இத்தாலியச் சிப்பாய்களுக்குக் கசையடித் தண்டனை அளிப்பது தடைசெய்யப்படு மென்றும் பல திட்டங்களை அவர் கொண்டுவந்தார். இவற்றின் மூலம் பிளெபியரையும் இத்தாலியரையும் கயஸிடமிருந்து பிரித்தனர் செனெட்டர்கள். ட்ரூசஸ் கொண்டுவந்த திட்டங்கள் சட்டமாயின: இத்தாலியருக்குக் குடியுரிமை அளிப்பதற்கெனக் கயஸ் கொண்டு வந்த திட்டம் தோற்கடிக்கப்பட்டது.

இந் நிலையில் கி. மு, 122 டிசம்பர் 10-ம் தேதி கயஸின் பதவிக் காலம் முடிவுற்றது. அடுத்த ஆண்டில் மியூனீசியஸ் (Municius) என்ற டிரிபியூன், கார்த்தேஜின் இடத்தில் அயுனோனியாக் குடியேற்றம் அமைப்பதை உடனடியாக நிறுத்த வேண்டும் என்று மசோதா ஒன்றைக் கொண்டுவந்தார். அவ்விடத்தில் நகரம் எதுவும் அமையக்கூடாதென்று சிப்பியோ இட்டிருந்த 'சாபத்தை'. அது மீறுவதாகும் என்பது மியூனீசியஸின் வாதம்! இத்தாலியர் சிலரும் அயுனோனியாவில் குடியேறி யிருந்ததால், பெரும்பாலான

பெர்கமத்துக்கு அனுப்பிவைக்கப்பட்டார். அங்கு அவர் பொருள் சேர்ப்பதில் முழு முயற்சியோடு ஈடுபட்டார். எனவே, நாடு திரும்பியதும் அவரைத் தண்டிக்க முயன்றது செனேட். ஆனல், செனேட்டர்களுக்கு நிறைய இலஞ்சம் கொடுத்துத் தப்பித்துக்கொண்டார் அக்வீலியஸ். போரிடுவதற்கும் ஆளு வதற்குமென அனுப்பப்பட்ட பிரபுக்கள் இவ்வாறு பொருள் சேர்ப்பதைக் கண்ட பொதுமக்கள் வெகுண்டனர். மாறுதல் கள் பலவற்றைச் செய்ய வேண்டுமென்று கருதினர். இந் நிலையில்தான் கயஸ் கிராக்கஸும் அவர்கட்குத் தலைமைதாங்கி, சீர்திருத்தங்களைச் செய்ய முன்வந்தார்.

கயஸ் கிராக்கஸ், கி.மு. 123-121: டைபீரியஸ் கிராக்கஸ், கயஸ் கிராக்கஸ் ஆகிய இருவருமே பெருத்த செல்வந்தர்கள். பொது மக்களது ஆதரவை அவர்கள் பெற்றிருந்தாலும் கூட, பொது மக்களிடம் ஆட்சிப் பொறுப்பை ஒப்படைப்பது அவர் களது நோக்கமல்ல. செனேட்டின்மூலம் ரோமப்பேரரசில் ஆதிக்கம் செலுத்தி வந்த பெரும் பிரபுக்களோடுகூட, செல் வத்தில் சிறந்து, நடுத்தர வகுப்பு என்று கருதப்பட்ட ஈக்வைட்டு களுக்கும் (Equites) ஆட்சியில் பங்குதர வேண்டுமென்றே அவ்விருவரும் பாடுபட்டனர். கி.மு. 123 டிசம்பர் முதல் 122 டிசம்பர் வரை டிரிபியூனனர் கயஸ் கிராக்கஸ்.

ஈக்வைட்டுகள் என்போர் 18 செஞ்சூரியாக்களாக ஆதியில் பிரிக்கப்பட்டு ரோமிலேயே கொழுத்த பணக்காரர்களாகவும், தலைசிறந்த குதிரைப்படைவீரர்களாகவும் இருந்தனர். நாளடை வில் அத்தகைய செல்வந்தரது கை பெருகியது. ஆனல், அவர் களில் பலர் செஞ்சூரியாக்களில் சேர்த்துக்கொள்ளப்படவில்லை.

பதினெட்டு செஞ்சூரியாக்களையும் சேர்ந்த ஈக்வைட்டுகள் அரசுகொடுத்த குதிரைகளின்மீது ஏறிப் போரிட்டனர். ஆனல், அவற்றில் சோரத புதிய ஈக்வைட்டுகள் தங்களது சொந்தக் குதிரைகளையே பயன்படுத்த வேண்டியிருந்தது. மிகுந்த பணக் காரர்களாகவும் சிறந்த குதிரை வீரர்களாகவும் இருந்த பழைய ஈக்வைட்டுகளும் புதிய ஈக்வைட்டுகளும்தாம் அப்பொழுது ஈக்வைட்டு வகுப்பினர் (Equertrian Order) என்று அழைக்கப் பட்டனர்.

செனேட்டர்களும், அவர்தம் பிள்ளைகளும், வாணிகத்தில் ஈடுபடக்கூடாது என்று தடை விதிக்கப்பட்டதைப்பற்றியும் ஏற்கெனவே, நாம் படித்தோம். எனவே, ஈக்வைட்டு வகுப் பினர் வாணிகத்தில் ஈடுபட்டும், அரசாங்கத்திடமிருந்து 'கான்டி

ராக்டுகளை'ப் பெற்றும், பொதுநிலங்கள், சுரங்கங்கள் ஆகிய வற்றுக்கான வரிகளையும் குத்தகைகளையும் வசூலித்தும் வந்தனர்.

அரசாங்கக் குதிரைகளைப் பெற்றிருந்தவர்களை மட்டுமே ஈக்வைட்டுகள் என்று சட்டம் அங்கீகரித்தது. ஆனால், கயஸ் கிராக்கஸ், சொந்தக் குதிரைமீதேறிப் போரிட்டவர்களும் ஈக் வைட்டுகளே என்று சட்டமியற்றினர். மாநில கவர்னர்களை விசாரிப்பதற்கென அமைக்கப்படும் நீதி மன்றங்களில் செனேட்டர்கள் மட்டுமன்றி, நடுத்தர வகுப்பினரான ஈக் வைட்டுகளும் ஜூரர்களாக இருக்கலாம் என்று அவரது சட்டம் கூறியது.

இதனால் மட்டும் நீதிமன்றங்களில் நேர்மை புகுந்து விட வில்லை. ஓய்வுபெற்ற பிரேட்டர்களும் கான்சல்களுமே மாநிலக் கவர்னர்களாக இருந்ததால், செனேட் உறுப்பினர்களாகவும் அவர்கள் இருந்தனர். எனவே, செனேட் உறுப்பினர்களை, "செனேட் உறுப்பினர்களே விசாரிப்பது நேர்மைக்கும் நீதிக்கும் ஏற்புடையதாகாது' என்று கயஸ் எண்ணினர். ஆனால், அர சாங்கக் கான்டிராக்ட்டுகளைப் பெற்று, மாநிலங்களில் பலவித மான வேலைகளிலும் வசூலிலும் ஈடுபட்டு, கவர்னர்களோடு சேர்ந்து பணியாற்றி வந்த ஈக்வைட்டுகள் ஜூரிகளாக நிய மிக்கப்படுவதால் மட்டும் நேர்மையும் நீதியும் விசாரணையில் புகுந்துவிடும் என்று அவர் கருதியது விந்தையே! எனினும், அந்நீதி மன்றங்களில் ஈக்வைட்டுகள் அமருவதற்கு வழி செய்தது அவரது சட்டம். பிற்காலத்திலும் இதேமுறையில் பல சட்டங்கள் இயற்றப்பட்டு, ஈக்வைட்டுகளின் கையிலேயே நீதிமன்றம் இருந்து வந்தது.

மேலும் கயஸ் பல நடவடிக்கைகளையும் மேற்கொண்டு, ஈக்வைட்டுகளுக்கு உதவினர். ரோமின் ஆதிக்கத்தின் கீழ் வந்துவிட்ட ஆசியாவில் ஆரம்பத்தில் சுதேசிப்பிரபுக்களே வரிகளை வசூலித்து ரோமுக்கு அனுப்பிவந்தனர். ஆனால், அரிஸ் டோனிக்கஸ் தோற்கடிக்கப்பட்டு, ரோமின் மாநிலமாக ஆசியா சேர்த்துக் கொள்ளப்பட்டதை வைத்து, ஈக்வைட்டுகளுக்குச் சாதகமாக வரிவசூல் முறையை மாற்றியமைத்தார் கயஸ். வரி வசூல் உரிமையானது ரோமில் ஏலத்துக்குவிடப்பட்டது. ஆசியா வில் உற்பத்தியாகும் பண்டங்களில் பத்தில் ஒன்றையும், பொது மேய்ச்சல் நிலங்களுக்கான குத்தகையையும், சுங்கங்களையும் வசூலிக்கும் உரிமையை ஏலத்தில் பெற்றனர் ஈக்வைட்டுகள். அவர்களுக்கு இதன்மூலம் ஏராளமான இலாபம் கிடைத்தது.

அடுத்தபடியாக, மாநில அரசாங்கங்களையும் செனேட்டர்களின் கட்டுப்பாட்டிலிருந்து விடுவிக்க வழிசெய்தார் கயஸ்.

தாம் பதவியிலிருக்கும்போதும், பதவியிலிருந்து ஓய்வு பெற்ற பிறகும் எந்தெந்த மாநிலம் தமது கட்டுப்பாட்டில் இருக்க வேண்டுமென்பதை முடிவு செய்வதற்கெனக் கான்சல்களும் பிரேட்டர்களும் சீட்டு போட்டுப் பார்க்கும் வழக்கம் அப்பொழுது இருந்து வந்தது. ஆனால், சீட்டுப் போடுவதற்கு முன்னாலேயே, கான்சல்கள் பிரித்துக்கொள்ள வேண்டிய மாநிலங்கள் எவை, பிரேட்டர்கள் பிரித்துக்கொள்ள வேண்டிய மாநிலங்கள் எவை என்பதை செனேட் முடிவுசெய்யும். தமக்குச் சில கான்சல்கள் வேண்டாதவர்களாயிருந்தால், அதிக வருவாயில்லாத மாநிலங்களையே அவர்களுக்கு என்று ஒதுக்குவர் செனேட்டர்கள். இதைத் தடுக்க விரும்பினர் கயஸ் கிராக்கஸ். கான்சல்கள் தேர்ந்தெடுக்கப்படுவதற்குமுன் பாகவே, அவர்களுக்கான மாநிலங்களைச் செனேட் ஒதுக்கிவிட வேண்டுமென்று சட்டமியற்றினர். தமது அண்ணன் டைபீரியஸின் காலத்தில் செனேட் செய்ததுபோல், ஒருவரைக் கைது செய்து மரணதண்டனை விதிக்க வேண்டுமென்று கான்சல்களுக்குச் செனேட் ஆணை பிறப்பிப்பதைத் தடைசெய்தது அவரது மற்றொரு சட்டம்; செனேட்டின் இத்தகைய ஆணைகளுக்கு எதிராக மக்களுக்கு நேரடியாக மேன்முறையீடு (Appeal) செய்யலாம் என்றும் கூறியது இச்சட்டம்.

செனேட்டர்களின் எதிர்ப்பும் மரணமும், கி.மு. 121: செனேட்டின் அதிகாரத்தைக் குறைப்பதற்கென்றே இயற்றப்பட்ட இச்சட்டங்களால் கயஸ்கிராக்கஸையும் செனேட் சபை வெறுத்தது. ஆனால், அவர் ஈக்வைட்டுகள், பிளெபியர்கள் ஆகியோரின் ஆதரவைப் பெற்றுச் செனேட்டர்களின் பகைமையைச் சமாளித்து நின்றார். ஆட்சியிலும் ஆதிக்கத்திலும் ஈக்வைட்டுகளுக்குச் சில பங்குகளைப் பெற்றுக்கொடுத்து அவர் தம் ஆதரவைப் பெற்றதுபோல, சிற்சில சலுகைகளை அளித்துப் பிளெபியரின் ஆதரவையும் பெற்றார் கயஸ். ரோமில் வாழ்ந்த மக்களனைவருக்கும் அங்காடி விலைக்குச் (Market Price) சற்றுக் குறைவாகவே தானியங்களை விற்பதற்கு வகைசெய்யும் தானியச்சட்டம் (Corn law) ஒன்றை இயற்றி, பிளெபியரின் ஆதரவைப் பெற்றார்; மேலும், படையில் பணிபுரிந்த சாதாரண சிப்பாய்கள் தம் சொந்தப் பணத்தைக் கொண்டே ஆடையும் ஆயுதங்களும் வாங்கவேண்டும் என்ற விதியை விலக்கினார்; படையதிகாரிகளால் விதிக்கப்படும் மரண தண்டனைக்கு

எதிராக மேன்முறையீடு செய்யும் உரிமையை அவர்களுக்கு அளித்தார்; ஏழைகளுக்கு வேலைவாய்ப்பளிப்பதற்கென்று பல சாலைகளையும் பாலங்களையும் அமைத்தார். இதனால் ஓரிடத்திலிருந்து மற்றோரிடத்துக்குத் தானியங்களைக் கொண்டுசெல்வது எளிதாயிற்று; தானிய விலைகள் சிறிது குறைந்தன; நிலமில்லாத ஏழைகளுக்கெனச் சில புதிய குடியேற்றங்களை அமைத்து, அங்கு அவர்களுக்கு நிலங்களை விநியோகிக்கத் திட்டமிட்டார் அவர். சமீபத்தில் கிளர்ச்சி காரணமாக அழிந்துவிட்ட பழைய ஃபிரெகெல்லே (Fragellae) என்ற குடியேற்றம் ஃபேப்ராடீரியா (Fabrateria) என்ற புதிய பெயரோடு, இந்நோக்கத்தோடுதான் புதுப்பிக்கப்பட்டது; ரேடன்ட்டத்தில் நெப்டூனியா (Neptounia) என்ற குடியேற்றம் அமைக்கப்பட்டது (கி.மு. 122); கார்த்தேஜ் இருந்த இடத்தில் அயுனோனியா (Iunonia) என்ற குடியேற்றம் அப்பொழுது அமைக்கப்பட்டது. இந்நடவடிக்கைகள் மூலம் பிளெபியரின் ஆதரவையும் கயஸ்பெற முடிந்தது.

ஆயினும், அவரை வீழ்த்துவதற்கென்று காத்திருந்தனர் செனேட்டர்கள். இத்தாலியர்க்கும் ரோமானியக் குடியுரிமையை அளிக்கவேண்டும் என்ற திட்டத்தைக் கயஸ்கொண்டு வந்தபோது, தாம் காத்துக்கொண்டிருந்த தருணம் வந்துவிட்டதென்று மகிழ்ந்தனர் செனேட்டர்கள். இத்தாலியரைச் சுரண்டி வாழ்ந்து வந்த வகுப்போடு சேர்ந்து, ரோமானியக் குடியுரிமையை அனுபவித்து வந்தவர்களான ஈக்வைட்டுகளையும் பிளெபியர்களையும் கயஸிடமிருந்து பிரிப்பதற்கு இதுதான் தருணம் என்று உணர்ந்தனர் அவர்கள். பொறுமை, போட்டி காரணமாக, தமக்கிருக்கும் குடியுரிமையை இத்தாலியருக்கும் விரிவுபடுத்துவதை அவர்களும் எதிர்ப்பர் என்பதை செனேட்டர்கள் அறிவர்.

எனவே, மற்றொரு டிரிபியூனை லிவியஸ் ட்ரூசஸ் (M. Livius Drusus) என்பவரைத் தூண்டிவிட்டு, கயஸ் டைபீரியஸையும்விடப் 'புரட்சிகரமான' திட்டங்களைக் கொண்டு வருமாறு செய்தனர் செனேட்டர்கள். பன்னிரண்டு புதிய குடியேற்றங்களை ஏழை பிளெபியர்களுக்கென நிறுவப்போவதாகவும், அவர்கள் வசமிருந்த பொதுநிலங்கள்மீது வசூலிக்கப்பட்டுவந்த குத்தகை குறைக்கப்படுமென்றும், படையில் ரோமானிய அதிகாரிகள் இத்தாலிய சிப்பாய்களுக்குக் கசையடித் தண்டனை அளிப்பது தடைசெய்யப்படுமென்றும், பல திட்டங்களை அவர் கொண்டு வந்தார். இவற்றின்மூலம் பிளெபியரையும் இத்தாலியரையும் கயஸிடமிருந்து பிரித்தனர் செனேட்டர்கள். ட்ரூசஸ் கொண்டு வந்த திட்டங்கள் சட்டமாயின; இத்தாலி

யருக்குக் குடியுரிமை அளிப்பதற்கெனக் கயஸ்கொண்டுவந்த திட்டம் தோற்கடிக்கப்பட்டது.

இந்நிலையில் கி.மு. 122 டிசம்பர் 10ந்தேதி கயஸின் பதவிக் காலம் முடிவுற்றது. அடுத்த ஆண்டில் மியூனீசியஸ் (Municius) என்ற டிரிபியூன், கார்த்தேஜின் இடத்தில் அயுனேனியா குடியேற்றம் அமைப்பதை உடனடியாக நிறுத்த வேண்டும் என்று மசோதா ஒன்றைக் கொண்டுவந்தார். அவ்விடத்தில் நகரம் எதுவும் அமையக்கூடாதென்று சிப்பியோ இட்டிருந்த 'சாபத்தை', அது மீறுவதாகும் என்பது மியூனீசியஸின் வாதம்! இத்தாலியர் சிலரும் அயுனேனியாவில் குடியேறியிருந்ததால்,பெரும்பாலான ரோமானியர்கள் மூனீசியஸின் மசோதாவை ஆதரித்தனர். இதை எதிர்ப்பதென்று திட்டமிட்டனர் கிராக்கஸின் கட்சிக்காரர்கள். கமிஷியா (Comitia) மன்றத்தில் அவர்கட்குத் தலைவராயிருந்தார் புல்வியஸ் பிளாச்சஸ் (Fulvius Flaccus). மசோதாவை விவாதத்துக்கு எடுத்துக்கொள்வதற்காக அம்மன்றம் கூடியநாளில் மழை பெய்ததால், கூட்டத்தை ஒத்திப்போட்டது மியுனீசியஸின் கட்சி. உடனே, கைக்கலப்புகள் மூண்டன. அடுத்த நாள் செனேட்கூடி, நகரில் கலகம் மூண்டுவிட்டதென்றுகூறி, அதை அடக்குவதற்கென்று கான்சல்களுக்கு ஆணையிட்டது. கிராக்கஸின் ஆட்கள் உடனே ரோமிலிருந்த குன்றுகளில் ஒன்றான அவென்ட்டைன் குன்றைக் கைப்பற்றிக் கொண்டனர். அவர்கள் இருவரையும் 'நாட்டின் விரோதிகள்' என்று அறிவித்து, அவர்களைக் கொல்பவருக்கு வெகுமதியளிக்கப்படுமென்று செனேட் கூறியது. உடனே கான்சல் ஒருவர், சில படைகளுடன் அவர்கள்மீது தாக்குதல் தொடுத்தார். தப்பி ஓட முயன்ற கிராக்கஸ் பிடிபட்டுக் கொல்லப்பட்டார். புல்வியஸும் அவ்வாறே கொல்லப்பட்டார். அவர்களைச் சார்ந்த பலரும் அப்பொழுது கொல்லப்பட்டனர். பின்னர் அவர்கள் கட்சியைச்சேர்ந்த 3000க்கும் மேற்பட்ட ஆட்கள் மரணதண்டனை விதிக்கப்பட்டுக் கொலை செய்யப்பட்டனர்.

விளைவுகள்: இவ்வாறு மீண்டும் பிரபுக்கள் தமது ஆதிக்கத்தை நிலைநாட்டினர். நீதியும் நேர்மையும் அற்ற முறையில் ஆயிரக்கணக்கானவரைக் கொன்று தமது ஆதிக்கத்தை அவர்கள் நிலைநிறுத்தினர். லிவியஸின் 'புரட்சிகரமான' திட்டங்களும் சட்டங்களும் ஏட்டளவிலேயே நின்று போயின. கிராக்களின் காலத்தில் சுமார் 80,000 ஏழைகட்கு நிலம் வழங்கப்பட்டிருந்தது. அவற்றை மீண்டும் பறிப்பதற்கும், நில உச்ச

வரம்புச் சட்டத்தை மீறித் தமது பண்ணையின் பரப்பைப் பெருக்கிக்கொள்ளவும் புதிய சட்டம் ஒன்றைக்கொண்டு வந்தனர் பிரபுக்கள். 'ஏழைகளிடையே விநியோகிக்கப்பட்ட நிலங்களை விற்பனை செய்யலாம் என்றது அச்சட்டம். பொது நிலங்களையெல்லாம் கவர்ந்துகொண்டு, தமது சொந்த நிலங்களாக ஆக்கிக்கொண்டனர் பிரபுக்கள். அவற்றிலிருந்து பெற்றுவந்த குத்தகையையும் அரசு இழந்தது.

இத்தாலியருக்குக் குடியுரிமை மறுக்கப்பட்டதால், கி.மு. 90-ல் உள்நாட்டுப் போர் ஒன்று ஏற்பட்டது. அதைப்பற்றிப் பின்னர் படிக்கப் போகிறோம். கிராக்கஸின் சீர்திருத்தங்கள் குறித்து செனேட்டர்களான பிரபுக்களுக்கும் ஈக்வைட்டுகளுக்குமிடையில் துவங்கிய பூசல்கள் நீடித்து, இப்போருக்குப் பல வழியிலும் உதவியா யிருந்தன. பெயரளவிலான நீதிமன்ற விசாரணைகள் மூலமும், நேரடியாகவும் பிரபுக்கள் புரிந்த கொலைகளும் அக்கிரமங்களும் ரோமில் வன்முறையை வளர்த்தன. கைக்கலப்புகளும் கலகங்களும் குற்றங்களும் அதிகரித்தன. வாழ வழியற்ற ஏழைகளின் நிலை மேலும் மேலும் மோசமடைந்து, குற்றங்கள் மேலும் அதிகரித்தன. குடியரசு மறையவும், தனி நபரின் ஆட்சி ஏற்படவும் வழி ஏற்பட்டது. சீர்கேடும், சீர்குலைவும்—அதாவது வீழ்ச்சியும் துவங்கி விட்டன.

13. மேரியஸின் எழுச்சி

டிரான் சால்ப்பைன் கால் : கி.மு. 118 : வடமேற்கு இத்தாலியில் லிகூரியாவைக் கைப்பற்றுவதற்காகவும், அதன் வழியாக ஸ்பெயினுக்குத் தரைவழியாகச் செல்லும் வழிஒன்றை ஏற்படுத்தவும் ரோம் மேற்கொண்டுவந்த முயற்சிகள் காரணமாக ஆல்ப்ஸ் மலைகட்கு அப்பால் இருந்த 'டிரான்ஸ்—ஆல்ப்பைன் கால்' (Transalpine Gaul) என்ற பகுதியும் அதன் கட்டுப்பாட்டுக்குள் வந்தது. இன்றைய தென்கிழக்கு பிரான்சை உள்ளிட்டது அப்பகுதி. வடக்கில் ஜெனீவா ஏரியிலிருந்து (Lake of Geneva) தெற்கில் லியான்ஸ் வளைகுடா (Gulf of Lyons), பிரனீஸ் மலைகள் (Pyrenees) வரையிலும் பரந்திருந்தது அப்பகுதி. தமது ஆதிக்கத்தில் இன்னமும் வராத காலின் இதரப் பகுதிகளிலிருந்து வேறுபடுத்திக் காட்டுவதற்கென்று, இதை 'புராவின்ஸ்' (Province—தமது 'மாநிலம்') என்று அழைத்தனர் ரோமானியர்.[1] அப்பொழுது மசீலியா (Massilia) என்ற நகர அரசு ஒன்று அங்கு இருந்தது. சுற்றி வாழ்ந்த அநாகரிகக் குலங்களின் தாக்குதல்களிலிருந்து அதைக் காப்பதற்கென்று; ஒருடன்படிக்கையை ரோம் அதனுடன் செய்துகொண்டு, பின்னர் சிறுகச் சிறுகத் தனது படைகளை அப்பகுதிக்கு அனுப்பி, இராணுவ தளங்களாகப் பல நகரங்களை அமைத்தது. செக்ஷியஸ் கால்வினஸ் (Sextius Calvinus) என்பவரால் கி.மு. 122-1-ல் அவ்வாறு நிறுவப்பட்டதுதான், இன்று ஐக்ஸ் (Aix) என்று அழைக்கப்படும் அக்வேசெக்ஷியே (Aquae Sextiae) என்ற நகரம். கி.மு. 112-ல் புராவின்ஸ் மாநிலம் அமைக்கப்பட்டபொழுது, நார்போ மார்ஷியஸ், (Narbo Martius—இன்றைய நார்போன் நகரம்—Narbonne) என்ற ரோமானியக் குடியேற்றம் அமைக்கப்பட்டு, அதன் தலை

1 இன்றும் பிரான்சில் அம்மாநிலத்துக்கு 'Provence' என்றுதான் பெயர். அன்று ரோமானியர் சூட்டிய பெயர் இன்றும் நிலைத்து நிற்கிறது.

நகராயிற்று. ரோமின் நட்பரசாக (ally) மசீலியா சுதந்திர அரசாக விட்டுவைக்கப்பட்டது.

சிம்பிரிகள்: இவ்வாறு டிரான்சால்ப் பைன் கால் பிடிக்கப் பட்டு ஸ்பெயினுடன் தரைவழித் தொடர்புகள் ஏற்படுத்தப் பட்ட அதே சமயத்தில், மேஜார்க்கா (Majorca), மைனர்க்கா (Minorca) என்றழைக்கப்படும் பலீரிக் தீவுகளையும் (Balearic Islands) ரோம் கைப்பற்றியது. அப்பொழுது டால்மேஷியா வில் எழுந்த கலகங்களையும் ரோம் அடக்கியது. மாசிடோனியா வைச் சுற்றிலும் வாழ்ந்துவந்த அநாகரிகக் குலங்கள்மீதும் போர்களைத் துவக்கியது.

அச்சமயத்தில் சிம்பிரிகள் (Cimbri) என்ற மக்கள் இத்தாலி யின் வட எல்லைக்கருகில் வந்து குடியேறினர். ஜட்லந்திலிருந்து (Jutland) வந்தவர்கள் அவர்கள். அதேசமயம் டியூட்டானி யர்கள் (Teutones) என்ற ஜெர்மானியக் குலத்தினரும் அங்கு வந்து குடியேறினர். புராவின்ஸும் வட இத்தாலியும் அவர்களது ஊடுருவல்களுக்கு ஆளாயின. அவர்களுக்கெதிராக அனுப்பப் பட்ட பல ரோமானியப் படைகள் தோற்றுப் பின்வாங்கின. கி.மு. 113 முதல் 106 வரை இவ்வாறு பலமுறை தோற்றன ரோமானியப் படைகள். கி.மு. 107-ல் ரோமானியக் கான்சல் ஒருவரும்கூட அவர்களுக்கெதிரான போரில் கொல்லப்பட் டார். இவற்றை யெல்லாம்பற்றிப் பின்னர் பார்ப்போம்.

ஜுகூர்த்தாவுடன் போர், கி.மு. 112-106: இதற்கிடை யில் ஆப்பிரிக்காவிலும் ரோம் போர்களில் ஈடுபடவேண்டி யிருந்தது. ரோமின் கைப்பாவையாக இருந்து நுமீடியாவை ஆண்டுவந்த மசன்னிகா கி.மு. 149-ல் மறைந்தார். அவருக்கு மிசிப்சா (Micipsa), குலூசா, (Gulussa), மஸ்தானுபல் (Mas-tanabal) ஆகிய மூன்று பிள்ளைகள் இருந்தனர். அவர்கள் மூவரும் தமது தந்தையின் அரசைப் பங்கிட்டுக்கொண்டு ஆண்டுவந்தனர். ஆனால், விரைவிலேயே கடைசி இரண்டு பிள்ளைகளும் இறந்துவிட்டதால், மிசிப்சா நுமீடியா முழுவதை யும் கி.மு. 118 வரை ஆண்டுவந்தார். அவருக்கு அதர்பல் (Adherbal), ஹீம்ப்சல் (Hiempsal) என்ற இரு பிள்ளைகள் இருந் தனர். தன் தம்பி மஸ்தானுபல்லின் பிள்ளையான ஜுகூர்த்தா (Jugurtha) என்பவரும், தன் இரு பிள்ளைகளும் சேர்ந்து தனக் குப்பின் அரசைப் பங்கிட்டுக் கொள்ளவேண்டும் என்பது அவரது விருப்பம். அவ்வாறே அவர்கள் செய்துகொண் டனர்.

ஜுகூர்த்தா பொருமையும் பேராசையும் மிக்கவர். ஸ்பெயினில் ஏற்பட்ட கிளர்ச்சிகளை அடக்கி, தன்னுட்சியை அங்கு உறுதியாக நிறுவுவதற்கென கி.மு. 141 முதல் 133 வரை ஒரு போரில் ஈடுபட்டது ரோம். அது நுமாண்ட்டியாப் போர் (The War of Numantia) என்றழைக்கப்படுகிறது. கி.மு. 133-ல் நுமாண்ட்டியாவை முற்றுகையிட்டுக் கைப்பற்றிய ரோமானியப் படையோடு, நுமீடியப் படைக்குத் தலைமைதாங்கி ஒத்துழைத்து, ரோமின் ஆதரவைப் பெற்றிருந்தார் ஜுகூர்த்தா. தன் பெரியப்பாவின் புதல்வர்கள் இருவரையும் ஒழித்துக் கட்டிவிட்டுத் தாம்ஒருவரே நுமீடியா முழுவதையும் ஆளவேண்டுமென்று அவர் ஆசைப்பட்டார்.

அவரது சதி காரணமாக ஹீம்ப்சல் கொலை செய்யப்பட்டார். அதைப்பற்றி ஆராய்வதற்கென ஒருகுழுவை அனுப்பியது ரோம். அக்குழுவின் உறுப்பினர்களுக்கு ஏராளமான பொருள்களை இலஞ்சமாகக் கொடுத்து, ஹீம்ப்சலின் அரசைத் தனக்கும் அதர்பல்லுக்குமிடையில் பங்கிட்டுக் கொடுக்குமாறு செய்தார் ஜுகூர்த்தா. விரைவிலேயே அதர்ப்பல்லுடன் பூசல்களைத் துவக்கிப் போர் தொடுத்து அவரையும் சிறையிலடைத்து பின்பு கொலை செய்தார். பூசல்களைத் தீர்த்து வைப்பதற்கென்று ரோம் அனுப்பிய பல குழுக்களுக்கும் பெரும் இலஞ்சம் கொடுத்தே ஜுகூர்த்தா இத்தகைய கொடுமைகளைச் செய்தார். எனவே, ரோமில் பிரபுக்களின் ஆட்சி நகைப்புக்கிடமாயிற்று.

அவப்பெயரிலிருந்து தப்புவதற்கென்று, படைதிரட்டி நுமீடியாவுக்குச் செல்லுமாறு ஒருகான்சலுக்கு உத்திரவிட்டது செனேட் (கி மு. 111). அதற்கடுத்த ஆண்டும் அவ்வாறே இன்னொரு கான்சல் அனுப்பப்பட்டார். ஆனால், அவ்விரு கான்சல்களும், அவர்தம் படையதிகாரிகளும், ஜுகூர்த்தா கொடுத்த பொன்னையும் பொருளையும் வாங்கிப் பையில் போட்டுக் கொண்டு, ஒன்றும் செய்யாமல் திரும்பி வந்தனர். பிரபுக்களின் இந்த ஊழல்களையெல்லாம் எதிர்த்து ரோமில் கூக்குரல் எழுப்பியது. உடனே, உண்மையை அறிய விசாரணை தொடங்கப் போவதாகச் செனேட் கூறியது. சாட்சியம் கொடுப்பதற்காக ரோமுக்கு வரும்படி ஜுகூர்த்தா அழைக்கப்பட்டார். ரோமிலும் பல பிரபுக்கள் அவரது பொருள்களைப் பெற்றுக்கொண்டு மகிழ்ந்தனர். இந்நிலையில் ஜுகூர்த்தாவின் பெரியப்பாவான குலூசாவின் பிள்ளை மசீவா (Massva) என்பவர் ரோமில் வசித்து வந்தார். ஜுகூர்த்தாவுக்குப் பதிலாக அவரையே நுமீடியாவின் அரசராக்க எண்ணினர் சில செனேட்டர்கள். இதையறிந்தும்

ஜுகூர்த்தா. உடனே அவரையும் கொலை செய்வித்துவிட்டு தம் நாட்டுக்குத் திரும்பினர்.

எனவே, வேறு வழியின்றிக் கி.மு. 110-ல் ஒரு கான்சலின் தலைமையில் ரோமின் படையொன்று ஆப்பிரிக்கா சென்றது. அவரும் முயற்சியோடு செயல்படாமல் ரோம் திரும்பினர். உடனே, நுமீடியாவிலிருந்த அவரது படையை ஜுகூர்த்தா சிதறடித்தார். மேமிலிஸ் லிமிடேனஸ் (Mamilius Limetanus) என்ற டிரிபியூன் ஒருவர், நுமீடியாவில் பிரபுக்கள் இதுவரை நடந்துகொண்ட முறைபற்றிய எல்லா உண்மைகளையும் அறிவதற்கென விசாரணைக் குழு ஒன்றை நியமித்தார். பிரபுக்கள் இதை எதிர்த்தனர். ஆனால், ஈக்வைட்டுகளின் பேராதரவோடு விசாரணை நடந்தது. இதன் விளைவாகப் பல பிரபுக்களின் ஊழல் மிக்க செயல்கள் வெளியாயின. முந்திய கான்சல்கள் பலரும் அதிகாரிகள் பலரும் ரோமிலிருந்து விரட்டப்பட்டனர்.

பின்னர் கி.மு. 109-ல் சிசிலியஸ் மெட்டலஸ் (Caecilius Metellus) என்ற கான்சலின் தலைமையில் படை ஒன்று நுமீடியாவிற்கு அனுப்பப்பட்டது. சாதாரண சிப்பாயாக இருந்து, பதவியில் உயர்ந்த மேரியஸ் (C. Marius) என்பவர் மெட்டலஸின் துணைத் தளபதியாகச் சென்றார்.

மேரியஸ்: கி.மு. 155-ல் ஆர்ப்பினத்துக்கு (Arpinum) அருகில் ஏழைக் குடும்பம் ஒன்றில் பிறந்தார் மேரியஸ். வயல்களில் வேலைசெய்து, பின்னர் படையில் சேர்ந்து, நுமாண்ட்டியா முற்றுகையின்போது சிப்பியோவுக்குக் கீழ் இராணுவ டிரிபியூனாக இருந்தார். பின்னர் கி.மு. 119-ல் ரோமில் டிரிபியூனாகத் தேர்ந்தெடுக்கப்பட்டார். ஜூலியஸ் சீசரின் அத்தையான ஜூலியாவை மணந்ததன்மூலம், ரோமில் செல்வமும் செல்வாக்கும் மிகுந்த பிரபுக்குடும்பம் ஒன்றோடு உறவு பூண்டார். கி.மு. 115-ல் பிரேட்டராகத் தேர்ந்தெடுக்கப்பட்டார். ஸ்பெயினில் கவர்னராகவும் பணியாற்றினர்.

ஜுகூர்த்தாவுக் கெதிரான போரில் மெட்டலஸ் வீணாகக் காலந் தாழ்த்துவதாகக் கருதினர் மேரியஸ். போர்வீரர்களும் அவ்வாறே கருதியதால் மேரியஸை அவர்கள் ஆதரித்தனர். இந்நிலையில் கான்சல் பதவிக்கு நிற்பதென முடிவுசெய்து, மிகவும் சிரமத்தோடு மெட்டலஸிடமிருந்து விடுமுறை பெற்றுக் கொண்டு ரோம் சென்றார். அங்கு கி.மு. 107-ஆம் ஆண்டுக்கான கான்சலாகத் தேர்ந்தெடுக்கப்பட்டார். உடனே ஆப்பிரிக்காவுக்குச் சென்று படைத்தலைமையை மேற்கொண்டார்.

அவரது படையில் பணிபுரிவதற்கென நிறைய இளைஞர்கள் முன்வந்தனர். கொர்னீலியஸ் சல்லா (Sulla) என்பவர் குவேஸ்ட்டராகப் பதவி ஏற்று, மேரியஸுக்கு உதவுவதற்கென்று குதிரைப் படையுடன் ஆப்பிரிக்கா வந்து சேர்ந்தார்.

படைகளை நன்கு பயிற்றுவித்து ஜுகூர்த்தாவுக் கெதிரான போரில் முழுமூச்சுடன் இறங்கினர் மேரியஸ். எனினும், அவர் எதிர்பார்த்ததைப்போல் வெற்றி எளிதாகக் கிடைக்கவில்லை. எனவே, தந்திரமாக ஜுகூர்த்தாவைச் சிறைபிடிக்கத் திட்டமிட்டனர் மேரியஸும் சல்லாவும். அப்பொழுது மாரிட்டேனியா (Mauretania) என்ற வட ஆப்பிரிக்க அரசின் அரசராயிருந்தார் போக்கஸ் (Bocchus) என்பவர். அவர் ஜுகூர்த்தாவின் மாமனார் போரிலும் அவருக்குப் படையுதவி செய்து வந்தார். அரோடு இரகசியப் பேச்சுவார்த்தைகள் நடத்தி, ஜுகூர்த்தாவைக் கைதுசெய்து தன்னிடம் ஒப்படைப்பதற்கு அவரை இணங்குமாறு செய்தார் சல்லா. ரோமானியருக்கும் தம் மருமகனுக்கும் இடையில் சமரசம் ஏற்படுத்த முயல்வதாக நடித்து, சல்லாவையும் ஜுகூர்த்தாவையும் பேச்சுவார்த்தைக்கு அழைத்தார் போக்கஸ். அப்பொழுது ஜுகூர்த்தாவின் மெய்க்காப்பாளர்களை வெட்டி வீழ்த்திவிட்டு, அவரைப் பிடித்து சல்லாவிடம் ஒப்புவித்தார் (கி.மு. 106). ரோமில்தான் நடத்திய மாபெரும் வெற்றி ஊர்வலத்தின்போது ஜுகூர்த்தாவுக்கும் அவரது இரு பிள்ளைகளுக்கும் விலங்குபூட்டித் தெருவில் இழுத்துச்சென்றார் மேரியஸ். பின்னர் ஒருசிறையில் அடைக்கப்பட்டு, உணவின்றி உயிர்விட்டனர் அவர்கள் மூவரும். தனது துரோகத்துக்குப் பரிசாக மேற்கு நுமீடியாவைப் பெற்றார் போக்கஸ். கிழக்கு நுமீடியா ஒரீம்ப்சலின் பிள்ளையான இரண்டாம் ஹீம்ப்சலுக்குக் கிடைத்தது. தனது முயற்சியாலேயே வெற்றிகிட்ட, வெற்றி ஊர்வலம் நடத்தும் உரிமையையும் பெருமையையும் மட்டும் மேரியஸ் கவர்ந்துகொண்டதைக் கண்டு ஆத்திரமுற்று, பழிக்குப் பழிவாங்கும் நேரத்தை எதிர்பார்த்துக் காத்திருந்தார் சல்லா.

ஜுகூர்த்தாவுடனான போரும் ரோமானிய அரசியலும்: இப்போரின் முக்கியமான விளைவுகளில் இரண்டை நாம் கவனிக்கவேண்டும். முதலாவதாக, கான்சல்கள், அவர்களது துணைத்தளபதிகள் (Legati) ஆகியோரின் பணத்தாசையும் ஊழல்களும் அம்பலமாகி, பிரபுக்களது ஆட்சியின் ஒழுங்கீனத்தை மக்கள் அறிந்தனர். செனேட்டின் அதிகாரத்தைக் குறைக்க வேண்டுமென்றும், பிரபுக்களல்லாதாருக்கும் பல

பதவிகளும் சலுகைகளும் கிடைப்பதற்கு வழிசெய்ய வேண்டு மென்றும் பாடுபட்டது பொதுமக்கள் கட்சி. இரண்டாவது முக்கிய விளைவு படையைப்பற்றியது. படை வீரர்களுக்குச் சம்பளம் தரப்பட்டது முதல், படைப்பணி என்பது ஒரு தொழி லாகக் கருதப்பட்டு வந்தது. போர்கள் முடிந்ததும் சிப்பாய்கள் தமது வீடுகளுக்குத் திரும்பி வழக்கமான தொழில்களில் ஈடு பட்டு வந்தனர். சொத்து படைத்தவர்கள் மட்டுமே போர்ப் பணிபுரிய முடியும் என்ற விதி அப்பொழுதும் தொடர்ந்து இருந்தது எனினும், சொற்ப சொத்தே படைத்தவர்களும்கூட இப்பொழுது இராணுவத்தில் சேர்த்துக்கொள்ளப்பட்டனர். சான்றாக, 4000 ஆஸ் மதிப்புக்குச் சொத்துடையவர்களும்கூடப் போர் வீரராகலாம் என்று ஆயிற்று. எனவே, போரே அவர் களுக்குத் தொழிலாக ஆயிற்று.

மேரியஸ் கி.மு. 107-ல் முதல் முறையும், 104-103-ல் இரண் டாவது, மூன்றாவது முறையும் கான்சலாகத் தேர்ந்தெடுக்கப் பட்டதே செனேட்டின் அதிகாரம் எவ்வளவுதூரம் குன்றி விட்டது என்பதைக் காட்டியது. செனேட்டின் எதிர்ப்பைப் பொருட்படுத்தாமல், மக்களே தமது வாக்கின்மூலம் அவரைத் தேர்ந்தெடுத்தது மட்டுமன்றி, எந்த மாநிலத்துக்கு அவர் செல்லவேண்டியது என்பதையும், அவர்களே முடிவுசெய்தனர். மேலும், அவர் விரும்பியபடியே படையைத் திரட்டிக்கொள் ளவும் அவருக்கு அனுமதி அளித்தனர். இதன் விளைவாக, மேரியஸின் போர்வீரர்கள் செனேட்டின் அதிகாரத்துக்குச் சிறிதும் கட்டுப்பட வேண்டிய அவசியமில்லாமல் போய் விட்டது. தம்மைத் திரட்டித் தலைமை தாங்கி நடத்தும் மேரிய ஸுக்கு மட்டுமே அவர்கள் அடங்கி நடந்தனர்.

சிம்பிரிகளுடனும் டியூட்டானியர்களுடனும் போர்கள்: சிம் பிரிகளைத் தடுத்து நிறுத்துவதற்கான போர்களில் கி.மு. 109 முதல் பலவிடங்களில் ரோமானியப் படைகள் படுதோல்வி யடைந்தன. புராவின்ஸின் எல்லைகளுக்கு அப்பால் அவர் களைத் தடுத்து, திருப்பி விரட்டுவதற்கென்று அனுப்பப்பட்ட ஜூனியஸ் சிலானஸ் (M. Junius Silanus) என்ற கான்சல் முற்றிலும் தோல்வியுற்றுத் திரும்பி ஓடிவர வேண்டியதாற்று (கி.மு. 109) சம்பிரிகள். ஆனால், பகைவரின் இந்தப் பெருந் தோல்வியைப் பயன்படுத்திக் கொண்டு இத்தாலிக்குள் நுழை யாமல், மேற்கு நோக்கிச் சென்றனர். வேறு பல குலங்களும் கூட இவர்களுடன் பின்னர் சேர்ந்துகொண்டனர். கி.மு. 107-ல் கரோன் (Garonne) நதிக்கரையில் நடந்த மற்றொரு கடும்போரில் கேசியஸ் லாங்கினஸ் (Cassius Longinus) என்ற கான்சலும்

உட்பிரிவு ஒன்றும் அவற்றில் சேர்க்கப்பட்டது. அச்சட்டங்கள் இயற்றப்பட்ட ஐந்து நாள்களுக்குள், அவற்றை எதிர்க்காமல், அவற்றுக்குக் கட்டுப்பட்டு நடப்பதற்குத் தாம் தயார் என்று ஒவ்வொரு செனெட்டரும் உறுதிமொழி எடுத்துக்கொள்ளவேண்டும் என்றது அவ் வுட்பிரிவு. அவ்வாறு செய்யாத செனெட்டர் ஒவ்வொருவரும் பெருந்தொகை ஒன்றை அபராதமாகச் செலுத்தவேண்டும். அத்தகைய உறுதிமொழியைத் தாம் எடுத்துக்கொள்ளப்போவதில்லை என்று செனெட்டின்முன் பேசிய மேரியஸ், மற்ற எல்லாச் செனெட்டர்களுடனும் சேர்ந்து தாமும் உறுதிமொழி எடுத்துக் கொண்டார். முன்பு கான்சலாக இருந்து ஜூகூர்த்தாவுக் கெதிரான போரை நடத்திய மெட்டலஸ் மட்டுமே அவ்வித உறுதிமொழி எடுத்துக்கொள்ள மறுத்து, தண்டனையாகத் தலைநகரிலிருந்து சிறிதுகாலத்துக்கு வெளியேற்றப்பட்டிருந்தார்.

இந்நிலையில் அடுத்த ஆண்டுக்கான தேர்தல்கள் வந்தன. தம்முடைய சட்டங்களை உறுதியாகச் செயல்படுத்துவதற்காகத் தாமும் கிளாசியாவும் மறுபடியும் தேர்தலுக்கு நிற்கவேண்டியது மிகவும் தேவை என்பதை உணர்ந்தார் சாட்டர்னினஸ். மதில்மேல் பூனையாக, இரண்டு கட்சிக்கும் நல்லவராக இருக்கவேண்டுமென மேரியஸ் நடித்ததால் அவரது செல்வாக்குக் குறைந்தது. ஏழாவது முறையும் கான்சலாக வேண்டுமென்று அவர் பெரிதும் விரும்பிய போதிலும் அதற்கான ஆதரவு அவருக்கில்லை. எனவேதான், கிளாசியாவை அடுத்த கான்சலாக்க முயன்றார் சாட்டர்னினஸ். மக்களிடையில் ஏற்கெனவே ஓரளவு நல்ல பெயரை எடுத்திருந்த, ஆனால் மேரியஸைப்போல் கொள்கைகள் ஏதுமில்லாத மெம்மியஸ் (Memmius) என்பவரைக் கிளாசியாவுக்கெதிராகச் செனெட் நிறுத்தியது.

தேர்தல் நடக்கவிருந்த நாளின் காலையில் செனெட்டர்களின் கையாள்கள் சிலர் மெம்மியஸைக் கொன்று, சாட்டர்னினஸும் கிளாசியாவும்தாம் அதற்குக் காரணம் என்ற வதந்தியைக் கிளப்பி மக்களிடையில் கலவரத்தைத் தூண்டிவிட்டனர். உடனே, அவர்கள் இருவரும் சமுதாய விரோதிகள் என்று கூறி, அவர்களைப் பிடித்துவருமாறு கான்சலான மேரியஸுக்கு ஆணையிட்டது செனெட். சாட்டர்னினஸின் மூன்று சட்டங்களும் செனெட்டின் அதிகாரத்தைக் குலைப்பதோடு நின்றுவிடாமல், ஏழைகளுக்கும் இத்தாலியருக்கும் நன்மையாயிருப்பதைக்கண்டு அஞ்சிய ஈக்வைட்டுகளில் பலரும்கூட, இப்பொழுது செனெட்டை ஆதரித்தனர். கைகலப்புகள் நடைபெற்றன.

சாட்டர்னினஸும் கிளாசியாவும் கேப்பிடோலைக் கைப் பற்றினர்; சிறையின் கதவுகளைத் திறந்துவிட்டு, கைதிகளை விடுவித்தனர்; அடிமைகளுக்கு விடுதலை அளிக்கப்போவதாகவும் கூறினர். மேரியஸ் படையுடன் புறப்பட்டுக் கேப்பிடோலை முற்றுகையிட்டு அவ்விருவரையும் தம்மிடம் சரணடைந்துவிடும் படியும் தாமே முன்னின்று சமரசம் செய்து வைப்பதாகவும் ஆசைகாட்டினார். அதை நம்பி அவ்விருவரும் அவரிடம் சரணடைந் தனர். ஆனால், உடனே பல பிரபுக்கள் அவர்களைக் குத்திக் கொன்றனர்.

இத்தாலியரின் கிளர்ச்சிகள் (கி.மு. 90-88): இவ்வாறு இத்தாலியர்கட்கு நீதி வழங்கப்படுவதைத் தடுத்துவிட்டனர் பிரபுக் களும் ஈக்வைட்டுகளும். சிம்பிரிகளுக்கு எதிரான போரின்போது ராடைன் சமவெளியில் இத்தாலியர்களுக்குக் குடியுரிமை வழங்கு வதே தமது முதல் குறிக்கோளாக இருக்கும் என்று கூறிய மேரியஸ், போரில் வெற்றிக்குப் பிறகு அதைப்பற்றி நினைத்துக்கூடப் பார்க்க வில்லை. உரிமைகளைப் பெறுவதற்குப் போராடுவதென்று அவர்கள் முடிவுசெய்தனர்.

கி.மு. 95ஆம் ஆண்டில் லிசீனியஸ் கிராசஸ் (Licinius Crassus) என்பாரும், மியூசியஸ் ஸ்கேவோலா (Mucius Scaevola) என்பாரும் கான்சல்களாக இருந்தனர். எப்படியோ சில இத்தாலியருக்கு ரோமானியக் குடியுரிமை கிடைத்துவிட்டதைப்பற்றிய உண்மை களைக் கண்டறிந்து, அதை மீண்டும் பறித்துக்கொள்வதற்கென்று ஒரு குழுவை அவர்கள் ஏற்படுத்தினர். தங்களுக்குக் குடியுரிமைகள் தரப்போவதாகச் சிற்சில சமயங்களில் ரோமானியப் பிரபுக்கள் கூறித் தம்மைப் போர்களில் முழுமூச்சோடு ஈடுபடும்படி செய்தது எத்தகைய நயவஞ்சகம் என்பதையும், தமக்குக் குடியுரிமை கொடுக் கும் எண்ணம் அவர்களுக்குச் சிறிதும் இல்லை என்பதையும் இந் நடவடிக்கை மூலம் இத்தாலியர் அறிந்தனர். ஆகவே, போராட்டத் துக்கான ஏற்பாடுகள் இரகசியமாகத் தொடங்கின. இத்தாலிய நகரங்களுக்கிடையில் இரகசியமாகத் தொடர்புகளும் கடிதப் போக்கு வரத்தும் நடந்தன.

கி.மு. 191-ல் **லிவியஸ் ட்ரூசஸ்** (Livius Drusus) என்பவர் டிரிபியூனானார். இத்தாலியருக்குக் குடியுரிமையை எவ்வாறாயி னும் பெற்றுத் தந்துவிடவேண்டும் என்று அவர் தீவிரமாயிருந்தார். இதற்காக எல்லா வகுப்பினரது ஒத்துழைப்பையும் பெற அவர் முயன்றார். நீதிமன்றத்தில் ஜூரர்களாக இருப்பதுபற்றிச் செனெட்டுக்கும் ஈக்வைட்டுகளுக்கும் இருந்துவந்த வேற்றுமையைப்

பேச்சுவார்த்தைமூலம் போக்கவும் ரோமானிய ஏழைகளுக்கென இத்தாலியிலும் சிசிலியிலும் புதிய குடியேற்றங்களை நிறுவவும் தானியங்களை மலிவான விலைக்கு விற்பனை செய்யவும் அவர் முயன்றார். எனினும், இவற்றையெல்லாம் கொண்டு அவர்தம் ஆதரவை ட்ரூசஸ்ஸால் பெற முடியவில்லை. காரணம் இத்தாலியருக்குக் குடியுரிமை வழங்குவதை அவர்கள் அனைவருமே வெறுத்தனர்.

ஒரு நாள் திடீரென்று ட்ரூசஸ் இறந்துகிடந்தார். செல்வர்களின் சதியால் நடைபெற்ற கொலையே அது என்று அனைவராலும் கருதப்பட்டது. புலன் விசாரணைகள்மூலம் குற்றவாளியை அரசாங்கம் கண்டுபிடிக்காதது இக் கருத்தை உறுதிப்படுத்தியது. இதையடுத்து, இத்தாலிய நகரங்களில் இரகசியச் சதிகள் உருவாகின்றன என்ற வதந்தியும் பரவியது. உடனே, இத்தாலியருக்குச் சலுகைகள் அளிக்கவேண்டும் என்று கருதிய பல ரோமானியர்மீது நடவடிக்கைகள் எடுப்பதற்கென்று வேரியஸ் (Varius) என்ற டிரிபியூன் சட்டம் ஒன்றைக் கொண்டுவந்தார் (கி.மு. 90). அதன் விளைவாகப் பலர் கொல்லப்பட்டனர்; வேறு பலர் சிறையிலிடப்பட்டனர்; வேறு பலர் ரோமிலிருந்து நாடுகடத்தப்பட்டனர்; பல செனெட்டர்களும்கூட இவ்வாறு விரட்டப்பட்டனர்.

இந் நிலையில் அஸ்குலம் (Asculum) நகரில் ரோமானியப் புரோகான்சலும் (Proconsul)[1] அவருடைய துணைத்தளபதியும் அங்கு வாழ்ந்த மக்களைக் கூட்டி, அவர்கள் ரோமுக்கெதிரான சதிகளில் ஈடுபடுவதாகவும் அதற்கெனக் கடுமையான தண்டனைகளை அவர்கள் அனுபவிக்க வேண்டியிருக்கும் என்றும் அச்சுறுத்தினர்; இந்த அச்சுறுத்தலைக் கேட்டு வெகுண்ட மக்கள் அவர்களைக் கொலைசெய்தனர்; அந் நகரிலிருந்த வேறு பல ரோமானியருங் கூடக் கொல்லப்பட்டனர்.

இதைப்பற்றிக் கேள்வியுற்ற உடனேயே ரோமானியரின் ஆக்கிரமிப்புகளுக்கும் ஆதிக்கத்துக்கும் அடக்குமுறைக்கும் ஆளாகி, உரிய தருணம் பார்த்துக்கொண்டிருந்த இத்தாலிய தேசிய இனங்கள் (Nationalities) பலவும் கிளர்ந்தெழுந்தன. வெஸ்ட்டின்கள் (Vestini), மார்ஸ்கள் (Marsi), பெலிக்னிகள் (Peligni), சாம்னைட்டுகள், லூக்கேனிகள் முதலிய பலர் கிளர்ந்தெழுந்தனர்.

[1] ரோமானியக் கான்சல் படைத்தலைமை பூண்டு ஒரு காரியத்தை மேற்கொண்டு ஓரிடத்துக்குச் செல்வார். அவரது பதவிக் காலமான ஓராண்டுக்குள் அப் பணி முடிவடையவில்லை என்றால் அடுத்த ஆண்டும் 'புரோகான்சல்' என்ற பெயரோடு அவர் பணிபுரிவார். கான்சலுடன் துணைத்தளபதி ஒருவரும் (Legatus) செல்வது வழக்கம்.

(தேசிய இனங்கள் ஒன்றுபட்டுக் கிளர்ச்சிகள் நடத்துவதைத் தவிர்ப்பதற்கென்று ஏற்கெனவே ரோமானிய செனெட் அவற்றைச் சிறிது சிறிதாகப் பிரித்து, பல்வேறு இடங்களுக்கும் அனுப்பிக் குடியமர்த்தியிருந்தது. இதுதான் ரோமானியரின் 'பிரித்தாளும் கொள்கை' (Policy of Divide and Rule) எனப்பட்டது. இந்த இயக்கமானது இத்தாலி முழுவதும் விரைவிலேயே பரவியது. **இத்தாலியரின் சமுதாயப் போர்** (War of the Italian Socii, or Social War) என்றும், **மார்ஸ்களின் போர்** (Marsic War) என்றும் இது சொல்லப்படுகிறது; இதில் மார்ஸ்கள் முக்கியமான பங்காற்றியதுதான் இக் கிளர்ச்சிக்குக் காரணம்.

இப் போர் கி.மு. 90 முதல் 88 வரை மூன்றாண்டுகள் நீடித்தது. இத்தாலியர்கள் ஒரு புதிய குடியரசை நிறுவ முயன்றனர்; அதற்குத் தலைநகரமாகக் கோர்பினியம் (Corfinium) நகரைத் தேர்ந்தெடுத்து அதற்கு 'இத்தாலிகா' (Italica) என்ற புதுப் பெயரையும் சூட்டினர். ரோமில் இருந்ததைப் போன்று மன்று (Forum), செனெட் ஆகியவையும்கூட அங்கு அமைக்கப்பட்டன. செனெட்டில் 500 உறுப்பினர்கள் இருந்தனர். இரண்டு கான்சல்களும், போரை நடத்துவதற்காக ஒவ்வொரு கான்சலுக்கும் ஆறு ஆறு துணைத் தளபதிகளும் தேர்ந்தெடுக்கப்பட்டனர். ரோமானியப் படையும் அதிக ரோமானியரும் இருந்த குடியேற்றங்கள் தாக்கப்பட்டன.

கி. மு. 90-ல் ரோமானியரின் கான்சல்களாக இருந்தவர்கள் ஜூலியஸ் சீசர் (L. Julius Caesar), ருட்டீலியஸ் லூப்பஸ் (Rutilius Lupus) ஆகியோர் ஆவர். ஜூலியஸ் தென் இத்தாலியில் பலவிடங்களில் தோற்கடிக்கப்பட்டார். ருட்டீலியஸ் மார்ஸ்களோடு நடந்த போர் ஒன்றில் கொல்லப்பட்டார்; அவருடைய துணைத் தளபதியாகப் போரிட்ட மேரியஸ் ரோமானியப் படைகளைப் பேரழிவிலிருந்து காத்து, களத்திலிருந்து பின்வாங்கினார்.

ரோமானியப் படைகளின் தோல்விகளைக் கண்ணுற்ற அம்பிரியர்களும் எட்ரஸ்கர்களும் இத்தாலியரோடு சேர்ந்துகொண்டனர். ஆனால், விரைவிலேயே அம்பிரியர் தோற்கடிக்கப்பட்டனர். எனினும், இத்தாலியருக்குச் சலுகைகளை வழங்க வேண்டிய தேவையை உணர்ந்து ஜூலியஸ் சட்டம் ஜூலியஸ் சீசரால் கி.மு. 90-ல் இயற்றப்பட்டது. எட்ரஸ்கருக்கும், ரோமுக்கும் எதிராகப் போரில் ஈடுபடாத எல்லா இத்தாலியருக்கும் வாக்குரிமை அளித்தது இச் சட்டம். இதனால் எட்ரஸ்கர்கள் தமது போரைக் கைவிட்டு ரோமை எதிர்ப்பதில்லை என முடிவுசெய்தனர்.

ரோமுக்குத் திரும்பிய மேரியஸ் 'ரோமைக் காத்தவர்' என்றும், 'இரண்டாவது ரோமுலஸ்' என்றும் மக்களால் ஆரவார மாக வரவேற்கப்பட்டார். வெற்றி ஊர்வலமும் கோலாகலமாக நடத்தப்பட்டது. எனினும், அடுத்த ஆண்டுக்கான தேர்தலில் கான்சல் பதவிக்கு (ஆறுவது முறை)ப் போட்டியிட்ட மேரியஸை எதிர்ப்பதென்று பிரபுக்கள் முடிவு செய்தனர். ஏனெனில், தமது ஊழல்கள் அம்பல மாவதற்கும் தமது ஆதிக்கம் குன்றுவதற்கும் அவரும் ஒருகாரணம் என்பதை அவர்கள் உணர்ந்திருந்தனர். ஆயினும், கி.மு. 100க்கான கான்சலாக மேரியஸே தேர்ந்தெடுக்கப்பட்டார். அதேபோல், கிளாசியா பிரேட்டராகத் தேர்ந்தெடுக்கப்பட்டார். சாட்டர்னினஸ் டிரி பியூன் தேர்தலில் தோல்வியுற்றுராயினும், வெற்றிபெற்ற நோனியஸ் (Nonius) என்பவர் அடுத்த நாளே கொலை யுண்டதால், சாட்டர்னினஸே டிரிபியூன் பதவியில் அமர்த்தப் பட்டார். இம்மூவருமே பிரபுக்களுக்குப் பிடிக்காத பொது மக்கள் கட்சியைச் சேர்ந்தவர்கள்.

சாட்டர்னினஸின் திட்டங்கள்: பலமுறை கான்சலாகப் பதவி வகித்தபோதிலும் மேரியஸ் நிர்வாகத்திறமை சிறிதும் இல்லாதவர். திட்டவட்டமான கொள்கைகளும் அவரிடம் கிடையா. சிறந்த படை ஒன்றை உருவாக்கி, பலபெரும் வெற்றி களைப் பெற்று ரோமில் செல்வாக்கு பெற்றிருந்தார் எனினும், விரைவிலேயே நிர்வாகத்தில் அவரது அறியாமையும் திறமை யின்மையும் வெளியாயின.

பதவியில் அமர்ந்த உடனேயே பல திட்டங்களைச் செய லாக்க முயன்றார் சாட்டர்னினஸ். கிளாசியாவும் அவரோடு சேர்ந்து ஒத்துழைத்தார். இவ்விருவரும் சேர்ந்து பல சட்டங்களை இயற்றத் துணிந்தனர். மேரியஸ் மதில்மேல் பூனையாக இருந்து வந்தார்.

சாட்டர்னினஸும் கிளாசியாவும் கொண்டு வந்த சில முக்கியமான சட்டங்களை இப்பொழுது பார்ப்போம். 1. சிம்பிரி களால் கைப்பற்றப்பட்டு, பின்பு விடுவிக்கப்பட்ட சிசால் பைன்கால் பிரதேசத்தில் உள்ள நிலமனைத்தையும் ரோமானியக் குடிமக்களிடம் விநியோகிப்பதற்கென ஒரு நிலச்சட்டம் இயற்றப்பட்டது. 2. ரோமில் மக்களிடையில் விநியோகிக்கப் படும் தானியங்களின் விலையை மிகவும் குறைத்து நிர்ணயம் செய்த தானியச்சட்டம் ஒன்று இயற்றப்பட்டது. 3. சிசிலி, அக்கேயா, மாசிடோனியா ஆகியவிடங்களில் மேரியஸின் போர் வீரர்களுக்குநிலம் வழங்குவதற்கெனவும் குடியேற்றங்கள்

நிறுவுவதற்கெனவும் ஒரு சட்டம் இயற்றப்பட்டது; இத்தாலிய ருக்கும் அவற்றில் நிலங்கள் வழங்க வழி செய்தது அது.

இச்சட்டங்களையெல்லாம் உறுதியாகச் செயல்படுத்து வதைச் செனேட்டர்கள் எதிர்ப்பர் என்பதை உணர்ந்து ஒரு புதிய உட்பிரிவு ஒன்றும் அவற்றில் சேர்க்கப்பட்டது. அச் சட்டங்கள் இயற்றப்பட்ட ஐந்து நாட்களுக்குள், அவற்றை எதிர்க்காமல், அவற்றுக்குக் கட்டுப்பட்டு நடப்பதற்குத் தான் தயார் என்று ஒவ்வொரு செனேட்டரும் உறுதிமொழி எடுத்துக் கொள்ள வேண்டும் என்றது அவ்வுட் பிரிவு. அவ்வாறு செய்யாத செனேட்டர் ஒவ்வொருவரும் பெருந்தொகை ஒன்றை அபராதமாகச் செலுத்த வேண்டும். அத்தகைய உறுதி மொழியைத் தான் எடுத்துக் கொள்ளப்போவதில்லை என்று செனேட்டின்முன் பேசிய மேரியஸ், மற்ற எல்லா செனேட்டர்களுடனும் சேர்ந்து தானும் உறுதிமொழி எடுத்துக் கொண்டார்! முன்பு கான்சலாக இருந்து ஜூகூர்த்தாவுக் கெதிரான போரை நடத்திய மெட்டலஸ் மட்டுமே அவ்வித உறுதி மொழி எடுத்துக்கொள்ள மறுத்து, தண்டனையாகத் தலைநகரிலிருந்து சிறிது காலம் வெளியே விரட்டப்பட்டார்.

இந்நிலையில் அடுத்த ஆண்டுக்கான தேர்தல்கள் வந்தன. தனது சட்டங்களை உறுதியாகச் செயல் படுத்துவதற்காகத் தானும் கிளாசியாவும் மறுபடியும் தேர்தலுக்கு நிற்க வேண்டி யது அவசியம் என்பதை உணர்ந்தார் சாட்டர்னினஸ். மதில் மேல் பூனையாக, இரண்டு கட்சிக்கும் நல்லவராக இருக்க வேண்டுமென மேரியஸ் நடித்ததால் அவரது செல்வாக்கு குறைந்தது. ஏழாவது முறையும் கான்சலாக வேண்டுமென்று அவர் பெரிதும் விரும்பியபோதிலும் அதற்கான ஆதரவு அவ ருக்கில்லை. எனவேதான், கிளாசியாவை அடுத்த கான்சலாக்க முயன்றார் சாட்டர்னினஸ். மக்களிடையில் ஏற்கெனவே ஓரளவு நல்ல பெயரை எடுத்திருந்த – ஆனால் மேரியஸைப் போல் கொள்கைகள் ஏதுமில்லாத – மெம்மியஸ் (Memmius) என்பவரைக் கிளாசியாவுக்கெதிராகச் செனேட் நிறுத்தியது.

தேர்தல் நடக்கவிருந்த நாள் காலையில் செனேட்டர்களின் கையாட்கள் சிலர் மெம்மியஸைக் கொன்று, சாட்டர்னினஸும், கிளாசியாவும் தாம் அதற்குக் காரணம் என்ற வதந்தியைக் கிளப்பி மக்களிடையில் கலவரத்தைத் தூண்டிவிட்டனர். உடனே, அவர்கள் இருவரும் சமுதாய விரோதிகள் என்று கூறி, அவர்களைப்பிடித்து வருமாறு கான்சலான மேரியஸுக்கு ஆணையிட்டது செனேட். சாட்டர்னியஸின் மூன்று சட்டங்

களும் செனேட்டின் அதிகாரத்தைப் பாதிப்பதோடு நின்று விடாமல், ஏழைகளுக்கும் இத்தாலியருக்கும் சாதகமாயிருப்பதைக்கண்டு அஞ்சிய ஈக்வைட்டுகளில் பலரும்கூட, இப்பொழுது செனேட்டை ஆதரித்தனர். கைக்கலப்புகள் நடைபெற்றன.

சாட்டர்னினஸும் கிளாசியாவும் கேப்பிடோலைக் கைப்பற்றினர்; சிறையின் கதவுகளைத் திறந்துவிட்டு, கைதிகளை விடுவித்தனர்; அடிமைகளுக்கு விடுதலை அளிக்கப்போவதாகவும் கூறினர். மேரியஸ் படையுடன் புறப்பட்டு கேப்பிடோலை முற்றுகையிட்டு அவ்விருவரையும் தன்னிடம் சரணடைந்து விடும்படியும், தானே முன்னின்று சமரசம் செய்து வைப்பதாகவும் மேரியஸ் ஆசை காட்டினார். அதை நம்பி அவ்விருவரும் அவரிடம் சரணடைந்தனர். ஆனால், உடனே பல பிரபுக்கள் அவர்களைக் குத்திக் கொன்றனர்.

இத்தாலியரின் கிளர்ச்சிகள் : கி.மு. 90—88. இவ்வாறு இத்தாலியர்கட்கு நீதி வழங்கப்படுவதைத் தடுத்து விட்டனர் பிரபுக்களும் ஈக்வைட்டுகளும். சிம்பிரிகளுக்கு எதிரான போரின்போது ராடைன் சமவெளியில் இத்தாலியர்களுக்குக் குடியுரிமை வழங்குவதே தமது முதல் குறிக்கோளாக இருக்கும் என்று கூறிய மேரியஸ், போரில் வெற்றிக்குப் பிறகு அதைப் பற்றி நினைத்துக்கூடப் பார்க்கவில்லை. உரிமைகளைப் பெறுவதற்குப் போராடுவதென்று முடிவு செய்தனர்.

கி.மு. 95 ஆம் ஆண்டில் லிசீனியஸ் கிராசஸ் (Licinius crassus) என்பாரும், மியூசியஸ் ஸ்கேவோலா (Mucius Scaevole) என்பாரும் கான்சல்களாக இருந்தனர். எப்படியோ சில இத்தாலியருக்கு ரோமானியக் குடியுரிமை கிடைத்து விட்டதைப்பற்றிய உண்மைகளைக் கண்டறிந்து, அதை மீண்டும் பறித்துக் கொள்வதற்கென்று ஒருகுழுவை அவர்கள் நியமித்தனர். தங்களுக்குக் குடியுரிமைகள் தரப்போவதாகச் சிற்சில சமயங்களில் ரோமானியப்பிரபுக்கள் கூறித் தம்மைப் போர்களில் முழுமூச்சோடு ஈடுபடும்படி செய்தது எத்தகைய நயவஞ்சகம் என்பதையும், தமக்குக் குடியுரிமை கொடுக்கும் எண்ணம் அவர்களுக்குச் சிறிதும் இல்லை என்பதையும் இந்நடவடிக்கை மூலம் இத்தாலியர் அறிந்தனர். ஆகவே, போராட்டத்துக்கான ஏற்பாடுகள் இரகசியமாகத் துவங்கின. இத்தாலியநகரங்களுக்கிடையில் இரகசியமாகத் தொடர்புகளும், கடிதப் போக்குவரத்தும் நடந்தன.

கி.மு. 191-ல் **லிவியஸ் ட்ரூசஸ்** (Livius Drusus) என்பவர் டிரிபியூனானார். இத்தாலியருக்குக் குடியுரிமையை எவ்வாறேனும் பெற்றுத் தந்துவிட வேண்டும் என்று அவர் தீவிரமாயிருந்தார். இதற்காக எல்லா வகுப்பினரது ஒத்துழைப்பையும் பெற அவர் முயன்றார். நீதிமன்றத்தில் ஜூரர்களாக இருப்பதுபற்றி செனேட்டுக்கும் ஈக்வைட்டுகளுக்கும் இருந்து வந்த வேற்றுமையைப் பேச்சுவார்த்தைமூலம் போக்கவும், ரோமானிய ஏழைகளுக்கென இத்தாலியிலும் சிசிலியிலும் புதிய குடியேற்றங்களை நிறுவவும், தானியங்களை மலிவான விலைக்கு விநியோகம் செய்யவும் அவர் முயன்றார். எனினும், இவற்றையெல்லாம் கொண்டு அவர்தம் ஆதரவை ட்ரூசால் பெற முடியவில்லை. காரணம் இத்தாலியருக்குக் குடியுரிமை வழங்குவதை அவர்கள் அனைவருமே வெறுத்தனர்.

ஒருநாள் திடீரென்று ட்ரூசஸ் இறந்துகிடந்தார். செல்வந்தர்களின் சதியால் நடைபெற்ற கொலையே அது என்று அனைவராலும் கருதப்பட்டது. புலன் விசாரணைகள்மூலம் குற்றவாளியை அரசாங்கம் கண்டுபிடிக்காதது இக்கருத்தை உறுதிப்படுத்தியது. இதையடுத்து, இத்தாலிய நகரங்களில் இரகசியச் சதிகள் உருவாகின்றன என்ற வதந்தியும் பரவியது. உடனே, இத்தாலியருக்குச் சலுகைகள் அளிக்கவேண்டும் என்று கருதிய பல ரோமானியர்மீது நடவடிக்கைகள் எடுப்பதற்கென்று வேரியஸ் (Varius) என்ற டிரிபியூன் சட்டம் ஒன்றைக் கொண்டு வந்தார் (கி.மு. 90). அதன் விளைவாகப் பலர் கொல்லப்பட்டனர்; பலர் சிறையி லிடப்பட்டனர்; வேறு பலர் ரோமிலிருந்து நாடு கடத்தப்பட்டனர்; பல செனேட்டர்களும்கூட இவ்வாறு விரட்டப்பட்டனர்.

இந்நிலையில் அஸ்குலம் நகரில் (Asculum) ரோமானியப் புரோகான்சலும் (Proconsul) அவரது துணைத்தளபதியும் அங்கு வாழ்ந்த மக்களைக்கூட்டி, அவர்கள் ரோமுக்கெதிரான சதிகளில் ஈடுபடுவதாகவும், அதற்கெனக் கடுமையான தண்டனைகளை அவர்கள் அனுபவிக்க வேண்டியிருக்கும் என்றும் அச்சுறுத்தினர். இந்த அச்சுறுத்தலைக் கேட்டு வெகுண்ட மக்கள் அவர்களைக் கொலைசெய்தனர்; அந்நகரிலிருந்த வேறு பல ரோமானியருங்கூடக் கொல்லப்பட்டனர்.

---

1. ரோமானியக் கான்சல் படைத்தலைமை பூண்டு ஒருகாரியத்தை மேற்கொண்டு ஓரிடத்துக்குச் செல்வார். அவரது பதவிக் காலமான ஓராண்டுக்குள் அப்பணி முடிவடையவில்லை என்றால், அடுத்த ஆண்டும் 'புரோகான்சல்' என்ற பெயரோடு அவர் பணி புரிவார். கான்சலுடன் துணைத்தளபதி ஒருவரும் (Legatus) செல்வது வழக்கம்.

இதைப்பற்றிக் கேள்வியுற்ற உடனேயே ரோமானியரின் ஆக்கிரமிப்புக்களுக்கும் ஆதிக்கத்துக்கும் அடக்கு முறைக்கும் ஆளாகி, உரிய தருணம் பார்த்துக்கொண்டிருந்த இத்தாலிய தேசிய இனங்கள் பலவும் (Nationalities) கிளர்ந்தெழுந்தன. வெஸ்ட்டின்கள் (Vestini), மார்ஸ்கள் (Marsi), பெலிக்னிகள் (Peligni) சாம்னேட்டுகள், லுக்கேனிகள் முதலிய பலர் கிளர்ந்தெழுந்தனர். (தேசீய இனங்கள் ஒன்றுபட்டுக் கிளர்ச்சிகள் நடத்துவதைத் தவிர்ப்பதற்கென்று ஏற்கனவே ரோமானிய செனேட் அவற்றைச் சிறிது சிறிதாகப் பிரித்து, பல்வேறு இடங்களுக்கும் அனுப்பிக் குடியமர்த்தியிருந்தது. இதுதான் ரோமானியரின் 'பிரித்தாளும் கொள்கை'—Policy of Divide and Rule எனப்பட்டது.) இந்த இயக்கமானது இத்தாலி முழுவதும் விரைவிலேயே பரவியது. **இத்தாலியரின் சமுதாயப் போர்** (War of the Italian Socii, or Social war.) என்றும், **மார்ஸ்களின் போர்** (Marsic war) என்றும் இது அழைக்கப்படுகிறது; இதில் மார்ஸ்கள் முக்கியமான பங்காற்றியதுதான் இதற்குக் காரணம்.

இப்போர் கி.மு. 90 முதல் 88 வரை மூன்றுண்டுகள் நீடித்தது. இத்தாலியர்கள் ஒருபுதிய குடியரசை நிறுவ முயன்றனர்; அதற்குத் தலைநகரமாகக் கோர்பினியம் (Corfinium) நகரைத் தேர்ந்தெடுத்து அதற்கு 'இத்தாலிகா' (Italica) என்ற புதுப் பெயரையும் சூட்டினர். ரோமில் இருந்ததைப் போன்று மன்று (Forum), செனேட் ஆகியவையும்கூட அங்கு அமைக்கப் பட்டன. செனேட்டில் 500 உறுப்பினர்கள் இருந்தனர். இரண்டு கான்சல்களும், போரை நடத்துவதற்காக ஒவ்வொரு கான்சலுக்கும் ஆறு துணைத் தளபதிகளும் தேர்ந்தெடுக்கப்பட்டனர். ரோமானியப் படையும், அதிக ரோமானியரும் இருந்த குடியேற்றங்கள் தாக்கப்பட்டன.

கி.மு. 90-ல் ரோமானியக் கான்சல்களாக இருந்தவர்கள், ஜூலியஸ் சீசர் (L. Julius Cæsar), ருட்டிலியஸ் லூப்பஸ் (Rutilius Lupus) ஆகியோர். ஜூலியஸ் தென் இத்தாலியில் பல விடங்களில் தோற்கடிக்கப்பட்டார். ருட்டிலியஸ் மார்ஸ்களோடு நடந்தபோர் ஒன்றில் கொல்லப்பட்டார்; அவரது துணைத் தளபதியாகப் போரிட்ட மேரியஸ் ரோமானியப் படைகளைப் பேரழிவிலிருந்து காத்து, களத்திலிருந்து பின்வாங்கினர்.

ரோமானியப் படைகளின் தோல்விகளைக் கண்ணுற்ற அம்பிரியர்களும் எட்ரஸ்கர்களும் இத்தாலியரோடு சேர்ந்து கொண்டனர். ஆனால், விரைவிலேயே அம்பிரியர் தோற்கடிக்

கப்பட்டனர். எனினும், இத்தாலியருக்குச் சலுகைகளை வழங்க வேண்டிய அவசியத்தை உணர்ந்து ஜூலியஸ்சட்டம் ஜூலியஸ் சீசரால் கி.மு. 90-ல் இயற்றப்பட்டது. எட்ரஸ்கருக்கும், ரோமுக்கு எதிராகப் போரில் ஈடுபடாத எல்லா இத்தாலியருக்கும் வாக்குரிமை அளித்தது இச்சட்டம். இதனால், எட்ரஸ்கர்கள் தமது போரைக் கைவிட்டு, ரோமை எதிர்ப்பதில்லை என முடிவு செய்தனர்.

கி.மு. 90-ஆம் ஆண்டில் நடந்த போர்களில் இத்தாலியர் பல வெற்றிகளைப் பெற்றனர். ஆனால், அடுத்த ஆண்டுமுதல் ரோமானியர் வெற்றிபெறத் துவங்கினர். தெற்கில் சல்லாவும் (Sulla), மத்திய இத்தாலியில் கயஸ் பாம்பேயஸ் ஸ்ட்ராபோவும் (Gaius Pompeius Strabo) இவர் பின்னர் வரப்போகிற பாம்பேயின் (Pompey—தந்தை) பல விடங்களில் ரோமுக்கு எதிராகப் போர் தொடுத்த இத்தாலியரைத் தோற்கடித்தனர். அவர்களது புதிய குடியரசின் தலைநகரான கோர்பினியமும் (இத்தாலிகா) கைப்பற்றப்பட்டது. அதனால், இத்தாலியர் தங்களது தலைநகரைப் பொவியானத்துக்கு (Buvianum) மாற்றினர். அதையும் சல்லா கைப்பற்றினர். எஞ்சி நின்ற முக்கிய நகரமான அஸ்குலத்தையும் இறுதியில் கி.மு. 88-ல் கைப்பற்றினர் ஸ்ட்ராபோ. பின்னர், சாம்னைட்டுகள் மட்டுமே கம்பேனியாவில் நோலா (Nola) என்ற நகரில் தொடர்ந்து போராடினர். அவ்வாண்டு இறுதிக்குள் அவர்களும் ஒடுக்கப்பட்டனர். இவ்வாறு சமுதாயப் போர் முடிவுற்றது.

சலுகைகள் தரப்படுதல்: கிழக்கில் மித்ரடேட்டஸுடன் போர்களை எதிர்நோக்கி யிருந்த ரோமானியர், இத்தாலியர்களுக்குச் சில சலுகைகளை அளிப்பதுதான் விவேகமாகும் என்பதைக் கி.மு. 89-லேயே உணர்ந்தனர். எனவே, அவ்வாண்டிலேயே பெப்பீரியஸ் கார்போ (Papirius Carbo), மார்க்கஸ் பிளாட்டியஸ் சில்வானஸ் (Marcus Plautius Silvanus) என்ற இரு டிரிபியூன்கள் சில சட்டங்களை இயற்றினர். போநதிவரையிலிருந்த முனிசிபல் உரிமைகள் பெற்ற நகரங்களிலும் கூட்டாட்சி நகரங்களிலும் (Federcl Cities) வாழ்ந்த மக்களுக்கு முழுக் குடியுரிமையும் போநதிக்கும் ஆல்ப்ஸ் மலைகட்கும் இடையிலிருந்த நகரங்களுக்கு லத்தீனியக் குடியுரிமையைப் போல் ஒருசில உரிமைகளையும் (Imperfect Gitizenship) அச்சட்டங்கள் வழங்கின. செனேட்டின் எதிர்ப்பை முறியடித்தே, மக்களின் வாக்குகள்மூலம் இச்சட்டங்கள் இயற்றப்பட்டன. இதனால், இத்தாலியர்களுக் கிடையில் ஒருபகுதியினரைத் தனக்கு ஆதரவாகப் பிரித்து, சமுதாயப் போரை விரைவில்

வெற்றிகரமாக முடிவுக்குக் கொண்டுவருவதற்கு ரோமால் முடிந்தது. அதே சமயம், கிளர்ச்சிகள் நடத்தியதன் விளைவாகவே பல சலுகைகளை இத்தாலியர் பெற்றனர் என்பது உண்மை நிலை.

ரோம்போரில் வென்றது; இத்தாலியர் போரில் தோற்றனர். ஆயினும், விளைவுகளைப் பார்க்கும்போது இத்தாலிக்கும் அது வெற்றியே யாகும். ரோம் அதுவரையில் இத்தாலியைத் தனக்கு அடிமைப்பட்ட சிறுசிறு அரசுகளாகப் பிரித்து ஆண்டு வந்தது. ஆனால், அந்த ஏற்பாடு சமுதாயப் போரோடு முடிவுற்றது. அதன்பின்னர் ரோமானியக் குடியரசு என்பது ரோம் நகரை மட்டுமல்லாமல், இத்தாலி முழுவதையுமே குறிக்கும். இத்தாலியக் குடியரசுதான் ரோமானியக் குடியரசு என்று அது முதல் அழைக்கப்பட்டது. ரோம் அதன் தலைநகர் மாக, மற்ற எல்லா நகரங்களைவிட முக்கியமான நகரமாக மட்டுமே விளங்கியது. செனேட், கமீஷியா மன்றம் போன்ற அவைகளைக் கொண்ட தலைநகரம் ரோம் என்பதைத் தவிர அதற்கும் மற்ற நகரங்களுக்குமிடையில் பெரிய வேறுபாடு ஒன்றுமில்லை.

போரின் விளைவுகள்: புதிதாக ஆயிரக் கணக்கானவருக்குக் குடியுரிமை அளித்தது புதிய சிக்கல்கள் தோன்றுவதற்குக் காரணமாயிருந்தது. நடைமுறையில் அவ்வாக்குரிமையைப் பயன்படுத்துவதற்கு இத்தாலியர் ரோம் நகருக்கு ஆண்டு தோறும் செல்லவேண்டும். ஒருசில பெருஞ் செல்வந்தருக்கு மட்டுமே அவ்வாறு சென்று, அரசியல் வாழ்வில் பங்குகொள்ள முடிந்தது. மற்ற அனைவரும் முன்புபோலவே இரண்டாந்தரக் குடிகளாகவே வாழ்ந்து வந்தனர். செல்வம் படைத்த ஈக்வைட்டுகளின் ஆதிக்கமே இச்சலுகைகளின்மூலம் வலுப்பெற்றது. மேலும், புதிய வாக்காளர்களை நான்கு குலங்களாகப் பிரித்து, இத்தாலியரின் வாக்குகளின் மதிப்பு மிகவும் குறைத்து மதிப்பிடப்பட்டது. விடுதலை செய்யப்பட்ட அடிமைகளுக்கும் அடுத்த நிலையிலுள்ள வாக்காளர்களாய் அவர்கள் கருதப் பெற்றனர். இந்நிலையில் எப்பொழுதும்போல் ரோம் நகரில் வாழ்ந்த வாக்காளர்களே அரசியலில் பெரும் பங்குபெற்று வந்தனர். மேலும், இத்தாலியிலும் பல பகுதிகள் வாக்குரிமை பெருமலேயே இருந்தன. உதாரணமாக, போநதிக்கும் ஆல்ப்ஸ் மலைகட்கும் இடைப்பட்ட டிரான்ஸ்பாடேன் காலில் (Transpadane Gaul) வசித்த மக்களுக்கு லத்தீனிய உரிமைகள் மட்டுமே அளிக்கப்பட்டன. கிளர்ச்சிகளில் பங்குகொள்ளாத சிசிலிக்கு எவ்வித சலுகைகளும் அளிக்கப்படவில்லை. நேப்

பிள்ஸ் போன்ற பல கிரேக்க நகரங்கள் ரோம் அரசின் பகுதியாக ஆவதற்குப் பதில், தனித்து நிற்கவே விரும்பின. இவ்வாறு பல சிக்கல்கள் தொடர்ந்து இருந்து வந்தன.

ரோமிலும் இத்தாலியிலும் இந்த உள்நாட்டுப் போர்களின் விளைவாகப் பெருஞ்சேதம் ஏற்பட்டது. ஏராளமான சொத்துக்கள் அழிக்கப்பட்டன. கருவூலம் காலியாயிற்று. நாணயம் மதிப்பிழந்தது. அதே சமயத்தில் ஆசியாவும் மித்ரடேட்டஸும் போர் திட்டங்களில் ஈடுபட்டதால், அப் பகுதியிலிருந்து ரோமுக்கு வந்த வருவாயும் வரண்டு போயிற்று. நிதி நெருக்கடி மிகவும் தீவிர மடைந்துவிட்ட இந்நிலையில் கி.மு. 89-ல் பிரேடராக இருந்த செம்ரோனியஸ் அசெல்லியோ (Sempronius Asellio) என்பவர் புரட்சிகரமான முயற்சி ஒன்றை மேற்கொண்டார். கடன்களின் மீதான வட்டியைக் குறைப்பதற்கும் நீக்குவதற்கும் வழிசெய்யும் சட்டம் ஒன்று வெகுநாட்களாகவே ரோமில் இருந்து வந்தது. விலைவாசி உயர்ந்து, மக்கள் அவதியுறுவதைக் கண்ட அசெல்லியோ அச்சட்டத்தை இப்பொழுது புதுப்பித்து, அமுலாக்க முயன்றார். ஆனால், வெகுண்ட செல்வந்தர்கள் எல்லோரது முன்னிலையிலும் அவரைக் கொலை செய்தனர். கொலையாளிகளைத் தண்டிப்பதற்கு அரசாங்கம் ஒரு முயற்சியையும் மேற்கொள்ளவில்லை. பெரிய நெருக்கடி நேரத்திலும் கூட செல்வந்தர்கள் சிறிதும் விட்டுக்கொடுக்க இணங்கவில்லை.

போர்களின் பொழுது மூன்று இலட்சத்துக்கும் அதிகமான பேர் இறந்துவிட்டனர். பெரிய படைகளைத் திரட்டுவதற்கென அடிமைகளையும் கூடத் தன் இராணுவத்தில் ரோம் சேர்த்துக் கொள்ள வேண்டியிருந்தது. படைகளில் கட்டுப்பாடும் திறமையும் கெட்டன.

சல்லாவின் எழுச்சி : சமுதாயப் போரின்போது பல வெற்றிகளைப் பெற்று, பிரபுக்களால் பெரிதும் கொண்டாடப் பட்டார் லூசியஸ் கொனீயஸ் சல்லா (Lucius Cornelius Sulla). இவர் பிரபுக்குடும்பத்தைச் சேர்ந்தவர். எனவே, பிரபுக்களின் ஆதிக்கத்தைக்காக்கமுன் வந்தார். ஜூகூர்த்தாவின்வீழ்ச்சிக்குக் காரணமாயிருந்தவரும் அவரே என்பதை முன்பே பார்த்தோம். பின்னர் அவர், கி.மு. 92-ல் ஆசியா மைனரில் பல வெற்றிகளை ஈட்டினர். (இதைப்பற்றி அடுத்த அத்தியாயத்தில் படிக்கப் போகிறோம். சமுதாயப் போர்களின்போது இத்தாலியர்களைப்

பலவிடங்களில் வென்று, செனேட்டர்களின் கையாளாகச் செயல்படுவதற்கென்று வந்து சேர்ந்தார் சல்லா. கி.மு. 88 ஆம் ஆண்டுக்கான கான்சலாக அவர் தேர்ந்தெடுக்கப் பட்டார்.

அதே ஆண்டில் சுல்பிசியஸ் ரூபஸ் (Sulpicius Rufus) என்பவரை டிரிபியூனாகத் தேர்ந்தெடுத்தது பொது மக்கள் கட்சி. அவர் இளைஞர்; நல்ல பேச்சாற்றல் மிக்கவர்; ட்ரூசஸின் நண்பர்! எனவே, பிரபுக்களின் பிற்போக்கு நடவடிக்கைகளை முறியடிப்பதற்கு என்று அவர் தேர்ந்தெடுக்கப்பட்டார்.

இச்சமயத்தில், யாரிடம் படைத்தலைமையை ஒப்புவித்து ஆசியாவுக்கு அனுப்புவது என்ற பிரச்சனை எழுந்தது. மித்ர டேட்டஸுடன் பூசல்கள் முளைத்த உடனேயே ஆசியாவை ஒரு "கான்சலுக்குரிய மாநிலம்" (Consular province) என்று அறிவித்து, கான்சல் ஒருவருக்குப் படைத் தலைமையளித்து அங்கு அனுப்ப வேண்டும் என்று செனேட் கூறியது. தனது ஆளான சல்லாவை அங்கு அனுப்ப வேண்டுமென்பதுதான் அதன்உள்நோக்கம்.

உடனே, இதை எதிர்த்தது மக்கள் கட்சி. ஆசிய மைனரை வென்றபின், நிலங்கள் விநியோகம் செய்யப்படும்பொழுது பிரபுகளுக்கே அனைத்தையும் சல்லா அளிப்பார் என்பது அத்தகைய எதிர்ப்புக்கு ஒரு காரணம். ஆனால், தன் கட்சியில் நல்ல படைத்தளபதிகள் இல்லாததால் மேரியஸை அனுப்ப வேண்டுமென்றது அது.

தனது குறிக்கோளை எய்துவதற்கென்று மக்களின் ஆதரவைப் பெறும் நோக்கத்துடன் பல திட்டங்களை மேற்கொண்டது மக்கள் கட்சி. கமீஷியாவில் (Comitia) இத்தாலியர்களின் வாக்குகளைத் தன் கட்சிக்கு ஆதரவாகப் பெறுவதற்காக அவர்களுக்குச் சில சலுகைகளை அளித்தார் சுல்பிசியஸ். இத்தாலிய வாக்காளர்களை நான்கு குலங்களாகத் தனியாகப் பிரித்து வைத்திருந்ததை மாற்றி, 35 குலங்களுக்கிடையில் அவர்களைப் பங்கிட்டது அவரது ஒருசட்டம். இதற்குப் பதிலடி கொடுக்கும் வகையில், கமீஷியாவைக் கூட்டவேண்டிய நாள் வந்த பொழுது, பொது விடுமுறையாக அதை அறிவித்து, எச்செயலும் நடைபெற முடியாமல் செய்து விட்டனர் கான்சல்கள்.

உடனே, சுல்பியஸ் தனது ஆட்களைத் திரட்டிச்சென்று, கான்சல்களை ரோமைவிட்டு விரட்டினர். சல்லாவின் மரு

மகனும், கான்சல் ஒருவரின் மகனுமான பாம்பேயஸ் என்பவர் கைகலப்பில் கொல்லப்பட்டார். சல்லா மேரியஸின் வீட்டுக்குச் சென்று அடைக்கலம் புகுந்து, தான் பிறப்பித்திருந்த 'விடு முறை ஆணையை' ரத்து செய்து, தன் உயிரைக் காப்பாற்றிக் கொண்டார்.

உடனே கமீஷியா சபை கூட்டப்பட்டது. சுல்பியஸும் மேரியஸும் சேர்ந்து பல சட்டங்களை இயற்றினர். இதற் கிடையில் உயிர்தப்பிய சல்லா, கம்பேனியாவில் நோலா (Nola) நகரை முற்றுகை யிட்டுக்கொண் டிருந்த தன்படை யுடன் ஆசியாவுக்குச் சென்று, அதன் நிலங்களையும் செல்வங் களையும் பெறலாம் என்று கனவுகண்டு கொண்டிருந்த அவர்களைச் சுல்பிசியஸும் மேரியஸும் ஏமாற்றத் திட்டமிட்டுக் கொண்டிருப்பதாகக் கூறினர். கொதித்தெழுந்த அவர்களைத் திரட்டிக் கொண்டு ரோம் நகரை நோக்கி விரைந்தார்,

சல்லாவின் படையைத் தம்வசம் எடுத்துக்கொள்வதற் கென்று, ரோமிலிருந்து அனுப்பப்பட்ட இராணுவ டிரிபியூன் களையும் பிடித்துக் கல்லெறிந்து கொன்றனர் படை வீரர்கள். இதற்கிடையில் தன் மகனை இழந்த மற்றக் கான்சலும் தன் படையோடு வடக்கிலிருந்து வந்து சல்லாவுடன் சேர்ந்து கொண்டார்.

ரோம் கைப்பற்றப்படுகிறது : ரோம் நகருக்குள் யாரும் படையுடன் நுழையக் கூடாது என்று ரோமுலஸ் காலம் முதல் ஒருதடை இருந்து வந்தது. ஆனால், அதையெல்லாம் பொருட் படுத்தாமல் ரோமுக்குள் நுழையத் திட்டமிட்டார் சல்லா. அவ்வாறு அவர் வருவதைத் தடை செய்து பிரேட்டர்களும் ஆணை பிறப்பித்தனர். ஆனால், சல்லாவின் படைகள் நகருக்குள் நுழைந்தன. அங்கு நடந்த தெருச்சண்டைகளில் அவரது படைகள் மக்களின் எதிர்ப்பை எல்லாம் முறியடித்துப் பிரபுக்களின் ஆதிக்கத்தை மீண்டும் நிறுவின. மேரியஸ் அவரது மகன், சுல்பிசியஸ் ஆகியோரும் மக்கள் கட்சியின் தலைவர்களான பத்து பேரும் சமூக விரோதிகள் என்று அறிவிக் கப்பட்டு வேட்டை யடிக்கப்பட்டனர், மேரியஸும் அவர்தம் மகனும் பல ஆபத்துக்களையும் கடந்து ஆப்பிரிக்காவுக்குத் தப்பி ஓடினர். சுல்பியஸும் வேறு பலரும் கொல்லப்பட்டனர்.

சுல்பியஸின் சட்டங்களை ரத்துசெய்யும்படி செஞ்சூரிய மன்றத்துக்கு ஆணையிட்டார் சல்லா. அது தயங்கியபொழுது. படைவீரர்களை அனுப்பி அதனை அச்சுறுத்தினர். சுல்பியஸின்

சட்டங்கள் ரத்து செய்யப்பட்ட பின்னர், சல்லா சில சட்டங்களை வகுத்தார். அவற்றின்படி இத்தாலிய வாக்காளர்மீது ஏற்கெனவே இருந்து வந்த கட்டுப்பாடுகள் மீண்டும் இப்பொழுது புகுத்தப்பட்டன. மன்னர் செர்வியஸின் காலத்தில் பிறப்பிக்கப்பட்டுப் பின்னர், வழக்கொழிந்துபோன ஆணை ஒன்று இப்பொழுது மறுபடியும் புதுப்பிக்கப்பட்டு, கமீஷியாவில் வாக்காளர்களின் எண்ணிக்கையைவிட, அவர்களின் செல்வத்துக்கே முதலிடம் தரப்பட வேண்டும் என்ற விதி புகுத்தப்பட்டது. கமீஷியாவின் எல்லா முடிவுகளுக்கும் செனேட்டின் ஒப்புதல் அவசியம் என்றும் விதிக்கப்பட்டது. டிரிபியூன்களின் அதிகாரங்கள் குறைக்கப்பட்டன. செனேட்டில் 300 புதிய உறுப்பினர்கள் சேர்த்துக் கொள்ளப்பட்டனர். இறுதியில் ஏழைகளை ஏமாற்றுவதற்கென, அவர்களுக்குக் குடியமர்த்துவதற்காகச் சில குடியேற்றங்கள் அமைக்கப்படும் என்றும் சல்லா அறிவித்தார். இவ்வாறு பிரபுக்களின் ஆதிக்கம் மீண்டும் வாள் முனையில் நிறுவப்பட்டது. பிரபுக்களின் அரசியல் நெறிகள் எந்த அளவுக்குச் சீர் கெட்டுவிட்டன என்பதை இது காட்டுகிறது. படையின் ஆதரவைப் பெற்றவர்கள் மட்டுமே ரோமை ஆள முடியும் என்றநிலை ஏற்பட்டது. ரோமானிய அரசியலில் வாளின் மதிப்பு உயர்ந்துவிட்டது!

தமது வகுப்பினரான, தம்மை ஆதரித்த பிரபுக்களின் கையையே மேலும் பலப்படுத்தி, பொதுமக்களின் கட்சியை அறவே அழிக்க விரும்பினர் சல்லா. ஆனால், கொள்ளையடிப்பதற்காக ஆசியாவுக்குச் செல்ல வேண்டுமென்று அவசரப்பட்டனர் அவரது போர் வீரர்கள். எனவே, ஆசியாவிலிருந்து திரும்பிவந்தபின், மற்றவற்றைச் செய்து கொள்ளலாம் என்று அவர் முடிவு செய்தார்.

சல்லா ஆசியாவுக்குச் செல்லுதல்: முதலில் சல்லா தமது படையின் பெரும் பகுதியைக் கேப்புவா நகருக்கு (Capua) அனுப்பிவைத்துவிட்டு, தாம் மட்டும் ரோமிலேயே இருந்தார். அடுத்த ஆண்டுக்கான (கி.மு. 87) கான்சல் தேர்தலில் தன்னுட்கள் மட்டுமே வெற்றி பெறுமாறு செய்வதற்காக ரோமில் தங்கினர். ஆனால், இதில்அவருக்கு வெற்றிகிட்டவில்லை. ஆக்டேவியஸ், கொர்னீலியஸ் சின்னா (Cinna) ஆகிய இருவர் கான்சலாகத் தேர்ந்தெடுக்கப்பட்டனர். ஆக்டேவியஸ் பிரபுக்களின் ஆள். ஆனால், சின்னா எதிர்க்கட்சியின் ஆள். ஆயினும், 'மாற்றுவதில்லை' என்ற உறுதிமொழியை இருகான்சல்களிடமிருந்தும் பெற்றுக்கொண்டு, கேப்புவாவுக்குப் புறப்பட்டார் சல்லா.

சின்னவும் மேரியஸும் ஆட்சியைக் கைப்பற்றுதல் : சல்லா இத்தாலியை விட்டகன்றதுமே நிலைமை மாறியது. பொதுமக்களின் ஆதரவாலேயே கான்சலாகத் தேர்ந்தெடுக்கப்பட்ட சின்னவு, சல்லாவின் செல்லாத சட்டங்களை அகற்றினர், (ஏனெனில், எந்த மன்றத்தாலும் குறிப்பாகக் கபீஷியாவால் அவை இயற்றப்படவில்லை. சல்லாவே, தன் ஆணைகள் மூலமாக, இயற்றியவை அவை.) சுல்பிசியஸின் புரட்சிகரமான திட்டங்களை மீண்டும் சட்டமாக்குவதற்குத் தீர்மானித்து, அவற்றை அங்கீகரிப்பதற்கென இத்தாலிய வாக்காளரை ரோமுக்கு வருமாறு அழைத்தார் சின்னவு. அவர்கள்மீது சல்லா விதித்திருந்த கட்டுப்பாடுகள் அகற்றப்பட்டன.

உடனே, செனேட்டிலிருந்த பிரபுக்களும், அவர்களது ஆளான அக்டேவியஸும் (மற்றொரு கான்சல்) ஆயுதமேந்தி, சின்னவைக் கான்சல் பதவியிலிருந்து விலக்கிவிட்டதாக அறிவித்து, அவரையும் அவரை ஆதரித்த பலரையும் ரோமைவிட்டு விரட்டினர். 'சமூக விரோதி' என்று கூறிச் சின்னவைக் கொல்லவும் ஆணையிட்டனர். உடனே,ரோம் நகரின் மன்றில்(Porum) பொது மக்கள் ஆர்ப்பாட்டம் செய்தனர். கைக்கலப்புகள் நேர்ந்தன. பிரபுக்களும் அக்டேவியஸும் சேர்ந்துகொண்டு இத்தாலிய வாக்காளர்களையும் பொதுமக்கள் கட்சியை ஆதரித்தவர்களையும் கொன்று குவிப்பதென்று முடிவுசெய்து, ஈவு இரக்கமற்ற கொலைகளில் ஈடுபட்டனர். ஆக்டேவியஸின் போர் (Bellum Octavianum) என்று இது அழைக்கப்படுகிறது. ரோமில் மட்டும் 10,000 குடிமக்களைக் கொன்று குவித்தனர் பிரபுக்கள்.

சின்ன கேப்புவா நகருக்கு ஓடிச்சென்று, பொதுமக்களுக்கும் இத்தாலியர்களுக்கும் எதிரான பிரபுக்களின் கொள்கையை அங்கு எடுத்துக்கூறி, பெரும் படை ஒன்றைத் திரட்டினர். மேரியஸும் அவரது பிள்ளையும்கூட ஆப்பிரிக்காவிலிருந்து இத்தாலி திரும்பினர். மேரியஸ் ஒரு கப்பற்படையைத் திரட்டி, டைபர்நதி வழியாக ரோமுக்குத் தானியம் செல்வதைத் தடைசெய்தார். ஆஸ்டியாவும் ஜெனிகுலமும் அவரால் பிடிக்கப்பட்டன. இதற்கிடையில் சின்ன சாம்னேட்டுகளோடு உடன்படிக்கைகள் செய்துகொண்டு, தெற்கிலிருந்து ரோமை நோக்கி வேறு படையோடு முன்னேறினர். அவர்களின் முற்றுகைக்குட்பட்ட ரோமில் பஞ்சமும் கொள்ளைநோயும் பரவின.

இந்நிலையில் பிரபுக்களின் கட்சி பணிவதைத் தவிர வேறு வழியில்லை. எனவே, சமாதானம் செய்துகொள்ள முன்வந்த

செனேட், சின்னுவுடன் பேச்சு வார்த்தைகள் துவக்கப்பட்டன. சல்லாவின் சட்டங்கள் அனைத்தும் அகற்றப்படவேண்டும் என்ற சின்னுவின் கோரிக்கைக்குச் செனேட் இணங்கியது. பழிக்குப்பழி வாங்க வேண்டுமென்று துடித்துக்கொண்டிருந்த மேரியஸ் பேச்சு வார்த்தைகள் முடிந்ததும், பிரபுக்களின் கட்சியைச் சேர்ந்த பலரைக்கொன்று தன் ஆத்திரத்தைத் தீர்த்துக் கொண்டார். மற்றக் கான்சலான ஆக்டேவியஸ் பிரபுக்கள் கட்சியின் தலைவர்களான அன்ட்டோனியஸ் (Antoniue) கிராசஸ் (Crassus), சீசர் போன்ற பலர் கொல்லப்பட்டனர். சல்லாவின் சொத்துக்கள் பறிமுதல் செய்யப்பட்டன ; அவரது வீடு இடித்துத் தரைமட்டமாக்கப்பட்டது ; அவரது மனைவியும் பிள்ளைகளும் உயிர் தப்பிக்க ஓடவேண்டியதாயிற்று. இத்தகைய கொலைகள் சின்னுவுக்குச் சம்மதமில்லை. எனவே, அவர் அத்தகைய தீச்செயல்களில் ஈடுபட்ட பலரைப் பிடித்துக் கொன்று, ரோமில் அமைதியை ஏற்படுத்தினர்.

மேரியஸின் மரணம் : கி.மு. 86-ஆம் ஆண்டுக்கான கான்சல் தேர்தல்கள் அடுத்தபடியாக நடைபெற்றன. சின்னுவும் மேரியஸும் [1] தேர்ந்தெடுக்கப்பட்டனர். ஆனால், வயது முதிர்ந்த மேரியஸ், தனது தள்ளாமையிலும் போர்களில் ஈடுபட்டு உடலை வருத்திக்கொண்டதால், நோய்வாய்ப்பட்டு காய்ச்சல் கண்டு விரைவிலேயே இறந்துபோனர். (ஜனவரி 13). அவருக்குப் பதில் வெலேரியஸ் பிளாச்சஸ் (Valerius Blaccus) என்பவர் கான்சலாகத் தேர்ந்தெடுக்கப்பட்டார். சல்லாவிடமிருந்துபடைத் தலைமையை மேற்கொள்வதற்கென்று அவர் ஆசியாவுக்கு அனுப்பிவைக்கப்பட்டார். சின்னுவின் ஆதிக்கம் ரோமில் ஓங்கி நின்றது. அவரும் கார்போவும் (Carbo) கி.மு. 85, 84 ஆகிய இரு ஆண்டுகளிலும் கான்சல்களாக இருந்தனர். இவ்விருவரும் பல சீர்திருத்தங்களையும் புகுத்தினர் ; முப்பத்தைந்து குலங்களிலும் இத்தாலிய வாக்காளர்கள் சேர்த்துக் கொள்ளப்பட்டனர் ; ஏழைகளுக்கு இனமாகத் தானியங்கள் விநியோகம் செய்யப்பட்டன ; கேப்புவா நகருக்கு அண்மையில் ஓரளவு நிலமும் அவர்களுக்கிடையில் பகிர்ந்தளிக்கப்பட்டது ; தனியார் கடன்களில் முக்கால் பகுதி ரத்துசெய்யப்பட்டது. ஆனால், பிரபுக்களும் சல்லாவும் சேர்ந்து மீண்டும் முயற்சிகளில் ஈடுபட்டனர். எனவே, சல்லாவை 'சமூக விரோதி' என்று கூறும் ஆணை ஒன்றும் ரோமிலிருந்து வெளியாயிற்று.

---

1. மேரியஸ் ஏழுமுறை கான்சலாக இருப்பார் என்று யாரோ ஒரு ஜோசியர் கூறியதாகவும், அதனால்தான் ஆறுமுறை கான்சலாக இருந்த மேரியஸ் ஏழாவது முறையும் கான்சலாகப் பெருமுயற்சி செய்தாரென்றும் கதைகள் கூறுகின்றன.

சல்லா படையெடுத்து வந்து, ஆட்சியைக் கைப்பற்றுதல்: மக்கள் கட்சியின் ஆட்சியையும், சின்னவின் சீர்திருத்தங்களையும் வெறுத்த பல பிரபுக்களும் செனேட்டர்களும் (Optimates) சல்லாவின் படைமுகாமுக்குச் சென்று, மாசிடோனியாவிலும் கிரீஸிலும் அடைக்கலம் புகுந்தனர். மீண்டும் ரோமில் தமது ஆதிக்கத்தை நிறுவுவதற்காகச் சதிகள் செய்தனர். போர்கள் முடிவுற்றதும் ரோமுக்கு வந்து, பிரபுக்களின் ஆதிக்கத்தை நிறுவவும், சின்னவின் சட்டங்களை ரத்து செய்யவும் தான் முடிவுசெய்திருப்பதாகச் சல்லா அறிவித்தார். எனவே, அவர் அவ்வாறு திரும்பி வரும்போது எதிர்ப்பதற்கெனச் சின்னவும் கார்போவும் படைகளைத் திரட்ட ஆரம்பித்தனர்.

ஆனால், ஏழைகளுக்கும் இத்தாலியர்களுக்கும் இவர்கள் அளித்த சலுகைகளை விரும்பாத சில ஈக்வைட்டுகளும், வேறு பல செல்வந்தர்களும் இரகசியமாகப் பிரபுக்களையும் சல்லாவையும் ஆதரிக்கத் துவங்கினர். இந்நிலையில் ஆசியாவில் தமது போர்களை முடித்துக்கொண்டு இத்தாலியை நோக்கித் திரும்பிக்கொண்டிருந்த சல்லாவை எதிர்ப்பதற்கென ஒருபடையோடு எப்பைரஸ் சென்றார் கார்போ (கி.மு. 84). சின்னவும் அவ்வாறு புறப்பட ஆயத்தம் செய்துகொண்டிருந்தபோது, செல்வந்தரின் தூண்டுதல் காரணமாக அவரது படையில் கிளர்ச்சி ஒன்று துவங்கியது. அதில் சின்னு கொல்லப்பட்டார். உடனே, கார்போ திரும்பிவர வேண்டியதாயிற்று. இத்தாலியில் அரீமினத்தில் (Ariminum) தனது படையோடு சல்லாவை எதிர் நோக்கிக் காத்திருந்தார் அவர். அடுத்த ஆண்டில் 40,000 போர் வீரர்களோடும், 1200 கப்பல்களோடும் இத்தாலிக்குத் திரும்பினர் சல்லா. நிலைமையை நன்கு புரிந்துகொள்வதற்கு, அவர் இதுவரை மித்ரடேட்டஸுக்கு எதிராக நடத்திய போரைப்பற்றிச் சிறிது கவனிப்போம்.

15. சல்லாவின் போரும் ஆதிக்கமும்

மித்ரடேட்டஸ் : கி.மு. 133-ல் ஆசியாமைனரில் பெர்கமத்தின் மன்னர் இறந்தபின், அந்த அரசை ரோம் பெற்று, அதற்கு 'ஆசியா' என்று பெயரிட்டு, அதைத் தன் மாநிலமாக மாற்றி, தனது ஆதிக்கத்தை அப்பகுதியிலும் நிறுவியது என்பதை முன்பே பார்த்தோம். அப்பொழுது வடக்குக் கப்படோஷியா (Cappaducia), தெற்குக் கப்படோஷியா பித்தினியா (Bithynia), பாப்ல கோனியா (Paphlagonia), கலேஷியா (Galatia) ஆகிய அரசுகளும் ஆசியா மைனரில் சுதந்திரமாக இருந்துவந்தன. அவற்றேடு எல்லாம் ரோம் நட்பு உடன்படிக்கைகளைச் செய்திருந்தது. அந்த அரசுகள் எல்லாம் தமக்கிடையில் சதா பூசல்களிலும் போர்களிலும் ஈடுபட்டுக் கொண்டிருந்தன.

வடக்கு கப்படோஷியாவானது பாண்ட்டஸ் யூக்சின் (Pontus Euxine) என்று அப்பொழுது அழைக்கப்பட்ட கருங் கடலின் தென்கரை ஓரமாக நீண்டு கிடந்தது. எனவே, பாண்ட்டஸ் பாரசீகப் பேரரசுக்குப் பெயர் ஏற்பட்டது. பண்டைப் பாரசீகப் பேரரசின் ஒரு பகுதியாக இருந்துவந்த அது, அலெக்சாந்தரின் படையெடுப்புக்குப் பிறகு சுதந்திர மடைந்தது. அதை ஆண்ட வம்சம் பாரசீக அக்கேமீனிய (Achaemenia) வம்சத்தின் கிளைகளில் ஒன்றுகவே கருதப்பட்டது. ஆயினும் கிரேக்கக் கலாச்சாரத்தின் செல்வாக்கே அவ்வரசில் ஓங்கி காணப்பட்டது.

ஆரம்பத்தில் மிகவும் எளிய அரசாக இருந்து வந்த பாண்ட்டஸ் சிறுகச் சிறுகப் பல்வேறு இடங்களை ஆக்கிரமித்து வலிமை மிக்க அரசாக மாறிற்று. சிரியாவோடு ரோமாபுரி போர்களில் ஈடுபட்டுவந்த சமயத்தில், பாண்ட்டஸின் அரசரான பர்னுசெஸ் (Pharnaces) என்பவர் மேற்கில் ஹேலிஸ் (Halys) நதியைக் கடந்து பண்டைக் கிரேக்கத் துறைமுகமாகச் சினேப் (Sinope) நகரைப் பெர்கமத்திடமிருந்து கைப்பற்றினர். அவ

ருக்குப்பின், கி.மு. 156-ல் அரியணையேறிய 5 ஆம் மித்ர டேட்டஸ் என்பவர் பாண்ட்டஸின் (கருங்கடலின்) தென்கரை முழுவதையும் கைப்பற்றினர். மூன்றுவது பியூனிக் போர், அரிஸ்டோனிக்கஸுடனான போர் ஆகியவற்றில் ரோமுக்கு உதவிபுரிந்து பட்டங்களையும் பாராட்டுகளையும் பெற்றார் அவர்.

கி.மு. 122-ல் 5ஆம் மித்ரடேட்டஸ் இறந்தார். அவரது இருபிள்ளைகளும் அப்பொழுது சிறுவர்களாக இருந்த காரணத்தால் அவரது மனைவியாரே சிறிது காலம் நாட்டை ஆண்டு வந்தார். பின்னர் அப்பிள்ளைகளில் ஒருவர் கி.மு. 114-ல் 6 ஆம் மித்ரடேட்டஸ் (Mitaradates-VI) என்ற பட்டப் பெயரோடு அரியணை ஏறினர்.

அவர்கம்பீரமும் கவர்ச்சியும் மிகுந்த மன்னர். அவரது அருமையான குணநலன்களையும் வீரச் செயல்களையும் அறிவுக் கூர்மையையும் பற்றி ஏராளமான கதைகள் வழங்குகின்றன. அவாது பகைவரான ரோமானியருங்கூட அவரைப்பல விதங்களிலும் பாராட்டிக் கூறியுள்ளனர். தன் நாட்டில் பேசப்பட்ட இருபத்தைந்து மொழிகளையும் நன்கு பேசக்கூடிய ஆற்றலை அவர் பெற்றிருந்தார். ரோமின் ஆதிக்கத்தை வெறுத்த ஆசிய மக்கள் குறிப்பாக அப்பகுதியில் வாழ்ந்த கிரேக்கர்கள் தமக்குத் தலைமை தாங்கி, விடுதலை பெற்றுத்தரக் கூடிய மன்னராக 6ஆம் மித்ரடேட்டஸைக் கருதினர். எனவே, கிரேக்கர்களது முழு ஆதரவும் அவருக்கு இருந்து வந்தது.

இவர் அரியணை ஏறியது முதல் சுமார் இருபது ஆண்டுகள் வரை ஐந்துகூர்த்தாவுடனான போர்களிலும், வேறு சில உள் நாட்டு, வெளிநாட்டுப் பிரச்சனைகளிலும் ஆழ்ந்து ஈடுபட்டிருந்தனர் ரோமானியர். அப்பொழுது கருங்கடலின் கரையோரங்களில் இருந்துவந்த கிரேக்க நகரங்கள் அனைத்தும் 6 ஆம் மித்ரடேட்டஸின் தலைமையின்கீழ் ஒருபெரிய அரசாக அமைந்தன. அக்கடலின் வடகரையிலும் சிம்மேரியாவிலும் (Cimmeria-இன்றைய கிரிமியா) கூட அவரது ஆதிக்கம் பரவியது. பாண்ட்டிகேப்பேயம் (Panti Capaeum) என்பது இவரது தலைநகராயிற்று. சித்தியர்களின் (Scythiars) தாக்குதல்களிலிருந்து கிரேக்க நகரங்களைக் காப்பதற்காகவும் அவர் போரிட்டார். இதன் விளைவாகப் பாஸ்பரஸ் அரசும் (Bcsporus) சித்தியக் கடற்கரையும், திரேசும் (Thrace) அவர் வசமாயின. டான்யூப் (Danube) நதியின் கழிமுகம் வரையில் அவரது அரசு மேற்கில் விரிவடைந்திருந்த தெற்கிலும் கிழக்கிலும் மேற்கு ஆர்மீனியாவையும் (Armenia) கருங்கடலின் கிழக்குக்

கரையான கோல்சியையும் (Calchis) கூட அவர் கைப்பற்றினர். இவ்வாறு கருங்கடற் பகுதி முழுவதும், ஆசியாமைனரில் ஒரு பெரும் பகுதியும் அவரது ஆட்சிக்கு உட்பட்டிருந்தன. அண்டையிலிருந்த வேறு பல அரசுகளும்கூட, அவரோடு நட்பு உடன்படிக்கைகள் செய்து கொண்டிருந்தன.

தெற்கு கப்படோஷியாவையும் தம்நாட்டோடு இணைத்துக் கொள்ள வேண்டுமென்று அவர் விரும்பினர். எனவே, கி.மு. 112-ல் அவரது ஆளான கார்டியஸ் (Gordius) என்பவர் தெற்கு கப்படோஷிய மன்னரான 6 ஆம் அரியாரத்தீஸ் (Ariarathes VI) என்பவரைக் கொலை செய்தார். அதேபோல் ஒரு சதிமூலமாகவே கலேஷியா அரசின் ஒருபகுதியைத் தம் நாட்டுடன் இணைத்துக் கொண்டார்மித்ரடேட்டஸ். கி.மு.102-ல் பாப்ல கோனியாவை ஆண்டுவந்த மன்னர் இறந்து, அவருடன் அந்த அரச வம்சமே முடிவுக்கு வந்தது. உடனே, அதையும் இணைத்துக் கொள்ள முன்வந்தார் மித்ரடேட்டஸ். அதைத் தான் இணைத்துக் கொள்ள வேண்டும் என்று ஆசைப்பட்ட பித்தினிய மன்னர் 2 ஆம் நிக்கோ மெடிஸுக்கும் (Nicomedes of Bithynia) மித்ரடேட்டஸுக்கும் இதனால் பகை ஏற்பட்டது. இரண்டு ஆண்டுகளுக்குப் பிறகு தெற்கு கப்படோஷியாவின் அடுத்த அரசரான 7 ஆம் அரியாரத்தீஸையும் கார்டியஸ் கொலை செய்தார்.

ஆசியாவில் பாண்ட்டஸ் ஒரு பெரிய அரசாக விரிவடைந்து வருவதைக் கண்டு ஏற்கனவே கவலையுற்று வந்த ரோம், அப் பொழுது தலையிடுவது என்று தீர்மானித்தது. மேலும், ரோமானிய செனேட்டால் விரட்டப்பட்ட மக்கள் கட்சியைச் சேர்ந்தவர்கள் பலர் மித்ரடேட்டஸின் அவையில் அடைக்கலம் புகுந்திருந்தனர். செனேட்டின் கோபத்துக்கு இதுவும் ஒரு முக்கிய காரணம். கொலையில் மித்ரடேட்டஸின் பங்குபற்றி விசாரிப்பதற்காக மேரியஸ் அனுப்பிவைக்கப்பட்டார். தனக்கும் கார்டியஸுக்கும் சம்பந்தமில்லை என்றும். ரோமின் ஆதிக்கத்தைக் குலைக்கும் நோக்கம் தனக்கில்லை என்றும் கூறித் தப்பித்துக் கொண்டார் மித்ரடேட்டஸ்.

ஆனால், மேரியஸ் ஆசியாவை விட்டு அகன்ற உடனேயே 8 ஆம் அரியாரத்தீஸைக் கப்படோஷியாவிலிருந்து விரட்டுவதற்குக் காரணமாயிருந்தார் மித்ரடேட்டஸ். அவரோடு அந்த அரச வம்சமே முடிவுக்கு வந்தது. எனவே, அவ்வரசு பாண்ட்டஸோடு இணையாமல் தடுப்பதற்காக அரியோபார்சேனிஸ் (Ariobarzanes) என்பவரை அதன் மன்னனுக்கியது.

ரோமானிய செனேட். அடுத்த ஆண்டிலோ, அதற்கடுத்த ஆண்டிலோ கிழக்கு ஆர்மீனிய மன்னனும் மித்ரடேட்டஸின் மருமகனுமான டைகிரேனிஸ் (Tigranes) என்பவர் ஒரு பெரும் படையோடு கப்படோஷியாமீது படையெடுத்து அரியோபார்சேனிஸை விரட்டிவிட்டு, மித்ரடேட்டஸின் உறவினரான ஒருவரை அவருக்குப்பதில் அரசனாக்கினர்.

சல்லாவின் தலையீடு : அப்பொழுது (கி.மு. 92) ஆசியா மைனரில் உள்ள சிலீஷியாவில் (Cilicia) புரோ-பிரேட்டராக (Pro-Praetor) இருந்தார் சல்லா. ரோமிலிருந்து ஆணை எதையும் எதிர் நோக்காமல், உடனே ஒரு படையை எடுத்துக் கொண்டு கப்படோஷியாவுக்குள் நுழைந்து ஆர்மீனியர்களையும் கார்டியஸையும் விரட்டியபின் மீண்டும் அரியோ-பார்சேனியையே அரசராக்கினர். மித்ரடேட்டஸிடம் ஒரு லட்சம் பேர் களைக் கொண்ட பெரும்படை ஒன்று அப்பொழுது இருந்தது. எனினும், முன்புபோலவே, தனக்கும் கப்படோஷியா நிகழ்ச்சிகளுக்கும் எவ்விதத் தொடர்புமில்லை என்று கூறி விட்டார் அவர்.

பித்தினியப் பிரச்சனை : ஆனால், உடனேயே சல்லா இத்தாலிக்குத் திரும்ப வேண்டியதாயிற்று. கி.மு. 91-ல் அங்கு நடந்த உள்நாட்டுப் போர்களில்ரோம் தனது முழுக்கவனத்தையும் செலுத்தியது. அச்சமயத்தில், ரோமின் நண்பனும் மித்ரடேட்டஸின் பகைவனுமான 2 ஆம் நிக்கோ மெடிஸ் காலமானார். உடனே பித்தினியாமீது படையெடுத்தார் மித்ரடேட்டஸ். அங்கு அரசராக இருந்த 3 ஆம் நிக்கோமெடிஸை அகற்றிவிட்டு, தனது ஆள் ஒருவரை அரசராக்கினர். அதே வேளையில் டைகிரேனிஸும் கப்படோஷியாவைத் தாக்கி அரியோபார்சேனிஸை மறுபடியும் விரட்டியடித்தார்.

இந்நிலையில் அக்வீலியஸ் (Aquillius) என்பாரது தலைமையில் ரோம் ஒரு படையை அனுப்பியது. பித்தினியாவில் மீண்டும் 3-ஆம் நிக்கோமெடிஸை அரசராக்க வேண்டும் என்பது அவருக்கு இடப்பட்ட ஆணை. அதே சமயத்தில் அரியோபார்சேனிஸை மீண்டும் அரியணை யேற்றுவதற்கென ஆசியாவில் புரோ கான்சலாக அப்பொழுது பணியாற்றிய கேசியஸ் (Cassius) என்பாருக்கு மற்றொரு ஆணையை அனுப்பியது ரோம். முன்போலவே, இப்பொழுதும் தனக்கு ஒன்றும் தெரியாது என்று கூறிவிட்டார் மித்ரடேட்டஸ். நிக்கோமெடிஸும் அரியோபார்சேனிஸும் ரோமானியர் உதவியுடன் அரசர்க ளாயினர்.

முதல் மித்ரடேட்டஸ் போர்: (First Mithradetic War, கி.மு. 88–84) : அக்வீலியஸ் அத்துடன் நிற்காமல் மித்ரடேட்டஸுடன் சண்டை துவக்கும் விருப்பத்துடன், பாண்ட்டஸ்மீது படையெடுக்கும்படி நிக்கோமெடிஸைத் தூண்டினர். அவரும் அவ்வாறு செய்யவே வெகு நாட்களாகத் திரண்டு கொண்டிருந்த போர் மேகங்கள் அப்பொழுது வெடித்தன. உரிய வேளை வந்து விட்டது என்று உணர்ந்த மித்ரடேட்டஸ் உடனே போருக்கு ஆயத்தமாயினர்.

இரண்டரை லட்சம் காலாட் படையினரையும் நாற்பதாயிரம் குதிரைவீரர்களையும் கொண்ட அவரது பெரும்படை உடனே போரில் இறங்கியது. அவரது நானூறு போர்க் கப்பல்களுங்கூடப் போரில் இறங்கின. அண்டையிலிருந்த பல அரசுகள் மட்டுமன்றி, கிரீஸும் ஏஜியன் கடலிலிருந்த தீவுகள் பலவும் அவரை ஆதரித்தன. நிக்கோமெடிஸ் தோற்கடிக்கப்பட்டு பித்தினியாவை விட்டு பெர்கமத்துக்கு ஓடினர். அங்கிருந்தும் விரட்டப்பட்டு பின்னர் ரோமுக்கு ஓடித் தப்பித்தார். அக்வீலியஸும் தோற்றோடினர். ஆயினும், அவர் சிறைப்பிடிக்கப்பட்டு, மரணதண்டனைக்கு ஆளானர். ஒரு சிறிய படையோடு பிரிஜியாவுக்குள் (Phrygia) நுழைய முயன்ற கேசியஸும் ஓப்பியஸும் (Oppius) அறவே முறியடிக்கப்பட்டனர். கேசியஸ் ரோட்ஸ் தீவுக்குச் (Rhodes) சென்று அடைக்கலம் புகுந்தார். அப்பகுதியிலிருந்த தீவுகளில் ரோட்ஸ்மட்டுமே, ரோமானியர் தனக்குப் புரிந்த அநீதிகளையும் கொடுமைகளையும் மறந்து, ரோமை ஆதரித்து நின்றது. ஓப்பியஸ் சிறைப்பிடிக்கப்பட்டார். அப்பகுதியிலிருந்த சிறிய ரோமானியக் கப்பற்படையையும் மித்ரடேட்டஸின் கப்பல்கள் சிதறடித்தன.

ரோமானிய அதிகாரிகளின் அடக்குமுறைகளையும், கொள்ளையும் ஊழலும் மலிந்த நிர்வாகத்தையும் வெறுத்த ஆசிய அரசுகளும் மக்களும் மித்ரடேட்டஸை இப்பொழுது ஆதரித்தனர். ஆசியாவிலும் கிரீஸிலும் இருந்த கிரேக்க நகரங்களும் அவர் பக்கம் சேர்ந்துகொண்டன. பெர்கமத்தைக் கைப்பற்றி, குளிர்காலம் முழுவதையும் அங்குக் கழித்த மித்ரடேட்டஸ் ரோமானியர் விதித்திருந்த வரிகளையும் திறைகளையும் குறைத்து, பெருந்தன்மையோடு எல்லோரையும் நடத்தி மேலும் அதிகமாக எல்லோரது மதிப்பையும் பெற்றார்.

ஆயினும், கொடுமையான ஆணை ஒன்றையும் அவர் அச்சமயம் பிறப்பித்தார். ரோமானியரையும் இத்தாலியரையும்

கி.பி. முதல் நூற்றாண்டில்
ஆசியா மைனர்
பாண்டஸ் மாகாணம்
பாண்டஸ்
பாப்லகோனியா
கலேஷியா
பிரிஜியா
பிசிடியா
லிசியா
பாம்பிலியா
கப்படோசியா
ஆர்மீனியா மைனர்
மெசப்பொடேமியா
சிரியா
சைப்ரஸ்
ரோட்ஸ்
கிரேக்க
ஏஜியன் கடல்

கொல்லும்படி கூறியது அவ்வாணை. உடனே, கிட்டத்தட்ட ஒரு லட்சம் ரோமானியரும் இத்தாலியரும் பொதுமக்களால் கொல்லப்பட்டனர். எந்த அளவுக்கு மக்களது வெறுப்பை ரோமானிய அதிகாரிகளும் வியாபாரிகளும் சம்பாதித்திருந்தனர் என்பதை இது காட்டுகிறது. ஆர்ச்சிலாஸ் (Archelaus) என்பவரின் தலைமையில் பாண்ட்டஸின் கப்பற்படை ஒன்று டீலாஸ் (Delos) தீவைக் கைப்பற்றி, வெகு நாட்கள்வரை அதை ஆண்டுவந்த ஆதென்ஸிடம் ஒப்புவித்தது. உடனே, ஆதென்ஸ் மித்ரடேட்டஸை ஆதரிக்க முன்வந்தது. அதைப் பின்பற்றிக் கிட்டத்தட்ட கிரீஸ் முழுவதுமே ரோமின் ஆதிக்கத்தை உதறித்தள்ளியது. (பூபோயாத் தீவு மட்டும் இதற்கு விதிவிலக்கு.) மித்ரடேட்டஸின் கப்பற்படைக்கு ஆதென்ஸின் துறைமுகமான பிரேயஸ் (Piraers) ஒரு தளமாயிற்று.

ஆர்ச்சிலாஸின் கடற்படைக்கு உதவியாகப் பாண்ட்டஸிலிருந்து தரைப்படை ஒன்றும் வந்து சேர்ந்தது. மித்ரடேட்டஸின் மகனான அரியாரத்தீஸ் அதன் தலைவராக விளங்கினார். திரேஸியர்களைத் திரட்டி ஒருபெரும்படையை உருவாக்கி, வழியிலிருந்த பல துறைமுகங்களையும் கைப்பற்றி, கிரேஸை நோக்கி வந்தார் அவர். அதேசமயத்தில் மாசிடோனியாவுக்குள்ளும் தெசாலிக்குள்ளும் கால்கள் (Gauls) புகுந்து கொள்ளையிட்டனர்.

சல்லாவின் தலைமையில் ரோமானியரின் எதிர்த்தாக்குதல்: ஆசியாவில் கொள்ளையடிக்கும் ஆசையோடு ரோமில் படைகள் சல்லாவை ஆதரித்தன. உள்நாட்டில் நிகழ்ந்த குழப்பங்களையெல்லாம் அப்படையின்உதவியோடு அடக்கிச் சல்லா ஆசியாவைத் தனது மாநிலமாகப் பெற்று, படையுடன் புறப்பட்டார்.

கி.மு. 87-ல் புருண்டீசியத்தில் (Brundisium) இருந்து புறப்பட்டுக் கடலைக் கடந்து எப்பைரஸில் வந்திறங்கியது அவரது படை. அவரிடம் அப்பொழுது ஐந்து லீஜின்கள் மட்டுமே இருந்தன. அன்றிருந்த நிலையில் ரோமிலிருந்து வேறு புதிய படை ஒன்றும் தமக்கு உதவியாக வராது என்பது அவருக்குத் தெரியாது. மேலும், பெயருக்குக்கூடக் கடற்படை எதுவும் அவரிடம் இல்லை. ஆயினும், தனது சக்திக்கு மேற்பட்டு கிரீஸ் வரையிலும் தனது படைகளை அனுப்பிவிட்ட மித்ரடேட்டஸையும், ஒற்றுமை ஏதுமில்லாமல் பல்வேறு மக்களையும் கொண்ட அவரது படைகளையும், ரோமானியப் படையின் சிறந்த போர்

முறைகளைக் கொண்டு தோற்கடித்து விடமுடியும் என்பதை சல்லா உணர்ந்தார். அச்சமயத்தில் கிரீஸிலும் நிலைமை அவருக்கு ஓரளவு சாதகமாக இருந்தது. அங்கு ஏற்கெனவே பல்வேறு பகுதிகளுக்கிடையிலும் இருந்துவந்த பூசல்கள் தலை தூக்கி, ரோமை ஒருகட்சி ஆதரிக்கத் துவங்கியிருந்தது. ரோமின் ஆதிக்கத்துக்குப் பதில் பாண்ட்டஸின் ஆதிக்கத்தை ஏற்றுக்கொள்வதில் எவ்வித இலாபமும் இருப்பதாகக் கிரேக்கர் களுக்குத் தெரியவில்லை.

கிரீஸில் மித்ரடேட்டஸின் ஆதிக்கத்தை ஒழித்து, மறுபடியும் ரோமின் ஆதிக்கத்தை நிலைநிறுத்துவதற்கு, ஆர்ச்சிலாஸைத் தோற்கடித்து ஆதன்ஸை முதலில் கைப்பற்றுவது அவசியம் என்பதைச் சல்லா உணர்ந்தார். வழியில் ஏட்டோலியாவிலும் தெசாலியிலும்இயன்ற அளவு ஒரு படையைத் திரட்டிக் கொண்டு பூவோஷியாவுக்குள் (Boeotia) புகுந்தார். அங்கு அவரை எதிர்ப்பதற்காக வந்த ஆர்ச்சிலாஸ் தோற்கடிக்கப் பட்டு, ஆதென்ஸுக்கு மீளவேண்டியதாயிற்று.

அடுத்தபடியாக, ஆதென்ஸை நோக்கி வந்த சல்லாவால் அதைத் தாக்கிக் கைப்பற்ற முடியவில்லை. எனவே, முற்றுகையில் ஈடுபட வேண்டியதாயிற்று.

அதே சமயத்தில் கிரீஸின் இதர பகுதிகளிலும் ரோமின் ஆதிக்கத்தை மீண்டும் நிறுவுவதற்கெனத் தமது தளபதிகளைப் பல்வேறு இடங்களுக்கும் அனுப்பினர் சல்லா. கி.மு. 86 மார்ச்சு மாதம் முதல் தேதியன்று ஆதென்ஸ் கைப்பற்றப்பட்டது. ஆறு மைல் தொலைவிலிருந்த அதன் துறைமுகமான பிரேயஸும் விரைவில் வீழ்ச்சியுற்றது. அவை இரண்டும், அழித்து நாசமாக் கப்பட்டன. ஆயிரக்கணக்கான கிரேக்கர்கள் ரோமானியரால் வெட்டி வீழ்த்தப்பட்டனர்.

இதற்கிடையில் பாண்ட்டஸிலிருந்து அனுப்பப்பட்ட மற்றொரு படையானது மாசிடோனியாவைக் கைப்பற்றி, தெர்மாப்பிளேக் கணவாய் வழியாகப் போசிஸ் (Phocis) பிரதேசத்துக்குள் நுழைந்தது. ஆர்ச்சிலாஸும் அப்படை யுடன் சேர்ந்து கொண்டார். ஒருலட்சத்துக்கும் அதிகமான ஆட்களைக் கொண்ட அப்பெரும் படையை எதிர்க்கமுடியாமல் சல்லாவால் அனுப்பப்பட்ட ஹோர்ட்டென்சியஸ் (Hortensius) என்ற தளபதி பின்வாங்கினர். எனவே, சல்லாவே படை யுடன் சென்று தனது வெற்றிக்கு உதவக் கூடிய இடம் என்று கருதிய சேரோனியா (Chaeronea) என்ற விடத்தில் முகாம்

அமைத்து, பகைவர்களை எதிர்நோக்கிக் காத்திருந்தார். டாக்சிலஸ் (Taxilus), ஆர்ச்சிலாஸ் ஆகியோரின் தலைமையில் பாண்ட்டஸின் படையும் விரைவில் வந்தது. அங்கு நடை பெற்ற கடும் போரில் சல்லா பெரு வெற்றி பெற்றார் (கி.மு. 86). பத்தாயிரம் பகைவர்களே உயிர் தப்பியதாகவும், சல்லாவின் தரப்பில் பதினைந்து பேர்கள் மட்டுமே உயிரிழந்ததாகவும் ரோமினது எழுத்தாளர்கள் பின்னர் எழுதிச் சென்றனர்.

ரோமிலிருந்து பிளாச்சஸ் வருதல்: இதற்கிடையில் ரோமில் ஆட்சியைக் கைப்பற்றிய மக்கள்கட்சி சல்லாவைப் படைத் தலைமையிலிருந்து அகற்றுவதற்கென்று பிளாச்சஸ் (Flaccns) என்பவரை அனுப்பியது. அவர் இலீரியாவில் இறங்கி, இரண்டு லீஜின்களோடு தெசாலிக்குள் நுழைந்தார். அவரோடு போரிடு வதற்காக வடக்கு நோக்கிப் புறப்பட்டார் சல்லா. ஆனால், 80,000 பேர்களைக் கொண்ட புதிய படை ஒன்று பாண்ட்டஸி லிருந்து வந்து யூபோயாத் தீவில் கரையிறங்கியுள்ளது என்ற செய்தி சல்லாவுக்கு எட்டியது; எனவே அவர் உடனே திரும்பி வந்து சேரோனியாவுக்கு அருகில் **ஆர்க்கோ மீனஸ்** (Orcho menus) என்ற விடத்தில் பாண்டஸின் படையைத் தாக்கினார். இரு படைகளுக்கு மிடையே கடும்போர் நடந்தது. பாண்ட் டஸின் படைக்கு ஆர்ச்சிலாஸே மீண்டும் தலைமை தாங்கி நடத்தினர். அவரது குதிரைப் படையின் தாக்குதலைச் சமாளிக்க முடியாமல் சல்லாவின் படைகள் சிதறுண்டன. உடனே சல்லா தனது குதிரையிலிருந்து குதித்துப் போர்தீவிரமாக நடந்த இடத் துக்கு ஓடியதாகவும், 'நீங்கள் அனைவரும் உயிரோடு ஊர் திரும்பி நீண்ட நாட்கள் மகிழ்ச்சியோடு வாழுங்கள்!' என்றும் அவர் கூறியதைக் கேட்ட அவரது போர்வீரர்கள் மீண்டும் போரில் குதித்ததாகவும், பெருவெற்றி ஈட்டியதாகவும் கூறப் படுகிறது.

பிளாச்சஸுக்குத் துணைத் தளபதியாகப் ஃபிம்பிரியா (Fimbria)என்பவர் அனுப்பப்பட்டிருந்தார். அவர்கள் இருவருக் குமிடையில் மனத்தாங்கல்கள் ஏற்பட்டன. அதன் விளைவாக படையில் கிளர்ச்சி ஒன்றைத் தூண்டிவிட்டு, பிளாச்சஸைக் கொன்று, தானே படைத்தலைவரானார் பிம்பிரியா. சல்லா ஆசியாவுக்குச் செல்லு முன்பாகத் தாமே அங்குச் சென்று மித்ர டேட்டஸைத் தோற்கடித்துப் பேரும் புகழும் பெற்ற பெரிய மனிதராக வேண்டுமென்பது அவரது அவா. எனவே, கடலைக் கடந்து பித்தினியாவுக்குச் சென்று, மித்ரடேட்டஸின் படை களைப் பலபோர்களில் தோற்கடித்தார். இந்நிலையில் பிம்பிரி

யாவையும் தோற்கடிப்பது மிகஅவசியம் என்பதை உணர்ந் தார் சல்லா. அச்சமயத்தில் அவரது அதிகாரிகளில் ஒருவரான லூசுல்லஸ் (Lucullus) என்பவர், ஒன்றரை ஆண்டுகளாக எகிப்து, ரோட்ஸ் முதலிய பலவிடங்களுக்குச் சென்று கடற் படை ஒன்றைத் திரட்டிக் கொண்டு வந்து சேர்ந்தார்.

மித்ரடேட்டஸுடன் உடன்படிக்கை : இவ்வாறு இரு பக்கமும் தாக்கப்பட்டு, தோல்விமேல் தோல்வியுற்று வந்த மித்ரடேட்டஸ், சல்லாவுடன் உடன்படிக்கை செய்து கொள்ள முன்வந்தார். பிலிப்பி (Philippi) நகரில் பேச்சுவார்த் தைகள் நடைபெற்றன. பழைய மன்னர்களே பித்தினியா விலும் கப்படோஷியாவிலும் அரியணையில் அமர்த்தப்பட வேண்டும் என்ற சல்லாவின் கோரிக்கைக்கு மித்ரடேட்டஸ் இணங்கினர். கிரீஸிலும் அதை அடுத்த தீவுகளிலும் தனது துருப்புக்களால் நாசப்படுத்தப்பட்ட பல நகரங்களுக்கும் பிரதேசங்களுக்கும் இழப்பீடு தரவும், தாம் கைப்பற்றிய இடங்களையும் விட்டுக்கொடுக்கவும் அவர் இணங்கினர். மேலும், ரோமின் 'நண்பராகவும்', அதற்குப் போர் வீரர்களை யும் கப்பல்களையும் கொடுத்து உதவவும்கூட அவர் இணங்க வேண்டியதாயிற்று.

இவ்வாறு மித்ரடேட்டஸுடன் உடன்படிக்கை செய்து கொண்டபிறகு, பிம்பிரியாவுடன் போரிடுவதற்காக ஆசியா வந்தார் சல்லா. அப்பொழுது லிடியாவில் (Lydia) இருந்தார் பிம்பிரியா. சல்லாவின் கட்சியே வெல்லும் என்பதையும், அவர் கட்சியில் சேர்ந்தால் அதிக இலாபம் கிடைக்கும் என் பதையும் உணர்ந்த பிம்பிரியாவின் படைவீரர்கள் முகாம் களிலிருந்து ஓடிப்போயினர். இவ்வாறு தனது துருப்புக்களால் கைவிடப்பட்ட பிம்பிரியா, சல்லாவை எதிர்க்கப் பலமின்றிப் பெர்கமத்துக்கு ஓடிச்சென்று தற்கொலை செய்து கொண்டார். மித்ரடேட்டஸுடனான போரின்போது ரோமின் ஆதிக்கத்தி லிருந்து தம்மை விடுவித்துக்கொண்ட நகரங்களனைத்தையும் ஒவ்வொன்றாக முற்றுகையிட்டுக் கைப்பற்றித் தன் ஆதிக்கத் தையும் பலத்தையும் பெருக்கிக் கொள்ளும் முயற்சியில் மேலும் பல மாதங்களை ஆசியா மைனரில் கழித்தார் சல்லா. அவர் அந்நகரங்களைச் சூறையாடி, அவற்றின் மக்களில் ஆயிரக்கணக்கானவரைக் கொன்று அவர்தம் சொத்துக்களைப் பறிமுதல் செய்து, ஏராளமான தொகைகளை அபராதமாக அவற்றிடமிருந்து வசூலித்துப் பெருஞ்செல்வத்தைத் திரட்டினர். அவற்றில் ஒருசில துளிகளையும் பெற்ற அவரது போர்வீரர்

களும் மகிழ்ந்தனர். ரோமிலிருந்து ஓடிவந்து சல்லாவின் முகாமில் சேர்ந்துகொண்ட செனேட்டர்களும் பிரபுக்களும் கூட இக்கொள்ளையில் பங்கு கொண்டனர். இவ்வாறு பெருத்த அழிவுக்கு உள்ளாயிற்று ஆசியா மைனர். அதன் பொருளாதாரம் பாழ்பட்டது. ஆசியாவில் தமது வேலையை முடித்துவிட்டு, கி.மு. 84-ல் கிரீஸுக்குத் திரும்பினர் சல்லா. அடுத்த ஆண்டில் அவர் ஒரு பெரிய படையோடும் ஏராளமான போர்க் கப்பல்களோடும் இத்தாலிக்குத் திரும்பினர்.

ரோமின்மீது படையெடுப்பு: இத்தாலி வந்தடைந்த சல்லா தன்னிடமிருந்த 40,000 ஆட்களோடு ஜூனியஸ் நார்பேனஸ் (Junius Norbanus) என்ற கான்சலைக் கேப்புவாவுக்கருகில் தோற்கடித்தார். மூன்றாவது முறையும் கி.மு. 82-ஆம் ஆண்டுக்கான கான்சலாகத் தேர்ந்தெடுக்கப்பட்டிருந்த பெப்பிரியஸ் கார்போவிடம் (papirius Carbo) பெரும்படை ஒன்றிருந்ததால், உடனே ரோமை நோக்கிச் செல்ல சல்லாவால் முடியவில்லை. எனினும், சல்லாவுக்குச் சாதகமாகவே நிலைமை உருவாகிவந்தது. பகைவரின் படைகள் இத்தாலியில் பலவிடங்களில் சிதறிக்கிடந்தன. மேலும், பிரபுக்கள் கட்சியைச் சேர்ந்த பாம்பேயஸ் (pompeius) சல்லாவை ஆதரித்துப் படை ஒன்றைத் திரட்டிப் பிசினத்தில் கார்போவின் படைகளோடு போரிட்டு வந்தார். ரோமிலும் இத்தாலியாவிலும் இருந்த செல்வந்தர்கள் தொடர்பு கொண்டனர்.

பலவிடங்களில் சல்லாவின் படைகளுக்கும் அரசின் படைகளுக்கும் இடையில் போர்கள் நடைபெற்றன. அதே சமயத்தில் பாம்பேயஸ், மெட்டலஸ், கிராசஸ் முதலியோர் வடக்கில் அரசின் படைகளோடு போரிட்டு வந்தனர். குளுசியத்திலும் (Clusium), ரோமுக்கு வெளியில் காலின் வாயிலுக்கு (Colline Gate) அருகிலும் நடைபெற்ற இருகடும்போர்களிலும் சல்லாவின் படைகள் மயிரிழையில் வென்று கி.மு. 82 நவம்பரில் ரோமைக் கைப்பற்றின. கார்போ ஆப்பிரிக்காவுக்கு ஓடிப்போனர். அங்கு அவரது ஆள் ஒருவர் கவர்னராயிருந்தார். பின்னர் அங்கிருந்து சிசிலிக்குத் திரும்பிக் கொண்டிருந்தபோது வழியில் பிடிக்கப்பட்டு பாம்பேயால் (பாம்பேஸைத்தான் பாம்பே என்றும் அழைக்கின்றனர்) கொல்லப்பட்டார். மற்றக் கான்சலான மேரியஸ் (ஏழுமுறை கான்சலாக இருந்த மேரியஸின் மகன் இவர்) தொடர்ந்து போரிட்டு, தோற்று, தற்கொலை செய்துகொண்டார்.

சல்லாவின் கொலைகள் : ரோமில் நுழைந்த உடனேயே தன்னை எதிர்த்த அனைவரையும் கொல்லப் போவதாக அறிக்கை ஒன்றை வெளியிட்டார் சல்லா. அத்தகைய போரின் பெயர்களடங்கிய பட்டியல்கள் வெளியிடப்பட்டன. முதல் பட்டியலில் மட்டும் 40 செனேட்டர்கள், 1600 ஈக்வைட்டுகள் ஆகியோரின் பெயர்கள் அடங்கியிருந்தன. அனைவரும் உடனே கொலை செய்யப்பட்டனர். இவ்வாறு அவருக்கும் அவரது கட்சியாளரான பிரபுக்களுக்கும் அரசியல் காரணமாகவும் தனிப்பட்ட முறையிலும் பகைவராயிருந்த ஆயிரக் கணக்கானோர் அப்பட்டியல்களில் சேர்க்கப்பட்டு மரண தண்டனை அடைந்தனர். பலரை முதலில் கொன்று விட்டு, பின்னர் அவர்தம் பெயரைப் பட்டியலில் சேர்த்துக் கொண்டதும் உண்டு. அவ்வாறு தண்டனைக் குள்ளானவரின் சொத்துக்கள் பறிமுதல் செய்யப்பட்டு, மலிவான விலைக்குப் பிரபுக்களுக்கு வழங்கப்பட்டன. சொத்தைக் கவருவதற்கென்றேகூடப் பலகொலைகள் புரியப்பட்டன. சல்லாவின் ஆட்சியும், பிரபுக்களின் ஆட்சியும் இக்கொள்ளைகளால் கறைபட்டன. பின்பு ஆட்சியைக் கைப்பற்றிய பலரும் இதே முறையைப் பின்பற்றத் தொடங்கினர். ரோமின் வரலாற்றில் படுகொலைகள் அதிகம் இடம் பெறத் துவங்கி விட்டன.

சல்லாவின் சர்வாதிகாரம். கி.மு. 82–79 : இந்நிலையில் சல்லாவையே சர்வாதிகாரியாக (Dictator), செனேட்டும் பிரபுக்களும் தேர்ந்தெடுத்தனர். பிரபுக்களின் அரசியல் நெறிகள் எந்த அளவுக்குச் சீர் கெட்டுவிட்டது என்பதை இது நன்கு காட்டியது. கி.மு. 202 க்குப் பிறகு ஒருபொழுதும் சர்வாதிகாரிகள் ரோமை ஆண்டதில்லை. அதற்கு முன்பும்கூட ஆறு மாதகாலத்துக்கு மட்டுமே ஒருசர்வாதிகாரி நியமிக்கப்பட்டார். அதுமட்டுமன்றி, அப்பொழுதெல்லாம் அந்த ஆறு மாதகாலம் முடிவுறுவதற்கு முன்பேயே பெரும்பாலும் அவர்களின் ஆட்சியை நிறுத்திவிட்டு, முறையான ஆட்சிமுறையை நிறுவிவந்தது செனேட். ஆனால், இப்பொழுதோ காலவரையறையின்றி எத்தனை ஆண்டு வேண்டுமென்றாலும் சல்லா சர்வாதிகாரியாக இருப்பதற்குச் செனேட் ஒப்புதலளித்ததோடு புதிய அரசியலமைப்பு ஒன்றை நிறுவும் அதிகாரத்தையும் அவருக்கு அளித்தது. பிரபுக்களின் ஆட்சியை உறுதியாக நிறுவுவதற்கு ஏற்ற வகையில் அவர் பலவிதமான சட்டங்களையும் இயற்றலானார். அவரது பெயரையே வைத்துக் கொர்னீலியச் சட்டங்கள் (Leges corneliae) என்றழைக்கப்பட்டன

அவை. மன்றங்களின் அதிகாரங்கள் குறைக்கப்பட்டன. அவரது வாளுக்கு அஞ்சி, அவரது சட்டங்கள் அனைத்தையும் செஞ்சூரியா மன்றம் ஏற்றுக் கொள்ள வேண்டியதாயிற்று. அவர் வகுத்த அரசியலமைப்பைப்பற்றிச் சிறிது விரிவாகத் தெரிந்துகொள்வது அவசியம்.

1. தன்னை எதிர்த்த இத்தாலிய நகரங்களையும் மக்களையும் கடுமையாகத் தண்டித்தார் சல்லா. பல நகரங்களின் வாக்குரிமைகளும் நிலங்களும் பறிக்கப்பட்டன. வாய்ப்பு கிடைத்தபோதெல்லாம் ரோமின் ஆதிக்கத்தை எதிர்த்துத் தொடர்ந்து போராடிய சாம்னீயத்தின் மக்கள் கொன்று குவிக்கப்பட்டனர். எஞ்சியிருந்தவர்கள் அங்கிருந்து ஓட வேண்டியதாயிற்று. சல்லாவின் போர் வீரர்கள் அங்குக் குடியமர்த்தப்பட்டு, நிலங்கள் அவர்களுக்குப் பிரித்தளிக்கப் பட்டன. கிட்டத்தட்ட தென் இத்தாலி முழுவதுமே அவ்வாறு அழிக்கப்பட்டு, ரோமானிய மயமாக்கப்பட்டது. பண்டைக் குடிகள் அழிந்து பட்டனர். தெற்கில் ரோமுக்கு இருந்துவந்த எதிர்ப்புக் குறைந்தது. எனினும், எஞ்சியிருந்த ஒருசில பண்டைக்குடிகளுக்கும் (இவர்கள் பெரும்பாலும் அடிமைகளாக மாற்றப்பட்டு விட்டனர்) ரோமானியக் குடியேற்றக் காரர்களுக்கு மிடையில் பூசல்கள் தொடர்ந்து இருந்து வந்தன. சல்லாவால் குடியமர்த்தப்பட்ட அவர்கள், அவரது பெயராலேயே கொர்னீலியக்குலத்தினர் (Cornelii) எனப்பட்டனர்.

2. சல்லாவின் முக்கியமான நோக்கம் செனேட்டின் ஆதிக்கத்தை மீண்டும் நிலை நிறுத்துவதுதான். சல்லாவின் தலைமையிலான உள்நாட்டுப் போரின்போது செனேட் இரண்டாகப் பிளவுபட்டுச் செனேட்டர் பலர் பொது மக்களின் கட்சியை ஆதரித்து அழித்தனர். அவ்விடங்களுக்கு 300 ஈக்வைட்டுகளைச் செனேட்டர்களாகச் சல்லா நியமித்தார். செனேட்டின் உறுப்பினர் தொகை இரண்டு மடங்காயிற்று. மொத்தமிருந்த 20 குவேஸ்டர் பதவிகளிலிருந்து ஓய்வுபெறும் அனைவரும் இனிச் செனேட்டில் உறுப்பினராவர் என்றும் ஒரு சட்டத்தைச் சல்லா கொண்டுவந்தார். இதுவரை கியூருல் அதிகாரிகளுக்கு மட்டுமே இருந்துவந்த இந்தஉரிமை, இப்பொழுது அவர்களுக்கு அடுத்த நிலையிலிருந்த குவேஸ்டர்களுக்கும் கொடுக்கப்பட்டது. பிரபுக்களின் செல்வாக்கு உட்பட்ட உயர் அதிகாரிகளைக் கொண்டே செனேட்டை நிரப்பவேண்டும் என்பதுதான் இதன் நோக்கம்.

அதே சமயம் செனேட்டின் அதிகாரங்களைக் கூட்டுவதற்கும் வகை செய்யப்பட்டது. கான்சல்களும் பிரேட்டர்களும் தமது பதவிக் காலத்தின்போது ரோமிலேயே இருக்கவேண்டும் என்றும், அதற்கு அடுத்த ஆண்டில் தான் ஆளும் அதிகாரம் (Emperium) பெற்று மாநிலங்கட்குச் செல்லவேண்டும் என்றும் விதிக்கப்பட்டது. (இந்த விதியும் பின்னர் பல சமயங்களில் மீறப்பட்டது.) கான்சல்கள் மாநிலம் எது, பிரேட்டர்கள் மாநிலம் எது என்பதைச் செனேட்டே முடிவுசெய்யும். அவ்வாறு மாநிலங்களில் கவர்னராக இருக்கும் யாரும் தமது எல்லைகளை விட்டு, செனேட்டின் அனுமதி இல்லாமல், படையுடன் செல்லக்கூடாது. அடுத்தபடியாகக் கவர்னராகநியமிக்கப்பட்ட அதிகாரி வந்ததும் முப்பது நாட்களில் அவரிடம் அதிகாரத்தை ஒப்படைத்துவிட்டு, வெளியேறிவிட வேண்டும்.

3. மேரியஸ் மாதிரி தொடர்ந்து கான்சலாக ஒருவர் இருந்து, செனேட்டைவிட அதிக அதிகாரம் பெறுவதைத் தடுப்பதற்கெனவும் ஒருஏற்பாடு செய்யப்பட்டது. ஒருவர் இருமுறை கான்சலாக ஆவதற்கு இடைவெளி பத்தாண்டுகள் இருக்க வேண்டும் என்று விதிக்கப்பட்டது. மேலும், குவேஸ்டராகவும் பிரேட்டராகவும் பதவி வகித்த பின்னரே, ஒருவர் கான்சலாக முடியும் என்றும் விதிக்கப்பட்டது. பத்தாண்டுகள் படையில் பணி புரிந்தவர் மட்டுமே கான்சலாக முடியும் என்ற பழையவிதி தளர்த்தப்பட்டது. செனேட்டின் உறுப்பினர் பட்டியலைத் தயாரிக்கும் வேலையைச் சென்சார்கள் இழந்தனர். ஏனெனில், பதவி ஓய்வுக்குப் பிறகு உயர் அதிகாரிகளே இப்பொழுது முதல் செனேட்டில் இடம்பெற்றதால் பட்டியல் தயாரிக்க வேண்டிய அவசியமில்லாமல் போய்விட்டது.

4. குலமன்றத்தின் (Comitia Trilnta) அதிகாரங்களும் வேலையும் குறைக்கப்பட்டன. (குல மன்றத்திலும் செஞ்சூரியா மன்றத்திலும் உறுப்பினர்களாயிருந்து வாக்களித்தவர்கள் ஒருவரே. ஆனால், குலமன்றத்தில் அவர்கள் குலம் குலமாகப் பிரிந்து வாக்களித்ததால் செல்வந்தர்களுக்குச் சிறப்பான செல்வாக்கு அதில் இல்லை; ஆனால், செஞ்சூரியா மன்றத்திலோ செஞ்சூரியா வாரியாக வாக்குகள் பதிவுசெய்யப்பட்டன. பணம் படைத்தவர்கள் அதிக செஞ்சூரியாக்களாகவும், மற்றவர்கள் ஒருசில செஞ்சூரியாக்களாகவுமே பிரிக்கப்பட்டிருந்ததால், பிரபுக்களே செஞ்சூரியா மன்றத்தில் ஆதிக்கம் பெற்றிருந்தனர்.) சிறிது சிறிதாகச் சட்டமியற்றும் அதிகாரத்தைப் பெற்று மிகுந்த செல்வாக்கோடு விளங்கிய குலமன்றம், இப்பொழுது சட்ட

மியற்றும் அதிகாரத்தை இழந்தது. டிரிபியூன்களையும், மற்றக் கீழதிகாரிகளையும் தேர்ந்தெடுக்கும் வேலை மட்டுமே அதற்கு விடப்பட்டது. சட்டங்கள் அனைத்தும் செஞ்சூரியா மன்றத்தினுல் ஏற்றுக்கொள்ளப்பட வேண்டும் என்ற புதிய முறை புகுத்தப்பட்டது.

5. அதுவரை மக்களது கோரிக்கைகளை ஆதரித்துப் பல சட்டங்களைக் குலமன்றத்தின்மூலம் நிறைவேற்றிய டிரிபியூன்களின் அதிகாரங்கள் பறிக்கப்பட்டன. அவர்கள் மக்களைக் கூட்டுவதும், அவற்றில் உரைகள் நிகழ்த்துவதும் தடைசெய்யப்பட்டன; செனேட்டின் அனுமதியின்றிச் சட்டங்களை அவர்கள் முன்மொழிவதும் தடை செய்யப்பட்டது. மேலும், டிரிபியூன் பதவி வகித்தவர்கள் உயர் பதவி எதற்கும் போட்டியிட முடியாது என்றும் விதிக்கப்பட்டதால், டிரிபியூனுக ஆவதற்கு யாருக்குமே விருப்பமில்லாது போயிற்று. கான்சல்கள், செனேட்டர்கள் ஆகியோரின் முடிவுகளைத் தடுத்து நிறுத்தும் அதிகாரத்தையும் (Veto) டிரிபியூன்கள் இழந்தனர்.

6. இத்தாலிய நகரங்களில் குடியேறிய சல்லாவின் போர் வீரர்களுக்கு—அதாவது கொர்னீலியக் குலத்தினருக்கு வாக்குரிமைகள் அளிக்கப்பட்டன. போரில் இறந்துபட்ட பல பிரபுக்களின் அடிமைகளுக்கு விடுதலை யளித்து, அத்தகைய சுதந்திர மனிதர்களில் 10,000 பேருக்கு வாக்குரிமை அளிக்கப் பட்டது. இவர்களும் கொர்னீலியக் குலத்தினராகக் கருதப் பட்டு, நகர வாக்காளர் பட்டியலில் சேர்த்துக்கொள்ளப் பட்டனர். இவர்களது வாக்குகள் சல்லாவுக்கும், பிரபுக்களுக்கும் ஆதரவாகப் பதிவாயின.

நீதித்துறையிலும், பிரபுக்களின் ஆதிக்கத்தை மீண்டும் நிறுவுவதற்குப் பல ஏற்பாடுகளைச் செய்தார் சல்லா. இதுவரை குற்றம் புரியப்பட்டபோதெல்லாம் கமீஷியா மன்றமே அதை விசாரித்துத் தண்டனையளித்து வந்தது; அல்லது அதற்கென ஒருகுழுவை அமைத்தது. அச்சமயங்களில், வழக்கை விசாரிக்கும் முறைபற்றிக் கூறுவதும், ஜூரர்களின் பட்டியலைத் தயாரிப்பதும் செனேட்டின் வேலையாக இருந்துவந்தது. மாநிலக் கவர்னர்களின் ஊழல்களைப் பற்றி விசாரிப்பதற்கென, கல்பூர்னியாச் சட்டத்தின்படி (Lex Calpurnia) கி.மு. 149-ல் நிரந்தரமான நீதி மன்றம்[1] ஒன்று அமைக்கப்பட்டதைப் பற்றி முன்பு

1. ரோமானியர்கள் தமது நீதிமன்றங்களைக் 'குழுக்கள்' (Quaestiones) என்றே அழைத்துவந்தனர். ஒவ்வொரு வழக்கையும் விசாரிப்பதற்கென்று ஒருகுழு அமைக்கப்பட்டது. பின்னர் ஒருவித வழக்குக்கு ஒருகுழு என்று பல நிரந்தர நீதி மன்றங்கள் அமைக்கப்பட்டன.

படித்தோம்; ஜூரர்கள் எவ்வாறு தேர்ந்தெடுக்கப்பட வேண்டும், எவ்வாறு விசாரிக்கப்படவேண்டும் எத்தகைய தண்டனைகள் வழங்கப்பட வேண்டும்என்றெல்லாம் அச்சட்டத் தில்கூறப்பட்டிருந்தன. சல்லா இதேமுறையில் பல நீதிமன்றங் களை நிறுவினர். சான்றுக, துரோகம், கொலை, நஞ்சு கலந்து கொடுத்தல், இலஞ்சம் வாங்குதல், பொதுப் பணத்தைக் கையாடல், கள்ளநாணயம் அச்சிடுதல், கலகம்செய்தல், பொய் கையெழுத்துப்போடுதல் முதலிய பலவிதக் குற்றங்களையும் விசாரிப்பதற்கென்று பல்வேறு நீதிமன்றங்களை அவர் நிறுவினர். அந்நீதி மன்றங்களில் செனேட்டர்கள் மட்டுமே ஜூரர்களாக இருக்கவேண்டும். அவர்கள் மட்டுமே பாரபட்சமின்றி விசாரிக் கும் தன்மை படைத்தவர்கள் என்று கூறப்பட்டது. ஈக்வைட்டு கள் ஜூரர்களாக இருக்கக்கூடாது என்றும் சட்டம் வந்தது. சல்லாவின் இந்தச் சட்டத்துக் கெதிராகப் பின்னர் தொடர்ந்து போராடினர் ஈக்வைட்டுகள்.

சல்லாவின் மரணம் கி.மு. 78 : சுமார் மூன்றுண்டுக்காலம் சர்வாதிகாரியாக இருந்தபின், கி.மு. 79-ல் பதவியைத் துறந்து சுமார் ஓராண்டுக்காலம் ஆடம்பரமாகவாழ்ந்து கி.மு. 78-ல்உயிர் நீத்தார் சல்லா.

அவரது நினைவுக் குறிப்புகள் (Memoirs) எழுதப்பட்டது இந்த இறுதி ஆண்டில்தான். மேலும், சில ஆண்டுகள் தொடர்ந்து உயிர் வாழ்ந்திருப்பின், அமைதியாக அவர் இறந் திருப்பாரா என்பது ஐயத்துக்குரிய ஒன்று. அந்த அளவுக்கு ஈக்வைட்டுகளும், ஏழை எளியவர்களும் அவரது ஆட்சியை வெறுத்தனர்.

16. பாம்பேயின் எழுச்சி
(கி.மு. 72—68)

சல்லாவின் மரணத்தின்போது ரோமானியப் பேரரசு. சல்லாவின் மரணத்தின்போது ரோமானியப் பேரரசு கீழ்வரும் பகுதிகள் உள்ளடங்கியதாய் இருந்தது. இத்தாலிய தீபகற் பத்தின் தென்முனையிலிருந்து வடக்கில் ரூபிகன் நதிவரை ரோமாகக் கருதப்பட்டது. அதன் மாநிலங்கள் பத்து. அவை: 1. சிசால்ப் பைன் கால், 2. டிரான்சால்ப் பைன் கால், (அதன் தலைநகரான நார்போ நகரை வைத்து நார்போனென்சிஸ் (Narbonensis) என்று கூட அது அழைக்கப்பட்டது.) 3. சிசிலி 4. சார்டீனியாவும், கார்சிகாவும். 5. அண்டைய ஸ்பெயின், (His Paniacitevior), 6. தூரத்து ஸ்பெயின் (His Paniaulterior) 7. மாசிடோனியா, (தெசாலியும், இப்பைரஸ், கிரீஸ் ஆகிய வற்றின் பெரும்பகுதியும் இதில் சேர்ந்திருந்தன.) 8. ஆப்பி ரிக்கா; அதாவது முன்பு கார்த்தேஜின் ஆளுகைக்குட்பட்ட ஆப்பிரிக்காப்பகுதி. 9. ஆசியா. அதாவது பெர்கம மன்னர் களால் ஆளப்பட்ட பிரிஜியா (Phrygia), மைசியா (Mysia), கேரியா (Caria), லிடியா (Lydie), 10. சிலீஷியா (CiLicia) ஆகியவை.

சமுதாயத்தின் பல்வேறு வகுப்புக ளிடையில் இருந்து வந்த வேற்றுமைகளை,சல்லாவின் ஆட்சி தீவிரப்படுத்தியதேயொழிய குறைக்கவில்லை. இதனால், மேலும் பல்லாண்டுகள்வரை உள் நாட்டுக் குழப்பங்களும் பூசல்களும் தொடர்ந்தன. அவை கி.மு. 31 வரை—அதாவது ஆக்டியம் போர் வரை (Battle of Actium) தொடர்ந்து நடைபெற்றன. அதே சமயம் ரோமானிய சமுதாயத்தில் எல்லாவிதமான நெறிகளும் ஒழுக்கங்களும் சீர்கெட்டு வந்தன. விவசாயம் முழுவதும் அடிமைகளிடம் ஒப்படைக்கப்பட்டது. கிளாடியேட்டர்களை (Gladiator) வைத்துப் பந்தயங்களை நடத்தியும், வெறும் ஆடம்பரங்களில்

வாழ்ந்தும் செல்வந்தர்கள் காலம் கழித்தனர். பிழைக்க வழி யின்றிச் சோம்பித் திரிந்த ஏழைகளின் கூட்டம் அளவுக்கு மீறிப் பெருகியது. பலவிதமான தீமைகள் பெருகின.

சல்லாவின் மரணத்துக்குப்பின் கட்சிப்பூசல்கள் மீண்டும் தலைதூக்கின. செனேட்டர்களும் பிரபுக்களும் (Optimater) சல்லாவின் ஆட்சியின்போது மீண்டும் தமது ஆதிக்கத்தை வன்முறையில் நிறுவியதைக் கண்டு, அதை எவ்வாறுகிலும் உடைத்தெறிய வேண்டுமென்று உறுதிபூண்டனர். ஈக்வைட்டு களும் மற்றச் செல்வந்தரும் (Populares) தலைவர்களற்ற, ஒன்று சேர்ந்து போரிடுவதற்கு வழி இல்லாத ஏழை எளியவர்கள் இந்தக் கட்சியை ஆதரித்தனர். இவ்விரு கட்சிகளுக் கிடையில் சுமார் முப்பதாண்டுக்காலம் பூசல்கள் தொடர்ந்தன. இறுதியில் ரோமானியக் குடியரசே வீழ்ந்துபட்டது. அதைப் பற்றி அடுத்துக் கவனிப்போம்.

லெப்பிடஸின் கிளர்ச்சி, கி.மு. 78–77 : சல்லா மரணமுற்ற உடனேயே, அவர் வகுத்துச் சென்ற அரசியல் அமைப்பை அழிக்க முயற்சி ஒன்று செய்யப்பட்டது. கி.மு. 78-ல் கான் சலாக இருந்த ஏமிலியஸ் லெப்பிடஸ் என்பவர்தாம் (Aemillus Lopidus) இதற்குக் காரணமானவர். அவர் ஏழைகளுக்கு மலி வான விலையில் தானியங்களை வழங்கவும், சல்லாவால் நாடு கடத்தப்பட்டவர்களைத் திருப்பியழைக்கவும் சட்டங்களை இயற் றினர். வேறு பல சட்டங்களையும் அவர் இயற்ற முயன்றார்; ஆனால், மற்றக் கான்சலின் எதிர்ப்பு காரணமாக அம்முயற்சி தோற்றது. அவ்வாண்டின் இறுதியில் எட்ரூரியாவில் சில கலகங்கள் நடைபெற்றன. சல்லாவால் பறிக்கப்பட்ட தமது சொத்துக்களையும் உரிமைகளையும் திரும்பவும் பெறுவதற்காக இத்தாலியர்கள் அங்குக் கலகங்களை விளைவித்தனர். பதவியி லிருந்து ஓய்வுபெற்றபின், கி.பி. 77-ல் புரோகான்சலாகப் படை யுடன் எட்ரூரியாவுக்குச் சென்ற லெப்பிடஸ், இத்தாலியக் கிளர்ச்சிக்காரர்களை அடக்குவதற்குப் பதில், அவர்களோடு சேர்ந்துகொண்டு அவர்களுக்கு உற்சாக மூட்டினர். ரோமை நோக்கி அவரது படை முன்னேறியது. ஆனால், விரைவிலேயே தோற்கடிக்கப்பட்டு, சார்டீனியாவுக்கு அவர் ஓட வேண்டிய தாயிற்று. அடுத்த ஆண்டில் அங்கு அவர் காலமானார். அவரது துணைத்தளபதிகளில் ஒருவரான புரூட்டஸை (சீசரைக் கொலை செய்தவரின் தந்தை இவர்) மியூட்டினா என்ற விடத்தில் சிறைப் பிடித்துக் கொன்றார் பாம்பே. இக்கிளர்ச்சி மிகவும் முக்கியமான தல்ல எனினும், சல்லாவின் சட்டங்களுக்கு எத்தகைய எதிர்ப்பு இருந்தது என்பதை இது நன்கு காட்டுகிறது.

ஸ்பெயினில் செர்ட்டோரியஸ், கி.மு. 83-72 : லெப்பிடஸின் கிளர்ச்சியைவிட முக்கியமானது செர்ட்டோரியஸின் கிளர்ச்சி. இவர் (Sertorius) சின்னுவை ஆதரித்தவர். கி.மு. 83-ல் சின்னுவின் படையில் கேப்புவாவில் போரிட்டு, சல்லாவால் தோற்கடிக்கப்பட்டபின் ஸ்பெயினுக்கு ஓடிவிட்டார். தூரத்து ஸ்பெயினின் (Hispania Nlterior) புரோபிரேட்டராக கி.மு. 82-ஆம் ஆண்டுக்காக இவர் ஏற்கெனவே நியமிக்கப்பட்டிருந்தார். ரோமில் இருந்துகொண்டு சின்னுவைப்போல் சீர்திருத்தங்களைக் கொண்டு வருவதற்குப் பதிலாக, ஸ்பெயின் போன்ற தூரத்து மாநிலம் ஒன்றில் இருந்துகொண்டு, அதைத் திறமையாக ஆண்டு, பல சீர்திருத்தங்களை அங்குப் புகுத்தி, பின்னர் வேறு பல மாநிலங்களிலும் ரோமிலும் அவற்றைப் புகுத்த முயலுவதே நல்லது என்று அவர் நம்பினர். அதற்கேற்ற நிர்வாகத்திறமையும் நல்ல கொள்கைகளும் கடின உழைப்பும் அவரிடம் ஏராளமாக இருந்தன.

புரோபிரேட்டர் பதவியிலிருந்து தன்னை விலக்கி, ரோமுக்குத் திரும்பி வருமாறு சல்லா ஆணையிடுவார் என்பதை எதிர்பார்த்த செர்ட்டோரியஸ், பிரனீஸ் மலைக் கணவாய்களைக் காக்கத் திட்டமிட்டார். எனினும், சல்லாவின் படைகளை எதிர்த்து நிற்கமுடியாமல் ஆப்பிரிக்காவுக்கு அவர் ஓடவேண்டியதாயிற்று. பின்னர் ரோமின் ஆதிக்கத்தை எதிர்த்துப் போரிட்ட லூசிட்டானிகள் (Lucitani—போர்ச்சுகல் பகுதியில் வாழ்ந்த குலத்தினர்) தமது படைக்குத் தலைமை தாங்குமாறு அவருக்கு அழைப்பு விடுத்தனர். அதை ஏற்றுக்கொண்டு மீண்டும் ஸ்பெயினுக்குச் சென்றார். அங்கு அவரது குண நலன்கள் அனைவரையும் கவர்ந்தன. ரோமிலிருந்து சல்லாவின் கொடுமைகளிலிருந்து தப்புவதற்காக ஓடிவந்த பல செனேட்டர்களும் வேறுபலரும்கூட அங்கு வந்து அவருடன் சேர்ந்துகொண்டனர்.

கி.மு. 79-க்கும் 72-க்குமிடையில் அவருக்கெதிராகப் பல ரோமானியப்படைகள் அனுப்பப்பட்டன. பல புரோபிரேட்டர்களும் அனுப்பப்பட்டனர். ஆயினும், செர்ட்டோரியஸை அவர்களால் வெல்ல முடியவில்லை. மித்ரடேட்டஸுடனும் அவர் பேச்சு வார்த்தைகள் நடத்தி, ரோமின் ஆசிய மாநிலத்தை ஆளுவதற்கென்று புரோகான்சல் ஒருவரையும் அனுப்பிவைத்தார். ஸ்பெயினில் அவரது ஆதிக்கம் சிறிது சிறிதாக வளர்ந்துவந்தது. மூன்று புரோபிரேட்டர்கள் தோற்கடிக்கப்பட்டபின், கி.மு. 76-ல் பாம்பேயின் (Pumpey) தலைமையில் பெரும்படை ஒன்று

ஸ்பெயினுக்கு அனுப்பி வைக்கப்பட்டது. நான்கு ஆண்டுகள் போரிட்டும் செர்ட்டோரியஸை அவரால் முறியடிக்க முடிய வில்லை. தனது சின்னஞ்சிறு படையுடன் பாம்பேயையும் பல விடங்களில் அவர் தோற்கடித்தார்.

இந்நிலையில் பெர்பென்ன (Perpenna) என்பவரால் செர்ட் டோரியஸ் கொலைசெய்யப்பட்டார். அவர் லெப்பிடஸ் தோற்று சார்டினியாவுக்கு ஓடியபோது பிரேட்டராக இருந்தார்; லெப்பி டஸின் படையைத் திரட்டிக்கொண்டு ஸ்பெயினுக்குச் சென்று செர்ட்டோரியஸுடன் சேர்ந்துகொண்டு ரோமை எதிர்த்துப் போரிட்டு வந்தார். இறுதியில், வெற்றி கிடைக்காது என்ற நிலை ஏற்பட்டதும் மறுபடியும் ரோமானியரின் நம்பிக்கையைப் பெறு வதற்கென்று கி.மு. 72ல் செர்ட்டோரியஸைக் கொலைசெய்வித் தார் பெர்பென்ன. இக்கொலையின்மூலம் தனது ஆதரவைப் பெறலாம் என்றெண்ணிய பெர்பென்னவைச் சந்திப்பதற்கும் மறுத்துக் கொல்லும்படி ஆணையிட்டார் பாம்பே.

செர்ட்டோரியஸின் கிளர்ச்சி செனேட்டின் ஆதிக்கத்துக்கு மற்றொரு பேரிடியாக வந்தது. செனேட்டின் ஆதிக்கம் ரோமில் பலருக்கும் பிடிக்கவில்லை என்பதை அது நன்கு தெளிவாக் கியது. ஏராளமான செனேட்டர்கள் அவரது அணியில் இருந்தனர். மேலும் ரோமிலிருந்துகொண்டே பலர் அவரை ஆதரித்தும், அவரோடு கடிதத்தொடர்பு கொண்டும் வந்தனர். தமது குறுகிய நலன்களை மட்டுமே கருதிய சில பிரபுக்கள் சேனேட்டின்மூலம் ரோமை ஆண்டுவந்தது அவர்களுக்குப் பிடிக்கவில்லை. செனேட்டின் ஆதிக்கம் முடிவுக்கு வரும்நாள் தூரத்தில் இல்லை என்பதை அது நன்கு காட்டியது.

ஸ்பார்ட்டாக்களின் கிளர்ச்சி, கி.மு. 73-71: செனேட் நிர்வாகத்தின் சீர்கேடுகளைச் செர்ட்டோரியஸின் கிளர்ச்சி எடுத் துக்காட்டியதுபோல, கி.மு. 73-71ல் நடைபெற்ற கிளாடியேட் டர்களின் (Gladiators) கிளர்ச்சி ரோமரனிய சமுதாயத்தில் நிலவிய பல கொடுமைகளில் ஒன்றை எடுத்துக்காட்டியது. அத்தகைய கொடுமைகளை அகற்றினலொழிய ரோமானிய சமுதாயமும் நாகரிகமும் அழியாமல் காக்க முடியாது என்பதை அது தெளிவாக்கியது.

அடிமைகளுக்கு ஆயுதப்பயிற்சி அளித்து, அவர்களில் இருவரை மோதவிட்டு வேடிக்கை பார்த்து மகிழ்வது ரோமா னியச் செல்வந்தர்களின் பொழுதுபோக்கு. இத்தகைய ஆயுதப் போட்டிக்கெனப்பயிற்றுவிக்கப்பட்ட அடிமைகள் தாம் கிளாடி

யேட்டர்கள் எனப்பட்டனர். செல்வந்தர்கள் இத்தகைய கிளாடியேட்டர்கள் பலரை வைத்திருந்தனர். ரோமில் இருந்த பல அரங்குகளில் 'சண்டைக் காட்சிகள்' (Gladiatorial Shows) அடிக்கடி நடைபெறுவது வழக்கம். கி.மு. 264-ல் தான் அத்தகைய காட்சி ஒன்று முதன்முதலில் நடைபெற்றதாகத் தெரிகிறது.

உடலுறுதியும் ஆயுதப் பயிற்சியும் மிகுந்த கிளாடியேட்டர்களைச் சங்கிலி பூட்டி, சிறை போன்ற அறைகளில் அடைத்து வைப்பது வழக்கம். லென்ட்டூலஸ் (Lentulus) என்ற செல்வந்தர் கிளாடியேட்டர்களைப் பயிற்றுவிப்பதற்கென்றே ஒருபெரிய பள்ளியைக் கேப்புவாவில் நடத்தி வந்தனர். நூற்றுக்கணக்கான கால்களும் (Galus) திரேசியர்களும் (Thracians) அப்பள்ளியில் பயிற்சி பெற்றனர். கி.மு. 73-ல் ஒருநாள் அவர்களில் இருநூறுபேர் ஆயுதங்களுடன் தப்பி வெசூவியஸ் மலைக்கு (Mout Vesuvius) ஓடிச் சென்றனர். ஸ்பார்ட்டாக்கஸ் என்ற (Spartacus) திரேசியர் அவர்களுக்குத் தலைமை தாங்கினர். வெசூவியஸ் மலையை அவர்கள் கைப்பற்றிக் கொண்டனர். அடிமைகளின் விடுதலைக்காகப் போரிடப் போவதாகவும் அறிவித்தனர்.

இதை யறிந்த உடனேயே மற்ற இடங்களி லிருந்தும் நூற்றுக்கணக்கான கிளாடியேட்டர்களும் அடிமைகளும் தப்பி ஓடிச்சென்று அவர்களுடன் சேர்ந்து கொண்டனர். அடிமைகளை விடுவிக்கும் நோக்கத்தோடு பல விடங்களுக்கும் சென்றது அவர்களது படை. ரோமின் படைகளைப் பலவிடங்களில் அது தோற்கடித்தது. பல கான்சல்கள் தோற்றுப் பின் வாங்கினர்.

போர்களின்போதும், அதன் பின்னரும் மிகவும் கண்ணியத்தோடும் பொறுப்புணர்ச்சியோடும் நடந்து கொண்டார் ஸ்பார்ட்டாக்கஸ். தோற்றுச் சிறை பிடிக்கப்பட்ட ரோமானியர் பெருந்தன்மையோடு நடத்தப்பட்டனர். தேவையில்லாத கொலையையும் கொள்ளையையும்கூட அவர் தவிர்த்தார். கி.மு. 72-ல் இரண்டு கான்சல்களும் நடத்தி வந்த படையொன்றைப் பிசினத்தில் தோற்கடித்து, முந்நூறு ரோமானியப் போர் வீரர்களைக் கிளாடியேட்டர்களைப்போல் சண்டையிட்டுக் காட்டுமாறு செய்தாராம் ஸ்பார்ட்டாக்கஸ். இது ஒன்று தான் அவரது கொடிய செயல் என்று ரோமானிய வரலாற்று ஆசிரியர்களே கூறியுள்ளனர் என்றால், அதனால் அவரது நடத்தையைப்பற்றி நாம் தெரிந்து கொள்ளலாமல்லவா?

அடிமைகளை விடுவித்து, இத்தாலியிலிருந்து வெளியேறி, தத்தம் தாய் நாடுகட்கு அவர்களை அனுப்பவேண்டும் என்பது தான் ஸ்பார்ட்டாக்கஸின் நோக்கம். எனவே, ஆல்பஸ் மலையைக் கடந்து வெளியேறுவதற்கென்று வடக்கு நோக்கிச் சென்றது அவரது படை. வழியிலிருந்த எசமானர்கள் அனைவரும் தாக்கப்பட்டு அடிமைகள் விடுவிக்கப்பட்டனர். போ நதிவரை அவர்கள் சென்று விட்டனர். அவர்களுக்கும் அவர்களது சுதந்திரத்துக்குமிடையில் ஆல்ப்ஸ் மலை மட்டுமே நின்றது.

ஆனால். அப்பொழுது அடிமைகளின் அணியில் கருத்து வேறுபாடுகள் முளைத்தன. வெகுநாட்களுக்குமுன்பு விட்டு விட்டு வந்த தமது தாய்நாடுகளுக்குத் திரும்பப் பலர் விரும்பவில்லை. ரோமைத் தாக்கிப் பழிக்குப்பழி வாங்க விரும்பினர் பலர். எனவே, ஸ்பார்ட்டாக்கஸ் ரோமை நோக்கித் திரும்பினர். அதைக் கேள்வியுற்றதால், ரோமில் பீதி நிலவியது. படைத் தலைமை பூணுவதற்குக்கூடப் பிரபுக்கள் பலர் அஞ்சினர். இந்நிலையில் லிசீனியஸ் கிராசஸ் (Licinius Crassus) என்ற பெருஞ் செல்வந்தர் மட்டும் துணிந்து முன்வந்து, படைத் தலைமை பூண்டு புறப்பட்டார். ஸ்பெயினிலிருந்தும் கிரீஸிலிருந்தும் துருப்புக்களைத் தருவித்தது செனேட்.

ரோமை முற்றுகையிட்டுக் கைப்பற்றுவதற்குத் தன் படைபலம் போதாது என்பதை உணர்ந்த ஸ்பார்ட்டாக்கஸ் தென் இத்தாலிக்குச் சென்றார். அவரை அணுகுவதற்கும் கூட ரோமானியப் படைகள் அஞ்சின. கிரேக்கஸைம்கூட அவ்வாறே அஞ்சினர். தென் மேற்குக் கோடியில் லுக்கேனியாவுக்குள் நுழைந்து, தூரி (Thurii) நகரையும் கடந்து சென்று, கடல் கடந்து சிசிலிக்குச் செல்ல முடிவு செய்தார் ஸ்டார்ட்டாக்கஸ். அதற்காகக் கப்பல்கள் கட்டப் பட்டன. ஆனால், புயலில் சிக்கி அவை அனைத்தும் நாசமாயின. இந்நிலையில் கிராசஸுக்கு ஒருபுதிய கருத்து உதித்தது. தூரிக்கு அருகில் கால் கட்டைவிரல்போன்ற குறுகிய நிலப் பரப்புக்குக் குறுக்கே நீண்ட அகழி ஒன்றைத் தோண்டி, மண்ணால் பலத்த மதில்களை எழுப்பி, அடிமைகள் வடக்கே வரமுடியாதவாறு அடைத்துவிட்டார் அவர். இவ்வாறு தென் பகுதியில் சிக்கிவிட்ட அடிமைகள் உணவின்றித் தவித்தனர்.

'உணவின்றிப் பட்டினியால் மடிவதைவிட, போரிட்டு மடிவதுமேல் என்று ஸ்பார்ட்டாக்கஸ் கூறினர். மழையும் புயலும்

வீசிய ஒரு நள்ளிரவில் கிராசஸின் அகழியில் ஓரிடத்தை மண் ணால் நிரப்பி அதைக்கடந்து, மதில்களைத் தகர்த்துவிட்டு வெளி யேறினர்கள் அடிமைகள். கிராசஸால் அவர்களைத் தடுக்கமுடிய வில்லை. ஆனால், விரைவிலேயே மீண்டும் அடிமைகள் அணி யில் வேற்றுமைகள் தோன்றின. 'கிராமங்களையும் நகரங்களை யும் கொள்ளையிடக் கூடாது' என்ற ஸ்பார்ட்டாக்கஸின் கண் டிப்பான உத்தரவு பிடிக்காததால் பலர் பிரிந்து சென்றனர். திடீரென அவர்களைத் தாக்கி அனைவரையும் கொன்று தீர்த்தார்.

அச்சமயத்தில் கிரீஸிலிருந்தும், பாம்பேயின் தலைமையில் ஸ்பெயினிலிருந்தும் புதிய படைகள் வந்துகொண்டிருந்தன. அதை அறிந்தார் ஸ்பார்ட்டாக்கஸ். அவை வந்து சேரு முன் பாகவே கிராசஸ்மீது தாக்குதல் தொடுக்கத் திட்டமிட்டார். அவரது தீவீர்த் தாக்குதலைக் சமாளிக்க முடியாமல் கிராசஸின் படைகள் திணறின. கிராசஸைக் கொல்வதற்குப் பாய்ந்தார் ஸ்பார்ட்டாக்கஸ். இடையிலிருந்த இருரோமானியத் தளபதி கள் அவரது பாய்ச்சலை எதிர்த்து நிற்க முடியாமல் வெட்டுண்டு வீழ்ந்தனர். அதே சமயம் ஒரு ரோமானிய வீரன் பின்புறத்தி லிருந்து ஸ்பார்ட்டாக்கஸின் கவசமில்லாத தொடையில் ஈட்டி யைப் பாய்ச்சினான். துள்ளித்தாவிய அவ்வடிமை வீரர் ஒற்றைக் காலில் நின்றே வெகுநேரம் போராடினர். இரத்தம் இழந்து வலி குன்றி வந்த அவரை ரோமானியர் சூழ்ந்து கொன்றனர், அவரது உடலைச் சின்னபின்னப்படுத்தித் தமது ஆத்திரத்தைத் தீர்த்துக்கொண்டனர் பகைவர். தலைவனை இழந்த அவரது படை சிதறியோடியது. பாம்பேயின் படையும் அச்சமயத்தில் போர்க்களத்தில் குதித்தது. 6000 அடிமைகள் சிறைப்பிடிக்கப் பட்டனர்; கேப்புவாலிருந்து ரோம் செல்லும் சாலையில் சிலு வைகளை நட்டு (ஏசுநாதரைப் போன்றது) 6000 பேர்களையும் அவற்றின்மீது அறைந்து, மற்றவர்களுக்கு ஒருஎச்சரிக்கை யாக வைத்தது ரோம். போர்க்களத்திலிருந்து தப்பி ஓடிய அடி மைகளைத் துரத்திச் சென்று கொன்றார் பாம்பே. கான்சல் களாலும் செனேட்டாலும் சமாளிக்க முடியாத ஆபத்துக்களைப் படைத்தலைவர்கள் சமாளித்தனர். எனவே, செல்வந்தர் செனேட்டில் நம்பிக்கை யிழந்து, படைத்தலைவரின் ஆட்சியை ஆதரிக்கத் துவங்கினர்

மித்ரடேட்டஸுடன் இரண்டாவது போர், கி.மு. 83–3 : ஸ்பெயினிலும் இத்தாலியிலும் கிளர்ச்சிகளை ஒடுக்கிவந்த அதே நேரத்தில் ஆசியாவில் பாம்பிலியா (Pamphylia), பிசிடியா (Pisidia), இசௌரியா (Isauria). கப்படோஷியா ஆகியவற்றின்

பல பகுதிகளையும் வென்று (கி. மு. 78–74) தனது புதிய சிலீஷிய மாநிலத்துடன் இணைத்து வந்தது ரோம். அதே சமயத்தில், மாசிடோனியாவுக்கு வடக்கிலும்கூட அநாகரிகக்குலங்களைத் தோற்கடித்து டான்யூப்நதி வரையில் (Danuba) ரோமின் எல்லைகள் விரிவுபடுத்தப்பட்டன. இவற்றையெல்லாம் விடவும் முக்கியமானவை மித்ரடேட்டஸுடனான போர்கள்.

கி.மு. 84–ல் சல்லா ரோமுக்குத் திரும்பியபோது லிசீனியஸ் மூரேனு (Licinius Muraena) என்பவரைப் புரோபிரேட்டராகவும், லூசுல்லஸ் (Lucullus) என்பவரைக் குவேஸ்டராகவும் ஆசியாமைனரில் விட்டுவிட்டு வந்தார் முரேனுபோர் வெறியர். மித்ரடேட்டஸுடன் போரிட்டு வெற்றி யீட்ட வேண்டுமென்று துடித்துக்கொண்டிருந்தவர், ரோமின் ஆதிக்கத்தை உதறி எறிந்துவிட்டுச் சில தீவுகள் இன்னமும் சுதந்திரமாக இருந்து வந்தன. அவற்றுக்கு மித்ரடேட்டஸின் ஆதரவு இருந்தது. பெர்கமத்தில் செய்யப்பட்ட எல்லா ஏற்பாடுகளும் எழுத்து மூலமாக இல்லாமல், வாய்மூலமாகவே இருந்தன. இவற்றையெல்லாம் வைத்து மித்ரடேட்டஸுடன் பூசல்களைக் கிளப்பிச் சண்டை பிடிப்பது எளிது. முரேனு இம்முறையைத்தான் பின் பற்றினர். கப்படோஷியாவில் இன்னமும் சில பகுதிகள் மித்ரடேட்டஸின் வசமே இருப்பதாகச் சொல்லி அதற்குள் நுழைந்து கிராமங்களையும் ஆலயங்களையும் கொள்ளையிட்டு அழித்தார் அவர். மித்ரடேட்டஸ் ரோமுக்குப் புகார் செய்தார். உடனே, திரும்பிவரும்படி முரேனுவுக்கு ஆணையிட்டது செனேட். ஆனால், அதையும் அலட்சியம் செய்து மித்ரடேட்டஸை வெல்ல வேண்டுமென்பதிலேயே சுருத்தாயிருந்த மொரேனு போரைத் தொடர்ந்தார். பாண்ட்டஸின் தலைநகராயிருந்த சினோப் (Sinope) வரையில் அவரது படைகள் வந்து விட்டன. இந் நிலையில் மித்ரடேட்டஸ் எதிர்த் தாக்குதல் தொடுத்து முரேனுவைத் தோற்கடித்தார். அச்சமயத்தில் முரேனுவை ரோமுக்குத் திருப்பி அனுப்பும்படி கபீனியஸ் (Gabinius) என்பவரை அனுப்பினர் சல்லா. அவரது முயற்சி காரணமாகக் கி.மு. 81–ல் போர் நின்றது. பாண்ட்டஸுக்கும் கப்படோஷியாவுக்குமிடையில் உடன்படிக்கைகள்கையெழுத்திடப்பட்டன. மித்ரடேட்டஸுடன் போர் எதையும் துவக்கக்கூடாது என்று தனது ஆசியக் கவர்னர்களுக்கு உத்திரவிட்டார் சல்லா. இவ்வாறு கி.மு. 74 வரை அப்பகுதியில் அமைதி நிலவியது.

மூன்றாவது போர், கி.மு. 73–63; கி.மு. 74–ல் பித்தினியாவின் மன்னர் நிக்கோமெடிஸ் காலமானார். அவருக்குப்பின் பட்டமேறுவதற்கு அவர் மகன் ஒருவர் இருந்தார். எனினும்,

தமக்கே பித்தினியாவை உரிமையாக்கி இறந்தார் நிக்கோமெடிஸ் என்று கூறி, ரோமானியர் அவ்வரசைக் கவர்ந்து கொண்டனர். அதை ரோமானிய மாநிலமாக அறிவித்து, இரு கான்சல்களையும் படையையும் அங்கு அனுப்பியது செனேட். பித்தினியா பாஸ்பரஸ், ஹெல்லஸ்பாண்ட் (Bosporus. Hellespont) ஆகியவற்றின் கரைகளில் அமைந்து, கருங்கடலின் நுழை வாயிலில் இருந்தது; பிரிஜியா கலேஷியா (Galatia) ஆகிய அரசுகளின் நுழை வாயிலிலும் இருந்தது அது. இதனால், 'பித்தினியாவில் ரோமின் ஆதிக்கம் நிறுவப்பட்டால் தனது பாதுகாப்புக்கும் கடல் வாணிபத்துக்கும் ஆபத்து நேரும் என்று மித்ரடேட்டஸ் அஞ்சினர். எனவே, நிக்கோமெடிஸின் பிள்ளையின் கோரிக்கைகளை ஆதரித்து, ரோம் அவ்வரசை இணைத்துக் கொண்டது சிறிதும் நேர்மையற்ற செயல் என்றார் அவர். இதையெல்லாம் எதிர்பார்த்த ரோமும் ஏற்கெனவே தனது தரைப் படையையும் கடற்படையையும் அப்பகுதிக்கு அனுப்பியிருந்தது. இவ்வாறு ரோமுக்கும் மித்ரடேட்டஸுக்கு மிடையே போர் மூண்டது.

ஆசியாவுக்கு அனுப்பப்பட்ட இருகான்சல்களும் (கி.மு. 73) உடனே போர் துவக்கினர். அவர்களில் ஒருவரான லிசீனியஸ் லூசுல்லஸ் தரைப்படைக்கும், மற்றவரான அவுரேலியஸ் கோட்டா (Aurelius Cotta) கப்பற்படைக்கும் தலைவராயிருந்தனர். பல ஆண்டுகள் நடைபெற்றது இப்போர்.

பாண்ட்டஸின் கடற்படை ரோமின் கடற்படையைத் தோற்கடித்தது. அதே சமயத்தில் செர்ட்டோரியஸால் ஒற்றைக் கண் மேரியஸ் (Marius the One-eyed) என்பவர் போட்டி-புரோகான்சலாக ஆசியாவுக்கு அனுப்பப்பட்டார். அவரது தலைமையின்கீழ் ரோமுக்கு எதிராகக் கிரீஸைத் தூண்டிவிடவும் மித்ரடேட்டஸ் முயன்றார். ஆனால், ரோமானியத் தரைப் படைகள் அவரைப் பலவிடங்களில் முறியடித்தன. ஆரம்பத்தில் 150,000 பேர்களைக் கொண்ட அவரதுபடை அவ்வாண்டின் இறுதியிலேயே 20,000 ஆகக் குறைந்தது. அடுத்தடுத்துப் பல புயல்களில் சிக்குண்டு அவரது கடற்படையும் சேதமுற்றது.

கி.மு. 72-ல் மேரியஸ் சிறைப்பிடிக்கப்பட்டார்; அதே ஆண்டில் செர்ட்டோரியஸும் ஸ்பெயினில் கொலையுண்டார். நிக்கோமீடியாவை (Nicomedia) முற்றுகையிட்ட மித்ரடேட்டஸ் முறியடிக்கப்பட்டு, உயிர்தப்பி ஓட வேண்டியதாயிற்று. ரோமானியருக்குச் சொந்தமான சிலீஷியாவைத்

தாக்கிய அவரது வேறொருபடையும் ஜூலியஸ் சீசரால் தோற் கடிக்கப்பட்டது. ரோட்ஸ் தீவில் (Rhodes) சொற்பொழிவுக் கலையை (rhetoric) அப்பொழுது பயின்று கொண்டிருந்த சீசர், தன் சொந்த முயற்சியால் ஒரு படையைத் திரட்டிக்கொண்டு போருக்கென ஆசியா வந்திருந்தார். ஏஜியன் கடலிலிருந்த தீவுகளை ரோமுக்கு எதிராகக் கிளப்பிவிடுவதற்கென்று மித்ர டேட்டஸால் அனுப்பிவைக்கப்பட்ட பெரும்பொருளும் ரோமா னியர் கையில் சிக்கியது. கலேஷிய நகரங்களிலிருந்தும் அவரது படைகள் தோற்றோடின. இவ்வாறு முதலிரண்டு ஆண்டுகளிலும் மித்ரடேட்டஸுக்குப் பெருந்தோல்விகளே ஏற்பட்டன.

கி.மு. 71-ஆம் ஆண்டின் துவக்கத்தில் லூசுல்லாஸிடம் தோற்று ஓடிய மித்ரடேட்டஸ், ஆர்மீனியாவின் மன்னரான டைகிரேனிஸ் (Tigranes) என்பாரிடம் அடைக்கலம் புகுந்தார். அவரைத் தன்னிடம் ஒப்படைக்குமாறு லூசுல்லஸ் கோரினர். இக்கோரிக்கைக்கு இணங்க மறுத்தார் டைகிரேனிஸ். இதற் கிடையில் சினேப்பையும் கைப்பற்றி ஆர்மீனியாவை நோக்கி முன்னேறினர் லூசுல்லஸ். ஆர்மீனிய மன்னரால் தோற்கடித்து விரட்டப்பட்டிருந்த சிரியாவின் மன்னரான ஆன்ட்டியோக்கஸ் ஏஷியாடிக்கஸ் (Antiochus Asiaticus) ரோமானியரால் மறு படியும் அரியணையில் அமர்த்தப்பட்டு அவர்தம் நண்பரானர். சிரியாவிலிருந்து ஆர்மீனியப் படைகள் விரட்டப்பட்டன கி.மு. 67-68).

ஆர்மீனியாவையும் கைப்பற்றுவதற்கென்று மத்திய ஆசி யாவுக்குள் நுழைந்தார் லூசுல்லஸ். ஆனல், பல ஆண்டுகள் தொடர்ந்து போரிட்ட அவரது துருப்புக்கள் களைத்துப் போயின. அவற்றின் முணுமுணுப்பும், கடுங்குளிரும், ஆர்மீ னியரின் எதிர்ப்பும் லூசுல்லஸை வந்தவழியே திரும்பும்படி செய்தன. அவருக்கும், அவரது மைத்துனரும் துணைத்தளபதியு மான குளோடியஸுக்கும் (Clodius) இடையில் பகைமை வளர்ந்தது. இதை நன்கு பயன்படுத்திக்கொண்டார் மித்ர டேட்டஸ்; தான் இழந்த பகுதிகளை மீண்டும் கைப்பற்றத் துவங்கினர். ஆர்மீனிய மன்னர் டைகிரேனிஸும் தாம் இழந்த பகுதிகளை மீண்டும் வென்றார். லூசுல்லஸின் வெற்றிகள் அனைத்துமே வீணாகிவிடும்போ லிருந்தது.

அச்சமயத்தில், லூசுல்லஸின் பெருவெற்றிகளை எல்லாம் அறிந்த செனேட், அவற்றின்மூலம் தனக்குக்கிடைத்த புதிய பிராகேசங்களை நிர்வகிப்பதற்கான ஏற்பாடுகளைச் செய்வதற்

கென்று பத்து கமிஷனர்களை அனுப்பியது. அவற்றை ஆளு வதற்கும் படைத்தலைவராக விளங்குவதற்கும் அசீலியஸ் (Acilius) என்பவரைப் புரோகான்சலாக அது அனுப்பியது. 'தனக்கெதிரான சதியே இது' என்று ஆத்திரங்கொண்டார் லூசுல்லஸ். அவரது படைகளில் பெரும்பகுதி அசீலியஸ் பக்கம் சென்று சேர்ந்து கொண்டது. ஆயினும் முறைப்படி பொறுப்பை அவரிடம் ஒப்படைக்க மறுத்து, ஒரு சிறு படை யுடன் கலேஷியா சென்றுவிட்டார் லூசுல்லஸ். கி.மு. 66-ல் பாம்பே வரும்வரையில் படைத் தலைமையை அவர் விட்டுக் கொடுக்கவே இல்லை.

பாம்பேயின் வருகை: சல்லாவுக்கு ஆதரவாகப் போரிட்டு, மக்கள் கட்சியின் தோல்விக்கு ஒருமுக்கியமான காரணமாக இருந்தவர் பாம்பே என்பதை ஏற்கெனவே பார்த்தோம். 'மகா பாம்பே' (Pompeius Magnus) என்று சல்லாவே அவரை அழைத்ததாகக் கூறப்படுகிறது. சல்லாவின் காலத்திலேயே அவரது செல்வாக்குப் பெருகியது. செர்ட்டோரியஸுக் கெதி ரான போரில் வென்று ஸ்பெயினிலிருந்து ரோம் திரும்பி, கி.மு. 70-ல் கான்சலாகத் தேர்ந்தெடுக்கப்பட்டார் பாம்பே. இது சல்லாவின் சட்டத்தை மீறிய செயலாகும். ஏனெனில், கான்ச லாவதற்கான வயதோ, அல்லது ஏற்கெனவே குவேஸ்டராகவும் பிரேட்டராகவும் இருந்து பணியாற்றிய தகுதியோ பாம்பே யுக்குக் கிடையாது. மேலும், அவரது பதவிக்காலத்தில் சல்லா வின் சட்டங்கள் சிலவும் ரத்துசெய்யப்பட்டன. டிரிபியூன்கள் மற்றப் பதவிகளைப் பின்னர் வகிக்கமுடியாது என்று சல்லா விதித்திருந்த கட்டுப்பாடு இப்பொழுது அகற்றப்பட்டது. செனேட்டர்கள் மட்டுமே ஜூரர்களாக இருக்கவேண்டும் என்ற விதியும் நீக்கப்பட்டது; செனேட்டர்களும் ஈக்வைட்டு களும்அவர்களுக்கு அடுத்த வகுப்பினரும் தலைக்கு மூன்றிலொரு பங்கு இடத்தை ஜூரர் குழுவில் பெறுவர் என்று புதிய சட்டம் இயற்றப்பட்டது. இத்தகைய சட்டங்களால் சில குறுகிய மனப்போக்குடைய பிரபுக்கள் பாம்பேயை வெறுத்தனர். அச் சமயத்தில் பாம்பேயுக்கு ஆதரவாகக் கபீனியஸ் (Gabinius) என்ற டிரிபியூன் ஒருவர் கி.மு. 67-ல் கொண்டுவந்த மசோதா ஒன்றை அவர்கள் எதிர்த்தனர்.

கிழக்கு மத்திய தரைக்கடலில் கடற்கொள்ளைக்காரர்களின் நடமாட்டம் அதிகமா யிருந்துவந்தது. அவர்களுக்கெதிராகப் பலமுறை தாக்குதல்கள் தொடுக்கப்பட்டன. எனினும், அவர் களால் ஏற்பட்ட தொல்லைகளும் ஆபத்துக்களும் குறைந்த

பாடில்லை. சான்ருக, ஜூலியஸ் சீசர் ரோட்ஸ் தீவுக்குச் சென்று கொண் டிருந்தபொழுது கடற் கொள்ளைக்காரர் அவரைச் சிறைப்பிடித்தனர். கிரீஸுக்குச் சென்று, பெரும் பொருளைப் பெற்று அவர்களுக்குத் தந்த பின்னரே அவர் விடுவிக்கப் பட்டார். உடனே, பல கப்பல்களைத் திரட்டிக்கொண்டு, அவர் களை விரட்டிக்கொண்டே ஆசியா மைனருக்குச் சென்று, பெர்க மத்தில் அவர்களைச் சூழ்ந்து அழித்தொழித்தார் சீசர். ஆயினும், அவர்களின் கொள்ளைகள் குறையவில்லை. கடல் வாணிபம் பெரிதும் பாதிக்கப்பட்டது.

இந்நிலையில்தான், கபீனியஸ் ஒரு மசோதாவைக் (Lex Gabinia) கொண்டு வந்தார். மத்திய தரைக் கடல் முழுவதிலும். உள்நாட்டில் கடற்கரையிலிருந்து ஐம்பதுமைல் வரையிலும் எல்லா அதிகாரங்களையும் ஒருவர்வசம் மூன்றுண்டுகளுக்கு ஒப்புவிக்க வேண்டுமென்றும், இருநூறு கப்பல்களையும், அவர் கேட்கின்ற அளவுக்குப் பணத்தையும் கொடுக்க வேண்டு மென்றும், அப்பொழுதுதான் கடற் கொள்ளைக்காரர்களை அறவே தீர்த்துக்கட்ட முடியுமென்றும் அம்மசோதா கூறியது. பாம்பேதான் அத்தகைய பொறுப்பை மேற்கொள்ள வேண்டு மென்று பலரும் கருதினர். அம்மசோதா கோரியதை விடவும் அதிகக் கப்பல்களும் அதிகாரங்களும் அவருக்கு அளிக்கப் பட்டன. அவருக்கு எதிரான பிரபுக்களின் எதிர்ப்புமுறியடிக்கப் பட்டது. அவருக்கு உதவியாக இருபத்து நான்கு துணைத் தளபதிகளும், 120,000 போர்வீரர்களும் 500 குதிரை வீரர்களும் அவர்வசம் ஒப்புவிக்கப்பட்டனர்.

பாம்பேயும் தமது கடமையை வெகு விரைவில் திறமை யாகச் செய்துமுடித்தார். கடற்கொள்ளைக்காரர்களின் நட வடிக்கைகள் அதிகமாகக் காணப்பட்ட சிலீஷியக் கடற்கரை முழுவதிலும் அமைதியை நிலைநாட்டினார். கி.மு. 66-ன் துவக் கத்தில் தனது வேலையை முடித்துக்கொண்டு சிலீஷியாவில் தங்கியிருந்தார்.

ரோமில் பாம்பேயின் புகழ் கொடிகட்டிப் பறந்தது. அச் சமயத்தில் மித்ரடேட்டஸுக்கு எதிராகவும் படைத்தலைமையை அவருக்கே அளிக்க வேண்டுமென்று மேன்லியஸ் என்ற டிரிபியூன் ஒருவர் பிரரேபித்தார். பிரபுக்கள் கட்சி அதை எதிர்த்தாலும் பெருவாரியான மக்கள் அதை ஆதரித்தனர். பாம்பே வெற்றிபெற்றார்.

மித்ரடேட்டஸுக்கு எதிராகப் படையுடன் புறப்பட்டார் அவர். ஆர்மீனியமன்னருக்கும் மித்ரடேட்டஸுக்கும் இடையில்

அதுசமயம் வேற்றுமைகள் தோன்றியிருந்தன. பாம்பேயின் கப்பல்கள் ஆசியா மைனர்க் கடற்கரை முழுவதிலும் வலிமை பெற்று விளங்கியது. பார்த்தியாவுடன் (Parthia) மித்ரடேட்டஸ் செய்துகொள்ள முயன்ற நட்புடன்படிக்கையைப் பாம்பேயின் வெற்றிகள் குலைத்தன. தன்னுட்டை இழந்து, தனது மருமகனை ஆர்மீனிய அரசர் டைகிரேனிஸின் உதவியைக் கோரி ஓடினர் மித்ரடேட்டஸ். அவ்வுதவி கிடைக்காததால் கருங்கடலைச் சுற்றிக்கொண்டு கால்சிஸ் (Colchis) பிரதேசத்தின் வழியாக, தன் மகன் மகாரேஸ் (Machares) ஆண்டுவந்த பகுதிகளுக்குச் சென்றார். அவரைத்தேடி வெகுதூரம் சென்ற பாம்பே வெறுங்கையோடு திரும்பினர். யூப்ரட்டீஸ் நதியிலிருந்து மத்திய தரைக்கடல் வரையிலும், வடக்கில் அமானுஸ் (Amanus) தாரஸ் (Taurus) ஆகிய மலைகள் முதல் தெற்கில் அரேபியப் பாலைவனம் வரையிலான பிரதேசம் முழுவதும் பாம்பேயால் சிரியா (Syria) என்ற பெயரோடு ரோமானியரின் புதிய மாநிலமாக்கப்பட்டது. டைகிரேனிஸால் விரட்டப்பட்டு, தம்மால் அரியணையி லமர்த்தப்பட்ட சிரியா மன்னர் ஆண்ட்டியோக்கஸை அப்பொழுது மீண்டும் அகற்றிவிட்டு அவரது பிரதேசத்தைக் கவர்ந்துகொள்ளத் தீர்மானித்தனர் ரோமானியர். அத் தீர்மானத்தைச் செயல்படுத்தினர் பாம்பே. அதே சமயத்தில்தான் பாலஸ்தீனத்தையும் எருசலம் நகரையும் (Jerusalem) கூட அவர் கைப்பற்றினர். இரண்டு மாதக் கடும் முற்றுகைக்குப் பிறகு, இருதரப்பிலும் ஏராளமானவர் மடிந்த பின்னரே எருசலம் பிடிபட்டது (கி.மு. 63 டிசம்பர்).

மித்ரடேட்டஸின் மரணமும் (கி.மு. 63) ஆசியாவில் நிர்வாக ஏற்பாடுகளும் ; மித்ரடேட்டஸின் மகன் மகாரஸ், தன் தந்தைக்கெதிராகக் கலகம் செய்து பாண்ட்டிகேப் பேயத்தைத் (Panticapaeum—இன்றைய Kertch) தலைநகராகக் கொண்டு ஆட்சிபுரிந்து வந்தார். அந்நகரத்தைத் தாக்கிக் கைப்பற்றினர் மித்ரடேட்டஸ். மகாரஸ் தற்கொலை செய்து கொண்டார். மீண்டும் ஒரு படையை அங்குத் திரட்டிக்கொண்டு டான்யூப் நதிப் பள்ளத்தாக்கு வழியாக இத்தாலியை நோக்கிச் செல்லத் திட்டமிட்டார் மித்ரடேட்டஸ். ஆனால், பாண்டிகேப்பேயத்தை விட்டு வெளியேற முடியாமல் அவரை முற்றுகையிட்டது ரோமானியக் கடற்படை. அந்நகரின் மக்களும் பஞ்சத்துக்கும் பட்டினிக்கும் ஆளாயினர். இந்நிலையில், உயிருடனிருந்த அவரது ஒரே மகனை பார்னசெஸ் (Bharnaces) என்பவர் தந்தைக்கெதிராகக் கிளம்பினர். வேறுவழியற்ற நிலையில் கி.மு. 63-ல் தற்கொலை செய்துகொண்டார் மித்ரடேட்டஸ்.

பாலஸ்தீனத்தில் போரில் ஈடுபட்டுக்கொண் டிருந்த பாம்பேயுக்கு இச்செய்தி கிடைத்தது. எரூசலத்தின் வீழ்ச்சிக்குப் பிறகு, ஆசியாவில் தாம் பெற்ற புதிய பிரதேசங்களில் நிர்வாக ஏற்பாடுகளைச் செய்ய முற்பட்டார். ரோமானிய செனேட்டை எதுவும் கேட்காமல், அவரே இவ்வேறுபாடுகளைச் செய்தது கவனிக்கத் தக்கது. அவர் செய்த ஏற்பாடுகள் கீழ் வருமாறு :

1. இரண்டு புதிய மாநிலங்கள் மேற்கு ஆசியாவில் நிறுவப்பட்டன.

(அ) பித்தினியாவும் பாண்ட்டஸும் சேர்த்து ஒரு மாநிலமாக அமைக்கப்பட்டது. சில நேரங்களில் பித்தினியா என்றும், சில நேரங்களில் பாண்ட்டஸ் என்றும் அது அழைக்கப்பட்டது. நிக்கோமெடிஸின் அரசும், மித்ரடேட்டஸின் அரசும் சேர்ந்து அமைந்தது இம்மாநிலம்.

(ஆ) வடக்கில் யூப்ரட்டீஸ் நதியின் தோற்றுவாயிலிருந்து, தெற்கில் எகிப்து, அரேபியப் பாலைவனம் வரை சிரியா என்ற இரண்டாவது மாநிலம் பரந்திருந்தது.

இந்த மாநிலமானது மிகவும் விரிவானதாகவும் பல்வேறு மக்களைக் கொண்டதாகவும் இருந்தது. அதனால் முழுவதையும் ஒரே நிர்வாகத்தின்கீழ் கொண்டு வருவது இயலாது. எனவே, பல பிரதேசங்களும் நகரங்களும் சுதந்திரமானவையாக, அதாவது ரோமானிய அதிகாரிகளால் நேரடியாக நிர்வகிக்கப்படாதவையாக, சுயாட்சி உரிமை பெற்றவையாக ஆக்கப்பட்டன. ரோமுக்குத் திறைகளை அவை செலுத்தவேண்டும். யூதர்கள் வாழ்ந்த பாலஸ்தீனமும் எரூசலமும் இவ்வாறே சுதந்திரமாக விடப்பட்டன. டைர், (Tyre) சிடான் (Sidon) ஆகிய நகரங்களும்கூட இவ்வாறே சுயாட்சி உரிமை பெற்று, திறை செலுத்தி வந்தன. அவற்றின் கடலோரப் பிரதேசங்கள் கைப்பற்றப்பட்டு மாநிலத்தோடு சேர்த்துக் கொள்ளப்பட்டன. உட்பகுதியிலிருந்த வேறு பல சிற்றரசர்களும்கூடச் சுதந்திர மானவர்களாகவும் ரோமுக்குத் திறை செலுத்தி அதன் மேற்பார்வைக்கு உட்பட்டவர்களாகவும் ஆயினர். சிரியா மாநிலத்தைக் கவர்னராகி ஆளுவதற்கென ஏமிலியஸ் ஸ்காரஸ் (Aemilus Scaurus) என்பவரைப் பாம்பே நியமித்தார்.

2. மேற்கு ஆசியாவின் இதரபகுதிகள் பழைய அரசர்களிடமே மறுபடியும் ஒப்படைக்கப்பட்டன. அதே சமயம் தேவைக்கு ஏற்றபடி ஒருசில மாறுதல்களையும் பாம்பே செய்தார். அவ்வரசர்கள் அனைவருமே பாம்பேயாலேயே தமது அரியணையையும் அரசுகளையும் பெற்றதால், ரோமின் ஆதிக்கத்துக்குக் கட்டுப்பட்டே ஆள வேண்டியவர்களாக இருந்தனர். அவர்கள் வருமாறு:

(அ) ஆர்மீனியாவில் டைகிரேனிஸ் மீண்டும் அரசராக்கப்பட்டார்.

(ஆ) கப்படோஷியாவில் அரியோபார்சானிஸ் அரசராக்கப்பட்டார்.

(இ) பாப்லகோனியாவின் ஒருமா நிலத்தில் அட்டாலஸ் அரசராக்கப்பட்டார்.

(ஈ) அரிஸ்டார்க்கஸ் (Aristarchus) என்பவர் காலிசியின் மன்னராக்கப்பட்டார்.

(உ) கலேஷியாவானது மறுபடியும் பழைய அரசரான தீயோதாருஸ் (Deiotarus) என்பாரிடம் ஒப்படைக்கப்பட்டது.

(ஊ) மித்ரடேட்டஸின் மகனை பார்ஞசெஸ் பாஸ்பரஸின் அரசராக்கப்பட்டார்.

(எ) இவ்வாறு வேறு பல அரசுகளும்கூட ரோமின் கட்டுப்பாட்டின் கீழ் வந்தன. கருங்கடற் கரையிலும் மேற்கு ஆசியாவிலும் பல நகரங்கள் சுதந்திரம் பெற்றன.

இங்ஙனம் மேற்கு ஆசியாவில் ரோமின் ஆதிக்கம் பரவுவதற்குப் பாம்பே ஒரு காரணமாயிருந்தார்.

பாம்பே ரோமுக்குத் திரும்புதல், கி.மு. 62 : மேலே கண்டவாறு பாம்பேயால் மேற்கு ஆசியாவில் செய்யப்பட்ட அரசியல் நிர்வாக ஏற்பாடுகள் அனைத்தும் ரோமானிய அரசாங்கத்தின் அல்லது செனேட்டின் அனுமதியையோ ஆலோசனைகளையோ பெற்றுச் செய்யப்பட்டவை அல்ல. எனவே அவற்றைச் செனேட் அங்கீகரிக்க வேண்டும்; இல்லையேல் சட்டப்படியானவையாக அவை இருக்க முடியாது. இந்நிலையில்

செனேட்டில் பாம்பேயுக்கு எதிராக ஒருகட்சி பலம் பெற்று விளங்கியது.

இந்நிலையில் பாம்பே தமது பணியை முடித்துக்கொண்டு மேற்கு ஆசியாவிலிருந்து இத்தாலிக்குத் திரும்பினர். மக்களிடையே அவருக்கு மாபெரும் செல்வாக்கு இருந்தது. கடற் கொள்ளைக்காரர்களை ஒழித்துக்கட்டி, ரோமின் கடல் வாணிகத்துக்கு இருந்துவந்த ஆபத்துக்களை எல்லாம் அகற்றினர். ரோமின் கருவூலத்துக்கு ஏராளமான செல்வத்தையும் அதன் வணிகர்களுக்கு ஏராளமான இலாபத்தையும் பெற்றுத்தரக்கூடிய மேற்கு ஆசியாவை வென்று, ரோமப் பேரரசை விரிவு படுத்தி இணையற்ற வீரராக நாடு திரும்பினர் பாம்பே. அரசின் கருவூலத்துக்கெனப் பெருஞ் செல்வத்தையும் ஆசியாவிலிருந்து கொள்ளையடித்துக் கொண்டுவந்தார். அதுமட்டு மன்றித்தமது வெற்றி ஊர்வலத்தில் தாம் ஏறிச்செல்லும் வாகனத்தை இழுத்துச் செல்வதற்காக ஆசியாவிலிருந்து பல அரசர்களையும் அரசகுமாரர்களையும் சிறைப்பிடித்து வந்தார்.

இத்தாலிக்கு வந்ததும் பாம்பே தமது படைகளைக் 'கலைப் பாரா, மாட்டாரா' என்று பல பிரபுக்கள் அஞ்சிக் கொண்டிருந்தனர். ஆனால், அவர் உடனேயே தனது படைகளைக் கலைத்து விட்டார். கி.மு. 62-ல் ரோமில் நுழைந்த பாம்பே அடுத்த ஆண்டில் செப்டம்பர் மாதத்தில்தான் வெற்றி ஊர்வலம் நடத்த முடிந்தது. அதனால் அவரது ஏற்பாடுகளைப் பற்றிப் பூசல்கள் துவங்கி விட்டன.

17. ரோமில் ஆதிக்கப் போட்டியும் அரசியல் சீர்கேடுகளும்

கி.மு. முதல் நூற்றாண்டில் பேரரசிலும் அரசியலிலும் நிலவிய சீர்கேடுகள்: ரோமப் பேரரசில், குறிப்பாக இத்தாலியில் ஒருசில பெருஞ் செல்வந்தர்களின் கையிலேயே நிலமனைத்தும் இருந்தது. அவர்களது விசலாலமான பண்ணைகளை அடிமைகள் பயிரிட்டுவந்தனர். முன்பு கிராமப்புறங்களிலிருந்த சுதந்திரமான சிறுகுடியானவர்களும் மற்றவர்களும் தமது நிலங்களையெல்லாம் கடனுக்காகப் பிரபுக்களிடம் விற்றுவிட்டு, நகரங்களுக்குச் சென்று குடியேறினர். அவ்வாறு பலர் குடியேறியதால், ரோம் நகரில் ஏழைகளின் கூட்டம் பெருகியது. ரோமில் மலிவாகத் தானியங்களை விநியோகிக்கும் முறை துவங்கியதுமுதல் அக்கூட்டம் மேலும் மேலும் பெருகியது.

அதைக் குறைப்பதற்காகவே, பொது நிலங்களை ஏழைகளுக் கிடையில் பகிர்ந் தளித்தனர் பல டிரிபியூன்கள். இவ்வாறு இத்தாலியில் பல்வேறு இடங்களில் அவர்கள் குடியேற்றப்பட்டனர். ஆனல், இதனல் மட்டும் பிரச்சனை தீர்ந்து போகவில்லை. ரோமில் வறியவர்களின் தொகை மேலும் மேலும் கூடிவந்த வேளையில், அவர்களிடையில் பிரித்துக் கொடுப்பதற்கான பொதுநிலங்கள் இத்தாலியில்அருகிவந்தன. இந்நிலையில்தான் பாம்பே தமது போர் வீரர்களுக்கும் அவ்வாறு பொது நிலங்கள் பிரித்துக்கொடுக்கப்பட வேண்டுமென்று கோரினர். இச்சிக்கல்தான் சீசரின் கட்சியில் அவர் சேருவதற்கு முக்கிய காரணமாக இருந்தது என்பதைப் பின்னல் பார்ப்போம்.

மாநிலங்களில் கவர்னர்கள் மக்களைக் கொள்ளையடித்தும், கசக்கிப் பிழிந்தும் பெரும் பொருள் சேர்த்துவந்தனர். பின்னல் உயர்ந்த பதவிகளுக்குப் போட்டியிட அவர்கள் விரும்பினர்.

அதற்காக மக்களின் வாக்குகளைப் பெறுவதற்கு விருந்து, விளையாட்டுப் போட்டி முதலிய பல கேளிக்கைகளை ரோமில் சொந்தப்பணத்தில் அவர்கள் நடத்த வேண்டியிருந்தது. அதற்கு வேண்டிய பணத்தைமட்டுமன்றி மாநிலங்களைச் சுரண்டிப் பெருஞ்செல்வம் திரட்டியதற்காகப் பின்னர் தொடுக்கப்படப் போகிற வழக்கிலிருந்து தப்பிப்பதற்கென்று ஜூரர்களுக்கு இலஞ்சம் கொடுக்கத் தேவையான பணத்தையும், தம் ஆடம்பரத்துக்கான பணத்தையும் மாநில மக்களிடமிருந்தே அவர்கள் கரந்தனர். அதேபோல் புரோகான்சல்கள், குவேஸ்டர்கள் துணைத்தளபதிகள் ஆகியோரும் பெருஞ் செல்வம் மாநிலங்களிலிருந்து ஈட்டி வந்தனர்.

மாநிலங்களில் வரிவசூல் அதிகாரிகள் (Cublicani) செய்து வந்த அக்கிரமங்களை வருணிப்பது கடினம். சட்டத்தின்படி இவர்களது சுரண்டலுக்கெதிராக மாநில மக்களுக்கு எவ்விதப் பாதுகாப்பும் இல்லை. ஆயினும், மாநில மக்கள் கிளர்ந்தெழாதவாறு ரோமின் துருப்புகள் அவர்களை ஒடுக்கிவைத்திருந்தன. ஆனால், இந்த ஊழல்கள் ரோமின் அரசியல் நெறிகளையே குலைத்தன. மாநில அதிகாரிகளாக ஆவதற்கென்று கடுமையான போட்டியினைச் செல்வந்தர்களுக் கிடையில் இவை தோற்றுவித்தன.

தீவிர கட்சிப் பூசல்கள்: ரோமானியக் குடியரசில் குடிமக்கள் அனைவருக்கும் வாக்குரிமை இருந்ததாயினும், ஆட்சிப் பொறுப்பைப் பெற்றிருந்தவர்கள் ஒரு சில பிரபுக் குடும்பங்களே என்பதை ஏற்கெனவே கண்டோம். செனேட்டர்களாக இருந்தவர்களும் பெரும்பாலும் அவர்களே. இப்பிரபுக்களின் கட்சிக்கு (Optimates) எதிராக ஈக்வைட்டுகளின் தலைமையில் மற்றவர்கள் கூடினர் (Populares). பொது நிலங்களைப் பங்கிட்டுக் கொடுத்தல், மலிவான விலையில் தானியவிநியோகம், நில உச்சவரம்புச் சட்டம், நீதி மன்றத்தில் ஜூரர் பதவிகள் முதலிய பல விஷயங்களில் இவ்விரு கட்சிகளுக்கும் நெடுங்காலம் கடுமையான மோதல்களும், அவற்றின் விளைவாகக் கிளர்ச்சிகளும் கொலைகளும் நடைபெற்றுங்கூட, பிரபுக்களே இறுதியில் வென்றனர். வாணிபம், வரிவசூல் முதலிய பலவழிகளில் பெருஞ்செல்வம் திரட்டிய ஈக்வைட்டுகளும் விட்டுக் கொடுக்காமல் போராடினர். இந்த வகுப்பு பூசல்தான் ரோமில் குடியரசின் வீழ்ச்சிக்குக் காரணமாயிருந்தது. இவ்வாறு கி.மு. முதலாம் நூற்றாண்டில் தொடங்கிய அரசியல் ஆதிக்கப் போட்டியில் இரு கட்சிக்கும் தலைமை தாங்கி நடத்துவதற்குப்

பல படைத் தலைவர்கள் எழுந்தனர். மேரியஸ், சல்லா ஆகியோரின் வழியைப் பின்பற்றிக் கடுமையான போட்டிகளிலும் போர்களிலும் அவர்கள் ஈடுபட்டனர். அவர்களைப்பற்றி அடுத்துக் கவனிப்போம்.

ஜூலியஸ் சீசர், கி.மு. 101–44: கயஸ் ஜூலியஸ் சீசர் (Goius Julius Cæsar) கி.மு. 100-ல் அல்லது 101-ல் செல்வாக்கு மிக்க, பழம் பெரும் பெட்ரீஷியக் குடும்பம் ஒன்றில் பிறந்தார். ஆயினும், அவர் ஆரம்பத்திலிருந்தே பொதுமக்கள் கட்சியில் அதிக ஈடுபாடு கொண்டிருந்தார். அவரது அத்தையைத்தான் மேரியஸ் மணந்திருந்தார். மக்கள் கட்சியின் பெருந்தலைவராக விளங்கிய சின்னாவின் மகளைச் சீசர் மணந்திருந்தார். சல்லா சர்வாதிகாரியான பிறகு சின்னாவின் மகளை விலக்கிவிட்டு, வேறு ஒரு பெண்ணைத் திருமணம் செய்து கொள்ளுமாறு சீசரை வற்புறுத்திய போதிலும் அதற்கு அவர் இணங்கவில்லை. அவருக்கு மரண தண்டனை விதித்தார் சல்லா. ஆனால், தமது செல்வாக்குமிக்க சுற்றத்தாரின்தலையீடுகாரணமாகச் சீசர் உயிர் தப்பினார். தகராறுகளைத் தவிர்ப்பதற்காக அவர் ரோமை விட்டே வெளியேறினார். ஆசியாவில் லெஸ்பாஸுக்கு (Lesbos) எதிரான போர்களில் பங்கு கொண்டு தமது படைப் பயிற்சியை அவர் அங்கு துவக்கினார் (கி.மு. 81–80).

சல்லாவின் மரணத்துக்குப்பின் ரோம் திரும்பிவந்து சீசர் மாசிடோனியக் கவர்னராயிருந்த ஒருவரின் ஊழல்கள் குறித்து நடைபெற்ற வழக்கில் மக்கள் கட்சியின் சார்பில் வாதித்தார். அவரது பேச்சுத் திறமை பலரையும் கவர்ந்தது. ரோமில் சொற்பொழிவுத் திறமையால் பலவற்றையும் சாதிக்கலாம் என்பதை உணர்ந்து, ரோட்ஸ் தீவில் அப்போலோனியஸ் (Apollonius) என்பவரால் நடத்தப்பட்டு வந்த புகழ் பெற்ற 'பேச்சுக் கலைப் பள்ளி'க்குச் சென்று பயின்றார். (கி.மு. 75–74) என்பதை ஏற்கனவே கண்டோம்.

அங்கிருந்து அவர் ஆசியாமைனர் சென்று கடற்கொள்ளைக் காரர்க்கெதிராகவும், மித்ரடேட்டஸுக் கெதிராகவும் போர் களில் ஈடுபட்டார். கி.மு. 73-ல் மீண்டும் ரோம் திரும்பி, பொது மக்கள் கட்சியின் ஆதரவோடு பதவிகளுக்கு போட்டியிட்டார். தூரத்து ஸ்பெயினுக்கு குவேஸ்டராகச் சென்று, கி.மு. 67-ல் ரோமுக்கு மீண்டார். கடற் கொள்ளைக்காரர்களை ஒழித்துக் கட்டுவதற்கும், மித்ரடேட்டஸுக்கு எதிரான போரில் படைத் தலைமை பூணுவதற்கும், ஏராளமான அதிகாரங்களைப் பாம்பே

யுக்குக் கொடுப்பது பற்றிய விவாதம் அப்பொழுது ரோமில் நடந்தது. அதில் பாம்பேயின் கட்சியை ஆதரித்தார் சீசர்.

பல பதவிகளுக்குப் போட்டியிட்டு, ஏராளமான பொருளைச் செலவு செய்து, கடனில் மூழ்கி அவர் அதிலிருந்து மீளுவதற்கென்று தான் வகித்த பதவிகளைப் பயன்படுத்தி லஞ்சத்திலும் சுரண்டலிலும் ஈடுபடவேண்டியதாயிற்று. கி.மு. 62-ல் பிரேட்டராகவும், கி.மு. 61-60-ல் தூரத்து ஸ்பெயினில் புரோபிரேட்டராக வும்பதவி வகித்தார். ஸ்பெயினில் மக்களைச் சுரண்டியும் அரசாங் கப்பணத்தைக் கையாடியும் பெரும் பொருள் ஈட்டினார்.ஸ்பெயி னில் பல போர்களிலும் ஈடுபட்டு வென்றார். ஆயினும், ரோமுக் குத் திரும்பியதும், வெற்றி ஊர்வலம் நடத்தும் பெருமையை அவருக்கு அளிக்க மறுத்தது செனேட். இவ்வாறு ஜூலியஸ் சீசர் செனேட்டுக்குப் பகையானார். (அதே சமயத்தில், ஆசியா வில் பாம்பே செய்திருந்த அரசியல், நிர்வாக ஏற்பாடுகளையும் ஏற்றுக்கொள்ளமல் காலங் கடத்தி, அவரது பகையையும் செனேட் சம்பாதித்துக் கொண்டது.)

மகா பாம்பே, கி.மு. 106-48: இவரது (Gnalus pompeius Magnus) எழுச்சியைப் பற்றி ஏற்கெனவே விரிவாகப் படித் தோம். மேரியஸைப்போலப் போர்களிலேயே அவரது திறமை யும் வெற்றியும் அடங்கியிருந்தன. செனேட்டர்களின் அரச தந்திரத்துக்கு ஈடு கொடுக்கக்கூடிய அரசியல் திறனைச் சீசரைப் போல் அவர் பெற்றிருக்கவில்லை. ஆயினும், சீசரைப்போல் அவருக்கும் ஆதிக்க ஆசைகள் நிறைய இருந்தன. எனவே, ஆரம்பத்தில் இருவருமே 'மக்கள் கட்சியைச்' (Populares) சேர்ந்தவர்களாக இருப்பினும், இறுதியில் பகைவராயினர். அரசியல் சாதுரியம் இன்மையால் சீசரிடம் இவர் தோற்கவேண் டியதாயிற்று. ஆரம்பத்தில் சின்னவை எதிர்த்து சல்லாவுக் காகப் போராடியதாலும், பின்னர் ஈக்வைட்டுகளின் ஆதர வோடு பிரபுக்களைப் பகைத்துக் கொண்டதாலும் பொதுமக் களும் செனேட்டர்களும் இவரை ஆதரிக்க மறுத்தனர்.

லிசீனியஸ் கிராசஸ்: கி.மு. 115-53: இவர் (Licinius Crassus) ஈக்வைட்டுகள் வகுப்பைச் சேர்ந்தவர். ரோமிலேயே மாபெரும் செல்வந்தர்; வங்கித் தொழிலில் (banking) அன்று முதலிடத்தை வகித்தவர். சல்லாவை முழு மனத்துடன் ஆதரித்து, அவரது சர்வாதிகாரத்தின்போது பொதுமக்கள் கட்சித் தலைவர்களின் பறிமுதல் செய்யப்பட்ட சொத்துக்களைப் பெற்று, மேலும் பெருஞ் செல்வந்தரானார். கி.மு. 70-ல் பாம்பே யுடன் சேர்ந்து கான்சலாகப் பதவியேற்றார். அப்பதவிக்காலம்

—மத்திய பிரான்சும் மேற்கு ஸ்விட்சர்லாந்தும்), பெல்ஜிகா (Belgica —வடக்கு பிரான்சு, பெல்ஜியம், தெற்கு ஹாலந்து) என்பவையே அம் மூன்று பகுதிகள். அக்டேயுடேனியாவில் ஸ்பெயினிலிருந்து வந்த ஐபீரியர்களும், வடக்கில் ரைன் நதியைக் கடந்துவந்த ஜெர்மானியர்களும் சிறிதளவில் வாழ்ந்து வந்தனர்.

கால் பிரதேசத்தைக் கைப்பற்றுவதற்கு ரோமானியரும் ஜெர்மானியரும் போட்டியிட்டு வந்தனர். கால் குலங்களுக்கிடையில் இருந்த பல்வேறு பூசல்களைப் பயன்படுத்தி, ஒரு குலத்துக்கெதிராக மற்றக் குலத்துக்கு உதவி, தம்தம் ஆதிக்கத்தை நிறுவ முயன்றனர் இருவரும். ஆனால், கி.மு. 100க்குப்பின் உள்நாட்டுக் குழப்பங்களில் மிகுதியாக ரோம் ஈடுபட்டது. அதை ஜெர்மானியர்கள் பயன்படுத்தி, காலின் ஒரு பகுதியைத் தமது ஆதிக்கத்தின்கீழ்க் கொண்டுவந்தனர். அவ்வாறு காலின் ஒரு பகுதியில் அதிகாரம் செலுத்திய ஜெர்மானிய அரசரான அரியோவிஸ்டஸ் (Ariovistus) என்பவரை 'அரசரென்றும், ரோமின் நண்பர் என்றும்' கி.மு. 59-ல் கான்சலாக இருந்த பொழுது ஜூலியஸ் சீசரே அங்கீகரிக்க வேண்டியவரானார்.

சீசர் ரோமைவிட்டுப் புறப்படுமுன் செய்த முன்னேற்பாடுகள். ரோமை விட்டு ஐந்தாண்டுகள் தம் மாநிலத்துக்குச் செல்ல வேண்டியிருந்த சீசர், தாமில்லாத வேளையில் ரோமில் தம்முடைய பகைவர்கள் தமது செல்வாக்குக்கு உலைவைக்கக்கூடும் என்பதை உணர்ந்து அதைத் தடுப்பதற்கான நடவடிக்கைகளில் ஈடுபடலானார். சான்றாக, சீசர் தமது கான்சல் பதவியின்போது வன்முறைகளில் ஈடுபட்டார் என்று அவர்மீது நடவடிக்கைகள் எடுப்பதற்காகச் செனெட்டும், கி.மு. 58 ஆம் ஆண்டுக்கான பிரேட்டர்கள் இருவரும் இரகசியப் பேச்சுவார்த்தைகள் நடத்தினர்; அதேபோல் குற்றச்சாட்டு ஒன்றைக் கொண்டுவர டிரிபியூன் ஒருவரும் முயன்று, மற்ற டிரிபியூன் ஒருவரின் தடுப்பு அதிகாரத்தால் அம் முயற்சி தோற்கடிக்கப்பட்டது. இதையெல்லாம் அறிந்துதான் சீசர் முன்னெச்சரிக்கையாகச் சில ஏற்பாடுகளைச் செய்வது மிகத்தேவையாயிற்று. மேலும் இரகசியமாக அரியோவிஸ்டஸுக்கு ஆள்களை அனுப்பி, சீசருடன் போரிடுமாறு அவரைத் தூண்டிவிட முயன்றது செனெட். இது பின்னரே சீசருக்குத் தெரிய வந்தது.

எனவே தம் நண்பர்களையும் கூட்டாளிகளையும் உயர் பதவியிலிருக்குமாறு செய்து, பகைவர்களை ரோமிலிருந்து அகற்றி வைக்க முயற்சிகளை மேற்கொண்டனர் மூவர் அணியினர். கி.மு. 55 வரை பாம்பேயும், கிராசஸும் ரோமிலேயே இருக்க வேண்டுமென்று முடிவு செய்யப்பட்டது. சிசரோவையும் கேட்டோவையும் ரோமிலிருந்து வெளியேற்ற முயற்சி செய்யப்பட்டது.

சிசரோவுக்கு எதிராகக் கிளாடியஸைப் பயன்படுத்தினர் மூவரும். பிரபுப் பெண்டிரின் கூட்டத்தில் பெண்ணுடையில் சென்று கலந்துகொண்ட குற்றத்துக்காகக் கிளாடியஸ் விசாரணை செய்யப்பட்டபோது, சிசரோ அவருக்கு எதிராகச் சாட்சி கூறியதால் இருவருக்குமிடையில் பகை இருந்து வந்தது. கி. மு. 60-ல் சிசிலியில் குவேஸ்டராக இருந்தபின், கி. மு. 59-ல் டிரிபியூன் பதவிக்கு நிற்க விரும்பினார் கிளாடியஸ். ஆனால் அவர் பெட்ரீஷியர்; பிளெபியர் மட்டுமே டிரிபியூனாக முடியும். பெட்ரீஷியர் ஒருவர் பிளெபியராவதற்கு ஒரு வழி இருந்தது. தலைமைப் புரோகிதரும் (சீசர்). சகுனச் சாமியாரும் (பாம்பே) அனுமதித்தால், செஞ்சூரியா மன்றம் அவரைப் பிளெபியர் பட்டியலில் சேர்த்துக்கொள்ளும். தம் திட்டங்களுக்குக் கிளாடியஸ் உதவக்கூடும் என்பதால் சீசரும், பாம்பேயும் இதற்கு இணங்கினர். இவ்வாறு கி. மு. 59-ல் டிசம்பரில் டிரிபியூனாகப் பதவியேற்று. பிரபுக்களுக்கெதிராகப் பல சட்டங்களை உடனே கொண்டுவந்தார் கிளாடியஸ்.

'சகுனம் சரியில்லை' என்று சாக்குப்போக்குகள் சொல்லிக் கமீஷியா மன்றத்தின் கூட்டங்களை ஒத்திப்போடுவதைத் தடை செய்யும் சட்டம் ஒன்றும், செனெட்டிலிருந்து உறுப்பினர்களை அகற்றுவதற்குச் சென்சார்களுக்கு இருந்துவந்த அதிகாரத்தைக் குறைக்கும் சட்டம் ஒன்றும், தொழிலாளர்கள் சங்கம் (guilds) அமைப்பதைத் தடைசெய்த செனெட்டின் ஆணையை நீக்கும் சட்டம் ஒன்றும், ஏழைகளுக்கு மலிவான விலையில் தானியம் வழங்க வகைசெய்யும் சட்டம் ஒன்றும் அவர் கொண்டு வந்து நிறைவேற்றினார். கி.மு. 58ஆம் ஆண்டின் தொடக்கத்தில் வேறொரு சிறந்த சட்டமும் கொணரப்பட்டது. விசாரணையில்லாமல் குடிமக்களுக்கு மரணதண்டனையளித்த அதிகாரிகளை ரோமைவிட்டு வெளியேற்ற வேண்டுமென்றது அச் சட்டம். கேட்டிலினின் சதியை முறியடிப்பதாகச் சொல்லிப் பலரைக் கொலை செய்வித்த சிசரோவுக்கு எதிராகவே இச் சட்டம் இயற்றப்பட்டது. இச் சட்டத்தின்படி சிசரோவைச் 'சமூக விரோதி' என்று அறிவித்து, அவரது சொத்துக்களைப் பறிமுதல் செய்து, ரோமுக்கு 400 மைல் தொலைவு வரை வசிக்கும் யாரும் அவருக்கு உணவு, உடை, இருப்பிடம் ஆகிய எதுவும் தரக்கூடாது என்று கூறும் சட்டம் ஒன்றைக் கிளாடியஸ் கொண்டு வந்தார். இவ்வாறு சிசரோ ரோமிலிருந்து விரட்டப்பட்டார். கிளாடியஸுக்கும் பாம்பேயுக்கும் இடையில் விரைவிலேயே வேறுபாடுகள் தோன்றின. பெருத்த அவமதிப்புகளுக்கு ஆளாக்கப்பட்ட பாம்பே, கிளாடியஸ் டிரிபியூனாக இருக்கும்வரை அரசியலில் தாம் கலந்துகொள்ளப் போவதில்லை என்று சொல்லி ஒதுங்கி வாழ்ந்தார். இப் பூசலில் கிளாடியஸை இரகசியமாகக் கிராசஸ் ஆதரித்ததாகத்

இக்குற்றச் சாட்டுகளை யெல்லாம் நன்கு நிரூபிக்கச் சிசரோவால் முடியவில்லை. எனினும், செனேட்டில் கேட்டிலின் விசாரணை செய்யப்பட்டார். செனேட் தன்னைத் தண்டிக்கக் கூடும் என்றஞ்சிய கேட்டிலின் ரோமை விட்டுத் தப்பி ஓடி மேன்லியஸின் படையோடு சேர்ந்து கொண்டார். உடனே மேன்லியஸையும் கேட்டிலினையும் நாட்டின் விரோதிகள் என்று அறிவித்து, அவர்களைத் தாக்குமாறு கான்சல்களுக்கு உத்தரவிட்டது செனேட்.

ஆன்ட்டோனியஸின் தலைமையில் ரோமானியப் படை புறப்பட்டது. சிசரோ மட்டும் ரோமிலேயே சதிகாரர்களைத் தண்டிப்பதற்கெனத் தங்கி, சதிகளில் ஈடுபட்டிருந்ததாக நால்வர்மீது குற்றம் சாட்டிக் கொன்றார். இதற்கிடையில் அன்ட்டோனியஸின் படைகள், காலுக்குச் சென்று கொண்டிருந்த கேட்டிலினையும், அவரது படையிலிருந்த 3,000 பேர்களையும் விரட்டிச் சென்று கொன்று தீர்த்தன. இவ்வாறு குடியரசைத் தான் காத்ததாக வெகு நாட்கள் பெருமை யடித்துக் கொண்டார் சிசரோ.

இச்சம்பவங்கள் ரோமில் உருவாகி வந்த ஆபத்தான குழ்நிலையைத் தெளிவாக எடுத்துக் காட்டின. கேட்டிலின் சதி பற்றிச் சிசரோ கொடுத்த தகவல்களில் எந்த அளவுக்கு உண்மையும்பொய்யும் கலந்திருந்தன என்பது புரியவில்லை. எனினும், தமது ஆதிக்கத்தைத் தக்கவாறு வைத்துக் கொள்வதற்கு எதையும் செய்யச் செனேட் தயங்காது என்பதை மறுபடியும் இந்நிகழ்ச்சிகள் புலப்படுத்தின. இச்சதிகளில் சம்பந்தப்பட்டிருந்ததாகச் சீசர், கிராசஸ், கான்சலான அன்ட்டோனியஸ் முதலிய பல பெரிய மனிதர்களின் பெயர்களும் அடிபட்டன.

பிரபுக்களிடையே இருந்து வந்த பதவிப் போட்டியையும் இது நன்கு வெளிக் கொணர்ந்ததோடு பிரபுக்களின் ஆதிக்கமும் செனேட்டின் அதிகாரங்களும் நீண்ட நாட்களுக்கு நீடித்திருக்க முடியாது என்பதையும் எல்லோருக்கும் தெளிவு படுத்தியது. பல நூற்றாண்டுகளாக நிலவி வந்த ஆட்சிமுறை குலையத் துவங்கியது.

இத்தகைய குழப்பமான சூழ் நிலையில் தான் பாம்பே, சீசர், கிராசஸ் ஆகியோர் தங்களது பதவிப் போட்டிகளைத் துவக்கினர்.

18. முதலாவது மூவர் அணி
(First Triumvirate)

பாம்பேயும், சீசரும் இத்தாலி திரும்புதல்; கிழக்கில் தன் போர்களை யெல்லாம் முடித்துக் கொண்டு கி.மு. 62-ல் நாடு திரும்பினர் பாம்பே. இத்தாலியில் கரை யிறங்கிய உடனேயே படைகளைக் கலைத்து விட்டு ரோமுக்கு வந்து சேர்ந்தார். ரோமில் அவரது செல்வாக்குத்தான் அப்பொழுது வானுங்கி வளர்ந்துள்ளது என்றும், எனவேதான் ஆசியாவில் செய்துள்ள ஏற்பாடுக ளனைத்தையும் செனேட் நிச்சயம் ஏற்றுக்கொள்ளும் என்றும் அவர் உறுதியாக நம்பினர். ஆனால், அவர் நினைத்த வாறு எதுவும் நடக்கவில்லை.

லூசுல்லஸின் தலைமையைச் செனேட்டர்களில் பலர் அவ ருக்குப் பகைவரா யிருந்தனர். அவரது ஆசிய ஏற்பாடுகளை ஒவ் வொன்றாக எடுத்துப் பரிசீலனை செய்த பின்தான், அவற்றை அங்கீகரிக்க வேண்டும் என்றனர் அவர்கள். தமது படைவீரர் களுக்கு நிலங்களைப் பெற்றுத் தருவதாகச் சொல்லியே அவர் களைக் கலைத்து வீடுகளுக்குத் திரும்புமாறு செய்திருந்தார் பாம்பே. ஆனால், அவரது இந்தக் கோரிக்கையையும் ஆர அமரப் பரிசீலனை செய்து காலங் கடத்தியது செனேட். பாம் பேயால் ஒன்றும் செய்ய முடியவில்லை. அவருக்கிருந்த செல் வாக்கை இவை இரண்டும் பெரிதும் பாதித்தன. அவரது பழைய போர்வீரர்களும் தங்களை ஏமாற்றி விட்டதாக அவரைக் குறை கூறினர்.

கேட்டிலினின் சதி பற்றிய விஷயங்கள் ரோமில் பரபரப்பை உண்டாக்கிய பொழுது சிசரோவின் பிரபுக் கட்சிக்கு எதிராக மக்கள் கட்சியின் தலைவரான சீசரின் செல்வாக்கு உயர்ந்தது. எனவே, அடுத்த மார்ச்சில் அவர் தலைமைப் புரோகிதராக (Pontifex Mavimus) தேர்ந்தெடுக்கப்பட்டார். கி.மு. 62-ல்

பிரேட்டராகவும் அவர் தேர்ந்தெடுக்கப்பட்டார். அப்பொழுது பல சமயங்களில் அவர் செனேட்டை எதிர்த்தார். கி.மு. 61-ல் புரோபிரேட்டராக ஸ்பெயினுக்குச் சென்ற சீசர் அங்குப் பல போர்களில் வெற்றி பெற்று கி.மு. 70-ல் ரோம் திரும்பினர். மேலே கூறிய அனைத்தும் சீசரின் பெயருக்கு ரோமில் புகழைத் தேடித் தந்தன. எனவே, மக்கள் கட்சியின் தலைவராக அவர் உயர்ந்து வந்தார்.

மேலும், இரண்டு சிறிய நிகழ்ச்சிகள் சீசரின் செல்வாக்குப் பெருகுவதற்கும், பாம்பேயுக்கு ஆதரவு குறைவதற்கும் காரண மாயிருந்தன. சீசர் தலைமைப் புரோகிதரா யிருந்தபொழுது அவரது மனைவி பாம்பேயாவின் (Pompeia) தலைமையில் பிரபுக் குடும்பத்துப் பெண்கள் பலர் கூடிப் புனிதச் சடங்கு ஒன்றில் ஈடுபட்டிருந்த வேளையில், லூசுல்லசின் மைத்துனரான குளோடி யஸ் பெண்ணுடை தரித்து அதில் கலந்து கொள்ள முயன்று கண்டுபிடிக்கப்பட்டார். இது ஒரு பெரிய நிகழ்ச்சியாகப் பின்னர் உருவெடுத்து, பிரபுக்கள் கட்சியும் மக்கள் கட்சியும் தீவிரமாக மோதிக் கொண்டன. மற்றொரு நிகழ்ச்சியானது ஈக்வைட்டுகளைப் பற்றியது. ஆசியாவில் வரி வசூல் உரிமை களைப் போட்டி போட்டுக் கொண்டு பல ஈக்வைட்டுக் கம்பெனி கள் (Publicani) ஏலத்தில் எடுத்திருந்தன. ஆனால், தங்களது ஏலத் தொகை அளவுக்கு வரி வசூலிக்க இயலவில்லை என்றும், அதனால், அத்தொகையைச் செனேட் குறைக்க வேண்டு மென்றும் ஈக்வைட்டுகள் கோரினர். ஈக்வைட்டுகளின் தலைமையிலான மக்கள் கட்சி இதை ஆதரித்தது பிரபுக்களும் செனேட்டர்களும் இதை எதிர்த்தனர்.

இந்த இரண்டு நிகழ்ச்சிகளிலும் பாம்பே நடுநிலைமை வகித்தார். எனவே, பிரபுக்களிடத்திலும் மக்களிடத்திலும் அவருக்கு இருந்த செல்வாக்குக் குறைந்தது. அதே சமயம் சீசரின் செல்வாக்கு அதிகரித்தது. ஈக்வைட்டுகளும் பொது மக்களும் பிரபுக்களுக்கெதிராக அவரையே ஆதரித்தனர்.

முதல் மூவர் அணி அமைக்கச் சீசரின் முயற்சிகள் : நிலைமை இவ்வாறு இருந்தபோதுதான் கி.மு. 60-ல் ஸ்பெயினிலிருந்து நாடு திரும்பினர். வந்தவுடன் செனேட்டுடன் ஒரு பூசல் ஏற்பட்டது.

ஸ்பெயினில் வெற்றிகள் பெற்றுத் திரும்பியதால் வெற்றி ஊர்வலம் (Triumph) நடத்துவதற்குத் தமக்கு அனுமதி வழங்கு மாறு செனேட்டிடம் அவர் கோரினர். அவ்வாறு அனுமதி

கிடைக்கும்வரை ரோம் நகரின் மதில்களுக்குள் அவர் நுழையக் கூடாது என்பது விதி. கி.மு. 59–ஆம் ஆண்டுக்கான கான்சல் தேர்தலுக்கு இன்னமும் சில நாட்களே இருந்தன. அதில் போட்டியிடச் சீசர் விரும்பினர். தேர்தலுக்குப் பதினேழு நாட்களுக்கு முன்னமே வேட்பாளர் ரோமுக்கு வந்து தாம் நிற்கப்போவதைப் பற்றி அறிவிப்பு ஒன்றை வெளியிட வேண்டும் என்பது விதி. இந்நிலையில் செனேட்டானது சீசரைக் கான்சல் தேர்தலில் நிற்காமல் செய்வதற்கென, அவரது வெற்றி ஊர்வலம்பற்றி முடிவை மேற்கொள்ளாமல் காலம் தாழ்த்தியது.

இதைப் புரிந்துகொண்டார் சீசர். வெற்றி ஊர்வலம், தேவையில்லை என்று முடிவுசெய்து படைத்தலைமையை உதறிவிட்டு ரோமுக்குள் சென்று, உரியநாளில் தான் தேர்தலில் நிற்கப்போவதாக அறிக்கை வெளியிட்டார். செனேட்டின் எதிர்ப்பையும் முறியடித்து, கான்சலாக ஆவதற்குரிய முயற்சிகளை மேற்கொண்டார். அவர் பாம்பே, சீராசஸ், சீசரோ ஆகியோரை அணுகி, தம்மை ஆதரிக்குமாறு வேண்டிக்கொண்டார். தான் கான்சலானால் பாம்பேயின் ஆசிய ஏற்பாடுகளை அங்கீகரிக்க வழிசெய்வதாகவும், அவரது படைவீரர்களுக்கு நிலம் வழங்குவதாகவும், தனது மகள் ஜூலியாவை அவருக்கு மணம்செய்து கொடுப்பதாகவும் உறுதிகூறினர். உடனே, பாம்பேயின் உதவி அவருக்குக் கிடைத்தது. ஈக்வைட்டுகளின் தலைவரான கிராசஸை அணுகி, ஆசியாவில் வரிவசூல் கம்பெனிகளுக்கு ஏற்பட்ட நஷ்டத்தைப் போக்கி, அவர் தம் ஏலத்தொகைகளைக் குறைப்பதாக உறுதி கூறினர். உடனே, ஈக்வைட்டுகளும் கிராசஸும் அவரை ஆதரித்தனர். செனேட்டின் ஆதிக்கத்தை எதிர்த்துப் போரிடப் போவதாக அவர்கூறியது மக்களது ஆதரவை அவருக்குப்பெற்றுத்தந்தது. சிசரோ மட்டும் செனேட்டை விட்டு, சீசரை ஆதரிக்க மறுத்தார். இத்தகைய பெருத்த ஆதரவோடு ஜூலியஸ்சீசர் கான்சலாகத் தேர்ந்தெடுக்கப்பட்டார்.

கி.மு. 59 ஜனவரி முதல்தேதி கான்சலாகப் பதவி ஏற்றார் சீசர். அவர் உறுதியளித்தபடி பாம்பேயையும் கிராசஸையும் திருப்திபடுத்தும் சட்டங்கள் விரைவிலேயே இயற்றப்பட்டன, பாம்பேயின் ஆசிய ஏற்பாடுகளை ஏற்றுக்கொள்ளும் சட்டமும், அவரது போர்வீரர்களுக்கு மட்டுமன்றி வேறுபல ஏழைகளுக்கும் கம்பேனியாவில் பொதுநிலங்களைப் பிரித்தளிக்கும் சட்டம் ஒன்றும் இயற்றப்பட்டன. இதனால், ஏழைகள் சிலரும் மகிழ்ந்தனர். அதேபோல் ஈக்வைட்டுகளின் ஏலத்தொகை

யிலும் முன்றில் ஒருபகுதி குறைக்கப்பட்டது. ரோமில் மலிவான விலையில் தானியங்களை வழங்குவதற்கும் வகை செய்யப்பட்டது.

தங்களுக்குச் சீசர் செய்த உதவிக்குக் கைம்மாறுகப் பாம்பேயும் கிராசஸும் சீசருக்கு மறுஉதவி ஒன்றைச் செய்ய இணங்கியிருந்தனர். கான்சல் பதவியிலிருந்து விலகியதும் வழக்கம்போல் ஓராண்டுக்குப் பதிலாக ஐந்தாண்டு காலத்துக்குப் புரோகான்சலாக அவர் ஒரு மாநிலத்துக்கு அனுப்பப்படவேண்டும் என்ற திட்டத்தை ஆதரிக்க அவர்கள் இருவரும் இணங்கியிருந்தனர். இதுவரை செனேட்டானது சீட்டுக்குலுக்கி மாநிலங்களைப் புரோகான்சல்களுக்கு ஒதுக்கி வந்தது. ஆனால், இப்பொழுது சட்டம் ஒன்றை இயற்றி சீசருக்கு ஒரு குறிப்பிட்ட மாநிலத்தை வழங்க முடிவுசெய்யப்பட்டது. அதேபோல் பின்னர் பாம்பேயுக்கும் கிராசஸுக்கும் கான்சல் பதவிகளைப் பெற்றுத் தருவதற்கும், அடுத்து ஐந்தாண்டுகள் அவர்கள் புரோகான்சல்களாக இருப்பதற்கும் உதவி புரிவதாகச் சீசர் வாக்களித்தார். ஆனால், முதலில் சீசரது புரோகான்சல் பதவிபற்றி மசோதாக்கள் மட்டுமே செனேட்டின்முன் கொணரப்பட்டன. ஆனால், செனேட் வேண்டுமென்றே காலங்கடத்தியதால் அவை கமீஷியாவில் மக்கள் முன் கொண்டுவரப்பட்டன. பிரபுக்களும் அவர்களை ஆதரித்த பலரும் அவற்றை எதிர்த்ததால், அச்சுறுத்தல் முறைகளில் மூவரும் இறங்கவேண்டியதாயிற்று.

இதற்கிடையில் ஜூலியாவை மணந்துகொண்ட பாம்பே கமீஷியாவின் கூட்டம் நடந்த இடத்துக்கு ஒரு படையைக் கொண்டுவந்தார். வாக்காளர்களை அச்சுறுத்துவதே இதன் நோக்கம்; ஆயினும், அமைதியை நிலைநிறுத்துவதற்கான நடவடிக்கையே அது என்று அவர் கூறினார். செனேட்டில் இச்சட்டங்களை எதிர்த்த கேட்டோவைக் கைதுசெய்யும்படி சீசர் ஆணையிட்டார். இவ்வாறு இம்மசோதாக்கள் சட்டமாயின.

சீசரின் பதவிக்காலத்தில் செனேட் அதிகம் கூட்டப்படவில்லை. அதைக் கலக்காமலேயே சட்டங்கள் இயற்றப்பட்டன. (சட்ட பூர்வமாகச் செனேட்டைக் கலக்கவேண்டிய அவசியமில்லை என்றாலும், பண்டுதொட்டு அதைக் கலந்தே அதுவரை சட்டங்கள் இயற்றப்பட்டுவந்தன.) அதே சமயம் மாநில நிர்வாகத்தை ஒழுங்குபடுத்துவதற்கென்றும் ஒருமுக்கியமான சட்டம் சீசரால் கொண்டுவரப்பட்டது. மாநிலங்களில்

ஊழல்புரிந்த குற்றத்துக்காக, கவர்னரும் செனேட் உறுப்பினர்களாக விருக்கும் அவரது அதிகாரிகளும் மட்டுமே விசாரிக்கப்படுவர் என்று இதுவரை சட்டம் கூறியது. அதைமாற்றி, அவர்கள் செனேட்டர்களாக இருப்பினும் சரி, ஈக்வைட்டுகளாக இருப்பினும் சரி, விசாரிக்கப்படவேண்டும் என்ற புதிய சட்டம் கொணரப்பட்டது. ஈக்வைட்டுகள் இதை எதிர்த்தாலுங்கூட வேறு பலரும் இதை ஆதரித்தனர்.

சீசரின் மாநிலங்கள் : மாநிலங்களை வழக்கமாகக் கான்சல்களுக்கு வழங்கி வந்தது செனேட்தான். இப்பொழுதும் அது அவ்வாறே செயல்பட்டுச் சீசருக்கு (கி.மு. 58–ஆம் ஆண்டுக்கென, இத்தாலியை அளித்தது. அதாவது, காடுகள், சாலைகள், பொதுப்பணி ஆகியவற்றை மட்டுமே சீசர் இத்தாலியில் கவனிக்கவேண்டி இருக்கும். இது அவருக்கு விருப்பமில்லை. எனவே, வேட்டினியஸ் (Vatinius) என்ற டிரிபியூன் ஒருவர் ஐந்து ஆண்டுகளுக்குச் சிசால்ப்பைன்காலைச் சீசரின் மாநிலமாக்கும் தீர்மானத்தைக் கமீஷியா மன்றத்தில் கொண்டுவந்து நிறைவேற்றினர். அத்துடன் இலீரியாவையும் மூன்று லீஜின்களையும் கூட அத்தீர்மானம் சீசருக்கு அளித்தது.

ஆனால், இதுவும் அவருக்குத் திருப்தியளிக்கவில்லை. (கி.மு. 181 முதல் மாநிலமாக்கப்பட்ட 'சிசால்ப்பைன் கால்' என்ற பிரதேசம் ரூபிகன் நதிக்கும் ஆல்ப்ஸ்மலைக்கும் இடைப்பட்டபகுதி.) ஏனெனில், அதில் போநதிக்குத் தெற்கில் ஏராளமான ரோமானியக் குடியேற்றங்களும், அதற்கு வடக்கில் லத்தீய உரிமை பெற்ற குடியேற்றங்களும் இருந்தன. (போநதிக்கு வடக்கில் ஆல்ப்ஸ் மலைகள் வரையிலிருந்த பகுதி டிரான்ஸ்பாடேன்கால் என்றும் அழைக்கப்பட்டது. ஆயினும், சிசால்ப்பைன்காலின் ஒருபகுதியே அது.) இங்கு அதிக போர்கள் நடைபெறுவதற்கு வழியில்லை. ஆல்ப்ஸ்மலைகளின்மீது வாழ்ந்த ஆல்ப்பைன் குலங்களோடும் இலீரியத்திலும் வேண்டுமானால் சில சிறு போர்களில் சீசர் ஈடுபடலாம். பெரிய போர்களில் ஈடுபட்டுப் பெயரும் செல்வமும் பெற வேண்டுமென்று கருதிய சீசருக்கு இந்த ஏற்பாடும் பிடிக்கவில்லை.

ஆல்ப்ஸ் மலைக்கு அப்பாலிருந்த டிரான்சால்ப்பைன் காலைப்பெற விரும்பினர் சீசர். மாநிலங்களை வழங்கும் உரிமையை விட்டுக்கொடுக்க விரும்பாத செனேட், சீசரது நம்பிக்கையைப் பெறுவதற்கும், அதே சமயம் டிரான்சால்பைன் காலில் போர்களில் மாட்டிக்கொண்டு அவர் அவதிப்பட

19. ரோமில் உள்நாட்டுப் போர்

ரோமில் பாம்பேயும் கிராசஸும்: ரோமில் நடந்தவற்றை யெல்லாம் விட்டுவிட்டு, கால் பிரதேசத்திலும் பிரிட்டனிலும் சீசரின் போர் நடவடிக்கைகளை மட்டுமே இதுவரை பார்த்தோம். சீசரின் எதிர்கால வளர்ச்சியைக் கெடுத்த குரிப்பான நிகழ்ச்சிகள் அனைத் தும் ரோமில்தான் நடைபெற்று வந்தன. சீசரும் அவற்றின் முக்கி யத்துவத்தை நன்கு உணர்ந்திருந்தார். எனவேதான் டிரரன்சால் பைன் காலைவிட்டு ஒவ்வொரு ஆண்டும் குளிர்காலத்தில் சிசால் பைன் காலுக்கும் இலீரியாவுக்கும் அவர் செல்வது வழக்கமாக இருந்தது. சிசால்பைன் காலில் அவருடைய நண்பர்களும் உறவினர் களும் ரோமிலிருந்து சென்று அவரைச் சந்தித்து, தலைநகரில் நடந்த முக்கிய நிகழ்ச்சிகளை யெல்லாம் பற்றி அவரிடம் எடுத்துக் கூறுவர்.

சீசர் தம்முடைய மாநிலங்களுக்குச் சென்றபின், முதலாவது ஆண்டிலேயே கிராசஸுக்கும் பாம்பேயுக்குமிடையில் முரண்பாடுகள் தோன்றின. பாம்பேயைவிடச் சீசருக்கே நெருங்கிய நண்பராக இருந் தார் கிராசஸ்; எனவே சீசரிடமிருந்தும் தூரவிலகிக்கொண்டிருந்தார் பாம்பே. மேலும், கிராசஸின் மறைமுக ஆதரவோடுதான் கிளாடி யஸ் தம்மைத் தாக்கத் துணிந்தார் என்பதையும் பாம்பே உணர்ந் திருந்தார். இந்நிலையில், கி.மு. 57 ஆம் ஆண்டு செப்டம்பர் மாதத் தில் மறுபடியும் ரோமுக்குத் திரும்பிய சிசரோ மூவர்அணியில் பிளவு களை ஏற்படுத்தும் நோக்கம் கொண்டிருந்தார். நாடு கடத்தலி லிருந்து தாம் திரும்பியதற்குப் பாம்பே தான் முதற் காரண மென்று தமது நன்றியறிதலை அவருக்கு அறிவித்து, அவரோடு நெருங்கிய உறவு பூண்டார். சீசர்தாம் தம்முடைய முதல் பகைவர் என்பதையும் சிசரோ பாம்பேயிடம் தெளிவாக எடுத்துரைத்தார். கிளாடியஸுக்கும் பாம்பேயுக்கும் பூசல்கள் முற்றிவந்த வேளை யில், சிசரோ 'ரோமுக்கு மீண்டால் தம்மை பலப்படும் என்று கருதிய பாம்பேயின் முயற்சியால் நாடு கடத்தலிலிருந்து சிசரோவைத் திருப்பியழைத்துக் கொள்ளும் தீர்மானம் ஒன்று நிறைவேற்றப் பட்டது. அதன்படித்தான் சிசரோ ரோம் திரும்பினார்.)

கி.மு. 57-ல் ரோமில் கடும் பஞ்சம் நிலவியது. விலைவாசிகள் ஏறின. எனவே, சிசரோவின் தீர்மானம் ஒன்றின்படி 'உணவு

அமைச்சராக' (Praefectus Annonnae) பாம்பே அமர்த்தப்பட்டார். ரோமப் பேரரசிலுள்ள துறைமுகங்கள், தானிய அங்காடிகள் ஆகிய அனைத்தும் ஐந்தாண்டுகள் அவரது கட்டுப்பாட்டில் வைக்கப்பட்டன. கப்பல்களும் அதிகாரிகளும் பலவிடங்களுக்குப் பாம்பேயால் அனுப்பப்பட்டனர். அவரும் தானியக் களஞ்சியமான சிசிலிக்குச் சென்றார். ஏராளமான தானியங்கள் ரோமுக்குக் கொண்டுவரப் பட்டன. பஞ்சம் மறைந்தது; தானிய விலைகள் வீழ்ந்தன. இதனால் பெரிய நிலப்பிரபுக்களான செனெட்டர்களும் கொள்ளை இலாபம் அடித்தவியாபாரிகளான ஈக்வைட்டுகளும் (இவர்களின் பிரதிநிதிகள் தாம் கிராசஸும் கிளாடியஸும்) பாம்பேயை மேலும் வெறுத்தனர்.

ரோம் நகர் திரும்பிய பாம்பே தம்மை எல்லோரும் பாராட்டு வார்கள் என்று நினைத்தார். அதற்கு மாறாகப் பிரபுக்களும் ஈக்வைட்டுகளும் அவரைப் பலவிதங்களிலும் குறைகூறித் தாக்கினர்; அதனால் வருத்தமும் அச்சமும் அவரைக் கவர்ந்தன. ரோமிலிருந்து வெளியேற முயன்றார் பாம்பே. அச்சமயத்தில் எகிப்திய அரசரான தாலமி அயுலேட்டஸ் (Ptolomy Auletes) என்பவர் தம்முடைய பிரபுக் களால் அரியணையிழந்து, உதவி கோரி ரோமுக்கு வந்திருந்தார். கி.மு. 63-ல் யூதர்களுக்கெதிரான போரின்போது பாம்பேயுக்கு உதவி புரிந்தவர் அவர். எனவே, அவரை எகிப்தின் அரியணையில் மீண்டும் அமர்த்துவதற்காக ரோமானியப் படைத் தலைமை பூண்டு செல்வதற்குத் தம்மை அமர்த்த வேண்டுமென்று பாம்பே கேட்டுக் கொண்டார். ஆனால், செனெட்டர்களும் ஈக்வைட்டுகளும் அதை எதிர்த்தனர். பாம்பேயிடம் படைத் தலைமையை ஒப்படைக்கக் கூடாதென்று சிபெலின் நூல்கள் (Sibylline Books) கூறுவதாகப் புரோகிதர்களும் ஒத்து ஊதினர். இறுதியில் சீசருடனும் கிராச ஸுடனும் ஒத்துப்போவதைத் தவிர வேறுவழியில்லை என்பதைப் பாம்பே உணர்ந்தார்.

மூவர் அணியில் மீண்டும் ஒற்றுமை : மூவர் அணி இவ் வாறு பிளவுண்டு போனால் தமக்கும் தீங்கு என்பதைச் சீசர் உணர்ந்தார். கி.மு. 55 ஆம் ஆண்டுக்கான கான்சல் பதவிக்காக டொமீஷியஸ் அஹெனோபார்பஸ் (Domitius Ahenobarbus) என்ப வரைச்சீசரின் பகைவர்கள் நிறுத்துவதாக இருந்தனர். தாம் தேர்ந் தெடுக்கப்பட்டால் சீசரைத் திருப்பியழைத்து, காலில் அவர் செய்த அட்டூழியங்களைப்பற்றி விசாரித்து, அவரைத் தண்டிக்கப் போவ தாக அஹெனோபார்பஸ் அறிவித்தார். எனவே, அவர் கான்சலா வதைத் தடுப்பது அவசியம் என்பதை உணர்ந்த சீசர், பாம்பேயுடன் மீண்டும் அன்புமுறையில் உறவுகளை வைத்துக்கொள்வது தேவை என்று முடிவு செய்தார்.

இந்நிலையில் கி.மு. 56-ல் சீசர் லூக்காவுக்கு (Lucca) வந்தார். அப்பொழுது பாம்பேயும் கிராசஸும் சென்று அவரைச் சந்தித்தனர். நீண்ட பேச்சுவார்த்தைகளுக்குப் பிறகு அவர்கள் இருவருக்கிடையிலும் மறுபடியும் சமரசத்தை ஏற்படுத்தினார் சீசர். மூவரும் நீண்ட காலத் திட்டம் ஒன்றை வகுத்தனர். பாம்பேயும் கிராசஸும் கி.மு. 55ஆம் ஆண்டில் கான்சலாக வேண்டுமென்றும், அதன்பின், பாம்பே இரண்டு ஸ்பெயின் மாநிலங்களுக்கும், கிராசஸ் சிரியாவுக்கும் ஐந்தாண்டுகளுக்குக் கவர்னர்களாகச் செல்ல வேண்டுமென்றும், காலில் சீசரின் புரோகான்சல் பதவியை மேலும் ஐந்தாண்டுகள் நீடிக்க வேண்டுமென்றும், அதன் முடிவில் அவர் ரோமுக்குத் திரும்பி வராமலேயே கி.மு. 47ஆம் ஆண்டுக்கான கான்சலாகத் தேர்ந்தெடுக்கப்பட வேண்டுமென்றும் முடிவு செய்யப்பட்டது. இதனால் தம்முடைய படைகளையும் அதிகாரத்தையும் (Imperium) ஒரு விநாடியும் விட்டுக் கொடுக்காமல், ரோமுக்கு வந்து சீசர் கான்சல் பதவியை ஏற்றுக் கொள்ள முடியும்; அதே சமயம் கிராசஸும் பாம்பேயும் படைகளோடும் புரோகான்சல் பதவிகளோடும் எதையும் சமாளிப்பதற்கு ஆயத்தமாக இருக்கமுடியும். இவைதாம் அவர்களுடைய லூக்கா முடிவுகள்.

அதன்படி கான்சல் பதவிகளுக்குப் போட்டியிட்டனர் கிராசஸும் பாம்பேயும். குழப்பத்துக்கும் வன்முறைக்கும் பிறகு இருவருமே தேர்ந்தெடுக்கப்பட்டனர். செனெட்டின் தீர்மானங்களை உதாசீனம் செய்து, சீசரின் புரோகான்சல் பதவியை மேலும் ஐந்தாண்டுகளுக்கு நீடித்து, பாம்பேயுக்கு ஸ்பெயினையும், கிராசஸுக்கு சிரியாவையும் மாநிலங்களாக அளித்தது கமீஷியா மன்றம்.

பாம்பேயுக்கும் சீசருக்குமிடையில் பகைமை வளருகிறது : இவ்வாறு மூவர் அணியிடம் அதிகாரமனைத்தும் குவிந்தன. அவர்களோடு ஒத்துப்போவதைத்தவிர வேறு வழியில்லை என்பதைச் சிசரோ உணர்ந்தார். ஆயினும், விரைவிலேயே நிலைமைகள் வேறு விதமாகத் திரும்பின. கி.மு. 54-ல் சீசரின் மகளும் பாம்பேயின் மனைவியுமான ஜூலியா இறந்தாள். கான்சலாக இருந்த பின், சிரியாவுக்குச் சென்ற கிராசஸ் கி.மு. 53-ல் பார்த்தியர்களுக்கு (Parthians) எதிரான போரில் கேரே (Carrhae) என்றவிடத்தில் கொல்லப்பட்டார். இவ்வாறு மூவரணியில் இரண்டு பேரே எஞ்சியிருந்தனர்.

இதுதான் தமக்குச் சிறந்த தருணம் என்று கருதிய பிரபுக்கள் (Optimates) பாம்பேயை ஆதரித்துத் தம்பக்கம் இழுத்துக்கொண்டு, சீசருக்கெதிராக அவரைத் தூண்டிவிட முயன்றனர். இதற்கிடையில் ரோமிலும் பிரபுக்கள் கட்சிக்கும் மக்கள் கட்சிக்கும் (Populares)

இடையில் கைகலப்புகள் பெருகி வந்தன. பிரபுக்களின் சார்பாக மிலோ (Milo) என்பவரும், மக்கள் கட்சியின் (அதாவது ஈக்வைட்டுகளின்) சார்பில் கிளாடியஸும் பலஆள்களைத் திரட்டிக்கொண்டு கைகலப்புகளில் ஈடுபட்டு வந்தனர். கமீஷியா மன்றத்தின் கூட்டங்களும் நடைபெற முடியாமல் அவற்றைக் கலைத்துக் குழப்பம் விளைவித்து வந்தனர், இதனால், கான்சல்களின் தேர்தல்கூட நடைபெற முடியவில்லை. கி. மு. 53-ம் ஆண்டுக்கான கான்சல் அவ்வாண்டில் ஆறுமாதங்கள் வரையில் தேர்ந்தெடுக்கப்படவேயில்லை. அடுத்த ஆண்டும் அதேபோல் நடைபெற்றது. கி. மு. 52.ல் ஜனவரியில் மிலோவின் குழுவுடன் நடந்த ஒரு கைகலப்பில் கிளாடியஸ் கொல்லப்பட்டார். அவரது உடலைச் சுமந்து கொண்டு கியூரியா மன்றத்திற்குள் கொண்டு வந்து, அங்குச் சிதை மூட்டியது ஒரு மக்கள் கூட்டம். இதனால், கியூரியா மன்றமே தீப்பிடித்து எரிந்து சாம்பலாயிற்று, இறுதியில் பிப்ரவரி 25-ந்தேதியன்று 'இடைக்கால அதிகாரி' (Interrex) ஒருவரை அமர்த்தியது செனெட். அவர் பாம்பேயை ஒரே கான்சலாக அமர்த்தினார். இரண்டாவது கான்சல் பதவி காலியாக வைக்கப்பட்டது.

ஒரே கான்சலாகப் பாம்பே, கி.மு. 52: தாம் சர்வாதிகாரியாக (dictator) நியமிக்கப்படவேண்டும் என்று பாம்பே விரும்பினார். ஆனால், சல்லாவின் கொடுமைகளுக்குப் பிறகு 'சர்வாதிகாரி' என்ற வார்த்தையையே பொதுமக்கள் வெறுத்து வந்தனர். எனவேதான், பாம்பே ஒரே கான்சலாக அமர்த்தப்பட்டார். இரண்டாவது கான்சலாகச் சீசரைத் தேர்ந்தெடுக்க வேண்டுமென்று எதிர்க்கட்சி கோரியது. இதைத் தடுப்பதற்காகவே ஆறுமாதத்துக்குப் பிறகு, மெட்டலஸ் சிப்பியோ (Metellus Scipio) என்பவரை இரண்டாவது கான்சலாக அமர்த்திக் கொண்டார் பாம்பே. (அவருடைய மகளைப் பாம்பே மணந்திருந்தார்.) இவ்வாறு ஆறுமாதகாலம் எல்லா அதிகாரங்களையும் பெற்றுச் சர்வாதிகாரி போல் ஆண்ட பாம்பே. அடுத்த ஆறுமாதத்திலும் சிப்பியோவைப் பொம்மையாக வைத்துத் தாமே ரோமை ஆண்டார். பிரபுக்களின் அதிகாரம் மீண்டும் ரோமில் நிறுவப்பட்டது போலத் தோன்றியது; பிரபுக்கள் மகிழ்ந்தனர்.

பாம்பே கான்சல் பதவியில் அமர்ந்த காலத்தில் பலவிதமான சட்டங்கள் வெளிவந்தன, அவற்றில் முக்கியமான ஒருசிலவற்றைப் பற்றி மட்டும் இங்கே பார்ப்போம். கான்சல்களும் பிரேட்டர்களும் தம் தம் பதவிகளிலிருந்து விலகியபின், ஐந்தாண்டுகள் கழிந்த பின்னரே மாநிலங்களுக்குச் செல்லவேண்டும் என்று விதித்தது ஒரு முக்கியமான சட்டம். தாம் எந்தமாநிலத்துக்குச் செல்வது என்பதைப் பற்றிக் கான்சல்களும் பிரேட்டர்களும் சதிகளில் ஈடுபடுவதைத் தடை

செய்வதற்காகவும், தொடர்ச்சியாக அதிகாரத்தையும் படைகளையும் பெற்றுச் சீசர் போன்றவர்கள் வளர்ந்து வருவதை இனித் தடை செய்வதற்கும் முயன்றது இச் சட்டம். மேலும் கான்சல் பதவிக்கு வர விரும்பும் எவரும், ரோமுக்கு நேரில் வந்தே போட்டியிட வேண்டு மென்றும் கூறியது இச் சட்டம். கி. மு. 54 முதல் ஸ்பெயின்களில் கவர்னராக விருந்த அதே சமயத்தில் ரோமில் கான்சலாகவும் கி. மு. 52-ல் பாம்பே இருந்தது ஒரு புதுமை. மேலும், ஐந்தாண்டுக் காலத்துக்கு அவரது கவர்னர் பதவியை நீட்டித்தது செனெட். இவ்வாறு மேலே கூறப்பட்ட சட்டத்திலிருந்து பாம்பேயுக்கு விதிவிலக்கு அளிக்கப்பட்டது. பாம்பேயின் ஆலோசனையின்பேரில் சீசருக்கும் இத்தகைய விதிவிலக்கு அளிக்கப்பட்டது. ஆயினும், சீசர் பாம்பேயைச் சந்தேகித்தார். அவ்விருவருக்குமிடையில் பகைமை முற்றியது.

மேலும், ஸ்பெயின் மாநிலங்களில் கவர்னராக இருந்த பாம்பே தமது கான்சல் பதவிக்காலம் முடிவடைந்த பின்னரும் ரோமிலேயே தங்கி இருந்தார். அவருடைய மூன்று படைத் தலைவர்கள் மட்டுமே ஸ்பெயின்களுக்கு அனுப்பப்பட்டனர். மேலும், கிராசஸ் இறந்த பின்னர் பீபூலஸ் (Bipulus) என்பவரின் தலைமையில் புதிய படைகளைச் சிரியாவுக்கு அனுப்புவதென்று முடிவு செய்தது செனெட். அவருக்குச் சீசர் ஒரு படையையும் (லீஜின்) பாம்பே ஒரு படையையும் கொடுக்க வேண்டுமென்று அது முடிவு செய்தது. காலில் போர்களின் போது பாம்பே சீசருக்கு ஒரு படையைக் கொடுத்திருந்தார். அப் படையைத் திரும்பத் தம்மிடம் அனுப்புமாறு பாம்பே வேண்டினார். இவ்வாறு சீசர் தமது படையில் இரண்டு பிரிவுகளை இழந்தார்.

ரோமில் உள்நாட்டுப் போர்

சீசரால் அனுப்பப்பட்ட இருபடைகளும் இத்தாலிக்கு வந்து சேர்ந்தன (கி. மு. 51) அதே சமயத்தில், கிராசஸுக்குப் பின்னும் சிரியாவில் புரோ குவேஸ்டராகத் தொடர்ந்து இருந்து போரிட்டு வந்த கேசியஸ் (Cassius) என்பவர் பார்த்தியர்களின் ஆக்கிரமிப்புகளை முறியடித்து அவர்களைச் சிரியாவிலிருந்து வெளியேற்றிவிட்டார் என்ற செய்தியும் வந்தது. எனவே, சீசர் அனுப்பிய இருபடைகளும் ஆசியாவுக்கு அனுப்பப்படாமல் அப்பூலியாவில் நிறுத்திவைக்கப்பட்டன. சீசருக்கெதிராகப் பாம்பேயுக்கு எனறே அவை அங்கு நிறுத்தி வைக்கப்பட்டன: என்வே, இவையெல்லாம் செனெட்டும் பாம்பேயும் தமக்கெதிராகச் செய்யும் சதியே என்று சீசர் முடிவு கட்டினார்.

தம்முடைய படைகளையும் அதிகாரங்களையும் இழக்காமலே அதாவது மாநிலக்கவர்னர் பதவியைத் துறக்காமலே ரோமுக்கு வந்து

தேர்தலில் சீசர் கான்சலாகத் தேர்ந்தெடுக்கப்பட வேண்டுமென்று விரும்பினார் என்பதை முன்பே பார்த்தோம். ஆனால், அவ்வாறு தேர்ந்தெடுக்கப்படுவதற்கு முன்பாகவே மாநிலக் கவர்னர் பதவியைத் துறந்து, படைகளையும் அதிகாரத்தையும் வழக்கம்போல் விட்டு விடுமாறு சீசரை வற்புறுத்துவதற்கென்று, பல தீர்மானங்கள் கி. மு. 51லும் 50லும் கொண்டுவரப்பட்டன. இதே எண்ணத்தோடு அவருக்கு அடுத்த கவர்னரை அமர்த்தவும் தீர்மானங்கள் கொண்டுவரப்பட்டன. இவற்றுக்கெதிராகச் சீசரும் பதில் நடவடிக்கைகளை மேற்கொண்டு வந்தார். காலில் புதிய படைகளைத் திரட்டினார். சகுனச் சாமியாராகப் (auger) போட்டியிட்ட அன்டோனியஸுக்கு ஆதரவைத் திரட்டுவதற்காகவும், தமது கட்சியைப் பலப்படுத்திக்கொள்வதற்காகவும் சிசால்பைன் காலில் பல நகரங்களுக்கும் அவர் சென்று வந்தார். அவ்வாண்டில் கான்சல்களில் ஒருவரான ஏமிலியஸ் கிளாடியஸ் (Amelius Glaudius) என்பவருக்கும், டிரிபியூன்களில் ஒருவரான கியூரியோ (Curio) என்பவருக்கும் நிறைய இலஞ்சம் தந்து தம்பக்கம் சேர்த்துக்கொண்டார். எனவே, சீசருக்கு அடுத்த கவர்னரை அமர்த்தும் முயற்சிகள் அனைத்தும் கி. மு. 50-ல் முறியடிக்கப் பட்டன.

சீசர் ரூபிகன் நதியைக் கடந்து படையெடுத்தல் : கி.மு. 49 ஜனவரி: சீசருக்குப் பதில் மற்றொரு கவர்னரை அமர்த்துவதற்கான கடைசித் தீர்மானம் கி. மு. 50 ஜூலையில் கொண்டுவரப்பட்டது. தமது தடுப்பு அதிகாரத்தைப் பயன்படுத்தி அதைத் தோற்கடித்தார் கியூரியோ, கி. மு. 49 ஆம் ஆண்டுக்கான கான்சல்களாகத் தேர்ந்தெடுக்கப்பட்ட கிளாடியஸ் மார்செல்லஸ் (C. Marcellus), கொர்னீலியஸ் லென்ட்டூலஸ் ஆகிய இருவருமே பிரபுக்கட்சியின் ஆள்கள். சீசரின் பகைவர்கள். இந்நிலையில் கி.மு. 50 டிசம்பர் 10-ந்தேதியன்று டிரிபியூன் பதவியிலிருந்து விலகிய கியூரியோ, உடனடியாக ரேவென்னாவுக்குச் (Revenna) சென்று சீசரைச் சந்தித்து நிலைமையை விளக்கிக் கூறினார். உடனே தம் படைகளோடு ரோமின் மீது சீசர் படையெடுத்து வரவேண்டும் என்பது கியூரியோவின் ஆலோசனை.

கியூரியோவும் சீசரும் இரகசியமாகப் பல முக்கியமான முடிவுகளை எடுத்தனர். அதற்கிணங்க கி. மு. 49 ஜனவரி முதல் தேதியன்று சீசரின் இறுதியான எச்சரிக்கைக் கடிதம் (ultimatum) ஒன்றை எடுத்து வந்து கான்சல்களிடம் ஒப்படைத்து அதைச் செனெட்டில் வாசித்துக் காட்ட வேண்டுமென்று கேட்டுக்கொண்டார் கியூரியோ.

தொடக்கத்தில் அவ்வாறு செய்வதற்குக் கான்சல்கள் இருவரும் மறுத்துவிட்டனர். ஆயினும், இறுதியில் சீசருக்கு நண்பர்களான அன்ட்டோனியஸ், கேசியஸ் ஆகிய டிரிபியூன்களின் வலியுறுத்தல் காரணமாக அவர்கள் இணங்க வேண்டியவராயினர். அக் கடிதத்தில் சீசர் கூறியவை இவைதாம்; கி.மு. 49 ஆம் ஆண்டு[1] முடிய, சீசர் புரோகான்சலாக இருப்பதற்கும், அவர் தமது அதிகாரத்தையோ படைகளையோ மாநிலங்களையோ விட்டுவிடுவதற்கு முன்பாகவே, ரோமுக்கு வராமலேயே தாம் கான்சலாகத் தேர்ந்தெடுக்கப்படுவதற்கும் வகை செய்யும் சட்டங்கள் மக்களால் ஏற்கெனவே இயற்றப்பட்டுவிட்டன. அச் சட்டங்களை மீறுவதற்குச் செனெட் முயற்சிகள் செய்கின்றது. அதே சமயம் மக்களின் சட்டங்கள் (Beneficium Populi) என்பது சீசர் பயன்படுத்தும் சொற்றொடர்) எவையுமின்றிப் பாம்பேயுக்குப் பலவித விதிவிலக்குகளை அளித்துள்ளது. சான்றாக, ஸ்பெயின்களில் கவர்னராக இருக்கும் பாம்பே, சட்டப்படி அங்குச் செல்லாமல் ரோமில் இருப்பதற்கும் கான்சலாக இருப்பதற்கும் அது அனுமதித்துள்ளது. அவை தவறான செயல்கள். ஆயினும், தம் முடைய மாநிலம், படைகள், அதிகாரம் (Imperium) ஆகியவற்றைப் பாம்பே உடனடியாகத் துறப்பதற்கு ஆயத்தமாயிருந்தால், சீசரும் அவ்வாறே செய்வதற்குத் தயார். இவைதாம் சீசரின் கடிதத்தில் அடங்கியிருந்தன.

தம்முடன் பேரம் பேசுவதற்குச் சீசருக்கு உரிமை கிடையாது என்றும், குறிப்பிட்ட நாளில் மாநிலம், படை, அதிகாரம் ஆகிய அனைத்தையும் துறக்க அவர் தவறினால் துரோகக் குற்றத்துக்கு ஆளாக வேண்டியிருக்கும் என்றும் செனெட் தீர்மானம் இயற்றியது. ஒரு செனெட்டர் மட்டுமே இதற்கெதிராக வாக்களித்தார். டிரிபியூன்களான அன்டோனியஸும் கேசியஸும் தமது தடுப்பதிகாரத்தைப் பயன்படுத்தி, இத் தீர்மானத்தைச் செல்லாததாக்கினர்.

ஜனவரி 2, 5, 6, 7 ஆகிய தேதிகளில் செனெட்டில் காரசாரமான விவாதங்கள் நடைபெற்றன. மேலே கூறப்பட்ட செனெட்டின் தீர்மானத்துக்கெதிராகத் தாம் பயன்படுத்தியிருந்த தடையை டிரிபியூன்கள் விலக்கிக்கொள்ள வேண்டுமென்று செனெட்டர்கள் கோரினர். அவர்கள் அதற்கு மறுக்கவே, 7-ந்தேதி மாலையில் செனெட்டிலிருந்து வெளியேற்றப்பட்டனர். கான்சல்கள், பிரேட்டர்கள்; டிரிபியூன்கள், புரோகான்சல்கள் (அதாவது பாம்பே போன்றோர்) ஆகியோர் 'குடியரசைக் காக்க வேண்டும்' என்ற தீர்மானம்

1. அதாவது மார்ச்சில் அது முடிவடைய வேண்டும். ஆனால் டிசம்பர் வரையில் பதவிக் காலத்தை நீட்டிப்பதுதான் வழக்கம்.

ஒன்றும் நிறைவேற்றப்பட்டது: அதாவது மேலே குறிப்பிட்ட அதிகாரிகள் அனைவருக்கும் சர்வாதிகாரம் அளிக்கப்பட்டது. எத்தகைய நடவடிக்கையை மேற்கொள்வதற்கும் அவர்களுக்கு அதிகாரம் வழங்கப்பட்டது.

உடனே அன்டோனியஸும் கேசியஸும் ரோமைவிட்டு ஓடி, ரேவென்னாவுக்குச் சென்று சீசரிடம் எல்லாவற்றையும் தெரிவித்தனர். அவரும் அத்தகைய நிலைமை ஒன்று உருவாக வேண்டும் என்றுதான் காத்திருந்தார்.

அச்சமயம் (ஜனவரி 13-ந்தேதி) சீசரிடம் ஒரு லீஜின் மட்டுமே இருந்தது. எனினும், அவர் வேறு பலரையும் திரட்டிக்கொண்டு அரீமினத்தை (Ariminum) நோக்கிப் புறப்பட்டார். அன்டோனியஸும் கேசியஸும் ஏற்கெனவே அங்குச் சென்றிருந்தனர். ஆனால், அரீமினம் இத்தாலியில் இருந்தது. அதாவது தமது மாநிலமான சிசால்பைன் காலிலிருந்து, எல்லையாக இருந்த ரூபிகன் (Rubicon) ஆற்றைக் கடந்து இத்தாலிக்குள் நுழையச் சீசருக்கு உரிமை கிடையாது. அவ்வாறு நுழைவது சட்டப்படி குற்றமாகும்.

ரூபிகனைக் கடக்குமுன் சீசர் ஆழ்ந்த யோசனைகளில் ஆழ்ந்ததாகவும், சகுனங்களை எல்லாம் பார்த்ததாகவும் கதைகள் கூறுகின்றன. ஆனால், சீசரின் நூலில் அவற்றைப் பற்றிய பேச்சே இல்லை. ஏற்கெனவே முடிவு செய்துவிட்ட சீசர் எவ்விதத் தயக்கமும் அச்சமுமின்றி அரீமினத்தை நோக்கிச் சென்றார். அரசாங்கத்துக்கு எதிராக இத்தாலிமீது படையெடுப்பதற்கு ஒப்பாகும் அது. சீசரின் தூரத்து உறவினரான லூசியஸ் சீசர் என்பவரும், பிரேட்டர் ஒருவரும் அரிமீனத்தில் சீசரைச் சந்தித்துச் சமரசம் செய்ய முயன்றனர். ஆனால், அதனால் எவ்விதப் பயனும் ஏற்படவில்லை. இத்தாலியிலுள்ள தம்முடைய படைகளைப் பாம்பே கலைத்துவிட்டு ஸ்பெயினுக்குச் செல்ல வேண்டுமென்றும், அப்பொழுது தாமும் தமது மாநிலங்களுக்குத் திரும்பிச் செல்வதாகவும் சீசர் கூறினார். ஆயினும், அவ்வாறு சமரச முயற்சி நடந்துகொண்டிருக்கும் பொழுதே அவர் ரோமை நோக்கி முன்னேறிப் பல நகரங்களையும் ஒவ்வொன்றாகக் கைப்பற்றிக்கொண்டிருந்தார். பிசாரம் (Pisaurum), பேனம் (Fanum), அங்கோனா (Ancona), ஆகியவை கைப்பற்றப்பட்டன. எட்ரூரியாவின் வழியாகப் பாம்பேயின் துருப்புகள் வருவதைத் தடுப்பதற்கென அர்ரேடியத்தைக் (Arretium) கைப்பற்றும்படி அப்பெனைன் மலைகளைக் கடந்து அனுப்பி வைக்கப்பட்டார் அன்டோனியஸ். ரோமுக்குச் செல்லும் அப்பெனைன் கணவாயில் இருந்த இகூவியத்தைக் (Iguvium) கைப்பற்றுவதற்குக் கியூரியோ அனுப்பப்பட்டார். ஆக்சி

சீசரும், ரோமும் கவர்ந்துகொண்டனர். கால் பிரதேசம் ரோமுக்குக் கிடைத்தது. கால் பிரதேசம் ஜெர்மானியருக்கு உட்படாமல், லத்தீன் பண்பாட்டை ஏற்று வளர்ச்சியுற்றது.

காலிலிருந்து திரும்புதல், கி.மு. 50 : சீசர் ஐந்து ஆண்டுகளுக்குப் பதிலாகப் பத்து ஆண்டுகள் மாநிலக் கவர்னராக விளங்கினர். இவ்வாறு ஏன் நிகழ்ந்தது என்பதைப்பற்றிப் பின்னர் படிக்கப்போகிறோம். ஆரம்பத்தில் அளிக்கப்பட்ட ஐந்தாண்டுகளோடு, மேலும் ஐந்து ஆண்டுகள் பின்னர் கூட்டப்பட்டன. கி.மு. 49-ல் இந்த இரண்டாவது ஐந்தாண்டும் முடிவுக்கு வந்தது. உடனடியாக ரோமுக்குத்திரும்பி கி.மு. 48 ஆம் ஆண்டுக்கான கான்சலாகப் போட்டியிடச் சீசர் விரும்பினர். பத்தாண்டுகளில் கால்பிரதேசத்தில் அடித்த கொள்ளைகளுக் கெதிராகவும், அங்குப் புரிந்த அக்கிரமங்களுக் கெதிராகவும், தனக்கெதிராகத் தனது பகைவர்கள் குற்றச்சாட்டுகளைக் கொண்டுவராமல் செய்வதற்கு அது ஒன்றே வழி என்று அவர் உணர்ந்தார். ஆனால், இதை அனுமதிக்கச் செனேட் மறுக்கவே, சீசர் இத்தாலிமீது படையெடுப்பது அவசியமாயிற்று.

19. ரோமில் உள்நாட்டுப் போர்

ரோமில் பாம்பேயும் கிராசஸும்: ரோமில் நடந்தவற்றை யெல்லாம் விட்டுவிட்டு, கால் பிரதேசத்திலும் பிரிட்டனிலும் சீசரின் போர் நடவடிக்கைகளை மட்டுமே இதுவரை பார்த் தோம். சீசரின் எதிர்கால வளர்ச்சியைப் பாதித்த முக்கியமான நிகழ்ச்சிகள் அனைத்தும் ரோமில்தான் நடைபெற்று வந்தன. சீசரும் அவற்றின் முக்கியத்துவத்தை நன்கு உணர்ந்திருந்தார். எனவேதான், டிரான்சால்ப்பைன் காலிலவிட்டு ஒவ்வொரு ஆண்டும் குளிர்காலத்தில் சிசால்ப்பைன் காலுக்கும் இலீரியா வுக்கும் அவர் செல்வது வழக்கமாக இருந்தது. சிசால்பைன் காலில் அவரது நண்பர்களும் உறவினர்களும் ரோமிலிருந்து சென்று அவரைச் சந்தித்து, தலைநகரில் நடந்த முக்கிய நிகழ்ச்சிகளையெல்லாம்பற்றி அவரிடம் எடுத்துக்கூறுவர்.

சீசர் தமது மாநிலங்களுக்குச் சென்றபின், முதலாவது ஆண்டிலேயே கிராசஸுக்கும் பாம்பேயுக்குமிடையில் முரண் பாடுகள் தோன்றின. பாம்பேயைவிடச் சீசருக்கே நெருங்கிய நண்பராக இருந்தார் கிராசஸ்; எனவே, சீசரிடமிருந்தும் தூர விலகிக்கொண்டிருந்தார் பாம்பே. மேலும், கிராசஸின் மறை முக ஆதரவோடுதான் குளோடியஸ் தம்மைத்தாக்கக் துணிந் தார் என்பதையும் பாம்பே உணர்ந்திருந்தார். இந்நிலையில், கி.மு. 57-ஆம் ஆண்டு செப்டம்பர் மாதத்தில் மறுபடியும் ரோமுக்குத் திரும்பிய சீசரோ மூவர் அணியில் பிளவுகளை ஏற் படுத்தும் நோக்கம் கொண்டிருந்தார். நாடு கடத்தலிலிருந்து தாம் திரும்பியதற்குப் பாம்பேதான் முக்கிய காரணமென்று தமது நன்றியறிதலை அவருக்கு அறிவித்து, அவரோடு நெருங்கிய உறவு பூண்டார். சீசர்தான் தனது முதல் பகைவர் என்பதையும் பாம்பேயிடம் தெளிவாக எடுத்துரைத்தார். (குளோடியஸுக்கும் பாம்பேயுக்கும் மூசல்கள் முற்றிவந்த வேளையில், சீசரோ 'ரோமுக்கு மீண்டால் தன் கைபலப்படும்'

என்று கருதிய பாம்பேயின் முயற்சியால் நாடு கடத்தலிலிருந்து சீசரோவைத் திருப்பியழைத்துக் கொள்ளும் தீர்மானம் ஒன்று நிறைவேற்றப்பட்டது. அதன்படித்தான் சீசரோ ரோம் திரும்பினர்.)

கி.மு. 57ல் ரோமில் கடும்பஞ்சம் நிலவியது. விலைவாசிகள் ஏறின. எனவே, சீசரோவின் தீர்மானம் ஒன்றின்படி 'தானிய அமைச்சராக' (Praefactus Annonce) பாம்பே நியமிக்கப்பட்டார். ரோமப் பேரரசிலுள்ள துறைமுகங்கள், தானிய அங்காடிகள் ஆகிய அனைத்தும் ஐந்தாண்டுகள் அவரது கட்டுப்பாட்டில் வைக்கப்பட்டன. கப்பல்களும் அதிகாரிகளும் பல விடங்களுக்குப் பாம்பேயால் அனுப்பப்பட்டனர். அவரும் தானியக்களஞ்சியமான சிசிலிக்குச் சென்றார். ஏராளமான தானியங்கள் ரோமுக்குக் கொண்டுவரப்பட்டன. பஞ்சம் மறைந்தது; தானிய விலைகள் வீழ்ந்தன. இதனால் பெரிய நிலப் பிரபுக்களான செனேட்டர்களும், கொள்ளை இலாபம் அடித்த வியாபாரிகளான ஈக்வைட்டுகளும் (இவர்களின் பிரதிநிதிகள் தாம் கிராசஸும் கிளோடியஸும்) பாம்பேயை மேலும் வெறுத்தனர்.

ரோம் நகர் திரும்பிய பாம்பே தன்னை எல்லோரும் பாராட்டுவார்கள் என்று நினைத்தார். அதற்கு மாறாக, பிரபுக்களும் ஈக்வைட்டுகளும் அவரைப் பலவிதங்களிலும் குறை கூறித் தாக்கினர். அதனால், வருத்தமும் அச்சமும் அவரைப் பீடித்தன. ரோமிலிருந்து வெளியேற முயன்றார் பாம்பே. அச்சமயத்தில் எகிப்திய அரசரான தாலமி அயுலேட்டஸ் (Ptolemy Auletes) என்பவர் தனது பிரபுக்களால் அரியணையிழந்து, உதவிகோரி ரோமுக்கு வந்திருந்தார். கி.மு. 63-ல் யூதர்களுக்கெதிரான போரின்போது பாம்பேயுக்கு உதவிபுரிந்தவர் அவர். எனவே, அவரை எகிப்தின் அரியணையில் மீண்டும் அமர்த்துவதற்காக ரோமானியப் படைத்தலைமையுண்டு செல்வதற்குத் தன்னை நியமிக்க வேண்டுமென்று பாம்பே கேட்டுக்கொண்டார். ஆனால், செனேட்டர்களும் ஈக்வைட்டுகளும் அதை எதிர்த்தனர். பாம்பேயிடம் படைத்தலைமையை ஒப்படைக்கக் கூடாதென்று சிபெலின் நூல்கள் (Sibylline Books) கூறுவதாகப் புரோகிதர்களும் ஒத்து ஊதினர். இறுதியில் சீசருடனும் கிராசஸுடன் ஒத்துப்போவதைத் தவிர வேறில்லை என்பதை பாம்பே உணர்ந்தார்.

மூவர் அணியில் மீண்டும் ஒற்றுமை: மூவர் அணி இவ்வாறு பிளவுண்டு போனால் தமக்கும் ஆபத்து என்பதைச் சீசர்

உணர்ந்தார். கி.மு. 55-ஆம் ஆண்டுக்கான கான்சல் பதவிக்காக டொமீஷியஸ் அஹெனோபார்பஸ் (Domitius Ahenoberbus) என்பவரைச் சீசரின் பகைவர்கள் நிறுத்துவதாக இருந்தனர். தாம் தேர்ந்தெடுக்கப்பட்டால் சீசரைத் திருப்பியழைத்து, காலில் அவர் செய்த அட்டூழியங்களைப் பற்றி விசாரித்து, அவரைத் தண்டிக்கப் போவதாக அறிவித்தார். எனவே, அவர் கான்சலாவதைத் தடுப்பது அவசியம் என்பதை உணர்ந்த சீசர், பாம்பேயுடன் மீண்டும் சுமுகமாக உறவுகளை வைத்துக்கொள்வது அவசியம் என்று முடிவுசெய்தார்.

இந்நிலையில் கி.மு. 56-ல் சீசர் லூக்காவுக்கு (Lucca) வந்தார். அப்பொழுது பாம்பேயும் கிராசஸும் சென்று அவரைச் சந்தித்தனர். நீண்ட பேச்சு வார்த்தைகளுக்குப் பிறகு அவர்கள் இருவருக்கிடையிலும் மறுபடியும் சமரசத்தை ஏற்படுத்தினர் சீசர். மூவரும் நீண்டகாலத்திட்டம் ஒன்றை வகுத்தனர். பாம்பேயும் கிராசஸும் கி.மு. 55-ஆம் ஆண்டில் கான்சலாக வேண்டுமென்றும், அதன்பின், பாம்பே இரண்டு ஸ்பெயின் மாநிலங்களுக்கும், கிராசஸ் சிரியாவுக்கும் ஐந்தாண்டுகளுக்குக் கவர்னர்களாகச் செல்ல வேண்டுமென்றும், காலில் சீசரின் புரோகான்சல் பதவியை மேலும் ஐந்தாண்டுகள் நீடிக்க வேண்டுமென்றும், அதன் முடிவில் அவர் ரோமுக்குத் திரும்பி வராமலேயே கி.மு. 47-ஆம் ஆண்டுக்கான கான்சலாகத் தேர்ந்தெடுக்கப்பட வேண்டுமென்றும் முடிவு செய்யப்பட்டது. இதனால், தனது படைகளையும் அதிகாரத்தையும் (Imperium) ஒருவிநாடியும் விட்டுக்கொடுக்காமல், ரோமுக்கு வந்து சீசர் கான்சல் பதவியை ஏற்றுக்கொள்ள முடியும்; அதே சமயம் கிராசஸும் பாம்பேயும் படைகளோடும் புரோகான்சல் பதவிகளோடும் எதையும் சமாளிப்பதற்குத் தயாராக இருக்கமுடியும். இவைதாம் அவர்களது லூக்கா மாநாட்டின் முடிவுகள்.

அதன்படி கான்சில் பதவிகளுக்குப் போட்டியிட்டனர் கிராசஸும் பாம்பேயும். குழப்பத்துக்கும் வன்முறைக்கும் பிறகு இருவருமே தேர்ந்தெடுக்கப்பட்டனர். செனேட்டின் தீர்மானங்களை உதாசீனம் செய்து, சீசரின் புரோகான்சல் பதவியை மேலும் ஐந்தாண்டுகளுக்கு நீடித்து, பாம்போயுக்கு ஸ்பெயின்களையும் கிராசஸுக்கு சிரியாவையும் மாநிலங்களாக அளித்தது கமீஷியா மன்றம்.

பாம்பேயுக்கும் சீசருக்குமிடையில் பகைமை வளருகிறது : இவ்வாறு மூவர் அணியிடம் அதிகாரமனைத்தும் குவிந்தது. அவர்களோடு ஒத்துப்போவதைத் தவிர வேறுவழியில்லை என்

பதைச் சீசரோ உணர்ந்தார். ஆயினும், விரைவிலேயே நிலைமைகள் வேறு விதமாகத் திரும்பின. கி.மு. 54-ல் சீசரின் மகளும் பாம்பேயின் மனைவியுமான ஜூலியா இறந்தாள். கான்சலாக இருந்தபின், சிரியாவுக்குச் சென்ற கிராசஸ் கி.மு. 53-ல் பார்த்தியர்களுக்கு (Parthians) எதிரான போரில் கேரே (Carrhae) என்ற விடத்தில் கொல்லப்பட்டார். இவ்வாறு மூவரணியில் இரண்டு பேரே எஞ்சியிருந்தனர்.

இதுதான் தமக்குச் சிறந்த தருணம் என்று கருதிய பிரபுக்கள் (Optimates) பாம்பேயை ஆதரித்துத் தம்பக்கம் இழுத்துக் கொண்டு, சீசருக்கெதிராக அவரைத் தூண்டிவிட முயன்றனர். இதற்கிடையில் ரோமிலும், பிரபுக்கள் கட்சிக்கும் மக்கள் கட்சிக்கும் (Populares) இடையில் கைக்கலப்புகள் பெருகி வந்தன. பிரபுக்களின் சார்பாக மிலோ (Milo) என்பவரும், மக்கட்கட்சியின் (அதாவது ஈக்வைட்டுகளின்) சார்பில் குளோடியஸும் பல ஆட்களைத் திரட்டிக்கொண்டு கைக்கலப்புகளில் ஈடுபட்டுவந்தனர். கமீஷியா மன்றத்தின் கூட்டங்களும் நடைபெற முடியாமல் அவற்றைக் கலைத்துக் குழப்பம் விளைவித்து வந்தனர். இதனால், கான்சல்களின் தேர்தல்கூட நடைபெற முடியவில்லை. கி.மு. 53-ஆம் ஆண்டுக்கான கான்சல் அவ்வாண்டில் ஆறுமாதங்கள் வரையில் தேர்ந்தெடுக்கப்படவேயில்லை. அடுத்த ஆண்டும் அதேபோல் நடைபெற்றது. கி.மு. 52-ல் ஜனவரியில் மிலோவின் குழுவுடன் நடந்த ஒரு கைக்கலப்பில் குளோடியஸ் கொல்லப்பட்டார். அவரது உடலைச் சுமந்து கொண்டு கியூரியா மன்றத்திற்குள் கொண்டுவந்து, அங்குச் சிதை மூட்டியது, ஒரு மக்கள் கூட்டம். இதனால், கியூரியா மன்றமே தீப்பிடித்து எரிந்து சாம்பலாயிற்று. இறுதியில் பிப்ரவரி 25-ந் தேதியன்று 'இடைக்கால அதிகாரி' (interrex) ஒருவரை நியமித்தது செனேட். அவர் பாம்பேயை ஒரே கான்சலாக அமர்த்தினர். இரண்டாவது கான்சல் பதவி காலியாக வைக்கப்பட்டது.

ஒரே கான்சலாகப் பாம்பே, கி.மு. 52 : சர்வாதிகாரியாக (dictator) நியமிக்கப்படவேண்டும் என்று பாம்பே விரும்பினர். ஆனால், சல்லாவின் கொடுமைகளுக்குப் பிறகு 'சர்வாதிகாரி' என்ற வார்த்தையையே பொதுமக்கள் வெறுத்து வந்தனர். எனவே தான், பாம்பே ஒரே கான்சலாக நியமிக்கப்பட்டார். இரண்டாவது கான்சலாகச் சீசரைத் தேர்ந்தெக்கவேண்டுமென்று எதிர்க்கட்சி கோரியது. இதைத் தடுப்பதற்காகவே, ஆறுமாதத்துக்குப் பிறகு, மெட்டலஸ் சிப்பியோ (Metellus Scipio) என்பவரை இரண்டாவது கான்சலாக நியமித்துக்

கொண்டார் பாம்பே. (அவரது மகளைப் பாம்பே மணந்திருந்தார்.) இவ்வாறு ஆறுமாதகாலம் சகல அதிகாரங்களையும் பெற்றுச் சர்வாதிகாரிபோல் ஆண்ட பாம்பே, அடுத்த ஆறுமாதத்திலும் சிப்பியோவைப் பொம்மையாக வைத்துத்தாமே ரோமை ஆண்டார். பிரபுக்களின் ஆதிக்கம் மீண்டும் ரோமில் நிறுவப்பட்டது போலத் தோன்றியது; பிரபுக்கள் மகிழ்ந்தனர்.

பாம்பே கான்சல் பதவிவகித்த காலத்தில் பலவிதமான சட்டங்கள் வெளிவந்தன. அவற்றில் முக்கியமான ஒருசிலவற்றைப் பற்றிமட்டும் இங்கே பார்ப்போம். கான்சல்களும் பிரேட்டர்களும் தமது பதவிகளிலிருந்து விலகியபின், ஐந்தாண்டுகள் கடந்த பின்னரே மாநிலங்களுக்குச் செல்லவேண்டும் என்று விதித்தது ஒரு முக்கியமான சட்டம். தாம் எந்த மாநிலத்துக்குச் செல்வது என்பதைப்பற்றிக் கான்சல்களும் பிரேட்டர்களும் சதிகளில் ஈடுபடுவதைத் தடை செய்வதற்காகவும், தொடர்ச்சியாக அதிகாரத்தையும் படைகளையும் பெற்றுச் சீசர் போன்றவர்கள் வளர்ந்து வருவதை இனித்தடை செய்வதற்கும் முயன்றது இச்சட்டம். மேலும், கான்சல் பதவிக்கு வர விரும்பும் எவரும் ரோமுக்கு நேரில் வந்தே போட்டியிட வேண்டுமென்றும் கூறியது இச்சட்டம். கி.மு. 54-முதல் ஸ்பெயின்களில் கவர்னராக விருந்த அதேசமயத்தில், ரோமில் கான்சலாகவும் கி.மு. 52-ல் பாம்பே இருந்தது ஒரு புதுமை. மேலும், ஐந்தாண்டுக்காலத்துக்கு அவரது கவர்னர் பதவியை நீட்டித்தது செனேட். இவ்வாறு மேலே கூறப்பட்ட சட்டத்திலிருந்து பாம்பேயுக்கு விதிவிலக்கு அளிக்கப்பட்டது. பாம்பேயின் ஆலோசனையின் பேரில் சீசருக்கும் இத்தகைய விதிவிலக்கு அளிக்கப்பட்டது. ஆயினும், சீசர் பாம்பேயைச் சந்தேகித்தார். அவர்களிருவருக்குமிடையில் பகைமை முற்றியது.

மேலும், ஸ்பெயின் மாநிலங்களில் கவர்னராக இருந்த பாம்பே தமது கான்சல் பதவிக்காலம் முடிவடைந்த பின்னரும் ரோமிலேயே தங்கி இருந்தார். அவரது மூன்று படைத் தலைவர்கள் மட்டுமே ஸ்பெயின்களுக்கு அனுப்பப்பட்டனர். மேலும், கிராசஸ் இறந்த பின்னர் பிபூலஸ் (Bibulus) என்பவரின் தலைமையில் புதிய படைகளைச் சிரியாவுக்கு அனுப்புவதென்று முடிவு செய்தது செனேட். அவருக்குச் சீசர் ஒரு படையையும் (லீஜின்) பாம்பே ஒரு படையையும் கொடுக்க வேண்டுமென்று அது முடிவு செய்தது. காலில் போர்களின்போது பாம்பே சீசருக்கு ஒரு படையைக் கொடுத்திருந்தார். அப்படையைத் திரும்பத் தம்மிடம் அனுப்புமாறு பாம்பே வேண்டினர். இவ்வாறு சீசர் தமது படையில் இரண்டு பிரிவுகளை இழந்தார்.

சீசரால் அனுப்பப்பட்ட இருபடைகளும் இத்தாலிக்கு வந்து சேர்ந்தன (கி.மு. 51). அதே சமயத்தில், கிராசஸுக்குப் பின்னும் சிரியாவில் புரோகுவேஸ்டராகத் தொடர்ந்து இருந்து போரிட்டு வந்த கேசியஸ் (Cassius) என்பவர் பார்த்தியர்களின் ஆக்கிரமிப்புகளை முறியடித்து, அவர்களைச் சிரியாவிலிருந்து வெளியேற்றிவிட்டார் என்ற செய்தியும் வந்தது. எனவே, சீசர் அனுப்பிய இருபடைகளும் ஆசியாவுக்கு அனுப்பப்படாமல் இப்பூலியாவில் நிறுத்தி வைக்கப்பட்டன. சீசருக்கெதிராகப் பாம்பேயுக்கு என்றே அவை அங்கு நிறுத்தி வைக்கப்பட்டன. எனவே, இவையெல்லாம் செனேட்டும் பாம்பேயும் தமக்கெதிராகச் செய்யும் சதியே என்று சீசர் முடிவு கட்டினர்.

தனது படைகளையும் அதிகாரங்களையும் இழக்காமலே (அதாவது மாநிலக் கவர்னர் பதவியைத் துறந்து, ரோமுக்கு வந்து) கான்சல் தேர்தலில் சீசர் கான்சலாகத் தேர்ந்தெடுக்கப்பட வேண்டுமென்று விரும்பினர் என்பதை முன்பே பார்த்தோம். ஆனல், அவ்வாறு தேர்ந்தெடுக்கப்படுவதற்கு முன்பாகவே மாநிலக் கவர்னர் பதவியைத் துறந்து, படைகளையும் அதிகாரத்தையும் வழக்கம்போல் விட்டுவிடுமாறு சீசரை வற்புறுத்துவதற்கென்று பல தீர்மானங்கள் கி.மு. 51-லும் 50-லும் கொண்டு வரப்பட்டன. இதே எண்ணத்தோடு, அவருக்கு அடுத்த கவர்னரை நியமிக்கவும் தீர்மானங்கள் கொண்டுவரப்பட்டன. இவற்றுக்கெதிராகச் சீசரும் பதில் நடவடிக்கைகளை மேற்கொண்டு வந்தார். காலில் புதிய துருப்புக்களைத் திரட்டினர். சகுனச்சாமியாராகப் (auger) போட்டியிட்ட அன்டோனியஸுக்கு ஆதரவைத் திரட்டுவதற்காகவும், தனது கட்சியைப் பலப்படுத்திக்கொள்வதற்காகவும் சிசால்ப்பைன் காலில் பல நகரங்களுக்கும் அவர் சென்றுவந்தார். அவ்வாண்டில் கான்சல்களில் ஒருவரான ஏமிலியஸ் கிளாடியஸ் (Aemilius Claudius) என்பவருக்கும், டிரிபியூன்களில் ஒருவரான கியூரியோ (Curio) என்பவருக்கும் நிறைய இலஞ்சம் தந்து தம் பக்கம் சேர்த்துக் கொண்டார். எனவே, சீசருக்கு அடுத்த கவர்னரை நியமிக்கும் முயற்சிகள் அனைத்தும் கி.மு. 50-ல் முறியடிக்கப்பட்டன.

சீசர் ரூபிகன் நதியைக் கடந்து படையெடுத்தல், கி.மு. 49 ஜனவரி: சீசருக்குப் பதில் கவர்னரை நியமிப்பதற்கான கடைசி தீர்மானம் கி.மு. 50 ஜூலையில் கொண்டுவரப்பட்டது. தனது தடுப்பு அதிகாரத்தைப் (Veto) பயன்படுத்தி, அதைத் தோற்கடித்தார் கியூரியோ. கி.மு. 49-ஆம் ஆண்டுக்கான கான்சல்களாகத் தேர்ந்தெடுக்கப்பட்ட கிளாடியஸ் மார்செல்லஸ்

(C. Marcellus), கொர்னீலியஸ் லென்ட்டுலஸ் ஆகிய இரு வருமே பிரபுக்கட்சியின் ஆட்கள்; சீசரின் பகைவர்கள். இந் நிலையில் கி.மு. 50 டிசம்பர் 10-ந் தேதியன்று டிரிபியூன் பதவியி லிருந்து விலகிய கியூரியோ, உடனடியாக ரேவென்னுவுக்குச் (Ravenna) சென்று, சீசரைச் சந்தித்து நிலைமையை விளக்கிக் கூறினார். உடனே, தனது படைகளோடு ரோமின்மீது சீசர் படையெடுத்து வரவேண்டும் என்பது கியூரியாவின் ஆலோசனை.

கியூரியோவும் சீசரும், இரகசியமாகப் பல முக்கியமான முடிவுகளை எடுத்தனர். அதற்கிணங்க கி.மு. 49 ஜனவரி முதல் தேதி யன்று சீசரின் இறுதியான எச்சரிக்கைக் கடிதம் (ultimatum) ஒன்றை எடுத்து வந்து கான்சல்களிடம் ஒப்படைத்து அதைச் செனேட்டில் வாசித்துக் காட்ட வேண்டுமென்று கேட்டுக் கொண்டார் கியூரியோ.

ஆரம்பத்தில், அவ்வாறு செய்வதற்குக் கான்சல்கள் இருவரும் மறுத்து விட்டனர். ஆயினும், இறுதியில் சீசருக்கு நண்பர்களான அன்ட்டோனியஸ், கேசியஸ் ஆகிய டிரிபியூன் களின் வற்புறுத்தல் காரணமாக அவர்கள் இணங்க வேண்டிய தாயிற்று. அக்கடிதத்தில் சீசர் கூறியவை இவைதாம்: கி.மு. 49 ஆம் ஆண்டு[1] முடிய சீசர் புரோகான்சலாக இருப்ப தற்கும், அவர் தமது அதிகாரத்தையோ படைகளையோ மாநிலங் களையோ விட்டுவிடுவதற்கு முன்பாகவே, ரோமுக்கு வராம லேயே தான் கான்சலாகத் தேர்ந்தெடுக்கப்படுவதற்கும் வகை செய்யும் சட்டங்கள் மக்களால் ஏற்கெனவே இயற்றப்பட்டு விட்டன. அச்சட்டங்களை மீறுவதற்குச் செனேட் முயற்சிகள் செய்கின்றது. அதே சமயம் மக்களின் சட்டங்கள் (Beneficium Pupuli – என்பது சீசர் பயன்படுத்தும் சொற்றொடர்) எவையு மின்றி, பாம்பேயுக்குப் பலவித விதிவிலக்குகளை அளித் துள்ளது செனேட். சான்றாக, ஸ்பெயின்களில் கவர்னராக இருக்கும் பாம்பே, சட்டப்படி அங்குச் செல்லாமல் ரோமில் இருப்பதற்கும், கான்சலாக இருப்பதற்கும் அது அனுமதித் துள்ளது. அவை தவறான செயல்கள். ஆயினும், தனது மாநிலம், படைகள், அதிகாரம் (Imperium) ஆகியவற்றைப் பாம்பே உடனடியாகத் துறப்பதற்குத் தயாராயிருந்தால், சீசரும் அவ்வாறே செய்வதற்குத் தயார். இவைதாம் சீசரின் கடிதத்தில் அடங்கியிருந்தன.

---

1. அதாவது மார்ச்சில் அது முடிவடைய வேண்டும். ஆனல் டிசம்பர் வரையில் பதவிக் காலத்தை நீட்டிப்பதுதான் வழக்கம்.

தன்னுடன் பேரம் பேசுவதற்குச் சீசருக்கு உரிமைகிடையாது என்றும், குறிப்பிட்ட நாளில் மாநிலம், படை, அதிகாரம் ஆகிய அனைத்தையும் துறக்க அவர் தவறினால் துரோகக் குற்றத்துக்கு ஆளாக வேண்டியிருக்கும் என்றும் செனேட் தீர்மானம் இயற்றியது. ஒரு செனேட்டர் மட்டுமே இதற்கெதிராக வாக்களித்தார். டிரிபியூன்களான அன்டோனியஸும் கேசியஸும் தமது தடுப்பதிகாரத்தை (Veto) ப் பயன்படுத்தி, இத்தீர்மானத்தைச் செல்லாததாக்கினர்.

ஜனவரி 2, 5, 6, 7 ஆகிய தேதிகளில் செனேட்டில் காரசாரமான விவாதங்கள் நடைபெற்றன. மேலே கூறப்பட்ட செனேட்டின் தீர்மானத்துக்கெதிராகத் தாம் பயன்படுத்தியிருந்த தடையை டிரிபியூன்கள் விலக்கிக்கொள்ள வேண்டுமென்று செனேட்டர்கள் கோரினர். அவர்கள் அதற்கு மறுக்கவே, 7-ந் தேதி மாலையில் செனேட்டிலிருந்து வெளியேற்றப்பட்டனர். கான்சல்கள், பிரேட்டர்கள், டிரிபியூன்கள், புரோகான்சல்கள் (அதாவது பாம்பே போன்றோர்) ஆகியோர் குடியரசைக் காக்க வேண்டும்' என்ற தீர்மானம் ஒன்றும் நிறைவேற்றப்பட்டது. அதாவது, மேலே குறிப்பிட்ட அதிகாரிகள் அனைவருக்கும் சர்வாதிகாரம் அளிக்கப்பட்டது. எத்தகைய நடவடிக்கையை மேற்கொள்வதற்கும் அவர்களுக்கு அதிகாரம் வழங்கப்பட்டது.

உடனே, அன்டோனியஸும் கேசியஸும் ரோமைவிட்டு ஓடி, ரவென்னாவுக்குச் சென்று சீசரிடம் எல்லாவற்றையும் தெரிவித்தனர். அவரும் அத்தகைய நிலைமை ஒன்று உருவாக வேண்டும் என்றுதான் காத்திருந்தார்.

அச்சமயம் (ஜனவரி 13-ந் தேதி) சீசரிடம் ஒரு லிஜின் மட்டுமே இருந்தது. எனினும், அவர் வேறு பலரையும் திரட்டிக் கொண்டு அரிமினத்தை (Ariminum) நோக்கிப் புறப்பட்டார். அன்டோனியஸும் கேசியஸும் ஏற்கெனவே அங்குச் சென்றிருந்தனர். ஆனால், அரிமினம் இத்தாலியில் இருந்தது. அதாவது தனது மாநிலமான சிசால்ப் பைன் காலிலிருந்து, எல்லையாக இருந்த ரூபிகன் நதியைக் (Rubicon) கடந்து இத்தாலிக்குள் நுழையச் சீசருக்கு உரிமை கிடையாது. அவ்வாறு நுழைவது சட்டப்படி குற்றமாகும்.

ரூபிகனைக் கடக்கும்முன் சீசர் ஆழ்ந்த யோசனைகளில் ஆழ்ந்ததாகவும், சகுனங்களை எல்லாம் பார்த்ததாகவும் கதை கூறுகின்றன. ஆனால், சீசரின் நூலில் அவற்றைப் பற்றிய

பேச்சே இல்லை. ஏற்கெனவே முடிவு செய்துவிட்ட சீசர் எவ்விதத் தயக்கமும் அச்சமுமின்றி அரீமினத்தை நோக்கிச் சென்றார். அரசாங்கத்துக்கு எதிராக, இத்தாலி மீது படையெடுப்பதற்கு ஒப்பாகும் அது. சீசரின் தூரத்து உறவினரான லூசியஸ் சீசர் என்பவரும் பிரேட்டர் ஒருவரும் அரீமினத்தில் சீசரைச் சந்தித்துச் சமரசம் செய்ய முயன்றனர். ஆனால், அதனால் எவ்வித பயனும் ஏற்படவில்லை. இத்தாலியிலுள்ள தனது படைகளைப் பாம்பே கலைத்துவிட்டு ஸ்பெயினுக்குச் செல்ல வேண்டுமென்றும், அப்பொழுது தாமும் தமது மாநிலங்களுக்குத் திரும்பிச் செல்வதாகவும் சீசர் கூறினார். ஆயினும், அவ்வாறு சமரச முயற்சிகள் நடந்துகொண்டிருந்த பொழுதே அவர் ரோமை நோக்கி முன்னேறிப் பல நகரங்களையும் ஒவ்வொன்றாகக் கைப்பற்றிக் கொண்டிருந்தார். பிசாரம் (Pisaurum), பேனம் (Fanum), அங்கோனு (Ancona) ஆகியவை கைப்பற்றப்பட்டன. எட்ருரியாவின் வழியாகப் பாம்பேயின் துருப்புகள் வருவதைத் தடுப்பதற்கென அர்ரேடியத்தைக் (Arretium) கைப்பற்றும்படி அப்பெனின் மலைகளைக் கடந்து அனுப்பி வைக்கப்பட்டார் அன்ட்டோனியஸ். ரோமுக்குச் செல்லும் அப்பெனின் கணவாயின் வாயிலில் இருந்த இகூவியத்தைக் (Iguvium) கைப்பற்றுவதற்கு கியூரியோ அனுப்பப்பட்டார். ஆக்சிமம் (Auximum) என்ற நகரத்தில் அரசாங்கத்தின் துருப்புத் தங்கி இருந்தன. ஆனால், நகர மக்கள் அவற்றை விரட்டி விட்டு, சீசரை வரவேற்றனர். ஐந்தே நாட்களில் (அதாவது ஜனவரி 18-ந் தேதிக்குள்) வெகுதூரம் முன்னேறி விட்டார் சீசர். அவரது வெற்றிகள் ரோம் நகரில் பெரும் பரபரப்பையும் பீதியையும் தோற்றுவித்தன.

பாம்பேயும் பிரபுக்களும் : டிரிபியூன்கள் இருவரை செனேட்டிலிருந்து வெளியேற்றி, சர்வாதிகாரத்தை அதிகாரிகளுக்கு அளித்தபோதே உள்நாட்டுப் போர் தவிர்க்க முடியாதது என்பதை உணர்ந்திருந்தனர் செனேட்டர்கள். எனவே, இத்தாலியிலும் சிசிலியிலும் தற்காப்பு நடவடிக்கைகளை மேற்கொண்டனர். சிரியாவை மெட்டலஸ் சிப்பியோவுக்கும், டிரான்சால்ப்பைன் காலை அஹெனோபார்பஸுக்கும் அளித்தனர். துருப்புகளும் உடனே திரட்டப்பட்டன. பாம்பேயிடம் இரு படைகள் (லீஜின்கள்) இருந்தன. ஆனால், அவை அப்பூலியாவில் குளிர் காலத்துக்காகத் தங்கியிருந்தன. அவற்றை அழைப்பதற்கும், அல்லது புதிய படைகளைத் திரட்டுவதற்கும் சில வாரங்கள் பிடிக்கும். இதை அறிந்துதான் ஒரே படையோடு 13-ந் தேதியன்று இத்தாலிக்குள் நுழையத் துணிந்தார் சீசர்.

அதற்குள் இத்தாலியில் வேறு பலரும் தனது படையணியில் சேருவர் என்பதையும் அவர் அறிவார்.

ஜனவரி 7-ந் தேதியன்று செனேட் கூட்டம் முடிவுற்ற உடனேயே புதிய படைகளைத் திரட்டுவதற்கென்று ரோமை விட்டுச் சென்றார் பாம்பே. ஐந்து லீஜின்கள் விரைவிலேயே திரட்டப்பட்டன. ஆயினும், சீசரின் வெற்றிகளும் துரிதமான முன்னேற்றமும் பிரபுக்களை நடுங்கச் செய்தன. எனவே, கருவூலத்திலிருந்த பணத்தைக்கூட எடுத்துக்கொள்ளாமல் அவசர அவசரமாக 18-ந் தேதியன்று அவர்கள் ரோமைவிட்டு வெளியேறிப் பாம்பேயுடன் சேர்ந்து கொண்டனர்.

இவ்வாறு உயர் அதிகாரிகள், செனேட்டர்கள், வேறு பல பிரபுக்கள் ஆகியோர் பாம்பேயுடன் கம்பேனியாவில் திரண்டிருந்த வேளையில்தான் ஜூலியஸ் சீசரின் பதிலை எடுத்துக் கொண்டு லூசியஸ் சீசர் அங்கு வந்துசேர்ந்தார். இத்தாலியில் கைப்பற்றியுள்ள நகரங்களிலிருந்து சீசர் முதலில் விலகிச் செல்லவேண்டும் என்றனர் பாம்பேயும் கான்சல்களும். இத்தாலியில் படைதிரட்டுவதை நிறுத்தி, ஸ்பெயினுக்கு பாம்பே முதலில் செல்ல வேண்டும் என்றார் சீசர். இவ்வாறான பேச்சுவார்த்தைகள் தோல்வியில் முடிந்தன.

இத்தாலி, 'தமக்கு நிலைமை சாதகமாய் இல்லை' என்பதைக் கண்ட பாம்பேயும் செனேட்டர்களும் கிரீஸுக்குச் செல்ல முடிவு செய்தனர். கிழக்கு மாநிலங்களிலிருந்து படைகளும் கப்பல்களும் தமக்குக் கிடைக்கும் என்பது அவர்களின் எண்ணம். இந்நோக்கத்தோடு பிப்ரவரி 20ந்தேதியன்று புருண்டீசியம் (Brundisium) சென்று சேர்ந்தார் பாம்பே. அவரது ஐந்து படைகளும் அங்கு வந்து சேர்ந்தன. தங்களைக் கிரீசுக்குச் செல்ல வொட்டாமல் தடுப்பதற்குச் சீசர் படையுடன் வரக்கூடும் என்பதை உணர்ந்து, அவரை இடைமறிப்பதற்கென அஹெனோபார்பஸின் தலைமையில் இரு லீஜின்கள் திரட்டப்பட்டு அனுப்பப்பட்டன. அப்படை கோர்பினத்தைக் (Corfinum) கைப்பற்றி, சீசரது வருகைக்காகக் காத்திருந்தது. ஆனால், சீசர் வந்ததும் அஹெனோபார்பஸின் படை வீரர்கள் போரிட மறுத்துச் சீசரோடு சேர்ந்துகொண்டனர். அஹெனோ பார்பஸையும் சீசரிடம் அவர்கள் ஒப்படைத்தனர். ஆனால், சீசர் அவரை விடுதலை செய்துவிட்டு, ஆறுபடைகளோடும் 1000 குதிரைவீரர்களோடும் மார்ச் மாதம் 8-ஆம் தேதி புருண்டீசியத்தை அடைந்தார். இரண்டு கான்சல்களும் அவர் தம் படையில் பெரும்பகுதியும் ஏற்கெனவே கடலைக்கடந்து

சென்றுவிட்டனர். தன்னையும் தன்னிடமிருந்த இரண்டு படைகளையும் ஏற்றிச் செல்வதற்குக் கப்பல்கள் திரும்பி வரும்வரை காத்திருந்தார் பாம்பே. பயனற்ற பேச்சு வார்த்தைகள் மீண்டும் துவங்கின. முடிவில் துறைமுகத்தைக் கைப்பற்றி, பாம்பேயைக் கப்பலேறமுடியாமல் தடுத்துவிடச் சீசர் முயன்றார். எனினும், பாம்பே 18-ந்தேதி இரவில் கப்பலேறித் தப்பிச் சென்றார்.

ரோமில் சீசர், கி.மு. 49 மார்ச் : அவரைப்பின் தொடர்ந்து செல்வதற்குத்தேவையான கப்பல்கள் சீசரிடம் இல்லை. மேலும், தானியக் களஞ்சியங்களான சிசிலியையும் சார்டினியாவையும் கைப்பற்றுவதிலும் தனது அதிகாரத்தை ரோமில் நிறுவுவதிலும் முதலில் தமது கவனத்தைச் செலுத்தச் சீசர் விரும்பினார்.

வெலேரியஸ் (Q. Valerius) என்பவரின் தலைமையில் ஒரு படை சார்டினியாவுக்கு அனுப்பப்பட்டது. கியூரியோ சிசிலிக்குச்சென்று, கேட்டோவைத் (Cato) தோற்கடித்து, அத்தீவைக் கைப்பற்றினர். மார்ச் மாத இறுதியில் ஆறுபடைகளோடு ரோமுக்குச் சென்றார் சீசர். அங்கு அவர் ஏதாவது ஒரு முறைப்படி ஆட்சியுரிமையைத் தன் கையில் எடுத்துக்கொள்ள விரும்பினர். சர்வாதிகாரியாக ஆறுமாதங்கள் இருந்து, பின்னர் கான்சலாகத் தன்னைத் தேர்ந்தெடுப்பதற்கு வழி செய்யலாம் என்று கருதினர். ஆனால், கான்சல் ஒருவருக்குத்தான் சர்வாதிகாரியை நியமிக்கும் அதிகாரம் இருந்தது. அப்பொழுது ரோமில் கான்சல் ஒருவரும் இல்லை. ஏமிலியஸ் லெப்பிடஸ் (Lepidus) என்ற பிரேட்டர் மட்டுமே அப்பொழுது அங்கிருந்த உயர் அதிகாரியாவார். சீசரோவை அவர் கலந்து ஆலோசித்தபோது, சர்வாதிகாரியை நியமிக்கும் அதிகாரம் அப்போது ரோமிலிருந்த பிரேட்டருக்குக் கிடையாது என்பது உறுதிப்பட்டது. இந்நிலையில் ரோமில் எஞ்சியிருந்த செனேட்டர்கள் சீசரின் படைத் தலைவர்களுக்கு சார்டினியாவிலும் சிசிலியிலும் முறைப்படி சில அதிகாரங்களை அளித்தனர். ஆயினும், சீசரின் பதவிபற்றி ஒரு முடிவும் மேற்கொள்ளவில்லை.

சீசர் ஸ்பெயினுக்குச் செல்லுதல் : ரோமில் காலத்தை விரயமாக்க விரும்பவில்லை சீசர். ரோம் நகரை லெப்பிடஸின் பொறுப்பிலும், இத்தாலியை அன்டோனியஸின் (டிரிபியூனாக இருந்தார் இவர்) பொறுப்பிலும் விட்டுவிட்டு டிரான்சால்ப்பைன் காலுக்கு விரைந்தார் சீசர். கோர்பினத்தில் சீசரால் விடுவிக்கப்பட்டபின், எட்ரூரியாவில் கோசாவுக்குச் (Cosa)

சென்று சில கப்பல்களைத் திரட்டிக்கொண்டு, செனேட்டால் தமக்கு அளிக்கப்பட்டிருந்த மாநிலமான டிரான்சால்ப்பைன் காலுக்கு அஹெனோபார்பஸும் சென்று கொண்டிருந்தார். அவருக்குமுன் அம்மாநிலத்தைத் தம் வசப்படுத்திக்கொள்வது சீசரின் நோக்கமாகும். ஆனால், மார்சேல்ஸ் (Marseills) நகரம் சீசரை அனுமதிக்க மறுத்தது. (ரோமுடன் நட்புடன்படிக்கை செய்துகொண்ட, சுயாட்சியுரிமை பெற்ற நகரம் மார்சேல்ஸ்). அதே சமயம் அஹெனோ பார்பஸ் வந்தபோது அவரை அனுமதித்து, நகரின் படைத்தலைமையையும் அவரிடம் ஒப்புவித்தது.

இவ்வாறு பாம்பேயின் கட்சியில் சேர்ந்துவிட்ட அந்நகரைக் கைப்பற்ற முடிவு செய்தார் சீசர். விரைவிலேயே மரங்கள் வெட்டப்பட்டு, முப்பதே நாட்களில் பன்னிரண்டு போர்க் கப்பல்கள் கட்டப்பட்டன. டெசீமஸ் புரூட்டஸ் (Decimus Brutus) என்பவர் கடற்படைத் தலைவராக்கப்பட்டார். அதே சமயம் மார்சேல்ஸ் நகரைச்சுற்றித் தரையிலும் அரண்கள் கட்டப்பட்டு, ட்ரெபோனியஸ் (Trebonius) என்பாரின் தலைமையில் தரைப்படை ஒன்றும் அந்நகரை முற்றுகையிட்டது.

ஆனால், சீசரின் பிரதான நோக்கம் ஸ்பெயினைக் கைப்பற்றுவதாகும். பாம்பேயின் வசம் அதை விட்டுவைக்க அவர் விரும்பவில்லை. அதன் புரோகான்சலாகப் பாம்பேயின் படைத் தலைவர்களான ஆப்பிரிக்கானஸ் (L. Africanus), பெட்ரேயஸ் (M. Petreius), டெரென்ஷியஸ் வேரோ (M. Terentius Varro) ஆகியோர் அப்போது ஸ்பெயினில் இருந்தனர்.

பேபியஸ் (Fabius) என்பவரின் தலைமையில் தரை வழியாக ஒரு படையை முதலில் அனுப்பிவைத்த சீசர், பின்னர் தாமும் ஸ்பெயினுக்குப் புறப்பட்டுச் சென்றார். அங்கு வெள்ளம் காரணமாகவும் பகைவரின் திறமை காரணமாகவும் பேபியஸும் சீசரும் தவித்தனர். சிறுசிறு தோல்விகளும்கூட அவர்களுக்கு ஏற்பட்டன. 'சீசர் தோற்றுவிட்டார்' என்ற வதந்தி ரோமில் பரவியது. ரோமில் ஆப்பிரிக்கானஸின் மாளிகைக்குச் சென்று, தமது மகிழ்ச்சியையும் பாராட்டுதலையும் பலர் தெரிவித்துக்கொண்டனர். இதுவரை பாம்பேயின் கட்சியில் சேராமல் ஊசலாடிக்கொண்டிருந்த பலர், அவரது முகாமை நோக்கிக் கிரீஸுக்குச் சென்றனர். ஜூன் 11ந்தேதி சிசரோவும் அவ்வாறே இத்தாலியைவிட்டுச் சென்றார்.

ஆனால், விரைவிலேயே ஸ்பெயினில் நிலைமை மாறியது. காலிலிருந்து புதிய படையும் தேவையான பொருட்களும் வந்து

சேர்ந்தன. வெள்ளத்தால் உடைந்துபோயிருந்த பாலங்கள் பழுது பார்க்கப்பட்டன. ஆப்பிரிக்கானஸும் பெட்ரேயஸும் எப்ரோ (Ebro) நதிக்குத் தெற்கில் செல்ல முயன்றபோது, சீசரது படை அவர்களை எட்டிப்பிடித்தது. அவர்களது படை வீரர்களும் சீசரை எதிர்த்துப் போரிட விரும்பவில்லை. எனவே அவ்விருவரும் சீசரிடம் பணிய முன்வந்தபோது அவர்களை எவ்வித இடையூறுமின்றி ஸ்பெயினிலிருந்து வெளியேற அனுமதித்தார். அவர்கள் கிரீஸுக்குச்சென்று பாம்பேயுடன் சேர்ந்து கொண்டனர். பாம்பேயின் மூன்றாவது படைத் தலைவரான வேரோ தெற்கு ஸ்பெயினை (அப்பொழுது பேட்டிகா (Baetica) என்று (அப்பகுதி அழைக்கப்பட்டது) ஆண்டுவந்தார். தனது படைகளும் மக்களும் சீசரையே ஆதரிப்பதை உணர்ந்த அவரும் சீசருக்குப் பணிந்தார். ஜூன். ஜூலை, ஆகஸ்ட் ஆகிய மூன்றே மாதங்களில் ஸ்பெயின் முழுவதும் சீசருக்குப் பணிந்தது.

இவ்வாறு ஸ்பெயின் முழுவதையும் கைப்பற்றியபின், மார்சேல்ஸ் நகருக்குத் திரும்பினார் சீசர். அக்டோபர் மாதத் துவக்கத்தில் அந்நகரும் சரணடைந்தது. அஹெனோபார்பஸ் தப்பி ஓடிவிட்டார். ஆயினும், ஏராளமான செல்வமும் போர்க் கருவிகளும் சீசர்வசம் சிக்கின.

இவ்வாறு சீசர் கி.மு. 49-ஆம் ஆண்டில் ஜூன் முதல் அக்டோபர் வரையிலான குறுகியகாலத்தில் ஸ்பெயின், கால் ஆகிய இரு பகுதிகளையும் வென்றுவிட்டார். அதே சமயம் சாரடீனியாவும் சிசிலியும்கூட அவரது படைத்தலைவர்களால் கைப்பற்றப்பட்டன. ஆப்பிரிக்காவில் மட்டும்தான் அவருக்குத் தோல்வி ஏற்பட்டது. ஆக்சிமத்திலிருந்து மக்களால் விரட்டியடிக்கப்பட்ட செனேட் படையின் தலைவர் அட்டியஸ் வேரஸ் (Attius Varus) என்பவரும் நுமீடியாவின் மன்னரான ஜூபா (Juba) என்பவரும் செனேட் கட்சிக்கென அங்குப் படை திரட்டித் தயாரா யிருந்தனர். சிசிலியைக் கைப்பற்றிய பின், அங்குச்சென்ற கியூரியோவைத் தோற்கடித்துக் கொன்றனர்.

சீசர் கான்சலாதல்: இவ்வெற்றிகள் ரோமில் சீசரின் கரத்தை மேலும் வலுப்படுத்தின. வழக்கொழிந்துபோன பழைய சட்டம் ஒன்றைத் தேடிக் கண்டுபிடித்து, தேர்தல் நடத்துவதற்கான சர்வாதிகாரியாகச் சீசரை நியமித்தார் லெப்பிடஸ். பிரேட்டர் ஒருவரால் சர்வாதிகாரி நியமிக்கப்பட்டது எச்சட்டத்துக்கும் பொருந்தாத ஒன்று. ஆயினும், அப்பொழுதிருந்த நிலையில் சீசருக்கு எதிராகச் சட்டம் பேசுவது முடியாது.

சர்வாதிகாரியாக நியமிக்கப்பட்டபொழுது ஸ்பெயினிலிருந்த சீசர் (சர்வாதிகாரி ஒருவர் இத்தாலியை விட்டுச் செல்வதற்கும் சட்டம் இடங்கொடுக்கவில்லை.) மார்சேல்ஸ் நகரைக் கைப் பற்றியபின் இத்தாலி திரும்பினர். அங்குத் தேர்தலை நடத்தி, கி.மு. 48-ஆம் ஆண்டுக்கான கான்சல்களாகத் தம்மையும் செர்வீலியஸ் வேட்டியா (Servilius Vatia) என்பவரையும் தேர்ந் தெடுக்குமாறு செய்தார்.

சல்லாவின் சட்டம் ஒன்றின்படி கான்சல்கள் ரோமை விட்டு எங்கும் செல்லக்கூடாது. ஆனால், சீசர் ரோமில் பதினேர் நாட்கள் மட்டுமே தங்கினர். ஆயினும் அப்பதினேரு நாட் களில் முக்கியமான இரு சட்டங்களை இயற்றினர். ஒன்று டிரான்ஸ் பாடேன் காலில் வசித்த மக்களுக்கு வாக்குரிமை யளித்தது. மற்றது கடன்காரர்களுக்கு நிவாரணம் அளித்தது. பின்னர், அன்ட்டோனியஸின் (இவரே அன்ட்டோனி என்றும் அழைக்கப்படுகிறார்) கையில் சில அதிகாரங்களை ஒப்பு வித்துவிட்டு, புருண்டீசியத்துக்கு விரைந்தார் சீசர். அங்கு அவரது படைத்தலைவர் ஒருவர் ஏற்கனவே படையொன்றைத் திரட்டித் தயாராக வைத்திருந்தார்.

பாம்பேயுடன் போருக்குச் செல்லுதல், கி.மு. 48 : ஜனவரி 4-ந் தேதியன்று எப்பைரஸுக்குக் கப்பலேறினர் சீசர். பாம் பேயின் பெரிய கடற்படையானது பிபூலஸின் (Bibulus) தலை மையில் அப்பகுதியில் விழிப்பாகச் சுற்றிக் கொண்டிருந்தது. எனவே, மிகுந்த சிரமத்தோடு எதிர்க்கரையை அடைந்து ஆரிக்கம் (Oricum) என்ற விடத்தில் கரையிறங்கினர். அங்கி ருந்து அப்போலோனியாவை (Apollonia) நோக்கி முன்னே றியது அவரது சிறுபடை. அந்நகரின் மக்கள் சீசரை வரவேற் றனர். பாம்பேயின் படைகள் பின்வாங்கின. அடுத்தபடியாகப் பகைவரின் ஆயுதக் கிடங்குகள் இருந்த டிராச்சியம் நகரை (Dyrrachium) நோக்கிச் சென்றார் சீசர். ஆனால், அதன் மீதான அவரது தாக்குதல்களும் முறியடிக்கப்பட்டன. மேலும், சீசருக்குப் புதிய படைகளும் பண்டங்களும் இத்தாலியிலிருந்து வருவதைத் தடை செய்தது பாம்பேயின் கடற்படை. இறுதியில் பல மாதங்களுக்குப் பிறகே நான்கு லீஜின்களோடும் 800 குதிரைகளோடும் அன்டோனியஸ் வந்து சேர்ந்தார். இதனால், சீசரின் படைபலம் ஓரளவு அதிகரித்தது. ஆயினும், பாம்பேயின் படைகளின்மீது சீசர் தொடுத்த பலதாக்குதல்களும் தோல் வியில் முடிந்தன.

இந்நிலையில் மெட்டலஸ் சிப்பியோ சிரியாவிலிருந்து புதிய படைகளோடு தெசாலிக்கு வருவதாகச் சீசருக்குச் செய்தி கிடைத்தது. அவரைத் தடுத்து நிறுவதற்காகச் சீசர் புறப்பட்டார். ஆனால், அவருக்கு முன்னதாகவே பாம்பே சென்று சிப்பியோவுடன் சேர்ந்து கொண்டார். பின்னர் சீசர் சென்றடைந்திருந்த பார்சாலஸ் (Pharsalus) நகரைநோக்கிப் பாம்பே வந்தார்.

அந்நகருக்கு நான்கு மைல் வெளியே இருவருக்கும் கடும் போர் ஒன்று ஜூன் 29-ந் தேதி நடைபெற்றது; பாம்பேயின் படையில் பாதியளவே இருந்தது சீசரின் படை. எனினும், சீசரின் பயிற்சி மிக்க ரோமானிய லீஜின்களோ பாம்பேயின் புதிய படைகள் எதிர்த்து நிற்கமுடியவில்லை. கிரேக்கர், யூதர், கலேஷியர், ஆர்மீனியர், கப்படோஷியர் முதலிய பல் வேறு மக்களும் பாம்பேயின் படையில் இருந்தனர். தனது படைக்குத் தோல்வி ஏற்படும் என்ற நிலையை உணர்ந்த உட னேயே பாம்பே போர்க்களத்தை விட்டு வெளியேறினர்.

பாம்பேயின் முகாமைத் தாக்கி அவரைச் சிறைப்பிடிக்க விரைந்து வந்தார் சீசர். ஆயினும், அவர் வருவதற்கு முன்பா கவே பாம்பே பின்புறவாயில் வழியாகத் தப்பிச் சென்று லாரிசா (Larissa) நகருக்கு ஓடி, அங்கிருந்த சில நண்பர்களையும் அழைத்துக்கொண்டு, பெனூவஸ் (Peneus) நதியில் ஒரு படகில் ஏறிக் கடற்கரையை அடைந்து ஆம்பிபோலிஸுக்குச் (Amphipolis) செல்வதற்குத் தயாராக அங்குக் காத்திருந்த ஒரு தானியக் கப்பலில் ஏறி லெஸ்பாஸுக்குப் (Lesbos) போனார். அவரது மனைவியும் இளைய மகனும் அங்கு இருந்தனர். அங்கு இரண்டுநாட்கள் தங்கியபின், மேலும் சில கப்பல்களையும் திரட்டிக்கொண்டு ஆசியாவுக்குப் புறப்பட்டார். வழியில் அட்டேலியாவில் (Attaleia) அறுபது செனேட்டர்களும் வேறு பலரும் அவருடன் சேர்ந்து கொண்டனர். அங்கிருந்து சைப்ரஸ் சென்றபோது எதிர்க்கரையிலிருந்த ஆன்ட்டியோக் (Antioch) நகரில் அவரது வருகைக் கெதிராகத் தற்காப்பு நட வடிக்கைகளை மக்கள் மேற்கொண்டிருக்கின்றனர் என்ற செய்தி அங்கு அவருக்குக் கிடைத்தது. இவ்வாறே யாரும் தன்னை வர வேற்கத் தயாரில்லை என்பதை உணர்ந்து சில மாதங்களுக்கு முன்பு சிரியாவில் தன்னிடமிருந்து சில சலுகைகளைப் பெற்ற பார்த்தியாவுக்குச் செல்லத் திட்டமிட்டார். ஆயினும், பின்னர் மனத்தை மாற்றிக்கொண்டு எகிப்துக்குப் புறப்பட்டார்.

அகற்றி, அவர்களைத் தண்டிக்கத் துணிந்த இரண்டு டிரிபியூன்களைப் பதவியிலிருந்து நீக்கினார் சீசர். ரோமின் ஆட்சியுரிமையானது தமது குடும்பத்துக்கே உரிமையாக இருக்க வேண்டுமென்று கருதினார் சீசர். அதே நோக்கத்தோடு, தமக்குப்பின் ஆட்சிப் பொறுப்பை மேற்கொள்வதற்கான தமது வாரிசாக ஆக்டேவியஸை (Octavius) உருவாக்கி வந்தார் அவர். சீசரின் மரணத்துக்குப்பின் வெளிவந்த அவரது இறுதி ஏற்பாடு (Will) இதை மெய்ப்பித்தது.

இவ்வாறு சீசருடைய சர்வாதிகாரமும் இரகசிய உள் நோக்கங்களும் பிரபுக்களுக்கும் ஈக்வைட்டுகளுக்கும் ஆத்திரமூட்டின. ஈக்வைட்டுகளின் ஆளான அவர் மலிவு தானியங்களை ஏழைகளுக்கு வழங்குவதில் பலவிதமான கட்டுப்பாடுகளைப் புகுத்தினார். இதனால் ஏழைகளில் ஒரு பகுதியினரும் சீசரை வெறுத்தனர். ஆயினும், சீசருக்கெதிரான சூழ்ச்சிகளில் ஈடுபட்டவர்கள் அனைவரும் பிரபுக்களும் ஈக்வைட்டுகளுமே. பிரபுக்களை ஆட்சி பீடத்திலிருந்து அகற்றிய பின்னரும், தாம் ஆட்சியை மேற்கொள்வதற்கு இடந்தராமல் சீசர் சர்வாதிகாரம் புரிந்தது ஈக்வைட்டுகளில் ஒரு பகுதியினருக்குப் பிடிக்கவில்லை.

அவரைக் கொல்வதற்கான சதியில் ஈடுபட்டவர்கள் சுமார் எழுபது பேர். அவர்களில் முக்கியமான நான்கு பேர்களைப்பற்றி மட்டுமே சிறிது பார்ப்போம். அவர்களில் முதன்மையானவர் ஜூனியஸ் புரூட்டஸ் (M. Junius Brutus). முன்பு ரோமிலிருந்து கொடுங்கோல் மன்னர்களை விரட்டியடித்த புரூட்டஸின் பெயரைத் தாங்கிய இவர், தம் பெயருக்கேற்ப இப்பொழுதும் சர்வாதிகாரச் சீசரை விரட்டியடிக்க வேண்டும் என்று கூறும் வாசகங்கள், நகரின் தெருக்களிலும் சுவர்களிலும் பலமுறை காணப்பட்டன. இந்த ஜூனியஸ் புரூட்டஸ் கி. மு. 44ல் பிரேட்டர்களில் ஒருவராகப் பதவி ஏற்றார். அவருக்கு அடுத்தபடியாக குறிப்பிடத்தக்கவர் கேசியஸ் என்பவர் (C. Cassius Longirus). அவரும் ஒரு பிரேட்டரே. அவர் புரூட்டஸின் சகோதரியை மணந்திருந்தார். இருவருமே முன்பு பாம்பேயின் அணியில் நின்று சீசருக்கெதிரான போர்களில் பங்கு கொண்டவர்கள். புரூட்டஸின் அன்னையிடம் மிகுந்த அன்பு பாராட்டிய சீசர் இவர்கள் இருவரையும் மன்னித்தது மட்டுமன்றி, பல உயர்ந்த பதவிகளிலும் இவர்களை அமர்த்தினார். பிரேட்டர் பதவி முடிந்ததும் புரூட்டஸை மாசிடோனியாவுக்கும், கேசியஸைச் சிரியாவுக்கும் கவர்னர்களாக அமர்த்தினார் சீசர்.

மூன்றாவது சதிகாரர் டெசிமஸ் புரூட்டஸ் (Dezimus Brutus). இவர் காலிலும், பின்னர் உள்நாட்டுப் போரின் போதும் சீசருக்கு விசுவாசத்தோடு பணி புரிந்தவர். பின்னர், காலில் படைத் தலைமை

பூண்டிருந்தவர். சீசருக்கு மிகவும் பிடித்தமான இவர் தாம் ஆக்டேவியஸுக்கு அடுத்த வாரிசாக (அதாவது ஆக்டேவியஸக்குக் ஆண் பிள்ளையில்லா மற்போனால்). ஆட்சிபீடம் ஏறக்கூடியவராகத் தம் இறுதிஏற்பாட்டில் சீசரால் குறிப்பிடப்பட்டிருந்தார். கி. மு. 42 ஆம் ஆண்டுக்கான கான்சலாகவும் அவரைச் சீசர் அமர்த்தியிருந்தார். அவ்வாறிருக்க அவர் ஏன் சதிகளில் பங்குகொண்டார் என்பது புரியவில்லை. பாம்பேயைத் தீவிரமாக ஆதரித்த ஒருவருடைய மகளை இவர் மணந்துகொண்டது ஒருவேளை இதற்குக் காரணமாயிருக்கலாம். நான்காவது ஆள் **டிரபோனியஸ்** (C. Trebonius), இவரும் பிரேட்டராகவும், ஸ்பெயினில் தளபதியாகவும் கான்சலாகவும் இருந்தவர். கி. மு. 44-ல் ஆசியாவுக்கான கவர்னராகவும் சீசரால் அமர்த்தப் பட்டிருந்தார். இவ்வாறு சீசரால் பெரிதும் ஆதரிக்கப் பட்டு, உயர்பதவிகளெல்லாம் அளிக்கப்பட்டவர்களே சூழ்ச்சிகளில் முன்னணியில் நின்றனர். தன்னலக்காரப் பிரபுக்களும் ஈக்வைட்டுகளும் பின்னணியில் இருந்து கொண்டு இவர்களை ஊக்குவித்தனர்.

சீசர் கொலை செய்யப்படுதல் : இச் சதியில் சுமார் 70 பேர் தொடர்புகொண்டிருந்தனர். எனவே அதுபற்றிய செய்திகள் ஓரளவில் பலருக்குத் தெரிந்திருந்தன. விழிப்போடு இருக்க வேண்டுமென்று சீசரையும் பலர் முன்கூட்டியே எச்சரித்திருந்தனர். மார்ச் 15-ந்தேதி செனெட்டில்தான் தமக்குக் கேடு விளையப் போகிறது என்பதைச் சீசரும் ஒருவேளை உணர்ந்திருக்கக்கூடும். மார்ச் 15-ந்தேதியைப் (Ides of March) பற்றி விழிப்புடனிருக்கவேண்டும் என்று ஒரு ஜோசியர் சொல்லியதாகவும், கெட்டசகுனங்கள் பல காணப்பட்டதாகவும் பின்னர் எழுதப்பட்டன. அவருடைய மனைவி கெட்ட கனவுகளைக் கண்டாராம். எனவே, அன்றைக்குச் செனெட் கூட்டத்திற்குச் செல்வதில்லைஎன்று அவர் முடிவு செய்திருந்தார். அவர் வராததைக் கண்ட சதிகாரர்கள் அவருக்கு உண்மை தெரிந்திருக்கக் கூடும் என்று அஞ்சி, உண்மையை அறிந்துவர டெசிமஸ் புரூட்டஸைச் சீசரிடம் அனுப்பினர்.

உண்மை எதுவும் சீசருக்குத் தெரியாது ஏன்பதை அறிந்த புரூட்டஸ், அவரைப் போன்ற ஒரு அஞ்சா நெஞ்சர் வெறும் வதந்திகளைமட்டும் நம்பிச் செனெட் கூட்டத்துக்குச் செல்ல அஞ்சுவது ஆண்மையாகாது என்று கூறி அவரது மனத்தை மாற்றினார். பதினொரு மணி சுமாருக்குச் செனெட்டுக்குப் புறப்பட்டார் சீசர். வீட்டில் புறப்படும்பொழுதே அவரது சிலைஒன்று விழுந்து உடைந்ததாம் தெருக்களில் மக்கள் அவரைச் சூழ்ந்துகொண்டு கேடுவரும் என்று உணர்த்தும் கடிதங்களை அவர்கையில் திணித்தனர். ஆனால், சீசர் அவற்றைப் படிக்காமலேயே அருகிலிருந்த தம் அதிகாரியிடம் அவற்றைக் கொடுத்துவிட்டார்.

தகராறுகளையும் தீர்த்து வைக்கச் சீசர் முற்பட்டார். அப்போது அவர் கிளியோபாட்ராவின் பேரழகில் மயங்கினர். 'தாலமியும் கிளியோபாட்ராவும் சேர்ந்தே எகிப்தை ஆளவேண்டும்' என்று தீர்ப்புக் கூறினர் அவர்.

தாலமியின் அமைச்சரான போத்தினஸ் (Pothinus) என்பவருக்கு இது சம்மதமில்லை. எனவே, பெலூசியத்திலிருந்த படைத் தளபதி அக்கிலாஸுடன் சேர்ந்து சதிகளில் ஈடுபடலானார். அதன் விளைவாக அக்கிலாஸ் தமது படையுடன்வந்து சீசர் இருந்த அலெக்சாந்திரியா நகரை முற்றுகையிட்டார். அந்நகருடன் இழுப்புப் பாலம் ஒன்றின் மூலமாகத் தொடர்பு கொள்ளக்கூடிய பாரோஸ் (Pharos) என்ற சிறு நகருக்குச் சீசரின் வாங்க வேண்டியதாயிற்று. தாலமியும் கிளியோபாட்ராவும் அவருடன் இருந்தனர். தாலமியின் பெயரில் அக்கிலாஸுக்குத் தூதர்களை அனுப்பினர் சீசர். ஆனால், அவர்களையும் அவமதித்துத் திருப்பி அனுப்பிவிட்டார் அக்கிலாஸ். இதற்கெல்லாம் போத்தினஸின் சதிவேலைகள்தாம் காரணம் என்பதை அறிந்த சீசர் அவரைக் கொல்வித்தார்.

அலெக்சாந்திரியாவைக் கைப்பற்றிய அக்கிலாஸ் கிளியோபாட்ராவின் சகோதரியான அர்சினே (Arsinoe) என்பவரை அரசியாக்கினர். அவ்வாண்டின் இறுதியில் (கி.மு. 48) அர்சினேவுடன் பேச்சுவார்த்தைகள் நடத்தி, தகராறுகளைச் சமரசமாகத் தீர்த்துக்கொள்வதற்காக அலெக்சாந்திரியாவுக்குச் செல்லத் தன்னை அனுமதிக்குமாறு தாலமி சீசரை வேண்டிக் கொண்டார். ஆனால், அலெக்சாந்திரியா சென்றபின்னர் அர்சினேவுடன் சேர்ந்துகொண்டு சீசருக்கெதிராக அவர் போர் தொடுத்தார்.

கி.மு. 47 மார்ச்சில் பெர்கமத்தைச் சேர்ந்த மித்ரடேட்டஸின் தலைமையில் சீசருக்குதவியாகப் பெலூசியத்தில் படை ஒன்று வந்திறங்கியது. அவரை எதிர்த்து விரட்டுவதற்குத் தாலமி புறப்பட்டார். உடனே, சீசர் மித்ரடேட்டஸுக்கு உதவியாகச் சென்று, தாலமியை முறியடித்தார். தோற்று ஓடிய தாலமி மார்ச் 27-ந் தேதியன்று நீரில் மூழ்கி இறந்து போனார். விரைவிலேயே அலெக்சாந்திரியாவும் பிடிபட்டது. கிளியோபாட்ராவை எகிப்திய அரசியாக்கினர். கிளியோபாட்ராவின் மற்றொரு தம்பியான சிறு பிள்ளை ஒருவன், 8-ஆம் தாலமி என்ற பட்டத்தோடு அவரது இணையரசராகவும், கணவராகவும் ஆக்கப்பட்டார். மூன்று ஆண்டுகளுக்குப் பின்னர், கி.மு. 43-ல்

8-ஆம் தாலமியும் கொலைசெய்யப்பெற்றார். இந்த அரசியார் சீசருக்கு அடிமை யாயினர். எகிப்தும் ரோமுக்கு அடிமைப் பட்டது.

ரோமில் நிலவரம் : சீசரின் கான்சல் பதவிக்காலம் கி.மு. 48-ஆம் ஆண்டோடு முடிவுற்றது. உடனே, அவரை ஓராண்டுக் காலத்துக்குச் சர்வாதிகாரியாக ஆக்கினர் அவரது ஆட்கள். மேலும், ஆயுட்காலம் முழுவதும் டிரிபியூனின் அதிகாரம் (பதவி அல்ல) அவருக்குக் கொடுக்கப்பட்டது. ஐந்தாண்டுகள் தொடர்ச்சியாகக் கான்சலாக இருப்பதற்கும் அவருக்கு உரிமை யளிக்கப்பட்டது. ஆயினும், பலர் சீசரின் ஆதிக்கத்துக்குத் தொல்லையா யிருந்துவந்தனர். சான்றாக, கி.மு. 48-ல் பிரேட்டராயிருந்த கேலியஸ் (Caelius) என்பவர் சீசரைவிடவும் அதிகமான சலுகைகளைக் கடன்காரர்களுக்கு அளித்து மக்களது ஆதரவைப் பெற முயன்றார். சீசரின் ஆட்கள் அவரை ரோமிலிருந்து விரட்டினர். தென் இத்தாலியில் கிளர்ச்சியில் ஈடுபட்டிருந்த மிலோவுடன் அவர் சேர்ந்துகொண்டார். பின்னர், அவர்கள் இருவரையுமே கொன்று தீர்த்தனர் சீசரின் ஆட்கள். அதேபோல், கொர்னீலியஸ் டொலபெல்லா (Dolabella) என்ற டிரிபியூன் ஒருவரும் சீசருக்கு இடையூறாக இருந்துவந்தார். பெட்ரீஷியரான இவர், குளோடியஸைப்போல் பிளெபியக் குலத்தில் சேர்ந்து டிரிபியூனாக ஆனார்.

சர்வாதிகாரியாக நியமிக்கப்பட்ட சீசரின் பிரதிநிதியாக (magister equitum) ரோமில் அன்டோனியஸ் ஆட்சி புரிந்துவந்தார். ரோமிலும் இத்தாலியிலும் தலைதூக்கிய பூசல்களையெல்லாம் அவரால் ஒடுக்க முடியவில்லை. புருண்டீசியத்தில் படைவீரர்கள் கலகம் செய்தனர். அதை ஒடுக்குவதற்காக அங்குச் சென்றார் அன்டோனியஸ். அவர் பிறரது சொத்துக்களையெல்லாம் அபகரித்துப் பெரும் செல்வம் திரட்டியும் தீயொழுக்கத்தில் மூழ்கியும் அதிகார போதை தலைக்கேறி வாழ்ந்தார் என்று சீசரோ அவர்மீது குற்றஞ்சாட்டினர்.

ஆசியாவில் சீசர், கி.மு. 47 : ரோமில் நிலைமை திருப்தியாக இல்லை என்பது சீசருக்குத் தெரியுமாயினும், ஆசியாவில் தன் ஞதிக்கத்தை நிறுவிய பின்னரே ரோமுக்குச் செல்ல முடிவு செய்தார். வெகு வேகமாகத் தனது வேலைகளைச் செய்து முடித்தார். விரைவிலேயே சிரியா, கிலீஷியா, கப்படோஷியா ஆகியவற்றில் சீசரின் ஆதிக்கம் நிறுவப்பட்டது. அடுத்தபடியாக அவர் பாண்ட்டஸ் மீது தமது கவனத்தைச் செலுத்தினர். மித்ரடேட்டஸின் மகனை பார்னசெஸ் என்பவர் பாஸ்ப்ரஸின் அரசராக

கி.மு. 63-ல் பாம்பேயால் அமர்த்தப்பட்டார் என்பதை முன்பு கண்டோம். கருங்கடலுக்குத் தெற்கிலான தனது தந்தையின் பழைய பிரதேசங்களையும் கைப்பற்ற முயன்று கொண்டிருந்தார் பார்னசெஸ். அவை இப்பொழுது ரோமுக்குச் சொந்தமாயிருந்தன. எனவே, அவரை எதிர்ப்பதற்கெனச் சீசரின் ஆசியக் கவர்னரான டொமீஷியஸ் கால்வினஸ் (Domitius Calvinus) என்பாரின் தலைமையில் படை ஒன்று புறப்பட்டது. கலேஷியாவை ஆண்ட தீயோதாருஸ் என்பவரும் கூட அவருடன் புறப்பட்டார். (இவர் பாம்பேயால் கி.மு. 63-ல் தனது அரசை மீண்டும் பெற்றவர். பார்சாலஸ் போரில் பாம்பேயின் அணியில் நின்று போரிட்டு, தோல்விக்குப்பின் பாம்பேயுடன் அதே கப்பலில் பயணம் செய்து ஓடிவந்தவர். ஆனால், இப்பொழுது சீசரின் நட்பைப் பெறுவதற்கு முயன்று வந்தார்.) ஆயினும் இப்படைகளைப் பார்னசெஸ் முறியடித்தார்.

எனவே, சீசரே நேராகப் போருக்குப் புறப்பட்டார். சீலா (Zela) என்ற இடத்துக்கருகில் பார்னசெஸின் முகாமைத்தாக்கி, அவரை விரட்டியடித்தார். தீயோதாருஸின் பிரதேசங்களில் பெரும்பகுதி பறிக்கப்பட்டது. இவ்வாறு ஜூன். ஜூலையில் ஆசியாவில் தன்னுதிக்கத்தை நிறுவியபின் ரோமுக்கு புறப்பட்டார் சீசர்.

மீண்டும் ஆப்பிரிக்காவில் சீசர்: கி.மு. 47 ஆகஸ்ட்டில் ரோமுக்குத் திரும்பினர் ஜூலியஸ் சீசர். அங்கு ஏராளமான வேலைகள் அவருக்குக் காத்துக் கிடந்தன வாயினும் மூன்று மாதங்கள் மட்டுமே அங்கிருந்த பின், அக்டோபரில் ஆப்பிரிக்காவுக்குப் புறப்பட்டுச் சென்றார். பிரபுக்கட்சியைச் சேர்ந்த (அல்லது பாம்பேயின் கட்சியைச் சேர்ந்த) ஆட்களின் நடமாட்டம் அங்கு அதிகமாயிருந்தது. பாம்பேயின் மாமனரான மெட்டலஸ் சிப்பியோ தலைமையில் ஒரு தரைப் படையும். அட்டியஸ் வேரஸின் தலைமையில் ஒரு கடற்படையும் அப்பகுதியில் சீசருக்கெதிராகச் செயல்பட்டு வந்தன. நுமீடியாவின் மன்னரான ஜூபாவும் அவர்களுக்கு ஒத்தாசை புரிந்து வந்தார். ஊட்டிகாவைக் (utica) கேட்டோ கைப்பற்றியிருந்தார்.

ஆப்பிரிக்காவுக்குச் சென்ற சீசர் பகைவர் வசமிருந்த இடங்களை ஒன்றன்பின் ஒன்றாகக் கைப்பற்றினர். இறுதியில் கி.மு. 46 பிப்ரவரியில் தாப்சஸ் (Thapsus) நகருக்கருகில் சிப்பியோ, ஜூபா ஆகியோரின் படைகளை அடியோடு முறியடித்தார். அடுத்தபடியாக ஊட்டிகாமீது தாக்குதல் தொடுத்

தார். தோல்வி நிச்சயம் என்பதை உணர்ந்த கேட்டோ, படுக்கையறையில் தனது வாளின் மீது வீழ்ந்து, உயிரை மாய்த்துக்கொண்டார். ஜூபாவும் பெட்ரேயஸும் ஒருவரை ஒருவர் கொன்று உயிர்விட்டனர். ஃபாஸ்டஸ் சல்லாவும் (Faustus Sulla) ஆப்ரிக்கானஸும் இராணுவக்கலகம் ஒன்றில் உயிர்துறந்தனர். பாம்பேயின் பிள்ளைகளான நேயஸ் பாம்பேயும் (Gnaeus), செக்ஸ்டஸ் பாம்பேயும் (Sextus) ஸ்பெயினுக்கு ஓடிச் சென்றனர். அவர்களைப் பின் தொடர்ந்து ஓடிய சிப்பியோவைச் சீசரின் கப்பல்கள் துரத்திச் சென்றன. சிறைப்படக்கூடிய ஆபத்திலிருந்து தப்புவதற்காகச் சிப்பியோ கடலில் விழுந்து உயிர் விட்டார்.

இவ்வாறு ஆப்பிரிக்காவில் பகைவர் அனைவரும் அழிக்கப் பட்டனர். நுமீடியாவானது ரோமின் மாநிலமாக ஆக்கப் பட்டது. மேமாத இறுதியில் ரோமுக்குத் திரும்பினர் சீசர். பெயரளவில் லெப்பிடஸோடு சேர்ந்து கான்சலாக அவர் பதவி வகித்தாலும், அவரது உண்மையான நிலையே வேறு. உண் மையில் அவர் ரோமப் பேரரசின் தலைவராக விளங்கினர்.

அன்டோனிக் கெதிரான போர்கள் : இதற்கிடையில் அன்ட்டோனி தமது கான்சல் பதவிக் காலம் முடிந்து, புரோகான்சலாக டெசிமஸ் புரூட்டஸிடமிருந்து சிசால்பைன்காலைக் கைப்பற்றப் புறப்பட்டுச் சென்றார். உடனே, அவருக்கெதிரான திட்டங்களில் செனெட் ஈடுபட்டது. சீசரை மட்டும் கொன்றுவிட்டு, அன்ட்டோனியையும் கொல்லாமல் விட்டுவிட்ட புரூட்டஸையும் கேசியஸையும் முன்பு கடிந்துகொண்ட சிசரோ, இப்பொழுது செனெட்டில் அன்ட்டோனிக்கெதிரான உரைகளை ஆற்றினார். ஆக்டேவியஸைப் புரோபிரேட்டராக்கிப் படைகளைத் திரட்டுவதற்கு அவருக்கு அதிகாரமளித்தது செனெட். சிசால் பைன்கால் முழுவதையும் அன்ட்டோனி கைப்பற்றி, டெசிமஸ் புரூட்டஸை மியூட்டினாவில் (இன்றைய மோடெனா) முற்றுகையிட்டார். புரூட்டஸை ஆதரித்து, அன்ட்டோனியை நாட்டின் விரோதி என்று அறிவித்தது செனெட். சீசரின் கட்டளைப்படி கி. மு. 43 ஆம் ஆண்டில் கான்சல்களாக ஆகியிருந்த ஹிர்ட்டியஸ் (Hirtius) என்பவரையும் விபியஸ்பான்சா (Vibius Pansa) என்பவரையும் அவருக்கெதிராகப் படையெடுத்துச் செல்லும்படி ஆணையிட்டது அது.

மியூட்டினா நகரை நோக்கி உடனே புறப்பட்டார் ஹிர்ட்டியஸ். அவருடன் ஆக்டேவியஸும் சென்றார். மேலும் படைகளைத் திரட்டிக்கொண்டு, சிறிது தாமதித்துப் புறப்பட்டார் பான்சா. பொனோனியாவுக்கு (Bononia) அருகில் ஃபோரம் கொல்லோரம் (Forum Gollorum) என்றவிடத்தில் கி.மு. 43 ஏப்ரல் 15-ந்தேதி பான்சாவை வழிமறித்துத் தோற்கடித்தார் அன்ட்டோனி. போர்க் காயங்களோடு இறந்துபட்டார் பான்சா. மியூட்டினா நகருக்கருகில் ஹிர்ட்டியஸுக்கும் அன்ட்டோனிக்கும் அடுத்த நாள் போர்ஒன்று நடைபெற்றது. அன்ட்டோனி தோற்று, மியூட்டினா முற்றுகையை விலக்கிக் கொண்டு, மேற்கில் லெப்பிடஸின் வசமிருந்த டிரான்சால்பைன் காலை நோக்கிச் சென்றார். போர்க் காயங்களுடன் ஹிர்ட்டியஸும் இறந்துபடவே, வடக்கு இத்தாலியில் இரண்டு கான்சல்களின் படைக்கும் ஆக்டேவியஸே தலைவரானார்,

செனெட்டுக்கு எதிராக ஆக்டேவியஸ் கான்சலாதல் : அன்ட்டோனியின் தோல்வியைக்கண்டு செனெட்டர்கள் மகிழ்ந்தனர். முற்றுகையிலிருந்து விடுபட்ட டெசிமஸ் புரூட்டஸும், ஆக்டேவியஸும் அன்ட்டோனியை விரட்டிச்செல்ல வேண்டுமென்று செனெட் விரும்பியது. ஆனால், சீசரின் நண்பரான அன்ட்டோனிக் கெதிராகச் செல்வதற்கு ஆக்டேவியஸின்படை மறுத்துவிட்டது, இந் நிலையில் செனெட்டின் உதவியோடு அன்ட்டோனியஸின் அதிகாரத் திட்டங்களைக் குலைத்துவிட்ட மனநிறைவோடு புதிய வழியில் திரும்பினார் ஆக்டேவியஸ்.

இனி இத்தாலியில் தமது அதிகாரத்தை நிறுவுவதற்கு இடையூறாக இருப்பது செனெட்தான் என்பதை ஆக்டேவியஸ் உணர்ந்தார். தம் மாமனின் கொலைக்குக் காரணமாகவும் உடந்தையாகவும் இருந்த செனெட்டையும் அதன் ஆதரவோடு இன்னமும் உலவிவந்த கொலைகாரர்களையும் தண்டிக்க வேண்டிய வேளையும் அதற்கேற்ற சூழ்நிலையும் வந்துவிட்டது என்பதை அறிந்தார். எனவே, தம்மைக் கான்சலாகத் தேர்ந்தெடுக்கும்படி செனெட்டுக்கு வேண்டுகோள் ஒன்றை அனுப்பினார் ஆக்டேவியஸ்.

அன்ட்டோனியை ஒழித்துக்கட்டுவதற்கு ஒருகருவியாக மட்டுமே ஆக்டேவியஸைக் கருதிவந்த செனெட்டர்கள் இந்த வேண்டுகோளை மறுத்தனர். அதைமறுத்து, வட இத்தாலியிலிருந்த படைகளை டெசிமஸ் புரூட்டஸிடம் ஒப்படைக்க வேண்டும் என்று கோரிய தீர்மானம் ஒன்றைச் சிசரோ கொண்டு வந்தார். செனெட் அதை ஏற்றுக்கொண்டது. ஜூனியஸ் புரூட்டஸையும் கேசியஸையும் கான்சல்களாக்குவதற்கு வேண்டிய ஆணைகளையும் அது பிறப்பித்தது.

அதேசமயம் பிரபுக்களின் ஆள்களான கேசியஸும் புரூட்டஸும் கிழக்கில் வெற்றிகளைப் பெற்று வந்தனர். அன்ட்டோனியால் அனுப்பப்பட்டடொலபெல்லாவைத்தோற்கடித்துவிட்டுச் சிரியாவைக் கைப்பற்றினார் கேசியஸ். டொலபெல்லா தற்கொலை செய்து கொள்ள வேண்டியவரானார். அதேபோல் அன்ட்டோனியின் சகோதரரான கயஸ் அன்ட்டோனியஸைச் சிறைப்பிடித்து, மாசிடோனியாவைக் கைப்பற்றினார் ஜூனியஸ் புரூட்டஸ். செக்ஸ்டஸ் பாம்பேயும் பிரபுக்களோடு சேர்ந்துகொண்டார். பிரபுக்கள் செனெட்டில் தமக்கிருந்த பெரும்பான்மையைப் பயன்படுத்தி அவரை ரோமானியக் கடற்படைக்குத் தலைவராக அமர்த்தினர். மேலும், அவர்களுடைய ஆதரவாளரான கார்னிபிசியஸ் (Cornificius) என்பவர் ஆப்பிரிக்காவில் கவர்னராக இருந்துவந்தார்; அவர் ரோமில் பிரபுக்களின் கையை வலுப்படுத்தும் நோக்கத்தோடு படைஒன்றை ரோமுக்கு அனுப்ப முயற்சி செய்து கொண்டிருந்தார்.

பிரபுக்களின் உள்நோக்கங்களை நன்கு புரிந்து கொண்ட ஆக்டேவியஸ் அன்ட்டோனியுடன் சமரசம் செய்து கொள்வதற்குத் தாம் ஆயத்தம் என்று அவருக்கு ஒரு கடிதம் எழுதியபின், தம்முடைய படைகளை நடத்திக்கொண்டு ரோமை நோக்கிப் புறப்பட்டார், எந்த விதமான எதிர்ப்புமின்றி அந்நகருக்குள் நுழைந்தார். படைப்பலமோ மக்களது ஆதரவோ எதுவுமே இல்லாத பிரபுக்களால் அவரை எதிர்க்க முடியவில்லை. ஆகஸ்ட் 2-ந்தேதியன்று ஆக்டேவியஸ் கான்சலாகத் தேர்ந்தெடுக்கப்பட்டார். இவருடைய ஒன்றுவிட்ட சகோ

ஜுரர்களாக இருக்கவேண்டும், மூன்றுவது வகுப்பினர் இருக்கக்கூடாது என்றும் சீசரால் சட்ட மியற்றப்பட்டது. ஏழைகளைக் குடியமர்த்துவதற்கெனக் கார்த்தேஜ், கொரிந்த், கால் ஆகியவிடங்களில் குடியேற்றங்களை நிறுவுவதற்கும் திட்டங்கள் தீட்டப்பட்டன.

பாம்பேயின் பிள்ளைகளோடு ஸ்பெயினில் போர்கள், கி.மு. 45 : சுமார் ஆறு மாதங்களுக்குப் பிறகு மறுபடியும் சீசர் போருக்குப் புறப்பட வேண்டியிருந்தது. ஆப்பிரிக்காவிலிருந்து தப்பியோடிய நேயஸ் பாம்பேயும் செக்ஸ்டஸ் பாம்பேயும் தெற்கு ஸ்பெயினுக்குச் சென்று, பெரும்படை ஒன்றைத் திரட்டி, தமது போரை மீண்டும் துவக்கினர். ரோமானிய அதிகாரிகளின் கொடுமைகளையும் கொள்ளையையும் வெறுத்த மக்களும் அவர்களை ஆதரித்தனர். ஆப்பிரிக்காவிலிருந்து தாப்சஸ் போருக்குப் பின் ஓடிவந்த போர்வீரர்கள் பலரும்கூட ஸ்பெயினுக்கு வந்த அவர்களது அணியில் சேர்ந்துகொண்டனர். இத்தகைய பெரும்படையுடன் சீசரின் ஸ்பானியக் கவர்னரையும், ரோமிலிருந்து வந்த படைகளையும் அவர்கள் தோற்கடித்தனர். எனவே, சீசரே நேரில் அங்குச் செல்ல வேண்டியதாயிற்று. கி.மு. 46 டிசம்பரில் புறப்பட்டார் அவர்.

போர் கடுமையாக இருந்தது. பல சிறுசிறு கைகலப்புகளில் சீசரின் படைகள் தோல்வியுற்றன. எனினும், இறுதியில் முண்டா (Munda) என்ற விடத்துக் கருகில் கி.மு. 45 மார்ச் 17-ந் தேதி நடந்த நீண்ட, கடுமையான போரில் சீசர் மாபெரும் வெற்றி பெற்றார். இரு தரப்பிலும் பெரும் சேதம் ஏற்பட்டது. பாம்பேக்கள் இருவரும் போர்க்களத்திலிருந்து ஓடி, கப்பலேறித் தப்பினர். ஒரு மாதத்திற்குப் பிறகு தண்ணீர் ஏற்றிச்செல்வதற்காகக் கரைக்கு வந்த நேயஸ் பாம்பே பிடிக்கப்பட்டு, கொல்லப்பட்டார். செக்ஸ்டஸ்மட்டும் ஒருபெரிய கடற்படையோடு பல ஆண்டுகள்வரை சீசரிடம் சிக்காமல் சுற்றிக் கொண்டிருந்தார்.

மீண்டும் ரோமில் சீசர் : கி.மு. 45 செப்டம்பரில் மீண்டும் ரோம் திரும்பினார் சீசர். ஸ்பெயினில் பல விடங்களில் 'அவர் தோற்றுவிட்டார்' என்ற செய்தி ஆரம்பத்தில் ரோமுக்கு வந்தது. உடனே, அவருக்கெதிரான பேச்சுகளும் தலைதூக்கின. ஆனால், விரைவிலேயே முண்டா போர்பற்றிய செய்தி வந்தது. உடனே, புதிய பட்டங்களும் அதிகாரங்களும் அவருக்கு அளிக்கப்பட்டன. முன்பு சதிசெய்த ஆட்களே இவற்றுக்குக் காரணமாயிருந்தனர். ஆயுட்காலம் முழுவதும் சர்வாதிகாரியாகவும்,

அடுத்த பத்தாண்டுகள் கான்சலாகவும் அவர் ஆக்கப்பட்டார். கருவூலமும் படைகளும் ஆயுள் முழுவதும் அவர்வசம் ஒப்புவிக்கப்பட்டன. இதைக் குறிப்பதுபோல் 'இம்பெரேட்டர்' (Imperator) என்ற பட்டம் சீசருக்கு அளிக்கப்பட்டது. படையதிகாரம் (Imperium) பெற்றவர் என்று பொருள்பட்ட இச் சொல்லில் இருந்துதான், 'பேரரசர்' (Emperor) என்ற சொல் பிறந்தது என்று கூறுவர். இவ்வாறு செம்டம்பரில் ரோம் திரும்பிய சீசர் என்றுமில்லாத அதிகாரங்களைப்பெற்றுப் பேரரசர் போல் திகழ்ந்தார். மணிமுடிதான் அவர் தரிக்கவில்லை. மற்றப்படி ரோமில் குடியரசு வீழ்ந்தது.

ஸ்பெயினுக்குச் செல்லவேண்டி இடையில் நிறுத்திவிட்டுச் சென்ற செயல்களை மீண்டும் அவர் துவங்கினர். ஏற்கெனவே நிறைவேற்றப்பட்ட சட்டங்கள் இப்பொழுது அமுலாக்கப்பட்டன. புதிய சட்டங்கள் இயற்றப்பட்டன. ரோம் நகரிலும் பொதுப்பணிகள் பல மேற்கொள்ளப்பட்டன. மக்கள் நெருக்கம் மிகுந்த ரோம் நகரை விரிவுபடுத்துவதற்குத் திட்டங்கள் தீட்டப்பட்டன. நகரின் தாழ்ந்த பகுதிகளில் நல்ல கழிநீர் வசதிகள் செய்யப்பட்டன. அதற்கென்று ஒருகால்வாய் வழியாக ஓடுமாறு டைபர் நதியின் ஒரு பகுதி திருப்பிவிடப்பட்டது. இன்றைய வேட்டிகன் (Vatican) பிரதேசத்தின் ஒருபகுதியும் ரோமின் நகர எல்லைக்குள் சேர்த்துக்கொள்ளப்பட்டது. புதிய கட்டடங்கள், புதிய கியூரியா மன்றக் கட்டடம், நாடக அரங்கு, ஆலயங்கள், விசாலமான மன்று (Forum) ஆகியவற்றை அமைக்கத் திட்டங்கள் வரையப்பட்டன. பெரிய நூலகம் ஒன்றும் அமைப்பதற்குத் திட்டமிடப்பட்டது, சட்டங்களை ஒழுங்குபடுத்தித் தொகுப்பதற்கென்று சட்டநூல் வல்லுநர்கள் கூடினர்.

இத்தாலியில் வேறு இடங்களிலும் இத்தகைய பொதுப் பணிகள் மேற்கொள்ளப்பட்டன. ஆஸ்டியா துறைமுகமானது மேலும் விரிவு படுத்தப்பட்டது. அப்பெனின் மலைக்குக் குறுக்கே ஏட்ரியாட்டிக் கடற்கரைவரை ஒரு புதிய சாலை அமைக்கவும், கால், இலிரியா, எகிப்து, சிரியா, பாண்ட்டஸ் ஆகிய விடங்களில் புதிய குடியேற்றங்களை நிறுவவும், வெள்ளங்களைத் தடுக்கவும், சதுப்பு நிலங்களைச் சீர் செய்யவும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன. இன்னும் சில ஆண்டுகள் சீசர் உயிருடன் இருந்திருந்தால் இவை அனைத்தும் நிறைவேற்றப்பட்டிருக்கும். மேலும் புதிய நடவடிக்கைகளும்கூட மேற்கொள்ளப்பட்டிருக்கும்.

சீசருக்கெதிரான சதிகள்: ஜூலியஸ் சீசர் இவ்வாறு ரோமானிய அரசியல் அமைப்பை உடைத்தெறிந்து சர்வாதிகாரி யாக ஆனதால் அவருக்குப் பகைவர்கள் தோன்றினர். ஆட்சியை இழந்த பிரபுக்கள்தாம் அவரது முதல் பகை வர்கள். சீசர் தனது ஆட்களை மட்டுமே செனேட்டில் உறுப்பி னர்க ளாக்கினர்.

அவரது காலத்தில் செனேட்டில் உறுப்பினர் தொகை 900 ஆக உயர்ந்தது. அவர்கள் பெரும்பாலும் ஈக்வைட்டுகளாகவே இருந்தனர். அதிகாரிகள் தேர்தல் நடந்த போதெல்லாம் பரிந் துரை அறிவிப்புகளைவெளியிட்டு, தனக்குப்பிடித்த ஆட்களையே தேர்ந்தெடுக்குமாறு அவர் செய்தார். அரசர் (Rex) என்ற பட்டத்தை அவரது நண்பர்கள் அவரை ஏற்றுக்கொள்ளுமாறு வேண்டினர். பிப்ரவரி 15-ந் தேதி (கி.மு. 44) பேலட்டைன் குன்றின்மீது லூப்பெர்கேலியா (Lupercalia) என்ற விழாவின் போது சீசரது தலையில் ஒரு மகுடத்தைச் சூட்ட முயன்றார் அன்ட்டோனியஸ். ஆனல், சீசர் அதை மறுத்துவிட்டார். ஆயினும், அவரது கட்சியைச் சேர்ந்த சிலர் அவரது சிலைகளுக் குச் சூட்டி மகிழ்ந்தனர்; அம்மகுடங்களை அகற்றி, அவர்களைத் தண்டிக்கத் துணிந்த இரண்டு டிரிபியூன்களைப் பதவியிலிருந்து நீக்கினர் சீசர். ரோமின் ஆட்சியுரிமையானது தனது குடும்பத் துக்கே உரியதாக இருக்க வேண்டுமென்று கருதினர் சீசர். அதே நோக்கத்தோடு, தனக்குப்பின் ஆட்சிப் பொறுப்பை மேற்கொள்வதற்கான தனது வாரிசாக ஆக்டேவியஸை (Octavius) உருவாக்கி வந்தார் அவர். சீசரின் மரணத்துக்குப் பின் வெளிவந்த அவரது இறுதி ஏற்பாடு (Will) இதை நிரூபித்தது.

இவ்வாறு சீசரது சர்வாதிகாரமும் இரகசிய உள் நோக்கங் களும் பிரபுக்களுக்கும் ஈக்வைட்டுகளுக்கும் ஆத்திரமூட்டின. ஈக்வைட்டுகளின் ஆளான அவர் மலிவு தானியங்களை ஏழை கட்கு வழங்குவதில் பலவிதமான கட்டுப்பாடுகளைப் புகுத்தினர். இதனல், ஏழைகளில் ஒருபகுதியினரும் சீசரை வெறுத்தனர். ஆயினும், சீசருக்கெதிரான சதிகளில் ஈடுபட்டவர்கள் அனை வரும் பிரபுக்களும் ஈக்வைட்டுகளுமே. பிரபுக்களை ஆட்சிபீடத் திலிருந்து அகற்றிய பின்னரும், தாம் ஆட்சியை மேற்கொள்வ தற்குப் பதிலாகச் சீசர் சர்வாதிகாரம் புரிந்தது ஈக்வைட்டுகளில் ஒரு பகுதியினருக்குப் பிடிக்கவில்லை.

அவரைக் கொல்வதற்கான சதியில் சம்மந்தப்பட்டவர்கள் சுமார் எழுபது பேர். அவர்களில் முக்கியமான நான்கு பேர்

களைப்பற்றி மட்டுமே சிறிது பார்ப்போம். அவர்களில் முதன்மையானவர் **ஜூனியஸ் புரூட்டஸ்** (M. Junius Brutus). முன்பு ரோமிலிருந்து கொடுங்கோல் மன்னர்களை விரட்டியடித்த புரூட்டஸின் பெயரைத் தாங்கிய இவர், தன் பெயருக்கேற்ப இப் பொழுதும் சர்வாதிகார சீசரை விரட்டியடிக்க வேண்டும் என்று கூறும் வாசகங்கள் நகரின் தெருக்களிலும் சுவர்களிலும் பல முறை காணப்பட்டன. இந்த ஜூனியஸ் புரூட்டஸ் கி.மு.44-ல் பிரேட்டர்களில் ஒருவராகப் பதவி வகித்தார். அவருக்கு அடுத்த படியாக முக்கியமானவர் **கேசியஸ்** என்பவர் (C. Cassius Longinus). அவரும் ஒரு பிரேட்டரே. அவர் புரூட்டஸின் சகோதரியை மணந்திருந்தார். இருவருமே முன்பு பாம்பேயின் அணியில் நின்று சீசருக் கெதிரான போர்களில் பங்கு கொண்டவர்கள். புரூட்டஸின் அன்னையிடம் மிகுந்த அன்பு பாராட்டிய சீசர் இவர்கள் இருவரையும் மன்னித்தது மட்டுமன்றி, பல உயர்ந்த பதவிகளிலும் இவர்களை அமர்த்தினர். பிரேட்டர் பதவி முடிந்ததும் புரூட்டஸை மாசிடோனியாவுக்கும், கேசியஸைச் சிரியாவுக்கும் கவர்னர்களாக நியமித்தார்.

மூன்றாவது சதிகார **டெசிமஸ் புரூட்டஸ்** (Decimus Brutus) இவர் காலிலும், பின்னர் உள்நாட்டுப்போரின்போதும் சீசருக்கு விசுவாசம் புரிந்தவர். பின்னர் காலில் படைத்தலைமை பூண்டிருந்தவர். சீசருக்கு மிகவும் பிடித்தமான அவர்தான் ஆக்டேவியஸுக்கு அடுத்த வாரிசாக (அதாவது ஆக்டேவியஸுக்கு ஆண் பிள்ளையில்லாமற் போனால்), ஆட்சி பீடம் ஏறக் கூடிய வராகத் தனது இறுதி ஏற்பாட்டில் சீசரால் குறிப்பிடப்பட்டிருந்தார். கி.மு. 42-ஆம் ஆண்டுக்கான கான்சலாகவும் அவரை சீசர் நியமித்திருந்தார். அவ்வாறிருக்க அவர் ஏன் சதிகளில் பங்கு கொண்டார் என்பது புரியவில்லை. பாம்பேயைத் தீவிரமாக ஆதரித்த ஒருவரது மகளை இவர் மணந்து கொண்டது ஒரு வேளை இதற்குக் காரணமாயிருக்கலாம். நான்காவது **ஆள் டிரபோனியஸ்** (C. Trebonius) இவரும் பிரேட்டராகவும், ஸ்பெயினில் தளபதியாகவும், கான்சலாகவும் இருந்தவர். கி.மு. 44-ல் ஆசியாவுக்கான கவர்னராகவும் சீசரால் நியமிக்கப்பட்டிருந்தார். இவ்வாறு சீசரால் பெரிதும் ஆதரிக்கப்பட்டு, உயர் பதவிகளெல்லாம் அளிக்கப்பட்டவர்களே சதிகளில் முன்னணியில் நின்றனர். தன்னலக்காரப் பிரபுக்களும் ஈக்வைட்டுகளும் பின்னணியில் இருந்து கொண்டு இவர்களை ஊக்கிவித்தனர்.

சீசர் கொலை செய்யப்படுதல்: இச்சதியில் சுமார் 70 பேர் தொடர்பு கொண்டிருந்தனர். எனவே, அது பற்றிய செய்திகள் ஓரளவில் பலருக்குத் தெரிந்திருந்தன. விழிப்போடு இருக்க

வேண்டுமென்று சீசரையும் பலர் முன் கூட்டியே எச்சரித்திருந்தனர். மார்ச் 15-ந் தேதி செனேட்டில்தான் தமக்கு ஆபத்து விளையப் போகிறது என்பதைச் சீசரும் ஒருவேளை உணர்ந்திருக்கக்கூடும். மார்ச் 15-ந் தேதியைப் (ides of march) பற்றி விழிப்புடனிருக்க வேண்டும் என்று சீசரிடம் ஒரு ஜோசியர் சொல்லியதாகவும், கெட்ட சகுனங்கள் பல காணப்பட்டதாகவும் பின்னர் எழுதப்பட்டன. அவரது மனைவி கெட்ட கனவு களைக் கண்டாராம். எனவே, அந்நாளன்று செனேட் கூட்டத்திற்குச் செல்வதில்லை என்று அவர் முடிவு செய்திருந்தார். அவர் வராததைக் கண்ட சதிகாரர்கள் அவருக்கு உண்மை தெரிந்து விட்டிருக்கக்கூடும் என்று அஞ்சி, உண்மையை அறிந்துவர டெசிமஸ் புரூட்டஸைச் சீசரிடம் அனுப்பினர்.

உண்மை எதுவும் சீசருக்குத் தெரியாது என்பதை அறிந்த புரூட்டஸ், அவரைப் போன்ற ஒரு அஞ்சா நெஞ்சர் வெறும் வதந்திகளை மட்டும் நம்பி செனேட் கூட்டத்துக்குச் செல்ல அஞ்சுவது ஆண்மையாகாது என்று கூறி, அவரது மனத்தை மாற்றினர். பதினெரு மணி சுமாருக்குச் செனேட்டுக்குப் புறப்பட்டார் சீசர். வீட்டில் புறப்படும் பொழுதே அவரது சிலை ஒன்று விழுந்து உடைந்ததாம். தெருக்களில் மக்கள் அவரைச் சூழ்ந்துகொண்டு, ஆபத்தை உணர்த்தும் கடிதங்களை அவர் கையில் திணித்தனர். ஆனால், சீசர் அவற்றைப் படிக்காமலேயே அருகிலிருந்த தனது அதிகாரியிடம் அவற்றைக் கொடுத்து விட்டார்.

இறுதியாக அவர் செனேட்டில் நுழைந்து தமது இடத்தில் அமர்ந்த உடனே சதிகாரர்கள் அவரைச் சூழ்ந்து கொண்டனர். நாடு கடத்தப்பட்ட தனது சகோதரனை மீண்டும் ரோமுக்குத் திரும்ப அனுமதிக்கக் கோரும் விண்ணப்பம் ஒன்றைக் கொடுப்பதுபோல் சீசரிடம் வந்து உரையாடி அவரது கவனத்தைத் திருப்பினர் டில்லியஸ் சிம்பர் (Tillius Cimber) என்பவர். இவற்றையெல்லம் கண்டு எரிச்சல் கொண்டவரைப்போல் சீசர் மறு பக்கம் தலையைத் திருப்பிக் கொண்டார். உடனே கேஸ்கா (Casca) என்பவர் தனது கத்தியை எடுத்துச் சீசரைக் குத்தினர். உடனே, வேறு பலரும் கத்தியை உருவி அவர்மீது பாய்ந்தனர். தற்காத்துக் கொள்ள முயன்ற சீசர், ஜூனியஸ் புரூட்டஸையும் கத்தியுடன் கண்டு 'நீயுமா, மகனே!' என்று கேட்டு, டோகாவை (Toge) இழுத்துத் தன் முகத்தை மூடிக்கொண்டு பலராலும் குத்தப்பட்டு உடனே உயிரற்று மண்ணில் வீழ்ந்தார். இதைக் கண்ட மற்ற செனேட்டர்கள் பீதியோடு வெளியே ஓடினர்.

மார்க்கஸ் அன்டோனியஸ் : ரோமிலிருந்த பெருஞ் செல்வந்தர் குடும்பங்கள் இக்கொலையால் மகிழ்ந்தன. கொலைகாரர்களைப் பாராட்டினர் சிசரோ. ஆனால், சில நாட்களிலேயே அவர்களது மகிழ்ச்சி மறைந்தது. அவர்களது அடிமனத்திலிருந்த தன்னல நோக்கங்கள் விரைவிலேயே தலைதூக்கி, அவர்களது சுய சொரூபத்தை வெளிக்காட்டின.

சர்வாதிகாரியான சீசரது மரணத்துக்குப்பின் ரோமில் தலைமைப் பதவியாகிய கான்சல்பதவியில் இருந்தவர் அன்ட்டோனியஸ். சீசரோடு மிகவும் நெருங்கிய உறவு பூண்டிருந்ததால் தனக்கும் ஆபத்து வந்து விடுமோ என்று ஆரம்பத்தில் அவர் அஞ்சினர். ஆனால், மக்களது சீற்றம் கொலைக்காரர்களுக்கெதிராகத் திரும்பியதை விரைவிலேயே கண்டார். தாம் நிகழ்த்திய கொலையை மக்கள் வரவேற்பார்கள் என்று கருதி, தமது சாதனையைப் பற்றிப் பெருமையோடு பேசிவந்த கொலைகாரர்கள், விரைவிலேயே அச்சத்தோடு தமது மாளிகைக்குள் அடைபட்டுப் போயினர்.

உடனே, ஓரளவு துணிச்சலோடு செயல்படத் துவங்கினர் அன்ட்டோனியஸ். கல்பூர்னியாவிடமிருந்து சீசரின் இறுதி ஏற்பாட்டை (Will)ப் பெற்றார். பார்த்தியாவில் போர் நடத்துவதற்கென்று சீசர் திரட்டிவைத்திருந்த செல்வத்தையும் கூட எடுத்துக்கொண்டார். ஆயினும், அச்சம் காரணமாக இரண்டாவது நாளே(17-ந் தேதி) செனேட்டைக் கூட்டி, சதிகாரர்களுடன் சமரசம் செய்து கொண்டார். சீசரின் சட்டங்களை ரத்து செய்வதில்லை என்று சதிகாரர்களும், சதிகாரர்களைப் பதவிகளிலிருந்து அகற்றுவதில்லை என்று அன்ட்டோனியஸும் ஒப்பந்தம் செய்து கொண்டனர். புரூட்டஸுடனும் லெப்பிடஸும் உணவருந்தித் தமது ஒப்பந்தத்தை உறுதிப்படுத்தினர்.

சீசரின் இறுதி ஏற்பாடு இப்பொழுது அன்டோனியால் வெளியிடப்பட்டது. தனது சொத்துக்களுக்கு ஆக்டேவியஸை வாரிசாக்கியிருந்தார் சீசர்; தனது கொலைகாரர்களுக்கும்கூட (முன்பு நாம் பார்த்தபடி) உயர்பதவிகளை அளித்திருந்தார்; டைபர் நதியின் அக்கரையில் அமைந்திருந்த தனது விசாலமான, அழகிய பூங்காவை ரோமின் மக்களுக்கு விட்டுச் சென்றிருந்தார்; மேலும் ரோமானியக் குடிகள் அனைவருக்கும் தலைக்கு மூப்பது செஸ்டர்சேக்கள் [(sesterces) — கிட்டத்தட்ட நாற்பது முதல் ஐம்பது ரூபாய்கள் வரை]-வீதம் விநியோகிக்கப்படவேண்டுமென்றும் அவர் கூறியிருந்தார். இவற்றை அறிந்த

மக்களது ஆத்திரம் கொலைகாரர்களுக்கு எதிராக மேலும் அதிகரித்தது.

இரண்டு நாட்களுக்குப் பின்னர் சீசரது உடல் அரச மரியாதைகளோடு அடக்கம் செய்யப்பட்டது. அப்பொழுது அன்ட்டோனி ஆற்றிய உரையைக் கேட்ட மக்கள், கொலைகாரர்களுக்கெதிராகப் பெரும் ஆர்ப்பாட்டங்கள் நடத்தினர். அவர்களது வீடுகளும் சொத்துகளும் சூறையாடப்பட்டன, உயிர் தப்புவதற்காக ரோமைவிட்டே அவர்கள் ஓடவேண்டியதாயிற்று.

இவ்வாறு தனக்கு ஆதரவாக மக்களனைவரும் இருப்பதையும், செனேட்டுக்கும் கொலைகாரர்களுக்கும் எதிராக நடத்தப்பட்ட ஆர்ப்பாட்டங்களையும் கண்ட அன்ட்டோனி தனது அச்சத்தை அறவே விட்டொழித்து, சமரசக் கொள்கையைக் கைவிட்டார். சதிகாரர்களுக்கு ஏற்கனவே அளிக்கப்பட்டிருந்த பதவிகளையும் அதிகாரங்களையும் பறிக்கத் தீர்மானித்தார். அவர்கள் அனைவருமே ஏற்கெனவே ரோமைவிட்டு ஓடிப்போயிருந்தனர். மாநில அதிகாரிகளாக ஏற்கனவே நியமிக்கப்பட்டிருந்தவர்கள் தத்தம் மாநிலங்களுக்குச் சென்றனர். ஜூலியஸ் புரூட்டஸும், கேசியஸும் அந்த ஆண்டுக் கழிந்த பின்தான் ரோமை விட்டுச் சென்றிருக்க வேண்டும். ஆனால், மக்களுக்கு அஞ்சி உடனேயே ஆண்ட்டியம் (Antium) நகருக்கு அவர்கள் ஓடிப்போயினர்.

சீசரால் அவர்களுக்கு ஒதுக்கப்பட்டிருந்த மாநிலங்களை வேறு இருவருக்கு மாற்றினர் அன்ட்டோனியஸ். புரூட்டஸுக்குப் பதிலாகத் தமது சகோதரரான கயஸுக்கு (Gaius) மாசிடோனியாவையும், கேசியஸுக்குப் பதிலாக டொலபெல்லாவுக்கு (Dolabella) சிரியாவையும் அளித்தார்.

படைதிரட்டி இந்த ஏற்பாட்டை எதிர்ப்பது என்று முடிவு செய்தனர் புரூட்டஸும் கேசியஸும். அவ்வாறே படைகளையும் திரட்டிக் கொண்டு தமது மாநிலங்களுக்கு அவர்கள் கப்பலேறினர். இவ்வாறு கிழக்கில் உள்நாட்டுப் போர் மீண்டும் தோன்றும் போலிருந்தது. அதேபோல், மேற்கிலுங்கூட அது தோன்றுவதற்கான காரணங்கள் இருந்து வந்தன. ஸ்பெயினிலும் சிசிலியிலும் ஒரு பெரிய தரைப்படையோடும் கடற்படையோடும் போருக்குத் தயாராயிருந்தார் செக்ஸ்டஸ் பாம்பே. ரோமில் தனக்கு அதிகச் சலுகையளிக்கும் எக்கட்சியோடும் சேருவதற்கு அவர் தயாராயிருந்தார். அதே சமயம், அன்ட்

டோனியஸ் தனது என்று கருதியிருந்த சிசால்ப்பைன் கால் மாநிலத்தைச் சீசரின் நியமனத்தின்படி டெசிமஸ்புரூட்டஸ் எடுத்துக் கொண்டார்.

ஆக்டேவியஸ் ரோமுக்கு வருதல்: தலைநகரில் நிலைமை இவ்வாறிருக்கும் போது ரோமுக்கு வந்து சேர்ந்தார் ஆக்டேவியஸ் (கி.மு. 44 ஏப்ரல் அல்லது மே). முழுப்பெயர் கயஸ் ஜூலியஸ் சீசர் ஆக்டேவியானஸ் (Gaius Julius Caesar Octavianus) என்பது[1]. அவர் ஜூலியஸ் சீசருடைய சகோதரியின் பேரர். இவரது வருகையால் ரோமானியப் பேரரசில் ஒரு புதிய திருப்பம் ஏற்பட்டது.

1. ஜூலியஸ் சீசரின் வளர்ப்புப் பிள்ளையாக, வாரிசாக இருந்ததால் அவரது பெயரைச் சூட்டிக்கொண்டார். பாம்பேயஸ் பாம்பே என்றும், அன்ட்டோனியஸ் அன்ட்டோனி என்றும் ஆனதைப்போல், ஆக்டோவியானஸ் என்பது ஆக்டோவியஸ் என்றும், ஆக்டேவியன் என்றும் ஆயிற்று!

21. இரண்டாவது மூவர் அணியும் இரண்டாவது உள்நாட்டுப் போரும்

ஆக்டேவியஸும் பிரபுக்களும் : தமது குடும்பத்தில் மட்டு மன்றி, ரோமானியப் பேரரசின் தலைமைப்பதவிக்கும் தனக்கு அடுத்த வாரிசாக ஆக்டேவியஸை நியமித்திருந்தார் ஜூலியஸ் சீசர். ஆனால் ஆக்டோவியஸுக்குப் பதிலாகத் தானே தலைமைப்பதவியை வகிக்க வேண்டுமென்று விரும்பினர் அன்ட்டோனி. பிரபுக்களும் இடையில் புகுந்து விளையாடத் துவங்கினர்.

கி.மு. 44-ஆம் ஆண்டு ஏப்ரல் இறுதியில் அல்லது மேமாதத் துவக்கத்தில் ரோமுக்குத் திரும்பிய பொழுது ஆக்டேவியஸுக்கு வயது பதினெட்டுதான். ஆயினும் உறுதியோடும் முன்னெச்சரிக்கையோடும் திட்டமிட்டு எதையும் செய்ய வல்லவராக அப்பொழுதே அவர் பெயரெடுத்திருந்தார். பார்த்தியாவில் ஜூலியஸ் சீசர் துவக்குவதற்குத் திட்டமிட்டிருந்த போருக்கு முன்னேற்பாடுகளைச் செய்வதற்கென்று எப்ரைஸுக்கு அனுப்பப்பட்டிருந்தார்ஆக்டேவியஸ்; தனது மாமனின் மரணத்தைப்பற்றிக் கேள்விபுற்ற உடனேயே ரோமுக்குப் புறப்பட்டார். புருண்டீசியத்தில் கரையிறங்கியதும் தம்மைச் சீசர் தமது வாரிசாக இறுதி ஏற்பாட்டில் நியமித்திருந்த செய்தி அவருக்கு எட்டியது. உடனே அவர் ஜூலியஸ் சீசர் ஆக்டேவியானஸ் என்ற பெயரைச் சூட்டிக்கொண்டார்.

அதுவரை ஆக்டேவியஸ் எப்பதவியையும் வகித்ததில்லை எனினும் பல போர்களில் தனது மாமனோடு பங்கு கொண்டு தனது திறமையை வெளிப்படுத்தியிருந்தார். அரசியலில் அன்ட்டோனிக்கும் ஆக்டோவியஸுக்குமிடையில் போட்டியும் பொருமையும் ஏற்படும் என்பதை உணர்ந்து, அன்ட்டோனிக்கெதிராக ஆக்டேவியஸைப் பயன்படுத்திக் கொள்ளத்

திட்டமிட்டனர் செனேட்டர்கள். அன்ட்டோனியை முறியடித்து அதிகாரத்தைக் கைப்பற்றுவதில் செனேட்டின் ஆதரவு தமக்கு உதவியாயிருக்கும் என்று ஆக்டேவியஸும் கருதினர்.

அன்ட்டோனிக் கெதிரான போர்கள்: இதற்கிடையில் அன்ட்டோனி தமது கான்சல் பதவிக் காலம் முடிந்து, புரோ கான்சலாக டெசிமஸ் புரூட்டஸிடமிருந்து சிசால்ப்பைன் காலிக் கைப்பற்றப் புறப்பட்டுச் சென்றார். உடனே, அவருக் கெதிரான திட்டங்களில் செனேட் ஈடுபட்டது. சீசரைமட்டும் கொன்று விட்டு, அன்ட்டோனியையும் கொல்லாமல் விட்டு விட்ட புரூட்டஸையும் கேசியஸையும் முன்பு கடிந்துகொண்ட சீசரோ, இப்பொழுது செனேட்டில் அன்ட்டோனிக்கெதிரான உரைகளை ஆற்றினர். ஆக்டேவியஸைப் புரோப்பிரேட்டராக்கிப் படைகளைத் திரட்டுவதற்கு அவருக்கு அதிகாரமளித்தது செனேட். சிசால்ப் பைன்கால் முழுவதையும் அன்ட்டோனி கைப்பற்றி, டெசிமஸ் புரூட்டஸை மியூட்டினுவில் (இன்றைய மோடெனு) முற்றுகையிட்டார். புரூட்டஸை ஆதரித்து, அன்ட்டோனியை நாட்டின் விரோதி என்று அறிவித்தது செனேட். சீசரின் நியமனத்தின்படி கி.மு. 43-ஆம் ஆண்டில் கான்சல்களாக ஆகியிருந்த ஹிர்டியஸ் (Hirtius) என்பவரையும் விபியஸ் பான்சா (Vibius pansa) என்பவரையும் அவருக்கெதிராகப் படையெடுத்துச் செல்லும் படி ஆணையிட்டது.

மியூட்டின நகரை நோக்கி உடனே புறப்பட்டார் ஹிர்டியஸ். அவரோடு ஆக்டேவியஸும் சென்றார். மேலும் படைகளைத் திரட்டிக்கொண்டு, சிறிது தாமதித்துப் புறப்பட்டார் பான்சா. பொனோனியாவுக்கு (Bononia) அருகில் ஃபோரம் கொல்லோரம் (Forum Gollorum) என்றவிடத்தில் கி.மு. 43 ஏப்ரல் 15-ந் தேதி பான்சாவை வழிமறித்துத் தோற்கடித்தார் அன்ட்டோனி. போர்க்காயங்களோடு இறந்துபட்டார் பான்சா. மியூட்டினு நகருக்கருகில் ஹிர்டியஸுக்கும் அன்ட்டோனிக்கும் அடுத்த நாள் போர் ஒன்று நடைபெற்றது, அன்ட்டோனி தோற்று, மியூட்டினு முற்றுகையை விலக்கிக் கொண்டு, மேற்கில் லெப்பிடஸின் வசமிருந்த டிரான்சால்ப்பைன் காலி நோக்கிச் சென்றார். போர்க் காயங்களுடன் ஹிர்டியஸும் இறந்துபடவே, வடக்கு இத்தாலியில் இரண்டு கான்சல்களின் படைக்கும் ஆக்டேவியஸே தலைவரானார்.

செனேட்டுக்கு எதிராக ஆக்டேவியஸ் கான்சலாதல்: அன்ட்டோனியின் தோல்வியைக் கண்டு செனேட்டர்கள் மகிழ்ந்தனர். முற்றுகையிலிருந்து விடுபட்ட டெசிமஸ் புரூட்

டஸும் ஆக்டேவியஸும் அன்ட்டோனியை விரட்டிச் செல்ல வேண்டுமென்று செனேட் விரும்பியது. ஆனால், சீசரின் நண்பரான அன்ட்டோனிக் கெதிராகச் செல்வதற்கு ஆக்டேவியஸின் படை மறுத்துவிட்டது. இந்நிலையில் செனேட்டின் உதவியோடு அன்ட்டோனியஸ் ஆதிக்கத் திட்டங்களைக் குலைத்துவிட்ட மனநிறைவோடு புதிய பாதையில் திரும்பினர் ஆக்டேவியஸ்.

இனி, இத்தாலியில் தனது ஆதிக்கத்தை நிறுவுவதற்கு இடையூறாக இருப்பது செனேட்தான் என்பதை அவர் உணர்ந்தார். தமது மாமனின் கொலைக்குக் காரணமாகவும் உடந்தையாகவும் இருந்த செனேட்டையும், அதன் ஆதரவோடு இன்னமும் உயிருடன் உலவிவந்த கொலைக்காரர்களையும் தண்டிக்க வேண்டிய தருணமும், அதற்கேற்ற சூழ்நிலையும் வந்துவிட்டது என்பதை அறிந்தார். எனவே, தன்னைக் கான்சலாகத் தேர்ந்தெடுக்கும்படி செனேட்டுக்கு வேண்டுகோள் ஒன்றை அனுப்பினர் ஆக்டேவியஸ்.

அன்ட்டோனியை ஒழித்துக் கட்டுவதற்கு ஒரு கருவியாகமட்டுமே ஆக்டேவியஸைக் கருதி வந்த செனேட்டர்கள் இந்த வேண்டுகோளை நிராகரித்தனர். அதை நிராகரித்து, வட இத்தாலியிலிருந்த படைகளை டெசிமஸ் புரூட்டஸிடம் ஒப்படைக்கவேண்டும் என்று கோரிய தீர்மானம் ஒன்றைச் சிசரோ கொண்டு வந்தார். செனேட் அதை ஏற்றுக்கொண்டது. ஜூனியஸ் புரூட்டஸையும் கேசியஸையும் கான்சலாக்குவதற்கு வேண்டிய ஆணைகளையும் அது பிறப்பித்தது.

அதே சமயம் பிரபுக்களின் ஆட்களான கேசியஸும் புரூட்டஸும் கிழக்கில் வெற்றிகளைப் பெற்றுவந்தனர். அன்ட்டோனியால் அனுப்பப்பட்ட டொலபெல்லாவைத் தோற்கடித்துவிட்டு, சிரியாவைக் கைப்பற்றினர் கேசியஸ். டொலபெல்லா தற்கொலை செய்துகொள்ள வேண்டியதாயிற்று. அதேபோல் அன்ட்டோனியின் சகோதரரான கயஸ் அன்ட்டோனியஸைச் சிறைப்பிடித்து, மாசிடோனியாவைக் கைப்பற்றினர் ஜூனியஸ் புரூட்டஸ். செக்ஸ்டஸ் பாம்பேயும் பிரபுக்களோடு சேர்ந்துகொண்டார்; பிரபுக்கள் செனேட்டில் தமக்கிருந்த பெரும்பான்மையைப் பயன்படுத்தி அவரை ரோமானியக் கடற்படைக்குத் தலைவராக நியமித்தனர். மேலும், அவர்களது ஆதரவாளரான கார்னிபிசியஸ் (Cornificius) என்பவர் ஆப்பிரிக்காவில் கவர்னராக இருந்துவந்தார்; அவர் ரோமில் பிரபுக்

களின் கரத்தை வலுப்படுத்தும் நோக்கத்தோடு படை ஒன்றை ரோமுக்கு அனுப்ப முயற்சி செய்து கொண்டிருந்தார்.

பிரபுக்களின் உள் நோக்கங்களை நன்கு புரிந்துகொண்ட ஆக்டேவியஸ் அன்ட்டோனியுடன் சமரசம் செய்துகொள்வதற்குத் தான் தயார் என்று அவருக்கு ஒருகடிதம் எழுதியபின், தனது படைகளை எடுத்துக்கொண்டு ரோமை நோக்கிப் புறப்பட்டார். எந்தவிதமான எதிர்ப்புமின்றி அந்நகருக்குள் நுழைந்தார். படைபலமோ, மக்களது ஆதரவோ எதுவுமே இல்லாத பிரபுக்களால் அவரை எதிர்க்க முடியவில்லை. ஆகஸ்ட் 2-ந்தேதியன்று ஆக்டேவியஸ் கான்சலாகத் தேர்ந்தெடுக்கப்பட்டார். அவரது ஒன்றுவிட்ட சகோதரரான பெடியஸ் (Q. Pedius) என்பவர் மற்றொரு கான்சலானார். சீசரின் கொலையாளிகளைத் தண்டிப்பதற்கான சட்டம் ஒன்று இவரால் இயற்றப்பட்டது.

உடனே, செனேட்டைக் கூட்டினார் ஆக்டேவியஸ். அப்பொழுது அவர் சொன்னபடியெல்லாம் ஆடியது அச்சபை. அன்ட்டோனி நாட்டின் விரோதி என்று முன்பு அது வெளியிட்டிருந்த ஆணையை இப்பொழுது ரத்துசெய்தது. ஆக்டேவியஸுக்கு ஏராளமான அதிகாரங்கள் வழங்கப்பட்டன. டெசிமஸ் புரூட்டஸின் வசமுள்ள படைகளுக்கும் ஆக்டேவியஸே தளபதி என்றும் செனேட் அறிவித்தது. புரூட்டஸின் கட்டுப்பாட்டிலிருந்து சிசால்ப் பைன் காலிக் கைப்பற்றுவதற்கும் அன்ட்டோனியைச் சந்திப்பதற்கும் எனச் செப்டம்பர் மாதத்தில் ரோமைவிட்டுப் புறப்பட்டார் ஆக்டேவியஸ்.

இரண்டாவது மூவரணி உருவாதல்; சிசால்ப்பைன் காலிலிருந்து மேற்காக டிரான்சால்ப் பைன் காலுக்குச் சென்ற அன்ட்டோனி அங்கு அம்மாநிலத்தின் கவர்னரான லெப்பிடஸால் நன்கு வரவேற்கப்பட்டார். இருவரது படைகளும் ஒன்று சேர்ந்து டெசிமஸ் புரூட்டஸுக்கு எதிராகச் சிசால்ப்பைன் காலுக்குள் புகுந்து, விரைவிலேயே அம்மாநிலம் முழுவதையும் கைப்பற்றின. உயிர் தப்பி இடம் இடமாக ஓடிய புரூட்டஸ் செக்வானிகளின் கையில் சிக்கி, அன்ட்டோனியின் ஆணைப்படி கொல்லப்பட்டார்.

இவ்வாறு சிசால்ப் பைன் காலிலிருந்த அன்ட்டோனியும் லெப்பிடஸும், தெற்கிலிருந்து வந்த ஆக்டேவியஸும் மியூட்டினுவுக்கு அருகில் போநதியின் கிளைநதியொன்றின் நடுவிலிருந்த சிறுதீவு ஒன்றில் சந்தித்துப் பேசினர். கீழ்வரும்

முடிவுகள் மேற்கொள்ளப்பட்டன : குடியரசின் பிரச்சனைகளைத் தீர்த்துவைப்பதற்காகத் தம்மூவரையும் கொண்ட மூவர் குழு ஒன்றை ஐந்தாண்டுக் காலத்துக்குத் தேர்ந்தெடுக்க வேண்டும்; மூவரும் (TriumVirs) சகல அதிகாரங்களையும் பெற்றிருப்பர்; அதிகாரிகள் அனைவரும் இவர்களாலேயே நியமிக்கப்படுவர். அதாவது, மூவர் சேர்ந்து நடத்தும் கூட்டுச் சர்வாதிகாரமாக அதுவிளங்கும். இவ்வாறு மூவரும் பொதுப்படையாக ரோமானியப்பேரரசு முழுவதிலும் சர்வாதிகாரம் பெற்று விளங்கும் அதே சமயத்தில், ஒவ்வொருவருக்கும் பேரரசின் ஒருபகுதி சிறப்பாக ஒதுக்கப்பட்டது; டிரான்சால் பைன் காலும் ஸ்பெயினும் லெப்பிடஸின் மேற்பார்வையிலும், காலின் இதர பகுதிகள் அனைத்தும் அன்ட்டோனியின் மேற்பார்வையிலும், ஆப்பிரிக்கா, சார்டீனியா, சிசிலி, வேறு பல தீவுகள் ஆகியவை ஆக்டேவியஸின் மேற்பார்வையிலும் வைக்கப்பட்டன. கிழக்கில் புரூட்டஸையும் கேசியஸையும் ஒழித்துக்கட்டும் வேலையை அன்ட்டோனியும் ஆக்டேவியஸும் மேற்கொண்டனர்; அதே சமயம் செக்ஸ்டஸ் பாம்பேயைத் தீர்த்துக்கட்டும் பொறுப்பும் ஆக்டேவியஸிடம் விடப்பட்டது; அத்தகைய வேலையில் ரோம் லெப்பிடஸின் பாதுகாப்பில் இருக்கும்.

இந்த ஏற்பாடுகள் படைகளிடத்திலும் மற்றவரிடத்திலும் வெளிப்படையாக அறிவிக்கப்பட்டன. அதேசமயம் பிரபுக்கள் கட்சியின் (Optimates) தலைவர்களில் முக்கியமான வர்களையும் வேறு பலரையும் தீர்த்துக் கட்டுவதற்கென்று இரகசிய முடிவு ஒன்றும் மேற்கொள்ளப்பட்டது. ஏற்கெனவே, பெடியஸால் இயற்றப்பட்ட சட்டத்தின்படி சீசரின் கொலையாளிகளுக்கு மரணதண்டனை விதிக்கப்பட்டுவிட்டது. எனினும், வேறுபல சதிகாரர்களையும் விரோதிகளையும் அவர்கள் தீர்த்துக்கட்டத் திட்டமிட்டனர். அதற்கெனப் பட்டியல்கள் (Proscriptions) தயாரிக்கப்பட்டன. முன்பு சல்லா காட்டிச் சென்ற வழியை இவர்களும் பின்பற்றினர். தமக்கு வேண்டாதவர்களின் பெயர்களையெல்லாம் அப்பட்டியலில் சேர்த்தனர் மூவரும். சிசரோவின் பெயரையும் அவரது உறவினர் சிலரின் பெயர்களையும் பட்டியலில் சேர்த்தார் அன்டோனி. தமது உடன்பிறந்தார், உறவினர் ஆகிய பலரின் பெயர்களையும் பட்டியலில் சேர்த்தனர் மூவரும். முதல் பட்டியலில் பதினேழு பேர்களின் பெயர்கள் மட்டுமே இருந்தன. அவர்களைப் பிடித்து, மரணதண்டனையை நிறைவேற்றும்படி ரோமுக்கு ஆணை அனுப்பப்பட்டது. அதன்படி டிசம்பர் மாதத் துவக்கத்தில் சிசரோ கொல்லப்பட்டார். பின்னர் மூவரும் ரோமுக்குத் திரும்பிய

பின்னர், மேலும் பல பட்டியல்கள் வெளியிடப்பட்டன. நகரின் மன்றில் (Forum) பலருக்கும் தெரியும்படி அவை வைக்கப் பட்டன. இரண்டிலிருந்து மூவாயிரம் பேர்களுக்கு அப்பட்டி யல்களின்படி மரணதண்டனை விதிக்கப்பட்டது. ஆனால், பலர் தப்பி ஓடிவிட்டனர்; அவர்களில் சிலர் நீண்டநாட்களுக்குப் பின் பிடித்துக்கொல்லப்பட்டனர். சுமார் 150 செனேட்டர் களும் 1000 ஈக்வைட்டுகளும் மட்டும் உடனடியாகப் பிடித்துச் சிரச்சேதம் செய்யப்பட்டனர்.

புரூட்டஸுக்கும் கேசியஸுக்கும் எதிரான போர்கள், கி.மு. 42-ஆம் ஆண்டு ஜனவரி முதல் தேதியன்று மூவரும் ரோமில் பதவியேற்றனர். பல மாதங்களாகவே ரோமில் அர சியல் நிலைமை குழப்பமாகவே இருந்ததால், சில மாதங்கள் வரை அவர்கள் ரோமிலேயே இருக்கவேண்டியிருந்தது. பின்னர், லெப்பிடஸை ரோமில் விட்டுவிட்டு, அன்டோனியும் ஆக் டேவியஸும் போருக்குப் புறப்பட்டனர். கிழக்கில் புரூட்ட ஸையும் கேசியஸையும் தாக்குவதற்கு அன்ட்டோனியும், சிசிலியில் செக்ஸ்டஸ் பாம்பேயைத் தாக்குவதற்கு ஆக்டேவி யஸும் சென்றனர். பாம்பேயின் கடற்படை, மத்தியதரைக் கடலில் பலம் பொருந்தி விளங்கியது. எனவே, பாம்பேயை விட்டுவிட்டு இருவருமே கிழக்கே சென்றால் ரோமுக்கே ஆபத்து விளையக்கூடும். மேலும் ஆப்பிரிக்கா, எகிப்து, சிசிலி, சார்டினியா ஆகியவிடங்களிலிருந்து வந்த உணவுத்தானியங் களையே ரோம் நம்பியிருந்தது. எனவே, பாம்பேயை முதலில் தோற்கடிக்க வேண்டியது அவசியமாகியது.

ஆரம்பத்தில் பாம்பேயுக்கு எதிராக ஆக்டேவியஸால் வெற்றிகள் எதையும் பெறமுடியவில்லை. மரணதண்டனைப் பட்டியலில் இடம் பெற்றிருந்த அஹெனோ பார்பஸ் தப்பிச் சென்று ஒரு கடற்படையோடு கிழக்கில் உலவிக் கொண் டிருந்தார். புரூட்டீசியத்திலிருந்து எதிர்க்கரைக்குக் கப்பலேற முடியாமல் அன்ட்டோனியைத் தடுத்தது அக்கடற்படை. ஆனால், அன்டோனியும் ஆக்டேவியசும் கோடைக்காலத்தில் ஒருவாறு பகைவர்களின் கடற்படைகளைச் சமாளித்துவிட்டு அப்போலோனியாவில் (Abollonia) ஒன்று சேர்ந்தனர்.

அங்கிருந்து மாசிடோனியா வழியாகப் பிலிப்பி நகரை (Philippi) அடைந்தனர். புரூட்டஸும் கேசியஸும் ஒன்று சேர்ந்து அவர்களை அங்கு எதிர்நோக்கி யிருந்தனர். அக் டோபர் இறுதியில் இருதரப்புக்கும் கடும்போர் ஒன்று நடந்தது. கேசியஸை அன்ட்டோனி தோற்கடித்தார்; ஆனால், புரூட்ட

ஸிடம் ஆக்டேவியஸ் தோல்வியுற்றார். ஆயினும் புரூட்டஸும் தோற்றுவிட்டார் என்று நினைத்துக் கேசியஸ் தற்கொலை செய்துகொண்டார். இரண்டு வாரங்களுக்குப் பின்னர் நவம்பர் மாதத்தில் அன்ட்டோனியும் ஆக்டேவியஸும் சேர்ந்து மற்றொரு போரில் புரூட்டஸைத் தோற்கடித்தனர். தனது பகைவரிடம் சிறைப்பட விரும்பாத புரூட்டஸ் தன் உயிரை மாய்த்துக் கொண்டார். அவரது படைவீரர்களில் பலர் எதிர்தரப்போடு சேர்ந்துகொண்டனர். பலர் தப்பி யோடினர். அவ்வாறு உயிர் தப்பியவர்களில் ஒருவர்தான் பெருங் கவிஞரான ஹொரேஸ் (Horace). அவர்தமது அரிய கவிதைகளில் இந்நிகழ்ச்சிகளையெல்லாம் பற்றிச் சிறிது நகைச்சுவை யோடும், சிறிது வருத்தத்தோடும் பின்னர் எழுதினர்.

இருவரும் பேரரசைப் பிரித்துக் கொள்ளுதல் : இதற்கிடையில் லெப்பிடஸைப் பற்றிச்சில சந்தேகங்கள் தோன்றின. செக்ஸ்டஸ் பாம்பேயுடன் சேர்ந்து அவர் சதி செய்வதாகத் தகவல்கள் கிடைத்தன. எனவே, அன்ட்டோனியும் ஆக்டேவியஸும் சேர்ந்து, லெப்பிடஸை விலக்கி விட்டு, ஆதிக்கத்தைத் தமக்குள் பங்கிட்டுக் கொள்வதென்று முடிவு செய்தனர். இத்தாலியானது பேரரசின் தலைமையிடமாக, இருவருக்கும் பொதுவாக வைக்கப்பட்டது. காலும் ஆப்பிரிக்காவும் அன்ட்டோனிக்கும், ஸ்பெயினும் நுமீடியாவும் ஆக்டேவியஸுக்குமாகப் பங்கிடப்பட்டன. எந்தச் சதியிலும் லெப்பிடஸ் ஈடுபடவில்லை என்பது பின்னர் தெளிவானால், ஆப்பிரிக்காவை அவருக்குக் கொடுக்க அன்ட்டோனி இணங்கினர். இந்தப் புதிய உடன்படிக்கைக்குப்பிறகு செக்ஸ்டஸ் பாம்பேயுடனான போரை மீண்டும் துவக்குவதற்காக ரோமுக்குத் திரும்பினர் ஆக்டேவியஸ். பகைவர்களை ஒடுக்கி ஆசியாவில் தமது ஆதிக்கத்தை நன்கு நிலைநாட்டுவதற்காகக் கிழக்கு நோக்கிச் சென்றார் அன்ட்டோனி. இவ்வாறு இருவரும் பிரிந்து எதிர்த்திசைகளை நோக்கிச் சென்றனர்! தூரம் அதிகரித்தது.

கிழக்கே சென்ற அன்ட்டோனியின் நாட்கள் ஆசியாவிலும் எகிப்திலுமே கழிந்தன. ஒரே ஒருமுறை மட்டுமே ரோமுக்கு வந்தார் அவர்; அதுவும் ஒரு சில நாட்களுக்கு மட்டுமே.

இருவருக்கு மிடையில் வேற்றுமைகளும் மறு உடன்பாடும் : ரோமுக்குத் திரும்பிய ஆக்டேவியஸுக்கு இரண்டு விதத் தொல்லைகள் இருந்துவந்தன. 1. செக்ஸ்டஸ் பாம்பேயின் கடற்படை மேற்கு மத்திய தரைக்கடலில் ஆதிக்கம் செலுத்திவந்தது. சிசிலியும் சார்டினியாவும் அதன் பிடியில்

இருந்தன. அதேபோல் ஏட்ரியாட்டிக் கடலிலும், டொமீஷியஸ் அஹெனோபார்பஸின் கப்பல்கள் வெற்றிகரமாக உலவிக் கொண்டிருந்தன. பிலிப்பியில் போர் நடந்த அதே நாளில் புருண்டீசியத்துக்கு அண்மையில் மூவரணியின் கடற்படை ஒரு போரில் முறியடிக்கப்பட்டது 2. ரோமில் பிரபுக்களின் தூண்டுதலோடு ஆக்டேவியஸுக்கு எதிராகக் கிளம்பினர் லூசியஸ் அன்ட்டோனியஸ். மார்க்கஸ் அன்ட்டோனியின் சகோதரரான இவர் ரோமில் கான்சலாக இருந்தார். பிரபுக்களும் தமது சகோதரன் அன்ட்டோனியின் மனைவியான ஃபுல்வியாவும் (Fulvia) தூண்டியதன் பேரில் தன் சகோதரனுக்கு உதவுவதாக எண்ணிக்கொண்டு ஆக்டேவியஸுக்கு எதிராகச் செயல்பட்டு வந்தார். அன்ட்டோனியுடனான உடன்படிக்கையின்படி ஆக்டேவியஸுக்குச் சேர வேண்டிய படைகளை ஒப்படைக்க மறுத்தார். பின்னர் போர் வீரர்களுக்கிடையில் ஆக்டேவியஸ் நிலங்களைப் பிரித்துக் கொடுத்தபோது, தம் சகோதரரின் போர் வீரர்களுக்கு உரிய பங்கு ஒழுங்காகப் பிரித்தளிக்கப்படவில்லை என்று குறைகள் கூறினர். இவ்வாறு வேற்றுமைகள் வளர்ந்து கொண்டே போயின.

இறுதியில், ஏற்கெனவே தனக்கென நிச்சயம் செய்யப்பட்டிருந்த ஃபுல்வியாவின் மகளைத் தான் மணக்க முடியாது என்று கூறிவிட்டார் ஆக்டேவியஸ். உடனே, இருவரும் படைகளைத் திரட்டி, போருக்கு ஆயத்தமாயினர். செனேட் லூசியஸ் அன்ட்டோனியாவை ஆதரித்தது. போர் அதிகாரங்களை அவருக்கு அளித்து 'இம்பரேட்டராக' (Imperator) அவரை நியமித்தது. இருபடைகளுக்கு மிடையில் பலவிடங்களில் மோதல்கள் ஏற்பட்டன. அன்ட்டோனியஸும் புல்வியாவும் பெருஷியா (Perusia) என்ற நகரில் ஆக்டேவியஸால் முற்றுகையிடப்பட்டனர். பல மாதங்களுக்குப் பிறகு கி.மு. 40-ஆம் ஆண்டு மார்ச் மாதத்தில் அந்நகர் பிடிபட்டது. அன்ட்டோனியஸும் புல்வியாவும் தோல்வியை ஒப்புக் கொண்டு, வெளியேற அனுமதிக்கப்பட்டனர். ஆனால், அவர்களுடனிருந்த ஏராளமான செனேட்டர்களும் ஈக்வைட்டுகளும் பிடித்துக் கொல்லப்பட்டனர். இதனால், ஆக்டேவியஸை எதிர்க்கக் கூடிய பிரபுக்கள் யாரும் இல்லாதொழிந்தனர். செயல் திறனே முயற்சியோ இல்லாத லெப்பிடஸ் ரோமின் பொறுப்பை வகித்து, பெயரளவில் மட்டுமே ஆக்டேவியஸுக்கும் அன்ட்டோனிக்கும் சமமான அதிகாரியாக இருந்து வந்தார்.

இவ்வாறு இத்தாலியில் எதிர்ப்பார் யாருமில்லாதபடி ஆக்டேவியஸின் அதிகாரம் வளர்ந்து நின்றதை அன்ட்டோனி கண்டார். தனது நிலையைப்பற்றியும் எதிர்காலத்தைப் பற்றியும் அச்சம் கொண்டார். ஆக்டேவியஸுக்கு எதிராக ஏட்ரியாட்டிக் கடலில் தான் செல்வதற்கு ஒன்றுமில்லை என்பதை உணர்ந்த அஹெனோ பார்பஸும் அன்ட்டோனியுடன் நட்பு பூண விரும்பினர். அதேசமயம் செக்ஸ்டஸ் பாம்பேயுடன் சமாதானம் செய்துகொள்ள ஆக்டேவியஸ், அன்ட்டோனி ஆகிய இருவருமே விரும்பினர். இந்த நோக்கத்தோடு கி.மு. 40-ல் செக்ஸ்டஸின் மனைவியின் உறவினரான (தன்னைவிட வயதில் மிகவும் மூத்த) ஸ்கிரிபேனியா Scribonia) என்ற மங்கையைத் திருமணம் செய்து கொண்டார் ஆக்டேவியஸ்.

எகிப்திய அரசியான கிளியோ பாட்ராவின் அழகில் மனத்தைப் பறிகொடுத்த அன்ட்டோனி, தமது வேலைகளையெல்லாம் புறக்கணித்து, அவரோடு அலெக்சாந்திரியா நகரில் ஓராண்டுக் காலமாக வாழ்ந்து வந்தார். அச்சமயத்தில் தான் ஆக்டேவியஸின் ஆதிக்கம் இத்தாலியில் உறுதிபட்டு வந்தது. அவரைப் பற்றிய சந்தேகங்கள் அன்ட்டோனியின் மனத்தில் வலுப்பட்டன. கி.மு. 40 ஏப்ரலில் சிரியாமீது பார்த்தியர்கள் தாக்குதல் தொடுத்திருப்பதாகச் செய்தி வந்தது. அதைச் சமாளிக்கும்படி தனது படைத்தலைவர்களை அனுப்பிவிட்டுக் கிரீஸுக்குச் சென்றார் அன்ட்டோனி. லூசியஸ் அன்ட்டோனியஸின் தோல்விக்குப் பிறகு செக்ஸ்டஸ் பாம்பேயிடம் அடைக்கலம் புகுந்திருந்த அவரது அன்னை ஜூலியா இப்பொழுது கிரீஸுக்கு வந்து அன்ட்டோனியைச் சந்தித்தார். ஆக்டேவியஸுக்கெதிராக அன்ட்டோனியும் பாம்பேயும் ஒன்று சேரவேண்டுமென்பது அவரது கோரிக்கை. அதை அன்ட்டோனி ஏற்றுக் கொண்டார்.

இதன் விளைவாக, செக்ஸ்டஸ் பாம்பே, அஹெனோபார்பஸ், அன்ட்டோனி ஆகிய மூவரும் ஒன்று சேர்ந்தனர். அவர்தம் கப்பல்கள் தென் இத்தாலியின் கடற்கரைமீது பல தாக்குதல்களைத் தொடுத்தன. மீண்டும் உள்நாட்டுப் போர் ஒன்று துவங்கிவிடும்போலிருந்தது. ஆக்டேவியஸின் அமைச்சரான மேசினஸ் (Maecenas) என்பவரும், அன்ட்டோனியின் தளபதியான அசீனியஸ் போலியோ (Asinius Pollio) என்பவரும் இதைத் தடுப்பதற்கெனப் பேச்சு வார்த்தைகள் துவக்கினர். இதன் முடிவில் கி.மு. 40-ஆம் ஆண்டில்

புருண்டீசிய சமாதானம் (Peace of Brundisium) கையெழுத்தாயிற்று. மூவரணியினருக் கிடையில் ரோமப்பேரரசு மீண்டும் பங்கிடப்பட்டது. ஏட்ரியாட்டிக் கடலுக்குக் கிழக்கிலிருந்த எல்லாப் பகுதிகளிலும் (இலீரியா நீங்கலாக) அன்ட்டோனிக்கும், அதற்கு மேற்கிலிருந்த பகுதிகள் அனைத்தும் ஆக்டேவியஸுக்கும் ஒதுக்கப்பட்டன. ஆப்பிரிக்கா லெப்பிடஸுக்குக் கொடுக்கப்பட்டது. பார்த்தியர்களுக்கெதிரான போரை அன்ட்டோனி மேற்கொள்ள வேண்டுமென்றும், செக்ஸ்டஸ் பாம்பேயுடனான போரை ஆக்டேவியஸ் மேற்கொள்ள வேண்டும் என்றும் முடிவு செய்யப்பட்டன. இந்தச் சமாதானத்தை மேலும் வலுப்படுத்தும் பொருட்டு ஆக்டேவியஸின் விதவைச் சகோதரியான ஆக்டேவியாவை (Octavia) அன்ட்டோனி மணக்க ஏற்பாடாகியது. புல்வியா சமீபத்தில் இறந்து போனதால், இதற்குத் தடையேதும் இல்லை. மேலும், அன்ட்டோனியின் நண்பர்களும் சில சலுகைகள் பெற்றனர். பித்தினியாவுக்கு ரோமின் அதிகாரியாக அஹெனோபார்பஸ் அனுப்பிவைக்கப்பட்டார். இலீரியாவில் பார்த்தினிகள் (Parthini) என்பவர்களுக்கு எதிரான போரில் அசீனியஸ் போலியோவிடம் படைத்தலைமை ஒப்புவிக்கப்பட்டது.

சில மாதங்களுக்குப் பிறகு கி.மு. 39-ஆம் ஆண்டில் செக்ஸ்டஸ் பாம்பேயுடனும் உடன்படிக்கை ஒன்று செய்து கொள்ளப்பட்டது. **மிசெனம்** உடன்படிக்கையின்படி செக்ஸ்டஸின் தந்தையிடமிருந்து முன்பு பறிமுதல் செய்யப்பட்ட சொத்துக்களுக்கு இழப்பீடாகப் பெருந்தொகை ஒன்றை செக்ஸ்டஸுக்குக் கொடுக்க அன்ட்டோனியும் ஆக்டோவியாவும் இணங்கினர். சார்டீனியா, சிசிலி, கார்சிகா, அக்கேயா (பெலப்பொனீசஸ்) ஆகியவற்றின் ஆட்சிப் பொறுப்பையும் அவரிடம் ஒப்படைத்தனர். அவரது கடற்படையும் அவரிடமே இருக்க அனுமதித்தனர். மேலும், கி.மு. 35-ல் கான்சலாக அவரைத் தேர்ந்தெடுக்கவும் இணங்கினர்.

ரோமில் ஆக்டேவியஸின் ஆதிக்கம் மேலும் வளருதல்: அன்ட்டோனியும் அவரது புதிய மனைவியான ஆக்டேவியாவும் கிரீஸுக்குச் சென்றனர். ஆக்டேவியஸ் ரோமுக்குத் திரும்பினர். அங்கு அவரது மனைவி ஸ்கிரிபோனியாவுக்கு ஜூலியா என்ற பெண் குழந்தை பிறந்தது. (ஆக்டேவியஸுக்குப் பிறந்த ஒரே குழந்தை இது.) குழந்தை பிறந்த அன்றே ஸ்கிரிபோனைவை விவாகரத்து செய்துவிட்டார் ஆக்டேவியஸ்.

இதற்குக் காரணம் லிவியா (Livia) என்ற வேறொரு பெண்ணை அவர் மணக்க விரும்பியதுதான். இதனால், செக்ஸ்டஸ் பாம்பேயுடனான புதிய உறவு முறிந்தது. கி.மு. 38-ல் லிவியாவை மணந்துகொண்டார் ஆக்டேவியஸ்.

அடுத்த ஆறு ஆண்டுகளில் (கி.மு. 38—32) ஆக்டேவியஸின் ஆதிக்கம் மேலும் மேலும் வளர்ந்தது. அதற்கு முக்கிய காரணங்கள் அவர் ரோமில் இருந்ததும், செக்ஸ்டஸ் பாம்பேயைத் தோற்கடித்ததும் ஆகும். அதே சமயத்தில் அன்ட்டோனியின் செல்வாக்கு ரோமில் குறைந்தது. இதற்கு முக்கிய காரணங்கள் அவர் தூரத்துப் பகுதிகளிலிருந்ததும், அவரது தோல்விகளும். மேலும், அவரது செல்வாக்கைக் குறைப்பதற்கென்றே ஆக்டேவியஸின் ஆட்கள் அவதூறுகளையும் வதந்திகளைப் பரப்பி வந்தனர்.

மிசெனம் உடன்படிக்கை ஏற்பட்ட சில மாதங்களிலேயே செக்ஸ்டஸ் பாம்பே பழையபடியே தனது பகை நடவடிக்கைகளை மீண்டும் துவக்கினர். இத்தாலியின் கடற்கரைமீது மீண்டும் தாக்குதல்கள் தொடுத்தார். இதனால், ரோமில் உணவுத்தட்டுப்பாடும் விலையுயர்வும் ஏற்பட்டன. கி.மு. 38 முதல் 36 வரை செக்ஸ்டஸுக் கெதிரான போர்கள் நடைபெற்றன. இப்போர்களின்போதுதான், ஆக்டேவியஸின் நண்பரான அக்ரிப்பா (Agrippa) என்பவர் ஒரு சிறந்த தளபதியாகி முன்னுக்கு வந்தார். இறுதியில் பாம்பே தோற்று ஆசியாவுக்கு ஓடினர். அங்கு அன்ட்டோனியின் உத்தரவின்பேரில் அவர் கொலையுண்டார். (கி.மு. 35) இதற்கிடையில் காலில் எழுந்த கலகங்களை ஒடுக்கி, அமைதியை ஏற்படுத்தினர் அக்ரிப்பா. (கி.மு. 38—37.) போலியோர்வால் கி.மு. 39-ல் ஒடுக்கப்பட்ட இலீரியாவைப் பின்னர் ஆக்டேவியஸே எடுத்துக்கொண்டார். இவ்வாறு பல போர்களில் ஆக்டேவியஸும் அக்ரிப்பாவும் வெற்றி பெற்றனர். மேற்கில் அமைதி நிறுவப்பட்டது. வாணிகம் வளர்ச்சியுற்றது. எனவே, சில விடங்களில் ஆக்டேவியஸ் வரிகளையும் குறைத்தார். தானியத் தட்டுப்பாடு மறைந்தது. விலைகள் மீண்டும் சிறிது குறைந்தன. இதற்கிடையில் லெப்பிடஸை அகற்றிவிட்டு ஆப்பிரிக்காவையும் தன்வசம் எடுத்துக்கொண்டார் ஆக்டேவியஸ். பாம்பேயின் தோல்விக்குப் பிறகு சார்டீனியா, சிசிலி, கார்சிகா ஆகியவையும் ஆக்டேவியஸின் கையில் சிக்கின. இவ்வாறு அவரது ஆட்சி ரோமில் நன்கு வேரூன்றியது, மேலும், அவரது ஆட்களையே கொண்ட செனேட்டும் அவருக்கு ஏராளமான அதிகாரங்

களையும் உரிமைகளையும் அளித்தது. அவர் புனிதமானவர் என்றும், அவருக்கு யாரும் ஊறுசெய்யக்கூடாது என்றும் அது அறிவித்தது. வெற்றி ஊர்வலத்தின்போது அணியும் ஆடையை (Triumphal Vobes) அவர் எப்பொழுதுமே அணிந்துகொண் டிருக்கலாம் என்றும் கூறியது. பேலட்டைன் குன்றின்மீது அவருக்கு என்று அரசாங்க அரண்மனை ஒன்று உறைவிடமாக அளிக்கப்பட்டது. செனேட்டில் டிரிபியூன்களுக்கு உரிய இடத்தில் அமருவதற்கும் அவர் அனுமதிக்கப்பட்டார்.

கிழக்கில் அன்ட்டோனி: ஆக்டோவியாவுடன் கிரீஸில் இரண்டாண்டுகள் இருந்த அன்ட்டோனி, முன்னவரை ரோமுக்கு அனுப்பிவிட்டு, அலெக்சாந்திரியாவுக்குச் சென்று கிளியோபாட்ராவுடன் மீண்டும் வாழத்தொடங்கினர். அன்ட் டோனிக்கும் ஆக்டேவியஸுக்கும் இதற்டையில் பகைமை வளர்ந்ததும் இதற்கொரு காரணமாகும்.

சிரியாமீது படையெடுத்த பார்த்தியர்கள் அன்ட்டோனி யடைத் தளபதிகளால் முறியடித்து விரட்டப்பட்டனர். (கி.மு. 39-33) சிலீஷியாவும் பாலஸ்தீனமும் கூட அவரால் ஒடுக்கப் பட்டன. பின்னர் கி.மு. 36-ல் பார்த்தியாமீது அவர் படை யெடுத்தபோது பல தோல்விகள் அவருக்குக் கிட்டின. கி.மு. 34ல் ஆர்மீனியாவைத் தாக்கி, அதன் மன்னரைச் சிறைப் பிடித்து, அவரை நயவஞ்சகமாகத் தீர்த்துக்கட்டினர். கி.மு. 63-ல் பார்த்தியர்கள் அன்டோனியின் படைகளைத் தோற் கடித்து மீடியாவையும் (Media) ஆர்மீனியாவையும் கைப் பற்றினர். இவை அனைத்தும் ரோமில் அன்ட்டோனியின் செல் வாக்கைக் குறைத்தன. கிளியோபாட்ராவுக்கும் தனக்கும் பிறந்த குழந்தைகளுக்கு அரசுகளாகத் தனது மாநிலங்களையும், கிழக்கில் வேறு பல நாடுகளையும் அளிக்கப்போவதாக அவர் சொல்லிக் கொண்டிருந்தார். அவற்றின் அரசர்களென்றும் அவர்களை அறிவித்திருந்தார் அவர். இதைவைத்து ரோமுக்குப் போட்டியாக அலெக்சாந்திரியாவை மையமாகக் கொண்ட பேரரசு ஒன்றை அவரும், கிளியோபாட்ராவும் உருவாக்கச் சதி செய்கின்றனர் என்ற வதந்தியை ரோமில் பரப்பினர் அவரது பகைவர்கள். இவ்வாறு தலைநகரில் அவருக்குச் செல்வாக்கு குறைந்தது.

பகைமையும் போரும்: மூவரணியானது கி.மு. 37-ஆம் ஆண்டில் மீண்டும் ஐந்தாண்டுகளுக்குப் புதுப்பிக்கப்பட்டது. அதாவது கி.மு. 33 டிசம்பர் 31-ந்தேதி வரை அது நீடிக்கும்.

ஆனால், விரைவிலேயே மூவரில் ஒருவரான லெப்பிடஸை ஆக்டேவியஸ் அகற்றி, அவரது மாநிலத்தையும் பறித்துக்கொண்டார். இதைக் கண்டித்தார் அன்ட்டோனி. மேலும், செக்ஸ்டஸ் பாம்பேயைத் தோற்கடித்தபின், அவருக்குச் சொந்தமான பகுதிகளையும் ஆக்டேவியஸ் எடுத்துக்கொண்டார். ஆசியாவில் அன்ட்டோனி போர்கள் நடத்திய விதத்தைப்பற்றியும் கிளியோபாட்ராவுடன் அலெக்சாந்திரியாவில் வாழ்வதுபற்றியும்கூடச் செனேட்டில் ஆக்டேவியஸ் குறைகூறினர். (ஜூலியஸ் சீசருக்கும் கிளியோபாட்ராவுக்கும் பிறந்த) சிசேரியோன் (Caesarion) என்பவரை ஜூலியஸ் சீசரின் மகன் என்று அன்ட்டோனி ஏற்றுக்கொண்டு, சிரியாவின் அரசராக அவரை அறிவித்திருந்தது. அது தமக்கு ஆபத்தாகும் என்று ஆக்டேவியஸ் கருதினர். இவ்வாறு இருவருக்குமிடையில் பகைமை வளர்ந்துகொண்டே வந்தது. இந்நிலையில் கி.மு. 33-க்குப்பின் மூவரணியை மீண்டும் நீட்டிப்பதில் தனக்கு விருப்பமில்லை என்பதை அன்டோனி அறிவித்தார்.

கி மு. 32-ல் கான்சல்களான ஆனடொமீஷியஸ் அஹெனோபார்பஸ், சோசியஸ் (C. Sosius) ஆகிய இருவருமே அன்ட்டோனியின் ஆட்கள். அவர்கள் இருவரும் அன்ட்டோனியின் செயல்களை ஆதரித்துச் செனேட்டில் பேசி வந்தனர். ஆக்டேவியஸ் இவற்றை மறுத்து உரைகள் ஆற்றினர். ரோமில் இருந்து செயல்பட முடியாத நிலை கான்சல்கள் இருவருக்கும் ஏற்பட்டது. எனவே, அவர்கள் ரோமைவிட்டு அகன்று, அன்டோனியிடம் சென்றனர். அவர்களோடு சுமார் 300 செனேட்டர்களும் சென்றனர். இந்நிலையில் போரைத் தவிர வேறுவழியில்லை. இரு தரப்பினருமே படைகளை ஆயத்தம் செய்தனர். அன்ட்டோனி சேமோஸ் (Samos) தீவுக்குச்சென்று, அங்குத் தரைப்படையும் கடற்படையும் திரட்டி ஏட்ரியாட்டிக் கரைக்கு வந்தார். இத்தாலியின் கடற்கரைமீது தாக்குதல் தொடுப்பது அவரது நோக்கம். ஆக்டோவியஸும் படைகளையும் கப்பல்களையும் திரட்டித் தயாராயிருந்தார். இத்தாலிக்குக் கிழக்கில் ஏட்ரியாட்டிக் கடலின் எதிர்க்கரையில் அம்பிரேசிய வளைகுடாவில் (Ambracian Gulf) அன்ட்டோனியின் கப்பல்களும் கிளியோபாட்ராவின் கப்பல்களும் போருக்குத் தயாராக இருந்தன; ஆக்டியம் (Actium) நிலப்பகுதியில் அவர்தம் தரைப்படைகள் தயாராக இருந்தன.

சேமோஸில் அன்ட்டோனி படைகளைத் திரட்டிக் கொண்டிருந்தபோதே, ரோமானிய செனேட்டும் போருக்கு

ஆயத்தமாயிற்று. அன்ட்டோனியின் போர் நடவடிக்கை கிளியோபாட்ராவின் பகை நடவடிக்கையாகக் கருதப் பட்டது எனவே, அன்டோனியை விட்டு விட்டு, கிளியோ பாட்ராமீது போர் தொடுப்பதாக அறிவித்தது செனேட். கி.மு. 31–ஆம் ஆண்டுக்கான கான்சலாக அன்ட்டோனி நியமிக்கப்பட்டிருந்தது இதற்கொரு காரணம். அச்சமயத்தில் அன்ட்டோனியின் இறுதி ஏற்பாட்டைத் (Will) தனது உள வாளிகள் மூலம் அறிந்து, ரோமில் அதை வெளியிட்டார் ஆக்டேவியஸ். கிளியோபாட்ராவுக்கும் ஜூலியஸ் சீசருக்கும் பிறந்த சிசேரியோன் சிரியாவின் அரசராகவும், கிளியோபாட் ராவுக்கும் தனக்கும் பிறந்த பிள்ளைகள் தன்னுதிக்கத்திலிருந்த கிழக்கத்திய மாநிலங்களில் அரசர்களாகவும் தனது மரணத் துக்குப்பின் ஆவர் என்று அன்ட்டோனி அதில் கூறியிருந் தார். கிளியோபாட்ராவையும் தன்னையும் அருகருகில் புதைக்க வேண்டுமென்றும் அவர் கூறியிருந்தார். இவற்றையெல்லாம் அறிந்த ரோமில் அன்ட்டோனிக்கெதிரான உணர்ச்சி பெரு கியது. உடனே, அவர் கான்சலாகப் பதவி வகிப்பதைத் தடை செய்து, அவரது படையதிகாரங்களையும் மாநில அதி காரங்களையும் பறித்தது செனேட். மேலும், ஒரு குறிப்பிட்ட நாளுக்குமுன் அவரது அணியை விட்டு அகலுவோர் அனை வருக்கும் தண்டனையேதும் கொடுக்கப்படமாட்டாது என்றும் அது அறிவித்தது. அதாவது, நேரடியாக இல்லாமல் மறை முகமாக, விரோதி என்று அன்ட்டோனி அறிவிக்கப்பட்டார். கி.மு. 31–ஆம் ஆண்டுக்கான கான்சலாக ஆக்டேவியஸ் தேர்ந்தெடுக்கப்பட்டார்.

அன்ட்டோனிக்கு ஆதரவாக ஆசியாவிலிருந்து பல சிற்றரசர்களின் படைகளும் வந்திருந்தன. கிளியோபாட்ராவும் தன் கப்பற்படையோடு வந்திருந்தார். எதிர்தரப்பில் ஆக் டேவியஸும் அக்ரிப்பாவும் படைத்தலைமை பூண்டு வந்தி ருந்தனர். ரோமானிய வரலாற்றிலேயே மிகச்சிறந்த கடற் படைத் தளபதியாகக் கருதப்படுகின்றார் அக்ரிப்பா. ஆகஸ்ட் இறுதியில் புருண்டீசியத்திலிருந்து புறப்பட்டு, எதிர்க்கரையை அடைந்து அன்ட்டோனியின் முகாம்களைத் தாக்குவதற்காகத் தெற்கு நோக்கிச் சென்றன ஆக்டேவி யஸின் படைகள். இரு தரப்புக் குதிரைப்படைகளுக்கு மிடையில் நடைபெற்ற பல மோதல்களிலும் அக்டேவி யஸின் தரப்பே வென்றது. எனவே, அன்ட்டோனி அம்பி ரேசீய வளைகுடாவின் வடக்கிலிருந்த பகுதியிலிருந்து தமது துருப்புக்களை விலக்கிக்கொண்டு, தெற்கில் ஆக்டியம் பகுதியில் அவற்றைக் குவித்தார்.

செப்டம்பர் 2-ந் தேதி (கி.மு. 31) இரண்டு கடற்படைகளுக்குமிடையில் பெரும் போர் ஒன்று மூண்டது. இது **ஆக்டியம் போர்** எனப்படுகிறது. அன்ட்டோனியின் தரப்பில் சுமார் 500 கப்பல்களும் ஆக்டேவியஸிடம் சுமார் 600 கப்பல்களும் இருந்தன. அன்ட்டோனியின் பெரிய, பலத்த கப்பல்களால் ஆக்டேவியஸின் சிறிய, வேகமுள்ள கப்பல்களின் தாக்குதல்களுக்கு ஈடுகொடுக்க முடியவில்லை. பிற்பகல் முழுவதும் போர் நீடித்தது. அச்சத்தினாலோ அல்லது பொறுமை யிழந்தோ கிளியோபாட்ரா தமது கப்பல்களைப் பின்வாங்குமாறு உத்தரவிட்டார். அக்கப்பல்கள் பின்வாங்குவதைக்கண்ட அன்ட்டோனியும் உறுதி தளர்ந்து தோல்வி வந்துவிட்டது என்றெண்ணிப்பின்வாங்கினர். அவரது கப்பற்படை சிதறி, எதிரிகளால் அழிக்கப்பட்டது. கிளியோபாட்ராவும் அன்ட்டோனியும் அலெக்சாந்திரியாவுக்குத் திரும்பினர். அடுத்தநாளே ஆக்டியப் பகுதியிலிருந்த அன்ட்டோனியின் தரைப்படை சரணடைந்தது. மேலும், அன்ட்டோனியின் படைப் பகுதி ஒன்று மாசிடோனியா வழியாகத் தப்பி ஓட முயன்றபோது, துரத்திச் சென்று அழிக்கப்பட்டது.

அன்ட்டோனியின் மரணம், கி.மு. 30 : இந்த வெற்றிக்குப் பிறகு ரோமில் ஆக்டேவியஸுக்கு எதிர்ப்புகள் அனைத்தும் மறைந்தன. ரோமப் பேரரசில் அன்ட்டோனிக்கு எவ்வித அதிகாரமும் இல்லாமல் போயிற்று. கிரீஸும் மாசிடோனியாவும் ஆக்டேவியஸின் கைக்கு வந்தன. ஆசியாவிலும். இதுவரை அன்ட்டோனியை ஆதரித்தவர்கள் அப்பொழுது தமது ஆதரவை நிறுத்திக் கொண்டனர். இந்நிலையில் அக்டேவியஸ் எகிப்தின்மீது உடனே படையெடுக்காமல் ஆசியாவைத் தன் ஆதிக்கத்தின்கீழ் கொண்டுவரும் முயற்சியில் இறங்கினர். அவர் சேமோஸ் தீவைக் கைப்பற்றியபின் ஆசியாவுக்குச் சென்றார்.

இயன்ற அளவு படைகளைத் திரட்டிப் போரைத் தொடர்ந்து நடத்த முயன்றார் அன்ட்டோனி. அவரது படைகள் மூன்று, ஆப்பிரிக்காவில் பினரியஸ் ஸ்கார்ப்பஸ் (Pinarius Scarpus) என்பவரிடம் இருந்தன. அவற்றைத் திரும்பப்பெறுவதற்கெனத் தூதர் ஒருவரை அனுப்பினர் அன்ட்டோனி; ஆனால், அத் தூதரைக் கொன்று, படைகளைத் திருப்பித்தர மறுத்தார் பினரியஸ். ஆசியாவிலிருந்தும் யாரும் அன்ட்டோனிக்கு உதவ முன்வரவில்லை. மீண்டும் போரில் தோல்வி ஏற்பட்டால் தப்பிச் செல்வதற்கெனச் செங்கடலில் சில கப்பல்களைத்

தயாராக வைத்திருந்தார்; சிரியாவின் கவர்னரது தூண்டு தலின் பேரில் அராபியர்களால் அவையும் அழிக்கப்பட்டன. இந்நிலையில் தனது மகன் ஆன்ட்டிலஸ் (Antyllus) என்பவர் மூலம் ஆக்டேவியஸுடன் பேச்சுவார்த்தைகள் தொடங்கிச் சமரசம் செய்துகொள்ள முயன்றார்; ஆனல், ஆக்டேவியஸ் இதற்கெல்லாம் மசியவில்லை. அதேசமயம் ஆக்டேவியஸ் கிளியோபாட்ராவுடன் இரகசியக் கடிதப் போக்குவரத்துக்களை நடத்தி, அவரையும் அன்ட்டோனியையும் பிரிக்க முயன்றார்.

கி.மு. 30-ஆம் ஆண்டின் ஆரம்பத்தில் அலெக்சாந்திரியாவை நோக்கி இரண்டு திசைகளிலிருந்து இரு ரோமானியப் படைகள் வந்தன. ஆப்பிரிக்காவிலிருந்து கொர்னிலீயஸ் காலஸ் (Gallus) என்பவரின் தலைமையில் ஒரு படைவந்து பரேடோனியத்தைத் (Paraetonium) தாக்கிற்று. அதே சமயத்தில் ஆக்டேவியஸ் பெலுசியத்தைத் (Pelusium) தாக்கினர். காலஸைத்தாக்கி விரட்ட அன்ட்டோனி செய்த முயற்சி தோற்றது. உடனே, பெலூசியத்துக்கு விரைந்து ஆக்டேவியஸின் முன்னேற்றத்தைத் தடுக்க முயன்றார். அம் முயற்சி படுதோல்வியில் முடிந்தது. கடல்வழியாகத் தப்பிக்க முயன்றார். அதுவும் முடியாத நிலையில் கத்தியால் குத்திக் கொண்டு தற்கொலை செய்து கொண்டார் அன்ட்டோனி. உயிர் பிரிவதற்கு முன்னரே கிளியோபாட்ராவிடம் எடுத்துச் செல்லப்பட்டு அவரது மடியில் உயிர்விட்டார்.

விரைவிலேயே அலெக்சாந்திரியாவும் ஆக்டேவியஸால் கைப்பற்றப்பட்டது. கிளியோபாட்ரா சிறை பிடிக்கப்பட்டார். ஆக்டேவியஸால் ரோமுக்கு இழுத்துச் செல்லப்பட்டு, அங்கு அவரது வெற்றி ஊர்வலத்தில் காட்சிப் பொருளாக இருந்து அவமானப்பட விரும்பாத அவர், பழக்கூடையில் நச்சுப் பாம்பு ஒன்றை இரகசியமாகக் கொண்டுவரும்படி செய்து அதனல் தீண்டப்பட்டு உயிர் விட்டார்.

எகிப்து ரோமப் பேரரசோடு இணைக்கப் பட்டது. கிளியோபாட்ராவின் பிள்ளைகள் ரோமில் ஆக்டேவியாவிடம் ஒப்படைக்கப்பட்டனர். வெற்றிவீரரான ஆக்டேவியஸ் எகிப்திலிருந்து கவர்ந்து வந்த பெருஞ் செல்வத்தைக்கொண்டு தனது கடன்களை அடைத்து, படைவீரர்களுக்கும் சம்பளம் தந்தார். மிச்சமிருந்த ஒருபெருந் தொகை ரோமில் மக்களிடையில் விநியோகிக்கப்பட்டது. இங்ஙனம் கி.மு. 30-ல் ரோமப்பேரரசு முழுவதும், தந்நிகரற்று விளங்கிய அகஸ்டஸுக்கு அடிமைப்பட்டது.

22. அகஸ்டஸின் ஆட்சி

(கி.மு. 30 - கி.பி. 14.)

ஆக்டேவியஸ் சீசரின் பட்டங்களும் பதவிகளும் :- ஜூலியஸ் சீசரைப்போலவே ஆக்டேவியஸ் சீசரும் அனைத்து அதிகாரங்களையும் பெற்றுச் சர்வாதிகாரியைப்போல, ஏன் அரசரைப் போல ஆண்டார். அவரை எதிர்த்த செனேட்டர்கள் அனைவரும் ஏற்கனவே ரோமைவிட்டு ஓடிப் போனதால், அவருக்கு அடிமைப்பட்டு, அவர் விரும்பிய அதிகாரங்கள் அனைத்தையும் அவர் கேட்பதற்கு முன்பே தருகின்ற அவையாகச் செனேட் விளங்கியது.

அதுவரை அவருக்கு எந்தவிதமான அதிகாரமும் செனேட்டால் சட்டபூர்வமாக அளிக்கப்பட்டிருக்கவில்லை. அப்பொழுது அந்நிலையை அகற்றி, முறைப்படி அதிகாரங்கள் பலவற்றை அவருக்கு அளிக்க முன்வந்தது செனேட். அவ்வாறு அளிக்கப்பட்டவற்றுள் மிகவும் முக்கியமானது டிரிபியூன் அதிகாரம் தான். ஆயுள் முழுவதும் டிரிபியூனாக இருக்க அவர் அமர்த்தப் பட்டார். பெட்ரீஷியராக இருக்கும் எவரும் டிரிபியூன் பதவி வகிக்க முடியாது என்பது பண்டைக் காலந்தொட்டு இருந்து வந்தவிதி. ஓராண்டுக்குமட்டுமே ஒரு டிரிபியூன் பதவி வகிக்க முடியும். ஆனால், இவர் பெட்ரீஷியராக இருப்பினும், 'ஆயுள் டிரிபியூனாக' அமர்த்தப்பட்டார். டிரிபியூனுக்கிருந்த அதிகாரங்களும் சிறப்புரிமைகளும் ஏராளம். டிரிபியூன் என்பவர் புனிதமானவர்; அவருக்கு யாரும் ஊறுசெய்யக்கூடாது. (இச்சிறப்புரிமை மட்டும், ஏற்கெனவே கி.மு. 36-ல் ஆக்டேவியஸுக்கு அளிக்கப்பட்டிருந்தது.) செனேட்டைக் கூட்டவும், செனேட்டின் ஆணைகளையும் மற்ற அதிகாரிகளின் ஆணைகளையும் தடுத்து நிறுத்தவும், கமீஷியா மன்றத்தில் சட்டங்களைக் கொண்டுவரவும், அதிகாரிகள் அளிக்கும் தண்டனைகளிலிருந்து குடிகளைக்காக்கவும் டிரிபியூனுக்கு அதிகாரம் உண்டு. இத்

தகைய அதிகாரங்கள் அனைத்தையும் இப்பொழுது ஆக்டேவியஸ் சீசர் பெற்றார்.

மேலும், ஒவ்வொரு ஆண்டும் கான்சலாகத் தேர்ந்தெடுக்கப்படுவதற்கும் அவருக்கு உரிமை அளிக்கப்பட்டது. குற்ற வழக்குகள் அனைத்திலும் இறுதிநீதி வழங்கும் அதிகாரமும் அவருக்கு வழங்கப்பட்டது. பொதுத் தொழுகையின்போதும் ஒவ்வொருவரும் கடவுளுக்குத் திருஅமுது படைக்கும்போதும் அவரது பெயரை உச்சரிக்க வேண்டுமென்றும் விதிக்கப்பட்டது.

ஆசியாவுக்குச் சென்று தனது அதிகாரத்தை நிறுவிவிட்டு கி.மு. 29ல் ரோம் திரும்பிய ஆக்டேவியஸ் மூன்று வெற்றி ஊர்வலங்களை நடத்தினர். இலீரியத்தில் நடத்திய போர், ஆக்டியத்தில் பெற்றவெற்றி, அலெக்சாந்திரியாவைக் கைப்பற்றியது ஆகிய மூன்று சாதனைகளுக்காக மூன்று வெற்றி ஊர்வலங்கள். அதன்பிறகு அமைதி ஏற்பட்டுவிட்டதற்கு அறிகுறியாக ஜேனஸ் (Ianus or Janus) என்ற தெய்வத்தின் ஆலயத்தை மூடும்படி செய்தார். இதற்குமுன் இரண்டுமுறை மட்டுமே அது அவ்வாறு மூடப்பட்டது. அதன் பின்னர் செனேட்டிலும் மற்றவற்றிலும் பல மாறுதல்களைச் செய்தார். அடுத்த ஆண்டிலும் ஆக்டேவியஸே கான்சலாகத் தேர்ந்தெடுக்கப்பட்டார். அவருடன் அவரது நண்பரான அக்ரிப்பாவும் கான்சலானார். சென்சார்களாகவும் (Censors) அவர்கள் நியமிக்கப்பட்டுச் செனேட்டர்கள் வகுப்பிலும் (பிரபுக்கள் வகுப்பு), ஈக்வைட்டுகள் வகுப்பிலும், செனேட்டிலும் பற்பல முக்கியமான மாறுதல்கள் செய்யப்பட்டன. 'செனேட்டின் தலைவர்' (Princeps Senatus) என்று அவரது பெயர் செனேட்டர்களின் பெயர்ப்பட்டியலில் பொறிக்கப்பட்டது.

இவ்வாறு தனக்கு அளிக்கப்பட்ட சென்சார் அதிகாரத்தைக்கொண்டு, அன்ட்டோனியையும் லெப்பிடஸையும் ஆதரிப்பவர்களாக இருந்த சுமார் 200 செனேட்டர்களைச் செனேட்டிலிருந்து அகற்றினர். இதனால், அதன் எண்ணிக்கை 1000-லிருந்து 800 ஆகக் குறைந்தது. கி.மு. 18-ல் இது மேலும் குறைக்கப்பட்டு 600 ஆக ஆயிற்று. கி.மு. 13-ல் மீண்டும் ஓரளவு அது குறைக்கப்பட்டது. குவேஸ்டராகப் பதவி வகித்தவர்கள் மட்டுமே செனேட்டராக ஆகலாம் என்ற சல்லாவின் விதியை மீண்டும் கொண்டுவந்தார் ஆக்டேவியஸ்.

அதே சமயம் செனேட்டர் வகுப்பைச் சேந்தவர்கள் மட்டுமே குவேஸ்டர்களாக முடியும் என்றும் விதித்தார் அவர். குறைந்தது பத்து லட்சம் செஸ்டர் சேக்கள் மதிப்புச் சொத்துடையவர்கள் மட்டுமே செனேட்டர் வகுப்பில் (Senatorius ordo) இருக்கமுடியும் என்பது அவரது சட்டம். அதேபோல் குறைந்தது நான்கு லட்சம் செஸ்டர் சேக்கள் உள்ளவர்கள் மட்டுமே ஈக்வைட்டுகளாக முடியும்.

அடுத்த ஆண்டில் (கி.மு. 27) அவரது ஆலோசனைக் கிணங்க 'அகஸ்டஸ்' (Augustus) என்ற பெயரை அவருக்குச் சூட்டியது செனேட். புதுப்பெயர் சூட்டப்பட்டதன் முக்கியத்துவத்தை அறிந்துகொள்ள முடியவில்லை. ஒரு புதிய ஆட்சிமுறை துவங்குவதை அது குறிக்கிறது போலும்! ஏனெனில், அப்போது அவர் தனது அதிகாரம், பதவி ஆகிய அனைத்தையும் அவர் விட்டுக்கொடுக்க முன்வருவது போலவும், செனேட் அதை அங்கீகரிக்க மறுத்து, மேலும் புதிய அதிகாரங்களை அவருக்கு அளிப்பது போலவும் ஒரு 'நாடகம்' செனேட்டில் நடத்தப்பட்டது. ஆயுட்காலம் வரை படைத்தலைவராக அகஸ்டஸ் நியமிக்கப்பட்டார். செனேட்டும் அவரும் சேர்ந்துஆட்சியை நடத்துவதுபோல் மாநிலங்கள் பங்கிட்டுக்கொள்ளப்பட்டன ; அதாவது செனேட்டின் நிர்வாகத்தில், (செனேட்டால் நியமிக்கப்படும் புரோகான்சல்கள், புரோபிரேட்டர்கள் ஆகியோரால் நிர்வகிக்கப்படுவதற்கென்று) சில மாநிலங்கள் ஒதுக்கப்பட்டன. மற்றவற்றை அவரே தனது அதிகாரிகளின் மூலம் ஆண்டுவந்தார். இம்மாநிலங்களில் புரோகான்சல் அதிகாரத்தை (Proconsuler imperium) அகஸ்டஸே வகித்தார் ; அவரது அதிகாரிகள் (Legati) அம்மாநிலங்களுக்குச் சென்றனர். அதே சமயம் செனேட்டிடம் விடப்பட்ட மாநிலங்களிலும் அகஸ்டஸுக்குச் சில அதிகாரங்கள் இருந்துவந்தன. சான்றாக, வரிகள் முதலியவற்றை வசூலிக்கும் அதிகாரியாகப் புரோகியூரேட்டர் (Procurator) என்பவரை ஒவ்வொரு மாநிலத்துக்கும் அவர் நியமித்து, அம்மாநிலக் கவர்னர்களையும் தன் கட்டுப்பாட்டில் கொண்டுவர அவரால் முடிந்தது. கி.மு. 23-ல் இயற்றப்பட்ட ஒருசட்டம், அகஸ்டஸின் இந்த அதிகாரத்தை முறைப்படி அங்கீகரித்தது. அவரது புரோகான்சல் அதிகாரத்துக்கு எல்லா மாநிலக் கவர்னர்களும் உட்பட்டவர்கள் என்று கூறியது அச் சட்டம்.

இவ்வாறு ரோமப் பேரரசியின் நிர்வாகம் அனைத்துக்கும்—ரோமிலும் சரி, மாநிலங்களிலும் சரி—அவர் தலைவராக ஆனார்.

எனவேதான், 'தலைவர்' (Princeps = Head of State) என்று அவர் அழைக்கப்பட்டார். 'பிரின் செப்ஸ்' என்ற இப்பெயரானது முறைப்படி இவருக்கு வழங்கப்படவில்லையாயினும், எல்லாவற்றிலும் எல்லாத் துறைகளிலும் யாருக்கும் முதன்மையான வராக இவர் நடைமுறையிலும் சட்டப்படியும் ஏற்றுக்கொள்ளப்பட்டார். முன்பு, புரோகான்சல் அதிகாரம் வகித்தயாரும் ரோமுக்குள் நுழையக்கூடாது; ரோமில் நுழைந்தவுடன் அந்த அதிகாரம் போய்விடும்; மேலும், புரோகான்சல் அதிகாரமானது குறிப்பிட்ட மாநிலத்துக்கு மட்டுமே அப்பொழுது உரியதாக இருந்தது. ஆனால், அகஸ்டஸுக்கு இப்பொழுது அளிக்கப்பட்ட புரோகான்சல் அதிகாரத்துக்கு அத்தகைய கட்டுப்பாடுகள் எதுவும் இல்லை. ரோமிலும் வெளியிலும், ரோமப் பேரரசின் எப்பகுதியிலும் அவரது அதிகாரம் செல்லும்.

இந்நிலையில் கான்சலாக அவர் இருக்கவேண்டியது தேவையில்லாமற் போயிற்று. எனவேதான், கி.மு. 5-ஆம் ஆண்டு வரை மீண்டும் கான்சல் பதவியை அவர் வகிக்கவே இல்லை. அவரது ஆட்சியானது 'பிரின்சிபேட்' (Principate of Augustus) என்று அழைக்கப்படுகிறது. இவ்வாறு அவரது அதிகாரங்களில் மிகவும் முக்கியமானவை டிரிபியூன் அதிகாரமும் புரோகான்சல் அதிகாரமுமே.

அகஸ்டஸின் ஆட்சியில் ரோமப் பேரரசு: ஜூலியஸ் சீசரின் காலத்திலேயே ரோமானியப் பேரரசு பெரிதும் விரிவடைந்திருந்தது. அவருக்குப் பிறகு அகஸ்டஸின் காலத்தில் ஒரு சில இடங்களைத் தவிர புதிய இடங்கள் அதிகமாக ஒன்றும் சேர்த்துக்கொள்ளப்படவில்லை. அன்ட்டோனியுடனான போர்களின்போது சிரியாவும் சிலீஷியாவும் ரோமப் பேரரசிலிருந்து பிரிந்து போயின. ஆனால், விரைவிலேயே மீண்டும் அவை பேரரசில் சேர்த்துக்கொள்ளப்பட்டன. கி.மு. 33-ல் மாரிட்டேனியாவின் (Mauretania) மன்னர் இறந்ததும், அந்நாட்டையும் ரோம் எடுத்துக்கொண்டது. ஆனால், எட்டாண்டுகளுக்குப் பின்னர், (கி.மு. 25) ஜூபா (Juba) என்ற அரசரிடம் அது மீண்டும் ஒப்படைக்கப்பட்டது. அதே ஆண்டில் (கி.மு. 25-ல்) கலேஷியாவையும் (Galatia) லைகோனியாவையும் (Lycaonia) சேர்த்து ஒரு மாநிலமாக ஆக்கிக்கொண்டது ரோம். பின்னர் சில ஆண்டுகளுக்குப் பிறகு (ஆண்டு நிச்சயமாகத் தெரியவில்லை; ஆயினும் கி.மு. 6-க்கு முன்னதாக இருக்கவேண்டும்) இன்றைய செர்பியாவையும் பல்கேரியாவையும் சேர்த்த பிரதேசமானது மோசியா (Moesia) என்ற பெயரோடு மற்றொரு

மாநிலமாயிற்று. டான்யூப் நதியின் தென்கரையில் ஒரு எல்லைப்புற மாநிலமாக அது அமைந்து. கோட்டைக் கொத்தளங்கள் அமைக்கப்பட்டுக் காவல் நிறைந்து விளங்கியது.

கி.மு. 16–14-ல் கால் பிரதேசத்தை நான்கு மாநிலங்களாகப் பிரித்தார் அகஸ்டஸ். அவை நார்போனென்சிஸ் (Narbonensis–பழைய டிரான்சால்ப்பைன் கால்), அக்யுடேனியா (Aquitania) லூக்குனென்சீஸ் (Lugdunensis), பெல்ஜிகா (Belgica) ஆகியவை. அதே சமயத்தில் பெல்ஜிகாவை ஒட்டினாற்போல் ரைன் நதிக்கரையில் ஜெர்மானியா சுப்பீரியர் (Germania Superiors) ஜெர்மானியா இன்பீரியர் (Germania Inferior) என்ற இரு மாவட்டங்களும் அமைக்கப்பட்டன. அதேபோல் ஆல்ப்ஸ் பகுதியிலும் பல மாவட்டங்கள் அமைக்கப்பட்டன.

கிளியோபாட்ராவின் மரணத்துக்குப் பின் எகிப்தும் ரோமோடு சேர்த்துக்கொள்ளப்பட்டது. ஆனால், அதை வழக்கம்போல் ஒரு மாநிலமாக அமைக்காமல் அகஸ்டஸின் நேரடி நிர்வாகத்தில் வைத்தனர். அதன் செல்வமும், செழிப்பான தானிய வயல்களும் ரோமின் ஆதிக்கத்துக்கு இன்னமும் அங்கு இருந்துவந்த எதிர்ப்பும், மத்திய தரைக்கடற்கரையில் அது வகித்த கேந்திர முக்கியத்துவமும் இதற்கு ஒருவேளை காரணமாக இருந்திருக்கக்கூடும். செனேட்டர்கள்கூட அகஸ்டஸின் அனுமதியில்லாமல் எகிப்துக்குள் நுழையமுடியாது. இவ்வாறு எகிப்து, ஜெர்மானியா, மோசியா ஆகியவை தவிர வேறு எப் பகுதியும் அகஸ்டஸின் காலத்தில் ரோமப் பேரரசோடு சேர்த்துக் கொள்ளப்படவில்லை. ரைன் நதிக்கும் எல்ப் நதிக்கும் (Elbe) இடைப்பட்ட ஜெர்மானியப் பிரதேசத்தையும் கைப்பற்றுவதற்கு நடைபெற்ற முயற்சி படுதோல்வியில் முடிந்தது. எனவே, அத்திசையில் ரைன் நதியே ரோமப் பேரரசில் எல்லையாக இருந்தது.

அகஸ்டஸின் போர்கள்: அகஸ்டஸின் காலத்தில் ரோமானியப் பேரரசு அதிகம் விரிவடையவில்லை யாயினும் போர்கள் பல நடந்தன. ஒரே ஒரு போரைத் தவிர, மற்ற எதிலும் அகஸ்டஸ் நேரடியாகக் கலந்துகொள்ளவில்லை; அவரது படைத் தளபதிகளே அனுப்பப்பட்டனர். அவர் நேரடியாகச் சென்று பங்கு கொண்டது, வடமேற்கு ஸ்பெயினில் கான்டாபிரி (Cantabri) என்ற மலைக்குலத்தினரின் தாக்குதல்களைச் சமாளிப்பதற்கு மட்டுமே (கி.மு. 25). அதில் பெருவெற்றி அவருக்குக் கிடைக்கவில்லை. இறுதியில் கி. மு. 19 வரை போரிட்டு, அவர்களை அடக்கினார் அக்ரிப்பா.

வடக்கில் ரைன் நதிக்கரையிலும் டான்யூப் நதிக்கரையிலும், கிழக்கில் யூப்ரட்டீஸ் நதிக்கரையிலும் பல போர்கள் நடந்தன. கிழக்கில் பார்த்தியர்கள் சிரியாவின்மீது தாக்குதல்கள் தொடுத்துக்கொண்டேயிருந்தனர். அவர்களுக் கெதிரான போரில் கிராசஸ் கி.மு. 53-ல் தோல்வியுற்று உயிரிழந்தார். இரண்டாண்டுகளுக்குப் பிறகு அவர்களைச் சிரியாவிலிருந்து விரட்டியடித்தார் சேசியஸ். கி.மு. 38 முதல் தன் மரணம் வரை அன்ட்டோனியும் அவரது தளபதிகளும் பார்த்தியர்களுக்கு எதிராகவே தொடர்ச்சியாகப் போரிட்டு வந்தனர். கி.மு. 30-ல் ஆசியாவுக்குச் சென்றார் ஆக்டேவியஸ். பார்த்தியர்களுடனான தகராறுகள் பேச்சுவார்த்தைகள் மூலம் சுமுகமாக முடிவுக்கு வந்தன. மெஸபொடேமியாவில் ரோமானியப் படைகள் ஊடுருவல்கள் நடத்தாமாட்டா என்று அவர் உறுதி கொடுத்தபின், தாங்களும் சிரியாமீது தாக்குதல் கொடுப்பதில்லை எனவும், ஆர்மீனியாவை ரோமின் பாதுகாப்பின் கீழான நாடாகத் தாம் ஏற்றுக் கொள்வதாகவும் பார்த்தியர்கள் உறுதி கொடுத்தனர். ஆக்டேவியஸின் மகத்தான சாதனையாகக் கவிஞர்கள் இதைக் கொண்டாடுகின்றனர்.

ஏலியஸ் காலஸ் (Aelius Gallus) என்ற தளபதி கி.மு.24-ல் அரேபியாமீது படையெடுத்தார். ஆர்மீனியாமீது படையெடுத்த பார்த்தியர்களோடு கி.மு. 23-ல் சிறுசிறு மோதல்களில் ரோமானியப் படைகள் ஈடுபட்டன. இவ்வாறு முக்கியமல்லாத சிறு போர்கள் பல நடைபெற்றன. மிகவும் முக்கியமான போர்கள் அனைத்தும் வடக்கில் எல்லைப் புறங்களில் அநாகரிகக் குலங்களின் தாக்குதல்களை முறியடிப்பதற்கென்று நடைபெற்றன. ஆல்ப்ஸ் மலைப்பகுதிகளிலும், ரைன், டான்யூப் ஆகிய நதிகளின் ஓரங்களிலும் இத்தாக்குதல்கள் தொடுக்கப்பட்டன. கி.மு. 17-ல் தொடங்கி அகஸ்டஸ் இறக்கும் வரை இப்போர்கள் நீடித்தன. ஆரம்பத்தில் இவற்றை முன்னின்று நடத்துவதற்காக அகஸ்டஸே காலுக்கும், வட இத்தாலிக்கும் சென்றார். காலில் கி.மு. 16 முதல் 14 வரை மூன்றாண்டுகள் தங்கியிருந்தார். ஆயினும், அவர் நேரில் படை நடத்திச் செல்லவில்லை. சிறந்த தளபதிகள் பலர் அவரிடம் இருந்தனர். அவரது மனைவியான லிவியாவுக்கு முதல் கணவன் மூலமாகப் பிறந்த டைபீரியஸ் (Tuberius) இவர் பின்னர் ரோமப் பேரரசராக ஆனார்), ட்ரூசஸ் (Drusus) ஆகியோர் இப்போர்களின்போது படை நடத்தித் திறமையோடு செயல்பட்டனர். கிழக்கு ஆல்ப்ஸ் பகுதியில்-இது டிரைடென்டைன் ஆல்ப்ஸ் (Tridentine Alps) என்று அழைக்கப்படுகிறது. ரேட்டி (Rhaeti) என்ற குலத்தினரை

வென்று (கி.மு. 15–14) அடிமைப்படுத்தினர் ட்ரூசஸ். மேற்கு ஆல்ப்ஸ் மலைப்பகுதியில் இன்றைய சேவாய் (Savoy) நீஸ் (Nice) பகுதிகளையும் அவற்றைச் சுற்றியுள்ள பகுதிகளையும் உள்ளிட்டு மூன்று மாவட்டங்கள் அமைக்கப்பட்டன.

பின்னர் ட்ரூசஸ் பெல்ஜிகாவுக்கு வடக்கே (இன்றைய ஹாலாந்துக்கு) சென்றார். அங்குத்தான் ரைன் நதியின் மேற்குக் கரையில், கடலிலிருந்து கொலோன் நகர் (Cologne) வரையிலான பகுதியில் ஜெர்மானியா சுப்பீரியர், ஜெர்மானியா இன்பீரியர் என்ற மாவட்டங்கள் அவரது வெற்றியின் மூலம் அமைக்கப்பட்டன. சிக்காம்பிரிகள் (Sicambri) போன்ற பல ஜெர்மானியக் குலத்தினர் ரைன் நதியைக் கடந்து லோலியஸ் (M. Lollius) என்ற ரோமானியப் படைத் தளபதியைத் தோற் கீடித்தனர் (கி.மு. 16). இதனால் தான் அகஸ்டஸ் காலுக்கு வந்து மூன்றாண்டுகள் தங்க வேண்டியதாயிற்று. ஆனால், அவர் தலை நகர் திரும்பியபின், கி.மு. 13–10-ல் மீண்டும் ஜெர்மானியர் தமது தாக்குதல்களைத் தொடர்ந்து நடத்தினர். ட்ரூஸஸும் அவற்றை எதிர்க்க வேண்டியதாயிற்று. ரைன் நதியைத் தாண்டி எல்ப் வரையில் ரோமானியப் பேரரசின் எல்லைகள் விரிவுபடுத்தப் பட்டன. கி.மு. 9-ல் ட்ரூசஸ் இறந்தார். பின்னர் டைபிரியஸும் வேறு பலரும் ரோமின் படைகளுக்கு அப்பகுதியில் தலைமை தாங்கினர். ஆனால், கி.பி. 9-ல் வேரஸ் (Q. Varus) என்பவரின் தலைமையிலான ரோமானியப் படைகளை அடித்து விரட்டி, எல்ப் முதல் ரைன் வரையிலான பிரதேசத்தை மீண்டும் கைப்பற்றினர் ஜெர்மானியர்.

அகஸ்டஸின் ஆட்சிக் காலத்தில் ரைன், டான்யூப், யூப்ரட்டீஸ் ஆகியவற்றை எல்லைகளாகப் பெற்று, ரோமானியப் பேரரசு தனது உச்ச எல்லையை அடைந்துவிட்டது என்று கூற வேண்டும். பிற்காலத்தில் அப் பேரரசு மேலும் விரிவடைந்ததா யினும், அந்நதியின் எல்லைக் கப்பால் இருந்துதான் இறுதியில் அதற்கு அழிவு வந்தது. பிரிட்டனுக்கும் அகஸ்டஸ் சீசர் செல்ல எண்ணியிருந்ததாகத் தெரிகிறது, ஆனால், காலில் நிலைமை மோசமாக இருந்ததால், அவரால் பிரிட்டனுக்குச் செல்ல முடிய வில்லை. சில பிரிட்டிஷ் சிற்றரசர்கள் அகஸ்டஸின் அவைக்கு வந்திருந்தனர். கி.மு. 54-ல் ஜூலியஸ் சீசரால் விதிக்கப்பட்ட திறையைச் செலுத்துவதற்காக வந்தார்களா, அல்லது வேறு காரியமாக வந்தார்களா என்பது தெரியவில்லை.

அகஸ்டஸின் இதர பணிகள்: அகஸ்டஸ் சீசரின் நீண்ட, நாற்பத்தைந்து ஆண்டுக் கால ஆட்சியில் பேரரசில் அமைதி

நிலவியது. அவற்றில் சுமார் பன்னிரண்டு ஆண்டுகளை அவர் ஆசியா, கால் போன்ற பகுதிகளில் கழித்தார். அவர் ரோமிலும் இத்தாலியிலும் தங்கியிருந்த காலத்தில் அரசியல் முறையையும் நிர்வாகத்தையும் மாற்றியமைத்தார். பல சட்டங்கள் இயற்றப்பட்டன. பொதுப் பணிகளும் நிறைய மேற்கொள்ளப்பட்டன.

ரோம் நகரமானது 14 மாவட்டங்களாகவும் 265 வட்டங்களாகவும் (vici) பிரிக்கப்பட்டது. நகரில் அமைதியையும் ஒழுங்கையும் பாதுகாப்பதற்கெனக் காவற் படையும், அடிக்கடி தீ விபத்துகள் ஏற்பட்டதால் தீயணைப்புப் படையொன்றும் நிறுவப்பட்டன. டைபர் நதியில் அடிக்கடி வெள்ளப் பெருக்கு ஏற்பட்டு நகரில் பேரழி உண்டானது. இதைத் தடுப்பதற்கென்று பலகுழுக்கள் நியமிக்கப்பட்டன. ஆலயங்கள் அரங்குகள் முதலியன புதுப்பிக்கப்பட்டன. ஜூலியஸ் சீசரால் துவங்கப்பட்ட மன்றைக் (furum) கட்டி முடித்து, தன்பெயரிலும் புதிய மன்று ஒன்றைக் கட்டினார் அகஸ்டஸ். ஆட்சிக்கு வந்தபோது செங்கல் நகரமாக இருந்த ரோமை, சலவைக் கல் ரோமாக மாற்றியதாக அகஸ்டஸ் பெருமை யடித்துக் கொண்டார்.

இத்தாலியிலும் வெளியிலும் பல சாலைகள் புதுப்பிக்கப்பட்டன. குடி தண்ணீர் செல்வதற்கும் போக்குவரத்துக்குமெனப் பாலங்கள் பல கட்டப்பட்டன. உள் நாட்டுப் போரின் போது அழிந்துபட்ட குடியேற்றங்களையும் நகரங்களையும் செப்பனிட்டது அரசாங்கம். இதனால் விவசாயமும் உள்நாட்டு வாணிபமும் நன்கு வளர்ந்தன. அதேபோல் கடல் வாணிபத்தைப் பெருக்கவும், கடற் கொள்ளைக்காரர்களின் தாக்குதல்களிலிருந்து வணிகர்களைக் காக்கவும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன. இத்தாலி, மேற்குக் கடற்கரை, கிழக்குக் கடற்கரை, கால், ஏஜியன் தீவுகள் ஆகியவற்றில் பல கப்பற் படைத் தளங்கள் நிறுவப்பட்டன. மாநிலங்களில் பல புதிய குடியேற்றங்களும் நகரங்களும் தோன்றியது. ரோமானியக் குடியுரிமையோ, லத்தீனியக் குடியுரிமையோ அவற்றுக்கு அளிக்கப்பட்டன. இத்தகைய நடவடிக்கைகளாலும், அமைதி நிலவியதாலும் ரோமில் செல்வம் பெருகியது.

ஈக்வைட்டுகளின் வாணிகமும், தொழிலும் செல்வமும், அரசியல் ஆதிக்கமும் நன்கு வளர்ந்தன. செனேட்டில் பெரும் பாலான உறுப்பினர்களும், அரசாங்க அதிகாரிகளும் இவ்வகுப்பினராகவே இருந்தனர். பழைய பிரபுக்கள் ஆதிக்கமிழந்தனர்.

செனேட்டர் வகுப்பில் இடம் பெற்ற ஈக்வைட்டுகளின் ஆதிக்கமே ரோமில் நடைபெற்று வந்தது. கமீஷியா மன்றம் கூட்டப்படுவது அருகியது. ரோமானிய அரசியலில் இதுவரை குடிமக்களுக்குப் பெயரளவில் இருந்து வந்த பங்கும் இப்பொழுது முதல் மறைந்தது. எல்லா அதிகாரிகளும் அகஸ்டஸாலேயே நியமிக்கப்பட்டனர். அகஸ்டஸ் தெய்வமாக வழிபடப்பட்டார். அவரது சிலைகள் தொழுகைக்காக வைக்கப்பட்டன.

அகஸ்டஸுக்குப் பின் வாரிசு உரிமை: முடி சூட்டிக் கொள்ளவில்லை யானாலும், முதலாவது ரோமானியப் பேரரசராக அகஸ்டஸ் கருதப்படுகிறார். அதற்கு முக்கியமான காரணங்கள் அவருக்கிருந்து வந்த எல்லையற்ற அதிகாரமும், தனது குடும்பத்திலேயே ரோமப் பேரரசின் ஆட்சியுரிமை இருக்கவேண்டுமென்று கருதி ஆரம்பத்திலிருந்தே தனக்குப் பின் ஆளக் கூடிய வாரிசுகளை நியமிப்பதற்கான முயற்சிகளை அமர் மேற்கொண்டதும் ஆகும். பழைய பிரபுக்களிடமிருந்து ஆட்சியுரிமையைக் கைப்பற்றுவதற்கும், பின்னர் அதைக் காப்பதற்கும் அடிக்கடி உள் நாட்டுப் போர்களில் ஈடுபடுவதைவிட, தமது ஆதிக்கத்துக்கு என்றும் உத்தரவாதமாக இருக்கக் கூடிய அகஸ்டஸையும் அவரது வாரிசுகளான அரசர்களையும் ஆதரித்து, முடியாட்சியைப் பேணி வளர்ப்பதே சிறந்தது என்று ஈக்வைட்டுகளும் புதிய செல்வந்தர்களும் கருதினர். குடியாட்சி (பெயரளவில் மட்டுமே அது குடியாட்சி ஆகும்!) அழிந்து, முடியாட்சி ஏற்பட்டதற்கு இதுதான் அடிப்படையான காரணம். தனது வாரிசுகளை அகஸ்டஸ் எவ்வாறு நியமித்தார் என்பதை அடுத்துக் காண்போம்.

அகஸ்டஸுக்கு முதல் மனைவியான ஸ்கிரிபோனியா மூலம் ஜூலியா என்ற பெண் குழந்தை இருந்தது என்பதை முன்பே பார்த்தோம். பின்னர், டைபீரியஸ் கிளாடியஸ்நீரோ என்பவரின் மனைவியான லிவியாவை அவர் மணந்து கொண்டார். நீரோவின் மூலம் லிவியாவுக்கு டைபீரியஸ், ட்ரூசஸ் என்ற இரண்டு ஆண்பிள்ளைகள் இருந்தனர். அகஸ்டஸின் மூலம் அவருக்குக் குழந்தை ஏதும் இல்லை. மேலும், அகஸ்டஸின் சதோதரியான ஆக்டேவியாவுக்கு முதல் கணவனை கிளாடியஸ் மார் செல்லஸ் மூலம் ஒரு பையனும் (இவன் பெயரும் மார் செல்லஸ் தான்) இரு பெண்களும், இரண்டாவது கணவனை மார்க்கஸ் அன்டோனி மூலம் இரண்டு பெண்களும் இருந்தனர்.

இந்நிலையில் தனது சகோதரியின் மகனான மார்செல்லஸையே (Marcellus) தனக்குப் பின் ஆட்சிப் பொறுப்பை மேற்கொள்ளக் கூடிய வாரிசாகக் கருதி வளர்த்து வந்தார். அகஸ்டஸ் தன் மகள் ஜூலியாவையும் அவருக்கு மணமுடித்து வைத்தார். ஆனால், கி.மு. 23-ல் அப்பையன் இறந்து போனான். அப்பொழுது அகஸ்டஸின் உடல் நிலைமையும் கவலைக்கிடமாக இருந்தது. எனவே, தனது உற்ற நண்பனும் உறுதுணைவனுமாயிருந்துவந்த அக்ரிப்பா ஒருவரே ஆளமுடியும் என்று அவருக்குத் தோன்றியது. எனவே தனது கணையாழியை (Signet Ring) அவரிடமே ஒப்புவித்தார்; பின்னர் உயிர் பிழைத்து எழுந்ததும் தனது புரோகான்சல் அதிகாரம் அனைத்தையும் (Proconsnear imperium) தன்னோடு சேர்த்து நிர்வகிக்கக் கூடிய உரிமையை அக்ரிப்பாவுக்கு அளிக்கும்படி செனேட்டிடம் கேட்டுக் கொண்டார். மேலும், ஆக்டேவியாவின் மகள் மார்செல்லாவை (marcella) ஏற்கெனவே மணந்திருந்த அக்ரிப்பாவைத் தன் மகள் ஜூலியாவை கி.மு. 21-ல் மணந்து கொள்ளும்படி செய்தார் அகஸ்டஸ். மார் செல்லா விவாகரத்து செய்யப்பட்டார். ஜூலியாவுக்கும் அக்ரிப்பாவுக்கும் கெயஸ் (caius) லூசியஸ் (Lucius) ஆகிய பிள்ளைகள் பிறந்தனர். இந்த இருபிள்ளைகளையும் தத்து எடுத்து, தன் வாரிசுகளாக வளர்த்து வந்தார் அகஸ்டஸ். இந்த ஏற்பாட்டின்படி தனக்குப் பின் அக்ரிப்பாவும், அவருக்குப்பின் இவ்விரு சிறுவர்களும் அரசராவார் என்று கருதி நிம்மதியோடிருந்தார் அகஸ்டஸ்.

ஆனால், கி.மு. 12-ல் அக்ரிப்பா இறந்தார். அப்பொழுது கெயஸும் லூசியஸும் சிறுவர்களாயிருந்தனர். தனது உடல் நிலையும் சரியில்லாததால் (சிறுவயதிலிருந்தே நோயால் வாடினர் அகஸ்டஸ்.) வயது வந்த வேறு வாரிசுகளைத் தேடவேண்டிய அவசியம் ஏற்பட்டது. இந்நிலையில் ஏற்கெனவே ரோமானியப் படைகளில் சிறந்த முறையில் படைத் தளபதிகளாய் பணியாற்றி நல்ல பெயரெடுத்திருந்த டைபீரியஸ், ட்ரூசஸ் ஆகியோர்பால் அவரது கவனம் திரும்பியது. கி.மு. 11-ல் தனது மகள் ஜூலியாவை மணந்து கொள்ளும்படி (ஜூலியாவின் மூன்றாவது கணவர்) டைபீரியாவை வற்புறுத்தினர். வேறொரு மனைவி மூலம் அக்ரிப்பாவுக்குப் பிறந்த ஒரு பெண்ணை ஏற்கெனவே மணந்திருந்த டைபீரியஸ்வேண்டா விருப்பாக இதற்கு இணங்கவேண்டியதாயிற்று. ஆக்டேவியாவுக்கும் அன்டோனிக்கும் பிறந்த அன்டோனியாவை ட்ரூசஸ் மணந்தார். கி.மு. 9-ல் ட்ரூசஸ் இறக்கவே, டைபீரியஸ்மட்டுமே வாரிசாக ஆனார். கி.மு. 6-ஆம் ஆண்டில் டிரிபியூன் அதிகாரங்கள் அவருக்கு அளிக்கப்பட்டன.

இதற்கிடையில் அகஸ்டஸின் மனம் மறுபடியும் கெயஸ் லூசியஸ் பக்கம் திரும்பியதாகத் தெரிகிறது. கெயஸ் சீசரை அரசியல் வாழ்வில் அறிமுகப்படுத்த வேண்டுமென்பதற்கென்றே கி.மு. 5-ஆம் ஆண்டில் நீண்ட நாட்களுக்குப் பிறகு கான்சலானர் அகஸ்டஸ். படைத் தலைமை போன்ற பல பதவிகளிலும் கெயஸை அமர்த்தினர். மேலும் கி.பி. முதலாண்டில், அவருக்கு வயது அப்பொழுது இருபது தான் என்பதையும் பார்க்காமல் கெயஸைக் கான்சலாக்கினர். லூசியஸ் சீசரும் இவ்வாறே பதவிகள் அளிக்கப்பட்டு, கி.பி. 4-ஆம் ஆண்டில் கான்சலாவார் என்று ஆணையிட்டார் அகஸ்டஸ்.

அகஸ்டஸின் திட்டத்தில் ஏற்பட்ட இம்மாறுதல்களையெல்லாம் உணர்ந்து கொண்ட டைபீரியஸ் கி.மு. 6-ஆம் ஆண்டிலேயே மனம் கோணி, ரோமிலிருந்து அகன்று ரோட்ஸ் தீவுக்குச் சென்று ஒதுங்கி வாழ்ந்து வந்தார். ரோமுக்கு அவர் 'திரும்பிவரக் கூடாது' என்று அகஸ்டஸும் பின்னர் ஆணையிட்டார். கி.பி. 2-ஆம் ஆண்டில் இந்த ஆணையில் சிறு மாறுதல் ஒன்று செய்யப்பட்டது. அவர் ரோமுக்குத் திரும்பலாம் என்றும் ஆனால், அரசியலில் பங்கு கொள்ளக் கூடாது என்றும் கூறப்பட்டது. எனவே, ரோமுக்கு வராமலேயே ரோட்ஸிஸ் தொடர்ந்து இருந்து வந்தார் டைபீரியஸ்.

கி.பி. 2-ஆம் ஆண்டில் லூசியஸ் சீசரும், இரண்டாண்டுகளுக்குப் பிறகு கெயஸ் சீசரும் இறந்தனர். அகஸ்டஸின் புதிய திட்டமும் அவர்களோடு சேர்ந்து இறந்தது. அக்ரிப்பாவுக்கும் ஜூலியாவுக்கும் பிறந்த மேலும் மூன்று குழந்தைகளும் இருந்தன. அவை முறையே ஜூலியா, அக்ரிப்பினு (Agrippina) என்ற பெண்களும், அக்ரிப்பா போஸ்த்துமஸ் (Agrippa postumus-தந்தையின் மரணத்துக்குப் பின் பிறந்தவன்) என்ற பையனும் ஆகும். சிறுபிள்ளையான அக்ரிப்பா போஸ்த்துமஸ் (பிறப்பு கி.மு. 12) யாருக்கும் அடங்காத, தீக்குணங்கள் நிரம்பியவனாக இருந்ததால், அவனை வாரிசாக எடுத்துக் கொள்ள விரும்பவில்லை, அகஸ்டஸ், தாயும் சேயுமான ஜூலியாக்கள் இருவருமே தீயொழுக்கங்களில் ஈடுபட்டிருந்தனர். எனவே, தன் மகளான ஜூலியாவை கி.மு. 2-லும் பேத்தியான ஜூலியாவை கி.பி. 7-லும், பேரனை அக்ரிப்பா போஸ்த்துமஸை அதே ஆண்டிலும் வெவ்வேறு தீவுகளுக்கு நாடு கடத்தினர் அகஸ்டஸ்.

இவ்வாறு மறுபடியும் டைபீரியஸையே வாரிசாக மேற்கொள்ள வேண்டியதாயிற்று. டிரிபீயூன் அதிகாரங்கள்

மீண்டும் அவரிடம் ஒப்புவிக்கப்பட்டன. கி.பி. 13-ல் அகஸ்டஸின் தள்ளாமை காரணமாக, புரோகான்சல் அதிகாரங்க ளனைத்தும் அளிக்கப்பட்டு, அகஸ்டஸோடு சேர்ந்து அல்லது அவரது பெயரில் நாட்டை ஆள அனுமதிக்கப்பட்டார் டைபீரியஸ். இவ்வாறு டைபீரியஸ் கிளாடியஸ் நீரோவுக்கும் லிவியாவுக்கும் பிறந்த டைபீரியஸ் வாரிசானார். அவரது வம்சம் ஜூலியோ-கிளாடிய வம்சம் (Julio claudian dynasty) என்று அழைக்கப்பட்டது.

அகஸ்டஸின் மரணம், அகஸ்டஸின் இறுதிக்காலம் துயரம் நிறைந்தது எனச் சொல்லப்படுகிறது. தனது குடும்பத்தில் பலர் ஒருவர்பின் ஒருவராக இறந்ததும், ஜெர்மெனியில் வேரஸ் படுதோல்வியடைந்ததும் அவரது துயரங்களுக்குக் காரணம். டைபீரியஸும், ட்ரூசஸின் முத்த மகனை ஜெர்மானிக்கஸும் (Germsnicus) ரைன் நதியைக் கடந்து வராதவாறு ஜெர்மானியர்களைத் தடுத்து நிறுத்தினர். இதுவே அகஸ்டஸுக்கு ஓரளவு ஆறுதலளித்தது.

கி.பி. 14-ஆம் ஆண்டில் படைத்தலைமை பூண்டு இலீரியாவுக்குச் சென்று கொண்டிருந்தார் டைபீரியஸ். புருண்டீசியத்துக்குச் சென்று கப்பலேறுவதற்குப் போய்க் கொண்டிருந்த அவருடன் பெனிவெண்ட்டம் வரை தானும் சென்று ரோமுக்குத் திரும்பிக் கொண்டிருந்தார் அகஸ்டஸ். வழியில் நேப்பிள்ஸில் தங்கி அங்கு விளையாட்டு விழாவைக் கண்டு களித்தார். அங்கு நடந்த விருந்திலும் பங்கு கொண்டார். பின்னர் அஸ்டூராவுக்கு (Astura)வந்தார். அங்கு அவரதுஉடல் நிலைகெட்டது. நோலாவை (Nola) அடைந்தபோது, உடல்நிலை மிகவும் மோசமடைந்தது. உடனே, டைபீரியஸுக்கு ஆளனுப்பப்பட்டது. அவர் திரும்பிவருவதற்கு முன்பே அகஸ்டஸ் சீசர் இறந்துபோனார்.

ஓராண்டுக்கு முன்னரே தனது இறுதி ஏற்பாட்டினை (Will) வரைந்து, வெஸ்டா ஆலயத்தின் புனிதக் கன்னிகளிடம் ஒப்படைத்திருந்தார் அவர். அதனுடன் வேறு இரு ஓலைகளையும் கூட அவர்களிடம் ஒப்படைத் திருந்தார். பேரரசின் விவகாரங்கள் பற்றி ஓர் ஓலையில் எழுதப்பெற்றிருந்தது. ஜூலியஸ் சீசர் மரணம் அடைந்தது முதல் அவர் சாதித்த சாதனைகள் அனைத்தையும் மற்றொரு ஓலையில் அவர் எழுதியிருந்தார். ரோமிலும் மற்ற இடங்களிலும் தூண்களின்மீது அதைப் பொறித்துவைக்கவேண்டும் என்று அவர் அதில்கூறி யிருந்தார். அவ்வாறே அதுபின்னர் எழுதிவைக்கப்பட்டது. ஆனால் அத்

தூண்கள் அனைத்தும் அழிந்து விட்டன. கலேஷியாவில் அன்சைராவில் (Ancyra) கோவில் ஒன்றின் சுவர்களின் மீதும் அது பொறிக்கப்பட்டிருந்தது. அது மட்டுமே இப்பொழுது முழுமையாகக் கிடைத்துள்ளது. அது கிரேக்க, இலத்தீன் மொழிகளில் எழுதப்பட்டதாகும்.

இலத்தீன் இலக்கியத்தின் பொற்காலம்: அகஸ்டஸின் காலம் இலத்தீன் இலக்கியத்தின் 'பொற்காலம்' என்று பலரால் அழைக்கப்படுகிறது. இதற்குக் காரணம் அவரது நீண்ட ஆட்சியின் பொழுது பல சிறந்த இலத்தீன் எழுத்தாளர்கள் வாழ்ந்தது மட்டுமன்றி, அவர்கள் எழுதிச் சென்ற நூல்களில் சில அழிந்து ஒழிந்து போகாமல் இன்றும் வழக்கில் இருக்கின்றன.

பிரபுக்களின் கட்சியைச் சேர்ந்த அரசியல் வாதியான சிசரோ (Tullius Cicero) சிறந்த பேச்சாளராகவும் எழுத்தாளராகவும் திகழ்ந்தார். ஆனால், ஆக்டேவியஸுக்கு இருபது வயதாக இருக்கும் பொழுதே, அதாவது கி.மு. 43-ல் அவர் இறந்து போனதால், அவரை அகஸ்டஸின் காலத்து எழுத்தாளர் பட்டியலில் நாம் சேர்க்க வேண்டியதில்லை.

வரலாற்று நூல்கள் பல அகஸ்டஸ் காலத்தில் எழுதப்பட்டன. அவற்றுள் பல இன்று கிடைக்கவில்லை. சான்றாக, முதலாவது உள்நாட்டுப் போரின் வரலாற்றை ஜூலியஸ் சீசரின் காலம்வரை எழுதியிருந்தார் அசீனியஸ் போலியோ (C. Asinius pollio) என்பவர். அன்ட்டோனியின் தளபதியான இவரைப்பற்றி நாம் ஏற்கெனவே படித்திருக்கிறோம். இதன் தொடர்ச்சியாக மெசலா (Messala) என்பவர் மற்றொரு நூலை எழுதினார். இவை இரண்டுமே இப்பொழுது கிடைக்கவில்லை. அதேபோல் பாம்பேயஸ் ட்ரோகஸ் (Pompeius Trogus) என்பவரால் எழுதப்பட்ட மாசிடோனியாவின் வரலாறும் இன்று கிடைக்கவில்லை. சிறந்த நூலாக அது அன்று எழுதப்பட்டதாகத் தெரிகிறது. அதன் சுருக்கம் ஒன்றை ஜஸ்டினஸ் (Justinus) என்பவர் பின்னர் வெளியிட்டார்; அது மட்டுமே இப்பொழுது நமக்குக் கிடைத்துள்ளது.

அக்காலத்தில் வாழ்ந்த தலைசிறந்த வரலாற்றுசிரியர் **டைட்டஸ் லிவியஸ்** (Titus Livius) லிவி (Livy) என்று பொதுவாக அழைக்கப்படும் இவர், கி.மு. 59-ல், அதாவது அகஸ்டஸுக்கு மூன்றுண்டுகளுக்கு முன்பு பிறந்தார். கி.பி. 17-ல் அகஸ்டஸுக்கு மூன்றுண்டுகளுக்குப் பின்பு இறந்தார்.

அவர் ரோமுலஸ் முதல் அகஸ்டஸ் வரையிலான ரோமானிய வரலாற்றை 142 நூல்களில் (நீண்ட அத்தியாயங்கள்) எழுதி வெளியிட்டார். அகஸ்டஸின் காலத்தில் கி.மு. 9-ஆம் ஆண்டோடு முடிவடைகிறது இந்த வரலாறு. முதல் உள் நாட்டுப் போரைப் பற்றி எழுதியபோது பிரபுக்களின் கட்சியை ஆதரித்து, ஜூலியஸ் சீசரைக் குறை கூறுவதுபோல் எழுதி னாலும், அகஸ்டஸால் ஆதரிக்கப்பட்டார் லிவி.

வரலாற்று நூல்களோவிட அகஸ்டஸின் காலத்துக்குப் புகழைத் தேடித் தந்தவை கவிதைகள் தாம். ஏராளமான கவிஞர்கள் அவரால் ஆதரிக்கப்பட்டனர். ஆனால், இன்றைக் கும் மக்களால் படிக்கப்பட்டு, புகழோடு நின்று நிலைத்திருக் கின்றவர்கள் வெர்ஜில், ஹொரேஸ, திபுல்லஸ், புரோபெர்ட்டி யஸ் ஓவிட் ஆகியோர் மட்டுமே, இலத்தீன் கவிஞர்களில் தலை சிறந்தவர்களாகக் கருதப்படுகிற வெர்ஜில் (P. Vergilius Maro) கி.மு. 70-முதல் கி.மு. 19 வரை வாழ்ந்தவர். கி.மு. 41-40-ல் இவரது நிலங்கள் அனைத்தும் பறிக்கப்பட்டன. ஆனல், தன்னை ஆதரித்த அசீனியஸ் போலியோ மூலம் இழந்த நிலங்களை மீண்டும் பெறுவதற்காக ரோமுக்கு வந்த பொழுது தான் அகஸ்டஸுக்கு அறிமுகப்படுத்தி வைக்கப்பட்டார் இக் கவிஞர்: அன்று முதல் அகஸ்டஸுக்கும், அவரது சிறந்த அமைச்சரான மேசினஸுக்கும் (Maecenas) நெருங்கியவராக வாழ்ந்து வந்தார். அவர் இத்தாலியின் இயற்கையழகையும் கிராமிய வாழ்வையும் வருணித்து எண்ணற்ற கவிதைகளைப் புனைந்தார். அவரது படைப்புக்களில் தலைசிறந்ததாகக் கருதப் படுவது ஈனியட் (Aeneid) என்ற காவியம். ஈனியஸின் கதை யோடு ஆரம்பித்து அகஸ்டஸின் புகழ்மிக்க ஆட்சிக்குப் பின் னணியாக இருந்த ரோமின் வரலாற்றை வருணிக்கிறது அது.

ஹொரேஸ் (Horctius Flaccus, கி.மு. 65-8) என்ற கவிஞர் ஆடுவதற்கும் பாடுவதற்கும் ஏற்ற பாக்களைப் (Odes) புனைந் தார். அன்றைய இலத்தீன் கவிதையுலகில் அது ஒரு புதுமை. ரோமானிய வரலாற்றில் புகழ்மிக்க பல பண்டை வீரர்களைப் பற்றியும், அவர்தம் அரிய செயல்களைப் பற்றியும் விவரித்தன அப்பாடல்கள். அகஸ்டஸைப் பற்றியும் இதே முறையில் பல பாடல்களை அவர் இயற்றினர். சமூக வாழ்வைப் பற்றியும் நகைச்சுவையோடு பல பாடல்கள் அவரால் இயற்றப்பட்டன. அன்றைய சமயம், சமுதாயம், ஒழுக்க நெறிகள் முதலிய வற்றில் மலிந்திருந்த பொய்யையும் போலியையும் கேலி செய்தன அவரது பாடல்கள். **திபுல்லஸ்** (Aulus Tibullus கி.மு. 59-18) எழுதிய கவிதைகள் பெரும்பாலும் காதலையும்

அமைதியான வாழ்வையும் பற்றியவையே. அகஸ்டஸின் தள பதிகளில் ஒருவரான வலேரியஸ் மெசல்லஸ் (Valerius Messallus) என்பவரால் பெரிதும் ஆதரிக்கப்பட்டார் இவர். போருக்கெனக் கால் மாநிலத்துக்கு மெசல்லஸ் சென்றபோது திபுல்லஸும் உடன் சென்றார். மேனியஸ் மூலம் அகஸ்டஸுக்கு அறிமுகமான மற்றொரு கவிஞர் புரோபெர்ட்டியஸ் (Aurelius propertius). இவர் பிறந்த, இறந்த ஆண்டுகள் நிச்சயமாகத் தெரியவில்லை. அவர் அகஸ்டஸையும் அவரது ஆட்சியையும் புகழ்ந்து பல கவிதைகள் இயற்றினர்.

ரோமானிய வரலாற்றைப் பற்றியும் வீரர்களைப் பற்றியும் வெர்ஜிலைப் போலப் பரவசத்தோடு பாடிய மற்றொரு பெருங் கவிஞர் ஓவிட் (Ovidius Naso) என்பவர். கி.மு. 43-ல் செல்வம் மிக்க ஈக்வைட் குடும்பம் ஒன்றில் பிறந்தார் இவர். தனது மகன் அரசியலில் நுழைந்து, பதவிகளை வகிக்கவேண்டும் என்று இவரது தந்தை விரும்பினர். ஆனால், இவரோ அதை விரும்பாமல் கவிதையில் ஈடுபட்டு, இன்பக் களியாட்டங்களில் மனத்தைச் செலுத்தலானர். மேசினஸோடும் அகஸ்டஸோடும் நெருங்கிய தொடர்பு பூண்ட கவிஞர்களின் குழுவில் சேர்ந்த வரல்லர் இவர். செல்வமும் செல்வாக்குமிக்க குடும்பங் களோடு மண உறவுகளைக் கொண்டிருந்த இவர் அகஸ்டஸுக் கும் லிவியாவுக்கும் உறவினர். அகஸ்டஸுக்கும் இவருக்கும் ஏதோ காரணத்தால் பகைமை இருந்துவந்ததாகத் தெரிகிறது. ரோமானிய வரலாற்றின் முக்கியமான தேதிகளையும், அத்தேதி களில் பெருஞ்செயல்களை ஆற்றிய வீரர்களையும் விவரிக்க 'பஸ்தி' (Fcsti = பஞ்சாங்கம்) என்ற காவியத்தை அகஸ்டஸின் விருப்பத்தின்படி இவர் இயற்றினர். அகஸ்டஸ் ஆற்றிய செயல் களும்கூட தேதிகளோடு அதில் புகழப்படுகின்றன. ஆனால், அவர் கி.மு. 8-ஆம் ஆண்டில் கருங்கடலின் கரையிலிருந்து தாமி (Tomi) என்ற நகருக்கு நாடுகடத்தப்பட்டார். தனது மரணம் வரை (கி.பி. 18) அவர் அங்கேயே இருக்கவேண்டியதாயிற்று. அகஸ்டஸின் பேத்தியான ஜூலியாவின் தீயொழுக்கத் துக்கும் இவருக்கும் ஏதாவது தொடர்பிருக்கவேண்டும் என்று பலர் கருதுகின்றனர்.

23. ஜூலியோ-கிளாடிய வம்சம்

(கி.பி. 14–68)

டைபீரியஸ் சீசர், 14-37

டைபீரியஸ் கிளாடியஸ் நீரோ என்பது இரண்டாவது பேரரசரின் இயற்பெயர். ஆனால், ஜூலியஸ் சீசரின் 'ஜூலி' (Juli) குலத்தில் சேர்ந்து, அக்குலத்துக்கு உரிய 'சீசர்' என்ற பெயரையும் தாங்கிக் கொண்டனர் இவரும், பின்னர், வந்த மற்றப் பேரரசர்களும், அகஸ்டஸின் வாரிசாக இருந்ததால் டைபீரியஸின் பட்டப் பெயர், 'டைபீரியஸ் சீசர் அகஸ்டஸ்' என்பது. பட்ட மேற்ற பொழுது அவருக்கு வயது ஐம்பந் தைந்து.

அகஸ்டஸின் ஆட்சியின்போது ஆசியாவிலும் டான்யூப், ரைன் ஆகிய பகுதிகளிலும் சிறந்த முறையில் பணியாற்றியவர் டைபீரியஸ். ஆனால், அகஸ்டஸின் தாறுமாறான வாரிசுரிமைக் கொள்கை காரணமாக-ஆரம்பத்தில் டைபீரியஸை வாரிசாக்கி யதும், பின்னர் அவரைப் புறக்கணித்துவிட்டு மற்றவர்களை வாரிசாக்கத் திட்டமிட்டு, அவர் அவமானப்படத் தக்க விதத்தில் அவருக்கெதிராகப் பல நடவடிக்கைகளை மேற் கொண்டதும்-டைபீரியஸின் குணநலன்கள் பெரிதும் பாதிக்கப் பட்டிருந்தன. அவர் ஆட்சியில் விருப்பம் இல்லாதவராகவும், தன்னம்பிக்கை அற்றவராகவும், யாரையும் சந்தேகக் கண்க ளோடு பார்ப்பவராகவும், ஒதுங்கி வாழ்பவராகவும் மாறினர்.

அடுத்த வாரிசு பற்றிய சிக்கல்: டைபீரியஸுக்குப்பின், காலஞ்சென்ற அவரது சகோதரரான ட்ரூசஸின் மகனை ஜெர்மானிக்கஸ் (Germanicus) என்பவர் அடுத்த அரசராக வேண்டும் என்று ஏற்பாடு செய்திருந்தார் அகஸ்டஸ். டைபீரிய ஸுக்கே முதல் மனைவியின் மூலம் இரண்டாம் ட்ரூசஸ் என்ற

பையன் ஒருவன் இருந்தான். ஆயினும், அவர் அகஸ்டஸின் ஏற்பாட்டுக்கு இணங்கினர். அகஸ்டஸின் மரணத்துக்குப் பின்னருங்கூட, தனது மகனுக்கு வாரிசுரிமையை வழங்க வேண்டும் என்று எண்ணவில்லை டைபீரியஸ். அது அவரது உயரிய குணத்தைக் காட்டியது. இரண்டாம் ட்ரூசஸ் இனிமையான குணத்தை உடையவர். ரோமில் பலரும் அவரை விரும்பினர். இதையெல்லாம் கண்டு ஜெர்மானிக்கஸின் நண்பர்கள் அஞ்சினர். சிறந்த தளபதி என்று படையினரிடையில் நல்ல மதிப்பைப் பெற்றிருந்த ஜெர்மானிக்கஸை, படைகளின் உதவியோடு ஆட்சியைக் கைப்பற்றுமாறு அவர்கள் தூண்டினர். ஆனால், அவர் அதற்குச் செவிசாய்க்கவில்லை.

கி.பி. 19-ஆம் ஆண்டில் ரோமின் ஆசிய மாநிலங்களை மேற்பார்வை செய்வதற்கென்று சென்ற ஜெர்மானிக்கஸ் அங்கு இறந்து போனார். அவரது மனைவியான அக்ரிப்பினு (ஆகஸ்டஸின் மகளான ஜூலியாவுக்கும் அக்ரிப்பாவுக்கும் பிறந்தவர்) டைபீரியஸின் ஆட்களால் நஞ்சு கொடுக்கப்பட்டே தம் கணவர் இறந்தார் என்று கூற ஆரம்பித்தார். இதற்கு ஆதாரம் எதுவும் இல்லை. எனினும், டைபீரியஸுக்கு எதிராகத் தம் குற்றச்சாட்டை அவர் கைவிடவில்லை.

எனினும், இதை டைபீரியஸ் பொறுத்துக் கொண்டார். மேலும், கி.பி. 22-ல் இரண்டாம் ட்ரூசஸ் இறந்ததும், அக்ரிப்பினுவின் பிள்ளைகளான நீரோவையும் மூன்றாம் ட்ரூசஸையும் தனக்கு அடுத்த வாரிசுகளாகவும் அவர் நியமித்தார். இத்துடன் சச்சரவு அனைத்தும் தீர்ந்து போய்விட்டதுபோல் தோன்றியது.

ஆயினும், பேரரசின் அமைச்சரான ஏலியஸ் சீயானஸ் (L. Alius Seianus) என்பவர் சச்சரவுகளை மீண்டும் தூண்டிவிட்டுக் கொண்டிருந்தார். யாரையும் நம்பாத டைபீரியஸ் ஏதோ காரணத்தினால் இவரை மட்டும் நம்பித் தனக்கு அடுத்த நிலையில் இவரை வைத்திருந்தார். அக்ரிப்பினு, ஜெர்மானிக்கஸோடு படையிலிருந்த அதிகாரிகள், செனேட்டர் பலர் ஆகியோர் டைபீரியஸைக் கொன்றுவிட்டு, அரியணையைக் கைப்பற்ற சதி செய்கிறார்கள் என்று பேரரசிடம் அவர் கூறி வந்தார். இந்தக் குற்றச் சாட்டிலும் எந்த அளவு உண்மை இருந்தது என்பது புரியவில்லை. அவர்கள் அனைவரின் மீதும் நடவடிக்கைகள் எடுக்கவேண்டுமென்று டைபீரியஸ் விரும்பினர். ஆனால், அன்னையான லிவியா அடிக்கடி தலையிட்டு அவரை அமைதிப்படுத்தி வந்தார்.

கி.பி. 29-ல் லிவியா இறந்தார். உடனே, டைபீரியஸின் கோரிக்கைக்கு இணங்க அக்ரிப்பினுவையும் நீரோவையும் நாடு கடத்திற்று செனேட். அடுத்த ஆண்டில் (கி.பி. 28) ட்ரூசஸும் நாடு கடத்தப்பட்டார். இதற்கிடையில் சீயானஸின் ஆதிக்கம் ரோமில் வளர்ந்து வந்தது. கி.பி. 23-ல் அரசரது மெய்க்காவல் படையான பிரேட்டோரியக் காவற்படையானது[1] (Praetorian Coharts) அவரது கட்டுப்பாட்டில் வைக்கப்பட்டது. அதை அவர் ரோமுக்கருகிலேயே, தனக்குத் தேவைப்பட்டபோது உதவுவதற்கென்று வைத்திருந்தார். பின்னர், விடுமுறைக்காகக் கேப்ரித் (Capri) தீவுக்குச் சென்றிருந்த பேரரசை நீண்ட நாட்கள் அங்கேயே இருக்கும்படி தூண்டி, தலைநகரில் நடப்பது எதுவும் அவருக்குத் தெரியாமல் செய்துவிட்டார். தனது ஆட்களையே படைத் தளபதிகளாக நியமித்தும் வந்தார். கி.பி. 29-ல் அக்ரிப்பினுவின் சதிகளைப் பற்றி அரசரிடம் கூறி, அவரை நாடு கடத்தியபின், புரோகான்சல் அதிகாரத்தைப் பெற்று மேலும் உயர்ந்தார். மேலும், அவர் தன்னையே வாரிசாக்கிக் கொள்ளும்படியும் பேரரசரைத் தூண்டினர். ஆனால், பேரரசரோ அதற்கு மட்டும் இணங்காமல் காலங்கடத்தி வந்தார்.

சீயானஸின் உண்மையான இரகசிய நோக்கங்களை விளக்கி, முதலாம் ட்ரூசஸின் (பேரரசரின் காலஞ்சென்ற தம்பி) மனைவியான அன்ட்டோனியா கி.பி. 31-ஆம் ஆண்டில் கேப்ரியிலிருந்த டைபீரிஸுக்குக் கடிதம் ஒன்று எழுதினர். தனது நம்பிக்கைக்கு இதுவரை உரியவராயிருந்த அமைச்சரின் உள் நோக்கங்களை அரசருக்கு உணர்த்தியதை அக்கடிதம் விளக்கியது. உடனே பேரரசர் அமைச்சரைத் தீர்த்துக் கட்டுவதற்கென நடவடிக்கைகளை மேற்கொண்டார். சீயானஸுக்குத் தெரியாமல் பிரேட்டோரியப் படையின் தலைமையை மேற்கொண்டு, அதை ரோமிலிருந்து அப்பால் அழைத்துச் செல்லும்படி செர்ட்டோரியஸ் மேக்ரோ (Sertorius Macro) என்பவருக்கு உத்தரவு அனுப்பப்பட்டது. தீயணைக்கும் படையினர் (Praefectus Vigilum - அகஸ்டஸின் காலத்தில் ஏற்படுத்தப்பட்ட இப்படையின் ஏழுபிரிவுகளிலும், தலைக்கு 500 வீதம், 3500 பேர்கள் இருந்தனர்) தெருக்களைக் காவல் செய்து வந்தனர். அதேசமயம் செனேட்டில் சியானஸுக்கு எதிரான

---

1. கான்சல்களின் (அதற்குமுன் பிரேட்டர்களின்) படையாக வெகு நாட்களாகவே இது இருந்து வந்தது. அகஸ்டஸின் காலத்தில் ஒவ்வொன்றும் 500 பேர்களைக் கொண்ட ஒன்பது பிரிவுகளை இது கொண்டிருந்தது. அவரது மெய்க்காவல் படையாக இது இருந்தது.

பேரரசின் கடிதம் ஒன்றை மெம்மியஸ் ரெகூலஸ் (Memmius Regulus) என்ற கான்சல் படித்துக் காட்டினர். சீயானஸ் ஒரு துரோகி என்று கூறியது அக்கடிதம். அன்றே அவர்மீது மரணதண்டனை விதித்து, சிரச்சேதம் செய்தது செனேட். அவரோடு சம்பந்தப்பட்டிருந்த வேறு பலருங்கூட மரண தண்டனை பெற்றனர். டைபீரியஸின் ஒரே மகனை இரண்டாம் ட்ரூசஸின் மரணத்துக்கும் தன் கணவன் ஊட்டிய நஞ்சே காரணம் என்று சீயானஸின் மனைவி கூறினர்.

அக்ரிப்பினாவும் அவரது பிள்ளைகளும் கூட அடுத்தபடியாகத் தண்டிக்கப்பட்டனர். கடைசி பிள்ளையான கையஸ மட்டும், சிறுவனாயிருந்த காரணத்தினால், உயிர் தப்பினார் ஆயினும், கேப்ரியில் தனது அரண்மனையில் ஒரு கைதியைப் போல அவரை அடைத்துவைத்திருந்தார் அரசர். அரசருக்கெதிராகச் சதி செய்வதாகவும், அவருக்கெதிராக வேறுவிதமான நடவடிக்கைகளில் ஈடுபட்டதாகவும் குற்றஞ்சாட்டப்பட்டு ஏராளமானவர்கள் மரணதண்டனைக்குள்ளாயினர். அரசரது சந்தேகக் குணத்தைப் பயன்படுத்திக் கொண்டு தன்னல நோக்கத்தோடு தம்பகைவர்மீது இத்தகைய நிரூபணமற்ற குற்றச்சாட்டுக்களைப் பலர் செனேட்டின் முன்கொண்டுவந்து அவர்களைக் கொலை செய்வித்தனர். தனதுகடைசி பத்து ஆண்டுகளையும் கேப்ரித்தீவிலேயே கழித்தார் அரசர். அப்பொழுது அவரது சந்தேகக் குணமும், சதிகள் பற்றிய அச்சமும் அதிகரித்ததுதான் இதற்குக் காரணம் என்று சொல்லப்படுகிறது. அச்சமயத்தில்தான் இவ்வாறு பலருக்குக் காரணமில்லாமல் மரணதண்டனை விதிக்கப்பட்டது. 'சதிபற்றி செய்திகளைச் சொல்பவனுக்குச் சதிகாரனின் சொத்தில் கால் பங்கு சேரும்' என்ற சட்டம் ஒன்று இருந்தது. இது சதி பற்றிய பொய்க் குற்றச்சாட்டுக்களைக் கொண்டு வரும்படி பலருக்கும் தூண்டுதலளித்தது. மேலும், நீண்ட காலம் தலைநகரிலிருந்து, தனது கடமைகளைத் துறந்து கேப்ரியில் டைபீரியஸ் வாழ்ந்ததால், அவர் தீயொழுக்கங்களில் மூழ்கித் தன் காலத்தை அங்குக் கழித்ததாகக் கதைகள் உலவின. இவற்றிலும் உண்மை இருப்பதாகத் தெரியவில்லை. எனினும், இவ்வாறு ரோமில் அரசர் இன்மையாலும், அரசாங்க அலுவலில் அவர் அக்கறை காட்டாமையாலும், நிர்வாகம் நல்ல முறையில் இயங்காமல் போயிற்று. ஓய்வு பெற்ற அதிகாரிகளுக்குப்பதில் புதிய அதிகாரிகள் நியமிக்கப்படவில்லை. துருப்புக்களுக்கும் சம்பளம் உரியவேளையில் அளிக்கப்படவில்லை. எப்பொழுதோ ஒருமுறை அரசரிடமிருந்து வந்த ஆணைகளை வைத்துச்

செனேட்டும் உயர்அதிகாரிகள் சிலரும் நிர்வாகத்தை நடத்தி வந்தனர்.

இறுதிவரை தனது வாரிசுபற்றி எவ்வித முடிவையும் மன்னர் மேற்கொள்ளவில்லை. எனவே, அவரது மரணத்தின் பொழுது தெளிவில்லாமலிருந்தது. ஜெர்மானிக்கஸின் கடைசி பிள்ளையான கெயஸும், டைபீரியஸின் பேரனான டைபீரியஸ் கெமெல்லஸும் (Gemellus) அப்பொழுது உயிருடன் இருந்தனர். அவர்கள் இருவருமே தனது வாரிசுகள் என்று மன்னர் கூறிவந்தார். ஆனால், கெயஸ் கேப்ரியில் அடைபட்டுக் கிடந்ததால் நிர்வாக அனுபவம் எதுவும் அவருக்குக் கிடைக்க வழியில்லாது போயிற்று.

ரோமிலும் மாநிலங்களிலும் டைபீரியஸின் நிர்வாகம்: டைபீரியஸின் முதல் ஆண்டிலேயே அதிகாரிகளின் தேர்தல் நின்று போயின. மக்களின் அவைகளால் இதுவரை அதிகாரிகள் தேர்ந்தெடுக்கப்படுவது நின்று போயிற்று. பேரரசராலும் செனேட்டாலும் சிபாரிசு செய்யப்பட்ட அதிகாரிகளின் பெயர்களைக் கமீஷியா மன்றம் அது முதல் ஏற்றுக் கொள்ளத் துவங்கியது. இவ்வாறு குடியரசு முறையின் மற்றொரு தூணான தேர்தல் முறையும் முடிவுக்கு வந்தது. அதேபோல் கமீஷியாவின் சட்டமியற்றும் உரிமையும் மறையத் தொடங்கியது.

அதே சமயம் செனேட்டின் அதிகாரங்கள் கூடின. அதிகாரிகளின் வேலைகளை மேற்பார்வை செய்தல், ஆண்டுதோறும் அதிகாரிகளைப் பொறுக்கி எடுத்து நியமித்தல், உயர்நீதி மன்றமாக வழக்குகளை விசாரித்துத் தண்டனையளித்தல் முதலிய பல புதிய அதிகாரங்களை டைபீரியஸ் அதற்கு அளித்தார். ஆனால், அரசரின் ஆணைக்குக் கட்டுப்பட்டே இவ்வதிகாரங்களைச் செனேட் நிர்வகித்து வந்தது.

நிதி நிர்வாகத்தில் மிகவும் சிக்கனத்தைக் கடைப்பிடித்தார் டைபீரியஸ். ஏழைகளுக்கு தானியங்களையும் ரொட்டியையும் வழங்குவதும், அவர்களுக்கென்று விளையாட்டுக்களை நடத்துவதும் அகஸ்டஸின் காலத்திலேயே சிறிது சிறிதாக நிறுத்தப்பட்டன. டைபீரியஸின் காலத்தில் அவை மேலும் குறைக்கப்பட்டன. கருவூலத்தில் பெருநிதி குவிந்து கிடந்தது. கடனில் மூழ்கிப் போயிருந்த செனேட்டர்களுக்கு மட்டும் கருவூலத்திலிருந்து பணம் கொடுத்து உதவினார் அரசர். போலீஸ் படை உறுதியோடு செயல்பட்டு, ஏழைகளின் போராட்டங்களை ஒடுக்கி, அமைதியை ரோமில் ஏற்படுத்தியது. பணம் படைத்த

தவர்கள் அனைவரும் தமது பணத்தில் மூன்றில் இரண்டு பகுதியை இத்தாலியில் நிலத்தில் முதலீடு செய்யவேண்டும் என்ற ஆணை கி.பி. 33-ல் வெளியாயிற்று. வெளியிலிருந்து வரும் தானியத்தையே ரோம் நம்பியிருப்பதை முடிவுக்குக் கொண்டுவருவதற்காக மேற்கொள்ளப்பட்டது இந்த நடவடிக்கை. ரோமில் பேரரசர் அகஸ்டஸைத் தெய்வமாக்கி, அவருக்கு ஆலயம் ஒன்றையும் டைபீரியஸ் எழுப்பினர்.

மாநிலங்களில் அக்காலத்தில் மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கைகளை அடுத்துக் காண்போம். 'ரோமானியப் பேரரசின் எல்லைகளை மேலும் விரிவுபடுத்துவதற்கு முயலவேண்டாம்' என்று அகஸ்டஸ் கூறிச் சென்றார். அவருக்கு அடுத்து ஆண்ட நான்கு அரசர்களும்—ஜூலியோ - கிளாடிய அரசர்கள் நால்வரும்—அந்த அறிவுரையைப் பின்பற்றினர். மேலும், அந்நால்வரிலும் டைபீரியஸ் ஒருவரே சிறந்த போர் வீரர். மற்ற மூவரும் படைத்திறமை சிறிதும் இல்லாதவர். தாம் நேரடியாகப் படைத்தலைமை பூண்டு போருக்குச் செல்லாமல் தளபதிகளை அனுப்பினால், அவர்கள் திரும்பி வந்து ஆட்சியைக் கைப்பற்ற முயலுவார்கள் என்று அவர்கள் அஞ்சியதாகவும் தெரிகிறது. இவ்வாறு அவர்களது காலத்தில் ரோமானியப் படையானது எல்லைப் பாதுகாப்புப் படையாக மாறியது. இக் கொள்கைக்குப் பிரிட்டன் மட்டுமே விதிவிலக்கு.

ஆயினும், எல்லைப்புறங்களில் சிறுசிறு போர்களும் ஆக்கிரமிப்புக்களும் நடந்தே வந்தன. சான்றாக, கி.பி. 17-ல் கப்படோஷியாவை ஒரு மாநிலமாக்கி, பேரரசோடும் சேர்த்துக் கொண்டார் அரசர். யூப்ரட்டீஸ் எல்லையைப் பலப்படுத்துவதற்காக இந்த நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது.

கி.பி. 18-ல் ஆசியா மைனரிலிருந்த ஒரு சிற்றரசரை அழைத்து, தம் நாட்டின் அரசராகும்படி வேண்டிக் கொண்டனர் ஆர்மீனியப் பிரபுக்கள். ஆர்மீனியாவைக் கவர்ந்து கொள்ள வேண்டும் என்று எப்பொழுதுமே காத்துக் கொண்டிருந்த பார்த்திய மன்னர் மூன்றும் ஆர்ட்டா பேனஸ் (Artabanus-III) இதை விரும்பவில்லை. ஆயினும், டைபீரியஸ் ஆர்மீனியப் பிரபுக்களை ஆதரித்தார். தனது தம்பி மகன் ஜெர்மானிக்கஸை ஆசிய மாநிலங்களைப் பார்த்து வருவதற்கென ஏற்கெனவே அவர் அனுப்பியிருந்தார். ஆர்மீனியர்கள் விரும்பிய ஆர்டாக்ஸியாஸ் (Artaxias) என்பவருக்கு முடிசூட்டி வைக்கும்படி அவருக்கு ஆணையிட்டார் அரசர். எவ்வித இடையூறுமின்றிப் பதினேழு ஆண்டுகள் ஆண்டபின், கி.பி.

35-ல் ஆர்டாக்ஸியாஸ் இறந்தார். உடனே பார்த்திய மன்னர் ஆர்ட்டாபேனஸ் தனது மகன் ஒருவனை அனுப்பி ஆர்மீனியாவைக் கவர்ந்து கொண்டார். வயது முதிர்ந்து, அரசியலிருந்து ஒதுங்கி வாழ்ந்த டைபீரியஸ் தலையிடமாட்டார் என்று அவர் கருதினர். ஆனால், ஐபீரியாவைச் (Iberia) சேர்ந்த மித்ரடேட்டஸ் என்ற ஒருவரைத் தூண்டிவிட்டார் டைபீரியஸ். பார்த்தியப் படைகளை ஆர்மீனியாவிலிருந்து விரட்டிவிட்டு அதன் அரசரானார் மித்ரடேட்டஸ். பின்னர் ஆர்ட்டாபேனஸின் அரசான பார்த்தியாவின் மேற்கு மாநிலங்களையும்கூட அவர் கைப்பற்றினர். ஆர்ட்டாபேனஸ் பின்னர் தம் மாநிலங்களை மீண்டும் கைப்பற்றினாலுங்கூட, ஆர்மீனியாவில் தலையிடுவதை நிறுத்திக் கொண்டார்.

டைபீரியஸ் அரியணையேறிய உடனேயே வடக்கு ஜெர்மெனியில் ரோமானியப் படைகளுக்கும் ஜெர்மானியர்களுக்கும் மூன்றாண்டுகளுக்குக் கடும் சண்டைகள் நடந்தன. வடக்கு, மேற்கு ஜெர்மெனியைக் கைப்பற்றும் நோக்கத்தோடு கி.பி. 14-ல் ஜெர்மானிக்கஸ் போரைத் தொடங்கினர். இலட்சக் கணக்கான ஜெர்மானியர்களை அவர் கொன்று தீர்த்தார். ஆயினும், வடக்கு ஜெர்மென் குலங்கள் ஒன்று சேர்ந்து ரோமானியரிடையிலும் பெருஞ்சேதத்தை விளைவித்தனர். இறுதியில் எவ்விதமான இலாபமும் இல்லாமல் ஜெர்மானிக் கஸைத் திருப்பி அழைத்துக் கொண்டார் டைபீரியஸ் (கி.பி.16).

காலிகுலா, கி.பி. 37-41

தனக்குப் பின் யார் பேரரசராக ஆவது என்பது பற்றி எவ்வித முடிவையும் மேற்கொள்ளாமலேயே காலமானார் டைபீரியஸ். பிரேட்டோரியக் காவல் படையின் தளபதியான (Paretorian Prefect) மேக்ரோவின் ஆதரவைக் கெயஸ் ஏற்கெனவே கேப்ரியில் நாடியிருந்தார். எனவே, டைபீரியஸ் இறந்த உடனேயே கெயஸை அடுத்த பேரரசராக்க வேண்டுமென்று செனேட்டிடம் அவர் கோரியபோது எவ்வித எதிர்ப்புமின்றி அக் கோரிக்கைக்கு இசைந்தது அச்சபை. கெயஸ் இளைஞராயிருந்தபோது தமது தந்தையின் படைமுகாமில் அவர் அணிந்திருந்த செருப்பைப் பார்த்துக் காலிகுலா (Caligula) என்றபெயரை அவருக்குச் சூட்டியிருந்தார்கள் படைவீரர்கள். அப்பெயரே பின்னர் நிலைத்துவிட்டது.

குண இயல்புகளும் கொலையும்: ஜெர்மானிக்கஸின் பிள்ளையான காலிகுலா பட்டத்துக்கு வந்தது பலருக்கும்

மகிழ்ச்சியளித்தது. டைபீரியஸின் கடுமையான, சந்தேகமும் கொலைகளும் நிறைந்த ஆட்சியிலிருந்து விடுதலை பெற்றுவிட்டதாக அனைவரும் எண்ணினர். காலிகுலாவும் ஆரம்பத்தில் அனைவரும்மகிழும் வண்ணமே நடந்துகொண்டார். பிரேட்டோரியஸ் படையினருக்கு நிறையப் பணம் கொடுத்தும், ஏழை மக்களுக்காக விளையாட்டு விழாக்களை நடத்தியும், நாடு கடத்தப்பட்டவர்களை மீண்டும் ரோமுக்கு வர அனுமதித்தும், அரசாங்க விவகாரத்தில் நேரடியாக ஈடுபாடு கொண்டும் ஆரம்பத்தில் எல்லோரையும் திருப்திப்படுத்தினர்.

ஆனால், விரைவிலேயே அவரது நிர்வாக அனுபவமின்மை நன்கு வெளியாயிற்று. அவரது வீண் செலவுகளால் கருவூலம் காலியாயிற்று. டைபீரியஸ் சேர்த்து வைத்திருந்த பெருஞ்செல்வம் கரைந்தது. எனவே, செலவுகளைச் சரிக்கட்டுவதற்காகக் கூடுதல் வரிகளை விதிப்பது அவசியமாயிற்று. மேலும், அவரது அன்னை அக்ரிப்பினாவிடம் காணப்பட்ட சில குணங்கள் இவரிடமும் காணப்பட்டன. அதனால், எவரையும் அலட்சியத்தோடும் அவமதிப்போடும் நடத்தி, நண்பர்களையும் பகைவர்களாக ஆக்கிக் கொண்டார். முன்புபோல் செனேட்டைக் கலந்து முடிவுகளை மேற்கொள்ளும் பழக்கத்தைக் கைவிட்டார். பதவியேறிய சில மாதங்களிலேயே, தனக்குப் போட்டியாக அவர்கள் வளர்ந்துவிடாமல் இருக்க வேண்டுமென்பதற்காக, டைபீரியஸ் கெமல்லஸையும் மேக்ரோவையும் கொல்லுவித்தார். முன்போல் பெயரளவுக்குக்கூட விசாரணை என்பது ஏதுமில்லாமல் அவர்கள் சிரச்சேதம் செய்யப்பட்டனர். இதனால், அவருக்குப் பகைவர் அதிகரித்தனர். பல செனேட்டர்களும் படை அதிகாரிகளும் அவருக்கெதிரான சதிகளில் ஈடுபட்டனர். அத்தகைய சதிகளில் முக்கியமானது லென்ட்டுலஸ் கேட்டுலிகஸ் (Lentulus Gaetulicus) என்பவரால் கி.மு. 39-ல் உருவாக்கப்பட்டது. அவர் ரைன்நதிக் கரையிலிருந்த ரோமானியப் படைகளின் தளபதியாயிருந்தவர். பழைய குடியரசுக் காலத்துப் பிரபுக் குடும்பம் ஒன்றைச் சேர்ந்த ஏமிலியஸ் லெப்பிடஸ் (Aemilius Lepidus) என்பவரைக் காலிகுலாவுக்குப் பதிலாக அரசராக்க வேண்டுமென்பது அச்சதியின் நோக்கம். அச்சதி கண்டுபிடிக்கப்பட்டுப் பலர் கொலைத்தண்டனைக்கு ஆளாயினர். தமது சகோதரிகளான இரண்டாம் அக்ரிப்பினாவும் ஜூலியாவும்கூட அதில் சம்மந்தப்பட்டிருந்ததாகச் சந்தேகித்த காலிகுலா அவர்கள் இருவரையும் நாடு கடத்தினர்.

ஆனால், அவர் கி.பி. 41-ல் ஒருநாள் பிரேட்டோரியப் படையின் அதிகாரிகளில் ஒருவரான கேசியஸ் சேரியா (Cassiu Chaerea) என்பவரால் அரண்மனை மைதானத்தில் குத்திக் கொல்லப்பட்டார்.

ரோமிலும் மாநிலங்களிலும் காலிகுலாவின் செயல்கள்: காலிகுலாவின் காலத்தில் கட்டப்பட்ட இரண்டு நீர்க்கால்வாய்கள் (Aqueducts) இன்றும் சிதைவுற்ற நிலையில் காணப்படுகின்றன. அக்வா கிளாடியா (Aqua Claudia) என்ற முப்பத்தைந்து மைல் நீளமும், ஆனியோ நோவஸ் (Anio Novus) என்ற ஐம்பத்தைந்துமைல் நீளமும் உள்ள இரண்டு நீர்க்கால்வாய்களே அவை. அடுத்த மன்னரான கிளாடியஸின் காலத்தில் அவை கட்டி முடிக்கப்பெற்றன.

காலிகுலாவின் கடைசி நாட்களில் மாரிட்டேனியாவிலும், பாலஸ்தீனத்திலும் கிளர்ச்சிகள் தோன்றின. மாரிட்டேனியாவில் அகஸ்டஸால் ஜூபா என்பவர் அரசராக்கப்பட்டார். அவருக்குப் பின், அரசரானவரின் மகன் தாலமி (Ptolemy) என்பவரைக் கொல்வித்தார் காலிகுலா. இதனால், ரோமுக்கு எதிராக மாரிட்டேனியாவில் கலகம் ஏற்பட்டது. கி.பி. 40-ல் ஜெருசலத்திலுள்ள யூதர்களின் ஆலயத்தில் தனது சிலையையும் வைத்து வழிபட வேண்டுமென்று காலிகுலா பிறப்பித்த ஆணையை எதிர்த்து, பாலஸ்தீனத்திலும் கிளர்ச்சி தோன்றியது. இறுதியில் பேரரசர் தமது ஆணையை ரத்து செய்யவேண்டியதாயிற்று. ஆயினும், ரோமுக்கெதிரான வெறுப்பை இது அங்கு மேலும் வளர்த்தது. அதை யொத்ததொரு ஆணை அலெக்சாந்திரியாவிலும் யூதர்களிடையில் வெறுப்பை வளர்த்தது. காலிகுலாவின் விவேகமற்ற செயல் ஒன்றால் ஆர்மீனியாவையே ரோமப்பேரரசு இழந்தது. டைபீரியஸால் ஆர்மீனியாவின் அரசராக்கப்பட்ட மித்ரடேட்டஸை ரோமுக்கு வருமாறு அழைத்து, அங்கு ஏதோ ஒரு சிறிய சம்பவத்தைப் பெரிதுபடுத்தி அவரைச் சிறையிலடைத்து வைத்தார் காலிகுலா. இதுதான் சமயமென்று அந்நாட்டைக் கைப்பற்றிக்கொண்டார் பார்த்திய மன்னர் ஆர்ட்டாபேனஸ்.

இவ்வாறு எல்லா வகையிலும் காலிகுலாவின் ஆட்சியால் ரோமப் பேரரசுக்கு ஊறுவிளைந்தது.

கிளாடியஸ், கி.பி. 41-54

காலிகுலாவின் மரணத்துக்குப் பிறகு பிரேட்டோரியப் படையினர் அரண்மனையைச் சூறையாடினர். தனக்கும் ஆபத்து

வந்துவிடுமோ என்றஞ்சிய காலிகுலாவின் சிற்றப்பாவான டைபீரியஸ் கிளாடியஸ் ட்ரூசஸ் அறை ஒன்றில் ஒளிந்துகொண்டார். அறை அறையாகப் புகுந்து கொள்ளையடித்து வந்த சிப்பாய்கள் அவரைக் கண்டனர். தமது படை முகாமுக்கு அவரை இட்டுச்சென்றனர். தமக்கு மிகவும் பிடித்த ஜெர்மானிக்கஸின் தம்பியான அவரை அடுத்த ரோமப் பேரரசராக்கத் தீர்மானித்தனர். அவரும் படைவீரர்களுக்கு நிறையப் பொன்னும் பொருளும் கொடுப்பதாக உறுதி கூறினர்.

இதற்கிடையில் செனேட் கூடியது. கிளாடியஸ் இருப்பதையே மறந்துவிட்டு, அகஸ்டஸின் பரம்பரை முடிவுற்றுவிட்டதாக முடிவுசெய்து, குடியரசை மறுபடியும் நிறுவஅது ஒருகணம் எண்ணியது. பின்னர் ஒரு செனேட்டரையே பேரரசராக ஆக்குவதென்று முடிவு செய்யப்பட்டது. அந்நிலையில் பிரேட்டோரியப் படையினர் அங்கு வந்து கிளாடியஸை அரசராக்க வேண்டுமென்று வற்புறுத்தினர். ஆரம்பத்தில் அதற்கு இணங்க மறுத்த செனேட்டர்கள், தங்களது உயிருக்கு அஞ்சிக் கிளாடியஸை இறுதியில் ஏற்றுக்கொண்டனர்.

கிளாடியஸின் உடல் ஊனமும் ஆட்சிமுறையும் : அரியணையேறியபொழுது கிளாடியஸுக்கு ஐம்பது வயதுக்குமேல் ஆகியிருந்தது. ஆயினும், உடல் ஊனம் காரணமாக அரசியல் அனுபவம் எதுவுமே இல்லாமல் ஏதாவது படிப்பதிலேயே அவரது காலம் கழிந்திருந்தது. நரம்புக்கோளாறு காரணமாக நேராக நடக்கவும் செயல்புரியவும் முடியாமல், பார்வைக்கும் கவர்ச்சியற்றிருந்தார் அவர். இந்த உடற்குறை காரணமாகவே அகஸ்டஸும் டைபீரியஸும் அரசியலிலும் நிர்வாகத்திலும் இருந்து அவரை ஒதுக்கி வைத்திருந்தனர். வயது முதிரமுதிர அவரது உடற்கோளாறுகள் மூளையையும் பாதித்து நன்கு சிந்திக்க முடியாமலும் நீண்டநேரம் செயல்பட முடியாமலும் செய்தன. இதனால், அவருக்கு அருகிலேயே இருந்து அவரது வேலைகளைச் செய்யக்கூடிய ஆட்கள் பலர் தேவைப்பட்டனர். விடுதலைபெற்ற மூன்று அடிமைகள் இவ்வாறு அவருக்குத் துணையாயிருந்து, பின்னர் ரோமப் பேரரசின் அரசியலில் பெரும் அதிகாரம் பெற்று விளங்கினர். காலிஸ்டஸ் (Callistus) என்பவர் விண்ணப்பத்தணிக்கை அதிகாரியாகவும் (Examiner of Petitions), நார்சீசஸ் (Narcissus) என்பவர் தலைமைச் செயலராகவும் (Chief Secretary), பல்லாஸ் (Pallas) என்பவர் தலைமைக் கணக்கராகவும் (Chief Accountant) பதவி வகித்துச் செனேட்டர் வகுப்பையோ அல்லது ஈக்வைட்டு வகுப்பையோ சேர்ந்த யாரையும்விட அதிக அதிகாரத்துடன்

விளங்கிவந்தனர். இவர்கள் மூவருமே முன்பு அடிமைகளாக இருந்து பின்னர் விடுதலை பெற்றவர்கள். முன்பு பிரபுக்கள் செய்ததைப்போலவே இவர்களும் அரசாங்கத்தில் எல்லா ஒழுங்கீனங்களையும் கடைப்பிடித்து, பெருஞ்செல்வம் சேர்த்தனர். செனேட்டர்களும் ஈக்வைட்டுகளும் இவற்றையெல்லாம் கண்டு பொறுமைப்பட்டனர்.

கிளாடியஸுக்கு மொத்தம் நான்கு மனைவியர். அவர்களில் கடைசி இருவர் வலேரியா மெசாலினு (Valeria Messalina), இளைய அக்ரிப்பினு ஆவர். (ஜெர்மானிக்கஸுக்கும் மூத்த அக்ரிப்பினுவுக்கும் பிறந்தவர் இளைய அக்ரிப்பினு. இவரைக் காலிகுலா நாடுகடத்தினர். கிளாடியஸ் இவரைத் திரும்ப அழைத்து மணந்து கொண்டார்.) இவர்கள் இருவரும் சேர்ந்து புரிந்த அட்டூழியங்கள் அளவிடற்கரியவை என்று கூறப்படுகிறது. மெசாலினு தீயொழுக்கங்கள் நிறைந்தவரென்றும், இளைய அக்ரிப்பினு அரசியல் ஆதிக்க ஆசை கொண்டவரென்றும் கூறப்படுகிறது. வழக்கம்போலக் கிளாடியஸின் ஆட்சிக்காலத்திலும் ரோமின் அரியணையைக் கைப்பற்றுவதற்குச் சதிகள் நடைபெற்றன. ஆனல், அவை கண்டுபிடிக்கப்பட்டு நசுக்கப்பட்டன.

கிளாடியஸுக்கு மெசாலினு மூலம் ஆக்டேவியா என்ற பெண்ணும், டைபீரியஸ் கிளாடியஸ் என்ற பையனும் (இவன் பிரிட்டானிக்கஸ் என்ற பெயரையும் தாங்கியிருந்தான்) இருந்தனர். ஆனல், அக்ரிப்பினுவோ தனது முதற் கணவரான டொமீஷியஸ் அஹெனே பார்பஸ்மூலம் பிறந்த பையனை அடுத்த வாரிசாக்கிக்கொள்ளும்படி அரசரைத் தூண்டிவந்தார். இதற்கென்றே நீரோ கிளாடியஸ் (Nero) என்றும் அவரது பெயர் மாற்றப்பட்டது. ஆக்டேவியஸுக்கும் நீரோவுக்கும் திருமணமும் நிச்சயம் செய்யப்பட்டது. இந்நிலையில் திடீரென்று கி.பி. 54-ல் பேரரசர் கிளாடியஸ் சீசர் காலமானர்.

பிரேட்டோரியக் காவல் படையின் தளபதியான ஆப்ரானியஸ் புர்ரஸ் (Abranius Burrus) என்பவருடன் ஏற்கெனவே எல்லா ஏற்பாடுகளையும் முன்கூட்டியே செய்திருந்தார் அக்ரிப்பினு. எனவே, நீரோவையே அடுத்த பேரரசராக்க வேண்டும் என்று செனேட்டை வற்புறுத்தினர் புர்ரஸ். செனேட் வேறு வழியின்றி அதற்கு இணங்க வேண்டியதாயிற்று. தன் மகன் அரியணையேறுவதற்கென்றே தனது கணவருக்கு நஞ்சு கொடுத்து அவரைக் கொன்றார் அக்ரிப்பினு என்று சொல்லப்படுகிறது. மூன்றுவது முறையும் பிரேட்

டோரியக் காவல் படையினர் ஆதரித்த ஒருவரே அரசரானார் என்பதையும் இங்குக் கவனிக்க வேண்டும்.

ரோமிலும் மாநிலங்களிலும் கிளாடியஸின் ஆட்சி : டைபர் நதியின் கழிமுகம் மண்ணடைந்துப் போக்குவரத்துக்குத் தடையாயிருந்ததால், ரோமின் தேவைக்கேற்பத் தானியங்களும் பிறபொருள்களும் போதுமான அளவு இறக்குமதியாக முடியாமல் நின்று போயின. இந்நிலையைத் திருத்துவதற்கெனக் கிளாடியஸ் காலத்தில் பல மைல் வடக்காக அந்நதியின் ஒரு பகுதியைத் திருப்பிவிட்டுக் கடலில் கலக்கும்படி செய்யப்பட்டது. இப்புதிய கழிமுகத்துக்கும் பழைய கழிமுகத்துக்கு மிடையில் ஒரு கலங்கரை விளக்கம் கட்டப்பட்டது. ஆஸ்டியா துறைமுகம் பெரிதுபடுத்தப்பட்டு 'அகஸ்டஸ் துறைமுகம்' (Portus Augustus) என்று அழைக்கப்பட்டது. (டைபரின் புதிய கழிமுகத்தில் அமைந்திருந்தது இது.) தானியக் கப்பல்கள் நடுக்கடலில் விபத்துக்குள்ளானால், 'அரசாங்கம் இழப்பீடு கொடுக்கும்' என்றும் அறிவிக்கப்பட்டது.

ஆர்மீனியாவிலிருந்து ஆர்ட்டாபேனஸை விரட்டிவிட்டு, மித்ரடேட்டஸை மீண்டும் அரியணையிலமர்த்தினார் கிளாடியஸ். ஆனால், விரைவிலேயே மித்ரடேட்டஸின் உறவினரான ராடாமிஸ்டஸ் (Rada mistus) என்பவர் ஆர்மீனியாமீது படையெடுத்து, அதைக் கைப்பற்றி அரசரையும் கொன்றார். ஆர்மீனியாவிலும் அதற்கு அண்டையிலும் இருந்த ரோமானியப் படை மித்ர டேட்டஸின் உதவிக்கு வராமல் போய்விட்டன. உடனே, ஆர்மீனிய மக்கள் பார்த்தியாவின் உதவியை நாடினர். பார்த்திய மன்னரான முதலாம் வலோஜெசிஸ் (Vologeses-I) என்பவர் ஒருபடையைஅனுப்பி ஆர்மீனியாவைக் கைப்பற்றி, மக்களின் ஆதரவுடன் தமது தம்பியான திரிடேட்டஸ் (Tiridates) என்பவரை கி.பி. 53-ல் அதற்கு மன்னராக்கினர்.

அகஸ்டஸின் காலம் முதல் ரோமின் மேற்பார்வையில் இருந்துவந்த திரேஸ் அரசானது (Thrace), கி.பி. 46-ல் ரோமின் மாநிலமாக மாற்றப்பட்டது. அதன் அரசர் அரியணையிலிருந்து அகற்றப்பட்டார். அதன் நிர்வாகத்தை நடத்துவதற்காகப் புரோகியூரேட்டர் (Procurator) என்ற அதிகாரி ஒருவர் நியமிக்கப்பட்டார். இதனால் கருங்கடல்வரையில் ரோமப் பேரரசின் எல்லை விரிவடைந்தது.

கிளாடியஸின் செயல்களில் முக்கியமானது பிரிட்டன் மீதான படையெடுப்பாகும். பிரிட்டனில் ஏராளமான செல்வம்

குவிந்து கிடக்கிறதென்றும், அதை எடுத்து வந்து தம் கையைப் பலப்படுத்திக் கொண்டால், ரோமில் ஆட்சியைக் கைப்பற்றுவது எளிதாகிவிடும் என்றும் கருதியே, அந்நாட்டின்மீது ஜூலியஸ் சீசர் படையெடுத்தார். அகஸ்டஸும் டைபீரியஸும் பிரிட்டனில் தலையிடாக் கொள்கையைக் கடைப்பிடித்தனர். காலிகுலா ஒரு பெரும்படையோடு பிரிட்டனுக்குச் செல்லத் திட்டமிட்டார். ஜெசோரியாக்கம் (Gessoriacum) (இன்று பொலோன் (Boulogne) என்று இது அழைக்கப்படுகிறது) என்றவிடத்தில் ஆங்கிலேயக் கால்வாயைக் கடப்பதற்குப் படை ஒன்றும் தயாராயிற்று. கால் பிரதேசத்தின் வழியாகச் சென்று அப்படையின் தலைமைப் பொறுப்பை மேற்கொண்டார் காலிகுலா (கி.பி. 40). ஆனால், திடீரென்று அம்முயற்சி கைவிடப்பட்டது.

மூன்றாண்டுகளுக்குப் பிறகு, கி.பி. 43-ல், கிளாடியஸ் அத்தகைய முயற்சியில் ஈடுபடலானார். பிரிட்டனில் குனே பெலினஸ் (Cunobelinus) என்பவரின் ஆட்சியும் அரசும் வலி வடைந்தும் விரிவடைந்தும் வருவதைக்கண்டு, அவரது பகை வர்கள் அச்சமும் பொறுமையும் கொண்டனர். அவரது மகனான கேரடாக்கஸ் (Caratacus) என்பார் தமது ஆதிக்கத்தை வாஷ் (wash), காட்ஸ் வோல்ட்ஸ் (Cotswolds) ஆகிய பகுதிகள் வரை மேலும் விரிவுபடுத்தினர். ஆயினும், ரோமானியரின் கால் மாநிலத்துக்கு எவ்வித ஆபத்தும் இதனால் இல்லை. இருப்பினும், பிரிட்டனின் செல்வத்தை அடையும் நோக்கத்துடனும், கேரடாக்கஸின் பகைவர்களது அழைப்பை ஏற்றும் பிரிட்டன் மீது படையெடுக்கத் திட்டமிட்டார் கிளாடியஸ்.

கி. பி. 43-ல் பிளாட்டியஸ் (Plautius) என்ற ரோமானியத் தளபதி 50,000 போர் வீரர்களோடு ஆங்கிலக் கால்வாயைக் கடந்து கெண்ட் (Kent) மாநிலத்தில் கரையிறங்கித் தேம்ஸ் நதி யைக் கடந்தார். பின்னர் பேரரசர் கிளாடியஸே இங்கிலாந் துக்கு வந்து படைத்தலைமையை ஏற்றுக்கொண்டார். கேரட் டாக்கஸின் தலைநகரான கேமுலோடுனம் (Camulodunum— றைய கால்செஸ்டர்) பிடிபட்டது. இந்த வெற்றியைக் ாண்டாடுவதற்கென்று ரோம் திரும்பினர் கிளாடியஸ். பின் னர், அவரது படைத்தலைவர்கள் கிழக்கு ஆங்கிலியாவையும் (East Anglia), தெற்குக் கடற்கரையையும் கைப்பற்றினர். பல குலத் தலைவர்கள் ஒருவர் பின் ஒருவராக அவர்களிடம் பணிந் தனர். பிளாட்டியஸுக்குப்பின் ஆஸ்டோரியஸ் ஸ்கேபுலா (Ostorius Scapule) என்பவர் படைத்தலைமை பூண்டார் (கி. பி. 47-52). செவர்ன் நதிக்கும் டிரென்ட் நதிக்கும் இடைப்பட்ட

யிரதேசம் முழுவதும் அவரது தலைமையில் கைப்பற்றப்பட்டது. கேரட்டாக்கஸ் வெல்ஷ் குலங்களை (Welsh tribes) திரட்டி வந்து ஆஸ்டோரியஸைத் தாக்கினர். ஆனால், அவரைத் தோற்கடித்து, ரோமுக்குக் கைதியாக அனுப்பி வைத் தார் ஆஸ்டோரியஸ். தெற்கு வேல்ஸிலும் ரோமானியர் புகுந் தனர். இச்சமயத்தில் கி. பி. 52-ல் ஆஸ்டோரியஸ் இறந்தார். (இரண்டே ஆண்டுகளில் கிளாடியஸும் இறந்தார்) அதன்பின் அடுத்த பேரரசரின் காலத்தில் கி. பி. 59-வரை பிரிட்டனைக் கைப்பற்றுவதில் அதிக கவனம் செலுத்தப்படவில்லை.

காலிகுலாவின் காலத்தில் மாரிட்டேனியாவில் ஏற்பட்ட கிளர்ச்சியானது கிளாடியஸின் காலத்தில் சூட்டோனியஸ் பாலினஸ் (Suetionius Paulinus) என்பவரால் ஒடுக்கப்பட்டது. பின்னர், மாரிட்டேனியாவானது இரு மாநிலங்களாகப் பிரிக்கப் பட்டது.

நீரோ, கி.பி. 54–68

குண இயல்புகளும் ஆரம்பக் காலமும்: பிரேட்டோரியக் காவற் படையின் உதவியோடு அரசரான நீரோ கிளாடியஸ் சீசருக்கு (Nero) அப்பொழுது வயது பதினறுதான் நிரம்பி யிருந்தது. தாயான அக்ரிப்பினாவுக்கோ, தந்தையான டொமீயஸ் அஹெனோபார் பஸுக்கோ இருந்த ஆணவமும் மூர்க்கமும் அவரிடம் காணப்படவில்லை. அவர் அமைதியான சுபாவமுடையவராகவும் இசை, ஓவியம், கவிதை, குதிரைச் சவாரி, தேரேற்றம், விளையாட்டுகள் முதலியவற்றில் அதிக ஈடுபாடு கொண்டவராகவும் விளங்கினர். திடமனதோ, உறுதியோ, எதையும் ஆழ்ந்து எண்ணிச்செயல்படும் இயல்போ அவரிடம் இல்லை.

அரியணை ஏறிய பொழுது நீரோவுக்குப் பதினறு வயது மட்டுமே நிரம்பி யிருந்ததால், 'நிர்வாகத்தை யார் நடத்துவது?' என்ற கேள்வி எழுந்தது. அக்ரிப்பினாவே, 'ரீஜென்ட்டாக' (Regent) இருக்க விரும்பினர். புர்ரஸும், அரசரின் ஆசிரிய ரான அன்னேயஸ் செனிகாவும் (Annaes Senica) அதை எதிர்த் தனர். அவர்கள் இருவருமே அக்ரிப்பினாவின் ஆதரவினாலேயே முன்னுக்கு வந்தவர்கள். எனினும், அவருடனேயே ஆதிக்கப் போட்டியில் இறங்க முன்வந்தார். தமது தாயின் கட்டுப் பாட்டை விரும்பாத இளைஞர் நீரோவும் அவர்களையே ஆதரித் தார். எனவே, நீரோவுக்குப் பதிலாகத் திடீரென்று பிரிட்டானிக் கஸிடம் (பிரிட்டனை வெல்வதில் கிளாடியஸுக்கு உதவி, அங்குப்பல வெற்றிகளைப் பெற்றதாலேயே அப்பெயர் இவருக்கு

ஏற்பட்டது.) அதிக அன்பு காட்டலானார் அக்ரிப்பினு. அதன் பொருளை உணர்ந்து கொண்ட நீரோவும் அவரது நண்பர்களும் கி. பி. 55-ல் பிரிட்டானிக்கஸைத் தீர்த்துக்கட்டினர். இவ்வாறு அக்ரிப்பினுவின் திட்டங்கள் தோல்வியுற்றன.

ஆனால், மூன்றாண்டுகளுக்கு மற்றொரு வாய்ப்பு அக்ரிப்பினுவிற்குக் கிடைத்தது. நீரோவின் நெருங்கிய நண்பராக இருந்தார் ஓத்தோ (Otho) என்பவர். அவரது மனைவி போப்பேயா சபீனுவுக்கும் (Poppaia Sabina) நீரோவுக்குமிடையில் இரகசிய காதற் றொடர்புகள் இருந்துவந்தன. மனைவியான ஆக்டேவியாவை மணவிலக்குச் செய்துவிட்டுத் தன்னை மணந்து கொள்ளும்படி மன்னரைச் சபீனு வற்புறுத்தினார். ஆக்டேவியாவுக்கு ஆதரவாக இருந்த அக்ரிப்பினு இதை எதிர்த்தார். எனவே, 'தமது அன்னையைத் தொலைத்துக் கட்டிவிட்டால் தமது சிரமங்கள் அனைத்தும் முடிவுக்கு வரும்' என்று முடிவு செய்தார் நீரோ. மிசெனத்தில் கடற்படையின் தளபதியாக இருந்த அனிசெட்டஸ் (Anicetus) என்பவரிடமும் இப் பொறுப்பு ஒப்படைக்கப்பட்டது. மூழ்கிப் போகக்கூடிய ஒரு படகில் ஆக்ரிப்பினுவை வைத்துக் கொல்லப் பார்த்தார் அனிசெட்டஸ். ஆனால், அம் முயற்சி தோல்வியில் முடிந்தது. பின்னர் அக்ரிப்பினுவின் மாளிகையில் நுழைந்து, அவரது மண்டையைக் கொடூரமாக அடித்துப் பிளந்து கொன்றனர் கொடியவர்கள் (கி.பி. 59). அதே ஆண்டில் தனது தாடியை முதன் முறையாகக் கத்தரிக்கும் ஜுவெனலியா (Juvenalia) என்ற விழாவை நீரோ கோலாகலமாகக் கொண்டாடினார். அடுத்த ஆண்டில் நீரோனியா (Neronia) என்ற தேரோட்டப் போட்டி விழா ஒன்றையும் நடத்தினார். இவ்விரு விழாக்களும் நீரோவாலேயே முதன் முதலில் கொண்டாடப்பட்டன.

நீரோவின் ஆட்சியில் முதலில் அவருக்கு அமைச்சர்களாக இருந்து, ஆட்சியை நடத்தியவர்கள் செனிகாவும் புர்ஸுமே. அவர்களது காலத்தில் நிர்வாகம் ஒழுங்காக நடந்துவந்தது. நீரோ ஆடல் பாடல்களில் தமது காலத்தை வீணாகக் கழித்து வந்தார். கி.பி. 62-ல் ஒரு திருப்பம் ஏற்பட்டது. புர்ரஸ் அவ்வாண்டில் இறந்தார்; சிறிதுகாலமாகவே தனக்கெதிராக நிலைமை திரும்பியதைத் கண்ட செனிகாவும் உடனே பதவியிலிருந்து விலகினார். அந்த ஆண்டிலேயே நீரோ ஆக்டேவியாவை மணவிலக்குச் செய்தார். (செனிகாவின் தலையீடு காரணமாகத்தான் இது இவ்வளவு நாள் நடைபெறாமல் இருந்தது). தனது கையாளான அனிசெட்டஸிடமிருந்து,

'ஆக்டேவியாவுக்கும் அவருக்கும் கள்ள உறவு உண்டு' என்ற ஒருபொய் வாக்குமூலத்தைப் பெற்று ஆக்டேவியாவை நாடு கடத்தி, விரைவிலேயே கொல்லுவித்தார் நீரோ. பின்னர், அவர் போப்பேயா சபீனுவை மணந்து கொண்டார். புர்ரஸுக்குப் பிறகு, பிரேட்டோரியக் காவற்படையின் இருதளபதிகளில் ஒருவராக ஒபோனியஸ் டிஜெல்லினஸ் (Ofonius Tigellinus) என்பவர் நியமிக்கப்பட்டார். இவரது தீய அறிவுரைகள் நீரோவை மேன்மேலும் கெடுத்தன. தான்தோன்றித்தன மாக நாட்டை ஆளத் துவங்கிய நீரோ, காமக்களியாட்டங்கள், ஆடல்பாடல், விளையாட்டு விழாக்கள் முதலியவற்றில் அவரது காலதைக் கழித்தார். அவரது தீயொழுக்கத்தைக்கண்டு நாடு கூசியது.

இவற்றுல் வீண் செலவுகள் பெருகின. கருவூலத்தில் செல்வம் கரைந்தது. அதிருப்தி வளர்ந்தது. சதிகள் தலை தூக்கின. அவற்றை ஒடுக்குவதெற்கென்று தீவிரமான நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டியதாயிற்று. ஒற்றர்கள் நாடு முழுவதும் அனுப்பப்பட்டனர். உண்மையும் பொய்யுமாகப் பலர்மீது சதிக்குற்றம் சுமத்தப்பட்டது. அவர்கள் கடுமையாகத் தண்டிக்கப்பட்டு, அவர்தம் சொத்துக்கள் பறிமுதல் செய்யப்பட்டன. கி.பி. 65-ஆம் ஆண்டில் டிஜெல்லினுஸோடு காவற்படையின் மற்றொரு தளபதியாயிருந்த பேனியஸ் ரூபஸ் (Faenius Rufus) என்பவரின் தலைமையில் பலஅதிகாரிகளும் மற்றவர்களும் ஒரு பெரிய சதியை உருவாக்கினர். அதைக்கண்டுபிடித்து அனைவரது உயிரையும் வாங்கி அவர்தம் சொத்துக்களையும் பறிமுதல் செய்தார் அரசர். வேறொரு சதியில் ஈடுபட்டிருந்ததாகப் பெரும் பணக்காரச் செனேட்டர்களும் ஈக்வைட்டுகளுமாக இருபதுபேர் கொல்லப்பட்டு, அவர்களது சொத்துக்கள் பறிக்கப்பட்டன. செனிகாவும் இவ்வாறே உயிரிழக்க நேரிட்டது.

ரோம் நகரில் தீ : கி.பி. 64-ல் ரோம் நகரில் ஒரு பெரிய தீவிபத்தும், அடுத்த ஆண்டில் கொள்ளை நோயும் ஏற்பட்டன. தீ விபத்துத் தற்செயலாகவே நிகழ்ந்தது. நகரின் மையப் பகுதி முழுவதும் வெந்து சாம்பலாயிற்று. ஆயிரக்கணக்கான மக்கள் வீடிழந்தனர். அவர்களுக்கு வேறிடங்களில் இடவசதிகளை அரசர் செய்த போதிலும், எரிந்துபோன மையப் பகுதியில் சுமார் 120 ஏக்கர் பரப்பளவு நிலத்தைத் தானே எடுத்துக்கொண்டு ஒருபுதிய அரண்மனையை அங்கே கட்டினர். இதனுல் மக்கள் ஆத்திரமுற்றனர். அந்த அரண்மனையைக்

கட்டுவதற்கென்றே நகரின் அப்பகுதிக்கு அவர் எரியூட்டினர் என்று எல்லோரும் பேசினர்; மேலும், ட்ராய் நகர் (Troy) எரிந்ததைப் பற்றியபாடல் ஒன்றையும் அவர் அச்சமயம் பாடி மகிழ்ந்ததாக அவர்கள் பேசிக்கொண்டனர். இவற்றையெல் லாம் அறிந்த நீரோவின் உள்ளத்தில் அச்சம் குடிகொண்டது. தம்மீது இவ்வாறு சுமத்தப்பட்ட பழியைத் திசைதிருப்பிவிட முயன்றார் அவர். புதிதாக முளைத்து, விரைவாக எண்ணிக்கையில் பெருகிவந்த கிறுஸ்துவர்களே தீவிபத்துக்குக் காரணம் என்று கூறி, அவர்களில் பலரைப் பிடித்துச் சித்திரவதை செய்து கொன்றார். இதனால் மக்கள் நீரோவை மேலும் வெறுத்தனர்.

இறுதியில் எல்லைப்புற மாநிலங்களில் படைத்தலைவர்களா யிருந்த பலரையுகூட்ட, எவ்விதமான விசாரணையுமின்றிக் கொல்லுவித்தார் அரசர். ஆனால், அவை அனைத்தும் மேலும் மேலும் புதிய சதித்திட்டங்களுக்கே வழி வகுத்தன.

நீரோவின் மரணம்: கி.பி. 68-ல் மற்றொரு சதித்திட்டம் உருவாயிற்று. காலின் ஒரு பகுதியில் கவர்னராயிருந்த ஜூலி யஸ் விண்டெக்ஸ் (Julius Vindex) என்பவர் ஸ்பெயினின் ஒரு பகுதியில் கவர்னராயிருந்த செர்வியஸ் சல்பியஸ் கால்பா (Servius Sulpicius Galba) என்பவரையும் உடந்தையாக்கிக் கொண்டு பேரரசை அழிப்பதற்குத் திட்டமிட்டார். காலில் ஒரு படை திரட்டப்பட்டது. அதில் கால்களே நிரம்பியிருந்தனர். அதைக்கண்டு விண்டெக்ஸுனுடைய படையில் பெரும்பான்மையிலிருந்த ஜெர்மானியர்கள் கால்கள் நிறைந்த இப்புதிய படையைக் கண்டு ஐயுற்று அதைத் திடீரென்று தாக்கி அழித்தனர். விண்டெக்ஸும் தன்னுயிரை மாய்த்துக் கொண்டார்.

ரோமிலும் இச்சமயத்தில் பிரேட்டோரியக் காவற்படையில் நீரோவுக்கெதிராக வெறுப்பு வளர்ந்து வந்தது. விண்டெக்ஸின் சதித்திட்டம் அவர்களுக்கு மேலும் புதிய தெம்பை ஊட்டியது. அவற்றின் தலைவரான நிம்பிடியஸ் சபீனஸ் (Nymphidius Sabinus) என்பவர் கால்பாவை வெளிப்படையாக ஆதரித்தார். டிஜெல்லினஸால் கூட நீரோவைக் காக்க முடியாது என்ற நிலை ஏற்பட்டது. செனேட்டும் கூட நீரோவைப் பதவியிலிருந்து அகற்றி, அவருக்கு மரணதண்டனை விதித்தது. இந்நிலையில் தற்கொலை செய்து கொள்வதைத் தவிர நீரோவிற்கு வேறு வழி இல்லாமற் போயிற்று.

மாநிலங்களில் நீரோவின் ஆட்சி : சிரிய கவர்னரின் மேற்பார்வையின்கீழ் பாலஸ்தீனத்தை ஒரு சிறிய ரோமானிய அதிகாரி ஆண்டு வந்தார். யூதர்கள் ரோமானியராலும் அவர்களின் தூண்டுதலின்பேரில், மற்றவர்களாலும் கொலை செய்யப்பட்டு வந்தனர். இதற்கெதிராக கி.பி. 66-ல் எருசலத்தில் யூதர்கள் கிளர்ச்சி செய்தனர். அங்கிருந்த ரோமானியப் படையானது அவர்களைக் கொன்று குவித்தது. அக்கலகத்தை 30,000 பேர்களைக்கொண்ட படையோடு வந்தார் சிரியாவின் கவர்னரான செஸ்டியஸ் காலஸ் (Cestius Gallus). கலகத்தை அடக்க முடியாமலும், எருசலம் நகரைக் கைப்பற்ற முடியாமலும் அவரும் பின்வாங்க வேண்டியதாயிற்று. அக்கிளர்ச்சி பாலஸ்தீனம் முழுவதும் விரைவிலேயே பரவியது.

இந்நிலையில், பிளேவியஸ் வெஸ்பசியானஸ் (Flavius Vespasianus) என்பவரை 50,000 பேர்களோடு நீரோ அனுப்பி வைத்தார். கி.பி. 67, 68 ஆகிய ஆண்டுகளில் கலிலீ (Galilee), ட்ரான்ஸ் ஜோர்டன் (Transjodam) ஆகிய பகுதிகளையெல்லாம் கலகக்காரர்களிடமிருந்து மீண்டும் வென்று, யுதேயாவில் (Judaea) எருசலத்தையும் கைப்பற்றினர் அவர். இவ்வாறு பாலஸ்தீனம் முழுவதும் மீண்டும் தமது ஆட்சியை ரோமானியர் நிறுவினர்.

கி.பி. 53-ல் பார்த்தியா ஆர்மீனியாவைக் கைப்பற்றியது என்பதையும், பார்த்தியாவின் மன்னரான முதலாம் வலோஜெசிஸ் (Vologeses-I) என்பாரின் தம்பியான திரிடேட்டஸ் ஆர்மீனியாவின் அரசராக்கப்பட்டார் என்பதையும் பார்த்தோம். கி.பி. 55-ல் கப்படோஷியாவின் கவர்னரான டொமீஷியஸ் கார்புலோ (Corbulo) என்பவர் ஒரு பெரும்படையுடன் ஆர்மீனியாவுக்குள் நுழைந்து சிறிது சிறிதாக அதைக் கைப்பற்றினர். திரிடேட்டஸ் ஆர்மீனியாவிலிருந்து ஓடவேண்டியதாயிற்று. கி.பி. 50-ல் டைகிரேனிஸ் (Tigranes) என்பவரை அந்நாட்டின் அரசராக்கினர் கார்புலோ.

ஆனால், அடுத்த ஆண்டிலேயே பார்த்தியர்கள் தமது தாக்குதல்களை மீண்டும் துவக்கினர். கி.பி. 62-ல் ரோமானியப் படை சரணடைந்தது. திரிடேட்டஸ் மீண்டும் ஆர்மீனியாவின் மன்னரானர். கி.பி. 64-ல் ஒருபடையைத் திரட்டிக் கொண்டு ஆர்மீனியாவை வெல்ல முயன்றார் கார்புலோ. இருதரப்புக்குமே போரில் அதிக அக்கரை இல்லாததுபோல் தோன்றியது. எனவே, பேச்சு வார்த்தைகள் துவக்கப்பட்டன. திரிடேட்டஸை ஆர்மீனியாவின் அரசராக ஏற்றுக் கொள்ள

முன்வந்தனர் ரோமானியர். நீரோவின் கையால் முடி சூட்டப் படுவதற்குத் திரிடேட்டஸ் இணங்கினர். அதன்படி கி.பி. 66-ல் ரோமில் நீரோவால் முடி சூட்டப்பட்டார் திரிடேட்டஸ். சுமார் அரை நூற்றாண்டுவரை இந்நல்லுறவு நீடித்தது.

பிரிட்டனிலும் கிளாடியஸின் கொள்கைகளையே நீரோவும் பின்பற்றினர். முன்பு மாரிட்டேனியாவில் கலகங்களை ஒடுக்கி வெற்றிபெற்ற சூட்டோனியஸ் பாலினஸ் கி.பி. 59-ல் பிரிட்டனுக்கு வந்து வடக்கு வேல்ஸ் பகுதியில் படையெடுப்புக்களை மேற்கொண்டார். கி.பி. 61-ல் ஆங்கில்ஸியைக் (Anglesey) கைப்பற்றுவதற்கான ஏற்பாடுகளை அவர் செய்துகொண்டிருந்த பொழுது ரோமுக்கெதிராகப் பலகலகங்கள் மூண்டன. ரோமானிய வரிவசூல் செய்பவரோடு கடன் கொடுத்தோரும் மிகவும் கொடுமைகளைப் புரிந்ததால் கிழக்கு ஆங்கிலியாவிலும் எஸ்ஸக்ஸிலும் (Essex) கலகங்கள் மூண்டன. பின்னர் அவை வேறிடங்களுக்கும் பரவின. காலஞ்சென்ற கிழக்கு ஆங்கிலிய மன்னரின் மனைவியான பூடிச்சாவின் (Boudicca) தலைமையில் கேமுலோடுனத்தைக் கலகக்காரர்கள் கைப்பற்றினர். பல ரோமானியப் படைகள் தோற்கடிக்கப்பட்டு லண்டினியமும் (Londinium—இன்றைய லண்டன்), அதற்கு அண்மையிலிருந்த வெருலாமியமும் (Verulamium—இன்றைய செயின்ட் ஆல்பன்ஸ்) கூட, அவர்களால் கைப்பற்றப்பட்டன. அவற்றிலிருந்த ரோமானியர்கள் கொன்று குவிக்கப்பட்டனர்; அந்நகரங்களும் தீக்கிரையாக்கப்பட்டன. ஆயினும், சூட்டோனியஸ் விரைவிலேயே பிரிட்டன்களைத் தோற்கடித்தார். அப்போரில், (போர் நடந்த இடம் தெளிவாகத்தெரியவில்லை) பூடிச்சாவும் கொல்லப்பட்டதால், பிரிட்டன்களுக்குத் தலைமை தாங்குவதற்குத் திறமையான தலைவர் எவரும் இல்லாதுபோயிற்று. சூட்டோனியஸ் ரோமுக்குத்திரும்பியபின், அடுத்துவந்த பல கவர்னர்களின் தலைமையில் பிரிட்டனில் ஹம்பர் (Humber), டீ (Dee) ஆகிய நதிகள் வரையிலான பிரதேசங்கள் அனைத்தும் கைப்பற்றப்பட்டன.

கில்லாத தம் படைகள்மீது நம்பிக்கையை இழந்து போருக்குப் புறப்படாமல் காலங்கடத்தினார். மேலும், தம் படைகள் போரில் ஈடுபட்த் துடித்தபோதும், போரில் ஈடுபடவேண்டாமென்றும் பிரைமஸை ஆதரித்து அவரோடு சேர்ந்துகொள்வதுதான் நல்லது என்றும் அவர் எடுத்துரைத்தார். இதைக்கண்ட படைகள் அவரைச் சிறை செய்துவிட்டு, புதிய தலைவர்களோடு போர்முனைக்குப் புறப்பட்டன.

வடக்கு நோக்கிச் சென்ற பேரரசரின் படைகள் எதிர்பாராத விதமாகப் போநதியின் கரையில் கிரெமோனாவுக் கருகில் பிரைமஸின் படைகளைச் சந்தித்தன. பேரரசரின் படையில் அதிகம் போர் வீரர்கள் இருந்தபோதிலும் சிறந்த படைத் தலைவர்கள் இன்மையால் பிரைமஸின் படையிடம் அது தோல்வியுற்றது. பிரைமஸின் படைகள் எதிரிகளின் படைவீடுகளையும் தாக்கி அனைவரையும் கொன்றன. இதைக் கேள்வியுற்ற உடனேயே விட்டெலியஸைக் கைவிட்டு வெஸ்பாசியானஸையே பேரரசராக ஏற்றுக்கொண்டனர் மேற்கு மாநிலங்களின் கவர்னர்கள். கிரெமோனாவிலிருந்து ரோமை நோக்கி விரைந்தார் பிரைமஸ். அதைக் கைப்பற்றித் தம் பகைவர்கள் அனைவரையும் கொன்றார். தப்பி ஓட முயன்ற விட்டெலியஸும் பிடித்துக் கொல்லப்பட்டார். ரோம் நகரம் சூறையாடப்பட்டது. காரணமில்லாமல் பலர் கொல்லப்பட்டனர். தம் தம் படைகளைக் கட்டுப்படுத்தப் பிரைமஸ் விரும்பவில்லை. சில நாள்களிலேயே மியூசியானஸும் விரைந்து ரோமுக்கு வந்துசேர்ந்து, படைகளைக் கொண்டு பிரைமஸின் படைகளை அடக்கி ஒழுங்குபடுத்தி, தம்தம் மாநிலங்களுக்குத் திரும்பிச் செல்லும்படி அவற்றுக்கு ஆணையிட்டார். அவை பணிந்தன. கி. பி. 70 ஆம் ஆண்டுக் கோடையில் வெஸ்பாசியானஸ் ரோம் வந்து சேர்ந்ததும், தம்முடைய கடமைகளை அவரிடம் ஒப்புவித்துவிட்டு விலகிக்கொண்டார் மியூசியானஸ்.

சில விளைவுகள்: இவ்வாறே கி. பி. 69 ஆம் ஆண்டில் மட்டும் ரோமில் நான்கு பேரரசர்கள்—கால்பா, ஒத்தோ, விட்டெலியஸ், வெஸ்பாசியானஸ் - பதவி ஏற்றனர். எனவே, இது 'நான்கு பேரரசர்களின் ஆண்டு' என்று சொல்லப்படுகிறது. நீரோவின் கொடுங்கோன்மையை ஒழிப்பதற்கென்று ஏற்பட்ட குழப்பங்கள் இவ்வாறு நீண்டுகொண்டே சென்றன. ரோமையும் மக்களையும் காப்பதற்கே தாம் ஆட்சியைக் கைப்பற்றியதாக ஒவ்வோர் அரசரும் கூறிக்கொண்டனர். செனெட் செயலிழந்து நின்றது. ரோமில் ஆட்சியைக் கைப்பற்றிய ஒவ்வொருவரையும் பேரரசராக ஏற்றுக் கொண்டது.

மாநிலத்தில் ஆதரவு பெறும் நோக்கத்துடன் மாநில மக்களில் பலருக்குக் குடியுரிமைகளை அளித்தனர் ஒவ்வொரு அரசரும்.

சான்றாக, மத்திய காலில் பல குலங்களுக்கும் ரோமானியக் குடியுரிமையைக் கால்பாவும், கிழக்குக் காலில் பல குலங்களுக்கு அவ்வுரிமையை ஒத்தோவும், ஸ்பெயினிலும் ஆப்பிரிக்காவிலும் லத்தீனியக் குடியுரிமையைப் பலருக்கு விட்டெலியஸும் அளித்தனர். இவ்வாறு மாநில மக்களில் பலருங்கூட ரோமானிய அரசியலில் பங்குபெறும் வாய்ப்பைப் பெற்றனர்.

மேலும், பழைய குடியரசு காலத்துப் பிரபுக் குடும்பத்தைச் சேராதவரும் அகஸ்டஸ் உருவாக்கிய செனெட்டர் வகுப்பைச் சேராதவரும் அப்பொழுது 'அரசராக முடியும்' என்ற நிலை ஏற்பட்டது. அடுத்தபடியாக ரோமில் மட்டுமன்றி, வேறிடங்களிலிருந்தும் படைகளின் உதவியோடு ஒருவர் ரோமானியப் பேரரசர் ஆகமுடியும் என்ற நிலைமையும் ஏற்பட்டது.

ஃபிளேவிய வம்சம், கி. பி. 69-96.

வெஸ்பாசியானஸ், கி. மு. 69-79; டைட்டஸ் ஃபிளேவியஸ் வெஸ்பாசியன் நிறுவிய வம்சம் ஃபிளேவிய வம்சம் என்று வழங்கப்படுகிறது. மூன்று அரசர்கள் இவ் வம்சத்தைச் சேர்ந்தவர்கள். அவர்களில் முதல்வரான வெஸ்பாசியானஸ் தமது அறுபத்தோராவது வயதில் (கி.பி. 70) பேரரசரானார். அவர் ரோமில் அதிகாரத்தைப் பெற்றிருந்த ஈக்வைட்டு வகுப்பைச் சேர்ந்தவர். சுறுசுறுப்பும் கடின உழைப்பும் நீண்ட அனுபவமும் பெற்றவர். புதிதாக எதையும் அவர் செய்யாமற் போனாலும் அரசாங்கம் ஒழுங்காகவும் உறுதியாகவும் செயலாற்றும்படி செய்தார். அதனால் ஒன்பதாண்டுக்காலம் ரோமில் ஆட்சி நன்முறையில் நடைபெற்றது. அரசரது அதிகாரம் உறுதியாக நிறுவப்பட்டது. மீண்டும் ரோமில் ஒழுங்கும் அமைதியும் நிலவின. அவரது நல்லாட்சி காரணமாகவும் அவருடைய பிள்ளைகளே அவருக்குப்பின் அரசராக முடிந்தது. அதாவது, பேரரசர் பதவி அவரது குடும்பத்துக்கு உரியதாயிற்று.

டைட்டஸ், கி.பி. 79-81; வெஸ்பாசியானஸுக்கு இரண்டு புதல்வர்கள். அவர்களில் மூத்தவர் டைட்டஸ். அவர் தம் தந்தையின் பெயரான 'டைட்டஸ் ஃபிளேவியஸ் வெஸ்பாசியானஸ்' என்ற பெயரையே கொண்டிருந்தார். எனினும், முதற் பெயரை வைத்து டைட்டஸ் (Titus) என்றே வழங்கப்பட்டார். அவர் மிகவும் கவர்ச்சிகரமான தோற்றமும், இனிமையான பழக்கவழக்கங்களும், திறமையும் எல்லோரையும் கவரும் தன்மையும், கூர்ந்த அறிவும் படைத்தவராக இருந்தார், ரோமில் அனைவருமே அவரை ஆதரித்துப் போற்றினார்கள். ஆனால், பட்டத்துக்கு வந்த

கி.பி. முதலாம் நூற்றாண்டில் நில உடைமையில் மேலும் பல மாறுதல்கள் ஏற்பட்டன. இரண்டாவது மூவரணியானது (Second Triumvirate) தமக்கு வேண்டாதோரின் நிலங்களைப் பறிமுதல் செய்தது. அவ்வாறு பறிமுதல் செய்யப்பட்ட நிலங்கள் சிறுசிறு துண்டுகளாக விநியோகிக்கப்பட்டன. அவை முன்புபோல் பெரும் நிலச்சொந்தக்காரர்களிடம் மீண்டும் விற்கப்படுவதைத் தவிர்ப்பதற்கென்று, அகஸ்டஸின் காலத்தில் நிலச் சொந்தக்காரர்களுக்குக் கடன்களை அரசாங்கமே கொடுத்துதவியது. இதனால், பெரிய பண்ணைகளின் வளர்ச்சி ஓரளவு தடைபட்டது. பேரரசருக்கும் பெரும் ரோமானியப் பிரபுக்களுக்கும் சொந்தமான – விசாலமான பண்ணைகள் பெரும்பாலும் இத்தாலிக்கு வெளியே மாநிலங்களிலேயே இருந்தன. எனவே, கி.பி. முதலாம் நூற்றாண்டில் இத்தாலியில் மிகப் பெரிய பண்ணைகள் ஒரு சிலவே இருந்தன.

அகஸ்டஸ் காலத்துக்குப் பிறகு புதிய மாநிலங்கள் எவையும் (ஒரிரண்டைத் தவிர) ரோமப்பேரரசில் சேர்த்துக் கொள்ளப்படவில்லை. இவ்வாறு ஆக்கிரமிப்புக்கள் நின்று போனதால், இத்தாலிக்குப் புதிய அடிமைகள் வருவதும் நின்று போயிற்று. எனவே, ஏற்கெனவே இருந்த அடிமைகளை நல்ல முறையில் நடத்தியும், காலன்களுக்கு நிலங்களைக் குத்தகைக்கு விட்டும், கூலியாட்களை அதிக அளவில் வேலைக்கு அமர்த்தியும் விவசாயம் செய்ய வேண்டியதாயிற்று. குழந்தைகளைப் பெறும் பெண்ணடிமைகளுக்குப் பல சலுகைகள் அளிக்கப்பட்டன. மூன்று குழந்தைகளைப் பெற்ற பெண்ணடிமைக்கு விடுதலை யளிக்கப்பட்டது. ஏராளமான பெண்ணடிமைகளே பெரும் பண்ணைகளில் காணப்பட்டனர்.

ரோம் நகருக்குத் தேவையான உணவுத்தானியங்கள் வழக்கம்போல் வெளியிலிருந்தே (மாநிலங்களிலிருந்தே) வந்து கொண்டிருந்தன. எனவே, இத்தாலியைக் குடியானவர்கள் தமக்குத் தேவையான அளவுக்கு மட்டுமே கோதுமையைப் பயிரிட்டனர். எனவே, வளமான நிலங்களில் திராட்சை, ஆலிஸ், பழத் தோட்டங்கள் முதலியவை பயிரிடப்பட்டு, எஞ்சிய பகுதியில் மட்டுமே கோதுமை பயிரிடப்பட்டது. விவசாய முறைகளிலும் எவ்வித அபிவிருத்தியும் ஏற்படவில்லை. ஆயினும், சக்கரம் பொருத்திய புதிய கலப்பைகளும், சுண்ணாம்பு மண்ணைச் சேர்த்துக் களிப்பு நிலங்களுக்கு எருவூட்டும் முறையும் சிறிது சிறிதாக வழக்கத்துக்கு வந்து கொண்டிருந்தன. ரோமுக்கு வேண்டிய தானியத்தை இதுவரை அளித்து வந்தது சிசிலி.

ஆனால், எகிப்தும் ஆப்பிரிக்காவும் இப்பொழுது சிசிலியின் இடத்தைக் கைப்பற்றிக் கொண்டன.

தொழிலும் வாணிகமும்: கி.மு. முதலாம் நூற்றாண்டில் இத்தாலிக்கு அப்பால் ரோமானியப் பேரரசில் தொழில்கள் அதிகம் காணப்படவில்லை. பேரரசின் கிழக்கு மாநிலங்களிலிருந்து செல்வமனைத்தும் கொள்ளையடிக்கப்பட்டும் சுரண்டப்பட்டும் ரோமுக்கும் இத்தாலிக்கும் வந்துவிட்டன. எனவே, அப்பகுதியில் தொழிலும் வாணிகமும் வீழ்ச்சியுற்றுக் கிடந்தன.

இத்தாலியில் இதுவரை எட்ரூரியாவுக்குச் செல்வத்தைப் பெற்றுத் தந்துவந்த செம்புச் சுரங்கங்கள் இப்பொழுது விரைவில் வற்றி வந்தன. ஆக்கிரமிப்புக்களின்போது கொள்ளையடித்துக் கொண்டுவரப்பட்ட பெருஞ்செல்வம் இத்தாலியில் பலவிதங்களில் பயன்படுத்தப்பட்டது. ஏராளமான புதியசாலைகள் போடப்பட்டன. செல்வந்தர்கள் எல்லா வசதிகளும் நிறைந்த பெரிய மாளிகைகளையும் கிராமப்புற இல்லங்களையும் கட்டினர். போர்க் கைதிகளாக இத்தாலிக்குக் கொண்டு வரப்பட்ட ஏராளமான கிரேக்கக் கலைஞர்களைக்கொண்டு பண்டைய இத்தாலியத் தொழில்களான பீங்கான் தொழில், வெண்கலத் தொழில் ஆகியவை புதிய அழகோடும் மெருகோடும் புத்துயிர் பெற்றன. கேப்புவா (Capua) நகரில் செய்யப்பட்ட வெண்கலச் சாமான்கள் (சமையற் பாத்திரங்கள், மதுக்குப்பிகள், விளக்குகள், தட்டுகள் முதலியவை) கி.மு. முதலாம் நூற்றாண்டில் வடக்கு ஐரோப்பாவில் பெரிதும் விரும்பி வாங்கப்பட்டன என்றால், எவ்வளவு தூரம் ரோமானியத் தொழிலும் வாணிகமும் வளர்ந்திருந்தன என்பதைப் புரிந்துகொள்ளலாம். எட்ரூரியாவிலிருந்த அர்ரேட்டியம் (Arretium) நகரில் நேர்த்தியான பீங்கான் பாண்டங்கள் செய்யப்பட்டன. ஆயினும், இத்தாலியரில் பெரும்பாலோர் ஏழ்மையில் வாழ்ந்ததால் இத்தகைய பொருள்களுக்கு அங்குக் கிராக்கி இல்லாமல்போய்விட்டது. எனவே, இத் தொழில்களை வைத்துப் பெரும் செல்வம் ஈட்டியவர்கள் இலர்.

கி.மு. முதலாம் நூற்றாண்டில் மத்திய தரைக்கடல் வாணிபமானது அரசியல் குழப்பங்களாலும் கடற் கொள்ளைக்காரர்களாலும் பெரிதும் பாதிக்கப்பட்டிருந்தது. இத்தாலியில் பணம் படைத்த நடுத்தர வகுப்பு ஒன்று துரிதமாக வளர்ந்து வந்தது என்பதை முன்பே கண்டோம். இவர்கள் உள்நாட்டு வாணிபத்திலும் வெளிநாட்டு வாணிபத்திலும் அதிக ஈடுபாடு கொண்டிருந்தனர். சிசிலியிலிருந்தும் ஆப்பிரிக்காவிலிருந்தும் ரோமுக்குத் தானியங்களைக் கொண்டு வந்து விற்றுக் கொழுத்த இலாபம் திரட்டினர். அந்நூற்றாண்டில் ஆப்பிரிக்காவின் பல

ஃபிளேவிய அரசர்களின் நிருவாகம்

நிருவாகத்தில் மாற்றங்கள்: வெஸ்பாசியானஸும் டொமீஷியானஸும் மறுபடியும் சென்சார் பதவியைத் தோற்றுவித்தனர். அவர்களே அப் பதவியை ஏற்கலாயினர். இதனால், புதிய செனெட்டர்களை அமர்த்தும் உரிமையை அவர்கள் பெற்றனர். தமது வகுப்பைச் சேர்ந்த ஈக்வைட்டுகளைச் செனெட்டர்களாக்குவதற்கு அவர்கள் இப் பதவியைப் பயன்படுத்தினர். மாநிலங்களைச் சேர்ந்த ஈக்வைட்டுகளைச் செனெட்டில் உறுப்பினராக்கித் தமது ஆதிக்கத்தை வலுப்படுத்திக்கொள்ள அவர்களால் முடிந்தது. முன்பு கிளாடியஸும் இதே கொள்கையைத்தான் பின்பற்றினார். ஆனால், கிளாடியஸும் ஃபிளேவிய மன்னர்களும் அதிக ரோமானிய மயமாக்கப்பட்ட–லத்தீன் மொழி பேசிய-மேற்கு மாநிலங்களிலிருந்து மட்டுமே அத்தகைய செனெட்டர்களை அமர்த்தினர். பின் வந்த பேரரசர்களுக்கு ஒரு முன்னுதாரணமாக இச் செயல் விளங்கியது. ஃபிளேவிய மன்னர்களின் காலத்தில் செனெட்டின் செல்வாக்கு மிகவும் குன்றியிருந்தது. வெஸ்பாசியானஸ் பல நேரங்களில் அதைக் கலந்து ஆலோசித்து வந்தார். ஆனால், டொமீஷியானஸோ சில தகவல்களை அறிவிப்பதற்கு மட்டுமே அச் சபையைக் கூட்டினார். அரசருக்குச் சமமாக நிருவாகத்தில் தனக்கும் பங்கு உண்டு என்று எண்ணியிருந்த செனெட்டுக்கு இது பெருத்த ஏமாற்றத்தையும் அவமதிப்பையும் கொடுத்தது. எனவே, டொமீஷியானஸை அது பெரிதும் வெறுத்து வந்தது. அவரது மரணத்துக்குப்பின் அவர்மீது அவதூறுகளைப் பொழிந்து, பொதுவிடங்களிலிருந்தும், சின்னங்கள், கட்டடங்கள் ஆகியவற்றிலிருந்தும் அவரது பெயரை அழிக்க வேண்டுமென்று அது ஆணையிட்டது.

அகஸ்டஸின் காலம் முதற்கொண்டே அரசாங்கப் பணித்துறையானது (Civil Service) நிருவாகத்தை நடத்தத் தொடங்கியது. அரசரது குடும்பத்தைச் சேர்ந்தவர்களிடமே ஆட்சிப் பொறுப்புக்களை விட்டுவைக்கும் வழக்கம் மறைந்துவந்தது. இதனால் நிருவாக அனுபவமும் அக்கறையும் கொண்ட அரசாங்கப் பணித்துறை ஒன்று வளர்ந்தது. நிருவாகப் பணியையே முழுநேரத் தொழிலாகக் கொண்டிருந்தனர் அத்துறையினர். இத்துறையில், குறிப்பாக உயர் மட்டத்திலும் நிதித்துறையிலும், ஈக்வைட்டுகளே பெரும்பாலும் முக்கியப் பொறுப்புகளை ஏற்றனர். அகஸ்டஸையும் டைபீரியஸையும்போல் நிருவாகத்தையும் அதிகாரிகளையும் ஃபிளேவிய அரசர்களும் நன்கு கண்காணித்து வந்தனர். சிறந்த அதிகாரிகளைத் தேர்ந்தெடுப்பதில் டொமீஷியானஸுக்கு இருந்த திறமையை வேறெந்தப் பேரரசரிடமும் காண முடியவில்லை என்று பலர் கூறுகின்றனர். அவர் தமது அதிகாரிகளை நிருவாகத்தில் முழுக் கவனஞ்

செலுத்தும்படி செய்து, திறமையாக அவர்களைக் கொண்டு செலுத்தினார்.

'தமக்குப்பின் தம் மகனே பேரரசராவார்' என்பதை அனைவருக்கும் தெளிவாக உணர்த்தும்பொருட்டு, தம்முடைய மகன் டைட்டஸுடன் அதிகாரங்களைப் பங்கிட்டுக்கொண்டு ஆண்டார் வெஸ்பாசியானஸ். கான்சல், சென்சார், டிரிபியூன் போன்ற பல உயர் பதவிகளை அவருக்கு அளித்தார். பிரேட்டோரியக் காவற்படையின் ஒரே தளபதியாக அவரை நியமித்ததோடு நிருவாகத்தை மேற் பார்வை செய்யும் அதிகாரத்தையும் அவருக்கு அளித்தார். டொமீஷியானஸைத் தந்தையும் தமையனும் ஒதுக்கிவைத்தனர்; ஆயினும் தங்களுக்குப்பின் அவரே அரசராவார் என்பதை எல்லோருக்கும் தெளிவுபடுத்தினர். தம் தமையனின் இருபுதல்வர்களான ஃபிளேவியஸ் கிளெமென்ஸ் (Clemens), ஃபிளேவியஸ் சபீனஸ் (Sabinus) ஆகிய இருவர்மீதும் சதிக்குற்றம் சாட்டி, அவர்களைக் கொன்றார் டொமீஷியானஸ். ஆயினும், கிளெமென்ஸின் பிள்ளையே தமக்குப் பின் அரியணையேற வேண்டுமென்று எல்லா ஏற்பாடுகளையும் அவர் செய்தார். இவ்வாறு ஃபிளேவிய வம்சம் ஒன்றை நிறுவி, தம் குடும்பத்தினரின் கையிலேயே பேரரசர்பதவி இருப்பதற்கு முயன்றார் இம் மன்னர்.

இத்தாலியின் நிலையும் நிதி நிருவாகமும்: அகஸ்டஸின் காலத்தைப்போல ஃபிளேவிய மன்னர்களின் காலத்திலும் ரோமில் ஏராளமான கட்டடங்கள் கட்டப்பட்டன. பல பழைய கட்டடங்கள் புதுப்பிக்கப்பட்டன. பல புதிய விழாக்களும் டொமீஷியானஸ் காலத்தில் கொண்டாடப்பட்டன. அதேசமயம் பொதுவாழ்விலும் தனி நடத்தையிலும் ஒழுக்கநெறி அவரால் வலியுறுத்தப்பட்டது. கி. பி. 79-ல் ரோமில் பிளேக் நோய் பரவி, பலரைக் கொன்றது. அதையடுத்து நகரின் மையப் பகுதியில் மீண்டும் பெரிய தீவிபத்து ஒன்று ஏற்பட்டுப் பெருஞ்சேதம் ஏற்பட்டது. வெஸ்பாசியானஸ் ரோமுக்குச் செல்லும் தானியத்தைத் தடுப்பதற்கென அலெக்சாந்திரியாவுக்குச் சென்றதைப்பற்றி ஏற்கெனவே பார்த்தோம். பின்னர், அங்கேயே சிறிது காலம் தங்கி ரோமுக்குத் தானியங்கள் தடையில்லாமல் செல்வதற்கு வேண்டிய ஏற்பாடுகளையும் அவரே செய்தார். அத்தகைய தானியங்கள் ஒழுங்காக ரோமுக்கு ஏற்றிச் செல்லப்படுவதற்கென்றே புதிய வியாபாரக் கப்பற்குழு ஒன்றையும் அவர் ஏற்படுத்தினார்.

உள்நாட்டுக் குழப்பங்களும் போர்களும் ஒழிந்து இத்தாலியில் மீண்டும் அமைதி நிலவியது. இரண்டு போர்களினால் அழிந்துபட்ட கிரெமோனா நகரம் மீண்டும் புத்துயிர் பெற்று எழுச்சியுற்றது.

டைட்டஸின் காலத்தில் கம்பேனியாவில் வெசூ வியஸ் எரிமலை (Vesu vius) வெடித்ததனால் பெருஞ் சேதம் ஏற்பட்டது. வரலாற்றுக் காலந்தொட்டே வெடிக்காத வெசூ வியஸ் கி. பி. 79-ல் திடீரென்று வெடித்து ஹெர்க்குலானியம் (Herculaneum), பாம்பீ (Pompeii), ஸ்டேபியே (Stabiae) ஆகிய மூன்று நகரங்களை அழித்தது. அதன் நெருப்புக் குழம்பு அந் நகரங்களை வரலாற்றிலிருந்து மூழ்கடித்தது. அவற்றிலிருந்த ஏராளமான மக்கள் தப்பி ஓடி உயிர் பிழைத்தனர். மிசெனம் (Misenum) நகரில் இருந்த கப்பற்படை இதில் மக்களுக்கு உதவி புரிந்தது. அழிந்துபட்ட அந் நகரங்களைப் புதுப்பிக்கும்பணி மேற்கொள்ளப்படவில்லை. ஆயினும், அருகிலிருந்த நிலங்களை அந் நகர மக்களில் சிலருக்குப் பிரித்துக் கொடுப்பதற்கென்று ஒரு குழுவை அரசர் நியமித்தார். டொமீஷியானஸ் காலத்தில் திராட்சையும் மதுவும் ஏராளமாக உற்பத்தி செய்யப்பட்டு விலையாகாமல் குவிந்து, வேளாண்மையில் ஒரு நெருக்கடி ஏற்பட்டது. இதனால் பாதித் திராட்சைத் தோட்டங்களை அழித்துவிடும்படி ஆணையிட்டார் அரசர்.

நீரோவின் காலத்தில் ஏற்பட்ட ஆடம்பரச் செலவுகளும், பின்னர் நடைபெற்ற உள்நாட்டுப் போர்களும் ரோமின் நிதிநிலையை மிகவும் கெடுத்திருந்தன. அதைச் சீர்செய்வதற்கு வெஸ்பாசியானஸ் பல முயற்சிகளை மேற்கொள்ள வேண்டியிருந்தது. நிலைமை சீரடைவதற்குப் பெருந்தொகைகள் தேவைப்பட்டன. எனவே, புதிய வரிகளை அரசாங்கம் திரட்டியது. நீரோவின் ஆட்சியில் வரியிலிருந்து விலக்குப் பெற்றிருந்த கிரீஸ்மீது மீண்டும் வரிகள் விதிக்கப்பட்டன. அரசாங்கச் செலவுகளில் சிக்கனத்தையும் அவர் கையாண்டார். அரசாங்கப் பணத்தை அதிகாரிகள் கையாள்வது ஓரளவு குறைக்கப்பட்டது. அதேசமயம் புதிய கட்டடங்களை எழுப்புவதற்கும் தீயினாலும் எரிமலையினாலும் நாசமுற்ற நகரங்களுக்கு உதவுவதற்கும் தாராளமாக நிதிஉதவி கிடைத்தது. டைட்டஸின் தாராள மனப்பான்மை காரணமாக மீண்டும் வீண்செலவுகள் பெருகின. ஆனால் டொமீஷியானஸ் காலத்தில் வெஸ்பாசியானஸின் நிதிக் கொள்கைகள் மீண்டும் பின்பற்றப்பட்டன. சிக்கனத்தையே அவரும் கையாண்டார். ஆயினும், படைகளில் கிளர்ச்சிகளைத் தடுப்பதற்கென்று படைவீரர்களின் சம்பளத்தை 300 தினாரியிலிருந்து (Dinari) 400 தினாரியாகக் கூட்டவேண்டி வந்தது. இப் புதிய செலவைச் சரிக்கட்டுவதற்கெனப் பேரரசர் படைப் பலத்தைக் குறைத்தார். நீரோவின் காலத்தில் மதிப்புக் குன்றிப்போன ரோமானிய நாணயங்கள் டொமீஷியானஸின் காலத்தில் தமது மதிப்பை மீண்டும் பெற்றது அவரது நிதிக் கொள்கையின் வெற்றியைக் காட்டுகிறது.

மாநில நிகழ்ச்சிகள்

ஜெர்மனியில் கலகங்கள்: கி.பி. 69-ல் இத்தாலியில் உள்நாட்டுப் போர் நடந்து வந்தபோது ஜெர்மனியில் இரண்டாம் முறை ஒரு படைக்கலகம் தோன்றியது. அதற்குத் தலைவராக இருந்தவர் ஜூலியஸ் சிவிலிஸ் (Julius Civilis) என்ற படேவிக் குலத்தலைவர். படை ஒன்றின் தலைவராயிருந்த அவர் வெஸ்பாசியானஸை ஆதரிப்பதாகச் சொல்லிக்கொண்டு கீழ்ஜெர்மனியிலிருந்த விட்டெலியஸின் படைகளைத் தாக்கினார். ரோமின் ஆட்சியிலிருந்து விடுதலை பெறுவதே அவரது உண்மையான நோக்கம். காலில் இரண்டு குலத்தலைவர்களான ஜூலியஸ் கிளாசிக்கஸ் (J. Classicus), ஜூலியஸ் டியூட்டர் (J. Tutor) ஆகியோரும் தங்கள் படைகளோடு சிவிலிஸை ஆதரித்தனர். இவ்வாறு கி.பி. 70-ல் ஸ்ட்ராஸ்பர்க் (Strassburg) அல்லது பாசில் (Basle) நகர் வரையிலான ரைன்நதிப் பிரதேசம் முழுவதும் ரோமின் ஆட்சியிலிருந்து விடுபட்டது. ஆயினும் விரைவிலேயே கால்களுக்கும் ஜெர்மானியர்களுக்கு மிடையில் முரண்பாடுகள் தலைதூக்கின. எனவே, கால் படைகளும் ஜெர்மானியப் படைகளும் பிரிந்து சென்றன.

இந்த வேற்றுமையை வெஸ்பாசியானஸ் நன்கு பயன்படுத்திக் கொண்டார். பெட்டிலியஸ் செரியாலிஸ் (Petilius Cerealis) என்பவரின் தலைமையில் ரோமானியப் படைகள் திரண்டு வந்து, கால் தலைவர்களைத் தோற்கடித்தன. அடுத்தபடியாகச் சிவிலிஸின் தலைமையிலான ஜெர்மானியப் படையுங்கூடத் தோற்றோடியது. படேவிகள் (Batavi) அவர்களது நாட்டுக்குள் விரட்டியடிக்கப்பட்டனர். இறுதியில் படேவிகளுக்கும் ரோமானியருக்கு மிடையில் ஓர் உடன்படிக்கை ஏற்பட்டது.

படைத் தலைவர்கள் இவ்வாறு கலகங்கள் செய்வதைத் தடுப்பதற்கென வெஸ்பாசியானஸ் பல நடவடிக்கைகளை மேற்கொண்டார். ரைன் ஆற்றுக் கரையிலும் டான்யூப் ஆற்றுக்கரையிலும் இருந்துவந்த பெரிய படைகள் சிறியவையாகப் பிரிக்கப்பட்டுப் பல்வேறு முகாம்களில் பல்வேறு தலைவர்கள் வசம் ஒப்புவிக்கப்பட்டன. சுதேசப் படைகள் தமது நாட்டைவிட்டுத் தூரத்து நாடுகளுக்கு அனுப்பிவைக்கப்பட்டன. சான்றாக, கால்படைகள் காலிலும் ஜெர்மானியர்களடங்கிய படைகள் ஜெர்மனியிலும் இருப்பது தடை செய்யப்பட்டது. அவற்றின் படைத்தலைமையும் ரோமானிய அதிகாரிகள் வசம் ஒப்படைக்கப்பட்டது. பின்னர், ஜெர்மனியில் 'பிளாக் பாரஸ்ட்' (Black Forest) போன்ற பகுதிகளும் வெஸ்பாசியானஸின் காலத்தில் கைப்பற்றப்பட்டன. பல நல்ல சாலைகள் போடப்பட்டு ரோமின் ஆட்சி அங்கு உறுதிப்படுத்தப்பட்டது.

ஆயினும், ரோமில் மட்டும் அடிமைகளின் எண்ணிக்கை அதிக மாகவே இருந்துவந்தது. பேரரசருக்குச் சொந்தமான சுரங்கங் களில் வேலை செய்வதற்கென்று கடுங்குற்றங்கள் புரிந்த கைதி கள் பயன்படுத்தப்பட்டனர். நகர அடிமைகளில் பலர் கல்வி யறிவுடையவர்களாய் தொழில் நிறுவனங்களில் கணக்கெழுது வோராயும் மேற்பார்வையாளராயும் சிறந்த கலைஞர்களா யும் இருந்தனர். பழைய அடிமைகளே விடுதலை பெற்றுக் கைவினைஞராயும் வணிகராகவும் கூட மாறிவந்தனர்.

கி.மு. முதலாம் நூற்றாண்டின் இறுதியிலிருந்து மாநிலங் களிலும் செழிப்பு பரவியது. ரோமானியப் பேரரசின் வாணி கத்தில் மாநில மக்களும் பெரும் பங்கு வகித்தனர். சான்றாக, ரோமுக்கு வந்த தானியக் கப்பல்களில் பணிபுரிந்தவர்கள் பெரும்பாலும் கிரேக்கராகவும் ஆசியராகவும் இருந்தனர். இந் தியாவுக்குக் கப்பலோட்டிச் சென்றவர்களும் கிரேக்கரே. மேற்கு ஐரோப்பிய வாணிபம் கால்களிடமே இருந்தது. கிழக்கிந்திய நகரங்களில் யூதர்கள் கைவினைஞர்களாகவும் சிறுவியாபாரிகளர் கவும் செழித்துவந்தனர். ரோமில் தொழில்களில் ஈடுபட்டிருந்த அடிமைகளும் மற்றையோரும் கிழக்கத்திய மனிதர்களே. இவ் வாறு பேரரசின் மாநிலங்களுக்கும் செல்வமும் செழிப்பும் பரவி னாலும் ரோமும் இத்தாலியுமே பெருஞ் செல்வத்தில் மிதந்தன. அவற்றிலும் ஒரு சிலரே பெருஞ்செல்வந்தராகவும், ஏனையோர் அனைவரும் வசதிகளற்ற ஏழைகளாகவும் பிச்சைக்காரர்களா கவும் இருந்தனர்.

25. குழப்பமும் அமைதியும்

(கி.பி. 68–180)

செர்வியஸ் சல்பிசியஸ் கால்பா, கி.பி. 68-69.

கால்பா பேரரசராதல்: நீரோவின் மரணத்துடன் ஜூலியோ-கிளாடிய வம்சம் முடிவுக்கு வந்தது. உடனே, செனேட்டானது கூடிக் கால்பாவைப் பேரரசராக்குவது என்று முடிவு செய்தது. இதை அறிந்த அவர், உடனே ரோமை நோக்கிப் புறப்பட்டார். அவரது பட்டத்தை எதிர்த்த இரு படைத் தலைவர்களைக் கொல்லவேண்டியது அவசியமாயிற்று. அவர்களில் ஒருவர் ஆப்பிரிக்காவில் படைத்தளபதியா யிருந்த குளோடியஸ் மேசர் என்பவர் (Clodius macer). கொலையாளி ஒருவர்மூலம் கால்பா அவரை ஒழித்துக்கட்டினர். அடுத்தவர் ஜெர்மனியில் படைத்தலைவரா யிருந்த பான்ட்டேயஸ் கேப்பிடோ (Fonteius Capito) என்பவர். அவருக்குக் கீழ்ப் பணிபுரிந்து வந்த பேபியஸ் வேலன்ஸ் (Fabius Valens) என்பவர். கால்பாவின் ஆணைக்குக்கூடக் காத்திராமல் அவரைக் கொலைசெய்தார்.

இதற்கிடையில் ரோமில் நிலைமைகள் மாறின. பிரேட்டோரியக் காவற்படையின் இருதளபதிகளில் ஒருவரான நிம்பிடியஸ் சபீனஸ் முன்பு தானே ஆதரித்த கால்பாவுக்கு எதிராக இப்பொழுது கிளம்பினர். நீரோ கொலைசெய்யப்பட்ட உடனேயே காவற்படையின் மற்றொரு தளபதியான டிஜெல்லினஸைப் பதவியிலிருந்து விலகும்படி செய்து படைத்தலைமை முழுவதையும் அவரே மேற்கொண்டார். ஆனால், ஸ்பெயினை விட்டுப் புறப்படுமுன்பே பிரேட்டோரியக் காவற்படையின் ஒரு தலைவராக டிஜெல்லினஸின் இடத்தில் கார்னீலியஸ் லோகோ (Cornelius Laco) என்பவரைக் கால்பா நியமித்தார். இதை அறிந்த உடனேயே கால்பாவை எதிர்ப்பது என்று

முடிவுசெய்தார் நிம்பிடியஸ். தான் காலிகுலாவின் பிள்ளை என்று கூறிக்கொண்டு ஜெர்மானிக்கஸின் குடும்பத்தைச் சேர்ந்த தன்னையே கால்பாவுக்குப்பதில் அரசராக்கும்படி காவற்படையினரை அவர் வேண்டிக்கொண்டார். உடனே, படையினர் வெகுண்டெழுந்து அவரைக்கொன்றனர். இவ்வாறு தன்னை எதிர்க்கக் கூடிய படைத்தலைவர்கள் யாருமின்றிப் பேரரசரானார் செர்வியஸ் சல்பிசியஸ் கால்பா.

கால்பாவின் ஆட்சியும் வீழ்ச்சியும்; அரியணையேறிய உடனேயே கால்பா நிர்வாகத்தில் கவனத்தைச் செலுத்தினர். நிதிநிலைமையைச் சீர்செய்து, படைகளில் ஒழுங்கை நிலை நிறுத்துவது அவரது முக்கிய முதற்பணியாக இருந்தது. ஆனால், பதவியேறியபொழுது அவருக்கு வயது 71. அவரை எதிர் நோக்கியிருந்த பிரச்சனைகளோ நீண்டநாட்கள் ஆளக்கூடிய இளைஞர் ஒருவரால் தீர்க்கப்பட வேண்டியவை. மேலும், அவருக்கு நல்ல ஆலோசனைகளைக் கூறி உதவுவதற்கும் சிறந்த அமைச்சர்கள் இல்லை. விடுதலைபெற்ற அடிமைகளுள் சிலர் அவரது உயரதிகாரிகளாக இருந்து வந்தனர். அவர்களிடம் திறமையுமில்லை; மற்றவர்கள் அவர்களை மதிக்கவுமில்லை. பதவிக்கு வந்த உடனேயே நீரோவின் அதிகாரிகள் பலரைக் கொன்று, நீரோவைப் போலவே கால்பாவும் கொடியவர் என்ற பெயரை எடுத்துவிட்டார். ஆயினும், நீரோவைப்போல் ஊதாரித்தனமாகப் பணத்தை வீணடிக்காமல் நிர்வாகத்தில் சிக்கனத்தைப் புகுத்த முயன்றார். இதனால், அரசாங்கத்தின் பணத்தைக் கொள்ளையடிக்க முடியாத பலர் இவருக்கு எதிராகத்திரும்பினர்.

இச் சமயத்தில் கால்பா ஒரு பெரிய தவறு செய்தார். மேல் ஜெர்மெனியில் (Upper Germany) ரோமானியப்படைகளுக்குத் தலைவராக இருந்த வெர்ஜீனியஸ் (Verginius) என்ற திறமை மிக்கவருக்குப் பதிலாக ஹோர்டியோனியஸ் ஃபிளாச்சஸ் (Herdeonius Flaceus) என்பவரை அங்குப் படைத்தலைவராக்கினர். அதேபோல் கீழ் ஜெர்மெனியிலும் (Lower Germany) பான்ட்டேயஸ் கேப்பிடோவுக்குப் பதிலாக விட்டெலியஸ் (Vitellius) என்பவரைப் படைத்தளபதியாக நியமித்தார். அவர்கள் இருவருமே அப்படைகளுக்குப் புதிய மனிதர்கள். எனவே, தமது கட்டுப்பாட்டுக்குள் அப்படைகளைக் கொண்டு வர இவர்களால் இயவில்லை. இந்நிலையில் அவர்களது கீழதிகாரிகளான ஃபேபியஸ் வேலன்ஸ், சேசினு (Caecina) ஆகியவர்கள் படைகளில் அதிகச் செல்வாக்குடன் விளங்கினர். ரோமின் அரசியலில் தலையிடுவதென்றும் முடிவு செய்தனர்.

மேல் ஜெர்மெனியிலிருந்த படைகள் கேசினுவின் தூண்டு தலின்பேரில் கால்பாவுக்கு விசுவாசத்துடன் நடந்துகொள்வ தாக உறுதிமொழி எடுத்துக்கொள்ள மறுத்துவிட்டன. ஒவ்வொரு ஆண்டும் இந்த உறுதிமொழியை எடுத்துக்கொள்ளு வது வழக்கம். இதையறிந்த உடனேயே கீழ் ஜெர்மெனியி லிருந்த படைகளும் அவ்வாறே செய்தன. தனக்கு வயதாகி விட்டதால் படைகளின் விசுவாசத்தைப் பெறுவதற்கும் தன் னுடு சேர்ந்து நாட்டை ஆள்வதற்கும், தனக்குப் பின்னர் பேரரசாக இருக்கவும் ஒரு இளைஞரை நியமிக்க முடிவு செய்தார் கால்பா. அவர் வெர்ஜீனியஸை அவ்வாறு நியமித் திருந்தால் எல்லாம் நல்லமுறையில் முடிந்திருக்கும். ஆனால், மிகவும் இளைஞரான, நிர்வாக அனுபவம் சிறிதும் இல்லாத பிசோ லேசினியானஸ் (Piso Lacinianus) என்பவரை அவ்வாறு நியமித்து அதன் காரணமாகப் பலரது ஆதரவையும் இழந்தார். அரசரோடு மிகவும் நெருக்கமாகப் பழகிவந்த மனிதர்களில் ஒருவரான சால்வியஸ் ஒத்தோ (Salvius Otho) என்பவர், 'அரசர் தன்னை வாரிசாக நியமிக்கவில்லையே' என்று ஆத்திர முற்றார். கால்பா அரசராக்கப்பட்டபோது லூசிட்டானியாவில் (Lusitania) கவர்னராக இருந்தார். கால்பாவை ஆதரிப்பதாக முதன்முதலில் கூறிய படை அதிகாரியும் மாநிலக் கவர்னரும் அவரே. எனவே, தனக்குப் பதில் பிசோவை வாரிசாக் நிய மித்தது துரோகம் என்று கருதினர். பிசோ பழைய குடியரசுக் காலத்துப் பிரபுக் குடும்பம் ஒன்றைச் சேர்ந்தவர். எனவே, செனேட்டும் செல்வந்தர் பலரும் ஒத்தோவை ஆதரித்தனர்.

ஆயினும், படைவீரர்கள் அவரைத் தம்மவராகக் கருத வில்லை. மேலும், பேரரசராவதற்கு வேண்டிய தகுதிகளோ அல் லது உரிமையோ அவரிடமில்லை. நீரோவின் நெருங்கிய நண்பர் அவரது மனைவியான போப்பேயா சபீனுவின் முதல் கணவர் என்பதைத் தவிர, அரச பதவியைக் கோருவதற்கு வேறு எந்த உரிமையையும் ஒத்தோ பெற்றிருக்கவில்லை. ஆயினும், பிரேட் டோரியக் காவற்படைக்கு ஏராளமான தொகைகளைத் தருவ தாகச் சொல்லி அதன் ஆதரவைப் பெற்றார். ஜனவரி 15-ந் தேதியன்று இவரையே பேரரசர் என்று அறிவித்த அப்படை யினர் தமது முகாம்களிலிருந்து கிளம்பி ரோமானிய மன்றுக்குச் (Forum) சென்று கால்பாவையும், பிசோவுடன் வேறுபலரையும் கொன்றனர்.

சால்வியஸ் ஒத்தோ கி.பி. 69

ஜெர்மானியப் படைகளின் படையெடுப்பு: செனேட்டும் பெரும்பாலான மாநிலக் கவர்னர்களும் ஒத்தோவையே பேரரச

ரென ஏற்றுக்கொண்டனர். கால்பாவைப் போலவே அவரும் நிதிநிலைமையைச் சீர்செய்யவும் படைகளில் ஒழுங்கை நிலை பெறச் செய்யவும் வேண்டியிருந்தது. ஆனால், இவ்விரண்டை யுமே இவரால் செய்யமுடியாமற் போயிற்று. படைகளுக்கு ஏராளமான பொருளை அள்ளிக்கொடுத்து அவற்றின் ஆத ரவைப் பெறவேண்டி யிருந்ததால், நிதிநிலைமை மேலும், மோசமானதோடு, படைகளையும் கட்டுப்படுத்த முடியாதவ ரானார்.

மேலும், ஜெர்மானியப்படைகள் அவரை ஏற்றுக்கொள்ள மறுத்தன. தனது தளபதியான விட்டெலியஸையே பேரரச ராக ஏற்றுக்கொள்ளும்படி கீழ்ஜெர்மானியப் படைகளை ஜனவரி 3-ஆம் தேதியன்று தூண்டிவிட்டார் பேபியஸ் வேலன்ஸ். கிளாடியஸின் நெருங்கிய நண்பரான ஒருவரின் மகன்தான் விட்டெலியஸ். ஆயினும், அவருக்கு அதிகச் செல் வாக்கு ஒன்றுமில்லை. எனவே, பொம்மை அரசராக அவரை வைத்து உண்மை அதிகாரமனைத்தையும் தாமே எடுத்துக் கொள்ளலாம் என்று எண்ணினர் வேலன்ஸும் சேசினாவும். மேல் ஜெர்மென் படைகளும் இதை ஆதரித்தன. பயிற்சி மிக்க படைகளை எடுத்துக்கொண்டு உடனே ரோமை நோக்கிப்புறப் பட்டனர் வேலன்ஸும் சேசினாவும். கால்பா கொலைசெய்யப் பட்டுவிட்ட செய்தி வழியில் அவர்களுக்கு எட்டியது. இருப் பினும் அவர் தம் படையெடுப்பு நிற்கவில்லை. விட்டெலிய ஸைத் தன் பக்கம் சேர்த்துக்கொள்வதற்கென்று ஒத்தோ செய்த முயற்சிகளும் தோல்வியில் முடிந்தன.

ஒத்தோவின் மரணம்: ஒத்தோவின் வசம் பெரும்படை ஒன்று இருந்தது. ஆயினும், அது பல விடங்களில் சிதறிக் கிடந்தன. அவற்றையெல்லாம் ஒன்று திரட்டிப் பகைவர்களை எதிர்க்கக்கூடிய திறமையோ பொறுமையோ பேரரசரிடம் இல்லை. பகைவர்களிடமோ சுமார் ஒரு இலட்சம் பேர்கள் இருந் தனர். இப்படையின் ஒரு பாதியை அழைத்துக் கொண்டு பிரான்சின் வழியாக ஆல்ப்ஸ் மலைகளின் மேற்குக் கணவாய் களில் நுழைந்து வட இத்தாலிக்கு வந்து சேர்ந்தார் வேலன்ஸ். மற்றப் பாதியைச் சுவிட்சர்லந்து வழியாகச் செயின்ட் பெர்னார்ட் கணவாயில் புகுந்து (ஹேனிபாலும் நெப்போலியனும் கடந்து வந்த புகழ்பெற்ற கணவாய் இது) வட இத்தாலிக்குள் நுழைந் தார் சேசினா. இருவரது படைகளும் டிரான்ஸ் பாடேன் காலில் சந்தித்தன. அவை ஒன்று சேருவதற்கு முன்பே தனித்தனி யாக அப்படைகளை எதிர்த்துப் போரிட்டு அழிக்கத் தவறி விட்டார் ஒத்தோ.

போதுமான அளவுக்குத் தனது படைகள் வந்து சேரும் வரை காத்திராமல் கிரெமோனவுக்கு (Cremona) அருகில் பகைவர்களை அவசரப்பட்டு எதிர்த்தார் ஒத்தோ. ஆனால், அவருக்குப் பலத்த தோல்வி ஏற்பட்டது. போநதியைக் கடந்து தப்பிப்பதற்கும் பின்வாங்குவதற்கும்கூட வழியில்லாமல் போயிற்று. இந்நிலையில் அரசரின் படை முழுவதுமே பகைவரிடம் சரணடைந்தது. ஒத்தோ தற்கொலை செய்து கொண்டார்.

ஒத்தோவின் மரணம் பற்றிய செய்தி வந்த உடனேயே விட்டெலியஸையே பேரரசராக அங்கீகரித்தது செனேட். மாநிலக் கவர்னர்களும் அவ்வாறே அவரை ஏற்றுக் கொண்டனர். இந்நிலையில் ஒத்தோவின் படைகளும் அவரை ஏற்றுக் கொள்ளவே எதிர்ப்பு எதுவுமின்றி ரோமில் நுழைந்தார் விட்டெலியஸ்.

விட்டெலியஸ், கி.பி. 69

'ஜெர்மானியப் பேரரசர்': கிரெமோனு வெற்றிக்குப் பின்னர் தமது ஆதிக்கத்தைப் பலப்படுத்திக்கொள்ளும் நோக்கத்துடன் ஒத்தோவைச் சேர்ந்த அனைவரையும் ஒழித்துக் கட்டத் தீர்மானித்தனர் விட்டெலியஸின் கட்சியினர். ஒத்தோவின் பிரேட்டோரியப் படைகள் கலைக்கப்பட்டன. மேலும், அவருக்கு உதவியாக இலீரியாவிலிருந்தும் வேறிடங்களிலிருந்தும் வந்த படைகள் திருப்பியனுப்பப்பட்டன. அவற்றின் தளபதிகள் சிரச்சேதம் செய்யப்பட்டனர். விட்டெலியஸ் தம்மை "ஜெர்மானியப் பேரரசர்" என்று அழைத்துக்கொண்டார். திறமை என்பது எள்ளளவும் அவரிடமில்லை. ரோமில் உண்மையான அதிகாரம் அனைத்தையும் சேசினு, வேலன்ஸ் போன்றவரிடம் கொடுத்துவிட்டு நீரோவைப் போல இன்பக் களியாட்டங்களில் தனது காலத்தை வீணடித்தார். அவரது வீண் ஆடம்பரச் செலவுகள் காரணமாக துருப்புக்களுக்குக் கூட, அவரால் கொடுக்கமுடியவில்லை. எனவே, ஊரைக் கொள்ளையடித்துத் தமக்கு வேண்டிய பொருள்களை எடுத்துக் கொண்டனர் படையினர்.

தங்களது பகைவர்களனைவரையும் ஒழித்துக் கட்டிவிட்டதாக எண்ணிக்கொண்டு மிகுந்த தன்னம்பிக்கையோடும் ஆணவத்தோடும் இறுமாந்து இருந்தனர் விட்டெலியஸின் ஆட்கள். தமது ஜெர்மானியப் படைக்கு ஈடாக வேறுபடை எதுவும் இருக்க முடியாது என்பதும் அவர்களின் எண்ணம்.

எதிர்ப்பு உருவாகிறது: கிழக்கு மாநிலங்களில் அவர்களுக்கு எதிர்ப்பு உருவாயிற்று. யூதர்களுக்கெதிராகவும் மற்றவர்களுக்கெதிராகவும் இடைவிடாமல் போர்களில் ஈடுபடவேண்டியிருந்ததால் கிழக்கத்திய படைகள் தமது எண்ணிக்கையிலும் போர்ப் பயிற்சியிலும் ஜெர்மானிய படைகளுக்கீடாக வளர்ந்திருந்தன. கிழக்கில் முக்கியமான மாநிலங்களில் ஒன்றுகக் கருதப்பட்டது எகிப்து. அதன் கவர்னராக இருந்தவர் டைபீரியஸ் அலெக்சாந்தர் (Tibuerius Alexander) என்பவர். இவர் அலெக்சாந்திரியாவைச் சேர்ந்த கிரேக்கர். இத்தாலிய ரல்லாத ஒருவர், மாநிலக்கவர்னராக அல்லது உயர் அதிகாரியாக ஆனது இதுதான் முதல் தடவை. 'இத்தாலியர் மட்டுமே ரோமில் அரச பதவிக்கும் மற்ற பதவிகளுக்கும் உரியவர்கள்' என்ற நிலை அன்று இருந்து வந்ததால், விட்டெலியஸுக்குப்பதில் தானே அரசராவதற்கு முயலாமல் வேறொருவரை ஆதரிப்பதற்கு முன் வந்தார் அலெக்சாந்தர். மற்றொரு முக்கிய மாநிலம் சிரியா அதன் கவர்னராக இருந்தவர் லிசீனியஸ் மியூசியானஸ் (Licinius Mucianus). அவர் பழைய பிரபுக்குடும்பம் ஒன்றில் பிறந்தவர். ஆயினும், தனது திறமையிலும் செல்வாக்கிலும் அதிக நம்பிக்கை இல்லாதவராக இருந்தார். எனவே, அவரும் வேறொருவரை ஆதரிப்பதற்கு முன்வந்தார்.

இவ்வாறு டைபிரியஸ் அலெக்சாந்தரும் லிசீனியஸ் மியூசியானஸும் சேர்ந்து டைட்டஸ் பிளேவியஸ் வெஸ்பாசியானஸ் (T. Flavius Vespasianus) என்பவரை விட்டெலியஸுக்கு எதிராக நிறுத்துவதென்று முடிவு செய்தனர். ஈக்வைட் வகுப்பைச் சேர்ந்த பெரும் பணக்கார லேவா தேவிக்காரர் ஒருவரின் பிள்ளையான வெஸ்பாசியானஸ் பாலஸ்தீனத்துப்படைகளுக்குத் தளபதியாக இருந்தவர்.

விட்டெலியஸின் வீழ்ச்சி: கி.பி. 69-ஆம் ஆண்டு ஜூலை முதல் தேதியன்று வெஸ்பாசியானஸையே (வெஸ்பாசியன் என்றும் சுருக்கமாக இவர் அழைக்கப்படுகிறார்) ஆதரிப்பதாக உறுதிமொழி எடுத்துக்கொண்டன எகிப்தின் படைகள். சில நாட்களுக்குப் பின்னர் வெஸ்பாசியசின் படைகளும் அவ்வாறே செய்து, அவரையே பேரரசர் என்று அறிவித்தன. மற்ற கிழக்கத்திய மாநிலங்களின் கவர்னர்களும் சிற்றரசர்களும் அவ்வாறே செய்தனர்.

எகிப்திலிருந்து உணவுத் தானியங்கள் ரோமுக்குச் செல்வதைத் தடுத்து, அதைப்பட்டினி போட்டுப் பணியவைப்பதற்கென்று வெஸ்பாஸின் அலெக்சாந்திரியாவுக்குச் சென்றார்.

மியூசியானஸ் தனது படைகளோடு ஆசியாமைனர் வழியாக இத்தாலியை நோக்கிப் புறப்பட்டார். ஆனால், இதற்கிடையில் டான்யூப் நதிக்கரையில் பன்னோனியா (Pannonia), மோசியா (Moesia) ஆகியவற்றிலிருந்த படைகளும் வெஸ்பாசியனையே ஆதரித்து மியூசியானஸுக்கு முன்பாகவே இத்தாலியை நோக்கிப் புறப்பட்டுவிட்டன. இப்படைகளுக்குத் தலைமை தாங்கினர் அன்டோனியஸ் பிரைமஸ் (A. Primus). அவர் பன்னோனியப் படையின் கீழதிகாரிகளில் ஒருவர் ஆவார்.

பிரைமஸின் படைகள் ரோமை நோக்கி விரைந்தன. தாம் வரும்வரை காத்திருந்து போகும்படி மியூசியானஸ் அனுப்பியிருந்த ஆணைகளையும் புறக்கணித்து அவசர அவசரமாக வடஇத்தாலிக்குள் நுழைந்தார் பிரைமஸ். அவரிடம் ஐம்பதாயிரத்துக்கும் குறைவான போர்வீரர்களே இருந்தனர். ஆயினும், விட்டெலியஸின் படைத்தளபதிகள் முயற்சி ஏதும் மேற்கொள்ளாமல் வீணாகக் காலங்கழித்துக் கொண்டிருந்தனர். பேரரசர் விட்டெலியஸ் வழக்கம்போல் தனது கேளிக்கைகளில் மூழ்கிக் கிடந்தார். வேலன்ஸ் நோய்வாய்ப்பட்டுப் படுக்கையில் கிடந்தார். செசினாவோ ஒழுங்கில்லாத தனது படைகள்மீது நம்பிக்கையை இழந்து போருக்குப் புறப்படாமல் காலங்கடத்தினர். மேலும், தனது படைகள் போரில் ஈடுபடத் துடித்த போதும், போரில் ஈடுபடவேண்டாமென்றும், பிரைமஸை ஆதரித்து அவரோடு சேர்ந்து கொள்வதுதான் நல்லது என்றும் அவர் எடுத்துரைத்தார். இதைக்கண்ட படைகள் அவரைக் கைது செய்துவிட்டு, புதிய தளபதிகளோடு போர் முனைக்குப் புறப்பட்டன.

வடக்கு நோக்கிச் சென்ற பேரரசரின் படைகள் எதிர்பாராவிதமாகப் போநதியின் கரையில் கிரெமோனாவுக் கருகில் பிரைமஸின் படைகளைச் சந்தித்தன. பேரரசரின் படையில் அதிக போர் வீரர்கள் இருந்த போதிலும், சிறந்த படைத் தலைவர்கள் இன்மையால் பிரைமஸின் படையிடம் அது தோல்வியுற்றது. பிரைமஸின் படைகள் எதிரிகளின் முகாம்களையும் தாக்கி அனைவரையும் கொன்றன. இதைக் கேள்வியுற்ற உடனேயே விட்டெலியஸைக் கைவிட்டு வெஸ்பாசியனையே பேரரசராக ஏற்றுக்கொண்டனர் மேற்கு மாநிலங்களின் கவர்னர்கள். கிரெமோனாவிலிருந்து ரோமை நோக்கி விரைந்தார் பிரைமஸ். அதைக் கைப்பற்றி, தனது பகைவர்கள் அனைவரையும் கொன்றார். தப்பி ஓட முயன்ற விட்டெலியஸும் பிடித்துக் கொல்லப்பட்டார். ரோம் நகரம் சூறையாடப்பட்டது. காரணமில்லாமல் பலர் கொல்லப்பட்டனர். தனது படைகளைக்

கட்டுப்படுத்த பிரைமஸ் விரும்பவில்லை. சில நாட்களிலேயே மியூசியானஸும் விரைந்து ரோமுக்கு வந்து சேர்ந்து, தனது படைகளைக் கொண்டு பிரைமஸின் படைகளை அடக்கி ஒழுங்கு படுத்தி, தமது மாநிலங்களுக்குத் திரும்பிச் செல்லும்படி அவற்றுக்கு ஆணையிட்டார். அவை பணிந்தன. கி.பி. 70-ஆம் ஆண்டுக்கோடையில் வெஸ்பாசியன் ரோம் வந்து சேர்ந்ததும், தனது கடமைகளை அவரிடம் ஒப்பிவித்துவிட்டு விலகிக்கொண்டார் மியூசியானஸ்.

சில விளைவுகள் : இவ்வாறே கி.பி. 69-ஆம் ஆண்டில் மட்டும் ரோமில் நான்கு பேரரசர்கள் – கால்பா, ஒத்தோ, விட்டெலியஸ், வெஸ்பாசியன் – பதவி ஏற்றனர். எனவே, இது 'நான்கு பேரரசர்களின் ஆண்டு' என்று அழைக்கப்படுகிறது. நீரோவின் கொடுங்கோன்மையை ஒழிப்பதற்கென்று ஏற்பட்ட குழப்பங்கள் இவ்வாறு நீட்டிக் கொண்டே சென்றன. ரோமையும் மக்களையும் காப்பதற்கே, தான் ஆட்சியைக் கைப்பற்றியதாக ஒவ்வொரு அரசரும் கூறிக்கொண்டனர். செனேட் செயலிழந்து நின்றது. ரோமில் ஆட்சியைக் கைப்பற்றிய ஒவ்வொருவரையும் பேரரசராக ஏற்றுக்கொண்டது.

மாநிலத்தில் ஆதரவு பெரும் நோக்கத்துடன் மாநில மக்களில் பலருக்குக் குடியுரிமைகளை அளித்தனர் ஒவ்வொரு அரசரும். சான்றாக, மத்தியகாலில் பல குலங்களுக்கும் ரோமானியக் குடியுரிமையைக் கால்பாவும், கிழக்குக் காலில் பல குலங்களுக்கு அவ்வுரிமையை ஒத்தோவும், ஸ்பெயினிலும் ஆப்பிரிக்காவிலும் லத்தீனியக் குடியுரிமையைப் பலருக்கு விட்டெலியஸும் அளித்தனர். இவ்வாறு மாநில மக்களில் பலருங்கூட ரோமானிய அரசியலில் பங்குபெறும் வாய்ப்பைப் பெற்றனர்.

மேலும், பழைய குடியரசுக் காலத்துப்பிரபுக் குடும்பத்தைச் சேராதாரும், அகஸ்டஸ் உருவாக்கிய செனேட்டர் வகுப்பைச் சேராதவரும் அப்பொழுது 'அரசராக முடியும்' என்றநிலை ஏற்பட்டது. அடுத்தபடியாக ரோமில் மட்டுமன்றி, வேறிடங்களிலிருந்தும் படைகளின் உதவியோடு ஒருவர் ரோமானிய பேரரசராக முடியும் என்ற நிலைமையும் ஏற்பட்டது.

ஃபிளேவிய வம்சம், கி.பி. 69-96.

வெஸ்பாசியன், கி.மு. 69-79 ; டைட்டஸ் ஃபிளேவியஸ் வெஸ்பாசியன் நிறுவிய வம்சம், 'ஃபிளேவிய வம்சம்' என்று அழைக்கப்படுகிறது. மூன்று அரசர்கள் இவ்வம்சத்தைச் சேர்ந்

தவர்கள். அவர்களில் முதல்வரான வெஸ்பாசியன் தமது அறுபத்தோராவது வயதில் (கி.பி. 70) பேரரசரானார். அவர் ரோமில் ஆதிக்கத்தைப் பெற்றுவந்த ஈக்வைட்டு வகுப்பைச் சேர்ந்தவர். சுறுசுறுப்பும் கடினஉழைப்பும் நீண்ட அனுபவமும் பெற்றவர். புதிதாக எதையும் அவர் செய்யாமற் போனாலும் அரசாங்கத்தை ஒழுங்காகவும் உறுதியாகவும் செயல்படும்படி செய்தார். அதனால், ஒன்பதாண்டுக்காலம் ரோமில் நிர்வாகம் நன்முறையில் நடைபெற்றது. அரசரது அதிகாரம் உறுதியாக நிறுவப்பட்டது. மீண்டும் ரோமில் ஒழுங்கும் அமைதியும் நிலவின. அவரது நல்லாட்சி காரணமாகவும், முயற்சிகள் காரணமாகவும் அவரது பிள்ளைகளே அவருக்குப்பின், அரசராக முடிந்தது. அதாவது, பேரரசர்பதவி அவரது குடும்பத்துக்கு உரியதாயிற்று.

டைட்டஸ், கி.பி. 79–81 ; வெஸ்பாசியனுக்கு இரண்டு புதல்வர்கள். அவர்களில் மூத்தவர் டைட்டஸ். அவர் தமது தந்தையின் பெயரான 'டைட்டஸ் ஃபிளேவியஸ் வெஸ்பாசியானஸ்' என்ற பெயரையே கொண்டிருந்தார். எனினும், முதற்பெயரை வைத்து டைட்டஸ் (Titus) என்றே அழைக்கப்பட்டார். அவர் மிகவும் கவர்ச்சிகரமான தோற்றமும், இனிமையான பழக்க வழக்கங்களும், திறமையும், எல்லோரையும் கவரும் தன்மையும், கூர்ந்த அறிவும் படைத்தவராக இருந்தார். ரோமில் அனைவருமே அவரை ஆதரித்துப் போற்றினர்கள். ஆனால், பட்டத்துக்குவந்த இரண்டே ஆண்டுகளில் அவர் காலமாகி விட்டதால் அவரது உண்மையான அரசியல் திறமைகளை அறிந்துகொள்ள முடியவில்லை.

டொமீஷியன் , கி.பி. 81–96 : டைட்டஸின் மரணத்துக்குப்பின் அவரது தம்பியான (வெஸ்பாசியனின் இளைய மகனான டைட்டஸ் பிளேவியஸ் டொமீஷியானஸ் (Domitianus) பேரரசரானார். டைட்டஸ் மிகவும் கலகலப்பான சுபாவம் உள்ளவராக இருந்தார். ஆனால், அவரது தம்பியான இவரோ அதிகம் யாருடனும் பேசிப்பழகாத சிடுசிடுத்த சுபாவமுடையராக இருந்தார். தந்தையும் தமயனும் கான்சல் பதவிபோன்ற ஒன்றுக்கும் உதவாத பதவிகளையும் பட்டங்களையும் மட்டுமே டொமீஷியானஸுக்கு அளித்து வந்தனர். படைத்தலைமையை மட்டும் அவருக்கு அளிக்காமல் ஒதுக்கிவைத்தனர். இதனால், ஆரம்பத்திலிருந்தே கலகலப்பில்லாதவராகவும் சிடுசிடுத்தயாரையும் நம்பாத–சுபாவம் உள்ளவராகவும் இருந்தார் டொமீஷியஸ். தனது தமையனின் திடீர் மரணம் இவரை ரோமப்

பேரரசராக்கியது. தமது தந்தையைப் போலவும் அண்ணனைப் போலவும் இல்லாமல் ஆலோசகர்களையும் அமைச்சர்களையும் புறக்கணித்துத் தாமே தம் முடிவுகளின்படியே நிர்வாகத்தை நடத்த முற்பட்டார். அதனால், அவரது செயல்களையும் ஆட்சிமுறையையும் பலர் வெறுத்தனர். எதேச்சாதிகாரி என்று அவரை அழைத்தனர். ஆயினும், திறமையாக சுறுசுறுப்பாக, எதையும் தன் தந்தையைப்போல் ஆர அமரச் சிந்தித்து, வெஸ்பாசியன் துவக்கி வைத்த பணிகளைச் செய்து முடித்தார். அவரது ஆட்சியிலும் அரசனின் ஆதிக்கம் ஓங்கியிருந்தது. ரோமில் அமைதியும் ஒழுங்கும் நிலவின.

பிளேவிய அரசர்களுக்கு எதிரான சதிகள்: ரோமானியப் பேரரசில் மறுபடியும் பேரரசரது அதிகாரத்தையும் சட்டத்தையும் ஒழுங்கையும் வெஸ்பாசியன் நிறுவியதால் அனைவராலும் அவர் மதிக்கப்பட்டார். அதேபோல், டைட்டஸும் அனைவராலும் மதிக்கப்பட்டுவந்தார். ஆயினும், வெஸ்பாசியனுக்குப்பின் டைட்டஸ் அரசராவதைத் தடுத்துத் தானே அரசராவதற்கென்று அரண்மனைப் படையினருக்குப் பொருள் கொடுத்து அவர்களது ஆதரவைப் பெறச் சேசினு (கி.பி. 79) முயற்சிசெய்தார். ஆனால், பிரேட்டோரியக் காவற்படையின் தலைவராயிருந்த டைட்டஸ் அம்முயற்சியை முறியடித்துச் சேசினுவைக் கொன்றார். டொமீஷியனின் காலத்தில் சதிகளும் எதிர்ப்பும் வளர்ந்தன. கி.பி. 88-ஆம் ஆண்டில் மேல்ஜெர்மன் பகுதியில் படைத்தளபதியாயிருந்த அன்ட்டோனியஸ் சாட்டர்னினஸ் (A. Saturninus) என்பவர் தமது படைகளை அழைத்துக்கொண்டு ரோமின்மீது படையெடுக்க முயற்சித்தார். ஆயினும், ஜெர்மானியாவிலிருந்த மற்றொரு படையின் தளபதி ஒருவரால் அவர் தோற்கடிக்கப்பட்டார்.

ரோமில் அப்பொழுது 'ஸ்டாயிக்' (Stoic) 'சீனிக்' (Cynic) என்ற இரண்டு தத்துவக்கருத்துக்கள் பரவிவந்தன; பண்டைய கிரீஸில் நிலவிய இத்தத்துவஇயக்கங்கள், தனதுமுந்தியவலிமையையும் செல்வாக்கையும் இழந்து, சீர்கேடடைந்து, இற்று, வீழ்ச்சியுற்றுக் கொண்டிருந்த ரோமானியப் பேரரசிலும் பரவத் தொடங்கின. உயர் நிலையிலிருந்த பலரும் இக்கருத்துக்களை ஏற்றிருந்தனர். பேரரசர் பதவியைத் தனது குடும்பத்துக்கே உரிய ஒன்றாக வெஸ்பாசியன் மாற்றியதற்கு எதிராக ஸ்டாயிக்குகளும் சினிக்குகளும் முதலில் குரலெழுப்பினர். பின்னர், அவரது ஆட்சியையும் நடவடிக்கைகளையும் தாக்கினர். அவர்களை இத்தாலியிலிருந்து விரட்டினர் வெஸ்பாசியன். டொமீஷியனும் அவர்களை இருமுறை அவ்வாறு வெளியேற்

தவர்கள். அவர்களில் முதல்வரான வெஸ்பாசியன் தமது அறுபத்தோராவது வயதில் (கி.பி. 70) பேரரசரானார். அவர் ரோமில் ஆதிக்கத்தைப் பெற்றுவந்த ஈக்விட்டு வகுப்பைச் சேர்ந்தவர். சுறுசுறுப்பும் கடினஉழைப்பும் நீண்ட அனுபவமும் பெற்றவர். புதிதாக எதையும் அவர் செய்யாமற் போனாலும் அரசாங்கத்தை ஒழுங்காகவும் உறுதியாகவும் செயல்படும்படி செய்தார். அதனால், ஒன்பதாண்டுக்காலம் ரோமில் நிர்வாகம் நன்முறையில் நடைபெற்றது. அரசரது அதிகாரம் உறுதியாக நிறுவப்பட்டது. மீண்டும் ரோமில் ஒழுங்கும் அமைதியும் நிலவின. அவரது நல்லாட்சி காரணமாகவும், முயற்சிகள் காரணமாகவும் அவரது பிள்ளைகளே அவருக்குப்பின், அரசராக முடிந்தது. அதாவது, பேரரசர்பதவி அவரது குடும்பத்துக்கு உரியதாயிற்று.

டைட்டஸ், கி.பி. 79–81 ; வெஸ்பாசியனுக்கு இரண்டு புதல்வர்கள். அவர்களில் மூத்தவர் டைட்டஸ். அவர் தமது தந்தையின் பெயரான 'டைட்டஸ் ஃபிளேவியஸ் வெஸ்பாசியானஸ்' என்ற பெயரையே கொண்டிருந்தார். எனினும், முதற்பெயரை வைத்து டைட்டஸ் (Titus) என்றே அழைக்கப்பட்டார். அவர் மிகவும் கவர்ச்சிகரமான தோற்றமும், இனிமையான பழக்க வழக்கங்களும், திறமையும், எல்லோரையும் கவரும் தன்மையும், கூர்ந்த அறிவும் படைத்தவராக இருந்தார். ரோமில் அனைவருமே அவரை ஆதரித்துப் போற்றினர்கள். ஆனால், பட்டத்துக்குவந்த இரண்டே ஆண்டுகளில் அவர் காலமாகி விட்டதால் அவரது உண்மையான அரசியல் திறமைகளை அறிந்துகொள்ள முடியவில்லை.

டொமீஷியன், கி.பி. 81–96 : டைட்டஸின் மரணத்துக்குப்பின் அவரது தம்பியான (வெஸ்பாசியனின் இளைய மகனான டைட்டஸ் பிளேவியஸ் டொமீஷியானஸ் (Domitianus) பேரரசரானார். டைட்டஸ் மிகவும் கலகலப்பான சுபாவம் உள்ளவராக இருந்தார். ஆனால், அவரது தம்பியான இவரோ அதிகம் யாருடனும் பேசிப்பழகாத சிடுசிடுத்த சுபாவமுடையராக இருந்தார். தந்தையும் தமயனும் கான்சல் பதவிபோன்ற ஒன்றுக்கும் உதவாத பதவிகளையும் பட்டங்களையும் மட்டுமே டொமீஷியானஸுக்கு அளித்து வந்தனர். படைத்தலைமையை மட்டும் அவருக்கு அளிக்காமல் ஒதுக்கிவைத்தனர். இதனால், ஆரம்பத்திலிருந்தே கலகலப்பில்லாதவராகவும் சிடுசிடுத்தயாரையும் நம்பாத-சுபாவம் உள்ளவராகவும் இருந்தார் டொமீஷியஸ். தனது தமையனின் திடீர் மரணம் இவரை ரோமப்

பேரரசராக்கியது. தமது தந்தையைப் போலவும் அண்ணனைப் போலவும் இல்லாமல் ஆலோசகர்களையும் அமைச்சர்களையும் புறக்கணித்துத் தாமே தம் முடிவுகளின்படியே நிர்வாகத்தை நடத்த முற்பட்டார். அதனால், அவரது செயல்களையும் ஆட்சிமுறையையும் பலர் வெறுத்தனர். எதேச்சாதிகாரி என்று அவரை அழைத்தனர். ஆயினும், திறமையாக சுறுசுறுப்பாக, எதையும் தன் தந்தையைப்போல் ஆர அமரச் சிந்தித்து, வெஸ்பாசியன் துவக்கி வைத்த பணிகளைச் செய்து முடித்தார். அவரது ஆட்சியிலும் அரசனின் ஆதிக்கம் ஓங்கியிருந்தது. ரோமில் அமைதியும் ஒழுங்கும் நிலவின.

பிளேவிய அரசர்களுக்கு எதிரான சதிகள்: ரோமானியப் பேரரசில் மறுபடியும் பேரரசரது அதிகாரத்தையும் சட்டத்தையும் ஒழுங்கையும் வெஸ்பாசியன் நிறுவியதால் அனைவராலும் அவர் மதிக்கப்பட்டார். அதேபோல், டைட்டஸும் அனைவராலும் மதிக்கப்பட்டுவந்தார். ஆயினும், வெஸ்பாசியனுக்குப்பின் டைட்டஸ் அரசராவதைத் தடுத்துத் தானே அரசராவதற்கென்று அரண்மனைப் படையினருக்குப் பொருள் கொடுத்து அவர்களது ஆதரவைப் பெறச் சேசினு (கி.பி. 79) முயற்சிசெய்தார். ஆனால், பிரேட்டோரியக் காவற்படையின் தலைவராயிருந்த டைட்டஸ் அம்முயற்சியை முறியடித்துச் சேசினுவைக் கொன்றார். டொமீஷியனின் காலத்தில் சதிகளும் எதிர்ப்பும் வளர்ந்தன. கி.பி. 88-ஆம் ஆண்டில் மேல்ஜெர்மன் பகுதியில் படைத்தளபதியாயிருந்த அன்ட்டோனியஸ் சாட்டர்னினஸ் (A. Saturninus) என்பவர் தமது படைகளை அழைத்துக்கொண்டு ரோமின்மீது படையெடுக்க முயற்சித்தார். ஆயினும், ஜெர்மானியாவிலிருந்த மற்றொரு படையின் தளபதி ஒருவரால் அவர் தோற்கடிக்கப்பட்டார்.

ரோமில் அப்பொழுது 'ஸ்டாயிக்' (Stoic) 'சீனிக்' (Cynic) என்ற இரண்டு தத்துவக்கருத்துக்கள் பரவிவந்தன; பண்டைய கிரீஸில் நிலவிய இத்தத்துவஇயக்கங்கள், தனதுமுந்தியவலிமையையும் செல்வாக்கையும் இழந்து, சீர்கேடடைந்து, இற்று, வீழ்ச்சியுற்றுக் கொண்டிருந்த ரோமானியப் பேரரசிலும் பரவத் தொடங்கின. உயர் நிலையிலிருந்த பலரும் இக்கருத்துக்களை ஏற்றிருந்தனர். பேரரசர் பதவியைத் தனது குடும்பத்துக்கே உரிய ஒன்றாக வெஸ்பாசியன் மாற்றியதற்கு எதிராக ஸ்டாயிக்குகளும் சினிக்குகளும் முதலில் குரலெழுப்பினர். பின்னர், அவரது ஆட்சியையும் நடவடிக்கைகளையும் தாக்கினர். அவர்களை இத்தாலியிலிருந்து விரட்டினர் வெஸ்பாசியன். டொமீஷியனும் அவர்களை இருமுறை அவ்வாறு வெளியேற்

றினர். அவ்வியக்கங்களில் ஈடுபட்டிருந்த குற்றத்துக்காக இரு செனேட்டர்களும்கூட டொமீஷியனின் காலத்தில் தண்டிக்கப்பட்டனர். டொமீஷியன், செனேட்டின் அதிகாரத்தையும் முக்கியத்துவத்தையும் குறைத்தார். எனவே, அவருக்கெதிராகப்பல சதித்திட்டங்களை வகுத்தனர் செனேட்டர்கள். ஆரம்பத்தில் அவர் அவற்றைப் பற்றி அறியாமல் இருந்த போதிலும், சாட்டர்னினஸின் கலகத்துக்குப் பிறகு நிறுத்திக்கொண்டார். அரசருக்கு எதிரான சதிகளையெல்லாம் கண்டுபிடிப்பதற்கென்று ஒற்றர்கள் வேலை செய்தனர். பல செனேட்டர்களின் சதி நடவடிக்கைகள் கண்டு பிடிக்கப்பட்டன. செனேட்டாலேயே அவர்கள் தண்டிக்கப்பட்டனர். ஆயினும், செனேட்டானது அரசருக்கு அஞ்சியே அவர்களைத் தண்டித்தது. எனவே, மேன்மேலும் சதிகள் உருவாயின. டைட்டஸின் பிள்ளைகள் இருவர் (ஃபிளேவியஸ் கிளெமென்ஸ், ஃபிளேவியஸ் சபீனஸ் ஆகியோர்) மீது சதிக்குற்றம் சாட்டப்பட்டு அவர்கள் இருவரும் சிரச்சேதம் செய்யப்பட்டனர். இறுதியில் தன் மனைவியான டொமீஷியாவால் (Dumitia) ஏவப்பட்ட வேலைக்காரன் ஒருவனாலேயே குத்தப்பட்டு உயிர் துறந்தார் டொமீஷியன். டொமீஷியாவின் ஒழுக்கத்தைப் பற்றிச் சந்தேகப்பட்டு, அவரை விலக்கிவைத்துவிட்டு, பின்னர் அவரை மீண்டும் ஏற்றுக் கொண்டார் அரசர். இதனால், ஆத்திரமுற்று டொமீஷியா, மீண்டும் பேரரசரின் தண்டனைக்கு ஆளாகாமலிருக்கும் பொருட்டு இவ்வாறு செய்தார்.

பிளேவிய அரசர்களின் நிர்வாகம்

நிர்வாகத்தில் மாற்றங்கள்; வெஸ்பாசியனும் டொமீஷியனும் மறுபடியும் சென்சார் பதவியைத் தோற்றுவித்தனர். அவர்களே அப்பதவியை வகிக்கலாயினர். இதனால், புதிய செனேட்டர்களை நியமிக்கும் உரிமையை அவர்கள் பெற்றனர். தமது வகுப்பைச் சேர்ந்த ஈக்வைட்டுகளைச் செனேட்டர்களாக்குவதற்கு அவர்கள் இப்பதவியைப் பயன்படுத்தினர். மாநிலங்களைச் சேர்ந்த ஈக்வைட்டுகளைச் செனேட்டில் உறுப்பினராக்கித் தமது ஆதிக்கத்தை வலுப்படுத்திக்கொள்ள அவர்களால் முடிந்தது. முன்பு கிளாடியஸும் இதே கொள்கையைத்தான் பின்பற்றினர். ஆனால், கிளாடியஸும் ஃபிளேவிய மன்னர்களும் அதிக ரோமானிய மயமாக்கப்பட்ட-லத்தீன் மொழி பேசிய-மேற்கு மாநிலங்களிலிருந்து மட்டுமே அத்தகைய செனேட்டர்களை நியமித்தனர். பின் வந்த பேரரசர்களுக்கு ஒரு முன்னுதாரணமாக இச்செயல் விளங்கியது. ஃபிளேவிய மன்னர்களின் காலத்தில் செனேட்டின் செல்வாக்கு மிகவும் குன்றியிருந்தது. வெஸ்

போசியன் பல நேரங்களில் அதைக் கலந்து ஆலோசித்து வந்தார். ஆனால், டொமிஷியனே சில தகவல்களை அறிவிப்பதற்கு மட்டுமே அச்சபையைக் கூட்டினர். அரசருக்குச் சமமாக நிர்வாகத்தில் தனக்குப்பங்கு உண்டு என்று எண்ணியிருந்த செனேட்டுக்கு இது பெருத்த ஏமாற்றத்தையும், அவமதிப்பையும் கொடுத்தது. எனவே, டொமிஷியனை அது பெரிதும் வெறுத்து வந்தது. அவரது மரணத்துக்குப்பின் அவர்மீது அவதூறுகளைப் பொழிந்து, பொதுவிடங்களிலிருந்தும், சின்னங்கள், கட்டடங்கள் ஆகியவற்றிலிருந்தும் அவரது பெயரை அழிக்க வேண்டுமென்றும் ஆணையிட்டது.

அகஸ்டஸின் காலம் முதற்கொண்டே அரசாங்கப்பணித் துறையானது (Civil Service) நிர்வாகத்தை நடத்தத் தொடங்கியது. அரசரது குடும்பத்தைச் சார்ந்தவர்களிடமே நிர்வாகப் பொறுப்புக்களை விட்டு வைக்கும் வழக்கம் மறைந்து வந்தது. இதனால், நிர்வாக அனுபவமும் அக்கரையும் கொண்ட அரசாங்கப் பணித்துறை ஒன்று வளர்ந்தது. நிர்வாகப் பணியையே முழுநேரத் தொழிலாகக் கொண்டிருந்தனர் அத்துறையினர். இத்துறையில், குறிப்பாக உயர் மட்டத்திலும் நிதித்துறையிலும், ஈக்வைட்டுகளே பெரும்பாலும் முக்கிய பொறுப்புக்களை வகித்தனர். அகஸ்டஸையும் டைபீரியஸையும் போல நிர்வாகத்தையும் அதிகாரிகளையும் பிளேவிய அரசர்களும் நன்கு கண்காணித்து வந்தனர். சிறந்த அதிகாரிகளைத் தேர்ந்தெடுப்பதில் டொமிஷியனுக்கு இருந்த திறமையை வேறெந்தப் பேரரசரிடமும் காண முடியவில்லை' என்று பலர் கூறுகின்றனர். அவர் தமது அதிகாரிகளை நிர்வாகத்தில் முழுக்கவனம் செலுத்தும்படி செய்து, திறமையாக அவர்களைக் கொண்டு செலுத்தினர்.

'தமக்குப்பின் தம் மகனே பேரரசராவார்' என்பதை அனைவருக்கும் தெளிவாக உணர்த்தும் பொருட்டு, தமது மகன் டைட்டஸுடன் அதிகாரங்களைப் பங்கிட்டுக் கொண்டு ஆண்டார் வெஸ்பாசியன். கான்சல், சென்சார், டிரிபியூன் போன்ற பல உயர் பதவிகளை அவருக்கு அளித்தார். பிரேட்டோரியக் காவற்படையின் ஒரே தளபதியாகவும் அவரை நியமித்ததோடு நிர்வாகத்தை மேற்பார்வை செய்யும் அதிகாரத்தையும் அவருக்கு அளித்தார். டொமீஷியனைத் தந்தையும் தமையனும் ஒதுக்கி வைத்தனர்; ஆயினும், தமக்குப்பின் அவரே அரசராவார் என்பதை எல்லோருக்கும் தெளிவுபடுத்தினர். தன் தமையனின் இருபுதல்வர்களான ஃபிளேவியஸ் கிளெமென்ஸ் (Clemens), பிளேவியஸ் சபீனஸ் (Sabinus) ஆகிய இருவர்மீதும் சதிக்குற்றம் சாட்டி, அவர்களைக்கொன்றார்

டொமீஷியஸ். ஆயினும், கிளெமென்ஸின் பிள்ளையே தனக்குப்பின் அரியணையேற வேண்டுமென்று எல்லா ஏற்பாடுகளையும் அவர் செய்தார். இவ்வாறு ஃபிளேவிய வம்சம் ஒன்றை நிறுவி, தம் குடும்பத்தினர் கையிலேயே பேரரசர் பதவி இருப்பதற்கு முயன்றனர் இம் மன்னர்.

இத்தாலியின் நிலையும் நிதி நிர்வாகமும்: அகஸ்டஸின் காலத்தைப் போல, ஃபிளேவிய மன்னர்களின் காலத்திலும் ரோமில் ஏராளமான கட்டடங்கள் கட்டப்பட்டன. பல பழைய கட்டடங்கள் புதுப்பிக்கப்பட்டன. பல புதிய விழாக்களும் டொமீஷியனின் காலத்தில் கொண்டாடப்பட்டன. அதே சமயம் பொது வாழ்விலும் தனி நடத்தையிலும் ஒழுக்க நெறி அவரால் வலியுறுத்தப்பட்டன. கி.பி. 79-ல் ரோமில் பிளேக் நோய் பரவிப் பலரைக் கொன்றது. அதையடுத்து நகரின் மையப் பகுதியில் மீண்டும் பெரிய தீவிபத்து ஒன்று ஏற்பட்டு, பெருஞ்சேதம் ஏற்பட்டது. வெஸ்பாசியன் ரோமுக்குச் செல்லும் தானியத்தைத் தடுப்பதற்கென அலெக்சாந்திரியாவுக்குச் சென்றதைப்பற்றி ஏற்கெனவே பார்த்தோம். பின்னர், அங்கேயே சிறிது காலம் தங்கி ரோமுக்குத் தானியங்கள் தடையில்லாமல் செல்வதற்கு வேண்டிய ஏற்பாடுகளையும் அவரே செய்தார். அத்தகைய தானியங்கள் ஒழுங்காக ரோமுக்கு ஏற்றிச் செல்லப்படுவதற்கென்றே புதிய வியாபாரக் கப்பற்குழு ஒன்றையும் நியமித்தார்.

உள் நாட்டுக்குழப்பங்களும் போர்களும் ஒழிந்து இத்தாலியில் மீண்டும் அமைதி நிலவியது. இரண்டு போர்களினால் அழிந்துபட்ட கிரெமோனு நகரம் மீண்டும் புத்துயிர் பெற்று எழுச்சியுற்றது. டைட்டஸின் காலத்தில் கம்பேனியாவில் வெசூவியஸ் எரிமலை (VesuVius) வெடித்ததனால் பெருஞ்சேதம் ஏற்பட்டது. வரலாற்றுக் காலந்தொட்டே வெடிக்காத வெசூவியஸ் கி.பி. 79-ல் திடீரென்று வெடித்து ஹெர்க்குலானியம் (Herculaneum), பாம்பீ (Pompeii), ஸ்டேபியே (Stabiae) ஆகிய மூன்று நகரங்களை அழித்தது. அதன் நெருப்புக் குழம்பு அந்நகரங்களை வரலாற்றிலிருந்து மூழ்கடித்தது. அவற்றிலிருந்த ஏராளமான மக்கள் தப்பி ஓடி உயிர் பிழைத்தனர். மிசெனம் (Misenum) நகரில் இருந்த கப்பற் படை இதில் மக்களுக்கு உதவி புரிந்தது. அழிந்துபட்ட அந்நகரங்களைப் புதுப்பிக்கும் பணி மேற்கொள்ளப்படவில்லை. ஆயினும், அருகிலிருந்த நிலங்களை அந்நகர மக்களில் சிலருக்குப் பிரித்துக் கொடுப்பதற்கென்று ஒரு குழுவை அரசர் நியமித்தார். டொமீஷியனின் காலத்தில் திராட்சையும் மதுவும்

அதிகமாக உற்பத்தி செய்யப்பட்டு விலையாகாமல் குவிந்து, ஒரு விவசாய நெருக்கடி ஏற்பட்டது. இதனால் பாதி திராட்சைத் தோட்டங்களை அழித்துவிடும்படி ஆணையிட்டார் அரசர்.

நீரோவின் காலத்தில் ஏற்பட்ட ஆடம்பரச் செலவுகளும், பின்னர் நடைபெற்ற உள்நாட்டுப் போர்களும் ரோமின் நிதி நிலையை வெகுவாகப் பாதித்திருந்தன. அதைச் சீர் செய்வதற்கு வெஸ்பாசியன் பல முயற்சிகளை மேற்கொள்ள வேண்டியிருந்தது. நிலைமை சீரடைவதற்குப் பெருந்தொகைகள் தேவைப்பட்டன. எனவே, புதிய வரிகளை அரசாங்கம் திரட்டியது. நீரோவின் ஆட்சியில் வரியிலிருந்து விலக்கு பெற்றிருந்த கிரீஸ் மீது மீண்டும் வரிகள் விதிக்கப்பட்டன. அரசாங்கச் செலவுகளில் சிக்கனத்தையும் அவர் கையாண்டார். அரசாங்கப் பணத்தை அதிகாரிகள் கையாள்வது ஓரளவு குறைக்கப்பட்டது. அதே சமயம் புதிய கட்டடங்களை எழுப்புவதற்கும், தீயினாலும் எரிமலையினாலும் நாசமுற்ற நகரங்களுக்கு உதவுவதற்கும் தாராளமாக நிதி உதவிகிடைத்தது. டைட்டஸின் தாராள மனப்பான்மை காரணமாக மீண்டும் வீண் செலவுகள் பெருகின. ஆனால், டொமீஷியனின் காலத்தில் வெஸ்பாசியனின் நிதிக் கொள்கைகள் பின்பற்றப்பட்டன. சிக்கனத்தையே அவரும் கையாண்டார். ஆயினும், படைகளில் கிளர்ச்சிகளைத் தடுப்பதற்கென்று படைவீரர்களின் சம்பளத்தை 300 தினாரியிலிருந்து (Dinari) 400 தினாரியாகக்கூட்ட வேண்டி வந்தது. இப்புதிய செலவைச் சரிக்கட்டுவதற்கெனப் பேரரசர் படைபலத்தைக் குறைத்தார். நீரோவின் காலத்தில் மதிப்புக் குன்றிப் போன ரோமானிய நாணயங்கள் டொமீஷியனின் காலத்தில் தமது மதிப்பை மீண்டும் பெற்றது, அவரது நிதிக் கொள்கையின் வெற்றியைக் காட்டுகிறது.

மாநில நிகழ்ச்சிகள்

ஜெர்மெனியில் கலகங்கள் : கி.பி. 69-ல் இத்தாலியில் உள்நாட்டுப் போர் நடந்து வந்தபோது ஜெர்மெனியில் இரண்டாம் முறை ஒரு படைக்கலகம் தோன்றியது. அதற்குத் தலைவராக இருந்தவர் ஜூலியஸ் சிவிலிஸ் (Julius Civilis) என்ற படைவிக் குலத்தலைவர். படைஒன்றின் தலைவராயிருந்த அவர் வெஸ்பாசியனை ஆதரிப்பதாகச் சொல்லிக்கொண்டு, கீழ் ஜெர்மெனியிலிருந்த விட்டெலியஸின் படைகளைத் தாக்கினர். ரோமின் ஆட்சியிலிருந்து விடுதலை பெறுவதே அவரது உண்மையான நோக்கம். காலில் (Gaul) இரண்டு குலத்தலைவர்களான ஜூலியஸ் கிளாசிக்கஸ் (J. Classicus), ஜூலியஸ் டிரூட்டர்

(J. Tutor) ஆகியோரும் தமது படைகளோடு சிவிலிஸை ஆதரித்தனர். இவ்வாறு கி.பி. 70-ல் ஸ்ட்ராஸ்பர்க் (Strassburg) அல்லது பாசில் (Basle) நகர் வரையிலான ரைன் நதிப் பிரதேசம் முழுவதும் ரோமின் ஆட்சியிலிருந்து விடுபட்டது. ஆயினும், விரைவிலேயே கால்களுக்கும் ஜெர்மானியர்களுக்கு மிடையில் முரண்பாடுகள் தலைதூக்கின. எனவே, கால்படைகளும் ஜெர்மானியப் படைகளும் பிரிந்து சென்றன.

இந்த வேற்றுமையை வெஸ்பாசியன் நன்கு பயன்படுத்திக் கொண்டார். பெட்டிலியஸ் சீரியாலிஸ் (Petilius Cerialis) என்பவரின் தலைமையில் ரோமானியப் படைகள் திரண்டு வந்து, கால் தலைவர்களைத் தோற்கடித்தன. அடுத்தபடியாகச் சிவிலிஸின் தலைமையிலான ஜெர்மானியப் படையும்கூடத் தோற்றோடியது. படேவிகள் (Batavi) அவர்களது பிரதேசத்துக்குள் விரட்டியடிக்கப்பட்டனர். இறுதியில் படைகளுக்கும் ரோமானியருக்கு மிடையில் ஒரு உடன்படிக்கை ஏற்பட்டது.

படைத் தலைவர்கள் இவ்வாறு கலகங்கள் செய்வதைத் தடுப்பதற்கென வெஸ்பாசியன் பல நடவடிக்கைகளை மேற்கொண்டார். ரைன் நதிக் கரையிலும் டான்யூப் நதிக்கரையிலும் இருந்து வந்த பெரிய படைகள் சிறியவையாகப் பிரிக்கப்பட்டுப் பல்வேறு முகாம்களில் பல்வேறு தலைவர்கள்வசம் ஒப்புவிக்கப்பட்டன. சுதேசப்படைகள் தமது பிரதேசத்தைவிட்டுத் தூரத்துப் பிரதேசங்களுக்கு அனுப்பிவைக்கப்பட்டன. சான்றாக, கால்படைகள் காலிலும், ஜெர்மானியர்களடங்கிய படைகள் ஜெர்மெனியிலும் இருப்பது தடைசெய்யப்பட்டது. அவற்றின் படைத்தலைமையும் ரோமானிய அதிகாரிகளின் வசம் ஒப்படைக்கப்பட்டது. பின்னர் ஜெர்மெனியில் 'பிளாக் பாரஸ்ட்' (Black Forest) போன்ற பகுதிகளும் வெஸ்பாசியனின் காலத்தில் கைப்பற்றப்பட்டன. பல நல்ல சாலைகள் போடப்பட்டு ரோமின் ஆட்சி உறுதிபடுத்தப்பட்டது.

பிரிட்டன் : இவ்வாறு ஜெர்மெனியில் கலகங்களை அடக்கிய பெட்டிலியஸ் சீரியாலிஸையே பிரிட்டனில் கவர்னராக நியமித்தார் வெஸ்பாசியன். அவரும் வடக்கு பிரிட்டனில் பல பகுதிகளைவென்று, இன்று யார்க் (York) என்று அழைக்கப்படும் எபுரேக்கம் (Eburacum) நகரை நிறுவினர். இங்கிலாந்தின் சமவெளிப் பகுதி முழுவதும் அவரது காலம் முதல் ரோமின் ஆதிக்கத்தின்கீழ் வந்தது. அவருக்கு அடுத்தபடியாகப் பிரிட்டனில் கவர்னராக நியமிக்கப்பட்ட செக்ஸ்டஸ் ஜூலியஸ் ஃபிரான்ட்டினஸ் (Sex. Julius Fronilnus) என்பவர் வேல்ஸ்

பகுதிக்குள்ளும் சிறிது சிறிதாக ஊடுருவல்களை நடத்தினர் (கி.பி. 74–77). அவருக்கு அடுத்து வந்த ஜூலியஸ் அக்ரிகோலாவின் (J. Agricola) காலத்தில் வடக்கு வேல்ஸின் கடற்கரைப் பகுதி வெல்லப்பட்டது. கி.பி. 82–83-ல் ஸ்காட்லந்துக்குள்ளும் அவரது படைகள் நுழைந்தன. அவரது கடற்படை ஸ்காட்லந்தின் வடகோடிவரை சென்றது. கி.பி. 84-ல் ஆக்கிரமிப்புக்களுக்கு முற்றுப்புள்ளி வைத்து அக்ரிக்கோலாவைத் திருப்பி அழைத்துக்கொண்டார் டொமீஷியன். வடக்கு பிரிட்டனில் ஸ்டெர்லிங் (Stirling), பெர்த் (Perth) ஆகியவை வரை ரோமின் ஆதிக்கம் பரவியது. அக்ரிக்கோலா சிறந்த படைத் தலைவராக மட்டுமன்றி, நல்ல நிர்வாகத்திறமை படைத்தவராகவும் விளங்கினர். பல சுதேசத் தலைவர்களோடு நல்லுறவுகளை ஏற்படுத்திக்கொண்டார். அதனால், ரோமானியப் பழக்க வழக்கங்களை அவர்கள் பின்பற்றினர். பிரிட்டனில் பொருளாதார வளர்ச்சி துவங்கியதோடு ஐரோப்பாவோடு கலாச்சாரத் துறையிலும் உறவு ஏற்பட்டது.

அகஸ்டஸின் கொள்கைகளைமீறி, மேலும் புதிய பிரதேசங்களைக் கைப்பற்றுவதற்கு ஃபிளேவிய மன்னர்கள் முற்பட்டனர் என்பதை மேலே கூறிய பிரிட்டிஷ் போர்கள் காட்டின. வெஸ்பாசியனின் ஆட்சிக்காலத்தின் பின்பாதியும், டோமீஷியனின் ஆட்சியும் இதைக் காட்டின. மேலும், சிறந்த எல்லைகளை அடைய வேண்டுமென அவர்கள் விரும்பினர்.

யூதர்களுடன் போர்: ரோமின் ஆதிக்கத்திலிருந்து கிளர்ச்சி செய்து விடுபட்ட பாலஸ்தீனத்தை மீண்டும் வெல்லும் முயற்சியில் நீரோவின் படை அதிகாரியாக ஈடுபட்டிருந்தார் வெஸ்பாசியன். ஆனால், கி.பி. 68-ல் நீரோவின் மரணம்பற்றிய செய்தி கிடைத்த உடனேயே தனது போர்களை முடித்துக் கொண்டு கி.பி. 69-ல் விட்டெலியஸுக்கு எதிராகக் கிளம்பினர். இதுதான் சமயமென்று மீண்டும் தமது விடுதலை முயற்சிகளை முழு மூச்சோடு மேற்கொண்டனர் யூதர்கள். தமக்கிடையிலான வேற்றுமைகளையெல்லாம் மறந்து ஒன்றுபட்டு, எருசலம் நகரின் கோட்டை கொத்தளங்களையும் மற்ற அரண்களையும் மேலும் பலப்படுத்திக்கொண்டனர். படையதிகாரியாக வந்த டைட்டஸ் அந்நகரை ஆறுமாதம் முற்றுகையிட்டுக் கைப்பற்றினர் (கி.பி. 70). மிகவும் வீரத்தோடும் விடா முயற்சியோடும் அம்முற்றுகையை எதிர்த்து நின்று, நகரம் முழுவதுமே அழிந்து, பஞ்சமும் பட்டினியும் ஏற்பட்டு, சரணடைவதைத் தவிர வேறுவழியில்லை என்ற நிலை ஏற்பட்ட பின்னரே யூதர்கள் பணிந்தனர். அந்நகரிலிருந்த யூதர்களின் பண்டைய பெரும்

ஆலயமும் அழிந்துபட்டது. எஞ்சியிருந்த யூதர்கள் அடிமைப் படுத்தப்பட்டனர். ஒரு ரோமானியப்படை அங்கு நிறுத்திவைக் கப்பட்டது. முற்றுகையின்போது எரிந்து அழிந்துபோன யூதர் ஆலயத்தை மீண்டும் புதுப்பிக்க அனுமதி மறுக்கப்பட்டது. யூதர்கள் பிறரைத் தம் மதத்துக்கு மாற்றுவது தடைசெய்யப் பட்டது. பேரரசிலிருந்த எல்லா யூதர்கள்மீதும் தலைவரி ஒன்று விதிக்கப்பட்டது. அதே சமயம் யூத சமயத்தில் பிறந்த அனை வருக்கும் பேரரசர்—வழிபாட்டிலிருந்து (Caesar-worship) விதி விலக்கு அளித்ததோடு வேறு எவ்விதத்திலும் அவர்களது சமயத்தில் தலையிடவில்லை ரோமானிய அரசர்கள்.

டான்யூப் பிரதேசங்கள்: கி.பி. 69-ஆம் ஆண்டில் நடை பெற்ற உள்நாட்டுப் போரின்போது ரஷ்ய சமவெளிகளில் வாழ்ந்த பல குலங்கள் உறைந்துபோன டான்யூப் நதியைக் கடந்து மோசியாவுக்குள் (Moesia) நுழைந்தன. ரோமானியக் காலாட்படைகள் அவற்றைத் தோற்கடித்து விரட்டின. இவ் வாறு சிறுசிறு ஆபத்துக்களே டான்யூப் பிரதேசத்தில் ஏற்பட்டு வந்தன. ஆனால், டொமீஷியனின் காலத்தில் டேசியாவில் (Dacia) வசித்து வந்த குலங்கள் டெசிபாலஸ் (Decebalus) என்ற ஒரு தலைவரின்கீழ் ஒன்றுபட்டன. அவர் டேசிய மக்களை யெல்லாம் போர்வீரர்களாக்கி, ரோமானியப் போர்முறைகளைப் பின்பற்றி, மோசியாவுக்குள் நுழைந்து ரோமானியப் படைகளை முறியடித்தார். டொமீஷியனின் படை அதிகாரியான கொர்னீலியஸ் ஃபஸ்கஸ் (C. Fuscus) என்பவர் மத்திய டான்யூப் பிரதேசத்திலிருந்து பெரும்படை ஒன்றைத் திரட்டிக்கொண்டு டேசியாவின்மீது படையெடுத்தார். ஆனால், அங்கு அவர் தோல்வியுற்றுப் பின்வாங்கினார். இரண்டு மூன்று ஆண்டுகளுக்குப் பிறகு மற்றொரு ரோமானியப் படையானது டெட்டியஸ் ஜூலியானஸ் (Tettius Julianus) என்பாரின் தலைமையில் மீண்டும் டேசியாமீது படையெடுத்து, டெசிபால ஸைத் தோற்கடித்தது.

பின்னர் டெசீபாலஸால் தூண்டப்பட்ட சூபி (Suebi), க்வாதி (Quadi), மார்க்கோமன்னி (Marcomanni) போன்ற ஜெர் மானியக்குலங்களின் ஊடுருவல்களுக்கு முற்றுப்புள்ளி வைப்ப தற்கென்று மத்திய டான்யூப் பிரதேசத்தில் டொமிஷியனே படை ஒன்றை நடத்திச் சென்றார். ஆனால், அவர் தோல்வி யைத் தழுவ வேண்டியதாயிற்று. மீண்டும் அவர்களைத் தாக்கி அவர் வெற்றி பெற்றிருக்க முடியும். ஆயினும், இப்போர்களி னால் வீண் செலவுகள் பெருகுவதை அவர் தடுக்க விரும்பி கி.பி. 89-ல் டெசிபாலஸுடன் உடன்படிக்கை ஒன்றைச் செய்து

கொண்டார். அதன்படி டேசியாவில் டெசிபாலஸுக்கு முழு ஆட்சியுரிமையும் அளிக்கப்பட்டது. அதற்கீடாக அவர் ரோமுக்கு நண்பனாக இருக்கவும், அதற்கெதிராக எந்த நடவடிக்கையிலும் ஈடுபடாம லிருக்கவும் இணங்கினார். டான்யூப் நதியைக் கடந்துவரும் ஊடுருவல்கள் நடத்துவதைத் தடுப்பதற்கென அதன் கரைகளில் பல படை முகாம்களை அமைத்து, பெரும்படைகளை அங்கு நிறுத்தி வைத்தார் டொமீஷியன். அவர் கோட்டைகளையும் அரண்களையும் நிறையக்கட்டினார். மோசியாவை 'சூப்பீரியர்', 'இன்பீரியர்' (Superiur, Inferior] என்று இரு மாநிலங்களாகவும் பிரித்தார்.

யூப்ரட்டீஸ் எல்லை : பார்த்தியாவுக்கும் ஆர்மினியாவுக்கு மிடையில் நீரோ ஏற்படுத்தியிருந்த நல்லுறவுகள் நீடித்த போதிலும் வெஸ்பாசியனின் காலத்தில் ஒரு சிறிய தகராறு தோன்றியது. விட்டெலியஸுக்கு எதிராக வெஸ்பாசியனை ஆதரித்து ஒரு படையை அவருக்குக் கொடுத்து உதவியிருந்தார் வலோஜெஸிஸ் (Vologeses) என்ற பார்த்திய மன்னர். பின்னர், கி.பி. 75-ல் பார்த்தியாவுக்குள் ஊடுருவல்கள் செய்த ஆலன்கள் (Alans) என்ற நாடோடிகளுக் கெதிராகத் தன்னோடு சேர்ந்து போரிடும்படி வெஸ்பாசியனை அவர் வேண்டினர். ரோமப் பேரரசர் இதற்கு இணங்க மறுக்கவே வேற்றுமைகள் தலை தூக்கின. எனவே, கி.பி. 76-ல் சிரியாவின்மீது படையெடுக்கப் போவதாகப் பார்த்திய மன்னர் அச்சுறுத்தினர். சிரியாவின் கவர்னராக அப்பொழுது இருந்தவர், பிற்காலத்திய பேரரசர் டிராஜனின் தந்தையான உலப்பியஸ் ட்ரையானஸ் (Ulpins Traianus) என்பவர். அவரும் அப்படையெடுப்பைச் சமாளிப்பதற்கு வேண்டிய எதிர் நடவடிக்கைகளை மேற்கொண்டார். எனவே, பார்த்தியாவின் படையெடுப்பு தோல்வியுற்றது. அதன்பின் ரோமுக்கும் பார்த்தியாவுக்கு மிடையில் முப்பத்தைந்து ஆண்டுகள் சமாதானம் நீடித்தது.

யூப்ரட்டீஸ் பிரதேசத்தின் மையத்தில் கொம்மஜீன் (Commagene), ஆர்மீனியா மைனர் (Armenia Minor) ஆகிய இருசிற்றரசுகள் வாழ்ந்து வந்தன. யூப்ரட்டீஸ் நதிவரை பேரரசின் எல்லைகளை விரிவுபடுத்த விரும்பிய வெஸ்பாசியன் அவ்விரு அரசுகளையும் கி.பி. 72-ல் கைப்பற்றிக் கொண்டார். ரோமானியப் படைகள் அங்கு நிறுத்தப்பட்டதோடு சிரியாவுடனும் அவற்றை இணைக்கும் சாலைகளும் அமைக்கப் பெற்றன.

மாநிலங்களின் செழிப்பு : பிளேவிய மன்னர்களின் ஆட்சியில் ரோமானியப் பேரரசின் மாநிலங்கள் செழிப்புமிகுந்து

விளங்கின. கி.பி. 69-ல் உள்நாட்டுப் போரின்போது விட்டெலியஸ், வெஸ்பாசியன் ஆகிய இருவருமே தமக்கு வேண்டிய படைகளையும் மற்றப் பொருள்களையும் பெறுவதற்காக மாநிலங்களையே கசக்கிப் பிழிந்தனர். வரவுக்குமேல் கூடிப் போயிருந்த செலவினங்களைச் சமாளிப்பதற்கென்று மாநிலங்கள்மீது ஆரம்பத்தில் ஏராளமான வரிகளை விதித்தார் வெஸ்பாசியன். இக்காரணங்களால் அவற்றின் பொருளாதாரம் பாதிக்கப்பட்டது. எனினும், அம்மன்னர்களின் காலத்தில் நிலவிய அமைதி இந்த இழப்புக்களுகெல்லாம் ஈடு செய்தது. மேலும், உள்நாட்டுப்போர் இத்தாலியிலேயே நடைபெற்றதால் மாநிலங்களின் பொருளாதாரம் அதிகம் சீர்குலையவில்லை. ஃபிளேவிய மன்னர்களின் நல்ல நிர்வாகம் மாநிலங்களில் பொருளாதாரம் சீர்பட உதவியது.

ஃபிளேவிய மன்னர்களின் காலத்தில் மாநிலங்களில் அதிக குடியேற்றங்கள் ஏற்படுத்தப்படவில்லை. அதே சமயம் மாநில மக்களில் பலருக்குக் குடியுரிமைகள் அளிக்கப்பட்டன. கி.பி. 73-74-ல் ஸ்பானிய தீபகற்பத்திலிருந்த நகரங்கள் அனைத்துக்கும் லத்தீனியக் குடியுரிமையை அளித்தார் வெஸ்பாசியன். ஸ்பெயின் ஏற்கெனவே வெகு துரிதமாக ரோமானிய மயமாகி வந்ததை இது காட்டியது. அந்நகரங்களின் தலைவர்கள் ரோமின் அரசியலிலும் நிர்வாகத்திலும் அதிகாரிகளாகப் பெரும் பங்கு ஆற்றத் துவங்கினர். பல ஸ்பானியர்கள் செனேட்டில் உறுப்பினர்களாகவும் இருந்தனர்.

'ஐந்து நல்லரசர்கள்', கி.பி. 96-180 :

பேரரசர் நெர்வா : கி.பி. 96-98 பிரேட்டோரியக் காவற் படையின் தளபதிகளில் ஒருவரான பெட்ரோனியஸ் செக்கண்டஸ் (Petronius Secundus) என்பவர், டொமீஷியாவுக்கு உடந்தையாக இருந்து வந்தார். டொமீஷியனை ஆதரித்து வந்த பிரேட்டோரியக் காவற்படையானது அவரது கொலைக்குப்பின், கிளர்ந்தெழாமல் இவர் பார்த்துக்கொண்டார். இங்ஙனம் முதல் முறையாகக் காவற் படையின் வற்புறுத்தல் இல்லாமல் பேரரசரைத் தேர்ந்தெடுக்கும் வாய்ப்பு செனெட்டர்களுக்குக் கிடைத்தது. அவர்கள் தமக்குள் ஒருவரான கோச்சேயஸ் நெர்வா (M. Cocceius Nerva) என்பவரை அடுத்த பேரரசராக்கினர். டொமீஷியனை வெறுத்தவர்களில் நெர்வாவும் ஒருவர்; 'டொமீஷியாவின் சதியில் அவருக்கும் பங்கு இருந்திருக்க வேண்டும்' என்று சிலர் கருதுகின்றனர்.

பேரரசராகப் பதவியேற்ற பொழுது நெர்வா மிகவும் வயது முதிர்ந்தவராக இருந்ததால் நீண்ட அரசியல் அனுபவத்தை அவர் பெற்றிருந்தாலும் நிர்வாகத்தை நல்ல முறையில் நடத்தவோ அல்லது தமது திறமைகளை வெளிப்படுத்தவோ வேண்டிய வாய்ப்போ அவகாசமோ அவருக்கு இல்லாமற் போயிற்று. அவர் அரசரான சில மாதங்களிலேயே பெட்ரோனியஸ் செக்கண்டஸுக்கு விரோதமாகக் கிளம்பிய பிரேட்டோரியக் காவற்படை டொமீஷியனின் கொலையில் அவரும் சம்மந்தப்பட்டிருந்ததால் அவரைச் சிரச்சேதம் செய்யவேண்டுமென்று கோரியது. அப்படையின் மற்றொரு தளபதியான கேஸ்பேரியஸ் ஏலியானஸ் (Casperius Aelianus) என்பவரின் தூண்டுதலே இதற்குக் காரணம் என்று சிலர் சொல்கின்றனர். இறுதியில் படையினரின் கோரிக்கைக்குப் பேரரசர் இணங்க வேண்டிய தாயிற்று (கி.பி. 97).


'படையின் ஆதரவு இருந்தால்தான் காவற்படையின் தலையீடுகளிலிருந்து தப்பமுடியும்' என்று கருதினர் நெர்வா. எனவே, மேல் ஜெர்மெனியில் படைத்தலைவராயிருந்த உல்ப்பியஸ் என்பவரைத் (சிரியாவில் கவர்னராயிருந்த உல்ப்பியஸ் டிரையானஸின் புதல்வர் இவர்) தனது வாரிசாக நியமித்து, நிர்வாகத்தையும் தன்னோடு பங்கேற்று நடத்துமாறு செய்தார். இந்த டிரையானஸ்தான் பின்னர் டிராஜன் (Trajan) என்று அழைக்கப்பட்டார். அவரது படை ஆதரவைக் கொண்டு மேலும் ஓராண்டுக் காலம் ஆண்டு கி.பி. 98-ல் உயிர் நீத்தார் நெர்வா.

டிராஜன்: கி.பி. 98–117, டிராஜன் இவ்வாறு பேரரசரானது பிந்திய அரசர்களுக்கு முன்னுதாரணமாக விளங்கியது. நெர்வா காட்டிய வழியைப் பின்பற்றி அடுத்த மூன்று பேரரசர்களும் திறமை மிக்க ஆட்களைத் தமது வாரிசுகளாக நியமித்து நிர்வாகத்தில் அவர்களை ஈடுபடுத்தி வந்தனர். இதனால், சுமார் ஒரு நூற்றாண்டுவரை வாரிசுரிமை பற்றிய சிக்கல்கள் ரோமப் பேரரசில் எழா தொழிந்ததோடு ஐந்து திறமை மிக்க "நல்லரசர்கள்" ரோமப்பேரசை ஆளவழி ஏற்பட்டது.

டிராஜன் ஒரு சிறந்த, திறமைமிக்க, படையினரால் மதிக்கப்பட்ட தளபதியாக விளங்கினர். எனவே, வேறுபல அரசர்களைப் போன்று, படையினரின் ஆதரவைப் பெறுவதற்காகப் பொன்னையோ பொருளையோ அவர்களுக்கு வாரி வழங்க வேண்டிய அவசியமில்லாது போயிற்று. அதே சமயம் டொமீஷியனைப்போல் யாரையும் மதியாமல், தன்னிச்சைப்படி ஆளும் இயல்பையும் டிராஜன் பெற்றிருக்கவில்லை. எல்லோரிட

ஹோட்டியனின் காலத்தில் பேரரசு
கருங் கடல்
எகிப்து
அரேபியா
பிரிட்டானியா
ஜெர்மானியா
டேசியா
மொசியா
திரேஸ்
மாசிடோனியா
எபைரஸ்
தெஸ்ஸலி
அக்கேயா
கிரீட்
சைப்ரஸ்
பாலஸ்தீனா
சிரியா
மெசபடோமியா
அர்மீனியா
காஸ்பியன் கடல்
பார்த்தியா
பாபிலோனியா
அசிரியா
ஆப்பிரிக்கா
நுமீடியா
மாரிட்டேனியா
ஸ்பெயின்
கால்
பிரான்ஸ்
ரைன் நதி
டானூப் நதி
நைல் நதி
யூப்ரடீஸ் நதி
டைபர் நதி

மும் பொறுமையையும் மரியாதையையும் காட்டி வந்தார். செனேட்டைப் பல சமயங்களிலும் கலந் தாலோசித்தார். செனேட்டும் அவரை ஆதரித்து, மேலும் புதிய பட்டங்களையும் அதிகாரங்களையும் அவருக்கு அளித்தது. தூரத்து உறவினரான ஏலியஸ் ஹேட்ரியானஸ் (Aelius Hadrianus) என்பவரைத் தனது வாரிசாக அவர் நியமித்து, நிர்வாகத்தில் பயிற்சியும் அளித்துவந்தார்.



ஹேட்ரியன்: கி.பி. 117–138, ஏலியஸ் ஹேட்ரியானஸ் தான் ஹேட்ரியன் (Hadrian) என்று சுருக்கமாக அழைக்கப் படுகிறார். ரோமப் பேரரசை ஆண்ட திறமைமிக்க மன்னர்களில் இவரும் ஒருவர். ஜூலியஸ் சீசரோடு ஒப்பிடும் அளவுக்குத்

திறமை படைத்தவராக விளங்கினர். படை வீரர்களும் குடி மக்களும் இவரைப் பெரிதும் மதித்துப் போற்றினர். ஆயினும், (சீசரைப் போல இவருக்கும் பகைவர்கள் பலர் இருந்தனர். இவற்றையெல்லாம் பற்றியும், இந்த ஐந்து அரசர்களின் காலத்து நிகழ்ச்சிகளையும் நிர்வாகத்தையும் பற்றியும் பின்னர் பார்ப்போம்.)

அவர் தமது மரணத்துக்கு இரண்டு ஆண்டுகளுக்கு முன்னால் சியோனியஸ் கம்மோடஸ் வெரூஸ் (L. Ceionius Commodus Verus) என்ற ஒரு இளைஞரைத் தனது வாரிசாக நியமித்தார். நோயில் வாடிய நோஞ்சானான அந்த இளைஞர் நல்ல வேளையாக அடுத்த ஆண்டிலேயே இறந்துபோனார். எனவே, வேறு ஒருவரை வாரிசாக்க வேண்டிய அவசியம் ஏற்பட்டது. அனுபவமும் வயதும் முதிர்ந்த, செல்வாக்கு மிக்க அவுரேலியஸ் அன்ட்டோனியஸ் (T. Aurelius Antonius) என்ற செனேட்டர் வாரிசாக நியமிக்கப்பட்டார். ஆறு மாதத்துக்குப் பிறகு ஹேட்ரியன் இறந்ததும் அன்ட்டோனியஸ் அரசரானார்.

அன்ட்டோனியஸ், கி.பி. 138—161 : குண இயல்புகளிலும் திறமையிலும் நெர்வாவை ஒத்தவராக விளங்கினர் புதிய மன்னர். அமைதியான சுபாவத்தைப் பெற்றிருந்த அவருக்கு பயஸ் (Pius) என்ற பொருத்தமான பட்டத்தைச் சூட்டியது செனேட். அவர் அரியணை யேறியபோதே வயது முதிர்ந்தவராக இருந்தாலும் மிகுந்த திறமையோடு நாட்டை ஆண்டார். அன்ட்டோனியஸுக்கு வயதாகி இருந்த காரணத்தாலும், காலஞ்சென்ற வெரூஸின்மீது இருந்த பிரியத்தாலும், தமக்கு (அன்ட்டோனியஸுக்கு) அடுத்தபடியாக இரண்டு வாரிசு நியமிக்கும்படி அன்ட்டோனியஸைக் கேட்டிருந்தார் ஹேட்ரியன். அவ்வாறு அன்ட்டோனியஸால் தத்துப் பிள்ளைகளாக வளர்க்கப்பட்டவர்களில் வெரூஸின் மகன் ஒருவர்; தம் தந்தையின் பெயர்களையே இவர் தாங்கியிருந்தார். மற்றவர், அன்ட்டோனியஸின் சகோதரர் மகனான மார்க்கஸ் ஆன்னியஸ் வெரூஸ் (Marcus Annius Verus) என்பவர். அன்ட்டோனியஸின் தத்துப் பிள்ளையாக ஆனதும் மார்க்கஸ் ஏலியஸ் அவுரேலியஸ் என்றபெயரை இவர்பெற்றார்.

அவுரேலியஸ், கி.பி. 161—180 ; அன்டோனியஸ் இறந்தபோது இவ்விருவருமே உயிருடனிருந்தனர். ஆயினும், திறமையில் மிகுந்த அவுரேலியஸே அடுத்த அரசராக வேண்டுமென்று பலரும் விரும்பினர். எனினும், தனது தத்துச் சகோதரரான இளைய வெரூஸும் தம்மோடு சேர்ந்து இணை—அரசராக

இருக்க வேண்டுமென்று அவுரேலியஸ் வற்புறுத்தினர். ஆயினும், கி.பி. 169-ல் இளைய வெரூஸ் இறந்ததும் அவுரேலியஸ் மட்டுமே தனியாகப் பேரரசராக ஆண்டார். திறமையோ செல்வாக்கோ இல்லாத காரணத்தால் உயிருடனிருந்தபோதும் இளைய வெரூஸ் நிர்வாகத்தில் அதிக பங்கெடுத்துக் கொள்ளவில்லை. எனவே, கி.பி. 161 முதல் 130 வரை அவுரேலியஸே உண்மையில் பேரரசை ஆண்டுவந்தார்.

'ஸ்டாயிக்' (Stoic) தத்துவத்தை ஏற்றுக்கொண்டிருந்த அவுரேலியஸ் நிர்வாகப் பிரச்சனைகளையும், அயல்நாட்டுக் கொள்கையில் போர்களையும் சமாக்காமல், மனந்தளராமல் ஏற்றுச் சமாளிக்கக்கூடிய உறுதியைப் பெற்றிருந்தார்.

'நல்லரசர்களின்' நிர்வாகம்

செனேட்டுடன் உறவுகளும் ஆட்சிமுறையும்: முன்பு டொமீஷியனுக்கும் செனேட்டுக்கும் இடையில் இருந்து வந்த பகைமை இந்த 'ஐந்து நல்லரசர்களின்' காலத்தில் காணப்படவில்லை. செனேட்டர்களும் அரசர்களும் மனமொத்து இயங்கிவந்தனர். நிர்வாகம்பற்றிய எல்லா விஷயங்களிலும் செனேட்டைக் கலந்து ஆலோசித்து அதன் விருப்பத்தை அறிந்து, அதன் ஒப்புதலையும் பெற்றே சட்டங்களையும் இம்மன்னர்கள் இயற்றி வந்தனர். அதேபோல் சமாதான உடன்படிக்கைகளும் செனேட்டின் ஒப்புதலுக்குச் சமர்ப்பிக்கப்பட்டன. 'செனேட்டின் விசாரணையில்லாமல் எந்தச் செனெட்டருக்கும் மரணதண்டனை விதிப்பதில்லை' என நெர்வா, டிராஜன், ஹேட்ரியன் ஆகியோர் உறுதி கூறினர். மீண்டும் செனேட்டர் இவ்வாறு பெருமையோடு வாழத் தொடங்கினர். செனேட்டுக்கு வந்த இப்புதிய வாழ்வைத்தான் பல எழுத்தாளர்கள் மகிழ்ந்து கொண்டாடினர். சான்றாக, மீண்டும் ரோமப் பேரரசில் சுதந்திர வாழ்வை நிறுவியதற்காக டிராஜனைப் புகழ்ந்து பாராட்டினார் இளைய பிளினி (Pliny the Younger). அரசரது அதிகாரத்தோடுகூடச் சுதந்திரத்துக்கும் வழி செய்ததற்காகப் பேரரசர் நெர்வாவுக்கு நன்றி செலுத்தினர் டேசிட்டஸ் (Tacitus). ஒரு சில செல்வந்த செனேட்டர்களுக்கு மீண்டும் அதிகாரத்தையும் செல்வாக்கையும் அளித்தது, பேரரசில் சுதந்திரத்தை நிறுவியதாக இவர்களுக்குப்பட்டது போலும்!

செனேட்டுடனும் மற்ற செல்வந்தர்களுடனும் இப்பேரரசர்கள் சமரசமாகப் போனதால், இவர்களைக் கவிழ்ப்பதற்கான சதிகள் அதிகம் நடைபெறவில்லை. ஆயினும், ஹேட்ரி

யனின் ஆட்சியில் துரோகக்குற்றத்துக்காகச் சில உயர்ந்த மனிதர்கள் மரண தண்டனை அடைந்தனர்; கி.பி. 118-ல் பேரரசர் டிராஜன் ரோமில் இல்லாத நேரம் பார்த்து அவருக்கு மிகவும் நெருங்கிய நான்கு பேர்களுக்கு மரணதண்டனை அளித்து நிறைவேற்றியது செனேட். திரும்பி வந்த பேரரசர் செனேட்டை இச்செயலுக்காகக் கடிந்து கொண்டாரே தவிர, வேறென்றும் செய்யவில்லை. கி.பி. 175-ல் அவுரேலியஸ் இறந்துவிட்டதாகத் தவருகக் கேள்விப்பட்டு, அடுத்த பேரரசராகத் தன்னைப் பிரகடனப்படுத்திக்கொண்டார் அவிடியஸ் கேசியஸ் (Avidius Cassius) என்ற கவர்னர். ஆனால், அவரது துருப்புக்கள்கூட அவரை ஆதரிக்க மறுத்துவிட்டன. இவ்வாறு செனேட்டுடன் ஒத்துப்போனதால் இம்மன்னர்களின் ஆட்சியில் சதியோ, படைக்கலகங்களோ அதிகம் நடைபெறவில்லை. அவ்வாறு நடைபெற்ற ஒன்றிரண்டு நிகழ்ச்சிகளும் விதிவிலக்கே தவிர வேறில்லை.

அதே நேரத்தில் இப்பேரரசர்கள் தமது அதிகாரங்களை விட்டுக்கொடுக்கவும் இல்லை. ஃபிளேவிய மன்னர்கள் அனுபவித்த அதிகாரங்கள் அனைத்தையும் இவர்களும் அனுபவித்தனர். அவர்களைப்போல் சென்சார் பதவியை வகிக்கவில்லை என்றாலும், சென்சாரின் அதிகாரங்களை இவர்கள் அனுபவித்தனர். டிராஜனும், அவரை அடுத்துவந்த அரசர்களும் ஆசியா மைனர் போன்ற பல கிழக்கு மாநிலங்களைச் சேர்ந்த கோடீஸ்வரர்களுக்கும் செனேட்டில் இடமளித்தனர். இவ்வாறு செனேட்டில் உறுப்பினர்களானவர்களில் பலர் கிரேக்கர்கள். இரண்டாம் நூற்றாண்டின் இறுதிவாக்கில் ரோமானிய செனேட்டில் கிட்டத்தட்ட எல்லா மாநிலங்களையும் சேர்ந்த செல்வந்தர்களும் உறுப்பினராகி இருந்தனர். ஆனால், அச்சபை பழைய செல்வாக்கை இழந்து மன்னர்களுக்கு உயர் அதிகாரிகளைப் பெற்றுத்தரும் மன்றமாகவே விளங்கியது.

கி.பி. இரண்டாம் நூற்றாண்டில் அரசப்பணித் துறையானது (Civil Service) மேலும் வளர்ச்சியுற்றது. அரண்மனையைச் சேர்ந்த விடுதலைபெற்ற அடிமைகள் உயர் நிர்வாகப் பதவிகளில் அமர்த்தப்படுவது சிறிது சிறிதாகக் குறைந்துபோயிற்று. செனேட்டர்களுக்கென்று ஒதுக்கி வைக்கப்படாத பதவிகளில் ஈக்வைட்டுகள் பெருமளவில் நியமிக்கப்பட்டு வந்தனர். அதே சமயம் அரசுப்பணித்துறையும் இராணுவப் பணித்துறையும் தனித்தனியாக ஒருதுறையைச் சேர்ந்தவருக்கு அத்துறையிலேயே பதவி உயர்வுகள் அளிக்கப்பட்டன. அரசரது

பணிகள் வளர்ந்து, கடிதப் போக்குவரத்தும் பெருகியது. எனவே, பேரரசர் ஹேட்ரியன் காலத்தில் இலத்தீன் மொழிக் கடிதங்களுக்கென்று வேறொரு பிரிவுக்காக அரசாங்கச் செயலகத்தில் இரு பிரிவுகள் ஏற்படுத்தப்பட்டன. சிவில் வழக்குகளைச் செம்மையாக விசாரிப்பதற்கென்று இத்தாலியை நான்கு நீதிபரிபாலன வட்டங்களாகப் பிரித்தனர். ஒவ்வொரு மாவட்டத்திலும் ஒரு நிரந்தர அதிகாரி நியமிக்கப்பட்டார். அதுவரை ரோமில் பிரேட்டர்கள் விசாரித்துவந்த வழக்குகளை இந்த அதிகாரிகள் விசாரிக்கத் துவங்கினர்.

ரோமில் பிரேட்டர்களும் மாநிலங்களில் கவர்னர்களும் ஆண்டுதோறும் சட்டங்களை வெளியிடுவது வழக்கமாக இருந்தது. அதை விடுத்து நிரந்தரமாகச் சட்டங்களை வகுக்கும் நோக்கத்தோடு சால்வியஸ் ஜூலியானஸ் (Salvius Julianus) என்ற சிறந்த சட்டநிபுணரை ஹேட்ரியன் நியமனஞ்செய்தார். அதன் பயனாகச் சட்டத்தொகுப்பு ஒன்று அவரால் வெளியிடப் பட்டது. சட்ட விளக்கத்தில் கருத்து வேறுபாடுகள் ஏற்படும் போதெல்லாம் ரோமானியச் சட்டங்களை விளக்குவதற்கென்று ஒரு குழுவும் (Consilium Principis) நியமிக்கப்பெற்றது. பெயர் பெற்ற சட்ட நிபுணர்கள் அதில் இடம்பெற்றனர். சட்டங்கள் அனைத்தும் அரசரது ஆணைகள் மூலமாகவே இயற்றப்பட்டன. முன்பெல்லாம் சட்டமியற்றி வந்த கமீஷியா மன்றம் கி.பி. இரண்டாம் நூற்றாண்டுக்குப்பின் கூட்டப்படவே இல்லை.

நிதி நிர்வாகம் : தமக்கு வேண்டியவர்களுக்கெல்லாம் அரசின் கருவூலத்திலிருந்து பொருளை வாரி வாரி வழங்கும் வழக்கத்தை வெஸ்பாசியனும் டொமீஷியனும் நிறுத்தினர். இந்த ஐந்து அரசர்களும் கூட அவர்களது கொள்கைகளையே பின்பற்றினர். எனினும், மற்ற எல்லா விஷயங்களிலும் பணத்தைத் தாராளமாகவே செலவு செய்தனர். அப்பொழுதுதான் செனேட்டர்களும் மற்ற முக்கியமான மனிதர்களும், 'தம்பக்கம் நிற்பர்' என்று இவர்கள் கருதினர். ஒவ்வொரு அரசரும் பதவியேறும்பொழுது பிரேட்டோரியக் காவற்படையினருக்கு நிறைய வெகுமதி அளிக்கும் வழக்கம் இருந்துவந்தது. டிராஜன் இத் தொகையைக் குறைத்துக் கொடுத்தார். ஆனால், அடுத்த இரு அரசர்களும் ஊதாரித்தனமாக அவர்களுக்குப் பெரும் பொருளை வாரிக் கொடுத்தனர். இத்தாலிய நிலச் சொந்தக்காரர்களுக்கு நிரந்தரக் கடன்களாகப் பெருந்தொகைகளை அளித்தார் நெர்வா. அக்கடன்களுக்காக ஐந்து சதவீதவட்டியை ஆண்டு தோறும் அவர்கள் தத்தம் நகரங்களிலிருந்த அரசாங்கக்

கருவூலத்தில் செலுத்தினர். இப்பணம் ஏழைக் குழந்தைகளுக்காகச் செலவிடப்பட்டது. ரோமில் 5000 ஏழைக்குழந்தைகளுக்கு இனமாகத் தானியம் வழங்குவதற்கு ஏற்பாடு செய்தார் டிராஜன். அதே சமயம் வழக்கம்போல் இலட்சக்கணக்கான பிச்சைக்காரர்களுக்கும் உணவளிக்கப்பட்டது. அவர்களுக்கு மதுவும் எண்ணெயும்கூடக் கொடுத்தார் டிராஜன். அடுத்து வந்தவர்கள் இந்த வகையில் மேலும் அதிகமாகச் செலவிட்டனர்.

நல்லரசர் ஐவர் காலத்திலும் ரோமப்பேரரசு செழிப்பாக இருந்தது. உள்நாட்டுக் குழப்பங்கள் இல்லாததும் நல்ல நிர்வாகமுமே இதற்குக் காரணம். டிராஜன் காலத்தில் டேசியா கைப்பற்றப்பட்டு, அதன் அரசரது ஏராளமான செல்வங்கள் அனைத்தும் கவரப்பட்டு ரோமுக்குக் கொண்டுவரப்பட்டன; மேலும், டேசியாவிலிருந்த சுரங்கங்களும் ரோமுக்குச் சொந்தமாயின. இவ்வாறு ஏராளமான செல்வம் ரோமுக்குக் கிடைத்தது. வரிகளும் ஓரளவு குறைக்கப்பட்டன. ஆயினும், டிராஜனின் காலத்தில் துவக்கப்பட்ட ஆக்கிரமிப்புப் போர்களுக்குத் தேவையான பணத்தை மாநிலங்களின்மீது புதிய வரிகளைச் சுமத்தியே பெறவேண்டியிருந்தது. மார்க்கோமன்னிகளுடனான போர்களின்போது அவுரேலியஸ் தமது நகைகளை விற்றும், நாணயத்தின் தரத்தை 25 சதவீதம் குறைத்தும் பொருள் திரட்டினர். இருப்பினும் ரோமப் பேரரசின் வழக்கமான நிர்வாகச் செலவுகளுக்கு வேண்டிய பணம் அதன் கருவூலத்தில் எப்பொழுதும் இருந்தே வந்தது.

''நல்லரசர்கள்'' காலத்தில் மாநிலங்கள்:

மாநில நிர்வாகம்: இரண்டாவது நூற்றாண்டில் தான் ரோமானியப் பேரரசில் நகரங்களின் எண்ணிக்கை பெருகி இருந்தது. அரசாங்கத்தின் முயற்சியில் நகரங்கள் (குடியேற்றங்கள்) நிறுவப்படுவது நின்று போயிற்று. டிராஜன் திரேசில் நிறுவிய பல குடியேற்றங்களை இதற்கு விதிவிலக்காகவே கருத வேண்டும். பல நகரங்கள் பல்வேறு காரணங்களால் தாமாகவே எழுச்சியுற்றன. போதுமான அளவு ரோமானிய அல்லது கிரேக்கக் காலாச்சாரம் பரவியிருந்த நகரங்களுக்கு 'மூனிசிபல்' உரிமைகளை அல்லது குடியேற்ற உரிமைகளை ரோமாபுரி வழங்கியது. பெரிய நிலப் பிரபுக்கள், செல்வமிக்க வணிகர்கள், தொழிலதிபர்கள் ஆகியோரே அந்நகரங்களில் உண்மையில் ஆதிக்கம் பெற்றிருந்தனர். அவர்களையே அதி

காரிகளாகவும் நகரவை உறுப்பினர்களாகவும் செனேட்டும் மாநிலக் கவர்னர்களும் நியமித்து வந்தனர். அந்நகரங்களில் ரோமின் படைகள் நிறுத்திவைக்கப்பட்டன. நகரங்களின் நிர்வாகம் அனைத்தையும் அரசரும் செனேட்டும் அடிக்கடி மேற் பார்வை செய்து வந்தனர். சான்ருக, கிரீஸ், ஆசியா மைனர் முதலிய பலவிடங்களில் இருந்த நகரங்களின் நிதிநிலைமையைச் செப்பனிடுவதற்கும் பல அதிகாரிகளை டிராஜன் நியமித்தார்.

ஹேட்ரியன் மாநிலங்களைச் சுற்றிப் பார்ப்பதற்கென்று பயணங்களை மேற்கொண்டார். அவர் கி.பி. 121–126-ல் ரைன் பகுதி, டான்யூப் பிரதேசம், பிரிட்டன், ஸ்பெயின், மாரிட்டே னியா, ஆப்பிரிக்கா, ஆசியா மைனர், கிரீஸ் ஆகிய விடங் களுக்குச் சென்று வந்தார். அதேபோல் கி.பி. 129–134-ல் தமது கிழக்கு மாநிலங்களில் எகிப்துவரை பயணம் செய்து திரும்பினர். அவரது இருபத்தோராண்டு ஆட்சிக் காலத்தில் பாதிக்குமேல் இத்தகைய பயணங்களில், இத்தா லிக்கு வெளியிலேயே கழிந்தது. அவருக்குப்பின் அரசரான அன்ட்டோனியஸ் இத்தாலியை விட்டு அப்பால் செல்லவே இல்லை. ஆனல், அவுரேலியஸ் டான்யூப் பிரதேசத்தை அடிக் கடி சென்று பார்வையிட்டுத் திரும்பியதோடு, கிழக்கு மத்திய தரைக்கடல் மாநிலங்களிலும் கி.பி. 175–76-ல் சுற்றுப் பயணம் செய்தார். முன்பு எப்பொழுதையும் விட அதிகமாகத் தம்து மாநிலங்களில் இம்மன்னர்கள் கவனம் செலுத் தினர் என்பது குறிப்பிடத்தக்கது.

டிராஜனும் அவருக்குப் பின் பதவியேற்ற பல அரசர்களும் மாநிலங்களில் பிறந்தவர்கள் என்பது இதற்கு ஒரு காரணமாக இருக்கக்கூடும். தென் ஸ்பெயினில் இத்தாலிக்கா (Italica) என்ற ஒரு நகரில் பிறந்தவர் டிராஜன். ஹேட்ரியனின் குடும் பமும் அந்த ஊரையே சேர்ந்தது. அதேபோல் தெற்கு ஸ்பெயினில் கார்டூபா (Corduba) நகரில் பிறந்தவரே அவுரே லியஸ். அன்ட்டோனியஸ் நார்போனீஸ் கால் (Norbonese Gaul) பகுதியைச் சேர்ந்தவர். இவர்கள் டான்யூப் பிரதேசத்தி லும் கிழக்கு மாநிலங்களிலும் லத்தீனியக் குடியுரிமையை நகர மக்களுக்கு வழங்கினர். இதற்குப் பின்னரே மூன்றும் நூற் றாண்டில் பேரரசில் வாழ்ந்த எல்லா சுதந்திர மனிதர்களுக்கும் ரோமானியக்குடியுரிமை வழங்கப்பட்டது.

ஆப்பிரிக்காவிலும் ஆசியாவிலும் ஆக்கிரமிப்புக்கள் : மாரிட்டேனியா ஏற்கெனவே ரோமப் பேரரசில் இணைந்

திருந்தபோதிலும் அதன் கடற்கரைப் பகுதிகளில் மட்டுமே ரோமின் ஆதிக்கம் நடைபெற்று வந்தது. உட்பகுதியில் குன்றுகளில் வசித்துவந்த சுதேசிகள் சமவெளிப் பகுதிகளின் மீது அடிக்கடி தாக்குதல்கள் நடத்தி வந்தனர். இவர்களை விரட்டியடித்து அவர்களது பிரதேசங்களையும் கைப்பற்றுவதற்கென்று கி.பி. இரண்டாம் நூற்றாண்டில் ரோமானியர் பல தாக்குதல்களை நடத்தினர். கி.பி. 123-ல் மாரிடேனியாவுக்குச் சென்ற பேரரசர் ஹேட்ரியன் அட்லாஸ் பீடபூமி (Atlas Plateau) வரையில் தமது ஆதிக்கத்தை விரிவுபடுத்துவதற்காகப் போர் முயற்சிகளை மேற்கொண்டார். ஆயினும், சுதேசிமக்களும், மேற்குச் சஹாராவில் வாழ்ந்த வேறுபல குலங்களும் ஒன்று சேர்ந்துபேரரசர்களின்முயற்சிகளுக்கெதிராக விடாமல்போராடி வந்தனர். கி.பி. 144, 152 ஆகிய ஆண்டுகளில் இவர்களுக்கும் ரோமானியப்படைகளுக்கு மிடையில் பலகைகலப்புக்கள் நடந்தன. அதேபோல் கி.பி. 170-க்கும் 176-க்குமிடையிலும் மோதல்கள் ஏற்பட்டன. அவர்கள் ஸ்பெயினைக்கூடத் தாக்கினர். இருப்பினும் ரோமின் வலிமைக்கு முன்னால் அவர்களால் பெரியதாக எதையும் சாதிக்க முடியவில்லை.

அதேபோல் கி.பி. இரண்டாம் நூற்றாண்டில் ஆப்பிரிக்க மாநிலத்தின் மேற்கு, தெற்கு எல்லைகள் விரிவு படுத்தப்பட்டன. ஹேட்ரியன் காலத்தில் இத்திசையிலும் ரோமின் ஆக்கிரமிப்பு முயற்சிகள் தீவிரமடைந்தன.

டிராஜனின் காலத்தில் ஆசியாவிலும் பலபிரதேசங்கள் வெல்லப்பட்டன. ஆனால், ஹேட்ரியனின் காலத்தில் இவற்றை ரோம் இழந்தது. கி.பி. 105-ல் நெபடேய அராபியர்களின் (Nabataen Arabs) அரசையும் டிராஜன் கைப்பற்றினர். 'அராபியா' என்ற பெயரில் ஒரு புதிய மாநிலமாக அது அமைக்கப்பட்டது. அதன் வடகோடியில் தாமஸ்கஸைச் (Damescus) சுற்றியிருந்த பிரதேசமானது சிரியாவுடன் இணைத்துக் கொள்ளப்பட்டது.

யூப்ரட்டீஸ் நதிக்கு அப்பாலும் ரோமின் கிழக்கு எல்லைகளை விரிவு படுத்த டிராஜன் திட்டமிட்டார். ஆர்மீனியாவில் 'யார் அரசராவது' என்ற கேள்வி ஒன்று எழுந்தது. அதில் பார்த்திய மன்னரான சோஸ்ரோஸ் (Chosroes) என்பவருக்கும் ரோமுக்குமிடையில் முரண்பாடுகள் ஏற்பட்டன. இந்நிலையில் கி.பி. 114-ல் ஆர்மீனியாவை ரோமின் மாநிலமாக ஆக்கிக் கொண்டார் டிராஜன். அகஸ்டஸின் காலத்தில் வகுக்கப்பட்ட யூப்ரட்டீஸ் எல்லையானது ஓரியற்கை எல்லை. ஆனால், அதையும் கடந்து கிழக்கே சென்றதால், மற்றொரு இயற்கை

எல்லையைப் பெறுவதற்காக மெசபெடேமியாவையும் (Mesopotamia) கைப்பற்றுவது அவசியமாயிற்று. எனவே, பார்த்தியாவுக்குள்ளும் படையெடுத்து, அதற்கு அடங்கிய சிற்றரசர்களால் ஆளப்பட்டு வந்த மேற்கு மெசபடோமியாவையும் கைப்பற்றின ரோமானியப் படைகள். பின்னர் யூப்ரட்டீஸ் டைகிரீஸ் (Tigris) ஆகிய இரு நதிகளின் கரையோரமாக இரு ரோமானியப் படைகள் சென்று சோஸ்ரோஸின் குளிர்காலத் தலைநகரமான டெசிபோன் (Ctesiphon) நகரையும் கைப்பற்றின. செலூசியாவுக்கு (Seleucia) எதிராக டைகிரிஸ் நதியின் கரையில் அமைந்த அந்நகரம் வீழ்ந்ததும் பார்த்திய மன்னர் தப்பி ஓட வேண்டியதாயிற்று. டைகிரிஸ் நதியில் கப்பலேறிப் பாரசீக வளைகுடாவில் வந்திறங்கிய டிராஜம் தமது வெற்றியை அங்குக் கொண்டாடினர். (கி.பி. 115-116) அவர் டெசிபோனையும் பாபிலோனியாவையும் (Babylonia) சோஸ்ரோஸின் பிள்ளைகளில் ஒருவரான பார்த்தமாஸ் பேட்டிஸ் (parthamas pate) என்பவருக்குக் கொடுத்துவிட்டு, மத்திய, வடக்கு மெசபடேமியாவை மட்டும் தானே எடுத்துக்கொண்டார்.

ஆனால், விரைவிலேயே ரோமின் ஆதிக்கத்துக்கு எதிராக அங்குக் கிளர்ச்சிகள் தோன்றின. செலூசியா போன்ற பல நகரங்கள் கிளர்ச்சி செய்து ரோமின் பிடியிலிருந்து விடுபட்டன. பார்த்திய மன்னரது ஆதரவோடு யுதேயாவிலும் (Judae) ஒரு கலகம் தோன்றியது (கி.பி. 117). டிராஜன் எதிர்த்தாக்குதல் தொடுத்து யூப்ரட்டீஸ் நதியை மீண்டும் கைப்பற்றினர். ஆனால், மற்ற பகுதிகளையும் கைப்பற்றுவதற்குமுன் அவர் இறந்து போனர். கிழக்கில் ஆக்கிரமிப்புக் கொள்கையும் அவரோடு இறந்துவிட்டன.

கிழக்கில் வலுத்தாக்குதல்களை நடத்துவதற்கென்று டிராஜன் பல்வேறு முனைகளிலு மிருந்த துருப்புக்களைத் தருவித்திருந்தார். இதனால், அம்முனைகளில் ஆபத்து ஏற்படக்கூடும் என்பதையும், யூப்ரட்டீஸ் எல்லையே இயற்கையானது என்பதையும், அதற்கு அப்பால் ஆக்கிரமிப்புக்கள் நடத்தினால் போர்களுக்கு முடிவு இருக்காது என்பதையும் உணர்ந்தார் ஹேட்ரியன். எனவே, அவர் சோஸ்ரோஸிடம், (அன்னரிடமே) பழைய அரசை மீண்டும் ஒப்புவித்தார்; பார்த்தமாஸ் பேட்டிஸுக்கு ஆர்மீனியாவை வழங்கினர். கி.பி. 130-ல் பார்த்தியாவுக்குச் சென்று சோஸ்ரோஸை நேரில் சந்தித்தார். இவ்வாறு இரு அரசுகளுக்குமிடையில் நல்லுறவுகள் ஏற்பட்டன.

ஆனால், கி.பி. 155-ல், புதிய பார்த்திய அரசரான முன்றும் வலோஜெஸிஸ் என்பவர் ஆர்மீனியாமீது தாக்குதல் தொடுத்தார். ஆனால், ரோம் விடுத்த எச்சரிக்கையை மதித்து உடனே தமது படைகளை அவர் விலக்கிக் கொண்டார். கி.பி. 161-ல் மீண்டும் ஆர்மீனியாவின்மீது தாக்குதல் தொடுத்தார் வலோஜெஸிஸ். கப்படோஷியா, சிரியா ஆகியவற்றின் கவர்னர்கள் அவரை எதிர்த்துத் தோற்றனர். இறுதியில் கி.பி. 163-164-ல் அவிடியஸ், கேசியஸ், ஸ்டேட்டியஸ் பிரிஸ்கஸ் (Statius priscus) ஆகியோரது தலைமையில் பெரிய ரோமானியப் படை சென்று, முன்பு டிராஜன் செய்ததைப்போல, ஆர்மீனியாவையும் மெசபெடேமியாவையும் கைப்பற்றின. கி.பி. 163-ல் ஆர்மீனியாவின் தலைநகரான ஆர்ட்டாக்காடாவைக் (Artakata) கைப்பற்றித் தீக்கிரை யாக்கினர் பிரிஸ்கஸ். அடுத்த ஆண்டில் அவர் செலூசியாவையும் டேசிபோனையும் கைப்பற்றி அழித்தார். முடிவில் கி.பி. 165-ல் வலோஜெஸிஸ் வழிக்கு வந்தார். 'ஆர்மீனியாவில் தலையிடுவதில்லை' என்று அவர் உறுதி கூறினர். பார்த்தியாவின் கட்டுப்பாட்டிலிருந்து விடுபட்ட மேற்கு மெசபெடேமியா ரோமின் மேலாதிக்கத்துக்குக் கட்டுப்புட்ட ஒரு தனி அரசாக ஆயிற்று. இவ்வாறு யூப்ரட்டீஸ் எல்லையைப் பாதுகாக்க அவுரேலியஸ் பல வித முயற்சிகளில் ஈடுபட்டார்.

யுதேயா : கி.பி. 116-ஆம் ஆண்டில் பாலஸ்தீனம், எகிப்து, சைப்ரஸ், சைரீன் (Cyrene) போன்ற பல விடங்களில் யூதர்கள் கிளர்ச்சி செய்தனர். ரோமானியப் படைகள் — அவர்களை அடக்க முடியாமல் திணறியது. ஆனால், கி.பி. 116-ல் பார்த்தியாவுடனை போர்கள் முடிவுற்றதும் இக்கிளர்ச்சிகளை அடக்குவதில் டிராஜன் முழுகவனம் செலுத்தினர், பாலஸ்தீனம் மீண்டும் கைப்பற்றப்பட்டது; எகிப்து, சைப்ரஸ், சைரீன் ஆகியவற்றில் கலகங்கள் கடுமையாக ஒடுக்கப்பட்டன. பின்னர் ஹேட்ரியனின் காலத்தில் பாலஸ்தீனத்தில் யூதர்கள் மீண்டும் கலகம் செய்தனர். கி.பி. 131 முதல் 134 வரை யூதர்களின் இப் போராட்டங்கள் தொடர்ந்து நடைபெற்றன. பார் கொசேபா (Bar Caceba) என்பவர் அவர்களுக்குத் தலைவராக விளங்கினர். புதிய ரோமானியப் படைகள் பல மாநிலங்களிலிருந்தும் கொண்டுவரப்பட்டு மீண்டும் பாலஸ்தீனமானது கைப்பற்றப்பட்டது. கி.பி. 135-ல் கலகங்கள் முற்றிலும் அடக்கப்பட்டன. எண்ணற்ற யூதர்கள் படுகொலை செய்யப்பட்டனர். ஆண்டுக்கு ஒருமுறை மட்டுமே எருசலத்துக்குச் செல்ல அவர்கள் அனுமதிக்கப்பட்டனர். யூதர்கள் பேரரசின் பல்வேறு இடங்களுக்கும் அவர்கள் சிதறிச் சென்று வாழ்ந்து வந்தனர். அன்டோனி

யஸின் காலத்தில் யூதர்களின்மீது விதிக்கப்பட்டிருந்த பல கட்டுப்பாடுகள் தளர்த்தப்பட்டன. அவர்கள் தங்களது ஆலயங்களுக்கும் பள்ளிகளுக்கும் செல்ல அனுமதிக்கப்பட்டனர்.

டேசியா: டொமீஷியனுக்கும் டெசிபாலஸுக்குமிடையில் ஏற்பட்ட உடன்படிக்கையைப்பற்றி முன்பே பார்த்தோம். விரைவிலேயே பட்டத்துக்கு வந்த டிராஜன் அந்த உடன்படிக்கையைமீறி டேசியாவைக் கைப்பற்ற முடிவு செய்தார். அதற்கென்றே டான்யூப் நதியின் கரையோரமாகப் பன்னோனியாவையும் மோசியாவையும் இணைக்கும் சாலை ஒன்றைக் கார்ப்பேத்திய மலைகளில் "இரும்புக் கதவுக்" கணவாய் (Iron Gate Pass) எனப்படும் கணவாய் வழியாக அமைத்தார். பின்னர், கி.பி. 101-ல் அக்கணவாயைக் கடந்து சென்று டிரான்சில்வேனியாமீது படையெடுத்தார். அதே சமயத்தில் மோசியா இன்பீரியரிலிருந்தும் வேறொரு தாக்குதல் தொடுக்கப்பட்டது. இப்போர் ஓராண்டுக்கும் மேலாக நீடித்தது. இறுதியில் கி.பி. 102-ல் டேசியாவின் தலைநகரான சார்மிசே கெதூசா (Sarmize gethusa) என்ற விடத்துக் கருகில் நடைபெற்ற கடும் போரில், டெசிபாலஸ் தோற்றுச் சரணடைந்தார். டேசியாவின் மன்னராக இருந்துவர அவர் அனுமதிக்கப்பட்டாலும், அவரது கோட்டைகள் பலவற்றில் ரோமானியப்படைகள் நிறுத்தி வைக்கப்பட்டன.

இதை வெறுத்த டெசிபாலஸ் இரண்டு ஆண்டுகள் இரகசிய ஏற்பாடுகளையெல்லாம் செய்து முடித்துத் திடீரென்று ரோமானியப் படைகள் இருந்த கோட்டைகளைத் தாக்கியும் முற்றுகையிட்டும், கி.பி. 105-ல் மோசியாவுக்குள் நுழைந்தார். ரோமானிய வரலாற்றில் நடந்த பெரிய போர்களில் ஒன்றாகக் கருதப்படுகிறது, இந்த இரண்டாவது டேசியப் போர். 120,000 பேர்களைக் கொண்ட தொரு பெரும் படையோடு டெசிபாலஸை எதிர்த்தார் டிராஜன். மோசியாவை விடுவித்து, டான்யூப் நதியைக் கடந்து டேசியாவுக்குள் நுழைந்தது ரோமானியப்படை. தலைநகருக்கருகில் நடந்த இரண்டாவது சண்டையில் டெசிபாலஸ் உயிர் துறந்தார். அவரது படைகள் சரணடைந்தன. கி.பி. 107-ஆம் ஆண்டில் டெசியா ரோமானிய மாநில மாக்கப்பட்டது.

இயற்கையெல்லையாகிய டான்யூப் நதியைக் கடந்து அப்பாலிருந்த பகுதிகளையும் வெல்வதற்கு டிராஜன் செய்த முயற்சிகளால், மேலும் புதிய சிக்கல்களும் சிரமங்களும் செலவுகளுமே ஏற்பட்டன. அகஸ்டஸ் விடுத்து, மேலும் ஆக்கிர

மிப்புக்களை, யூப்ரட்டீஸ் பகுதியில் செய்ததுபோல், இங்கும் செய்தது பெரிய தவருய்ப் போயிற்று. இதை நன்கு உணர்ந் தார் ஹேட்ரியன், டேசியாவைக் கைவிடவும்கூட அவர் ஒரு கணம் எண்ணினர். ஆயினும், டிராஜனின் தூண்டுதலால் அங்குக் குடியேறியிருந்த ரோமானிய மக்களை விட்டுவிட அவருக்கு விருப்பமில்லை. அந்த ரோமானியக் குடியேற்றங்கள் பின்னர் நகரங்களாக வளர்ச்சியுற்றன. டிராஜனின் இப்போர் களுக்குப் பிறகு டான்யூப் பிரதேசத்தில் அறுபது ஆண்டுகள் அமைதி நிலவியது. ஆனால், அவுரேலியஸின் காலத்தில் ஜெர் மானியக் குலங்கள் இப்பிரதேசத்தின் நடுப்பகுதிகளைக் கைப் பற்றிக்கொண்டன.

மார்க்கோ மன்னிகளுடனான போர்கள்: மத்திய டான்யூப் பிரதேசத்தில் மார்க்கோமன்னி (Marcomanni), குவாதி, (Quadi), சூபி (Suebi) போன்ற ஜெர்மானியக்குலங்களுடன் டொமீஷியன் போரிட்டதைப்பற்றி முன்பே பார்த்தோம். டான்யூப் நதியின் வடக்கில் வசித்து வந்த இம்மக்கள் ஜெர் மெனியின் கிழக்கு எல்லைப் புறத்தில் நிலவிய குழப்ப நிலை காரணமாக கி.பி. 150-க்குப் பிறகு டான்யூபின் தென்கரைக்குச் சென்று குடியேற முயன்றனர். அங்கு அமைதி நிலவும் என் பது அவர்களது எண்ணம். அதாவது ரோமின் ஆதிக்கத்தி லிருந்த பகுதிகளுக்குள் வர அவர்கள் எண்ணினர். கி.பி. 167-ல் மார்க்கோமன்னிகளும் குவாதிகளும் தெற்கு ஜெர்மெனி யிலிருந்து புறப்பட்டு, மத்திய டான்யூப் பகுதியில் ரோமின் எல்லையைக் கடந்து உள்ளே புகுந்தனர். வேண்டல்கள் (Vandels) என்ற மற்றொரு முக்கிய குலத்தினரும்கூட அவர் களுடன் சேர்ந்து வந்தனர். ரேட்டியாவிலிருந்து (Raetia) மோசியாவரையில் டான்யூபின் கரைகளிலிருந்த ரோமானியப் படைகளால் அவர்களைத் தடுக்க முடியாமல் நிலை குலைந்து ஓடவேண்டியதாயிற்று. அடுத்தபடியாக ஜெர்மானியர் இத் தாலியையும் தாக்கி, அக்வீலியா (Aquileia) வரையில் உள்ளே புகுந்துவிட்டனர்.

அதே சமயத்தில் தேயிஸ் (Theiss) நதிப் பள்ளத்தாக்கில் வாழ்ந்து வந்த ஜாசிஜெக்கள் (Jezyges) என்ற நாடோடிக்குலத் தினர் டேசியாவைக் கைப்பற்றினர். அப்பொழுது அவுரேலி யஸ் ரோமப் பேரரசராக இருந்தார். பெரும்படையையும் ஏராளமான பொருட்களையும் அவர் திரட்டினர். அடிமைகளும் கிளாடியேட்டர்களும்கூட அவரது படையில் சேர்த்துக் கொள் ளப்பட்டனர். கி.பி. 168-ல் போருக்குப் புறப்பட்டார் பேரர சர். தனது இறுதிக்காலம் வரை (கி.பி. 180-ல்) இப்போரில் ஈடு

பட்டார். பேரரசரே அடிக்கடி போர் முனைக்குச் செல்ல வேண்டியிருந்தது.

ஜெர்மானியக் குலங்களுக்கிடையில் இருந்த பல வேறு பாடுகளையும் விரோத உணர்வையும் ரோமானியர் நன்கு பயன்படுத்திக் கொண்டனர். கி.பி. 180-ல் அவுரேலியஸ் அவர்கள் அனைவரையும் ரோமப் பேரரசிலிருந்து விரட்டியடித்தார். அவர் அதற்கு அப்பாலும் சென்று கார்ப்பேத்திய, பொஹீமிய மலைகள் வரை கைப்பற்றி, சர்மாட்டியா (Sarmatia), மார்க்கோ மன்னியா ஆகிய இரு புதிய மாநிலங்களையும் அமைக்க ஏற்பாடுகள் செய்தார். ஆனால், அதே ஆண்டில் மரணம் அவரை ஆட்கொண்டது. அதன்பின் அவரது இத் திட்டங்களும் கைவிடப்பட்டன.

அவுரேலியஸுக்குப்பின் பட்டமேற்ற 'கம்மோடஸ்' என்ற பேரரசரின் காலத்தில் ஜெர்மானியர்களுடனும் ஜாசிஜேக்களுடனும் சமாதான உடன்படிக்கைகள் ஏற்பட்டன. டான்யூப் நதிக்குப் பத்து மைலுக்குள் வருவதில்லை என்றும், ரோமின் படைகட்கு ஆட்களைத் தந்துதவுவதெனவும் அவர்கள் வாக்களித்தனர். இவ்வாறு ஜெர்மானியர்கள் ரோமின் படையில் புகுந்தது விபரீத விளைவுகளைப் பின்னர் தோற்றுவித்தது.

பிரிட்டனில் ரோமின் ஆட்சி: ஃபிலேவிய மன்னரான டொமீஷியனின் காலத்தில் ஸ்காட்லந்துக்குள்ளும் ரோமானியரின் ஆதிக்கம் புகுந்தது என்பதைப் பார்த்தோம். ஆனால், ஹைலந்துப் (Highlands) பகுதியைக் கடந்து தமது ஆதிக்கத்தை நிறுவுவதில் இருந்த சிரமங்களை விரைவிலேயே ரோமானியர் உணர்ந்து கொண்டனர். மேலும், வடக்குப் பிரிட்டனிலும் பெரிய கிளர்ச்சி ஒன்று நடைபெற்றது; ரோமானியப் படை ஒன்று முற்றிலும் அழிக்கப்பட்டது. எனவே, ஹேட்ரியனின் காலத்தில் ஸ்காட்டிஷ் எல்லைக்கு அப்பாலிருந்த ரோமானியப்படைகள் விலக்கிக்கொள்ளப்பட்டன. புதிய படை முகாம்களும் கோட்டைகளும் இங்கிலாந்தின் வடக்கு எல்லையில் அமைக்கப்பட்டன. டைனுக்கும் (Tyne) சோல்வேயுக்கும் (Solway) இடையில் புதிய அரண்களைக் கிழக்கு மேற்காக அமைப்பதென்று முடிவு செய்யப்பட்டது. அதைப் பற்றி முடிவு செய்வதற்கென்று ஹேட்ரியனே பிரிட்டனுக்குச் சென்று வந்தார். அவரது ஆலோசனைகளின்படி கி.பி. 122-127-ல் பலத்த கற்சுவர் ஒன்றைக் கட்டிமுடித்தார் ரோமானியக் கவர்னரான பிளட்டோரியஸ் நேபாஸ் (Platorius Nepos) என்பவர். இங்கிலாந்தின் வடகோடியில் கிழக்குக் கரையில்

நதியின் கழிமுகத்திலிருந்து மேற்குக்கரையில் சோல்வே நதியின் கழிமுகம் வரையில் மேட்டு நிலப்பகுதியை ஒட்டிக் கட்டப் பட்டது அக்கற்சுவர். இதுதான் 'ஹேட்ரியனின் மதில்' (Hadrian's Wall) என்று அழைக்கப்படுகிறது. அதன்நீளம் 73 மைல்கள். அந்த மதிலில், அல்லது மதிலை ஒட்டி, பதினேழு சிறிய கோட்டைகளும், ஐம்பது கோட்டைவீடுகளும் (Castles) கட்டப்பட்டன. இடையில் பெரிய கோட்டைகள் சிலவும் கட்டப்பட்டன. இந்த எல்லையின் பாதுகாப்புக்கென வேல்ஸ் பகுதிகளிலிருந்து திரட்டப்பட்ட படைகள் அக்கோட்டைகளில் நிறுத்தப்பட்டன.

இதையே தமது இறுதி எல்லையாக ரோமானியர்கள் அப் பொழுது கருதினர். ஆனால், பின்னர் அன்டோனியஸின் ஆட்சி யின்பொழுது வட பிரிட்டனில் ஒரு பெருங்கலகம் ஏற்பட்டது. இதனால், ஸ்காட்லாந்தின் தென்பகுதியிலும் தமது ஆட்சியை நிறுவ அவர் திட்டமிட்டார். அதை ஒரு இராணுவப் பகுதி யாகவே அமைக்க முடிவுசெய்யப்பட்டது. இவ்வாறு லோலியஸ் அர்பிக்கஸ் (Lollius Nrbicus) என்ற கவர்னரின் காலத்தில் மேற்கில் கிளோட் (Clyde) நதியின் கழிமுகத்திலிருந்து கிழக்கில் போர்த் (Forth) நதி வரையில் 36 மைல் நீளமுள்ள மற்றொரு அரண் அமைக்கப்பட்டது (கி.பி. 142-143). கி.பி. 155-க்கும் 162-க்கு மிடையில் ஸ்காட்லாந்து மக்கள் பலமுறை இம்மதிலைத்தாக்கிச் சேதப்படுத்தினர். ஆயினும், ரோமின் வட எல்லையில் எவ்வித மாறுதலும் வெகுநாட்கள்வரை ஏற்பட வில்லை.

ரோமப்பேரரசின் படையும் பொருளாதாரமும்

படை : ரோமானியப் பேரரசு விரிவடைந்தபோது அதன் படைகளும் பெருகின. ஆயினும், அக்காலத்தில் ஏற்பட்ட கிளர்ச்சிகளையும் போர்களையும் பார்த்தால், 'அப்படைகளின் பலம் போதுமானதாக இல்லை' என்பது தெரிகிறது. மேலும், அவற்றில் ஏற்பட்டுவந்த பல்வேறு மாறுதல்களும் இதற்கு ஒரு காரணமாக இருந்திருக்கக் கூடும். ஜூலியஸ், அகஸ்டஸ் ஆகியோர் காலந்தொட்டே ரோமானியப் படையில் ஏற்பட்டு வந்த மாறுதல்கள் கி.பி. இரண்டாம் நூற்றாண்டில் ஓரளவு முற்றுப்பெற்றன. இத்தாலியர்களுக்குப் பதில் மாநிலமக்களே படையில் அதிகம் காணப்பட்டனர். பிரேட்டோரியக் காவற் படையில் மட்டுமே இத்தாலியர்கள் இருந்தனர். அதன் காரண மாகவும், பயிற்சிக்குறைவு, போர்க்கருவிகளில் ஏற்பட்ட மாறு பாடுகள் ஆகியவற்றாலும் ரோமானியப் படையின் வலிமை

குறைந்திருக்கக் கூடும். முன்போல் ஆக்கிரமிப்புப் போர்கள் அதிகம் இன்மையால் ரோமானியப்படை எல்லைப் பாதுகாப்புப் படையாகவே இருப்பினும் மாறி வந்தது. அக்காலத்தில் அதை ஏதிர்க்கு மளவிற்கு வேறு எப்படையும் வலிமை பெற்று விளங்கவில்லை.

பொருளாதாரம்: கி.பி. இரண்டாம் நூற்றாண்டிலும் இத்தாலியின் விவசாயத்தில் பெரிய மாறுதல் எதுவும் ஏற்படவில்லை. ஆயினும், அது வளர்ச்சி ஏதுமின்றித் தேக்கமுற்ற நிலையிலேயே இருந்து வந்தது. அடுத்த நூற்றாண்டு முதல்தான் அதன் சீர்குலைவு தோன்றியது. ஆனால், மாநிலங்களில் விவசாயம் இரண்டாம் நூற்றாண்டில் மேன்மேலும் பெருகியது. இதுவரை விவசாயத்தில் ஈடுபடாத எல்லைப்புற மாநிலங்களும் புதிதாக இப்பொழுது முதல் விவசாயத்தில் ஈடுபட்டன. சான்றாக, வடக்கு ஐரோப்பா முழுவதுக்கும் ஏற்றுமதிசெய்யும் அளவுக்கு பிரிட்டனில் தானியங்கள் விளைந்தன. சுமார் ஆயிரம் ஆண்டுகளுக்குப் பிறகு, பிரிட்டனுக்குச் செல்வத்தையும் பெருமையையும் சம்பாதித்துக் கொடுத்த கம்பளத்தொழிலும் அப்பொழுதுமுதல்தான் தொடங்கியது. அதேபோல் பெல்ஜிகாவிலும், ரைன்நதியின் கரையோரங்களில் இருந்த ரோமானிய முகாம்களின் தேவைகளைப் பூர்த்திசெய்வதற்காகத் தானியங்கள் பயிரிடப்பட்டன. தெற்கு காலில் மது உற்பத்தி பெருகியது; இத்தாலியிலும் திராட்சைத் தோட்டங்கள் மலிந்து, மது உற்பத்தி அளவுக்குமீறிப் பெருகி, பெரு நஷ்டத்தில் கொண்டுவிட்டது. தென்கிழக்கு ஸ்பெயினும், தெற்கு டுனீஷியாவும் ஏராளமான ஆலிவ் மரங்களைப் பயிரிட்டு, பல விடங்களுக்கும் எண்ணெயை ஏற்றுமதி செய்தன.

பேரரசு முழுவதிலும் நல்ல சாலைகள் போடப்பட்டன. இதனால், தொழிலும் வாணிகமும் ஓரளவு வளர்ச்சியுற்றன. புதிய தங்கச்சுரங்கம் ஒன்று டேசியாவில் கண்டுபிடிக்கப்பட்டது. பிரிட்டனில் இரும்பு, காரீயம் ஆகியவை அதிக அளவில் தோண்டியெடுக்கப்பட்டு, ஏற்றுமதி செய்யப்பட்டன. மற்ற பகுதிகளைவிட இத்தாலியானது விவசாயத்தைக் காட்டிலும் தொழில் வளர்ச்சியில் அதிகம் பின்தங்க ஆரம்பித்தது. அரேட்டியத்தின் பீங்கான் தொழிலும் கேப்புவாவின் கண்ணாடி, வெண்கலத் தொழில்களும் கால் மாநிலத்துடன் போட்டிபோட முடியாமல் தோல்வியுற்றன. கால் மாநிலத்திலும் ரைன்பிரதேசத்திலும் தொழில் வளர்ச்சி வேகமாக முன்னேறியது. கிழக்கத்திய மாநிலங்களும் தங்களது பண்டைத் தொழில்களில் எப்பொழுதும்போல் முயற்சி குன்றாமல் ஈடுபட்டுவந்தன.

அயல் நாடுகளுடனான வாணிகமும் இரண்டாம் நூற்றாண்டில் வேகமாக வளர்ச்சியுற்றது. அயர்லந்து, ஜெர்மெனி, ஸ்காண்டிநேவியா போன்ற பல பகுதிகளும் ரோமப்பேரரசோடு வாணிப உறவு கொண்டிருந்தன. கிழக்கில் பார்த்தியா வழியாக முக்கியமான வாணிபச்சாலை ஒன்று சென்றது. கிரேக்க வணிகர்களும் சிரிய வணிகர்களும் அதன் வழியாகச் சீனவரை சென்று வந்தனர்.

இந்துப் பெருங்கடலிலும் வாணிபக் கப்பல்களின் நடமாட்டம் சுறுசுறுப்பாகக் காணப்பட்டது. கிரேக்க வணிகர்கள் வங்காள விரிகுடாவைக் கடந்து சீனவரையிலும்கூடச் சென்றனர். சான்றாக, கி.பி. 166-ல் கிரேக்க வணிகர்குழாம் ஒன்று சீனா சென்றபோது, அதன் பேரரசரால் வரவேற்று உபசரிக்கப்பட்டதாக அறிகிறோம்.

நகரங்களின் வளர்ச்சி : பேரரசெங்கணும் காணப்பட்ட படைமுகாம்களைச் சுற்றிலும், பெருகி வந்த வாணிபம், தொழில் ஆகியவைகாரணமாகப்பல நகரங்கள் இக்காலத்தில்தோன்றின. இன்றைய பான் (Bonn), மெய்ன்ஸ் (Mainz), வீஸ்பேடன் (Wiesbaden) ஸ்ட்ராஸ்பர்க் (Strasburg) ஆகிய நகரங்கள் ரைன் நதிக்கரைகளிலும், வியன்னா (Vienna). புடாபெஸ்ட் (Budapest) பெல்கிரேட் (Belgrade) ஆகியவை டான்யூப் நதியின் கரைகளிலும் இவ்வாறே இரண்டாம் நூற்றாண்டில் எழுச்சியுற்றன. டேசியாவிலும் பல நகரங்கள் தோன்றின. அதேபோல் பாலஸ்தீனத்திலும், செழிப்பு மிக்க கோதுமை வயல்கள் நிறைந்த டிரான்ஸ் ஜோர்டேனியாவிலும் பல நகரங்கள் இக்காலத்தில் வளர்ச்சியுற்றன. எகிப்திலும் பல கிராமங்கள் வளர்ச்சியுற்று ஒன்றுசேர்ந்து நகரங்களாக மாறின. முதலாவது நூற்றாண்டில் பன்னிரண்டு சிறிய நகரங்களையே கொண்டிருந்த நுமீடியாவில் மூன்றாவது நூற்றாண்டின் துவக்கத்தில் முப்பத்தேழு நகரங்கள் இருந்ததாகக் கணக்கிடப்பட்டுள்ளது. டுனீசியாவிலும் சிரியாவிலும் அழிந்துபோன ரோமானிய நகரங்களின் இடிபாடுகள் சங்கிலித்தொடர்போல இன்றும் காணப்படுகின்றன.

அதற்கு முந்திய கிரேக்க நாகரித்தைப்போல ரோமானிய நாகரிகமும் ஒரு நகர நாகரிகம் என்பதை இவை அனைத்தும் மெய்ப்பிக்கின்றன. இரண்டாவது நூற்றாண்டில் ரோமப் பேரரசின் செல்வமானது ரோமிலும் இத்தாலியிலும் மட்டும் குவிந்திராமல், மாநிலங்களிலும் பரவலாக விநியோகிக்கப்பட்டிருந்தது என்பதையும் இவை நிரூபிக்கின்றன. ஏராளமான

படைமுகாம்கள் காரணமாகவும், புதிய விவசாயம், தொழில் ஆகியவை காரணமாகவும் ரைன் நதிக்கரையிலும் டான்யூப் நதிக்கரையிலுமே பிற்காலத்தில் புகழ் மிகுந்து விளங்கிய நகரங்கள் தோன்றினவாயினும், ரோமாபுரியில் காணப்பட்ட அளவுக்குப் பெரும் செல்வத்தை ஆசியாமைனர், கிரீஸ் போன்ற பகுதிகளில் அப்பொழுது காணமுடிந்தது. அங்கு வாழ்ந்த கோடீஸ்வரர்கள் ரோமப் பேரரசர்களுக்குக்கூட 'பொருளுதவி செய்தனர்' என்று அறிகிறோம்.

26. ரோமப் பேரரசு சீர்குலைதல்

(பேரரசர் கம்மோடஸ், கி.பி. 180–172)

கம்மோடஸின் ஆரம்ப காலம் : நெர்வா முதல் அனிட்டோனியஸ்வரை ஆண்ட நான்கு அரசர்களுக்கும் ஆண் குழந்தைகள் கிடையா. எனவே, தமக்குப் பிடித்த திறமையான ஆட்களைத் தமது வாரிசுகளாக ஆக்கிக் கொள்வது அவர்களுக்கு எளிதாக இருந்தது. ஆனால், அவுரேலியஸுக்குப் பல ஆண்குழந்தைகள் இருந்தன. அவர்களில் பலரும் சிறுவர்களாகவே இறந்துபோயினும், அவுரேலியஸ் கம்மோடஸ் (A. Commodus) மட்டும் உயிருடன் வாழ்ந்தார். எனவே, அவரையே அவுரேலியஸ் தமக்குப்பின் வாரிசாக நியமிக்க வேண்டியிருந்தது. திறமையைப் பற்றிக் கருதுவதற்கு அங்கு இடமில்லை.

ஆரம்பத்தில் கம்மோடஸ் திறமைமிக்கவராகவே காணப்பட்டார். பதவிக்குவந்தஉடனே மார்க்கோ மன்னிகளுடனும் குவாதிகளுடனும் நடந்துவந்த போரை நிறுத்தி உடன்படிக்கைகள் செய்துகொண்டார். அதனால், டான்யூப் நதிக்கரையில் மறுபடியும் அமைதி நிலவியது. பிரிட்டனில் கி.பி. 183-ல் மக்களது கிளர்ச்சியும், மூன்றுண்டுகளுக்குப்பிறகு படைக்கலகமும் ஏற்பட்டன. அவையும் எளிதாகவே அட்க்கப்பட்டன. இவ்வாறு பேரரசில் அமைதி நிலவியதோடு ஒழுங்கான நிர்வாகமும் நடைபெற்றது.

சீர்கேடுகளும் சதிகளும் : ஆனால், விரைவிலேயே எல்லாம் மாறின. பிரேட்டோரியக் காவற்படையின் தளபதியான பெரென்னிஸ் (Perennis) என்பவரைக் கம்மோடஸ் அமைச்சராக நியமித்து, அவரிடமே நிர்வாகப் பொறுப்பு முழுவதையும் ஆரம்பத்தில் ஒப்படைத்திருந்தார். பெரென்னிஸ் திறமையாக நிர்வாகத்தை நடத்திவந்தார். ஆனால், கி.பி. 185-ல் அவர்மீது

துரோகக் குற்றத்தைச் சுமத்தி, மரண தண்டனை விதித்தார் அரசர். அரண்மனையில் பணியாற்றி, அடிமைத் தளையிலிருந்து விடுதலைபெற்ற கிளியாண்டர் (Cleander) என்பவர் பிரேட்டோரியக் காவற்படையின் அடுத்த தளபதியாகவும் அமைச்சராகவும் நியமிக்கப்பெற்றார். அவரும் திறமைமிக்கவரே எனினும், செனேட்டர்களும் மற்ற செல்வர்களும் எளிய மனிதரின் செல்வாக்கைக் கண்டு வெறுப்புற்றனர். பணத்துக்குப் பதவி களையும் நீதியையும் விற்றதாக இவர்மீது குற்றம் சுமத்தினர். ஒரேநாளில் இருபத்தைந்து பேருக்குக் கான்சல் பதவிகளை இவர் விற்றதாகக் கதைகள் கூறப்பட்டன. தானிய அதிகாரி ஒருவர் வேண்டுமென்றே தலைநகரில் ஒருணவுப்பஞ்சத்தை ஏற்படுத்தி, மக்களின் ஆத்திரத்தைக் கிளியாண்டர்மீது திருப்பி விட்டார். இதன் விளைவாகக் கிளியாண்டரைப் பதவியி லிருந்து அரசர் அகற்ற வேண்டியதாயிற்று.

அவருக்குப்பின் பிரேட்டோரியக் காவற்படையின் தளபதி யாகவும், அமைச்சராகவும் ஒருவர்பின் ஒருவராகப் பலர் நிய மிக்கப்பட்டனர். கம்மோடஸ் கர்மக்கேளிக்கைகளிலேயே காலத்தைச் செலவிடலானார். அவரது ஆசை நாயகிகளில் ஒரு வரான மார்சியா (Marcia) என்பவரின் விருப்பப்படியே ரோமில் அனைத்தும் நடைபெற்றுவந்தன. வீண் செலவுகள் பெருகின. படையினரின் சம்பளம் அதிகரிக்கப்பட்டன. செலவுகளைச் சமாளிப்பதற்காகச் செல்வர்களிடமிருந்து தொகைகள் வசூலிக்கப்பட்டன. அவர்களின் செல்வத்தையும் சொத்துக் களையும் கவருவதற்கென்றே பலர்மீது பொய்க் குற்றங்கள் சுமத்தப்பட்டு, மரணதண்டனை விதிக்கப்பட்டது.

செனேட்டில் அரசரை ஆதரிப்போரே உறுப்பினராக நியமிக்கப்பட்டிருந்ததால், அச்சபை அரசருக்கு அடங்கியே நடந்து வந்தது. கி.பி. 186 முதல் ஆப்பிரிக்காவிலிருந்து உணவுத்தானியங்களும் ஒழுங்காக ரோமுக்கு வந்து கொண்டி ருந்தன. எனவே, மக்களும் அரசரை எதிர்க்கவில்லை. ஆனால், தமது செல்வாக்கையும் பதவிகளையும் இழந்த பல முக்கிய மான ஆட்கள் சதிகளில் ஈடுபட்டனர். கி.பி. 183-ஆம் ஆண்டி லேயே அரசரது சகோதரியான லூசில்லாவின் (Lucilla) தூண்டுதலின்பேரில் மன்னரைக் கொல்வதற்கு ஒருமுயற்சி நடைபெற்றது. லூசில்லாவின் கணவருக்கு முதல் மனைவியின் மூலம் பிறந்த பாம்பேயானஸ் (Pompeianus) என்பவரைக் கம் மோடஸுக்குப் பதில் அரசாராக்க வேண்டும் என்பது சதி காரர்களின் திட்டம்; ஆனால், அச்சதி உரிய நேரத்தில் கண்டு பிடிக்கப்பட்டு, பலர் மரணதண்டனை அடைந்தனர். ஆனால், கி.பி. 192-ஆம் ஆண்டின் கடைசி நாளில் பிரேட்டோரியக்

காவற்படையின் தளபதியான ஏமிலியஸ் லேட்டஸ் (Aemilius laetus) என்பவரும் வேறு பலஅரண்மனை அதிகாரிகளும் அரசரால் கைவிடப்பட்ட மார்சியாவும் கூடிச் சதிசெய்து ஒரு ஆளை ஏவி அரசரின் கழுத்தை நெறித்துக் கொன்றனர்.

ஹெல்வியஸ் பெர்ட்டினக்கஸ், கி.பி. 193 : கம்மோடஸுக்குப்பிறகு ஹெல்வியஸ் பெர்ட்டினக்ஸ் (Helvius Pertinxa) என்பவரை அரியணையில் அமர்த்தினர் சதிகாரர்கள். அவர் பேரரசர் அவுரேலியஸின் காலத்தில் மிகவும் செல்வாக்கு பெற்று விளங்கிய ஒரு படையதிகாரியாக இருந்தார். அவர் அரசரோடு நெருங்கிப் பழகினர். கி.பி. 186-ல் பிரிட்டனில் ரோமானியப் படைகள் கலகம் செய்தபோது அதை அடக்கினர். அவர் அரசரானதைச் செனேட்டும் படைகளும்கூட எவ்வித எதிர்ப்புமின்றி ஏற்றுக்கொண்டன.

அவர் திறமைமிக்க மன்னராகக் கருதப்படுகிறார். தான் அரசரா யிருந்த மூன்றே மாதங்களில் அரசாங்கத்தின் நிதி நிலைமையை அவர் சரிசெய்தார். வீண் செலவுகளைத் தவிர்த்தும், வரிவசூலில் பலவகை மாறுதல்களைச் செய்தும், காவற்படையினரிடத்தில் ஒழுங்கை நிலை நிறுத்தியும் தமது திறமையை நன்கு வெளிப்படுத்தினர். செனேட்டுடன் நல்லுறவுகளைப் பேணுவதற்கு அவர் முயன்றுவந்தார். இவ்வாறு, 'செனேட்டும் அரசரும் இணைந்து நல்லமுறையில் செயல்பட்டால்' தமது அதிகாரத்தையும் செல்வாக்கையும் நிலைநாட்டுவது கடினமாகிவிடும் என்று லேட்டஸ் எண்ணினர். எனவே, அவரது தூண்டுதலின் பேரில் கி.பி. 193-ல் மார்ச் 28-ந் தேதியன்று காவற்படையானது, பெர்ட்டினக்ஸைக் கொலை செய்தது.

செப்டிமியஸ் செவெரஸ், கி.பி. 193–211

உள்நாட்டுப் போர், கி.பி. 193–197 : பெர்ட்டினக்கஸைத் தீர்த்துக்கட்டியபின், பேரரச பதவியை ஏலத்துக்கு விடத் தீர்மானித்தனர் பிரேட்டோரியக் காவற்படையினர். அப்பதவியைப் பெறுவதற்குப் பெருந்தொகையைத் தருவதற்குத் தயாராக இரண்டுபேர் போட்டி போட்டனர். நகர நீதிபதியான (Praefectu surbi) அகஸ்டஸ் சீசரின் காலத்தில் ரோமிலும் இத்தாலியிலும் குற்றவாளிகளை விசாரிப்பதற்காக இந்த நீதிபதி முதன்முதலில் அமர்த்தப்பட்டார்). சுல்ப்பிஸியானஸ் (Sulpicianus) என்பவர் அவர்களில் ஒருவர். ஏராளமான செல்வம் படைத்திருந்த டிடியஸ் ஜூலியானஸ் (Didius Julianus) என்ற செனேட்டர் மற்றொருவர். இவர்கள் இருவரும் ஒருவரோடொருவர் போட்டியிட்டு, இறுதியில் காவற்படையின

நக்குத் தலைக்கு 250 பவுன்கள் வீதம் கொடுப்பதாகச் சொல்லி அரசராக்கப்பட்டார் ஜூலியானஸ். நகர ஏழைகள் அவரைக் கல்லாலடித்தனர்; ஆயினும். தம்முள் ஒருவரான ஜூலியானஸ் அரசரானதைக் கண்டு பெருமைப்பட்டுக்கொண்டனர் செனேட்டினர். அவரையே அரசராக ஏற்றுக் கொண்டது செனெட்.

ஆனால், ஜூலியானஸுக்குப் போட்டியாக மூன்று படைத் தலைவர்கள் கிளம்பினர். ஒருவர், பிரிட்டனில் தளபதியாக இருந்த டெசிமஸ் குளோடியஸ் அல்பினஸ் (Desimus Clodius Albinus); இரண்டாமவர், பன்னோனியா சுப்பீரியரில் கவர்னராயிருந்த செப்டிமியஸ் செவெரஸ் (Septimius Severus). மூன்றாமவர், சிரியாவைச் சேர்ந்த பெஸ்டெசென்னியஸ் நைஜர் (Pescennius Niger). இவர்கள் மூவரிலும் ரோமுக்கு மிகவும் அண்மையிலிருந்தவர், பன்னோனியாவின் கவர்னரான செவெரஸ்தான். முன்பு கி.பி. 69-ல் அன்டோனியஸ் பிரைமஸ் செய்ததைப் போல, செவெரஸும் காலந்தாழ்த்தாமல் விரைந்து படையுடன் புறப்பட்டுச் சென்று பெரிய எதிர்ப்பு ஏதுமின்றி ரோமாபுரியைக் கைப்பற்றினர். இருவரும் சேர்ந்து ஆளலாமென்று இவரோடு சமரசம் பேச முயன்றார் ஜூலியானஸ். ஆனால், நிலைமையை நன்கு புரிந்துகொண்டு செவெரஸுடன் சேர்ந்து கொண்டார் லேட்டஸ். ஜூலியானஸை அரசபதவியிலிருந்து அகற்றி, மரணதண்டனையையும் அவருக்கு விதித்தது செனேட். காவற்படையினர் அத்தண்டனையை நிறைவேற்றினர் (கி.பி. 193 ஜூலை 1.), அவரது இடத்தில் செப்டிமியஸ் செவெரஸ் ரோமப் பேரரசரானார்.

தாம் பெற்ற அரசபதவியை உறுதிப்படுத்திக்கொள்வதற்கு மற்ற இரு படைத்தலைவர்களையும் அவர் தோற்கடிக்க வேண்டியிருந்தது. இதற்கெனப் போருக்குப் புறப்படுவதற்கு முன்பாக ரோமில் நிலைமையைச் சீர்செய்ய முற்பட்டார். முதல் முக்கிய நடவடிக்கையாக அவர் பிரேட்டோரியக் காவற்படையைக் கலைத்தார். பல்வேறு படைகளிலிருந்தும் (லீஜின்கள்) சில சிப்பாய்களைத் திரட்டி ஒருபுதிய காவற் படையை உருவாக்கி, தன்னிடம் விசுவாசத்துடன் நடந்து கொள்ளக்கூடிய இப்புதிய படையை ரோமில் நிறுத்திவைத்தார். காவற்படையில் இத்தாலியர் மட்டுமே சேர்த்துக்கொள்ளும் வழக்கம் அதுமுதல் முடிவுக்கு வந்தது. பின்னர், ஒரு போர்த் தந்திரமாக அல்பீனஸுடன் ஒரு நட்புடன்படிக்கை செய்து கொண்டார். பிரிட்டன், கால், ஸ்பெயின் ஆகிய மாநிலங்

களுக்கு அல்பினஸைக் கவர்னராக்கி, தனது வாரிசாக இருந்து தனக்குப் பின் அவரே அரசராவார் என்று சொல்லி, 'சீசர்' என்ற பட்டத்தையும் அவருக்குச் சூட்டினார். இவ்வாறு ஒரு பகைவரோடு சமாதானம் செய்துகொண்டு, மற்றவரை ஒழிப்பதற்குப் போர்க்கோலம் பூண்டு புறப்பட்டார்.

இதையெல்லாம் எதிர்பார்த்த நைஜரும் பல நடவடிக்கைகளை மேற்கொண்டார். அதற்கிணங்க ஆசியா முழுவதையும் தன் கட்டுப்பாட்டின் கீழ்க் கொண்டுவந்து, செவெரஸின் படைகளை எதிர்ப்பதற்கென்று பாஸ்பரஸ் (Bosporus) ஜலசந்தியின் கரைகளில் படைகளைக் குவித்து வைத்திருந்தார். கி. பி. 193-194-ல் குளிர்காலத்தில் இருதரப்புக்குமிடையில் பல கடுமையான சண்டைகள் நடைபெற்றன. மின்னல் வேகத்தில் படை நடத்திக் கருங்கடற் பகுதிகளிலிருந்து நைஜரின் படைகளை விரட்டியடித்தார் செவெரஸ். பின்னர் சிலீஷியாவுக்குள் நுழைந்து, அம்மாநிலத்தை வென்றார். அடுத்தபடியாக ஆன்ட்டியோக் நகரும் கைப்பற்றப்பட்டது. நைஜர் அங்கிருந்து யூப்ரடீஸ் நதிப் பிரதேசத்துக்கு ஓடினார். அங்கு அவரைத் துரத்திச் சென்று கொன்றார் பேரரசர். நைஜரை ஆதரித்த ஆசிய நகரங்களிடமிருந்து அபராதமாகவும் இழப்பீடாகவும் பெருந்தொகைகள் வசூலிக்கப்பட்டன. ஆன்ட்டியோக், பைசாண்டியம் முதலிய நகரங்களின் "முனிசிபிய" உரிமைகள் பறிக்கப்பட்டன. செவெரஸின் ஆட்சியை ஏற்க மறுத்துத் தொடர்ந்து போராடியது பைசாண்டியம். கி. பி. 196க்குப் பிறகுதான் அது பணிந்தது. இவ்வாறு ஆசியாவைத் தன்னுதிக்கத்தின்கீழ்க் கொண்டுவந்தபின், அல்பினஸின் பக்கம் தன் கவனத்தைத் திருப்பினார் செவெரஸ்.

நைஜரைத் தோற்கடித்தபின், தன் பக்கமும் செவெரஸ் திரும்புவார் என்பதை உணர்ந்திருந்தார் அல்பினஸ். எனவே, அவரது படைகள் மேலும் பலப்படுத்தப்பட்டிருந்தன. இவ் விருவருக்குமிடையிலான இறுதியான முக்கிய போர் கி. பி. 197-ல் கால் மாநிலத்தில் லுங்டுனம் (Lungdunum) நகருக்கருகில் நடைபெற்றது. அதில் செவெரஸ் வெற்றி பெற்றார். செல்வமிக்க அந்நகரைத் தாக்கிச் சூறையாடினர் செவெரஸின் படையினர். இங்ஙனம் ரோமப் பேரரசில் செவெரஸின் ஆட்சி உறுதிபட்டது.

பேரரசர் செவெரஸின் போர்கள்

பார்த்தியாவுடன் போர் : பார்த்திய மன்னரான நான்காம் வலோஜெஸிஸ் நைஜருக்கு ஓரளவு உதவி அளித்து வந்தார்

மேலும், மேற்கு மெசபெடேமியாவில் கி.பி. 165ல் ரோமால் சுதந்திர அரசாக ஆக்கப்பட்ட ஆஸ்ரோன் அரசானது (Osrhoens) இப்பொழுது மீண்டும் பார்த்தியாவுடன் நட்புறவுகளை மேற்கொண்டு ரோமின் மேலாதிக்கத்தை உதறித் தள்ளியது. அல்பினஸுடன் செவெரஸ் போரில் ஈடுபட்டிருந்த வேளை பார்த்து, மெசபடேமியாவில் தான் இழந்து போயிருந்த பகுதிகளை மீண்டும் கைப்பற்றும் முயற்சியில் இறங்கினர் வலோஜெஸிஸ். ஆஸ்ரோஜீனயும், ரோமானியத் துருப்புக்கள் நிறுத்தி வைக்கப்பட்டிருந்த அபியாபேன் (Abiabene) என்ற அரசையும் அவர் கைப்பற்றிக் கொண்டார். இந்நிலையில், 197ல் அல்பினஸைத் தோற்கடித்தபின், ஆசியாவில் பார்த்தியாவுக்கெதிரான போர்களில் ரோமானியர் ஈடுபட வேண்டியிருந்தது. ஆஸ்ரோனிலிருந்தும் அபியாபேனிலிருந்தும் பார்த்தியப் படைகள் விரட்டியடிக்கப்பட்டன. டெசிபோன் கைப்பற்றப்பட்டுத் தரைமட்டமாக்கப்பட்டது. பார்த்திய அரசு சீர்குலையத் தொடங்கியது. டிராஜனைப்போல் மெசபடோமியாவைத் தன் பேரரசோடு இணைத்துக் கொண்டார் செவெரஸ்; இரண்டு பெரும் படைகளை அங்கு நிறுத்தி வைத்தார். ஆனால், பாபிலோனியாவிலிருந்துமட்டும் ரோமானியத் துருப்புக்களை விலக்கிக் கொண்டார்.

பிரிட்டனில் போர்கள் : பிரிட்டனிலிருந்து படைகளை அல்பீனஸ் கால் மாநிலத்துக்குத்தம்முடன் கொண்டு சென்றதை அத்தீவின் வடக்கில் வாழ்ந்த சில குலங்கள்—காலிடோனியர்கள் (Caledonians), மேயாட்டேக்கள் (Maeataes) போன்றோர் — இதைப் பயன்படுத்தி வடக்கு இங்கிலாந்தில் யார்க் (York), செஸ்ட்டர் (Chester) ஆகிய நகரங்கள் வரையிலான பிரதேசத்தைக் கைப்பற்றிக் கொண்டனர். கி. பி. இரண்டாம் நூற்றாண்டின் இறுதியில் பிரிட்டனில் கவர்னராக இருந்த விரியஸ் லூப்பஸ் (Virius Lupus) என்பவர் அவர்களுக்குப் பொருள் கொடுத்து, ஹேட்ரியனின் மதிலுக்குத் தெற்கிலிருந்த பகுதிகளிலிருந்து அகன்று செல்லுமாறு செய்தார். ஆயினும், அன்டோனியஸின் மதில் வரையிலான பிரதேசங்களை ரோமானியப் படைகள் மீண்டும் பெறமுடியவில்லை.

இந்நிலையில் கி. பி. 205ல் அக்குலங்கள் ஹேட்ரியனின் மதிலை மீண்டும் தாக்கினர். அப்பொழுது கவர்னராயிருந்த அல்பேனியஸ் செனிஷியோ (Alfenius Senecio) என்பவர் அவர்களை விரட்டியடித்தார். மூன்று ஆண்டுகளுக்குப் பிறகு பேரரசர் செவெரஸே நேரில் பிரிட்டனுக்கு வந்தார். 63 வயதை எட்டிய அவர் தமது பிள்ளைகளான கரகல்லா (Caracalla), கேடா (Geta)

ஆகிய இருவரையும் தன்னுடன் அழைத்துக் கொண்டு தானே நேரில் பிரிட்டனுக்கு வந்து மூன்று ஆண்டுகள் பிரிட்டனில் தங்கியிருந்தார். கி.பி. 209-ல் படைகளோடு வடக்கே சென்று காலிடோனியர்களையும் மேயாட்டேக்களையும் அடியோடு அழித்து, அவர்களது நிலப் பகுதிகளையும் சேர்த்துக் கொள்ள வேண்டுமென்று கருதினர். அக்ரி-கோலாவையும்விட மேலும் வடக்கே சென்றன அவரது படைகள். ஆயினும், அக்குலங்களைப் போருக்கு இழுக்க அவரால் முடியவேயில்லை. எனவே, அவரது நோக்கம் நிறைவுறவில்லை. இந்நிலையில் அவர் கி.பி. 211-ல் யார்க் நகரில் காலமானார். அவரது மரணத்துக்குப் பிறகு ஸ்காட்லந்தை விட்டுத் தமது துருப்புக்களை விலக்கிக் கொண்டு டைனுக்கும் சோல்வேயுக்குமிடையிலான ஹேட்ரியனின் மதிலையே வட எல்லையாக வைத்துக் கொண்டனர் அவரது புதல்வர்கள்.

மற்ற எல்லைகளில் அரண்கள் அமைத்தல்: பிரிட்டனில் தாங்கள் எழுப்பிய எல்லை மதில்களைப்போல், வேறு பகுதிகளிலும் ரோமானியர் அரண்களை அமைத்தனர். செவெரஸும், கரகல்லாவும் மேல் ஜெர்மெனியிலும் ரேட்டியாவிலும் (Raetia) அத்தகைய அரண்களைக் கட்டினர். மேல் ஜெர்மென் எல்லையில் சுமார் இருநூறு மைல் நீளத்துக்கு ஒரு மண்மேடு அமைக்கப்பட்டது. ரேட்டியாவில் நூறுமைல் நீளத்துக்குக் கல் மதில் ஒன்று கட்டப்பட்டது. அதேபோல் கி.பி. 200-ல் கார்ப்பேத்திய மலைகளிலிருந்து டான்யூப் நதி வரையில் அலூட்டா (Aluta) நதிக்கெதிரில் ஒரு மண்மேடு எழுப்பப்பட்டது. வடக்கு ஆப்பிரிக்காவிலும் எல்லையோரமாக அரண் அமைக்கப்பட்டன. இவ்வெல்லை யோரங்களில் பலத்த கோட்டைகளும் கட்டப்பட்டன. இவ்வாறு, ரோமானிய எல்லை இறுதியாகச் சிறிது விரிவுபடுத்தப்பட்டு, உறுதிபடுத்தப்பட்டது செவெரஸின் காலத்தில்தான்.

ரோமில் செவெரஸின் ஆட்சி:

செப்டிமியஸ் செவெரஸ் ஆப்பிரிக்காவில் பிறந்தவர்; அவரது மனைவி சிரியாவில் பிறந்தவர். எனவே, மாநிலங்களில் பிறந்த அதிகாரிகளுக்கு உயர்பதவிகளை அளித்து, இத்தாலியர்களுக்கு ஈடாக அவர்களையும் உயர்த்த அவர் எண்ணினார். சிரியாவிலிருந்தும், மற்றக்கீழை மாநிலங்களிலிருந்தும் வந்த பலர் அவர் காலத்தில் உயர் பதவிகளை வகித்தனர். அப்பகுதிகளிலிருந்த பல நகரங்களுக்கு ரோமானியக் குடியுரிமைகள் அவர் காலத்தில் வழங்கப்பட்டதும் இங்குக் குறிப்பிடத்தக்கது.

சிரியாவிலும் பிரிட்டனிலும் படைத் தலைவர்களாயிருந்த நைஜரும் அல்பினஸும் தமக்குப் போட்டியாகக் கிளம்பியதைக் கருதி, அம் மாநிலங்களை இரண்டாகப் பிரித்தார். அவற்றிலிருந்து பெரும்படையோடு கூடிய, வலிமைமிக்க போட்டியாளர்கள் பின்னர் தோன்றுவதைத் தடை செய்வதற்காக இந்நடவடிக்கையை மேற்கொண்டார். அதுபோலவே, ஆப்பிரிக்காவிலிருந்து நுமீடியாவையும் பிரித்துத் தனி மாநிலமாக்கினர். இவற்றினால் மட்டுமே அரசருக்கெதிரான படை நடவடிக்கைகளைத் தடுப்பதற்குப் போதுமானதாக இருக்க முடியாது. தாமே படைத் தலைமை பூண்டு படையினரின் விசுவாசத்தைப் பெறுத மன்னர்களுக்குப் படைத் தலைவர்களிடமிருந்து என்றைக்கும் ஆபத்து இருந்து வந்தது. செவரஸ் காலத்தில்தான் இங்கிலாந்தில் யார்க், லிங்கன் (Lingen) ஆகிய நகரங்கள் நிறுவப்பட்டதாகத் தெரிகிறது. ரோமானியர்களின் குடியேற்றங்களாக அவை நிறுவப்பட்டன. எகிப்தில் அலெக்சாந்திரியா போன்ற பல நகரங்களுக்குச் செனேட் போன்ற அவைகளைத் தேர்ந்தெடுத்துக் கொள்ளும் உரிமையை வழங்கி, சுயாட்சி அளித்தார் இவ்வரசர்.

நிர்வாகத்தில் மாறுதல்கள் : ஆரம்பத்தில் செவரஸ் செனேட்டுடன் நல்லுறவு கொண்டிருந்தார். எனவே, நைஜருடனான போருக்குப் பிறகு, அவரை ஆதரித்த குற்றத்துக்காக ஒரு செனேட்டர் மட்டுமே தண்டிக்கப் பெற்றார். ஆனால், அல்பினஸுடனான போருக்குப் பிறகு, அவருக்கும் செனேட்டுக்குமிடையிலிருந்த உறவுகள் மோச மடைந்தன. அதற்குக் காரணம், செனேட்டர்களில் பலர் அல்பினஸை ஆதரித்ததுதான். அறுபத்து நான்கு செனேட்டர்கள் அவ்வாறு அவரை ஆதரித்ததாகக் கண்டுபிடிக்கப்பட்டு, செனேட்டின் மூன் துரோகக் குற்றத்துக்காக விசாரிக்கப்பட்டனர். அவர்களில் 'மூப்பத்தைந்து பேர் குற்றமற்றவர்கள்' என்று விடுவிக்கப்பட்டனர். அதனால், வெகுண்ட பேரரசர் 'செனேட்டர்களைச் செனேட்டே விசாரிக்கும் முறை சரியில்லை' என்று கூறி, அந்த உரிமையைப் பறித்துக் கொண்டார். செனேட்டை அடிக்கடி கூட்டுவதும், அடிக்கடி கலந்து பேசுவதும் நின்றது.

மேலும், ஈக்வைட்டுகளையே பதவிகளில் அதிகம் அமர்த்தியதோடு செனேட்டுக்கு ஒதுக்கப்பட்ட மாநிலங்களில் செனேட் வகுப்பைச் சேர்ந்த கவர்னர்களது அதிகாரத்தைக் குறைக்கும் நோக்கத்தோடு, இரண்டாவது வகுப்பைச் சேர்ந்த ஆட்களைத் துணைக்கவர்னர்களாக நியமித்து, சில பொறுப்புக்களை அவர்களிடம் ஒப்புவித்தார்.

நைஜரையும் அல்பினஸையும் ஆதரித்தோரது சொத்துக்கள் பறிமுதல் செய்யப்பட்டுப் பெருஞ்செல்வம் செவெரஸிடம் குவிந்தது. அதை அவர் தமது சொந்த சொத்தாகவே கருதினர். படைகளின் சம்பளத்தை உயர்த்தினர். தானியத்தோடு கூட எண்ணெயையும் இலவசமாக ஏழைகளுக்கு வழங்கினர். புதிய குளியல் மண்டபங்களும் (Boths) கட்டடங்களும் அவரால் கட்டப்பட்டன. அவர் காலத்தில் நாணயத்தின் தரம்குறைந்தது.

கரகல்லா கி.பி. 211-217 :

செப்டிமியஸ் செவெரஸ் அரியணையைக் கைப்பற்றிய உடனேயே, தனக்குப்பின் தன் மூத்தமகனே அரசராவார் என்பதை ஐயந் திரிபற அறிவித்தார். அதற்கென முழுஅரச அதிகாரங்களையும், 'அகஸ்டஸ்' என்றபட்டத்தையும் அவருக்கு அளித்தார். இந்தப் பட்டத்து இளவரசரது பெயரும் 'அவுரேலியஸ் அன்ட்டோனியஸ்' என்று மாற்றப்பட்டது. ஆயினும் வரலாற்றில் கரகல்லஸ் (Caracallus) அல்லது கரகல்லா (Caracalle) என்ற பெயரே அவருக்கு நிலைத்துவிட்டது. கால் மாநிலத்தில் வழக்கிலிருந்த நீண்ட மேல்கோட்டு (great coat) ஒன்றை ரோமில் புகுத்தியதால் அவருக்கு இப்பெயர் ஏற்பட்டது.

ஆரம்பத்தில் செவெரஸ் பிரேட்டோரியக் கடற்படையின் தளபதியான பிளாட்டியானஸ் (Plautianus) என்பவரைத் தனது நெருங்கிய நண்பராகவும் அமைச்சராகவும் கொண்டிருந்தார். டைபீரியஸின் காலத்தில் சீயானஸின் அதிகாரம் ஓங்கியதைப் போல் இப்பொழுது பிளாட்டியானஸின் அதிகாரம் ஓங்கியிருந்தது. கரகல்லாவின் வாரிசுரிமைக்கேகூட ஆபத்து வந்துவிடும்போல் தோன்றியது. பிளாட்டியானஸைப் பதவியிலிருந்து அகற்றிவிடுமாறு தனது தந்தையைக் கேட்டுக்கொண்டார் கரகல்லா. எனவே, சீயானஸைத் திடீரென்று டைபீரியஸ் தீர்த்துக்கட்டியதைப் போலப் பிளாட்டியானஸைச் செவரஸ் தீர்த்துக்கட்டினர்.

அவர் தமது இறுதி நாட்களில் இளையமகனை அன்ட்டோனியஸ் கேட்டாவையும் (Geta) கரகல்லாவோடு வாரிசாக நியமித்தார். அதனால், இரண்டு சகோதரர்களுக்குமிடையில் பொறுமை வளர்ந்தது. செவெரஸின் மரணத்துக்குப் பிறகு இவர்களுக்கிடையில் ஒரு போரே துவங்கிவிடும் போலிருந்தது.

இந்நிலையில் கி.பி. 212-ல் கரகல்லா தம் தம்பியைக் கொலை செய்வித்து, தனது நிலையை உறுதிசெய்து கொண்டார். தமது தம்பியின் நண்பர்களாகக் கருதப்பட்ட பலரையும் அவர் கொலை செய்வித்தார்.

படையின் ஆதரவைப்பெற்று, ஆள நினைத்த கரகல்லா லீஜின்களின் சம்பளம் 500 தினாரியஸ்களிலிருந்து (Dinarius-ரோமானிய வெள்ளி நாணயம்) 750 ஆக உயர்த்தினார். இதனால், அரசாங்கத்தில் பணமுடை ஏற்பட்டது. இதைச் சரிக்கட்டுவதற்காகப் புதிய வரிகள் விதிக்கப்பட்டன. 'அன்ட்டோனியானஸ்' என்ற புதிய தரமில்லாத வெள்ளி நாணயம் ஒன்றும் வெளியிடப்பட்டது.

பேரரசில் வசித்த எல்லா சுதந்திர மனிதர்களுக்கும் குடியுரிமையை அளித்தார் கரகல்லா (கி.பி. 212). இதனால், இத்தாலியர்களுக்கும் மாநில மக்களுக்கு மிடையில் இருந்த அரசியல் வேற்றுமைகள் அனைத்தும் அகற்றப்பட்டன. எல்லோருக்கும் அரசியலில் சமஉரிமைகள் அளிக்கப்பட்டன. இருப்பினும் தொல்லை காரணமாக ஒருசில செல்வர்களே ரோமானிய அரசியலில் பங்கு கொள்ள முடிந்தது.

கரகல்லாவின் ஆட்சியில் அலெக்சாந்திரியாவில் ஒரு கிளர்ச்சி தோன்றியது. அது கடுமையாக ஒடுக்கப்பட்டு, படைகள் அங்கு நிறுத்தி வைக்கப்பட்டன. அச்சத்தை ஊட்டுவதற்கென்றே நூற்றுக்கணக்கானோர் கொல்லப்பட்டனர். அவர் பிரிட்டனில் ஹேட்ரியனின் மதிலுக்கு அப்பால் தனது தந்தையால் வெல்லப்பட்ட பகுதிகள் அனைத்தையும் கைவிட்டு, துருப்புக்களை விலக்கிக் கொண்டார் என்பதை முன்பே கண்டோம். டான்யூப் நதிப்பிரதேசத்தில் அலமன்னியர் (Alamanni) கோத்துகள் (Goths) ஆகிய இரண்டு ஜெர்மானியக் குலங்களோடு போர் நடைபெற்றன. அலமன்னியர் தெற்கு ஜெர்மெனியிலிருந்து இடம் பெயர்ந்து ரோமானிய எல்லைக்குள் நுழைந்து வாழ முயன்றார். கிழக்கு ஜெர்மென் மக்களான கோத்துக்கள் மோசியாவில் நுழைய முயன்றனர். கி.பி. 213-214-ல்கரகல்லா இவர்களது முயற்சிகளை முறியடித்து விரட்டியடித்தார். ரைன், டான்யூப் நதிக்கரையில் செவெரஸால் கட்டப்பட்டிருந்த அரண்கள் மேலும் உறுதிபடுத்தப்பட்டன. கி.பி. 216-ல் அர்மீனியா மன்னரான வலோ ஜெலிஸைப் பதவியிலிருந்து அகற்றி, அவ்வரசை ரோமின் மாநிலமாக ஆக்கினார் கரகல்லா. அதை அடுத்து அவர் அபியாபேன் வழியாகப் படை நடத்தி, மீடியா (media) என்ற

அரசின்மீது தாக்குதல் தொடுத்தார். கிழக்கில் இதுவரை ரோமில் கவரப்படாத புதிய பகுதிகளையும் வெல்லவேண்டுமென்பது அவரது எண்ணம். ஆனால், சில படையதிகாரிகள் அவரைக்கொன்று, இந்த எண்ணத்துக்கு முற்றுப் புள்ளி வைத்தனர்.

மாக்ரினஸ், கி.பி. 217-218

அடுத்தபடியாகப் பேரரசரானர் ஒப்பெல்லியஸ் மாக்ரினஸ் என்பவர் (Opellius Macrinus). மாரிட்டேனிய மாநிலத்தைச் சேர்ந்தவரான இவர் ரோமானியப் படையில் ஒரு சாதாரண சிப்பாயாகச் சேர்ந்து. பிரேட்டோரியக் காவற்படையின் தலைவராக உயர்ந்து, கரகல்லாவுக் கெதிரான சதிக்குக் காரணமாயிருந்தார். எனவே, கரகல்லாவின் மரணத்துக்குப்பின் இவரே ரோமானியப் பேரரசரானர். படையும் செனேட்டும் இவரையே பேரரசராக ஏற்றுக்கொண்டன. அவர் கிழக்கில் கரகல்லாவின் ஆக்கிரமிப்புக் கொள்கையையே பின்பற்றிப் பார்த்தியாமீது படையெடுத்தார். ஆனால், பார்த்திய மன்னர் ஆர்ட்டாபேனஸ் (Artabanus) என்பவரிடம் இரு போர்களில் தோற்றார். மெசபொடேமியாவிலிருந்து வெளியேறினர். இதற்கிடையில் போரை நிறுத்துவதற்கு ஆர்ட்டாபேனஸ் இணங்கியதால் மேலும் தோல்விகளிலிருந்து மாக்ரினஸ் தப்பினர். ஆயினும், கி.பி. 218-ல் சிரியாவில் எமேசா (Emesa) என்றவிடத்திலிருந்த துருப்புக்கள் கிளர்ச்சி செய்து செவெரஸின் மனைவிக்கு நெருங்கிய உறவினரான ஒருவரைப் பேரரசராக அறிவித்தன. அவர் கரகல்லாவின் புதல்வரே என்றும் அவுரேலியஸ் அன்ட்டோனியஸ் என்பது அவரது பெயர் என்றும் அறிவிக்கப்பட்டது.

எலகாபேலஸ், கி.பி. 218-222

பேரரசரென அறிவிக்கப் பெற்றபோது அன்ட்டோனியஸுக்கு வயது பதினான்கு. சிரியாவுக்கு அப்பால் யாருக்குமே தெரியாத புதிய மனிதர் அவர். இருப்பினும் அவரை அரசராக்கிய துருப்புக்கள் மாக்ரினஸுக்கு எதிராகப் போர் தொடுத்து வென்று அவரை அரியணையிலமர்த்தின.

எமேசாவிலிருந்த சூரியக்கடவுளின் பெயரை ஒட்டி எலகாபேலஸ் (Elagabalus) என்ற புதிய பெயரைச் சூட்டிக் கொண்டார் அன்ட்டோனியஸ். அவர் இளைஞராயிருந்தாலும் தீய நெறிகளில் அவரது கவனத்தைத் திருப்பி வெறும் கேளிக்

கைகளில் மூழ்கியிருக்கும்படி செய்தும், அவரது அன்னையான ஜூலியா மேடா அதிகாரம் அனைத்தையும் தாமே மேற்கொண்டு நிர்வாகத்தைக் கவனித்துவந்தார். செனேட் விவாதங்களிலும் அவர் நேரடியாகப் பங்கு கொண்டார். ரோமில் மக்களைத் திருப்திசெய்யும் நோக்கத்துடன் தனது ஒன்றுவிட்ட சகோதரரான அவுரேலியஸ் செவெரஸ் அலெக்சாந்தர் என்பவரைத் தனக்கு அடுத்தபடி அரியணையேறக் கூடிய வாரிசாக நியமித்தார் எலகாபேலஸ். ஆனால், பின்னர் இந்த ஏற்பாட்டை மாற்றுவதற்கு அவர் முயன்றபொழுது பிரேட்டோரியக் காவற்படை வெகுண்டு அவரைக் கொலை செய்தது.

அலெக்சாந்தர் செவெரஸ், கி.பி. 222-235

இந்த அரசரும் பதின்மூன்று வயதே நிரம்பப் பெற்ற சிறுபிள்ளையாயிருந்ததால் இவரது அன்னையரான ஜூலியா மமேயா (Julia Mamaea) என்பவர் இவரது சார்பில் பேரரசை ஆண்டு வந்தார். அன்னையாருக்கு அடங்கிய பிள்ளையாக அலெக்சாந்தர் இருந்து வந்ததால் இறுதிவரை அவரது அன்னையாரது ஆட்சியே நடைபெற்று வந்தது.

செனேட்டின் ஆதரவைப் பெற்று ஆள நினைத்தார் மமேயா. எல்லா முக்கியமான விவகாரங்கள் பற்றியும் செனேட்டுடன் கலந்து பேசியே முடிவு செய்தார். செல்வர்கள், செனெட்டர்கள், உயர்அதிகாரிகள் ஆகிய அனைவருக்கும் எதிரான குற்றங்களை விசாரிக்கும் உரிமையைச் செனேட்டிடம் மீண்டும் ஒப்படைத்தார் அவர். செனேட்டர்களை மட்டுமே கொண்ட ஒரு சிறுகுழுவிடம் நிர்வாகப் பொறுப்பு ஒப்படைக்கப்பட்டது. மமேயாவின் ஆலோசனைகளைக் கேட்டு அக்குழு இயங்கி வந்தது. பிரேட்டோரியக் காவற்படையின் தலைவராகவும் டொமீஷியஸ் உல்ப்பியானஸ் (Domitius ulpianus) என்ற செல்வாக்கு மிக்க வழக்கறிஞர் ஒருவர் நியமிக்கப்பட்டார். மமேயாவின் நிர்வாகத்தின்கீழ் பேரரசில் அமைதியும் ஒழுங்கும் நிலவின. முதல் பத்தாண்டுகளில் எல்லைப்போர்களும் நிகழவில்லை. வரிகள் ஓரளவு குறைக்கப்பட்டன. ரோமில் மக்களை மகிழ்விப்பதற்கெனப் பல நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன. அரண்மனைச் செலவுகளில் மிகுந்த சிக்கனம் கையாளப்பட்டது.

ஆயினும், கி.பி. 228க்குப் பிறகு குழப்பம் தலைகாட்டியது. அந்த ஆண்டில் டொமீஷியஸ் உல்ப்பியானஸ் பீரேட்டோரியப் படையினரை கொலைசெய்தனர். அதன் காரண

மாகவும், அதன்பின் ஏற்பட்ட போர்களினலும் படைகளில் ஒழுங்கும் கட்டுப்பாடும் குலைந்தன. கி.பி. 230-ல் பார்த்தி யாவை அதுவரை ஆண்டுவந்த அர்சாசிய வம்சம் (Arsacid Dynastiy) அர்தாஷீர் (Ardasthir-இவர் ஆர்ட்டாசெர்க்செஸ் (Artaxerxes) என்றும் அழைக்கப்பட்டார்) என்ற பாரசீக மன்ன ரால் அகற்றப்பட்டார். பார்த்தியாவும் கைப்பற்றப்பட்டது; தெற்கு பாரசீகத்தில் அதிகாரியாக இருந்த இவர் முதலில் பாரசீகம் முழுவதையும் கைப்பற்றிச் 'சசானிய வம்சத்தை' (Sassanid Dynaty) நிறுவினர். பின்னர், ஒரு காலத்தில் பாரசீ கத்து அக்கேமீனிய (Achaemenid) வம்சத்து அரசர்களுக்கு ஆட்பட்டுக்கிடந்த பார்த்தியாவை மீண்டும் வெல்ல எண் ணினர். பார்த்திய அரியணைக்குப் போட்டியிட்டுப் போரில் ஈடுபட்டிருந்த ஐந்தாம் ஆர்ட்டாபேனஸ், ஐந்தாம் வலோ ஜெஸிஸ் என்ற இரு சகோதரர்களும் அர்தாஷீரால் தோற்கடிக் கப்பட்டு, அவர்தம் நாடே கைப்பற்றப்பட்டது. அவர் கி.பி. 231-ல் நிசிபிஸ் (Nisibis) நகரையும் முற்றுகையிட்டார். இதனல், வெகுண்ட அலெக்சாந்தர் செவெரஸ் தானே ஒரு படையுடன் ஆசியாவுக்குப் புறப்பட்டார். ஆர்மீனிய அரசர் சோஸ்ரோ ஸையும் (Chosroes) துணைக்கு அழைத்துக்கொண்டு ஆர்மீ னியா, மெசபொடேமியா, பாபிலோன் ஆகிய மூன்றிலிருந்தும் பாரசீகத்தின்மீது மும்முனைத் தாக்குதல் ஒன்றைத் தொடுத்தார். அதில் அர்தாஷீர் தோற்கடிக்கப்பட்டார். ஆயினும், ரோமப் படையிலும் ஏராளமான பேர் உயிரிழந்தனர். இதனல், படையில் பேரரசருக்கு எதிர்ப்பு உருவாகியது.

கி.பி. 234-ல் அலமன்னிகள் மீண்டும் ரோமப் பேரரசினுள் தமது ஊடுருவல்களைத் தொடங்கினர். பாரசீக மன்னரோடு ரோமப்பேரரசர் போரில் ஈடுபட்டிருந்த வேளையில் அவர்கள் தாக்குதல்களைத் தொடுத்தனர். தனது படையில் கட்டுப்பாடும் ஒழுங்கும் குலைந்துபோயிருந்ததைக் கண்ட அலெக்சாந்தர் செவெரஸ் அலமன்னிகளுக்குப் பொருளைத் தந்து போர் ஓய்வு பெற வேண்டியதாயிற்று. மீண்டும் படையைச் சீர்திருத்தி அமைக்கும் முயற்சியில் ஈடுபட்டிருந்த பேரரசரையும் அவரது அன்னையாரையும், ஜூலியஸ் மாக்சிமஸ் (Julius Maaimus) என்ற அதிகாரி கலகம் ஒன்றைத் தூண்டிவிட்டுக் கொன்றார் (235); அடுத்த ஐம்பதாண்டுகளில் ரோமப் பேரரசு பெருங் குழப்பத்தில் ஆழ்ந்துகிடந்தது. தம் விருப்பம்போல் அரசர்களை ஆக்கியும் நீக்கியும் படையதிகாரிகள் வெறியாட்டம் ஆடினர். ஐம்பதாண்டுகளில் பதினெட்டுப் பேரரசர்கள் ஆண்டனர் என்றால் நிலைமையை நன்கு உணர்ந்து கொள்ளலாம்.

ஐம்பது ஆண்டுகள் உள்நாட்டுப்போர், கி.பி. 234-285.

அலெக்சாந்தர் செவெரஸைத் தீர்த்துக்கட்டியபின், ஜூலியஸ் மாக்சிமஸ் அதிகாரத்தைக் கைப்பற்றினார். (கி.பி. 235-238) திரேஸில் (Thrace) பிறந்தவரான இவரும், கரகல்லாவைக் கொலைசெய்து ஆட்சியைக் கைப்பற்றிய மாக்ரினஸைப்போல, யாருக்கும் அதிகம் அறிமுகமாகாதவராயினும் திறமைமிக்கவராக விளங்கினர். கி.பி. 236-237-ல் ரைன் பிரதேசத்திலும் டான்யூப் பிரதேசத்திலும் ஏற்பட்ட ஊடுருவல்களைத் தடுத்து நிறுத்தி, தனது திறமையை நிரூபித்தார். ஆயினும், முன்றுண்டுகளுக்குப் பிறகு ஆப்பிரிக்காவில் புரோகான்சலாக இருந்த அன்ட்டோனியஸ் கார்டியானஸ் (A. Gordianus) என்பவரை மாக்சிமஸுக்குப் போட்டியாக அரசராக்கியது செனேட். காரணம், அலெக்சாந்தர் செவெரஸின் காலத்தில் தான்பெற்ற அதிகாரத்தை, திறமைமிக்க மாக்ஸிமசின் காலத்தில் இழந்துவிடுவோமோ என்று அது அஞ்சியதுதான். எனவே, எண்பது வயதான கார்டியானஸைப் பேரரசுகள் நியமித்தது. அவரைத் தன் கைப்பொம்மையாக்கி, நிர்வாகத்தை நடத்துவதற்கென்று இருபது செனேட்டர்களைக் கொண்ட ஒரு குழுவையும் அமைத்தது. கார்டியானஸும் தமது மகனை இரண்டாம் கார்டியானஸையும் உதவி அரசராக (Co-regent) ஆக்கிக்கொண்டார்.

ஆனல், அவர் ஆப்பிரிக்காவைவிட்டு ரோமுக்குப் புறப்படு முன்பாகவே நுமீடிய கவர்னருக்கு கெதிரான ஒருபோரில் உயிரிழந்தார். (கார்டியன்—Gordian என்றும் கார்டியானஸ் அழைக்கப்படுகிறார்.) மாக்சிமஸை ஆதரித்தே கார்டியானஸுடன் போரிட்டு வென்றார் நுமீடியக் கவர்னர்.

செனேட்டும் சளைக்காமல், தான் அமைத்த குழுவில் உறுப்பினர்களான குளோடியஸ் பூப்பியனஸ் (Clodius Pupienus) கேலியஸ் பால்பினஸ் (Caelius Balbinus) ஆகிய இருவரை இணை-அரசர்களாக (Joint-Emperors) நியமித்தது. அப்பொழுது பன்னோனியாவிலிருந்த மாக்சிமஸ் தனது படையோடு இத்தாலியை நோக்கி வந்தார். இத்தாலியில் பல நகரங்களும் பிரேட்டோரியக் காவற்படையும் செனேட்டை ஆதரித்தன. எதிர்ப்பு அதிகரித்து வந்ததைக் கண்ட மாக்சிமசின் படைகள் அக்வீலியா நகரில் (Aquileia) அவரைக் கொன்றன (ஜூன்—238).

மாக்சிமஸ் கொலை செய்யப்பட்டதும், பிரேட்டோரியப் படையானது செனேட்டுக்கு எதிராகத் திரும்பி, பூப்பியன

ஸையும் பால்பினஸையும் கொன்றுவிட்டு, முதலாம் கார்டியானஸின் பேரனை மூன்றும் கார்டியானஸ் என்ற பதினைந்து வயது பையனைப் பேரரசராக்கின (ஜூலை—238). வேறு வழியின்றி இதைச் செனேட்டும் ஏற்றுக்கொண்டது. இவ்வாறு கி.பி. 238-ஆம் ஆண்டில் மட்டும் ஆறு பேரரசர்கள் தோன்றினர்!

மூன்றும் கார்டியானஸை (228-244) அரசராக்கியது ரோமப் பேரரசில் ஓரளவு அமைதியைத் தோற்றுவித்தது. ஃபுயூரியஸ் டிமெசிதியஸ் (Furius Timesitheus) என்ற திறமைமிக்கவரிடம் நிர்வாகப் பொறுப்பு ஒப்படைக்கப்பெற்றது இவரது காலத்தில். ஆர்தாஷீரின் மகனை ஷாப்பூர் (Shapur) ஆன்ட்டியோக் நகரைக் கைப்பற்றினர். புயூரியஸே படைத் தலைமையேற்று சென்று ஆன்ட்டியோக்ஸை விடுவித்து, ஷாப்பூரை விரட்டியடித்தார் (கி.பி. 243). ஆனால், விரைவிலேயே அவர் நோய்வாய்ப்பட்டு மரணமுற்றதால், ஜூலியஸ் பிலிப்பஸ் (J. Philippus—பிலிப் என்றும் இவரைச் சுருக்கமாக அழைக்கிறார்கள்) என்ற படையதிகாரி கிளர்ச்சிசெய்து, கார்டியானஸைத் தோலைத்துவிட்டு, முடிசூட்டிக்கொண்டார். ஐந்து ஆண்டுகள் (கி.பி. 244—249) நீடித்தது அவரது ஆட்சி. ஷாப்பூருடன் பேச்சு வார்த்தைகள் தொடங்கி அவரை ரோமின் மாநிலங்களிலிருந்து விலகிச் செல்வதற்கு வழிசெய்தார். செனேட்டுடனும் சுமுகமான உறவுகளை ஏற்படுத்திக்கொள்ள முயன்றார். ரோம்நகரம் நிறுவப்பட்டு ஆயிரம் ஆண்டுகள் முடிவுற்றதை யொட்டி கி.பி. 248-ல் கோலாகலமான விழா ஒன்றைக் கொண்டாடினர்.

ஆயினும், அரசருக்கெதிரான துரோகமும் படைக்கிளர்ச்சிகளும் ஒரு தொற்றுநோய்போல் எங்கும் பரவிவிட்டன. டேசியாவில் (Dacia) படைத்தளபதியாக இருந்த டிரையானஸ் டெசியஸ் (Traianos Decius) என்பவர் ரோமை நோக்கிப் படையெடுத்து வந்து, வெரோனை நகருக்கு (Uerona) அருகில் நடந்த ஒரு போரில் பிலிப்பஸைக்கொன்று ரோமின் அரியணையைக் கைப்பற்றினர். அன்னாரது ஆட்சி இரண்டாண்டுகளே (கி.பி. 249—251) நீடித்தது.

டான்யூப் நதிக்கரையில் டேசியாவில் தனக்கிடப்பட்டிருந்த எல்லைக் காவல் பணியை விடுத்து ரோமுக்கு டெசியஸ் புறப்பட்டு விட்டதைப் பயன்படுத்திக்கொண்டனர் கோத்துகளும் (Goths) வேறு பல குலத்தினரும். ஆசியாவிலிருந்து வந்த ஆலன்கள் (Alans) என்ற குலத்தினரால் விரட்டப்பட்டு, இவர்கள் ரோமானியப் பேரரசுக்குள் புகுந்து பால்கன் தீபகற்

பத்தில் குடியேற முயன்றனர். திரேஸில் வெகுதூரம் வரையில் முன்னேறினர். அவர்களைத் திருப்பி ஓட்டும் நோக்கத்தோடு புறப்பட்டுச் சென்ற டெசியஸ் கோத்துகளின் அரசரான க்னீவா (Cniva) என்பவரால் இரு போர்களில் தோற்கடிக்கப் பட்டார். கி.பி. 251-ல் நடைபெற்ற இரண்டாவது போரில் டெசியஸ் கொல்லப்பட்டார்.

இரண்டு மோசிய மாவட்டங்களுக்கும் கவர்னராக இருந்த **ட்ரெபோனியானஸ் காலஸ்** (Trebonianus Gallus) என்பவர் டெசியஸின் போர் நடவடிக்கைகளுக்கு உதவாமற் போனதே, இத்தோல்விகளுக்கு ஓரளவு காரணமாயிருந்தது. அரசராக வேண்டுமென்ற ஆசையில் அவர் அவ்வாறு செய்தார். எனவே, டெசியஸ் கொல்லப்பட்ட உடனேயே காலஸைப் பேரரச ரென அறிவித்தன அவரது படைகள். அடுத்து அவர் ரோமுக்கு வந்ததும் செனேட்டும் அவரை அரசராக ஏற்றுக்கொண்டது. அவரும் இரண்டாண்டுகளே (கி.பி. 251—253) அரியணையி லிருந்தார்.

அவருக்குப் பின் மோசியாவில் கவர்னரானவர் **ஏமிலியஸ் ஏமிலியானஸ்** (Aemilius Aemilianus) என்பவர். இவர் கோத்து களின் அரசரான க்னீவாவை எதிர்த்து உறுதியாகப் போரிட்டு, ரோமானிய எல்லைகளுக்கு அப்பால் அவர்களை விரட்டியடித்து (கி.பி. 253), தனது படைகளின் ஆதரவைப்பெற்று, ரோமில் அரசராகும் நோக்கத்தோடு இத்தாலிக்குள் படையெடுத்து வந்தார். இன்ட்டரெம்ன (Interemna) என்ற விடத்தில் நடந்த போரில் காலஸைக்கொன்று அரியணையைக் கைப்பற்றினர். அலெக்சாந்தர் செவெரஸைப்போலச் செனேட்டுடன் சேர்ந்து கொண்டு, இராணுவக் கலகங்கள் ஏற்படாமல் தடுத்து ஆள விரும்பினர். ஆனால், அரியணை ஏறிய ஆண்டிலேயே (கி.பி.253) அவரது படையினரே அவரைக்கொன்றனர்.

லிசீனியஸ் வெலேரியானஸ் (Licinius Valerianus) என்ற ஒருவரை அடுத்த அரசராக ஆக்கினர் படையினர். குடியரசுக் காலததுப் பிரபுக் குடும்பம் ஒன்றில் பிறந்த அவர் டெசியஸின் காலத்தில் 'சென்சாராக'ப் பதவி வகித்து, ரோமில் செல்வாக் குடன் விளங்கியவர்களில் ஒருவராவர். அவர் தமது மகனை **லிசீனியஸ் கேலியேனஸ்** (L. Gallienus) என்பவரையும் தம் மோடு இணை அரசராக அமர்த்திக்கொண்டு ஆண்டு வந்தார்.

செனேட்டின் முழு ஆதரவும் அவருக்கு இருந்தது. மேலும், பேரரசின் பல்வேறு அதிகாரிகளும் அவரை ஆதரித்தனர். இந்

நிலையில் அவரால் செம்மையான முறையில் பேரரசை ஆள முடிந்தது. எல்லைகளில் தோன்றிய சிக்கல்களே அவரது கவனத்தை அதிகம் ஈர்த்தன. அலெக்சாந்தர் செவெரஸின் காலம் முதல் இடைவிடாமல் நடைபெற்றுவந்த ஜெர்மானியக் குலங்களின் ஊடுருவல்கள் இப்பொழுது மேன்மேலும் அதிகரித்துவந்தன. டான்யூப் எல்லையின் ஒருமுனையில் கோத்துகளும், மறு முனையில் அலமன்னிகளும், கீழ்ரைன் பிரதேசத்தில் பிராங்குகள் (Franks) என்ற வன்மைமிக்க புதிய ஜெர்மென் குலங்களும், யூப்ரட்டீஸ் எல்லையில் பாரசிக மன்னரான ஷாப்பூரும் தொல்லை தந்தனர். ரோமின் எல்லைப்படைகளால் இவற்றில் எதையுமே சமாளிக்க முடியவில்லை.

கி.பி. 256-ஆம் ஆண்டில் ஆர்மீனிய அரசரான சோஸ்ரோஸை ஷாப்பூரின் ஆட்கள் கொலை செய்துவிட்டு, தமக்கு உதவக்கூடிய வேறொருவரை அரியணையில் அமர்த்தினர். அதன்பின் ஷாப்பூர் சிரியாவின்மீது மீண்டும் படையெடுத்து ஆன்ட்டியோக் நகரைக் கைப்பற்றிக் கொண்டார். சிரியாவை விடுவிப்பதற்காகப் பேரரசர் வெலேரியானஸே படையெடுத்துச் செல்ல வேண்டியதாயிற்று. ஐரோப்பாவில் ஜெர்மானியர்களின் தாக்குதல்களிலிருந்து மற்ற எல்லைகளைக் காப்பதற்கு லிசீனியஸ் கேலியேனஸ் அனுப்பப்பட்டார். கி.பி. 258-ல் ஆன்ட்டியோக் நகரம் மீட்கப்பட்டது. ஆயினும், எடெஸ்ஸா நகருக்கு (Edessa) அருகில் பேரரசர் தோல்வியுற்றார். அதனால், அவர் ஷாப்பூருடன் பேச்சு வார்த்தைகளைத் துவக்க வேண்டியதாயிற்று. தமது முகாமில் நடந்த பேச்சு வார்த்தைகளின் போது ஷாப்பூர் தம்மு எதிரியான வெலேரியானஸைக் கடத்திச் சென்று, சிறையிலிட்டுக் கொன்றார் (கி.பி. 259). இதனால், நிலை குலைந்துபோன ரோமானியப் படைகளை அவர் மீண்டும் தாக்கி, மூன்றாவது முறையாக கி.பி. 260-ல் ஆன்ட்டியோக் நகரைக் கைப்பற்றினார். தொடர்ந்து ஆசியாமைனரில் வேறுபல இடங்களும் ஒன்றன்பின் ஒன்றாக அவரால் கைப்பற்றப்பட்டன. மேலுமவர் மர்மோராக் கடல் (Sea of Marmora) வரையிலுமிருந்த ரோமானியப் பிரதேசங்களை வென்று, ஐரோப்பாவுக்குள்ளும் அடியெடுத்து வைக்கத் தயாரானார். ஆனால், அப்பொழுது எதிர்பாராத திசையிலிருந்து அவருக்கும் ஒரு பகைவன் தோன்றினான்.

வடக்கு அரேபியாவில் பாலைவனத்தின் நடுவில் ஒரு அகன்ற சோலையில் மிகவும் சீரும் சிறப்புமாக இருந்துவந்தது பால்மைரா (Palmyra) என்ற ஒரு நகர அரசு. தமாஸ்கஸ் நகருக்கும் செலூசியாவுக்கும் இடையேயான வாணிகம் இதன்

வழியாகவே நடைபெற்று வந்தது. அதாவது ஆன்ட்டியோக்கிலிருந்து ஆசியாவின் மற்ற பகுதிகளுடனான வாணிபத் தொடர்புகள் அனைத்துமே கிட்டத்தட்ட இதன் வழியாகவே நடைபெற்றன என்று சொல்லலாம். இரண்டாவது நூற்றாண்டில் அப்பகுதியில் பெருகிவந்த வாணிபம் காரணமாக இந்நகரமானது செல்வத்தில் மிதந்தது. ரோமானியப் பேரரசர்கள் பலரும்கூட அந்நகரத்தோடு நெருங்கிய தொடர்பு கொண்டிருந்தனர். அதன் குதிரை வீரர்கள் அவ்வழியாகச் சென்ற ஏராளமான வணிகர்களுக்குப் பாதுகாப்பு அளித்து வந்தனர். எனவே, அந்நகர் அவர்களிடமிருந்து ஒரு சிறு தொகையைக் கட்டணமாக வசூலித்துவந்தது. அதனால், அதன் நட்பைப் பெறும் எண்ணத்தோடு அதன் தலைவர்களுக்கு ரோமானியக் குடியுரிமையை அளித்துக் கௌரவித்தது ரோம். அந்நகரில் வாழ்ந்தவர்கள் அரேபியர்களே. ஆயினும், இந்த மரியாதையை அவர்களுக்கு அளித்தார் ரோமப் பேரரசர். (அவ்வாறு செய்தவர் ஹேட்ரியனா அல்லது செப்டிமியஸ் செவெரஸா என்பது தெளிவாகவில்லை.) இதற்குக் கைம்மாறுகத்தான் ரோமுக்கு பால்மைராநகரம் உதவி புரிய முன்வந்தது.

கி.பி. 260-ல் செப்டிமியஸ் ஒடேநாத்தஸ் (Septimius Odaenathus) என்ற செல்வரின் தலைமையில் பல்மைராவின் துருப்புக்கள் மெசபடேமியாவுக்குள் நுழைந்தன. இப்புதிய படையெடுப்பைச் சமாளிப்பதற்காக ஷாப்பூர் ஆசியமைனரை விட்டு ஓடி வரவேண்டிய தாயிற்று. அவர் பலபோர்களில் தோற்கடிக்கப்பட்டார். இதற்கிடையில், கடத்திச் சென்று கொல்லப்பட்ட வெலேரியானஸின் படைகளைப் பாரசீகரிடமிருந்து காத்து, அதன்மூலம் அப்படைகளின் ஆதரவைப் பெற்று, கேலியேனஸுக்குப்பதில் மாக்ரினஸின் இரண்டு பிள்ளைகளை அரசர்களாக்க முயன்றனர் இருபடைத் தளபதிகள். ஒடேநாத்தஸ் இந்தக் கலகத்தை ஒடுக்குவதில் அடுத்தபடியாகத் தமது கவனத்தைச் செலுத்தினர். இதை ஒடுக்கியபின் மீண்டும் மெசபொடேமியாவில் தனது போர்களைத் தொடர்ந்தார். கி.பி. 264-ல் அப்பிரதேசம் முழுவதும் அவரால் கைப்பற்றப்பட்டு, ரோமானியரிடம் ஒப்படைக்கப்பட்டது. இதனால், மகிழ்ந்த கேலியேனஸ் 'பால்மைராவின் அரசர்' என்ற பட்டத்தை ஒடேநாத்தஸுக்குச் சூட்டி, எகிப்திலும் யூப்ரட்டீஸ் பிரதேசத்திலும் இருந்த ரோமானியப் படைகளுக்குத் தளபதியாகவும் அவரை நியமித்தார்.

இவ்வாறு ஒரு சிறிய நகர அரசு தலையிட்டு ரோமின் கௌரவத்தையும் மாநிலங்களையும் காக்க வேண்டிய நிலை ஏற்பட்டு

விட்டது. ஒரு பெரிய பேரரசு இத்தகைய பரிதாபகரமான நிலைக்கு வீழ்ச்சியுற்றுவிட்டது. இரண்டு மூன்று ஆண்டுகளில் ஒடேநாத்தஸ் இறந்துபோனார். அவரது அரசியல், இராணுவ அதிகார மனைத்தும் அவர் மகனது கையில் ஒப்படைக்கப் பட்டது. ஆனால், ஒடேநாத்தஸின் மனைவியான செனோ பியாவே (Zenobia) உண்மையான அரசியாகத் திகழ்ந் தார். கிரேக்கக் கல்வி கேள்விகளில் சிறந்திருந்த இந்த அம்மையார் அரசியல் ஆதிக்கத்திலும் அதிக அக்கரை காட் டினர். செல்வத்திலும் படை வலியிலும் சிறந்திருந்த தனது அரசை அவர் ரோமைப்போல் வளர்க்க விரும்பினர். இவ்வாறு கிழக்கில் ரோமுக்கு ஒரு புதிய எதிர்ப்பு உருவாயிற்று.

கிழக்கில் இத்தகைய நிலைமை உருவாகி வந்தபோது, டான்யூப் நதி எல்லையில் கேலியேனஸ் என்ன செய்தார் என் பதை இப்பொழுது பார்ப்போம். கி.பி. 256-257-ல் அலமன்னி களின் தாக்குதல்களை அவர் முறியடித்தார். ரைன் நதிக்கும் டான்யூப் நதிக்கும் இடையிலிருந்த ஒரு சிறிய முக்கோண்ப் பகுதியானது அவர் வசம் வந்தது. மற்ற எல்லைப் புறங்களில் நடவடிக்கை யெடுப்பதற்கு அவர் பன்னோனியாவுக்கு அவசர மாகச் செல்ல வேண்டிய தாயிற்று. அங்கு ஒரு படைத்தளபதி தம்மையே பேரரசராக அறிவித்துக் கொண்டார். அதைச் சமாளிப்பதற்காகவே கேலியேனஸ் அவசரமாகச் சென்றார்.

ஜெர்மானியர்களின் நடமாட்டங்கள் தொடர்ந்து இருந்து வந்தன. கால் பிரதேசத்தின் கிழக்கு, மத்தியப் பகுதிகளிலும் வடகிழக்கு ஸ்பெயினிலும் பிராங்குகள் புகுந்து குடியேறினர். சாக்சன்கள் (Saxnes) என்ற புதிய ஜெர்மானியக்குலத்தினர் இச்சமயத்தில்தான் இங்கிலாந்துக்குள் நுழைந்தனர். கி.பி. 258-ல் கோத்துகள் மீண்டும் பால்கன் தீபகற்பத்தினுள் தமது தாக்குதல்களைத் துவக்கினர். பைசாண்ட்டியம் (Byzantium) நகரையும் திடீரெனத் தாக்கிக் கைப்பற்றிக்கொண்டனர். பின் னர், அவர்கள் பாஸ்பரஸ் ஜலசந்தியைக் கடந்து ஆசியா மைனரிலும் நுழைந்தனர். அங்குப் பித்தினியாவிலிருந்த நகரங் களில் பெரும் பகுதியையும் அவர்கள் கைப்பற்றினர். ஏஜி யன் கடலில் அவர்களது கப்பல்களின் நடமாட்டம் அதிக மாகியது.

இத்தகைய சூழ்நிலையில்தான் வெலேரியானஸ் கொல்லப் பட்டார். இதைப்பயன்படுத்திக் கொண்டு கேலியேனஸுக் குப் போட்டியாகப் பல மாநிலங்களிலும் படைத்தளபதிகள் கிளம்பினர். இவர்களையெல்லாம் ஒருவர்பின் ஒருவராகத்

தீர்த்துக்கட்டினர் கேலியேனஸ். மாநிலப்படைகளே பல தளபதிகளைக் கொன்று தீர்த்தன. ஆனால், காலில் மட்டும் லத்தீனியஸ் போஸ்த்துமஸ் (Latirius Postumus) என்ற தளபதியின் ஆதிக்கம் உறுதிப்பட்டு வளர்ந்தது. பிரிட்டன், ஸ்பெயின் ஆகியவற்றின் கவர்னர்களும் அவரையே தங்களது அரசரென ஏற்றுக்கொண்டனர். மற்றவர்களைப் போல் அவர் பேரரசுக்கு உரிமை கொண்டாடவில்லை; மேற்கு ஐரோப்பா மீது மட்டுமே உரிமை கொண்டாடினர். 'கால் நாட்டின் அரசர்' என்று கூறிக்கொண்டு, நாணயங்களையும் அச்சிட்டார் போஸ்த்துமஸ்.

இருப்பினும் கேலியேனஸ் அவரோடு போருக்குக் கிளம்ப முடியவில்லை. அதற்குக் காரணம் ஜெர்மானியர்களின் படையெடுப்புக்களை அவர் சமாளிக்க வேண்டியிருந்ததுதான். அலமன்னிகள் ரைன் நதியைக் கடந்து இரண்டு கூட்டமாகப் பிரிந்து, ரோன் நதிப் பள்ளத்தாக்கிலும், இத்தாலியிலும் நுழைந்தனர். இத்தாலியில் நுழைந்தவர்களை கேலியேனஸும் அவரது படைத்தலைவர்களும் வெட்டி வீழ்த்தினர். அதே நேரத்தில் போஸ்த்துமஸ் காலிலும் ஸ்பெயினிலுமிருந்து பிராங்குகளை விரட்டும் வேலையில் கி.பி. 268 வரையில் ஈடுபட்டிருந்தார். இவ்வாறு இருவருமே தத்தம் பகுதிகளில் ஜெர்மானியரோடு போரிடுவதில் ஈடுபட்டிருந்ததால், அவர்களுக்கிடையிலான உள்நாட்டுப் போர் நடக்காமல் தடைபட்டு நின்றது.

மேலும், கேலியேனஸ் மேற்கில் ஜெர்மானியரோடு போரிட்டு வந்த வேளையில், அதுதான் சமயமென்று கிழக்கில் தமது படையெடுப்புக்களை மீண்டும் துவக்கினர் கோத்துகள். கி.பி. 267-ல் பால்கனில் தெசலோனிக்கா நகரம் (Thessalonica) அவர்களால் முற்றுகையிடப்பட்டது. அவர்களோடு சேர்ந்த வேறு சில ஜெர்மானிய குலங்கள் ஆதன்ஸ் நகரையும் கைப்பற்றின. கேலியேனஸே படைத் தலைமை பூண்டு பால்கல் தீபகற்பத்துக்குள் நுழைந்தார். அவரது தளபதிகளில் ஒருவர் ஆதென்ஸ் நகரை மீண்டும் கைப்பற்றினர்; மற்றொருவர் கோத்துகளின் கடற்படையைத் தோற்கடித்தார். இச் சமயத்தில், கோஸ்த்துமஸுக்கு எதிராக அனுப்பப்பட்ட அசீலியஸ் அவுரியோலஸ் (Acilius Aureolus) என்ற தளபதி தனது கடமையைக் கைவிட்டு, அதிகாரத்தைக் கைப்பற்றும் நோக்கத்தோடு ரோமை நோக்கிப் படையுடன் சென்றார். இதைக் கேள்வியுற்ற கேலியேனஸ் பால்கனிலிருந்து வேகமாகத் திரும்பி வந்து, அவரை விரட்டி. மிலான் நகரை முற்றுகை

யிட்டிருந்தபோது அவரது படை அதிகாரி ஒருவரே அவரைக் கொலை செய்தார். (கி.பி. 268) எனினும், அவரது ஆட்சியின் போதும், அடுத்து அரசாண்ட இரு பேரரசர்களின் ஆட்சியின் போதும் ரோம் மீண்டும் ஒரு சிறிது தலைதூக்கியது எனலாம்.

கேலியேனஸைக் கொலை செய்வித்த இருவரே அடுத்தடுத்து பேரரசர்களாயினர். முதலில் அரியணையேறி அரசாண்டவர் **அவுரேலியஸ் கிளாடியஸ்** என்பவர். அவர் இலீரியாவைச் சேர்ந்தவர். கேலியேனஸைக் கொலை செய்த உடனேயே, அவுரியோலஸையும் தொலைத்துக் கட்டினார். அப்பொழுது மீண்டும் படையெடுத்து வந்த அலமன்னிகளை வெகு எளிதாக முறியடித்து விரட்டினர். கி.பி. 269ல் கோத்துனர் பால்கன் தீபகற்பத்தினுள் மீண்டும் தாக்குதல் நடத்தினர். அவர்கள் கூட்டங் கூட்டமாக டான்யூப் நதியைக் கடந்து, பாஸ்பரஸ் ஜலசந்தி வழியாக மத்திய தரைக்கடலில் கப்பலோட்டி, சைப்ரஸ் தீவு வரையில் சென்றனர். ஆனால், துரிதமாகப் படை நடத்தி, தரையிலும் கடலிலுமாக அவர்களை அழித்தொழித்தார் கிளாடியஸ். அவர்களில் எஞ்சியிருந்தவர்கள் சரணடைந்தனர். அவர்கள் டான்யூப் பிரதேசத்திலிருந்த காலியிடங்களில் குடியமர்த்தப்பட்டனர். இந்தப் படுநாசத்திலிருந்து மீண்டும் தலைதூக்குவதற்குக் கோத்துகளுக்கு ஒரு நூற்றாண்டு பிடித்தது. எனவே, சுமார் ஒரு நூற்றாண்டுக் காலம் வரை இவர்களது தாக்குதல்களிலிருந்து தப்பியது ரோமப் பேரரசு. கால்களை இவ்வாறு அடியோடு அழித்தொழித்த பேரரசரைக் கிளாடியஸ் கோத்திகஸ் (Glaudius Gothicus) என்று மக்கள் கொண்டாடினர். ஆயினும் அவர் விரைவிலேயே பிளேக் நோயால் இறந்தார்.

அடுத்தபடியாக அவரது சகோதரர் ஒருவரை அரசராக்கியது இத்தாலியப் படை. ஆனால், டொமீஷியஸ் **அவுரேலியானஸ்** என்பவரை அரசராக்கியது பால்கனிலிருந்த படை. அவர் கிளாடியஸின் நெருங்கிய நண்பரும், சிறந்த தளபதியும் ஆவார். எனவே, இத்தாலியப் படையானது தான் நியமித்த ஆளைக் கொலை செய்துவிட்டு, அவரையே ஆதரிக்க முன் வந்தது. ஐந்தாண்டுகள் (270-275) ஆட்சி புரிந்த அம் மன்னர் டான்யூப் நதிக்கு அப்பாலிருந்த டேசியாவிலிருந்து ரோமானியப் படைகளையும் குடிமக்களையும் தென் கரைக்குத் திரும்பி வருமாறு அழைத்து, டான்யூப் நதிக்கு அப்பாலிருந்த டேசியாவிலிருந்து ரோமானியப் படைகளையும் குடிமக்களையும் தென்கரைக்குத் திரும்பிவருமாறு அழைத்து, டான்யூப் நதியையே ரோமின் எல்லையாகக் கொண்டார்.

கி.பி. 271-ல் நான்காவது முறையாக அலமன்னிகள் இத்தாலிக்குள் படையெடுத்து அரிமினம் நகர்வரையில் வந்து விட்டனர். ஆரம்பத்தில் அவர்களிடம் தோல்வியுற்ற அவுரேலியானஸ் இறுதியில் வெற்றி பெற்று அவர்களை அழித்தொழித்தார்.

பின்னர், பால்மைராவின் அரசியான சினேபியாவின் பக்கம் அவரது கவனம் திரும்பியது. அந்த அரசியார் பாரசீகத்தோடு நட்பு கொண்டு, ரோமுக்குப் பகையாக மாறி வந்தார். அவுரேலியானஸ் அலமன்னிகளுடன் போரிட்டுக் கொண்டிருந்த வேளையில் ஆசியா மைனர்மீது தாக்குதல் தொடுத்த சினேபியா பாஸ்பரஸ் ஜலசந்தி வரை கைப்பற்றிவிட்டார். அதே சமயம் எகிப்துக்குள்ளும் அவரது படைகள் நுழைந்தன. ஆனால், ரோமானியத் தளபதியான புரோபஸ் (Probus) எகிப்திலிருந்து அப்படைகளை விரட்டியடித்தார் (கி.பி. 271). அடுத்த ஆண்டில் பேரரசரே நேரில் வந்து போரில் ஈடுபட்டு எமேசாவில் நடைபெற்ற ஒருகடும் சண்டையில் சினேபியாவைத் தோற்கடித்துச் சிரியாவை மீண்டும் கைப்பற்றினர். பின்னர் பால்மைரா நகரம் முற்றுகையிடப்பட்டது. பாரசீகர்களின் படைப்புதவியைப் பெறும் நோக்கத்துடன் அந்நகரிலிருந்து வெளியே செல்ல முயன்ற சினேபியா ரோமானியப் படைகளிடம் சிக்கினர். உடனே, அந்நகரம் பணிந்தது (கி.பி. 272). அதன்பிறகு சினேபியாவைப் பதவியிலிருந்து நீக்கிவிட்டு, தனது படை ஒன்றை அங்கு நிறுத்திவிட்டு அவுரேலியா, இத்தாலி திரும்பினர். பால்மைராவிலிருந்த ரோமானியப் படைகளை 'மக்கள் கிளர்ந்தெழுந்து கொன்று தீர்த்துவிட்டனர்' என்ற செய்தி திரேசில் அவருக்குக் கிடைத்தது. உடனே அவர், அந்நகருக்குத் திரும்பிச் சென்று, அதை மீண்டும் தாக்கிக் கைப்பற்றி, மக்கள் அனைவரையும் கொன்று, நகரையும் தரையோடு அழித்தொழித்தார். செழிப்போடிருந்து வந்த ஒரு நகரம் (கார்த்தேஜைப் போல்) இவ்வாறு திடீரென்று அழித்தொழிக்கப்பட்டது. 18-ஆம் நூற்றாண்டில்தான் அதன் இடிபாடுகள் கண்டு பிடிக்கப்பட்டன.

அதன் பிறகு, பேரரசர் காலம் தாழ்த்தாது மேற்கு ஐரோப்பாவை நோக்கி விரைந்தார். போஸ்த்துமஸ் நிறுவிய 'கால் அரசைக்' கவனிப்பதற்கு அப்போதுதான் அவருக்கு அவகாசம் கிடைத்தது. போஸ்த்துமஸும் தமது புதிய அரசை ஒரு சில ஆண்டுகளே ஆள முடிந்தது. ரோமுக்கு எதிராகப் படைக் கலகம் செய்து, புதிய அரசை நிறுவிய அவரையே கி.பி. 268-ல் அவரது படைகள் தீர்த்துக் கட்டின. பின்னர்

அவரை அடுத்துப் பதவி வகித்த மூன்று பேரும் அவ்வாறே கொலையுண்டனர். இறுதியில் கால் அரசின் செனேட்டே பயஸ் டெட்ரிக்கஸ் (Pius Tetricus) என்பவரை அரசராகத் தேர்ந்தெடுத்தது. அவர்தான் அவுரேலியானஸை எதிர்த்துப் போரிட்டு கி.பி. 273-ல் தோற்றுச் சரணடைந்தார்.

பின்னர், ரோமுக்குத் திரும்பிய பேரரசர் அவுரேலியானஸ் (இவரும் அவுரேலியன் அல்லது அவுரேலியஸ் என்று சுருக்கமாக அழைக்கப்படுகிறார்) கிழக்கிலும் மேற்கிலும் பெற்ற பெரு வெற்றிகளைக் கொண்டாடுவதற்கென்று வெற்றி ஊர்வலம் ஒன்றை நடத்தினர். சினேபியாவும் டெட்ரிக்கஸும் அவ்வூர் வலத்தில் காட்சிப் பொருளாக நடத்திச் செல்லப்பட்டனர். ஆயினும், இவ்விருவரையும் பேரரசர் மிகுந்த பெருந்தன்மையோடு நடத்தினர். ரோமில் எல்லா வசதிகளோடும் மற்றவர்களைப் போல வாழ்வதற்கு அனுமதிக்கப்பட்டார் சினேபியா. டெட்ரிக்கஸுக்கும் ஒரு நல்ல அரசாங்கப் பதவி கொடுக்கப்பட்டது. இவ்வாறு மறுபடியும் ரோமப் பேரரசை நிறுவிய பெருமை அவுரேலியஸையே சாரும்; 'பேரரசின் எல்லைகளை மீண்டும் நிறுவியவர்' (Restitutor Orbis) என்ற பட்டத்தையும் அவர் சூட்டிக் கொண்டார். ஆனால், கி.பி. 275-ல் பாரசீக சசானிய அரசர்களுக்கெதிராகப் போருக்கு ஆயத்தம் செய்து கொண்டிருந்தபொழுது, சில அதிகாரிகள் அவரைக் கொன்று விட்டனர். அதனால், மீண்டும் ரோமப் பேரரசு சரிய ஆரம்பித்தது.

அடுத்த பேரரசரைச் செனேட்டே நியமிக்கலாமென்று கூறிவிட்டனர் படையினர். இங்ஙனம், தனது உறுப்பினர்களில் ஒருவரான, எழுபது வயதுக்கும் மேலான கொர்னீலியஸ் டேசிட்டஸ் (C. Tacitus) என்பவரைச் செனேட் அடுத்த பேரரசராக நியமித்து, அவர் போர்க்கோலம் பூண்டு ஆசியமைனர் சென்று, அங்குப் படையெடுத்து வந்திருந்த கோத்துகளையும் ஆலன்களையும் தோற்கடித்தார். ஆயினும், கி.பி. 276-ல் அவரையும் படையினர் கொலைசெய்துவிட்டு அவரது சகோதரரான அன்னியஸ்ஃபுளோரியானஸ் (Annius Florianus) என்பவரை அடுத்த அரசராக நியமித்தனர். அதேசமயம் கிழக்கிலிருந்த வேறுபடைகள், அவுரேலியானஸின் தளபதிகளில் ஒருவரான அவுரேலியஸ் புரோபஸைப் (A. Probus) பேரரசராக்கியுள்ளன என்பதைக் கேள்வியுற்று, தாம் நியமித்த அரசரைக் காட்டிலும் புரோபஸே திறமைமிக்கவர் என்பதைக்கண்டு இத்தாலியப்படைகள் புளோரியானஸைக் கொன்று தீர்த்தன.

புரோபஸ் திறமை மிக்க மனிதர். கடந்த பல ஆண்டுகளாகவே கால் மாநிலத்தில் புகுந்து வந்த அலமன்னிகளையும் கோத்துகளையும் அங்கிருந்து விரட்டியடித்தவர் அவர். மீண்டும் ரைன், டான்யூப் நதிகளின் கரைவரை ரோமின் ஆதிக்கத்தை நிறுவினர். பின்னர், பேரரசின் பொருளாதாரத்தைச் செப்பனிடும் வேலையில் இவர் ஈடுபட்டார். ஆனால், கி.பி. 282-ல் அதாவது ஆருண்டு ஆட்சிக்குப் பிறகு, அவரையும் கொலை செய்தன பன்னெனிய மாநிலத்துப் படைகள்.

இலீரிய மாநிலத்தைச் சேர்ந்த **அவுரேலியஸ் கேருஸ்** (A. Carus) என்பவரை அடுத்த பேரரசராக்கின படைகள் (கி.பி. 282–283). புதிய பேரரசர் ஆர்மீனியாவையும் மெசபொடோமியாவையும் கைப்பற்றி யிருந்த பாரசீக மன்னர் பஹ்ராமுக்கு எதிராகப் போர்க்கோலம் பூண்டு புறப்பட்டுச் சென்று அம்மாநிலங்களை மீட்டனர். ஆனால், போர்க்களத்திலேயே அவரது அதிகாரிகள் அவரை வெட்டி வீழ்த்தினர். அவரோடு அவரது மூத்த மகன் **கேரினஸ்** (Carinus) என்பவரும், மற்றொரு மகன் நியூமெரியானஸ் (Numerianus) என்பவரும் சேர்ந்து ரோமப்பேரரசை ஆண்டு வந்தனர். கேரியானஸ் இத்தாலியிலும், நியூமெரியானஸ் தனது தந்தையோடு ஆசியாவிலும் இருந்துவந்தனர். கேருஸ் கொலை செய்யப்பட்ட உடன் தனது படைகளோடு ஆசியாமைனர் வழியாகத் நியூமெரியானஸ் திரும்பிக்கொண்டிருந்தபோது, அங்கு அவரையும் கொலை செய்தனர் படையினர்.

பிரேட்டோரியக் காவற்படையின் தளபதியான **அவுரேலியஸ் டயோகிளேஷியானஸ்** (A. Diocletianus) என்பவர் அடுத்த அரசராக நியமிக்கப்பெற்றார். அவர் உடனே இத்தாலியை நோக்கிக் கிளம்பினர். அவரை எதிர்ப்பதற்குக் கோரினஸ் படையெடுத்துவந்தார். கி.பி. 295-ல் மார்க்கஸ் நதியின் (Margus) கரையில் (இது மொராவாவில் Moraua—உள்ளது) இருவரும் சந்தித்துப் பொருதனர். டயோகிளேஷியன் வென்றார்; கேரினஸ் போரில் மடிந்தார். இங்ஙனம் டயோகிளேஷியன் கி.பி. 284-ல் அரியணையேறினர்.

டயோகிளேஷியன் கி.பி. 284–305

ஆட்சி முறை : ரோமுக்கு மீண்டும் நல்ல காலம் பிறந்தது. ஐம்பது ஆண்டுகளில் பதினெட்டு அரசர்களைக் கண்ட ரோம் இருபதாண்டுக்காலம் ஐக்கியத்தோடும் அமைதியோடும் வெற்றியோடும் வாழத் தொடங்கியது. இலீரியாவைச் சேர்ந்த டயோ

கிளேஷியன் சுமார் இருபதாண்டுகள் மிகவும் திறமையோடு ரோமப் பேரரசை ஆண்டார். படை நடத்தும் திறமை மட்டும் அவரிடம் இல்லை. அவரே அதை உணர்ந்திருந்தார். எனவே, போர்த் திறமைமிக்கவரும் இலீரியாவைச் சேர்ந்தவருமான அவுரேலியஸ் வெலேரியஸ் மாக்சிமியானஸ் (A. V. Maximianus) என்பவர் இணையரசராக ஆக்கிக் கொண்டார் (கி.பி. 286). அகஸ்டஸுக்கு அக்ரிப்பா இருந்ததைப்போல டயோகிளேஷியனுக்கு மாக்சிமியன் (இது சுருக்கமாக அழைக்கும் பெயர்) இருந்தார் எனலாம். தனக்குப் பின்னரும் எவ்வித சிக்கலும் இருக்கலாகாது என்று எண்ணிய டயோகிளேஷியன் கி.பி. 239-ல் இரண்டு இளைய படையதிகாரிகளை தனது வாரிசுகளாக நியமித்து 'சீசர்கள்' என்ற பட்டத்தையும் அவர்களுக்குச் சூட்டினர். (இணையரசர்களாக இருந்துவந்த டயோகிளேஷியனும் மாக்சிமியனும் அகஸ்டஸ் என்ற பட்டத்தைச் சூட்டிக்கொண்டிருந்தனர்.) ஃபிளேவியஸ் வெலேரியஸ் கான்ஸ்டான்டியஸ் (F. V. Constantius), கலேரியஸ் வெலேரியஸ் மாக்சிமியானஸ் ஆகியோரே அவ்விருவரும்.

டயோகிளேஷியனின் காலத்தில் பேரரசானது நான்கு பகுதிகளாகப் பிரிக்கப்பட்டு இந்நால்வரின் மேற்பார்வையில் இருந்து வந்தது. கிழக்கத்திய மாநிலங்கள் டயோகிளேஷியனின் பொறுப்பில் இருந்துவந்தன. இத்தாலியும் ஆப்பிரிக்காவும் மாக்சிமியனின் பொறுப்பிலும், டான்யூப் மாநிலங்கள் கலேரியஸின் பொறுப்பிலும், மேற்கு மாநிலங்கள் கான்ஸ்டான்டியஸின் பொறுப்பிலும் விடப்பட்டன. ஆயினும், பேரரசு முழுவதுக்கும் பொறுப்பு வகித்தவர் டயோகிளேஷியன்தான். இத்தகைய பங்கீடு ரோமப் பேரரசின் வீழ்ச்சிக்கு ஒரு காரணமாயிருந்தது என்று பலரால் கருதப்படுகிறது. இருப்பினும் டயோகிளேஷியனின் ஆட்சியில் இப்பங்கீடு வந்தது என்பதை மறந்துவிடக்கூடாது. பேரரசின் ஆட்சித் திறமையே அதற்குக் காரணம். சிறந்த படைத் தளபதிகள் மூவரைத் தனக்குக் கட்டுப்பட்டு, நிர்வாகத்தில் பொறுப்பேற்கச் செய்து பேரரசில் அமைதி நிலவும்படி செய்தது அவரது திறமையைக் காட்டுகிறது.

கலகங்கள் : அவரது ஆட்சியிலும் படைக்கலகங்கள் இல்லாமலில்லை. சான்ருக, கி.பி. 296-ல் அலெக்சாந்திரியாவில் ஒரு படைத்தளபதி பேரரசராகத் தன்னை அறிவித்துக் கொண்டார். டயோகிளேஷியனே நேரில் படையுடன் சென்று இக்கிளர்ச்சியை நசுக்கினர். அதேபோல் பத்தாண்டுகளுக்கு

முன்பு, ஆங்கிலேயக்கால்வாயில் ரோமானியக் கடற்படைக்குத் தளபதியாயிருந்த அவுரேலியஸ் கராசியஸ் (A. Carausius) என்பவர் 'அகஸ்டஸ்' என்ற பட்டத்தைச் சூட்டிக் கொண்டு, பிரிட்டனைக் கைப்பற்றி அதைத் தனது அரசாக ஆக்கிக் கொண்டார். முன்பு போஸ்துமஸ் அமைத்த 'கால் அரசைப் போன்றது இந்தப் 'பிரிட்டிஷ் அரசு.' மாக்சிமியனால் இந்தக் கலகத்தை அடக்க முடியவில்லை. கராசியஸின் கடற்படை வலிமையே இதற்குக் காரணம். இறுதியில் கி.பி. 290-ல் மாக்சிமியன் அவரோடு ஒரு சமாதான உடன்படிக்கையைச் செய்து கொள்ள வேண்டியதாயிற்று. ஆனால், கி.பி. 239-ல் கராசியஸ் கீழ் அதிகாரி ஒருவரால் கொலைசெய்யப்பட்டார். அலெக்டஸ் (Allectus) என்ற இந்த அதிகாரியே 'பிரிட்டிஷ் அரசின்' அடுத்த அகஸ்டஸ் என அறிவித்துக்கொண்டார். இந்நிலையில் கான்ஸ்டான்டியஸ் படையெடுத்துச்சென்று, இவரைத் தோற்கடித்துக் கொன்று, பிரிட்டனில் மீண்டும் ரோமின் ஆதிக்கத்தை நிலை நாட்டினார்.

போர்கள் : டயோகிளேஷியன் காலத்திலும் எல்லைகளில் பல போர்கள் நடைபெற்றன. உள்நாட்டுப் போர்கள் எதுவும் நடைபெறுததால், இந்த எல்லைப் போர்களில் அவராலும் அவரது வாரிசுகளாலும் அதிக கவனம் செலுத்த முடிந்தது. அலமன்னிகள் கால்மீது படையெடுத்து வந்தபோது முதலில் மாக்சிமியனும், பின்னர் கான்ஸ்டான்டியஸும் அவர்களை அடித்து விரட்டினர். கி.பி. 284-ல் பாரசீக மன்னர் பஹ்ராமுடன் டயோகிளேஷியன் உடன்படிக்கை ஒன்று செய்து கொண்டார். அதன்படி ஆர்மீனியாவும் மெசபொடேமியாவும் ரோமுக்குக் கிடைத்தன. ஆனால், கி.பி. 296 நார்செஸ்(Narses) என்ற வேறொரு பாரசீக அரசரின் காலத்தில் இரு அரசுகளுக்குமிடையில் மீண்டும் போர்கள் துவங்கின. பன்னிரண்டு ஆண்டுகளுக்கு முன் ரோமானியர் பெற்ற அவ்விரு மாநிலங்களையும் மீண்டும் கவர்ந்து கொள்ள நார்செஸ் படையெடுத்தபோது அவருக்கு எதிராகக் கலேரியஸ் அனுப்பப்பட்டார். பாரசீகப் படைகள் தோற்கடிக்கப்பட்டன. நார்செஸ் போரைக் கைவிட்டு, சமாதானம் கோரினர். டைகிரிஸ் நதிப் பள்ளத்தாக்கின் மேல்பகுதியும் இப்பொழுது மெசபொடேமியாவோடு சேர்த்துக் கொள்ளப்பட்டது. எல்லைப்புறங்களில் பலத்த அரண்கள் கட்டப்பட்டன. இச்சமயத்தில் ஆர்மீனிய அரசரான முன்றும் திரிடேட்டஸ் என்பவர் கிறிஸ்துவ சமயத்தைத் தழுவினர். இதனால், பாரசீக மன்னருக்கும் இவருக்குமிடையில் முரண்பாடுகள் அதிகரித்தன. எனவே, ரோமுடன் இவரது உறவுகள் மேலும் உறுதிப்பட்டன.

டயோகிளேஷியன் **பதவி துறத்தல்**, டயோக்கிளேஷியன் ஏற்படுத்திய அதிகாரப் பங்கீட்டுமுறை நல்ல முறையிலேயே செயல்பட்டு வந்தது. அதற்கு முக்கியமான காரணம் அரசரின் திறமையும் பண்புகளுமே. இவ்வாறெல்லாம் நல்லமுறையில் இயங்கி வந்த நேரத்தில் திடீரென்று கி.பி. 305-ல் டயோகிளேஷியன் அரசபதவியைத் துறந்தார். தன்னுடன் மாக்சிமியனையும் பதவி துறக்கும்படி செய்தார். அடுத்த 'சீசர்கள்' இருவருக்கும் 'அகஸ்டஸ்களாகும்' வாய்ப்பை விரைவிலேயே அளிக்க வேண்டும் என்று அவர் எண்ணினார் போலும்! இவ்வாறு அவர் திடீரென்று துறவறம் பூண்டதால், அவர் நிறுவியிருந்த ஆட்சிமுறைக்கு ஆபத்து வந்தது.

கான்ஸ்டன்டைன், கி.பி. 306-337

குழப்பம்: கி.பி. 305-ல் இவ்வாறு அரியணை யேறிய புதிய அகஸ்டஸ்களுக்கு, வாரிசாக இரண்டு புதிய 'சீசர்களையும்' நியமித்த பின்னர் அரசியலிலிருந்து முழுமையாக ஓய்வு பெற்றார் டயோகிளேஷியன். இப்புதிய பேரரசர்களான **கலேரியஸும்**, **கான்ஸ்டான்டியஸும்** ஓராண்டு மட்டுமே சேர்ந்து ஆண்டனர். இவர்களது ஆட்சியிலும் ரோமப் பேரரசு மீண்டும் பங்கிடப்பட்டது. ஒருவரது பகுதியில் மற்றவர் சிறிதும் தலையிட முடியாதவாறு இப்பங்கீடு அமைந்து, பேரரசே இரண்டு தனித்தனி அரசுகளாக ஆகிவிட்டதுபோல் தோன்றியது. இந்நிலையில் பேரரசின் மேற்குப்பகுதியைப் பெற்றிருந்த கான்ஸ்டான்டியஸ் இங்கிலாந்தில் யார்க்நகரில் கி.பி. 306-ல் இறந்துபோனார். அது வரை மூத்த அகஸ்டஸாக இருந்து வந்த அவரது இடத்தை கலேரியஸ் வகிக்கலானார். ஆனால், மேற்குப் பகுதியில் அவரது ஆணைகளை எந்த அதிகாரியும் ஏற்றுக் கொள்ளத் தயாராக இல்லை. அந்த அளவுக்குப் பங்கீட்டுமுறை பேரரசைப் பாதித்திருந்தது.

கான்ஸ்டன்டைன் ஆட்சியைக் கைப்பற்றுதல்: காலிலும் பிரிட்டனிலுமிருந்த கான்ஸ்டான்டியஸின் துருப்புக்கள் அவரது மகனை கான்ஸ்டன்டைன் (Constantine) என்பவரை அரசராக அறிவித்தன. அதேபோல் மாக்சிமியனின் படைகளும் ரோமிலிருந்த பிரேட்டோரியக் காவற்படையும் அவரது மகனை மாக்சென்ஷியஸ் (Maxentius) என்பாரை அரசராக அறிவித்தன. அவர் இத்தாலியையும் ஆப்பிரிக்காவையும் கைப்பற்றினார். அவரது தந்தையான மாக்சிமியனும், பேரரசரான கலேரியஸும் அவருக்கெதிராகப் போரிட்டுத் தோற்றனர்.

(கி.பி. 306–308) இப்பூசல்களைத் தீர்த்து, அமைதியை மீண்டும் நிலை நாட்டுமாறு டயோகிளேஷியனைப் பலரும் கேட்டுக் கொண்டனர். ஆனால், அவரோ இதில் தலையிடவே மறுத்து விட்டார். இந்நிலையில், தான் தோற்றுவித்த நிர்வாக ஏற்பாடு சீர்குலைவதைக் கண்டபின் கி.பி. 316-ல் அவர் மரண முற்றார்.

முதலில் ரைன் நதிப் பிரதேசத்திலும் பிரிட்டனிலும், குழப் பங்களை ஒடுக்கி, அமைதியை நிறுவிய கான்ஸ்டன்டைன் ரோமில் ஆட்சியைக் கைப்பற்றும் முயற்சியில் ஈடுபட்டார். இதற்கிடையில் இத்தாலியில் தனது மகனிடம் தோற்ற, மாக்சி மியன் கால் மாநிலத்தைக் கைப்பற்றும் நோக்கத்தோடு அப் பகுதிக்கு வந்தார். அங்கும் கான்ஸ்டன்டைனிடம் அவருக் குத் தோல்வியே கிடைத்தது. இருப்பினும் கான்ஸ்டன்டைன் அவரை மன்னித்து விடுதலை செய்தார். ஆனால், இரண்டாண்டு களுக்குப் பிறகு, மீண்டும் தனக் கெதிரான சதிகளில் ஈடுபட்ட தாக அவர் மீது குற்றம் சாட்டி அவரைக் கொன்றார் கான்ஸ்டன்ஸ்டைன்.

இதையறிந்த மாக்சென்ஷியஸ் தமது தந்தையின் கொலைக் குப் பழி வாங்குவதாகச் சொல்லிக்கொண்டு, ரோமின் அரி யணையைக் கைப்பற்றுவதற்குக் கான்ஸ்டன்டைன் வரும் வரை காத்திராமல், கி.பி. 311-ல் கால் மீது படையெடுக்கத் தயா ரானார். இதையறிந்த கான்ஸ்டன்டைன் அவர் வரும் வரை காத்திராமல், தாமே விரைந்து சென்று, ஆல்ப்ஸ் மலைகளைக் கடந்து, இத்தாலிக்குள் நுழைந்தார். அவரது முன்னேற்றத் தைத் தடுப்பதற்கென்று அனுப்பப்பட்ட மாக்சென்ஷியனின் படைகள் பல விடங்களில் தோற்கடிக்கப்பட்டன. இறுதியில் கி.பி. 312-ல் ரோம் நகரின் மதிலுக்கு வெளியே டைபர் நதியின் கரையில் மில்வியன் பாலத்துக்கு (Milvian bridge) அருகில் இருதரப்புக்கு மிடையில் ஒரு கடும்போர் நடைபெற்றது. அதில் மாக்சென்ஷியஸ் தோல்வியுற்றார். ரோமப் பேரரசின் மேற்குப் பகுதி முழுவதும் வெற்றியோடு ரோம் நகரில் நுழைந்த கான்ஸ்டன்டைனின் காலடியில் வீழ்ந்தது.

கி.பி. 311-ல் கிழக்கத்திய மாநிலங்களில் கலேரியஸ் கால மானார். அம்மாநிலங்களைக் கைப்பற்றி அரசராவதற்கென்று அவரது படையதிகாரிகள் இருவர் உடனே உள்நாட்டுப்போர் துவக்கினர். அவர்களில் ஒருவர் வெலேரியஸ் மாக்சிமினஸ் டேயா (Valerius Maximius Daia) ஆசியாவிலும் எகிப்திலும் படைத்தளபதியாக இருந்தவர். மற்றவர் வெலேரியஸ்

லிசீனியானஸ் லிசீனியஸ் (V. Licinianus Licinius). இவர் டான்யூப் மாநிலங்களில் படைத்தளபதியாக இருந்தவர். கி.பி 313-ல் மாக்சிமினஸ் திடீரென்று லிசீனியஸைத் தாக்கி, பைசாண்டியம் நகரையும் வேறு பல விடங்களையும் கைப்பற்றினர். ஆனால், லிசீனியஸ் தனது படைகளை விரைவிலேயே திரட்டித் தனது பகைவனை விரட்டியடித்து ஆசியாமைனருக்குள் புகுந்தார். இச்சமயத்தில் மாக்சிமினஸ் திடீரென இறந்து போகவே கிழக்கு மாநிலங்கள் அனைத்துமே லிசீனியஸின் ஆதிக்கத்தில் சிக்கின.

ரோமைக் கைப்பற்றித்தனது ஆட்சியை நிறுவிய கான்ஸ்டன்டைன் கிழக்கு நோக்கிப் புறப்பட்டுச்சென்று பன்னோனியாவில் நடந்த போர்களில் லிசீனியஸ் தோற்கடித்தார். சமாதானம் செய்துகொள்ள முன்வந்த லிசீனியஸ் (கி.பி. 314) திரேஸ் பிரதேசத்தைத் தவிர பால்கன் தீபகற்பம் முழுவதையும் கான்ஸ்டன்டைனிடம் ஒப்படைத்தார். இவ்விதம் இருவருக்குமிடையில் ஒன்பதாண்டுகள் அமைதி நிலவியது. இருப்பினும், இறுதியில் 'மற்றொரு போர் ஏற்பட்டே தீரும்' என்பதை இருவருமே உணர்ந்திருந்தனர். அதற்கான ஏற்பாடுகளும் நடந்து வந்தன. ஒன்பது ஆண்டுகளுக்குப் பிறகு மீண்டும் போர் துவங்கியது. அதில் ஏட்ரியா நோப்பிள் நகருக்கு (Adria nople) அருகில் லிசீனியஸ் தோற்று ஏரோப்பாவை விட்டே ஓடினர் (கி.பி. 323). அவரை விரட்டிச் சென்ற கான்ஸ்டன்டைன். 'தம்மைக் கொல்வதில்லை' என்று வாக்குறுதி அளித்த பிறகு கான்ஸ்டன்டைனிடம் சரணடைந்து ஓராண்டுக் காலத்திற்குள் பேரரசரால் கொலை செய்விக்கப் பெற்றார்.

கான்ஸ்டான்ட்டி நோப்பிள் நகரம்: இவ்வாறு கி.பி. 323 ஆம் ஆண்டில் மீண்டும் ரோமப் பேரரசு ஒன்றுபட்டது. நிர்வாகத்திலும் இராணுவத்திலும் பல மாறுதல்களைச் செய்தார் கான்ஸ்டன்டைன். அவற்றைப் பற்றிப் பின்னர் பார்ப்போம். கி.பி. மூன்றும் நூற்றாண்டின் இடைப்பகுதி முதலே, ஜெர்மானியர் போன்றோரின் படையெடுப்புக்கள் காரணமாக தலைநகரான ரோமாபுரியில் பேரரசர்களால் அதிகம் தங்க முடியவில்லை. அவர்கள் கிழக்கு மாநிலங்களுக்கு அடிக்கடி செல்ல வேண்டியிருந்தது. எனவேதான், டயோகிளேஷியன் பித்தினியாவில் நிக்கோமீடியா (Nicomedia) நகரில் இருந்துகொண்டு நிர்வாகத்தை நடத்தினர். கி.பி. 330-ஆம் ஆண்டில் கான்ஸ்டன்டைன் தலைநகரை ரோமிலிருந்து பைசாண்ட்டியத்திற்கு மாற்றினர். 'அந்நகர் கான்ஸ்டாடின் நோப்பிள்' என்ற புதிய பெயரைப் பெற்றது. கான்ஸ்டன்டைன், கிறிஸ்துவசமயத்தைத் தழுவி, அத்

திருச்சபையின் ஆதரவையும் தனது ஆட்சிக்கு உதவியாகப் பெற்றார். ஆனால், அவரது ஆட்சிக்குப்பின் ரோமப்பேரரசு வெகு வேகமாகச் சரிந்து, வீழ்ச்சியை நோக்கி விரைந்தது.

நிர்வாகமும் சமுதாயமும்

நிர்வாகம்: இரண்டாம் நூற்றாண்டிலிருந்தே செனேட்டின் அதிகாரமும் செல்வாக்கும் குறைந்து வந்தன. மூன்றும், நான்காம் நூற்றாண்டுகளில் அச்சபை முற்றிலும் தனது செல்வாக்கை இழந்துவிடாமல், சிற்சில அரசர்களால் கலந்து ஆலோசிக்கப்பட்ட ஒரு அவையாக விளங்கி வந்தது. அப்படி ஒரு அவை இருப்பது அவசியம் என்று கருதப்பட்டதால்தான், தலைநகரைக் கான்ஸ்டன்டைன் அங்கும்ஒரு செனேட்சபையை அமைத்தார். பேரரசின் பல பகுதிகளிலு மிருந்த செல்வந்தர்களும், அரசாங்கத்தின் உயர் அதிகாரிகளும் அதன் உறுப்பினர்களா யிருந்து வந்தனர்.

அரசர்கள் கான்சல், தலைமை டிரிபியூன் ஆகிய பதவிகளையும் தொடர்ந்து வகித்து வந்தனர். அதே சமயம் வழக்கம் போல் அவர்கள் தலைமைப் புரோகிதராகவும் விளங்கினர். கிறிஸ்தவ சமயத்தைத் தழுவிய பின்னருங்கூட, சுமார் அரை நூற்றாண்டுவரை அவர்கள் இப்பதவியை வகித்து வந்தனர். அரசர்களில் ஒரு சிலரே தாம் நினைத்தபடி, 'தமக்குச் சரி' என்று தோன்றிய, நடவடிக்கைகளை மேற்கொள்ள முடிந்தது. மற்ற பலரும் படையதிகாரிகளுக்கு அஞ்சியே செயல்பட்டு வந்தனர். பலர் படையதிகாரிகளின் ஆதரவு பெற்றே அரசரானர். அந்த ஆதரவை இழந்தவுடன் அவர்கள் கொலை செய்யப்பட்டனர்.

குடியரசுக்காலத்தில் இருந்துவந்த பல அதிகாரிகள் கி.பி. 300-ஆம் ஆண்டுக்கு முன்னமேயே மறைந்துபோயினர். சான்ருக, டிரிபியூன்கள், ஈடைல்கள் போன்ற அதிகாரிகளை நியமிக்கும் வழக்கத்தை அலெக்சாந்தர் செவெரஸ் கைவிட்டார். அவருக்குப் பின் வந்த பேரரசர்களும் அவ்வாறே செய்தனர். அரசரோடு சேர்ந்து வேறு ஒருவரும் தொடர்ந்து கான்சலாக இருந்து வந்தார். கி.பி. 330-ல் தலைநகர் மாற்றப்பட்ட பின்னர் ஒரு கான்சல் ரோமிலும், மற்றவர் கான்ஸ்டான்ட்டி நோப்பிளிலுமாக இருந்துவந்தனர். ஆனால், அவர்கள் முன்னைய அதிகாரங்கள் அனைத்தையும் இழந்தனர். மூடியாட்சி தோன்றியதுமுதல் செனேட்டின் கூட்டங்களுக்குத்

தலைமை தாங்கும் அதிகாரம் மட்டுமே அவர்களுக்கு எஞ்சி யிருந்தது. ஆனால், அதையும் அப்பொழுது அவர்கள் இழந் தனர். அவர்கட்குப் பதிலாக, 'நகர பிரிபெக்ட்' என்ற அதிகாரி செனேட் கூட்டங்களுக்குத் தலைமைதாங்கிவந்தார். செப்டி மியஸ் செவெரஸின் காலத்தில் ஜூரி நீதிமன்றங்கள் மூடப் பட்டன. அதுமுதல் பிரேட்டர்களுக்கும் வேலையில்லாமல் போயிற்று. அதேபோல் மாநிலங்களிலிருந்து செனேட்டுக்கு வந்துகொண்டிருத்த வருவாய் நின்றுபோனதும் குவேஸ்டர் களுக்கும் வேலையில்லாமல் போயிற்று. இவர்களது வேலைகளை யெல்லாம் அரசரால் நியமிக்கப்பட்ட வேறு அதிகாரிகள் செய் யத்தொடங்கினர். அதேபோல் புரோகான்சல்களும் புரோ பிரேட்டர்களும் மாநிலங்களை ஆளும் வழக்கம் மூன்றும் நூற்றாண்டில் நின்றுபோயிற்று. சதா படையெடுப்புக்களைச் சமாளிக்க வேண்டி யிருந்ததால், படைப் பயிற்சிபெற்ற பல்வேறு மனிதர்களை மாநிலக் கவர்னர்களாகப் பேரரசர்கள் நியமித்தனர்.

இதே காரணத்தினால்தான் செனேட்டின் அதிகாரத்தில் இருந்து வந்த மாநிலங்களும் அரசரால் எடுத்துக்கொள்ளப் பட்டன. இதனால், செனேட்டுக்குக் கிடைத்துவந்த வருவாயும் அதிகாரமும் இல்லாதொழிந்தன. இந்நிலையில், முறைப்படி ஒருவரைப் 'பேரரசர்' என்று அங்கீகரிக்கும் அதிகாரத்தையும் செனேட் இழந்தது. கி.பி. 282-ல் படைகளின் ஆதரவோடு அரசரான அவுரேலியஸ் கேருஸ்தான், தனது பேரரசபட்டத்தை அங்கீகரிக்க வேண்டுமென்று செனேட்டைக் கேட்டுக்கொள் ளாத முதல் அரசர். அதன்பின், மற்ற அரசர்களும் செனேட்டை அவ்வாறு கேட்டுக்கொள்வதை விடுத்தனர். சர்வாதிகாரிகளைப்போல் அரசர்கள் ஆளத் தொடங்கினர். அரசவையில் ஆடம்பரம் பெருகியது. அவர்கள் மக்களிட மிருந்து ஒதுங்கி வாழத் தொடங்கினர். அகஸ்டஸின் கால முதலே மன்னர்களின் சிலைகள் வழிபடப்பட்டன. அவர்கள் மணி மகுடத்தையும் பொன்னாலான ஆடை அணிகலன்கள் முதலியவற்றையும் அணிய ஆரம்பித்தனர்.

மாநிலங்கள் ஒவ்வொன்றும் துண்டாடப்பட்டன. ட்யோ கிளேஷியனின் காலத்தில் மாநிலங்களின் எண்ணிக்கை அறு பதிலிருந்து எழுபதாயிற்று. இறுதியில் அவற்றின் எண்ணிக்கை 116 ஆக உயர்ந்தது. பேரரசானது நான்கு பிரிபெக்சர்க ளாகவும் (Prefectures) பன்னிரண்டு டயசிஸ்களாகவும் (Dioceses) பிரிக்கப்பட்டது. மாநில கவர்னர்கள் பிரிசைடுகள்

அல்லது ரெக்டர்கள் என்றும் (Praesides or rectors) டயசிஸ்களின் ஆளுநர்கள் விக்கார்கள் (Vicars) என்றும், பிரிபெக்சர்களின் தலைவர்கள் பிரிபெக்ட்டுகள் (Praefecti) என்றும் அழைக்கப்பட்டனர். ஒவ்வொரு மாநிலத்திலும் தனித்தனியே அதிகாரிகளும் நிர்வாக அமைப்புடன் இருந்துவந்தனர்.

மத்திய அரசாங்கத்தில் பதவிகள் வகித்த உயர் அதிகாரிகள் வலிமைபெற்று விளங்கினர். நான்காம் நூற்றாண்டின் முதல் பாதிவரைப் பேரரசின் நிர்வாக எந்திரம் ஓரளவு நல்ல முறையில் செயல்பட்டது என்றே கூறவேண்டும். பின்னர், அரசர்களாலும் உயர் அதிகாரிகளைக் கட்டுப்படுத்த முடியாத நிலை ஏற்பட்டது. அவர்கள் அரசாங்கப் பதவிகளை விற்று வியாபாரம் செய்து பெரும் செல்வத்தை ஈட்டிவந்தனர்.

மூன்றும் நூற்றாண்டின் பின்பகுதி முதல், ஜெர்மானியர் முதலானோரின் படையெடுப்புக்களின் காரணமாக, 'லேட்டிபண்டியா' (Leti fundia) என்ற பெரிய பெரிய பண்ணைகள் உருவாகி வந்தன. அந்தந்தப்பகுதியின் அதிகாரம் சிறிது சிறிதாக அவற்றின் சொந்தக்காரர்கள் வசம் வந்தன. அவர்கள் தங்கள் நிலத்தைப் பயிரிட்ட குடியானவர்களை (காலன்களையும் மற்றவர்களையும்) நில அடிமைகளாக (Serfs) மாற்றி வந்தனர். சிற்றரசர்களைப்போல் வலிமைபெற்று விளங்கினர்.

நிதி நிலைமை : எல்லைப்புறங்களில் பல்வேறு குலங்களின் தாக்குதல்கள் தொடங்கிய நாள் தொட்டே, பேரரசின் நிதி நிலைமையும் பொருளாதார நிலைமையும் சீர்குலைந்தன. அதிகாரிகளின் எண்ணிக்கையும் படைப்பெருக்கமும் இந்த நிதி நிலைமையை மேலும் மோசமாக்கின. எனவே, மூன்றும் நூற்றாண்டுமுதல் நாணயங்களின் தரம் மேன்மேலும் குறைந்து வந்தது. சான்றாக, வெள்ளி நாணயமான தினேரியஸ் (Dinarius) கேலியேனஸின் காலத்தில் வெறும் செம்பு நாணயமாகவே மாறிப் போயிற்று. வெள்ளிமுலாம் மட்டுமே அதற்கு அப்பொழுது கொடுக்கப்பட்டது. அதாவது அதன் தரம் 95% குறைந்து போயிற்று. இதனால், கூலிகளையும் விலைகளையும் நிர்ணயம் செய்வது மிகவும் சிரமமாயிற்று. பெருங்குழப்பம் நிலவியது. பின்னர் அவுரேலியன், டயோகினேஷியன், கான்ஸ்டன்டைன் ஆகியோர் காலத்தில் ஓரளவு நிலைமை திருந்தினாலுங்கூடப் பெரிய மாறுதல் ஒன்றும் ஏற்படவில்லை.

பெருகி வந்த நிதித்தேவைகளைச் சமாளிப்பதற்காக வரிமுறையில் சில திருத்தங்களைச் செய்தார் டயோகிளேஷியன்,

நிலவரியே அரசாங்கத்தின் முக்கிய வருவாயாக இருந்து வந்தது. இதுவரை மாநில நிலங்களின்மீது மட்டுமே விதிக்கப் பட்டு வந்த இவ்வரி, டயோகிளேஷியனின் காலமுதல் இத்தாலியிலும் விதிக்கப்பட்டது. தேவைக் கேற்ப வியாபாரிகள்மீதும் அடிக்கடி வரிகள் விதிக்கப்பட்டன. இந்த வரிகளை வசூலிக்கும் பொறுப்பை அவர் ஒவ்வொரு நகரிலும் இருந்த செனேட் வகுப்பினரிடம் (Senatorial Class) ஒப்படைத்தார். இருபத்தைந்து யூகெரா நிலம் (அதாவது சுமார் பதினேந்து ஏக்கர்) வைத்திருந்த அனைவரும் தமது ஊர் செனேட்டின் உறுப்பினராயிருந்து வந்தகாலம் அது. அவர்கள் பெரும்பாலும் ஏழைகளாகவே இருந்தனர். எனவே, வரிவசூல் உரிமையைப்பெற்று, மக்களை ஏமாற்றிச் சுரண்டி வாழ்ந்தனர். 'லேட்டி பண்டியாக்கள்' என்றபெரும் பண்ணைகளை வைத்திருந்தோரையும் அரசாங்க அதிகாரிகளையும் மட்டுமே அவர்கள் மதித்தனர். எனவே, பெரும் பண்ணைக்காரர்களிடமிருந்து குறைவான தொகைகளையே வரியாக வசூலித்தனர். இதனால் ஏழைகள்மீது அதிகவரி விதிக்கப்பட்டது.

பொருளாதார நிலைமை : அந்நிய குலங்களின் படையெடுப்பும் உள்நாட்டுப் போர்களும் பொருளாதார வளர்ச்சியைத் தடுத்து நிறுத்தின. அதாவது, அலெக்சாந்தர் செவெரஸின் மரணத்துக்குப் பிறகு பொருளாதாரச் சீர்குலைவு தொடங்கியது. இத்தாலியிலும் மேற்கு ஐரோப்பாவிலும் இச்சீர்குலைவு அதிகமாகக் காணப்பட்டது. மேற்கு மாநிலங்களைக் காட்டிலும் நீண்டகாலமாகவே கைத்தொழிலையும் வாணிபத்தையும் பேணி வந்தன கிழக்குமாநிலங்கள். மேலும் ; அந்நிய குலங்களால் அவை அதிகம் தாக்கப்படவுமில்லை. எனவே, அவற்றின் பொருளாதாரம் ஓரளவு நல்ல நிலையிலேயே இருந்து வந்தது. தொழில்களும் தரை வழியாகச் சீனவுடனான வாணிபமும் எப்பொழுதும்போல் நடந்தன. ஆனால், இந்தியப் பெருங்கடல் வழியாக மலேயா, சீனா, இந்தியா ஆகியவற்றுடனான வாணிபம் சிறிது சிறிதாகக் குறைந்து, இறுதியில் அடியோடு நின்று போயிற்று.

ஆப்பிரிக்க மாநிலமானது நான்காம் நூற்றாண்டின் இறுதி வரை செழிப்புடனேயே இருந்தது. கி.பி. 350 வரை ரைன்நதிக் கரையிலிருந்த ரோமப்படைகளுக்குக் கிழக்கு இங்கிலாந்திலிருந்தே கோதுமை வந்துகொண்டிருந்தது. ஆயினும், கி.பி. 250 முதலே பிரிட்டனின் பொருளாதாரமும் சீர்குலையத் தொடங்கியது. மொத்தத்தில் ரோமப் பேரரசில் விளைநிலங்களின் பரப்பு குறைந்தது. அந்நியரின் படையெடுப்பு காரண

மாக எல்லைப்புற நிலங்கள் தரிசாகக்கிடந்தன. ரோமுக்கு உணவுத்தானியங்களை ஏற்றுமதிசெய்து வந்த ஸ்பெயின், கி.பி. 250-க்குப் பிறகு தனக்கே தானியம் போதாமல் ஏற்றுமதிகளை நிறுத்தியது. இத்தாலியிலும் எகிப்திலும் கூட விளைநிலங்கள் பயிரிடப்படாமல் கரம்பாகக் கிடந்தன. இந்நிலையில்தான், கரம்பாகக் கிடந்த தமது நிலங்களைப் பயிரிடுவதற்கு ஆட்களைத் தேடிக் கண்டுபிடிக்குமாறு நகரங்களுக்கு உத்தரவிட்டனர் அவுரேலியனும் மற்ற பேரரசர்களும்.

விவசாயத்தைப் போலவே கைத்தொழிலும் வாணிபமும் அழிந்து கொண்டிருந்தன. ரைன் பிரதேசம், கால் முதலிய மேற்கு மாநிலங்கள் ஆகியவற்றில் முதலிரண்டு நூற்றாண்டுகளிலும் வெகு வேகமாக ஏற்பட்டு வந்த தொழில் வளர்ச்சி கி.பி. 250க்குப் பிறகு வேகமாகக் குன்றியது. இதனால் வாணிபமும் வீழ்ச்சியுற்றது.

இத்தகைய பொருளாதாரச் சீர்குலைவுகளினால் ஏழைகளும் நடுத்தர வகுப்பினருமே பெரிதும் பாதிக்கப்பட்டனர். செல்வமும் நிலங்களும் ஒரு சிலரிடமே சென்று குவிந்தன. நடுத்தர வகுப்பினர் விவசாயத்தில் நஷ்டப்பட்டும், அந்நியர்களின் படையெடுப்பைக் கண்டு அஞ்சியும் அண்டையிலிருந்த பெரிய நிலப் பிரபுக்களிடம் தமது சிறு நிலங்களை விற்றனர். இதனால், லேட்டி பண்டியாக்களின் எண்ணிக்கையே பெருகியது. அவர்களில் பலர் பெரும் பண்ணைகளில் நில அடிமைகளாக (Serfs) வேலை செய்ய வேண்டிய நிலை ஏற்பட்டது. அந்நியப் பிரதேசங்களை ஆக்கிரமிப்பதும் அதன் மூலம் அடிமைகளைக் கொண்டு வருவதும் நின்று போய்விட்டதால், ரோமப் பேரரசில் அடிமைகளின் எண்ணிக்கை குறைந்து வந்தது. எனவே, இப்புதிய அடிமை முறை — நில அடிமை முறை (Serfdom)—தலைதூக்கியது. தனது ஆணை ஒன்றின்மூலம் இப் புதிய அடிமை முறையைக் கான்ஸ்டன்டைன் சட்ட வாயிலாக ஆமோதித்தார். இவ்வாறு பழைய அடிமை முறை (Slavery) வீழ்ச்சியுற்று, நில அடிமை முறை ஏற்பட்டது. இந்தப் புதிய அடிமைமுறைத் தொழிலிலும் வாணிபத்திலும்கூடப் பரவியது. அரசாங்கமே அத்துறைகளில் அடிமைமுறையைப் புகுத்தியது. கைத்தொழிலாளர்கள், கப்பலோட்டிகள் முதலிய பலரும் தலைமுறை தலைமுறையாக அத் தொழில்களையே செய்து வரவேண்டும் என்று கி.பி. நான்காம் நூற்றாண்டில் வெளியான ஆணை ஒன்று கூறியது. இவ்வாறு அடிமை முறையை அடிப்படையாகக் கொண்டு எழுந்த ரோமானியப் பேரரசு, அம்முறையின் வீழ்ச்சியோடு தானும் வீழ்ச்சியுற்றது. நில அடிமை

முறையினால் ரோமப் பேரரசில் ஒரு புதிய பொருளாதார அமைப்பு உருவாகியது எனலாம். இத்தகைய நில அடிமை முறையும், அதை அடிப்படையாகக் கொண்டு எழுந்த நில மானிய சமுதாய அமைப்பும் (feudalism) ரோமானியப்படை யமைப்பிலும் மாற்றங்களைத் தோற்றுவித்தன.

படைகளும் எல்லைகளும் : சிறந்த குதிரை வீரர்களைக் கொண்ட பாரசீகப் படைகளும் கோத்துகளும் ரோமின் தரைப்படைகளைத் தோற்கடித்தன. எனவே, கேலியனஸ் ஒருகுதிரைப் படையைத் திரட்டினர். டயோகிளேஷியனும் கான்ஸ்டன்டைனும் ரோமானியப் போர் வீரர்களின் எண்ணிக் கையை ஐந்து இலட்சமாக உயர்த்தினர். அவர்கள் எல்லைப் புறங்களில் வாழ்ந்த மக்களையே தங்களது படைகளில் சேர்த் தனர். ஆனால், எல்லைப்புற மக்களில் ரோமானியக் குடிகளோடு ஏராளமான ஜெர்மானியக் கைதிகளும் இருந்தனர். அவர்களும் படைகளில் சேர்த்துக் கொள்ளப்பட்டனர். முன்போல் படைத்தளபதிகளே சென்று படை திரட்டும் முறை மறைந்து போய்விட்டது. லேட்டிபாண்டியாவின் பிரபுக்கள் ஒவ்வொரு வரிடமிருந்தும் அவரது நில அடிமைகளில் சிலரைப் பெற்றுப் படை திரட்டப்பட்டது. திறமையற்ற ஆட்களையே நிலப் பிரபுக்கள் படைப்பணிக்கு அனுப்பிவைத்தனர். இங்ஙனம் நில அடிமைமுறை படையையும் பாதித்து.

முன்பு இத்தாலிய சுதந்திர வீரர்களை மட்டுமே கொண்ட ரோமானியப் படையைப் போல் பிற்காலப் படைகள் அமைய வில்லை. படையில் சேர்ந்த நில அடிமைகள் பலத்த கவசங் களையும் வாட்களையும் ஏந்திப் போரிட முடியாத நிலையிலிருந் தனர். இந்நிலையில் ரோமானியப் படைகளின் பழையவலி குன்றியது. படைப் பயிற்சியும் திறனும் பழங்கதையாயின. அகஸ்டஸின் ஆட்சிக் காலத்தில் இருந்ததைவிட டயோகிளே ஷியஸ், கான்ஸ்டன்டைன் ஆகியோர் காலத்தில் ரோமப் பேரரசு விரிவடைந்தது. பேரரசர்களும் ரைன், டான்யூப் எல்லைகளில் பல கோட்டைக் கொத்தளங்களைக் கட்டினர். அதே போல் இங்கிலாந்திலும் அரண்கள் அமைக்கப்பட்டன. ரோம் நகரம் கான்ஸ்டான்ட்டி நோப்பிளும் மிகுந்த பலத் தோடு விளங்கின. சாலைகள் நன்கு பாதுகாக்கப்பட்டன. ரோமானியக் கடற்படையும் பலம்பெற்று விளங்கியது.

பேரரசின் வீழ்ச்சி

பேரரசு பங்கிடப்படுதல் ; கி.பி. 337-ல் பேரரசர் கான்ஸ் டன்டைன் மறைந்தார். அதன் பின் பேரரசில் மீண்டும் குழப்

பங்களும் உள்நாட்டுப் போர்களும் துவங்கின. கான்ஸ்டன் டியஸ் (கி.பி. 353-361), ஜூலியன் (கி.பி. 361-313) போன்ற திறமைமிக்க அரசர்களாலும் பேரரசில் ஒற்றுமையையும் அமை தியையும் நிறுவ முடியவில்லை. கி.பி. 374-ஆம் ஆண்டில் வேலண்ட்டினியன் (Valentinian), வேலன்ஸ் (Valens) என்ற இருசகோதரர்களும் ரோமப்பேரரசைப்பங்கிட்டுக்கொண்டனர். முப்பது ஆண்டுகளுக்குப் பிறகு முதலாம் தியோடோசியஸ் (Theodosius) என்ற பேரரசர் இரண்டு பகுதிகளையும் மீண்டும் ஒன்றுபடுத்தி ஆள முயன்றார் (கி.பி. 395). ஆனால், அதில் அவர் தோல்வியே கண்டார். அவரது பிள்ளைகளான ஆர்க் கேடியஸ் (Arcadius), ஹனோரியஸ் (Honorius) ஆகிய இரு வரும் மீண்டும் பேரரசைப் பங்கிட்டு ஆண்டனர். இவ்வாறு, 'மேற்கு ரோமானியப் பேரரசு, கிழக்கு ரோமானியப் பேரரசு' என்று இரு அரசுகளாக ரோமப் பேரரசு பிளவுண்டது.

ரோமின் வீழ்ச்சி ; இத்தாலியும் மேற்கு மாநிலங்களும் உள்நாட்டுப் போர்களிலிருந்தும் குழப்பங்களிலிருந்தும் இறுதி வரை மீளவே இல்லை. கிழக்கு மாநிலங்களின் பிரிவு மேற்கு ரோமானியப் பேரரசின் பொருளாதாரத்தையும் வலிமையையும் மேலும் பாதித்தது. அரியணைக்காகப் போர்களும் பூசல்களும் தொடர்ந்து நடந்து வந்த வேளையில் ஜெர்மானியக் குலங்களின் தாக்குதல்களும் தொடர்ந்து நடைபெற்றன. கி.பி. 406-ஆம் ஆண்டில் பிரிட்டனில் ரோமானியக் கவர்னராயிருந்த கான்ஸ் டன்டைன் என்பவர் அரியணையைக் கைப்பற்றும் நோக்கத் தோடு வழியிலிருந்த படைகளையெல்லாம் திரட்டிக் கொண்டு ரோமை நோக்கிப் புறப்பட்டார். இதுதான் சமயமென்று ஜெர்மானியர்களும், பிறரும் மேற்கு மாநிலங்களில் நுழைந் தனர்.

கி.பி. 409-க்கும் 419-க்கும் இடையில் கால் மாநிலத்தின் வடக்குப்பகுதியைப் பிராங்குகளும் (Fronks), கிழக்குப்பகுதி யைப் பர்கண்டியர்களும் (Burgundians), ஸ்பெயினைச் சூபிகளும் (Suebi) வேண்டல்களும் (Vandals) கைப்பற்றிக் கொண்டனர். கி.பி. 429-ல் வேண்டல்கள் வடக்கு ஆப்பிரிக்காவின் கரையில் பல விடங்களையும் கைப்பற்றிக் கொண்டு, கடற்கொள்ளை களில் ஈடுபடலாயினர். இதனால், மத்திய தரைக் கடல் வாணிபம் சீர்குலைந்தது. பிரிட்டனிலும் சாக்சன்கள் போன் றோரின் தாக்குதல்களைச் சமாளிக்க முடியாமல் ரோமானியப் படைகள் பல இடங்களை இழந்துவந்தன. இறுதியில் கி.பி. 450-ஆம் ஆண்டு வாக்கில் ரோமானியர் பிரிட்டனிலிருந்தே வெளியேற வேண்டியதாயிற்று.

சிறிது காலமாகப் பால்கன் தீபகற்பத்தில் வசித்துக் கொண்டிருந்த கோத்துகள் கி.பி. 400 முதலே இத்தாலியின் மீதும் தமது தாக்குதல்களைத் தொடுக்கலாயினர். விரைவில் வட இத்தாலி அவர்கள் வசமாயிற்று. ரோமில் பேரரசராயிருந்த ஹனோரியஸ் அவர்களை எதிர்க்கவும் அஞ்சி ஓட வேண்டிய தாயிற்று. கோத்துகளின் தலைவரான அலாரிக் (Alaric) கி.பி. 408-ல் மத்திய இத்தாலிக்குள்ளும் நுழைந்து சூறையாடினர். மேலுமவர், கி.பி. 410-ஆம் ஆண்டில் ரோம் நகரையும் கைப்பற்றிச் சூறையாடினர். இத்தாலியிலும் ரோமிலும் இருந்த அடிமைகளும் சிறுகுடியானவர்களும் அவருக்கு உதவினர். நகரங்களையெல்லாம் அழித்தார். நகர நாகரிகம் அழிந்தது. அவரது மரணத்துக்குப் பின்னர் கோத்துகள் அக்யுடேனியாவுக்குச் சென்று, அங்கு ஓரரசை நிறுவினர். ரோமப் பேரரசர்களும் புதிய அக்யுடேனிய அரசின் அரசர்களிடம் சமரசம் செய்துகொண்டு அமைதியோடு ஆள முற்பட்டனர்.

ரோமின் வலிமை வேகமாகக் குன்றிவந்தது. அட்டிலாவின் (Attila) தலைமையில் ஹூனர்கள் (Huns) மத்திய பிரான்சைத் தாக்கியபோது (கி.பி. 451) கோத்துகளின் உதவியைப் பெற்றே ரோமானியில் அவர்களைத் தோற்கடிக்க முடிந்தது. இந்நிலையில் கி.பி. 470-க்கும் 490-க்கு மிடையில் மத்திய பிரான்சிலும் புரோவென்ஸிலும் எஞ்சியிருந்த ரோமானிய மாநிலங்களைப் பிராங்குகளும் கோத்துகளும் பிடித்துக்கொண்டனர். கி.பி. 455-ல் ஆப்பிரிக்காவிலிருந்த வேண்டல்களின் தலைவரான கைசெரிக் (Gaiseric) என்பவர் கடல் வழியாக வந்து, ரோமைத்தாக்கிக் கொள்ளையிட்டு அந்நகரின் பல பகுதிகளையும் அழித்துச் சென்றார். இரண்டுவாரம் ரோமில் தங்கிய வேண்டல்கள் அரண்மனைகள், மாளிகைகள், சிலைகள் முதலிய அனைத்தையும் அழித்தனர். அதற்குப் பின் 7,000 பேர்களே அந்நகரில் எஞ்சியிருந்தனர்.

இருபது ஆண்டுகளுக்குப் பிறகு (கி.பி. 476) ஒடோசர் (Odoacer) என்ற ஜெர்மானியத் தலைவர் ஒருவர் மீண்டும் ரோமைத்தாக்கி, கடைசி பேரரசரான ஓரெஸ்டஸ் (Orestes) என்பவரைக் கொன்று, அவரோடு சேர்ந்து ஆண்டுவந்த அவரது மகனை ரோமுலஸ் அகஸ்ட்டுலஸ் (Augustulus) என்பவரையும் அரியணையிலிருந்து அகற்றி, மேற்கு ரோமானியப் பேரரசுக்கு முற்றுப்புள்ளி வைத்தார்.

கிழக்கு ரோமப் பேரரசு : கிழக்கு ரோமப்பேரரசை நிறுவிய வேலன்ஸ் எட்ரியா நோப்பிள் நகருக்கருகில் கோத்துக்

களுடன் நடைபெற்ற சண்டை ஒன்றில் கி.பி. 378-ல் கொல்லப்பட்டார். அதன்பின், சிறிதுகாலம் அங்குக் குழப்பம் நிலவியது. ஆனால், அடுத்த அரசரான முதலாம் தியோடோசியஸ் திறமை மிக்கவர். அவர் கோத்துகளைப் பால்கன் தீபகற்பத்தில் குடியமருமாறுசெய்து, டான்யூப் எல்லையில் தொல்லைகள் ஏற்படாமல் பார்த்துக்கொண்டார். அதன்பின், நீண்டகாலம் கிழக்குப் பேரரசில் அமைதி நிலவியது. அப்பொழுதுதான் பேரரசர் ஜஸ்டினியனின் (Justinian, A. D. 528-534) சட்டத் தொகுப்பு வெளியாயிற்று.

கி.பி. 6-ஆம் நூற்றாண்டு வரை இக்கிழக்கு ரோமானியப் பேரரசின் நிர்வாகமும் பண்பாடும் மேற்கு ரோமைப் போன்றே இருந்துவந்தன. ஆனால், மேற்கு மாநிலங்கள், இத்தாலி ஆகியவற்றின் பிரிவால் நாளாவட்டத்தில் இப்பண்பாடு மாறியது. இதன் கிறுஸ்துவத் திருச்சபையும் ரோமானியச் சட்டங்களும் கூட மாறுபடலாயின. ஏழாவது, எட்டாவது நூற்றாண்டுகள் முதல் கிரேக்கப் பண்பாட்டின் செல்வாக்கு ஓங்கியது. திருச்சபையும் சட்டங்களும் நிர்வாக அமைப்பும் பண்பாடும் பிறந்தன. இலத்தீனுக்குப் பதில் கிரேக்க மொழியே அரசாங்க மொழியாயிற்று. ஆனால், பழைய ரோமானிய அரசகுடும்பமே இறுதிவரை தொடர்ந்து இப்பேரரசை ஆண்டு வந்தது. இஸ்லாமிய சமயத்தின் எழுச்சிக்குப் பிறகு, அரேபியர்களும் துருக்கியர்களும் கிழக்கு ரோமப் பேரரசின் பல பகுதிகளை ஒன்றன்பின் ஒன்றாகக் கைப்பற்றி வந்தனர். இவ்வாறு அதன் எல்லைகள் சுருங்கின. இறுதியில் கி.பி. 1453-ல் இரண்டாம் மகம்மது என்ற ஆட்டோமன் சுல்தான் கான்ஸ்டான்ட்டி நோப்பிள் நகரையும் கைப்பற்றி இப்பேரரசுக்கு முற்றுப்புள்ளி வைத்தார். கடைசியாக ஆண்ட பேரரசர் 13-ஆம் கான்ஸ்டன்டைன் போரில் கொல்லப்பட்டார்.

கிறிஸ்துவ சமயத்தின் எழுச்சி

டைபீரியன் சீசரின் காலத்தில் யுதேயாவில் ஏசு (Jesus) என்ற யூதப் பெரியார் ஒருவர் தமது புதிய கருத்துக்களைச் சொற்பொழிவுகளின்மூலம் மக்களிடம் பரப்பிவந்தார். அவரை 'ஞானி' என்று பலரும் கொண்டாடினர். அவர் பல விந்தைகளை நிகழ்த்திக் காட்டிப் பலரையும் கவர்ந்துகொண்டிருந்தார். கி.பி. 33-ஆம் ஆண்டில் எருசலம் நகர் வந்தடைந்தார். தங்களது மாபெரும் பண்டை அரசரான தவீதின் (David) மகனைப் பலர் அவரைக் குதூகலமாக வரவேற்றனர். இதைக்கண்டு பொறுமை

யுற்ற பல யூதர்கள் ஏசுவைப் 'பொய்ஞ்ஞானி' என்றுகூறி அவரை எதிர்க்கவும் முற்பட்டனர்.

எனவே, யூதர்களின் தலைமைப் புரோகிதரானவர் ஏசுவிற்கு எதிராக யுதேயாவின் ரோமானியக் கவர்னரான பாண்ட்டியஸ் பிலேட்டஸ் (Pontius Pilatus) என்பாரிடம் முறையிட்டார். கலகக்குற்றம் சாட்டப்பட்ட ஏழைகளுக்கும் அடிமைகளுக்கும் அளிக்கப்படும் தண்டனை சிலுவையில் அவர்களை அறைவதே. அத்தகைய தண்டனையே ஏசுவுக்கும் அளிக்கப்பட்டது. இங்ஙனம் சிலுவையில் அறைபட்ட செம்மலின் சீரிய கருத்துக்கள் (அன்பு, அறம், பணிவு ஆகியவற்றின் அடிப்படையில் அமைத்த) கிறுத்துவ சமயத்தின் உயிர்நாடிகளாயின. அவரது மரணத்துக்குப்பின் அவரது சீடர்கள் ரோமப் பேரரசின் பல பகுதிகளுக்கும் சென்று ஏசுவின் கருத்துக்களைப் பரப்பினர். புனிதபால் என்பவர் தமது பயணங்கள், கடிதங்கள் மூலமாகக் கிறுஸ்துவ திருச்சபைக்கு அடிகோலினர். கி.பி. 64-ல் ரோமிலும் வேறு பல இடங்களிலும் பல கிறுஸ்துவர்கள் காணப்பட்டனர்.

கி.பி. 65-க்கும் 100-க்கு மிடையில்தான் ஏசுவின் வாழ்க்கை, போதனைகள் ஆகியவற்றை நான்கு 'சுவிசேஷங்களாக' (Gospels) நான்கு பெரியவர்கள் வரைந்தனர். கான்ஸ்டன்டைனின் காலத்தில் கடிதங்கள் முதலிய வேறு பலவற்றையும் இச்சுவிசேஷங்களுடன் சேர்த்துப் 'புதிய ஏற்பாடு' (New Testament) உருவாக்கப்பட்டது.

ஆரம்பத்தில் கிறுஸ்துவர்கள் இரகசியமாகப் பலவிடங்களில் கூடித் தொழுகை நடத்தியும் கொள்கைப்பிரச்சாரம் செய்தும் வந்தனர். பேரரசர்களின் உருவங்களை வழிபட அவர்கள் மறுத்தனர். எனவே, பலவிதமாக அவர் அரசாங்க அதிகாரிகளால் தண்டிக்கப்பட்டனர். நீரோவின் காலத்தில் அவர்கள் பட்ட துன்பங்களை நாம் முன்பே பார்த்தோம். இவ்வாறு பல அரசர்களாலும் மாநிலக் கவர்னர்களாலும் அவர்கள் பலவித தண்டனைகளுக்குள்ளாயினர். அவர்களது புதிய சமயத்தையும், தொழுகையையும் விட்டுவிடுமாறு பேரரசர் டெசியஸ் கி.பி. 250-ல் ஆணையிட்டார். வெலேரியானஸும் கி.பி. 257-ல் இதேபோல் மற்றொரு ஆணை பிறப்பித்தார். இவற்றை மீறிய குற்றத்துக்காகப் பல கிறுத்துவர்கள் சிலுவையில் அறையப்பட்டனர். ஆனால், விரைவிலேயே இந்நிலை மாறியது. கிறுத்துவர்களுக்குத் தண்டனை வழங்குவது நின்றது. அவர்கள் படைகளிலும் அரசாங்கப் பணியிலும் சேர்த்துக்கொள்ளப்பட்டனர்.

டயோகிளேஷியனின் காலத்தில் அவர்களில் சிலர் மாநிலக் கவர்னகளாகவும் அமர்த்தப்பட்டனர். ஆனால், அவரது ஆட்சியின் இறுதியிலும், பின்னர் கலேரியஸின் ஆட்சியின் முடிவு வரையிலும் (அதாவது கி.பி. 303 முதல் 311 வரை) கிறுஸ்தவர்கள் மீண்டும் தண்டிக்கப்பட்டனர். டயோகிளேஷியன் நிதானம் தவருதவர். அவரது மனைவியும் ஒரு கிறுஸ்துவர். எனவே, தமது இறுதிக்காலத்தில் அவர் ஏன் அவர்களைத் தண்டிக்கத் தொடங்கினர் என்பது புரியவில்லை. எவ்வாறெனினும் முன்பு எப்போதையும்விட இப்பொழுது ஏராளமான கிறுஸ்துவர்கள் தண்டனைக்குள்ளாயினர். இருந்தபோதிலும் கிறுஸ்துவ சமயம் பரவி விட்டதையும் அவர்களை இனி அடக்க முயலுவது பயனற்றது என்பதையும் இறுதியில் உணர்ந்த கலேரியஸ் தனது அடக்குமுறை ஆணைகளைக் கி.பி. 311-ல் ரத்து செய்தார்.

கி.பி. 312-ல் கான்ஸ்டன்டைன் கிறுஸ்துவ சமயத்தைத் தழுவியது, அச்சமயத்தின் வரலாற்றில் ஒரு புதிய திருப்பத்தைத் தோற்றுவித்தது. அவரது பெயரிலும் லிசீனியஸின் பெயரிலும் கி.பி. 313-ல் வெளியிடப்பட்ட மிலான் ஆணை (Ediet of Milan) கிறுஸ்துவர்களுக்குமுழுச்சமய சுதந்திரத்தையும் அளித்தது. லிசீனியஸ் இறந்து ஒரே அரசராகக் கான்ஸ்டன்டைன் ஆனதும் (கி.பி. 323) இந்த ஆணை மறுபடியும் வெளியிடப்பட்டது. கிறுஸ்துவப் பாதிரிமார்கள் கி.பி. 325-ல் பித்தினியாவில் உள்ள நிக்கேயாவில் மாநாடு ஒன்று நடத்தினர் (Congress of Nicaea). அதற்கான உதவிகளனைத்தையும் கான்ஸ்டன்டைன் செய்து கொடுத்தார். மேலும், தாமே நேரில் சென்று அம்மாநாட்டில் பங்கெடுத்துக் கொண்டார்.

முதல் இரண்டு நூற்றாண்டுகளில் ரோமப் பேரரசின் பல்வேறு பகுதிகளிலுமிருந்த கிறுஸ்துவ ஆலயங்கள் கடிதப் போக்குவரத்து, பாதிரிகளின் பயணம் ஆகியவை மூலமாகத் தொடர்புகொண்டு வந்தன. புனித பீட்டர், பால் போன்றவர்களின் கடிதங்கள் இதற்குச் சான்று பகருகின்றன. மூன்றாம் நூற்றாண்டில் பெரிய நகரங்களைச் சேர்ந்த பிஷப்புக்கள் தமது மாவட்டங்களிலிருந்த சிறிய நகரங்களின் பிஷப்புக்களையெல்லாம் அழைத்து அடிக்கடி மாநாடுகள் நடத்திக் கூடிப் பேசினர். இத்தகைய மாநாடுகளில்தான் திருச்சபையின் கோட்பாடுகள், நிதி நிர்வாகம் முதலிய பலவும் முடிவுசெய்யப்பட்டன. பல மாநிலங்களையும் சேர்ந்த பிஷப்புக்களும் கான்ஸ்டன்டைனின் காலத்தில் கூடிப்பேசினர். மேற்கு மாநிலங்களைச் சேர்ந்த

பிஷப்புக்கள் அரேலேட்டில் (Arelate) கி.பி. 314-ல் கூடினர். கி.பி. 325-ல் கூடிய நிக்கேய மாநாட்டுக்கு ரோமப் பேரரசின் எல்லாப் பகுதிகளி லிருந்தும் பிஷப்புக்கள் வந்திருந்தனர். கிறுஸ்துவத் திருச்சபையானது இவ்வாறு கி.பி. 330-ஆம் ஆண்டு வாக்கில் முழுஉருவம் பெற்றுவிட்டது.

கான்ஸ்டன்டைனின் காலத்திலும் சிரியா, ஆசியா மைனர், அலெக்சாந்திரியா நகரம் போன்ற சில இடங்களில் மட்டுமே மக்களில் பாதித்குமேல் கிறுஸ்துவ சமயத்தைத் தழுவியிருந் தனர். மற்ற பகுதிகளில் அவர்கள் சிறு பான்மையினராகவே இருந்து வந்தனர். எனினும், ஒவ்வொரு மாநிலத்திலும் செல் வமும் செல்வாக்கும் மிகுந்த பலரும் கிறஸ்துவத் திருச்சபையில் சேர்ந்திருந்தனர். திருச்சபையின் எதிர்கால வளர்ச்சிக்கு இது பெரிதும் உதவியாயிருந்தது.

ரோமானியப் பேரரசர் பட்டியல்

(அகஸ்டஸ் முதல் கான்ஸ்டன்டைஸ் வரை)

அகஸ்டஸ்	கி.மு. 27—கி.பி. 14
டைபீரியஸ்	கி.பி. 14—37
காலிகுலா	37—14
கிளாடியஸ்	41—54
நீரோ	54—68
கால்பா	68—69
ஓத்தோ	—69
விட்டெலியஸ்	—69
வெஸ்பாசியன்	69—79
டைட்டஸ்	79—81
டொமீஷியன்	81—96
நெர்வா	96—98
டிராஜன்	98—117
ஹேட்ரியன்	117—138
அன்ட்டோனியஸ்பயஸ்	138—161
அவுரேலியஸ் }	161—180
வெரூஸ் }	161—169
கம்மோடஸ்	180—192
பெர்ட்டினக்ஸ்	—193
ஜூலியானஸ்	—193
செவெரஸ்	193—211
கரகல்லா }	211—217
கேட்டா }	211—212
மாக்ரினஸ்	கி.பி. 217—218
எலகாபேலஸ்	218—222
அலெக்சாந்தர் செவெரஸ்	222—235
மாக்சிமஸ்	235—238

கார்டியன் I	—238
கார்டியன் II	—238
பூப்பியனஸ்	—238
பால்பினஸ்	—238
கார்டியன் III	238—244
பிலிப்பஸ்	244—249
டெசியஸ்	249—251
டிரெபோனியானஸ் காலஸ்	221—253
ஏமிலியானஸ்	—253
வெலேரியானஸ்	253—268
கேலியானஸ்	263—270
கிளாடியஸ் கோத்திகஸ்	270—275
அவுரேலியஸ்	275—276
புளோரியானஸ்	—276
புரோபஸ்	276—282
கேரஸ்	282—283
கேரினஸ்	283—285
நீயூமெரியானஸ்	283—284
டயோகிளேஷியன்	284—305
மாக்சிமியன்	286—305
கான்ஸ்டன்டியஸ்	கி.பி. 305—306
கலேரியஸ்	305—311
லிசீனியஸ்	311—323
கான்ஸ்டன்டைன்	306—337